

# சைவ நற்சிந்தனைகள்

இலங்கை வானொலியில் வழங்கிய சிந்தனைகளின் தொகுப்புரை

JPL
C11104

கலாபூஷணம்
திருமதி ராஜேஸ்வரி ஜெகானந்தகுரு M.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவ நற்சிந்தனைகள்

**இலங்கை வானொலியில் வழங்கிய சைவ நற்சிந்தனைகளின் தொகுப்புரை**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

11104 CC

வழங்குபவர்

கலாபூஷணம்

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு M. A.

KOHA
JPL

239733

வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு

**காயத்திரி பப்ளிகேஷன்**

**இல. 68, டீ. சில்வா றோட், களுபோவில, தெஹிவளை.**

☎ 011 - 4981906, 0777 892028

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

239733 CC

| | |
|---|---|
| நூலின் பெயர் | : சைவ நற்சிந்தனைகள் |
| ஆசிரியர் | : திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| தொலைபேசி | : 011 - 2722444, 071- 4465445 |
| முதலாம் பதிப்பு | : புரட்டாதி 2013 |
| பக்கங்கள் | : 307 - XXXVIII |
| விலை | : ரூ. 500/= |
| வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு | : காயத்திரி பப்ளிகேஷன்<br>த. பெ. இல. 64,<br>தெஹிவளை,<br>இலங்கை.<br>☎ 011- 4981906, 0777 - 892028 |
| இ-மெயில் | : navamohanv@yahoo.com |
| வெப் முகவரி | : www.gayathiri.lk |

பதிப்பாசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி இப்புத்தகத்தின் எப்பகுதியையும் மறுபிரசுரம் செய்தலோ, போட்டோ பிரதி செய்தல் உட்பட இலத்திரனியல் அல்லது பொறியியல் சாதனத்தால் கையளித்தலோ தடை செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| TITLE OF THE BOOK | : Saiva Nat Sinthanaigal |
| AUTHOR | : Mrs. Rajeswari Jegananthaguru |
| COPYRIGHT © | : To the Author |
| ISBN | : 978-955-8741-65-8 |
| MOBILE | : 011 - 2722444, 071 - 4465445 |
| FIRST EDITION | : September 2013 |
| PAGES | : 307 - XXXVIII |
| PRICE | : Rs. 500/= |
| DISIGNING & PRINTING | : Gayathri Publication<br>No - 68, De. Silva Road, Kalubowila,<br>Dehiwala.<br>☎ 011 - 4981906, 0777 - 892028 |
| E-MAIL | : navamohanv@yahoo.com |
| WEB SITE | : www.gayathiri.lk |

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior permission of copyright owner.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

## சமர்ப்பணம்

எனக்கு வாழ்வில் ஏற்றம் தந்த

என்னருமைப் பெற்றோர்

திரு. திருமதி

ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை

அவர்களின் பாத கமலங்கட்கு

இந்நூல் சமர்ப்பணம்

- ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | வேழ முகத்து விநாயகன் | 01 |
| 02. | எங்கே நிம்மதி! | 04 |
| 03. | மனதில் உறுதி வேண்டும் | 06 |
| 04. | அன்பும் பக்தியும் | 10 |
| 05. | குருவானவரும் மணிவாசகரும் | 13 |
| 06. | மனிதனும் தெய்வ வியாபகமும் | 15 |
| 07. | தந்தையும் தனயனும் | 19 |
| 08. | "மணிவாசகத் தேன்" | 22 |
| 09. | வேதத்தின் இருதயம் ஐந்தெழுத்து | 25 |
| 10. | மாதோர் பாகத்தன் | 28 |
| 11. | தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே | 31 |
| 12. | இறைவனும் மெய்யடியார்களும் | 33 |
| 13. | விதி | 38 |
| 14. | பொறுமை என்னும் அணி | 40 |
| 15. | மனிதப் பண்புகளும் மதமும் | 42 |
| 16. | சத்தியம் | 44 |
| 17. | மூன்றாம் பிறை | 47 |
| 18. | மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே! | 49 |
| 19. | புண்படா உடலும் புரைபடா மனமும் | 52 |
| 20. | இல்லறம் அல்லது நல்லறம் அன்று | 56 |
| 21. | ஸ்ரீ ராமன் | 58 |
| 22. | தலைவன் | 60 |
| 23. | அரச மர மகிமை | 63 |
| 24. | இறைவனும் இறைவியும் | 65 |
| 25. | ஆசை | 68 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. உருவங்கள் மாறலாம் 71
27. வாழ்வின் இலட்சியம் 74
28. சத்சங்கம் 77
29. இறை அன்பு 81
30. மனிதனும் தெய்வமாகலாம் 83
31. துளசி 86
32. இறைவனை எப்போது காண்பது! 88
33. வாழ்க்கையும் ஒரு வியாபாரமே 90
34. பக்தி வயலில் பெண்மணிகள் 96
35. அருளின் வேகம் 98
36. யாமிருக்க பயம் ஏன்? 101
37. இல்லற தர்மம் 103
38. வெண்ணீறணிந்ததென்ன! 106
39. இலட்சுமி கடாட்சம் 108
40. அன்பு என்னும் இன்ப உணர்வு 111
41. நாம் செல்லும் பாதை 114
42. பக்தி எதற்கு எமக்கு? 117
43. குருவும் சிஷ்யனும் 120
44. சமயங்களில் தத்துவம் 122
45. இறைவழிபாடு - எந்த வகையில்? 125
46. வழிகாட்டிகள் 128
47. மறு ஜன்மம் 130
48. இறைவனின் கருணை 136
49. கலியுகத்தில் பக்தி 140
50. பிரார்த்தனை 144
51. திருமணப்பந்தலிலே 147
52. தானம் 150
53. அஹிம்சை 153



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. ஜபம் 156
55. ஞானச் சிரிப்பு 159
56. மானிடமும் இறையும் 161
57. எண்ணமும் செயலும் 164
58. சிக்கெனப் பிடித்தேன் 166
59. முன்னைப் பழம் பொருள் 169
60. இந்து மதம் 172
61. தர்ப்பைப் புல் 174
62. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து 177
63. இயற்கையை மதிக்கும் இல்லறம் 181
64. வாழ்வும் தத்துவங்களும் 184
65. தேவாரத்தின் மகிமை 186
66. கர்மமும் வினையும் 189
67. ஆசையும் அவலமும் 192
68. ஆன்மீகமும் நாமும் 194
69. மெய் ஞானமும் விஞ்ஞானமும் 197
70. வேதம் காட்டும் வழி 199
71. பக்தி 202
72. எமது மதம் 204
73. கலியுகத்திற்கு உய்வைத் தருபவை 207
74. அன்பும் மதங்களும் 210
75. அன்பை எங்கே செலுத்துவது? 212
76. அக்னி பகவான் 214
77. சிவனாரும் சனிபகவானும் 217
78. சதுர்யுகங்கள் 219
79. எண்ணம் போல் எல்லாம் ஈடேறுமா? 223
80. கங்கை 225
81. சான்றோர் மகிமை 227



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. மனிதனைத் தெய்வமாக்குவது எது? 229
83. ஆலயம் தொழுவது சாலவும் நன்று 232
84. அன்பும் ஆன்மீகமும் 235
85. மரங்களும் மதங்களும் 237
86. அன்னையின் அருள் 240
87. இறைவன் உறையும் இடங்கள் 243
88. இறையும் இசையும் 247
89. இந்து மத ஆதாரம் 249
90. கண் திறக்கும் கல்வி 251
91. நாத வடிவினனுக்கு ஒரு நாதாஞ்சலி 254
92. பிரார்த்தனை எவ்வாறு அமைய வேண்டும்! 257
93. இறை சிந்தனை என்றும் வேண்டும் 259
94. மனம் ஒரு குரங்கு 262
95. நிஜமும் நிழலும் 265
96. அருளாளர்கள் 268
97. ஐயப்பன் 270
98. புராணங்கள் பொய்யா? 273
99. தல புராணங்கள் 275
100. அகமும் புறமும் 277
101. மனோலயம் 280
102. அந்தி வானத்துச்சந்திரன் 282
103. கந்த புராணம் 285
104. நம்பினோர் கெடுவதில்லை 288
105. தர்மம் 291
106. கண்ணாடி 294
107. தாரமும் குருவும் 297
108. இல்லற ஞானிகள் 300
109. திருவடிச் சிறப்பு 305
110. திருவருள் 307



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசுஅறு காட்சி யவர்க்கு"

என்பது வள்ளுளர் வாக்கு.

அஞ்ஞானமான மயக்கத்திலிருந்து விடுபட்டு குற்றமற்ற மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு பிறப்பெனும் இருள் நீக்கப்பட்டு பேரின்ப வீட்டினைக் கொடுக்கும் என்பதாம்.

இக்காலத்தில் ஏராளமான நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் சிலவே அறிவு புகட்டுவனவாகவும் ஆன்மீகசிந்தனை தருவனவாகவும் அமைகின்றன. இவற்றில் சில அறிவுபுகட்டுவன சில ஆன்மீக சிந்தனையை ஊட்டுவன.

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுருவினால் 110 சைவ நற்சிந்தனைகளைக் கொண்டுள்ள இந்த நூற்றொகுப்பு அறிவைப் புகட்டுவதாகவும் மனஎழுச்சி ஊட்டுவதாகவும் ஆன்மீக சிந்தனைகளை போதித்துள்ளதாகவும் காண முடிகிறது.

ஏற்கனவே அம்மையார் பல நூல்களை வெளியிட்டு சைவப்பெரும் மக்களுக்கு ஆன்மீகப் பணி ஆற்றி உள்ளவர். குறிப்பாக "இந்துமதம் விரதங்கள் விழாக்கள்" என்னும் அவரது நூல் மூலம் சைவஅடியார்கள் பெரும் பயனை அடைந்ததை எவரும் மறக்கமுடியாது. பரவித்தை எனப்படும் ஆன்மீக அறிவை இந்நூல் அளிக்கிறது. இந்நூல் நுவலும் பொருளை சைவ நற்சிந்தனை என்று நூல் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

உடல் உணர்வில் இருந்து விடுபடுவதே சைவநற்சிந்தனை யின் குறிக்கோள். இது பக்தி இலக்கியத்தில் மோட்சம் என்று கூறப்படும். இந்து மோட்சத்தை அடைவதற்கு ஒரு சாதனை மேற்கொள்ளவேண்டிய பலவித சாதனைகளே நல்ல சிந்தனையும் நற்சிந்தனையும் ஆகும்.

இவ்வரிய நூல், இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனத்தில் அம்மையார் அவர்கள் சைவநற்சிந்தனை நிகழ்ச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்திய பகுதிகளின் ஒரு தொகுதியாக இது காணப்படு கிறது. இச்சிந்தனைகள் சைவப்பெருமக்கள் இல்லத்தில் என்றும் புத்தகவடிவில் இடம்பெறுவதற்கு உதவிபுரிந்த திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அம்மையாரை எவ்வளவு போற்றினாலும் மிகையாகாது.

அம்மையார் அவர்களின் இப்பணி இத்துடன் நிறைவு பெறாமல் தொடர்ந்தும் சைவப் பெரு மக்களுக்கு இன்னும் பல அறிவு புகட்டும் நூல்களை வெளியிட வேண்டும் என்று அவரை வாழ்த்திக்கொண்டு எல்லாம் வல்ல அருள் மிகு இராஜஇராஜேஸ்வரி அம்மனை வணங்கி மனமார்ந்த உள மார்ந்த நல்லாசியை வழங்குகின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்."

**சிவஸ்ரீ வெ. சுப்பிரமணியக்குருக்கள்**
**(உடுவில்)**
**ஆதீன கர்த்தா ஈசான சிவச்சாரியர்**

**ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயம்**
**A12 - G3, சொய்சாபுர,**
**மொரட்டுவ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளுரை

உலகு உண்மை வயப்பட்டது.

உண்மை அறிவு வயப்பட்டது.

அறிவு ஆண்டவன் வயப்பட்டது.

உண்மை அறிவின் பெருமையே மேல் உரைக்கப்பட்டது.

உலகுய்ய உண்மை அறிவின் வித்துக்களை

ஞானியர் மனதில் வேதங்களாய் விதைத்தான் அவ் இறைவன்.

இயற்கையோடு ஒன்றிய வல்லமையால் அப்பெரியோர்கள்

பிரபஞ்சமெங்கும் கலந்து நின்ற அறிவின் கூறுகளை தமது அறிவால் ஈர்த்து

வேத சப்தங்களாய் அதை வெளிப்படுத்தினர்.

அவ்வேத சப்தங்களே உலகின் முதல் அறிவுக் கூறுகளாம்.

எழுதாக்கிளவி செய்யாமறை என்றெல்லாம் உரைக்கப்பட்ட

அவ்வேதங்களை முதல் நூல்களாய் கொண்டது நம் இந்துமதம்

அவ் இந்துமதத்தின் வேர்கள் பிரபஞ்சமெங்கும் விரிந்தவை.

அவ் உயர் நூல்கள் உரைக்கும் உண்மைகளை

உணரும் தகுதி படைத்தார் ஒரு சிலரே.

அவரைக் கடந்து இவ்வேத உண்மைகள்

சாதாரணர்களிடம் செல்ல வேண்டும் என்பதற்காய்

வேத ஆகம புராண இதிகாசம் எனும் நூல் வரிசையை

நம் இந்துமதப் பெரியோர்கள் தோற்றுவித்தனர்.

அவர்தம் முயற்சியால்

மேல் வேத உண்மைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமெங்கும் ஓரளவு பரவின
இன்றைய இளையோர்
இக்கலிகாலத்தில் சமயக்கல்வியை
வேண்டாத ஒன்றாய் விலக்கி நிற்கின்றனர்
அதன் அவசியம் உரைத்து
அவர்தமை நெறி செய்யும் மூத்தோர் தொகையும்
இன்று மிகக் குன்றிவிட்டது.
அதனால் உலகெங்கும் அறச்சிதைவும் உளச்சிதைவும் ஓங்கி வளர்கின்றன
இந்நிலையில் அவ்அரிய உண்மைகளை
இளையோர் தமக்கு எளிமையாய் உரைக்க முயன்றுள்ள
அம்மையார் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களின் முயற்சி
மிகவும் பாராட்டுக்குரியது.

அம்மையார் என்னைத் தாயாய் நேசிப்பவர்
அவர் கணவர் எனது ஆசிரியர்.
அம்மையாரும் ஆசிரியராய், அதிபராய் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
அப்பணி தந்த சிந்தனையால்
நெறி செய்து இளையோரை ஈர்க்க முயல்கிறார்
தான் பெற்ற நூலறிவோடு அனுபவ அறிவையும் இணைத்து
அவராக்கியுள்ள இந்நூல்.
இளையோரை நல்வழிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை
அறம் ஆளுமை
அன்பு அறிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு வழிபாடு

தரிசனம் தத்துவம்

எனும் பலதரப்பட்ட கட்டுரைகள் அமைந்துள்ளன.

சிறிய தலைப்புகளில் பெரிய உண்மைகள்

சிறுவரையும் ஈர்க்கும் வண்ணம் கதையோடு கருத்துரைக்கும் பாங்கு

பெரிய தத்துவங்களைக் குறிகளால் காட்ட முயலும் முயற்சி

சமய உள்ளோட்டங்களைப் புனைகதைகள் போல் உரைக்கும் பாங்கு.

அக்கதைகளின் இடையிடையே

தாய்மையோடு தன் கூற்றாய் உரைக்கும் அறிவுரைகள்

பெரிய விடயங்களையும் மாத்திரைகளாக்கிய எளிய கட்டுரைகள்

சீலரையும் பாலரையும் ஒருமித்து ஈர்க்கும் தமிழ் நடை என

அம்மையாரின் நூற்பெருமை விரிகிறது

உலகுய்ய நினைந்து ஆக்கப்பட்ட இக்கதம்ப நூலை

அனைவரும் பெற்றுப் பயன் அடையவேண்டும்

அன்னையின் இம்முயற்சி தொடர

கம்பன் திருவடிகளைப் பணிந்து வாழ்த்துகிறேன்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சைவ நற்சிந்தைனைகள் என்னும் தலைப்பில் இலங்கை வானொலியில் தாம் ஆற்றிய சைவ நற்சிந்தனைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ள கலாபூஷணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மனிதனைப் பக்குவப்படுத்தி வாழ்வை உயர்நிலைப் படுத்துவது சமயம் ஆகும். அவ்வகையில் இந்து சமயத்தின் பெருமையை உணர்த்துவதாக சாத்திர தோத்திரங்கள் மற்றும் புராண இதிகாசங்கள் என்பன அமைந்துள்ளன. இவை நாயன்மார்கள் அடியார்கள் ஞானிகள் ஆகியோர் வாழ்ந்து காட்டிய வாழ்வியல் நெறியை விளக்குவதோடு இறைவனின் அற்புதங்கள் திருவிளையாடல்கள் போன்றன வற்றையும் வெளிப்படுத்தியும் நிற்கின்றன. இச்சாத்திர தோத்திர புராண இதிகாசம் கூறும் செய்திகளை அனைவரும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் ஆசிரியரது இந்நூல் எளிய நடையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சைவ சமயத்தின் அடிப்படை பொருள்களான பதி பசு பாசம் எனும் முப்பொருள்கள் பற்றிய தத்துவார்த்தங்கள் இந்நூலில் சிறப்பாக அமையப்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்துச் சைவ மரபில் பிறந்த ஆசிரியர் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு சிறந்த ஆன்மீக இலக்கியப் பேச்சாளராவார். இலங்கையின் புகழ்பூத்த வீணை இசைக் கலைஞர்களுள் ஒருவராகவும் இவர் விளங்குகின்றார். உலகில் எம்மை அடையாளப்படுத்தி நிற்கும் சமய மரபுகள் பண்பாடு என்பனவற்றை விரிவாகவும் தெளிவுபடவும் முறைப் படுத்தி இலங்கை வானொலியில் சைவ நற்சிந்தனைகளாக வழங்கிய உரைகளைத் தொகுத்து இந்நூலை எளிமையாக அனைவரும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் ஆசிரியர் அமைத்துள்ளமை பாராட்டிற்குரியதாகும். ஆசிரியரின் இத்தகு அரிய பணி மென்மேலும் பல்கிப்பெருக எல்லாம் வல்ல இறைவனை அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**

**பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதப்புரை

இன்றைய உலகின் நடைமுறையை அவதானித்து பயன் பாட்டுக்குத் தேவையான சிந்தனைகளைத் தந்துள்ள ஒரு சிறந்த நூல் இது.

வாழ்வுக்கு வளம் தருவதும் உயிரையும் உடலையும் உய்விப்பதும் அன்றாட வாழ்வுக்கு வேண்டியதுமான விடயங்கள் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் முடியாத பலர் வாழும் இன்றைய உலகுக்கு நல்ல விடயங்களையும் அறக்கருத்துக்களையும் அவரவர் ஏற்றுக்கொள்ளும் பாங்கிலே எடுத்துச்சொல்பவர்கள், பெரும் புண்ணியவான்கள், என்பது எனது அபிப்பிராயம்.

நாம் எம்மை இந்த வையகத்தில் மனிதராகப் பிறக்க வைத்த வாழ்முதலாகிய பரம்பொருளை என்று நன்றியோடு நினைத்து வழிபட மறக்கிறோமோ, அன்றே எமது வாழ்வு நிறைவில்லாமல் அர்த்தமற்றதாகப்போகின்றது என்ற உணர்வு எமக்கு ஏற்படத்தான் செய்யும். இது நீங்கள் அனுபவத்தில் கண்ட காணும் உண்மையாகும்.

தெய்வம் என்பதோர் சித்தம் தான் எம்மை ஆளுகின்றது என்பதை முதலில் யாம் உணர்ந்தாக வேண்டும். குரு ஸ்தானத்திலே நின்று உயர்ந்த சிந்தனைகளை அவ்வப்போது மக்களுக்குக் கொடுக்க வல்லவர்கள் உண்மையிலேயே உயர்ந்தவர்கள்.

இந்த வரிசையிலே தான், தனது அற்புதமான சிந்தனைத் தொகுப்பு நூலின் மூலம் எமக்கு அரிய பணியை ஆற்றும் குருவாக திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு விளங்கு கின்றார்.

கடந்தகாலங்களில் இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பு மூலம் தம்மால் ஆற்றப்பெற்ற சமய நற்சிந்தனைகளை நூலாக்கம் செய்து எமக்கு நியாயமான முறையிலே நல்வழி காட்டும் அரும்பணியாளர்களின் வரிசையில் கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குருவும் இணைந்திருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு உண்மையில் பெருமைப் பேறாகின்றது.

நம் நாட்டிலே ஒரு நல்ல ஆன்மீக சமய சிந்தனையாளராக வாழ்ந்து வருவதோடு தம்மை வெளிப்படுத்தும் ஆற்றலிலும் கை தேர்ந்தவராக விளங்கும் திருமதி இராஜேஸ்வரி அம்மா அவர்கள் நெடுநாளாக போதனையும் சாதனையும் கலந்த ஆசிரியத்துவம் மூலமாக இன்றைய உலகத்தைத் தரிசித்த அனுபவமுள்ளவர் என்பதோடு ஒரு நல்ல பேச்சாளர் எழுத்தாளர் கலைஞர் என்பதையும் நாடறியும்.

நாவலர் பெருமானை அடுத்தடுத்த குரு பரம்பரைத் தொடர்பு இவரது மேலதிக தகைமையாகும். அரசினால் இனம் காணப்பெற்ற நல்ல அறிஞரும், சான்றோரும் கூட. முது நிலைப்பட்டதாரி இவற்றை விட என்ன தகுதி வேண்டும் அவருக்கு?

இந்து மதம் விரதங்கள் விழாக்கள் என்ற தனது முந்திய நூற்பிரசவத்திற்கு பின்னர் அம்மையாரின் அடுத்த வெளி யீடாக மலரும் சைவ நற்சிந்தனைகள் நூலை அனுபவிக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. பலர் அறிந்ததும் பன் முகப்பார்வையில் எழுதப்பெற்றதும் புராண இதிகாச மேற்கோள்கள் இணைந்ததுமான சகலருக்கும் நன்மை பயக்கும் பற்பல விடயங்களையும் சிறு சிறு கதைகளையும் இணைத்து சொல்லத்தக்க விஷேட தன்மை இவருக்கே உரியது என்றால் அது மிகையாகாது. குறிப்பாக அவர் தம் நற்சிந்தனையைக் கூற முற்படும் பகுதியிலும் அதனை நிறைவு செய்யும் தறுவாயிலும் கையாளும் வார்த்தைகள் திருமதி ஜெகானந்த குருவுக்கே உள்ள தனிப்பாணி.

உதாரணமாகப் பாருங்கள்

"மனிதன் கடவுளுக்காகவா? இல்லை!

கடவுள் தான் மனிதனுக்காகவா!

இது பற்றி சிந்தித்து செயற்படுவோமாக!"

"முயன்று பார்ப்போமாக!"

"எனவே சலனம் வேண்டாம். இறையை நம்புவோம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

எண்ணியவற்றைப் பெறுவோம்..

"இந்த வகையில் ஒரு பெண்ணாகத் தேவைதானா?"

"சிறிது சிந்தித்துப் பார்க்கவும் வேண்டும் செய்வோமா?"

"இம்மையில் இன்னருள் பெற்றுய்ய யாம் திட சங்கற்பம் எடுத்தல் அவசியம். எடுப்போமா?"

"நாம் எந்த இலட்சியத்தை நோக்கி எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்? சிந்திப்போமா?"

"நற்பண்புகள் இன்றைய சமுதாயத்திற்கு மிக அவசியம் தேவைப்படுகின்றன. இல்லையா?"

"இப்போது நீங்கள் சொல்லுங்கள்!"

"அருளாளர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்பதில் புண்ணியம், படிப்பதில் புண்ணியம், எடுத்துச்செல்வதில் புண்ணியம், இவற்றில் ஒன்றையேனும் செய்யாது நாம் வாழ்வதில் என்ன புண்ணியம்?"

முடிவாக நூற்றுப்பத்துத் தலைப்புகள் ஊடாக இவர் சொல்லியுள்ள செய்திகள் அற்புதமான விடியல் நற் சிந்தனைகளை ஒரு முறை படித்தால், அவை அப்படியே படிப்பவர் மனதில் நின்று விடும் பாங்கினில் எழுதப்பட்டி ருப்பதை உணர்வீர்கள். சிவனெனும் பெயரை முதலாகக் கொண்ட செம்மேனி அம்மானாகிய சிவனின் திருவிளை யாடல்களையும் அருட் செயல்களையும் சொல்ல முற்படும் இடங்களில் கூட உலக நடைமுறைக்கு இயைவாய் இவற்றில் உள்ள சமுதாய ரீதிகளைப் புலப்படுத்த விழையும் அவரது உத்தி புதுமையானதே. சிறப்பாக இல்லறம் என்ற தலைப்பில் உலகத்தில் வாழ்வாங்கு வாழும் முறையைச் சொல்லி அடுத்து கயை பதியின் வரலாற்றை சிரார்த்தக் கிரியையோடு இணைத்துக்காட்டுமிடம், பிரார்த்தனையின் மகத்துவம் "புராணங்கள் பொய்யா" போன்ற தலையங்கங் களூடாக இந்நூலாசிரியர் சொன்ன சிந்தனைகள் காலத்தின் தேவையைக் கருதி நிற்பவையாகத் துலங்குகின்றன.

நல்ல சமய ஞானம் கொண்ட கலாபூஷணம் இராஜேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகானந்தகுரு இவ்வாறு ஒரு காத்திரமான சிந்தனைத் தொகுப்பை எமக்குத் தர அதற்கு யான் அணிந்துரை தருவதன் பொருத்தம் பற்றி பாயிரம் செய்வோர் பற்றிய நன்னூல் விளக்கத்தை நோக்கித்தேடினேன். ஒரு தமிழ் ஆசிரியராக கல்வி வாண்மையின் தேவை கண்டு இளைப்பாறி சமயப்பணி ஆற்றும் யான் கொக்குவில் மண்ணின் மைந்தன் சபாரத்தின முதலியாரின் உறவினன் என்ற வகையிலும் கனடாவில் யானும் ஒரு நூல் வெளியிட்ட அனுபவத்தினாலும் இந்நூலுக்கு யான் எழுதும் இவ்வணியுரை யான் இந்நூலைப் படித்த அனுபவத்தில் உண்மையான அணி உரை என வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி


கலாபூஷணம் அருட்கலை அரசு

**சின்னத்தம்பி ஸ்ரீ தயாளன் M.Phill**

முன்னாட் கல்வி அதிகாரி

உதவிப் பணிப்பாளர்

இந்துக்கலாசார அமைச்சு, கொழும்பு

நம்பி நற்பணி மன்றம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

நற்சிந்தனையை மனதிலே விதைத்துவிட்டால் நா அதனைச் செய்யும், தலை வந்தனைச் செய்யும், கை தொழும், அதனால் ஊற்றெடுக்கும் அன்பு இறைவனுடன் பந்தனை செய்யும், உடல் அரும்பி விதிர் விதிர்க்கும், இறை அம்சம் சித்திக்கும் என்பது சேரமான் பெருமாள் நாயனார் கண்ட அனுபவம்.

இதனை அவர் தனது பொன்வண்ணத்தந்தாதியிலே,

"சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலை அமைத்தேன்
கை, தொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன்
மெய், அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவை யான் விதித்தனவே"

1104 C.C

எனப்பாடித் தந்துள்ளார்.

இவ்வித பயன் தரும் சைவ நற்சிந்தனையை தினமும் அதிகாலையில் இலங்கை வானொலியில் கேட்கும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கிறது.

சைவ நற்சிந்தனையை வழங்குபவர்களில் முக்கியமான ஒருவராக விளங்குபவர் கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள்.

இவர் ஆழ்ந்த அகன்ற கல்விப்புலமையும், சமய ஞானமும், கற்பித்தல் அனுபவமும் மிக்கவர். நற்சிந்தனை மட்டுமன்றிச் சமயச் சொற்பொழிவுகள், உரைச்சித்திரங்கள், இசைச் சித்திரங்கள் முதலான பல கலைவடிவங்களினை, சமயக் கருத்துக்களை பக்தி சுவையுடன் தருபவர்.

"வேழமுகத்து விநாயகன்" தொடக்கம் "திருவருள்" ஈறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது 110 சைவ நற்சிந்தனைகள் நூலுருப்பெற்றுச் சைவ உலகிற்குப் புதுவரவாக வந்துள்ளன. வானலையில் தவழ்ந்து வந்த இவரது சைவநற்சிந்தனைகளை நூலுருவாக்கி எங்கள் கைகளில் தவழவிட்டுள்ளார். இதனை ஒரு ஞானதானம் எனவே கொள்ளலாம்.

இந்தக் காலம் அவசரயுககாலம். அனேகமானவருக்கு ஆறுதலாயிருந்து படிக்கவோ, வாசிக்கவோ அவகாசம் இருப்பதில்லை. எனினும் 4, 5 நிமிடங்களில் வாசித்துச் சிந்திப்பதற்கு வாய்ப்பாக இந்த நற்சிந்தனை நூல் மலர்ந்திருப்பது இக்காலத்துக்கு மிகப்பொருத்தமானதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

இதில் சைவ சமயத்தவர்களுக்குத் தேவையான சைவ வாழ்வியற் கருத்துக்கள் நிறைந்துள்ளன. பொதுவாக மனித வாழ்வின் விழுமியப் பண்புகளான தர்மம், அன்பு, பக்தி, பொறுமை, சத்தியம், இலட்சியம், அகிம்சை, ஆன்மீகம், கல்வி, அருள் முதலான தலைப்புக்களில் சிந்தனைகள் பேசப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் கருத்துக் குவியல்களாக மட்டும் இல்லாமல் ஆங்காங்கே பொருத்தமான சுவையான கதைகளும், தோத்திரப்பாடல்களும் சொல்லப் பட்டிருப்பது படிப்பவர் மனதில் சுவையையும், இன்ப அனுபவத்தையும் தூண்டுவனவாக உள்ளன. அதனால் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்துப் பயன் கொள்ளத்தக்கனவாகவும் அமைந்துள்ளன.

சைவ சமயத்துக்கும், கலைத்துறைக்கும் பன்முகப்பணி செய்துவரும் இந்நூல் ஆசிரியர், பல்லாண்டு வாழ்ந்து பணிபல தொடர, எல்லாம் வல்ல சிவபெருமானை வேண்டித் தொழுது வாழ்த்துகின்றேன்.

**கலா பூஷணம், சைவப்புலவர்**

**சு. செல்லத்துரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கல்வித்துறையிலும் கலைத்துறையிலும் நாடறிந்த நல்ல அதிபர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள். சிறப்பான திறமைகளாலும் அளிக்கைகளாலும் "கலா பூஷணம்" "வீணைக்கலைஞர்" விருதுகளைச் சொந்தமாக்கிக் கொண்டவர். சாஸ்திரிய சங்கீதத்தை விரும்பும் இளம் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்கு உரிய திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு பொதுவாக மக்கள், குறிப்பாக இளைஞர், யுவதிகள், நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்படுவ தோடு இயல், இசை, நாடகம் என முத்தமிழ் அறிவோடு சமய அறிவையும் பற்றையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என விரும்புபவர்.

நற்சிந்தனைகள் மனிதரை நல்வழிப்படுத்தும் - மனதுக்கு அமைதியை, சாந்தியை சந்தோஷத்தைத் தரும் என்பதை நன்குணர்ந்து, வானலைகள் வாயிலாக தொடர்ந்து சைவ நற்சிந்தனைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். தெளிந்த நல்லறிவும், காத்திரமான கருத்துக்களைத் தெரிவிக்கும் திறமையும், ஒலிவாங்கிக்கேற்ற குரல்வளமும் இவரது தனித் தன்மைகள். ஒரு முறை கேட்டாலும் மனதில் பசுமரத்தாணி போலப் பதியத்தக்கதாக தனது உரைகளுக்கான தலைப்பு களையும் அமைத்துக் கொள்ளும் ஆற்றல் கைவரப் பெற்றவர். இவர் உதாரணமாக "தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே" "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" "இல்லறம் அல்லது நல்லறம் அன்று" "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" நம்பினோர் கெடுவதில்லை" என ஒவ்வொரு தலைப்பும் தொன்மை யானதாகவும் மேன்மையானதாகவும் உள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

வாழ்க்கை சிறந்ததாக அமைய வேண்டும் என எல்லோரும் விரும்புகின்றார்கள். சிறந்த வாழ்வுக்கு சிந்தனை கள் சிறந்தவையாக, உயர்ந்தவையாக, மிக மிக நல்லவையாக இருப்பது அவசியம். அத்தகைய சிந்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சிந்தனைகள் என போற்றிப் புகழப்படுகின்றன. இந் நூலிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தலைப்புக்களிலான சைவநற்சிந்தனைகள் சைவசமயம் என்பது மூட நம்பிக்கை கள் அல்ல என்பதை எளிமையான விளக்கங்களால் தெளி வாக்கி அவை இறை பக்தியையும் நல்ல பண்பாட்டையும் வளர்க்கும் என்பது எனது நம்பிக்கை என்கிறார். அன்பே சிவம் என எல்லோரிடமும் அன்பு காட்டும் நெறி சைவநெறி. அது மேலும் நல்ல பண்பு பேணி நல்லொழுக்கத்துக்கும் பழக்கவழக்கங்களுக்கும் வழிகாட்டத்தக்கது.

காலச்சுழற்சியில் ஆழ்ந்த சமய அறிவுள்ளவர்களின் பங்களிப்பு அருகிக் கொண்டு செல்லும் வேளையில் அர்ப்பணிப்புடன் கூடிய நூலாசிரியையின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு சமூகத்துக்குண்டு.

ஆன்மீகம் தொடர்பான விடயங்களுக்கு முன்பெல்லாம் ஊடகங்களில் அதிக அளவு நேரம் ஒதுக்கப்பட்டன. இன்று இத்தகைய விடயங்களுக்கு ஊடகங்கள் ஒதுக்கும் நேரமும் ஒதுக்கும் பக்கங்களும் குறைந்து கொண்டு செல்வதும் இத்தகைய நூல்களுக்கான அவசியத்தை வற்புறுத்துகின்றது.

காற்றலைகளில் தவழ்ந்தவை, உங்கள் முன்னால் உள்ள புத்தகத்தில் பதிவுகளாகி கனதியான - காத்திரமான நூல் எனக் கூறத்தக்க அளவுக்கு அருமையாக உருவாக்கப் பட்டுள்ளது.

பரபரப்பான இன்றைய நவீன உலகில் உள்ளத்தைப் பண்படுத்தி இன்பத்துடன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ எண்ணம் கொள்வோருக்கு ஏற்ற நூல் இது.

**உடுவை எஸ். தில்லை நடராஜா**
**உறுப்பினர், அரசபொதுச்சேவை ஆணைக்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுரை

திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் அனுபவமும் ஆளுமையும் நற்பண்புகள் பலவும் நிறைந்த பெண்மணி என்ற வகையில் என்னுடைய நன் மதிப்புக்கு உரியவர் ஆகின்றார்.

அம்மணி அவர்கள் ஒரு ஓய்வு நிலை அதிபர். பாடசாலை யிலே பலதரப்பட்ட ஆசிரியர்களையும் மாணவர்களையும் சீராகத் தினம் தினம் வழிநடத்தி சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கி சமுதாயத்திற்கு வழங்குகின்ற பொறுப்புள்ள பதவியுடன் நீண்டகாலமாக இணைந்திருந்தவர் என்ற வகை யிலே அவருடைய தொழிற்தகைமையை நான் உயர்வாக மதிக்கிறேன்.

அம்மையார் அவர்கள் ஒரு சிறந்த வீணை இசைக் கலைஞர் என்ற வகையிலே இசை உலகத்துடன் அவர் இணைக்கப்படுகிறார். வீணையின் தந்திகளிலே மறைந் திருக்கும் ஸ்வரங்களைத் தனது விரல்களின் அசைவுகளினால் மீட்டிச்செவிக்கினிமை வழங்குவதில் அதீத திறன் படைத்தவர் அவர். அத்துடன் தனக்கான மாணவர்களை வீணை இசைக் கலைஞர்களாகச் செழுமைப்படுத்தி உயர்த்தி விடும் சிறந்த குருவாகவும் தன்னை அவர் இனம் காட்டியிருக்கிறார். தனது மகளையும் இசை உலகிலே அறிமுகப்படுத்தி கலை உலகச் சேவையிலே திருப்தியடையும் அவருடைய உளப் பாங்கை யும் நான் உயர்வாக நினைக்கிறேன். அவர் ஒரு பல்கலைக் கழகத்தின் முதுகலைமாணிப் (M.A.) பட்டதாரி. இலக்கியங் களிலே தரமான புலமையுண்டு. கற்றறிந்த வற்றையெல்லாம் இதமான சொற்களால் வெளிப்படுத்தும் பேச்சாற்றலும் இவருக்கு உண்டு.

இவையெல்லாம் அவருடைய அறிவு சார்ந்த, ஆற்றல் சார்ந்த, சமுதாயத்தால் இனங்காணப்பட்ட பண்புகள். இவற்றை விட ஆன்மிக உலகத்துடனும் அவருக்கு இணைப்பு உண்டு. தான் கற்ற விடயங்களில் உள்ள சமய விழுமியம் சார்ந்த கருத்துக்களையெல்லாம் மக்களுக்கு இதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கூறி அவர்கள் மனதிலே இறை சிந்தனைகளைப் பதிய வைப்பதற்குப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். அதற்காக அவர் வானொலியையும் தேர்ந்து எடுத்துள்ளார்.

இலங்கையிலே நீண்ட கால வரலாற்றுப் பெருமை மிக்க தொடர்புச் சாதனமான இலங்கை வானொலியிலே ஒலிபரப்பா கும் இந்து சமய நிகழ்சிகள் பலவற்றிலே கலந்து கொண்டு அம்மணி அவர்கள் பல பயன்தரு கருத்துக்களை சைவ சமய நேயர்களுக்குப் பல வருடங்களாக வழங்கி வருகின் றார். அவற்றிலே முக்கியமாக குறிப்பிடவேண்டிய நிகழ்ச்சி காலைபொழுதிலே ஒலிபரப்பாகும் சைவ நற்சிந்தனை.

மனிதன் அமைதியாக இறைவனோடு இணைந்திருக்கும் வேளை காலைப் பொழுது. மென் தென்றற்காற்று இதமாக வீச, நிசப்தமாக இருந்த உலகம் மெல்ல மெல்ல துயில் எழுகிறது. வானொலிப்பெட்டி மெதுவாக திறக்கப்படுகிறது. இலங்கை வானொலி தமிழ் சேவை, சைவ நற்சிந்தனை, வழங்குபவர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் என்ற செய்தி நேயர்களின் செவிக்குள் நுழைகிறது. ஐந்தே நிமிடங்களில் அந்நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது. ஐந்து நிமிடங்களில் ஐம்பது வருட வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்கள் நிறைந்த பல கருத்துக்களைக் கேட்ட திருப்தியுடன் அன்றைய நாட்காரியங்களைத் தொடர் கிறார்கள், சைவ மக்கள். காற்றலைகளினூடாகத் தவழ்ந்து வருகின்ற இந்த சைவநற்சிந்தனை நிகழ்ச்சி இலங்கை வானொலியில் புகழ் பூத்த நிகழ்ச்சியாக சைவ மக்களின் நெஞ்சிலே நீண்டகாலமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனைய நிகழ்ச்சிகளுடன் சைவ மக்கள் இணைந்திருக் கிறார்களோ இல்லையோ, காலைப்பொழுது சைவ நற் சிந்தனையுடன் கட்டாயமாக இணைந்திருப்பார்கள். அது மிகைப்படுத்தப்படாத உண்மைச் செய்தி. இந்த நிகழ்சியோடு திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் இணைந்திருந்தமையாலும் வழங்கப்பட்ட கருத்துக்கள் சிறப்பானதாக அமைந்திருந்தமையாலும் அவருக்கெனப் பல நேயர்கள் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ நற்சிந்தனை காற்றோடு கலந்து காணாமல் போய் விடுமே அடுத்த சந்ததிக்கு அக்கருத்துக்கள் கிடைக்காமற் போய்விடுமே என்று எண்ணிய அம்மையார் அவர்கள் அச் செய்திகளையெல்லாம் எழுத்துருவிற் பதிவு செய்து அச்சிற் பதிவாக்கி நூல்வடிவத்தில் வெளியிடுவதற்குத் துணிந்த இம்முயற்சி போற்றத்தக்க விடயமல்லவா! பல்வேறு தலைப்புக் களில் நற்சிந்தனைகள் உதிர்ந்திருக்கின்றன. ஒவ்வொரு தலைப்பிலும் சாத்தியமான இறையனுபவங்கள் பதிவாகி யிருக்கின்றன. இவற்றையெல்லாம் இளம் தலைமுறையினர் கற்க வேண்டும். பெரிய எழுத்திலே சுவையான மொழி நடையிலே நேரில் பேசுவது போன்ற பாணியிலே எழுதப்பட் டுள்ள இச்செய்திகளைச் சலிப்பின்றி வாசித்து மனதிலே பதித்துக் கொள்ளலாம்.

அம்மணி அவர்களுக்கு சைவ சமய எழுத்துலகம் புதிதல்ல. ஏற்கனவே பல நூல்களை அவர் எழுதியுள்ளார். அவற்றிலே "இந்து மதம் விழாக்களும் விரதங்களும்" நூல் பற்றி பலராலும் சிறப்பாக பேசப்பட்டது. தனது ஓய்வு நிலைக் காலத்தைக்கூட வீணடிக்காமல், சமுதாயத்திற்கான, சீராக்க முயற்சிக்காகப் பயன்படுத்த எண்ணியமை, அவருடைய பெருந்தன்மையுடைய எண்ணப்பாங்குகளை எமக்குரைக் கின்றன. எனவே இந்நூல் எல்லோராலும் வாசிக்கப்பட வேண்டிய முக்கியமான இந்து சமய ஆவணம் என்பதே உண்மையான தகவல்.

நூற்றுப்பத்துத் தலைப்புகளில் சைவ நற்சிந்தனைகள் பதிவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் எது சிறந்ததலைப்பு என்று பிரித்து எண்ணப்படவே முடியாது. ஒவ்வொரு தலைப்பும் ஒவ்வொரு புதிய விடயங்களைக் கொண்டதாகவே அமைந்திருக்கின்றன. வாசித்தறியும் பொழுது அவ்வுண்மை புலப்படும். இப்போதே வாசிக்கத் தொடங்குங்கள்.

வாழ்க வளமுடன்

**திருமதி ஹேமா சண்முகசர்மா**
**ஆசிரிய ஆலோசகர் (இந்து சமயம்)**
**கல்வி வலயம், கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக உரை

எமது பாரம்பரிய வாழ்வியல் முறையில் குரு சீட முறை மூலம் கல்விப் பரம்பலானது. வாழையடி வாழையாக ஆசிரியத்துவம் வெளிப்படையானது. அந்தப் பரம்பரை ஆசிரியத்துவம் கொண்டவர்களில் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குரு அவர்கள் குறிப்பிடக் கூடியவர்கள். அந்த ஞான ஊற்று சைவத்தையும், தமிழையும் காரண காரியத்துடன் அறிய வைத்தது. அவர் பெற்றுக் கொண்ட பட்டக் கல்வியுடன், பட்டறிவுக் கல்வியும் விருத்தியாக்கப்பட்டது. அதன் வெளிப்பாடே இந்நூல்.

"ஆசிரியர் பணி, இறை இட்ட கட்டளை" (THE ORDER FROM GOD). அத்தகைய ஆசிரிய, அதிபர் வாண்மையூடாக சமூகத்தை உற்று நோக்கிய அவரது பார்வை, மக்கள் வாழ்க்கைக்கும் பயன்படுத்த உதவியுள்ளது.

அதன் வெளிப்பாடே தேசிய வானலைகளில் விடியல் வேளையில் சைவ நற்சிந்தனையாக நம் சிந்தனைக்கு விருந்தாகின்றது. விஷேட விரத சைவ புண்ணிய நாட்களில் அவற்றை அநுட்டிக்கும் முறையையும் அவசியத்தையும் காரண காரியத்துடனும், வரலாற்றியலுடனும், இலக்கியத்துடனும், தனது சிந்தனைகளில் தொடர்பு படுத்துவார். விளக்கி முடிக்கும் பொழுது, ஒரு வினா தொடுத்து, அதற்கு விடை கண்டு சிந்திக்க வைப்பார். சிறிது நேரத்தில் கேட்போர் சிந்தையில் உரிய கருத்தைப் படைத்தும் விடுவார். அவரை இணங்கண்டு கொண்டமை இலங்கை தேசிய வானலையின் தனிச்சிறப்பாகும்.

அவற்றைக் கேட்டு பயன்பெறுபவர்களில் யானும் ஒருவன். அவர்களைக் காணும் பொழுது அவற்றை ஆவணமாக்கி சைவ உலகிற்கு கையளிக்க வேண்டுமென விநயமாக கேட்டு வந்தேன். அவற்றை செயல் ரூபமாக்கி தந்தமைக்கு சைவ உலகு அனைத்துமே அவருக்கு நன்றி உடையோம்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்" சைவம் தந்த விழுமியம் அதன் அடிப்படையில் நூலின் பொருளடக்கத்தில் முதற் படைப்பாக வேழ முகத்து விநாயகர் பற்றி விளக்கமளித்து தொடங்குகின்றார் அம்மையார். அதே போல் யாம் அனைவரும் உலகியல் வாழ்க்கை துன்பத்தினின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் முக்தி அடைவதற்கு இறையின் திருவருள் வேண்டி முடித்திருப்பது, பொருளடக்க வைப்பு முறையின் தனிப் பெரும் சிறப்பாக அமைகின்றது.

இந்நூல் ஈழம், தமிழகம் மட்டும் அல்லாது புலம் பெயர் உலகில் வாழும் எம் சைவ உறவுகளுக்கு கையேடாக (Hand out) சைவசமயத்தின் உண்மைத் தன்மையை, அர்த்தத்தை உணர வைக்கும். இவை தத்தம் தாய் நாட்டை அடையாளப் படுத்தும். தமது பரம்பரைக்கு கையளிக்க துடியாய் துடிக்கும் அவர்களுக்கு இந்நூல் தத்தம் இல்லங்கள் தோறும் வைத்தி ருக்க வேண்டிய பெறுமதியான கருத்துச் சொத்தாகும்.

யான் கல்வித் தேடலுக்குச் சென்றிருந்த அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, தமிழ் நாடுகளில் சைவம், அதன் விரத புண்ணிய நாட்கள் பற்றியும், அவை ஏன் கொண்டாடப்பட வேண்டும் என்பன பற்றியும் அறிய ஆவல்பட்டனர். அதற்கு ஆசிரியரின் ஏற்கனவே வெளியிடப்பட்ட "இந்துமதம் - விரதங்கள், விழாக்கள்" நூல் பற்றியும் கூறி, சைவ நற்சிந்தனைப் பற்றி அவரது உரையையும் தொட்டுக் காட்டி விரைவில் ஆவணமாக்கப்பட உள்ளது என்ற செய்தியையும், வெளிப்படுத்தினேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்ற வேத மொழியை தத்ரூபமாக்கி வருபவர் ஆசிரியர். இறைவழித் தேடல் தேடும் வழிபாட்டிற்கு காரண, காரியத்துடன் விளக்கமளிப்பது, அவரின் கை வந்த கலை.

தமது தமிழ் சைவ சமய ஆழ்ந்த அகல அறிவைக் கொண்டு தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற ஆற்றிய பணியே இந் நூற் பணி. இறையனார் அகப் பொருள் உரையைப் போல, திரு வள்ளுவம் போல சுருங்கச் சொல்லி பெரும் பொருளை விளக்கியுள்ளார். கருத்தை முறையில் முறைமை யூடாக (Informal) சிரித்துச் சிரித்துக் கூறும் அவரது ஆற்றல், சிறு பிள்ளைகளுக்கு கதை கூறுவது போல் கூறி, வினா மூலம் சிந்திக்க வைக்கும் ஆசிரியரது தனிப் பாணி, ஒரு சொல் மூலம் பல் பொருளைக் காண வைக்கும் பாங்கு ஆசிரியரது தனி வழி.

உதாரணமாக பக்தி என்ற தலைப்பில் அதனை அறியலாம். திருவருள் என்ற தலைப்பில் பாரதியின் பாடலை எடுத்துக் கூறி பாரினில் பக்தியால் சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். அத்தோடு இந் நூல் பெண்களுக்கு அறிவூட்டும் அறிவுக் களஞ்சியமாகும். நீங்கள் செய்ய வேண்டியவை இவை, செய்தால் பலன் இவை. செய்வோமா? என வினா மூலம் கற்ற செயற்பாட்டை, அறிகைச் செயற்பாட்டைத் தூண்டி அறிய வைக்கின்றார் ஆசிரியர். 'இலட்சுமி கடாட்சம்' என்ற தலைப்பை படித்துப் பாருங்கள் புரியும்.

'துளசி' என்ற தலைப்பில் துளசியின் மகத்துவம் பற்றி கதை கூறுவது போல் கூறி, அச் செடியும் அதன் பெயரும் அளிக்கும் பயனையும் பற்றி எடுத்தியம்புகின்றார். எனது மூத்த மகனார் தனது மருத்துவமனைக்கு 'துளசி மருந்தகம்' என்ற பெயரைச் சூட்டி தனக்கும் மக்களுக்கும் நல்ல பணி புரிகின்றார்.

ஆசிரியர் அவர்கள் நேரில் கண்டு இவ் அணிந்துரை அவசியத்தை வற்புறுத்திய பொழுது, நீங்களும் உங்கள் குடும்பமும் கல்வியால் உயரந்த மாதிரி, கல்வியும் உங்களுக்கு தன் பங்கில் தளம் அமைத்துத் தந்து களம் ஆட வைத்து, கல்விச் சமூகத் தொண்டு ஆற்ற வைத்துள்ளது. அத்தகைய உங்களது உரையை இந்நூல் தாங்கி வருவது சிறப்புடைத் தென்றார்.

ஏனைய சமயங்கள் நேர முகாமையில் குறிப்பிட்ட நேரத்தில் தொழுகையை முடித்து, வாழ்வியலுக்கு நேரத்தை கூடுதலாக பயன்படுத்துவது போல, நாமும் இந்நூல் வாயிலாக சரியை, கிரியைகளின் உண்மைத் தன்மையை அறிந்து நேரத்தை முகாமை செய்வோமா?

நீங்கள் எங்கு போகிறீர்கள்? என்பது உங்களுக்குச் சரியாக தெரிந்திருக்க வேண்டும். இதற்கு ஆசிரியரின் இந்நூலின் எல்லாத் தலைப்புக்களும் வழி காட்டும். எனவே இந்நூலைப் படித்து அகலமாக, ஆழமாக கருத்துக்களை அறிவோமா?

**கலாநிதி. நாகமுத்து தணிகாசலம்பிள்ளை**
**M.A .Phd**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**கல்வி அமைச்சின் முதுநிலைக் கல்வி ஆலோசகர்**
**(ஓய்வு)**

**33, உருத்திரா மாவத்தை,**
**வெள்ளவத்தை.**
**0773077563**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களின் சைவநற் சிந்தனைகள் என்னும் நூலுக்கு பாராட்டுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்சி அடைகின்றேன். ஏற்கனவே "இந்து மதம் - விரதங்களும் விழாக்களும்" என்னும் நூலை வெளியிட்டுள்ள அவர் இப்போது இலங்கை வானொலியில் தான் நிகழ்த்திய நற்சிந்தனைகளின் தொகுப்பாக இந்நூலை வெளியிடுகின்றார்.

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் மிக நீண்ட இலக்கிய பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். அவரது பேரனார் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை ஆவார். திருவாதவூரடிகள் புராணம், புலியூரந்தாதி முதலிய பல நூல்களுக்கு உரை எழுதியவர். திருவாதவூரடிகள் புராண உரைச்சிறப்புக் காரணமாக வித்துவசிரோன்மணி பொன்னம்பல பிள்ளையால் உரையாசிரியர் என்ற பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டவர். ஈழத்தின் பெருமை கூறும் ஈழமண்டல சதகத்தை இயற்றியவர். மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலத்தின் ஸ்தாபகராக இருந்ததுடன் சிதம்பரம் நாவலர் பாடசாலை அதிபராகவும் இருந்தவர்.

இவரது முத்தமகனே பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளை. இந்து சாதனம் பத்திரிகையின் ஆசிரியராக 32 வருடங்கள் இவர் பணியாற்றியவர். இக்காலத்தில் இவர் எழுதிய நாவல்களில் கோபால- நேசரத்தினம், துரை ரத்தினம் - நேசமணி, காசிநாதன்- நேசமலர் ஆகிய மூன்றும் நூலுருப் பெற்று இவரை ஈழத்தின் ஆரம்ப கால நாவலாசிரியர்களுள் ஒருவராகக் கணிக்க வைத்துள்ளன.

நாடகத்துறையிலும் ஆர்வம் காட்டிய சம்பந்தர் வண்ணார் பண்ணையில் உருவாக்கப்பட்ட சரஸ்வதி விலாச சபையின் தோற்றத்துக்குக் காரணமானவர்களில் ஒருவராக அமைந்தவர். இச்சபையாரால் தயாரித்து நடிக்கப்பட்ட எட்டு நாடகங்களில் ஆறு நாடகங்களை அவரே எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும். நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களைத் தானே எழுதியும் உரை எழுதியும் வெளியிட்ட நூலாசிரியராகவும் விளங்கும் சம்பந்தர் சமயம் சார்ந்த நூல்களின் வெளியீட்டிற்கே அதிக முன்னுரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். சமய குரவர் சந்தான குரவர் சரித்திரச்சுருக்கம், பிரதோச விரதமான்மியம், சிவராத்திரி விரதமான்மியம், மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் முதலிய நூல்கள் சாதாரண மக்களுக்கும் சமய உண்மைகளை எடுத்துக்கூற எழுதப்பட்டவையாகும்.

இம்மரபின் தொடர்ச்சியாகப் பண்டிதர் ம. வே. திருஞான சம்பந்தபிள்ளையின் இளைய மகள் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுருவும் பத்திரிகைகளுக்கு சமய கட்டுரைகள் எழுதல், நூல்கள் வெளியிடுதல் வானொலி சேவை தொலைக் காட்சி சேவை மூலம் சைவ நற்சிந்தனைகளைச் சொல்லுதல், இந்து சமய பேச்சு ஆகியவற்றின் மூலம் சமயப் பணியை தொடர்ந்து வருகிறார்.

இவரது சைவநற்சிந்தனைகள் என்னும் இந்நூல், வேழமுகத்து விநாயகன், தர்மம், எங்கே நிம்மதி, மனதில் உறுதி வேண்டும் முதல் திருவருள் வரை 110 கட்டுரைகளின் தொகுப்பாக உள்ளது. இந்நூல் வானொலியில் இவர் நிகழ்த்திய சிந்தனைகளைக் கட்டுரை வடிவில் தருகிறது.

ஊடகங்களிற் கருத்துக்களைத் தொடர்சியாக வெளியிட்டு வருபவர்களிடம் காணப்படும் பொதுப்பண்பு எளிமையான மொழிநடையைக் கையாளுவதாகும். பெரும்பாலும் சாதாரண பொதுமக்களே நேயர்களாக, வாசகர்களாக, பார்வையாளர் களாக இருப்பதால் தம்மையறியாமலே எளிமைப்பண்பு இவர்களிடம் குடியேறிவிடும்.

இத்தகையதோர் எளிமைப்பண்பினை இந்நூலாசிரியரின் நூலிலும் காணலாம். பாரதியார் கூறியது போல ஓரிரு வருஷ நூற்பழக்கமுள்ளவர்களுக்கும் எளிதிற் பொருள் விளங்கும்படி ஆசிரியர் இந்நூலை எழுதியிருக்கின்றார். மிகச் சிறிய சிறிய வாக்கியங்கள் இந்த எளிமைக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

வீரம் வேண்டிய பக்தி செய்யுங்கள். பக்தி வயப்படுங்கள். பக்தி செய்தவன் முற்றும் துறந்தவன். அவன் பயப்பட்டதாக வரலாறு இல்லை. இப்போது பக்தி வலுவிழந்து வருகிறது. (பக். 7) என்னும் பகுதி இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

நூலாசிரியரான திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு தமது கருத்துக்களை வாசகர் மனதில் இலகுவாகப் பதிப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்குப் பலவித உத்திகளைப் பயன்படுத்துகின்றார். அவற்றுள் முதன்மையானது ஒவ்வொரு நற்சிந்தனையிலும் ஆகக் குறைந்தது ஒரு கதையையாவது இணைத்துள்ளமையாகும். தமிழிலக்கியங்களிற் காணப்படும் கதைகள் மட்டுமன்றி வடமொழி இலக்கியங்களிற் காணப்படும் கதைகளும் இங்கு அழகுறச் சொல்லப்பட்டுள்ளன.

பாண்டுரங்க பக்தரான ஏசுநாதர் கதை, பாரிவள்ளல் கதை, மன்னன் சுப்பிரபாதன் கதை ஆகியன குறிப்பிடத்தக்கன. மேலும் குருவுக்கு தரமான சிஷ்யன் அமைய வேண்டும் (கட்டுரை 108) (பக். 71) கஜேந்திர மோட்சம் கட்டுரை (ஆசையும் ஆவலமும் கட்டுரை 67) என பல கதைகளை அவர் நற் சிந்தனையுடன் இணைத்துள்ளார். சிறுவர்களும் அவரது கருத்துக்களை விரும்பிப்படிக்க இந்த உத்தி மிகவும் பயன்படும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

அவர் பயன்படுத்தும் இன்னோர் உத்தி சமயக் கருத்து களைச் சமகால விடயங்களுடன் இணைத்து விளக்குவதாகும். உதாரணமாக பிதிர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் பற்றி விளக்கும் அவர், நாம், இங்கிருந்து அனுப்பும் பணம் வெளிநாட்டில் டொலராகவும் பவுணாகவும் போய் சேருவ தில்லையா? ஆனால் நாம் ரூபாவைத்தான் கொடுக்க முடியும். பவுண்களையோ டொலர்களையோ கொடுக்கமுடியாது. அதேபோன்றுதான் இறந்தோருக்கு நாம் செய்யும் சிரார்ந்த காரியங்களும் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டவாறு எள், தண்ணீர் அரிசி, பருப்பு, வாழைக்காய், வடை, பாயாசம் ஆகியவற்றை நாம் இங்கு கொடுத்தால் அவை பிதிர்கள் இருக்குமிடத்தில் அவர்களுக்கு ஏற்ற உணவாகப்போய்ச் சேரும் என்பது சாஸ்திர விதி ஆகும். (தலைப்பு - தர்மம்)

இத்தகைய பல சிறப்புக்களை உடையதாக சைவ நற் சிந்தனைகள் என்னும் இந்நூல் அமைந்துள்ளது. இளந்தலை முறையினரிடையே சமய நம்பிக்கை குறைந்து சமூகச்சீர் கேடுகள் அதிகரித்து வரும் இன்றைய காலச்சூழலில் இப்படி யான நூல்கள் சமூகத்தை நெறிப்படுத்தும் சாதனங்களாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**ம. பா. மகாலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

இருமையே உலகத்தில் இயற்கை. ஒளியும் இருளும் உள்ளது போல நன்மையும் தீமையும் கலந்ததே உலகம். காம, குரோத, மத, மாற்சரியங்கள் காரணமாக மனிதன் நன்மையை விட இலகுவில் தீமையையே நாடிச் செல்லும் இயல்பினனாகியுள்ளான்.

சென்ற இடத்தாற் செலவிடாது, தீது ஓரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு

மனித சமுதாயத்தின் அறிவுத் திரட்சியே உலகில் சமயங்களாக நிலைபெற்றுள்ளன. மனித மனத்தைப் பக்குவப் பட வைப்பதனாலேயே அவை சமயம் எனப்பட்டன. மனிதனை வழிப்படுத்துவதாலேயே நெறி எனவும், மார்க்கம் எனவும் பட்டன. சமயங்கள் தர்மம் எனவும் கட்டப்பெறுவன. அதர்மத்தினின்றும் விலக்கித் தர்ம வழியில் செல்லவைப்பன வாதலாலேயே, அவ்வாறு சுட்டப் பெறுகின்றன. இந்து சமயத்துக்கு உரிய தொன்மையான பெயர் "சனாதன தர்மம்" என்பது ஆதி, அந்தம் அற்ற தர்மம் என்பது அதன் பொருள். சேக்கிழார் "சைவ நீதி" என்றதும் இங்கு நினையத்தக்கது.

காட்டுமிராண்டி நிலையில் இருந்து மனித சமுதாயத்தை நயத்தாலும், பயத்தாலும் நல்வழிப்படுத்திய பணியை ஆற்றியவை சமயங்களே. இன்னும் பிழை செய்வதற்கு அஞ்சுவது கடவுள் பற்றிய எண்ணத்தினாலேயே அன்றிச், சட்ட திட்டங்களால் அல்ல.

மனம் மிகவும் பலவீனமானது. தீயனவற்றினால் இலகுவில் சரிந்துவிடக் கூடியது. அவ்வாறு சாயாமல் மனதை நேரியதாக நிலை நிறுத்துவதற்கான வழிவகைகளை எப்போதும் மேற்கொள்ள வேண்டும். இடையறாது மேற்கொள்ள வேண்டும். தர்மோபதேசங்களைக் கேட்பது அதற்கான சிறந்த வழிமுறையாகும். நல்லவர்கள், சமயநூல்களிலே வல்லவர்கள் இயலுமான வழிகளிலெல்லாம் மற்றவர்களுக்கு வழிகாட் வேண்டும். அந்த வகையிலே, நல்லவரும், வல்லவருமான கலாபூஷணம் திருமதி . இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் இலங்கை வானொலியிலே சைவநற்சிந்தனைகளைச் சொல்லி வந்தார். வானொலியிலேயே வந்த அந்த நல்லுரைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்வெளியிலே காற்றோடு காற்றாகக் கலந்து விடாமல் நூலுருப் பெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

திருமதி. ஜெகானந்தகுரு அம்மையார் சிறந்ததொரு வைணிகர் வீணை இசைக் கலைஞர்: முதுமாணிப் பட்டதாரி, சைவநூலறிவு அவருக்குப் பரம்பரைச் சொத்து. அம்மை யாருடைய தந்தையார் ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை . அவர் உரையாசிரியர் எனப் பெயரெடுத்த மட்டுவில் க. வேற்பிள்ளை அவர்களுடைய மைந்தர். சிறந்த சைவத் தமிழறிஞர். இலக்கியப் படைப்பாளி: அக்காலத்தில் சைவத்தைப் பரிபாலித்து வந்த "இந்து சாதனம்" பத்திரிகையின் ஆசிரியராகத் திகழ்ந்தவர். அவர் எழுதிய நாவல்கள் கூட அன்னிய மதத் தாக்கத்தால் சைவத்துக்கு நேர்ந்த ஆபத்துக் குறித்து உண்டான அக்கறையின் பிரதிபலிப்பாக அமைந்தனவே.

அம்மையாரின் கணவர் திரு. செ. ஜெகானந்தகுரு அவர்களும் சைவபிராமணியாகவே திகழந்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த விஞ்ஞான ஆசிரியர்களுள் ஒருவராக கடமை தவறாத கண்ணியவானாக விளங்கியவர். ஆகவே சைவநீதி பற்றிய அக்கறை அம்மையாரின் குடும்பப்பாரம்பரியம். சிறந்த சைவப்பாரம்பரியத்துக்கு உரித்துடையவராக திருமதி. ஜெகானந்தகுரு அவர்களுடைய நூலும் அவர்தம் முன்னோர்கள் உவந்தளித்த நூல்கள் போலவே சைவநீதியை மேன்மையுறச் செய்வதாக! இருளை அகற்றும் அறிவொளிக் கதிர்களுள் ஒன்றாக அமைந்த பயன் விளைவிப்பதாக!

**க. இரகுபரன்**

**முதுநிலை விரிவுரையாளர்,**

**மொழித்துறை,**

**தென்கிழக்குப் பல்கழைக்கழகம்**

**ஒலுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எமது வாழ்வானது நல்லதாக, வல்லதாக, அமைய வேண்டுமேயானால், நாம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் நன்நெறியில் வாழ எம்மைப் பழக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு எமது மனம் தூய்மையானதாக அமைய வேண்டும். மனம் தூய்மைப்படின் மனதில் நற்சிந்தனைகள் தளமாகப் பதிய வாய்ப்புண்டு. நற்சிந்தனைகள் எமக்கு வேண்டின் அதற்கு இறை வழிபாட்டையும், ஒழுக்க நெறியையும், பண்பாட்டையும் சார்ந்த மார்க்கங்களை யாம் நாடியாக வேண்டும். நல்ல சிந்தனைகள் வளம் நிறைந்த இம்மையையும், புண்ணியம் நிறைந்த மறுமையையும் தந்துதவும் என்பது நிஜம். நற்சிந்தனைகள் யாவரது சிந்தைக்கும் அவசியம். அதிலும் ஒரு படி மேலாக ஆன்மீக நற்சிந்தனைகள் மனித இனத்திற்கு மிக மிக அவசியம். நற்சிந்தனை அருளாளர்களின் உபதேசங்களாலும், நல்லோர், சான்றோர் சகவாசத்தாலும், ஈசன் இன்னருள் பெற்ற மெய்யடி யார்கள் வரலாறுகளிலிருந்தும் பெறப்படுபவை என்பது யதார்த்தம். இவை எல்லோருக்கும், எப்போதும், எளிதில் எளிமையாகக் கிடைத்தலரிது. எனவே இதற்கமைய இத்தகைய நற்சிந்தனைகள், சொற் பொழிவுகள் மூலமும் சிற்றுரைகள் மூலமும் எளிய நடையில், கற்றோர், மற்றோர், படித்தோர், பாமரர் யாவர்க்கும் எட்டவைத்தால் அவை நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கும், அத்தோடு இச்சிந்த னைகளில் ஆன்மீகக் கருத்துக்களும் இடம் பெற்று விட்டால் இம்மையும், மறுமையும் இனிதமைய வழிசமைக்கலாம் என்றதோர் எண்ணம் எம்மனதிலே உருவாயிருந்து.

இவ்வேளையில் எனது இந்த எண்ணத்தை செயலாற்ற பேருதவியாக வழிகோலியது பழமைக்கும், மேன்மைக்கும் பெயர்போன எமது இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பின் தமிழ்ச் சேவை. சைவநற்சிந்தனைகள் என்ற நிகழ்ச்சியில் கடந்த இருபது வருடங்களாய் யான் நற்சிந்தனைகளை ஈசனருளால் வானொலி அலையில் தந்து வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு வரவேற்பு உண்டு என்பதை எனது அன்பார்ந்த இரசிகர்களின் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அறிவேன்.

நல்ல சிந்தனை என்றும் வெற்றியை அளிக்கும். இதில் சந்தேகம் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் சிறந்த கல்விமானும் எமது முன்னைய யாழ் / கல்விப் பணிப்பாளரு மான திரு. நாகமுத்து தணிகாசலம் அவர்கள் அம்மா! இலங்கை வானொலியில் உங்கள் நற்சிந்தனைகள் வெகு நேர்த்தியாக பயனுள்ளவையாக வானலைகள் மூலம் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை காற்றலைகளோடு கலந்து போக விடாமல் அவற்றை எழுத்து வடிவத்தில் ஆக்கித் தந்தால் எதிர்கால சந்ததியினருக்கும் பயன்படும் என கேட்டுக் கொண்டதற்கிணங்க எனது நற்சிந்தனைகளுள் தெரிந்தெடுத்து 110 விஷயங்களை நூலுருவாக்கினேன். இதற்கு இலங்கை வானொலிப் பணிப்பாளர் திரு. கணபதிப் பிள்ளை அவர்களும் பூரண ஒத்துழைப்பை நல்கினார். இந்த வகையில் இந்நூல் தோற்றம் பெற்றது.

நேயர்களின் கருத்துப்படி இந்நூல் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பது எனது நம்பிக்கை. இதுவே உங்களதும் கருத்தாக அமையுமாயின் அதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இதற்கு நீங்கள் இந்நூலை முழுமையாகப் படித்தாக வேண்டும். செய்வீர்களா?

நன்றி.

**இராஜேஸ்வரி. ஜெகானந்தகுரு**

**24"c", எதிரிவீர அவனியு**

**தெஹிவளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அமோகமாக விற்பனையான "இந்து மதம் - விரதங்களும் விழாக்களும்" என்ற நூலைப் பதிப்பித்து ஒரு சில வருடங்க ளேயான நிலையில் அடுத்த நூலான "**சைவ நற்சிந்தனை கள்**" என்ற இந்த நூலையும் எமது காயத்திரி பப்ளிகேஷன் மூலம் பதிப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

இலங்கையில் உள்ள பெண் ஆன்மீக எழுத்தாளர்களில் முன்னிலையில் உள்ள எமது முன்னாள் அதிபர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுருவின் அறிவும் ஆற்றலும் அனுபவமும் சைவ சமயத்தில் இருந்து கடைந்தெடுத்த நல்லொழுக்கங்களை, சிந்தனைகளை நூற்றுக்கு மேற்பட்ட தலைப்புகளில் உதாரணங்கள், கதைகளுடன் தனக்கே உரிய எளிய உரை நடைப் பாணியில் தந்திருப்பது இந்நூலைத் தொடர்ந்து படிக்கும் ஆவலை வாசகர்களுக்கு தரும் என நம்புகிறோம்.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய இந்த நற் சிந்தனைகள் காற்றோடு காற்றாய் கலந்து போகாது நூலுருப் பெறுவது எமது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு புதையலாக அமையப் போகின்றது. அந்த பதிப்பு முயற்சிக்கு எமது பங்களிப்பும் அமைந்தது எமக்குக் கிடைத்த பெரும்பேறாகும்.

இந்நூலை கற்று கற்ற வழி நின்று ஒழுகுபவர்கள் இம்மையில் நல்வழி வாழ்ந்து, மறுமையிலும் நற்பேறு பெற வழி கிடைக்கும் என்பது திண்ணம்.

இந்நூல் பொது நூலகங்களில் மட்டுமல்ல சைவ சமயத்தி னர் அனைவரின் வீட்டு நூலகத்தில் மட்டுமன்றி தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்களின் வீடு தோறும் வைக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகும்.

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் மேலும் இவ்வாறான நூல்களைத் தொடர்ந்தும் எமது வாசகர்களுக்கு தரவேண்டும் என விரும்புகின்றோம்.

**வே. நவமோகன்**
**நிர்வாக இயக்குநர்**
**காயத்திரி பப்ளிகேஷன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

நன்றி சொல்ல வேண்டும் இறைவனுக்கு என்பது யதார்த்தம். யான் இந்த நூலை ஆக்கி செவ்வனே முடிக்க யார் யார் எல்லாம் உதவினார்களோ அவர்கட்கெல்லாம் முழுமனதார நன்றி சொல்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

முதற்கண் என்னை இப்பூவுலகில் கல்வியும் கடவுள் பக்தியும் நிறைந்த நல்லோர் குடும்பத்தில் பிறக்க வைத்த ஈசனுக்கு நன்றிகள். தொடர்ந்து ஓரளவு தன்னும் கல்வி செல்வம் பெற எனக்கு வழிகாட்டிய அன்புப் பெற்றோருக்கு எண்ணிலடங்காத நன்றிகள். அடுத்து அகரம் முதல் அனைத்து கல்வியின் நுட்பங்களையும் அசத்தும் விதத்தில் அள்ளித்தந்த என் பெருமதிப்பிற்குரிய அனைத்து ஆசான்களுக்கும் உளம் கனிந்த நன்றிகள்.

இச்சிந்தனைகளை யான் வானொலியில் வழங்கும் நேரமெல்லாம் அவற்றைச் செவிமடுத்து ஆக்கமும் ஊக்கமும் தந்த என் அன்புக் கணவருக்கும், நேயர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள். இந்நூலை ஆக்குவதற்கு என்னுடன் அருகிருந்து பல வழிகளிலும் உதவிய என் பாசமிகு பிள்ளைகட்கும் எனது இனிய நன்றிகள்.

தொடர்ந்து இந்நூலுக்குப் பொறுமையுடனும், பெருமையுடனும், நட்புறவுடனும் ஆசியுரை, அணிந்துரை, ஆய்வுரை, மதிப்புரை, அருளுரை, அறிமுகவுரை, வாழ்த்துரை, சிறப்புரை, பாராட்டுரை, விதப்புரை, பதிப்புரை யாவும் வழங்கி என் முயற்சிக்குப் பெருமதிப்பளித்த அன்பும், பண்பும் நிறைந்த நல்லுள்ளங்கட்கு என் மனம் நிறைந்த இனிய நன்றிகள். இத்தனை நல்லுள்ளங்களும் இல்லையேல் என் முயற்சிக்கு இத்தனை வெற்றி கிடைத்திருக்குமா? எனவே, இவர்கள் அனைவருக்கும் மீண்டும் எனது மனம் கனிந்த உளம் நிறைந்த நன்றிகள்.

இச்சந்தர்ப்பத்தில், இத்தகையதோர் நூலை வெளியிடும் எனது நோக்கத்தை அறிந்து ஆரம்பத்திலேயே மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கத்தை எனக்கு அளித்த அன்புக்குரிய திருமதி. அபிராமி கைலாசபிள்ளை அவர்களையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். அடுத்து இந்நூலை அழகாக வடிவமைத்து அச்சிட்டுத்தந்த இத்துறையில் மிகுந்த அனுபவம் மிக்க களுபோவில காயத்திரி பப்ளிகேஷன் பணிப்பாளர் வே. நவமோகன் அவர்களுக்கும் அவரது உதவியாளர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

மேலும், இந்நூல் வெளியீட்டு விழாவுக்கான நிகழ்வில், எனது அன்பான அழைப்பிதழைப் பெருமையுடன் ஏற்று, அதற்கமைய தலைமை தாங்கியும், சிறப்புரைகள் ஆற்றியும் மங்கள விளக்கேற்றியும், ஏனைய விருந்தினராக வந்து வேண்டிய பணிகள் ஆற்றியும் விழாவை வெற்றி பெற வைத்த அனைத்து நல்லுள்ளங்கட்கும் எனது மனம் நிறைந்த பெருமிதமிக்க நன்றிகள்.

அறிவிப்பாளராக அமைந்து, தனக்குரிய வசீகர பாணியில் அறிவிப்புக்களை வழங்கிய அன்புச் சகோதரருக்கும் எனது இதய சுத்தமான நன்றிகள்.

இவ்விழாவை ஒழுங்காக சிறப்பாக, ஒழுங்கமைத்து, நிர்வகித்து, ஒலி, ஒளி தந்து வெற்றிகரமாகவும், மங்களகர மாகவும் நிறைவேற்றித்தந்த கொ / தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த நல்ல உள்ளம் கொண்ட சகல அன்பர்கட்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

நன்றி.

**நூலாசிரியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வேழ முகத்து விநாயகன்

**வே**ழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும் என்பது அனுபவ உண்மை. சிவனுக்கும் உமைக்கும் மூத்த பிள்ளை விநாயகர். வல்லவர், நல்லவர், பொலிவானவர் நிறைவானவர், பூரணமானவர். எக்கருமத்தை தொடங்கும் போதும் விக்னேஸ்வரனை முதலில் தொழுது கருமத்தை ஆரம்பிப்பது தொன்று தொட்டு எம்மிடையே இருந்து வரும் மரபாகும். நாம் ஒன்றை எழுத ஆரம்பிக்கும் முன் பிள்ளையார் சுழி இடுவதும் இதனாலே தான். ஆனால் இன்றைய இளைய தலைமுறையினர் பலரிடம் இவ்வழக்கம் காணப்படுவதாக இல்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயம். பெற்றோர் முதலில் இதனை தம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். ஆரம்பம் இடையூறின்றி இருந்தால் தானே முடிவில் வெற்றி கிட்டும். இல்லையா? கர்நாடக இசைக் கச்சேரியைப் கேட்டுப் பாருங்கள்! பாடுபவர் ஹம்சத்வனி ராகத்தில் அமைந்த "வாதாபி கணபதிம் பஜேகம்" என்ற கீர்த்தனையை ஆரம்பித்து, சங்கடமில்லாமல் கச்சேரியைத் தொடருவார். இங்கும் கணபதி காப்புத்தான்.

விநாயகப் பெருமானைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான சம்பவம் சொல்கிறேன் கேளுங்கள்.

எழுத்தை ஆள்பவன் எழுத்தாளன் என்று சொல்வார்கள். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர் தான் வியாசர். அவருக்கும் ஒரு பிரச்சினை எழுந்தது. என்ன பிரச்சினை என்று நினைக்கிறீர்கள் அவருக்கு!

அவர் சொல்லும் வேகத்தில் எழுதி முடிக்க ஆள் கிடைக்காத பிரச்சினை தான் அவருக்கு. இலக்கியத்தைச் செம்மையாக வடித்தெடுத்த அவருக்கு அவற்றை எழுது விப்பது ஒரு பிரச்சினையாகி விட்டது. தன் நண்பர் நாரதரிடம் ஆலோசனை கேட்டார் வியாசர்.

பிள்ளையாரைப் பிடித்தால் பிரச்சினை தீரும் என்று பதில் தந்தார் நாரத முனிவர். மகிழ்ந்தார் மகரிஷி வியாசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரும் பிரசன்னம் தந்தார். நான் சொல்லும் வேகத்தில் எழுதுங்கள். சுவாமி! வியாசர் கூறினார்.

“நான் எழுதும் வேகத்தில் உங்களால் சொல்ல முடியுமா?” திருப்பிக் கேட்டார் விநாயகப் பெருமான்.

பிரச்சினையின் விளிம்பில் புதிய பிரச்சினை தோன்றி விட்டது. இது தானே வாழ்க்கை.

நீங்கள் எழுதும் வேகத்தில் சொல்ல வேண்டுமா? சொல்கின்றேன்.

அது எப்படி முடியும்?

உங்கள் அருள் இருந்தால் முடியும். வியாசர் பதில் அளித்தார்.

விநாயகப் பெருமான் சிரித்தே விட்டார்.

சின்னக் கண்கள் குவிய பெருவயிறு குலுங்க கணபதி சிரித்தார். எத்தனை அழகான சிரிப்பு.

சற்று கற்பனை செய்து பாருங்கள்!

வியாசர் சொல்லிக் கொண்டேயிருந்தார். கணபதி எழுதிக் கொண்டேயிருந்தார். இங்கே விஷேசம் என்ன என்றால், மனிதன் இட்ட பணியைக் கடவுள் செய்கிறார். மக்கள் பணியே மகேசன் பணி என்பது இது தானோ! கடவுள் தொண்டர்க்கு அடிமை, இப்படியும் சொல்லலாம். தனக்கென்று ஒரு தலைவன் இல்லாத விநாயகப் பெருமான் தொண்டர்க்கு பணி செய்யும் அழகுதான் அழகு. கடவுள் கருணையும் மனித முயற்சியும் இணைந்தால் எது தான் சாத்தியமில்லை! எதிலுமே வெற்றிதான். திடீரென கணபதியின் எழுதுகோல் முறியவே கணபதி தன் அழகான தந்தங்களில் ஒன்றை திடீரென முறித்து அதைக் கொண்டு எழுதலானார்.

இது கண்டு பதறினார் வியாசர்.

சுவாமி! அழகான தந்தம் அதை முறித்து மூளியாக்கி விட்டீர்களே!

கணபதி புன்னகையோடு பதில் தந்தார். அழகு என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து ரசிப்பதற்கு மட்டுமா? பிறருக்குப் பயன்பட வேண்டாமா? அழகாக இருக்க ஆசைப்படுபவர்கள் கருத்துக்கும் அழகாய் இருக்க வேண்டாமா? அழகை இழந்தாகிலும் அடுத்தவர்க்குப் பயன்பட வேண்டாமா? இது விநாயக தத்துவம்.

இச்சம்பவத்தை அருணகிரி நாதர் மனதில் கொண்டார். என்ன அநியாயம்! வியாசர் சொல்லியா பாரதத்தை கணபதி எழுத வேண்டும்? அவருக்கு இது முன் கூட்டியே தெரியாதா?

வார்த்தைகள் உதிர்ந்தன.

"முத்தமிழ் அடைவின் முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே" என்றார்.

எனவே கஷ்டங்கள் வந்தால் கவலை வேண்டாம். வேண்டுங்கள் கணபதியை, கைகொடுக்க ஓடி வருவார்.

மனிதன் கடவுளுக்காகவா? அல்லது கடவுள் தான் மனிதனுக்காகவா?

சற்று சிந்தியுங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௦௨. எங்கே நிம்மதி!

**வா**ழ்க்கை இனிமையானது. எப்போது என்று நினைக் கிறீர்கள்? எமது கடமைகளைத் தவறாது செய்யும் போது. நாம் எதிர்பார்த்தவை கிடைக்கும் போது. நிஜமாக வாழ்க்கை இனிமையாக அமைய வேண்டுமானால் இறை நம்பிக்கை எமக்கு அவசியம் வேண்டும். அதற்கு எமது பெற்றோர் அயலவர் நாம் வாழும் சூழல் யாவும் உயர் நோக்கம் கொண்டவையாக அமைய வேண்டும். இறை நம்பிக்கை எமது வாழ்க்கைக்கு பக்க பலமாகவும் ஆதாரமாகவும் அமைய வேண்டும்.

இறைவழிபாட்டின் முதற்படி பிரார்த்தனை. இதுவே சமய வாழ்வின் பால பாடம். என்னவெல்லாம் எமக்கு அவசியமோ எவை எவையெல்லாம் எமக்கு அமையவேண்டியுள்ளதோ அவற்றையெல்லாம் இறை நம்பிக்கை மூலம் பெற்று விடலாம் என்பதை அருளாளர்களின் வாழ்க்கை வரலாறு மூலம் யாம் அறிய முடிகின்றது. இங்கேதான் நிம்மதி பிறக்கின்றது.

இறை நம்பிக்கையும் பிரார்த்தனையும் எமக்கு அளிக்கும் பற்பல நன்மைகளில் மிகச் சிறந்தவை உயர்ந்த மனநிம்மதி, மனோலயம். நிம்மதி எமக்குக் கிடைக்குமாயின் வேறென்ன எமக்கு வேண்டும்? எல்லாமே கிடைத்த மாதிரித்தான். எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் மனதிலே, வீட்டிலே, நாட்டிலே. இது அனுபவ உண்மை. இல்லையா?

அறிஞர் "Tolstoy" யின் வாழ்வில் ஒரு சம்பவம். "Tolstoy" என்ற மிகப்பெரிய அறிஞரிடம் கல்வி அறிவு இருந்தது. புகழ், செல்வம், வளமான வாழ்வு மொத்தத்தில் எல்லாமே இருந்தது. ஆனால் அவருக்கு என்னவோ மனதிலே நிம்மதியி ருக்கவில்லை. நிம்மதியைத் தேடினார் அவர். நிம்மதியற்ற நிலையில் வயல் வெளியே அவர் சென்று கொண்டிருந்த போது ஒரு ஏழை விவசாயியைச் சந்திக்கிறார். அவன் கடுமையான வயல் வேலை செய்யும் சாதாரண ஒரு மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாக வாழ்ந்த போதும் அவன் மிகுந்த நிம்மதியோடும் மன நிறைவோடும் பாடிக்கொண்டு உல்லாசமாகக் காணப் பட்டதை உணர்ந்தார் "Tolstoy". அவன் பாடிக் கொண்டி ருந்த பாடலே அவனது மனதின் நிறைவை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

அவனது நிம்மதியான வாழ்க்கையின் காரணத்தை அவனிடம் அறிய முயன்றார் "Tolstoy". அதற்கு அவன் அளித்த பதில், "நான் எனது கடமைகளைச் சரிவரச் செய்கின்றேன் மிகுதி நேரத்தை இறை சிந்தனையில் செலவிடுகின்றேன். வேறு பெரிதாக ஒன்றும் யான் செய்து விடவில்லை. எனது மனம் நிறைவாகவே இருக்கின்றது." இது விவசாயி அவருக்கு அளித்த பதில்.

வீடு திரும்பிய "Tolstoy" தன்னைச் சுய பரீட்சை செய்தார். எவ்வளவோ படித்தேன், என்னென்னவற்றை எல்லாம் எழுதி னேன். ஆனால் ஆத்மார்த்தமாக யான் யாது செய்தேன்? ஒன்றையுமே செய்யவில்லையே. நிதானம் இல்லை, தியானம் இல்லை, பின் ஏது நிம்மதி? "Tolstoy" சிந்திக்க ஆரம்பித்தார் நிர்மலமாக. அதுவே தியானமாக மாறியது. அவருக்கு நிம்மதி தோன்ற ஆரம்பித்தது. நிம்மதி எமக்கு வேண்டிய தொன்று. அதனைப் பெறின் யாம் தேவ குணங்களைப் பயில வேண்டும். பின்பற்ற வேண்டும். கருணை, பொறுமை, கொடை, அன்பு, இரக்கம் போன்றவை தேவ குணங்களாம். இவற்றையாம் பின்பற்றினால் அவை எமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை. உதாரணத்திற்கு உங்களுக்கு ஒரு கதை சொல்கின்றேன். கேட்டுப் பாருங்கள்.

ஒரு காலத்தில் ஏசுநாதர் என்ற பாண்டுரங்க பக்தர் ஒருவர் கங்கைக் கரையிலே வாழ்ந்து வந்தார். அவர் தனது பாவங்கள் தீருமாறு தினமும் ஒரு முறை கங்கையில் நீராடி வந்தார்.

ஒரு நாள் மூடன் ஒருவன் அவர் கங்கையில் மூழ்கி நீராடிக் கரையேறியதும் அவர் மேல் வெற்றிலை பாக்கு எச்சிலை உமிழ்ந்தான். திடுக்குற்ற ஏசுநாதர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மறுபடியும் கங்கையுள் முழ்கி நீராடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையேறினார். அவர் கரையேறியதும் மீண்டும் அந்த மூடன் வெற்றிலை எச்சிலை அவர் மேல் உமிழ்ந்தான். மீண்டும் ஒன்றும் பேசாது, மூடன் மேல் சினம் கொள்ளாது ஏசுநாதர் கங்கையில் மூழ்கிக் கரையேறினார். அவர் கரையேறியதும் மீண்டும் மூடன் அவர் மேல் எச்சிலை உமிழ்ந்தான். மீண்டும் பொறுமையைக் கடைப்பிடித்தார் ஏசுநாதர். இவ்வண்ணம் 108 முறை நடந்தது. 108ம் முறை மூர்க்கன் மனம் மாறி மனம் வருந்தி ஏசுநாதரின் பொறுமையைக் கண்டு வியந்து அவரின் காலில் விழுந்து மன்னிப்புக்கோர ஆயத்தமானான். ஆனால் ஏசுநாதர் அதற்கு விடாமல் தானே மூடன் காலில் வீழ்ந்தார். பின்னர் கூறினார்.

"அப்பனே! உனக்கு எதுக்கு மன்னிப்பு! நான் அல்லவா உனக்கு நன்றி சொல்ல வேண்டும். மிகப் புனிதமான இந்தக் கங்கையில் ஒரு முறை மூழ்கி எழுந்தாலே மிகுந்த புண்ணியம் கிடைக்கும். இன்று உன்னுடைய தயவால் 108 முறை கங்கையில் நீராடிய புண்ணியத்தைப் பெற்று விட்டேன். உன் கருணை இல்லாவிட்டால் ஒரு முறை தானே நீராடி யிருப்பேன்" என்றார். மூடன் தன் தவறை அப்போதுதான் உணர்ந்தான். ஏசுநாதர் தான், தேவன் ஆனதோடல்லாமல் மூடனையும் தேவனாக்கி விட்டார். தேவகுணங்கள் தான் வாழ்வில் வேண்டிய நிம்மதியைத் தரவல்லன. கடைப்பிடிப் போமா?

●

## ௦3. மனதில் உறுதி வேண்டும்

**வா**ழ்க்கையில் எமக்கு அவசியம் வேண்டிய மனஉறுதி பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

எமக்கு மனதில் இருக்க வேண்டியது உறுதி, தவிர்க்க வேண்டியது பயம். வீரம் என்பது நாம் வைத்திருக்கும் ஆயுதங்களின் கணக்கில் தங்கியிருப்பதல்ல. அது எமது மனதின் உறுதியிலேயே தான் தங்கியுள்ளது. அச்சம் தவிர்க்கப்பட வேண்டும். அச்சம், பயம், கோழைத்தனம், எல்லாம் ஒன்று தான். மனதில் அச்சம் போக்க, பயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
விசேட சேர்க்கைப் பகுதி

நீங்க, தெளிவு பிறக்க பக்தி, தெய்வநம்பிக்கை ஆகியன வேண்டும். பக்தி எமக்குப் பெரிய காவலரணாக அமைகின்றது. "நாம் ஆர்க்கும் குடி அல்லோம் யமனை அஞ்சோம்" என்று பாடினாரே அப்பர் சுவாமிகள். எதை வைத்துக் கொண்டு? தனது தீவிர பக்தியை வைத்துக் கொண்டு. சமணர்கள் அவருக்கு அளித்த இன்னல்கள் அவரின் பக்தியின் காரணமாக மின்னல்களாகத் தோன்றி மறைந்தன. எதனால்? அவரது பக்தி நிறைந்த சிந்தையால். அவர்களால் இடப்பட்ட சுண்ணாம்புக் காளவாயும் அவருக்குச் சுகம் தந்தது அவரைக் கொல்ல வந்த யானை அவரை வலம் வந்து வணங்கியது நஞ்சு கலந்த அன்னம் அமுதமாகியது கடலிலே கட்டிப் போட்ட கல் தெப்பமாக மாறியது எதனால்? அவர் எம்பெருமானிடத்தில் கொண்ட அசையாத நம்பிக்கையால். பக்தியும் இறைநம்பிக்கையும் இரட்டைக் குழந்தைகள். பக்தி, இந்த மூன்று எழுத்துக் களாலான சின்னஞ்சிறிய சொல்லிலே தான் பென்னம் பெரிய சக்தி மறைந்துள்ளது.

தனது கண்களைக் கூரிய அம்பால் இடந்து அப்ப வீரம் தந்தது கண்ணப்பருடைய பக்தி. வாளால் மகவரிந் தூட்ட வைத்தது சிறுத்தொண்டரது பக்தி. இந்த மனவுறுதியை வீரத்தை இவர்களுள் விதைத்ததே அவர்களது பக்தியும் தெய்வ நம்பிக்கையும் தான். எம்மால் முடியுமா?

எனவே வீரம் வேண்டின் பக்தி செய்யுங்கள். பக்தி வயப் படுங்கள். பக்தி செய்தவன், முற்றும் துறந்தவன். அவன் பயப்பட்டதாக வரலாறு இல்லை. இப்போது பக்தி வலுவிழந்து வருகின்றது. நம்பிக்கை நலிவடைந்து வருகின்றது ஏன்? எம்மிலே எமக்கு நம்பிக்கை இல்லாமை தான், திடமாக நாம் சிந்திக்காமல் இருப்பது தான். எமக்கு எங்கே நேரம் சிந்திப்பதற்கு? எம்முடைய சிந்தையைத் தான் வேண்டாத சிந்தனைகள் நிரப்பி விட்டனவே! எனவே எதற்கெடுத்தாலும் பயம், தயக்கம். காரணம் மனதில் தெளிவில்லை, செயலில் நிதானமில்லை, நெஞ்சில் உறுதியில்லை.

மனதில் உறுதி வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கில் இனிமை வேண்டும்

முறத்தால் புலியை அடித்து விரட்டியவள் எமது பண்டைய தமிழ் பெண்மணி. நிச்சயம் நீங்கள் இதுபற்றிப் படித்திருப் பீர்கள்.

ஆனால் இன்றைய பெண்ணோ கரப்பான் பூச்சியைக் கண்டு பயந்தோடி கட்டிலில் ஏறியல்லவா நிற்கிறாள்!. இவளை விடுங்கள். கரப்பானுக்குப் பயப்படும் மனைவிக்கே, பயப்படும் கணவனைப்பற்றி நான் என்ன சொல்வது? அவனை எந்த ஜந்துவோடு சேர்ப்பது?

எனவே வீரம் மனதில் இருக்க மன உறுதி பெற பக்தி செய்வோம். பக்தியால் இறைவனைப் பற்றினால் பயம் என்னும் உணர்ச்சி பயந்து ஓடி விடும். பக்தியால் யான் உனைப் பலகாலும் பற்றியே மாதிருப்புகழ் பாடியவர் அருணகிரிநாதர். இதனால் அவர் பயந்த, அவரது பாவங் களை எல்லாம் மண் எடுத்துச் சுமந்த ஈசன், எடுத்துச் சுமப்பானானார். என்ன நான் சொல்வது சரிதானே! பக்தி இருக்குமிடத்தில் வீரமும் துணிவும், தைரியமும் இருக்கும். வீரம் என்பது பக்தி எனும் வயலில் விளைந்து மனதில் பயிராக வேண்டும்.

உதாரணத்துக்கு ஒரு கதை சொல்கிறேன். அண்ணன் தம்பியரது கதை. யாராயிருக்கலாம் என்று யோசிக்கிறீர்களா? வேறு யாருமல்ல வீமனும் அநுமனும் தான். அநுமன் இராம பக்தன். வீமன் கண்ணனது பக்தன். இருவருமே வாயுவின் மைந்தர்கள். இருவருக்குமே இறை பக்தியும் வீரமும் இரு ந்தது. அதாவது உள வலிமையும் உடல்வலிமையும் இரு ந்தது.

அது ஒரு கதலி வனம். வாழை மரங்கள் நிறைய வளர்ந் திருந்தன. அவற்றின் மத்தியில் சலனமற்ற முறையில் அக் குரங்கு தியானத்தில் அமர்ந்திருந்தது. சலனமேதான் நிஜத் தில் குரங்கின் வடிவம். ஆனால் இங்கு சற்று வித்தியாசமான அதிசயக் குரங்குதான் இது.

தன் மனைவிக்கு பூக்கள் பறிக்குமாறு அவ்வழியே வருகின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றான் ஒரு முரட்டு வீரன். வெளியே முரட்டுத்தனம், உள்ளே மென்மையான உள்ளம். அல்லது பெண்டாட்டிக்குப் பூப்பறிக்க வனத்துக்கு வருவானா இவன்?

பாதையில் ஏதோ தடக்குகிறது. மிதித்துப் போகாதே. தடையை எடுத்து நீக்கிச் செல் என்கிறது அவனது பண்பட்ட உள்ளம். மனசு பின்னர் தான் அறிகிறது வழியில் கிடந்தது ஒரு குரங்கின் நீண்ட வால்.

வந்த முரட்டு மனிதன் வீமன். நீண்டு தடக்கிய வால் சாட்சாத் ஆஞ்சனேயருடையது. இருவரும் சகோதரர்கள். வாயு மைந்தர்கள். தன் அண்ணனை இனங்கண்டு கொள்ள வில்லை வீமன். ஏய்! கிழக்குரங்கே! உன் வாலைச் சுருட்டிக் கொள் என்று சத்தமிடுகின்றான் வீமன். வழியிலே வால் நீட்டிக் கொண்டிருக்கலாமா? வாலைச் சுருட்டு இல்லையேல் ஒரே அடியில் உன்னை சொர்க்கத்துக்கு அனுப்பி விடுவேன். வீமனுக்கு தன் வீரத்தில் அதீத நம்பிக்கை.

சொர்க்கத்துக்கா! உடனே அனுப்பிவை அப்பனே அதற்காகத் தானே ஏங்கிக் கொண்டு இங்கே உட்கார்ந்திருக் கிறேன். இது ஆஞ்சனேயரின் பதில்.

பேச்சைப் பார்! அநுமன் கடல் தாண்டிய நாளிலிருந்து எல்லாக் குரங்குகளுமே தம்மை ஆஞ்சனேயர் என நினைத் துக் கொண்டு தத்துவம் பேச ஆரம்பித்துள்ளன. கிழக்குரங்கே வாலைச் சுருட்டு. சத்தமிடுகின்றான் வீமன்.

சும்மா கிழம்! கிழம்! என்கிறாயே ஏன்? உனக்கு மட்டும் முதுமையே வராதா? கிழமானதால் தான் வாலையே தூக்கப் பலமில்லாமல் நான் இருக்கின்றேன். நீ சற்று என் வாலை நகர்த்தி வைத்துவிட்டுச் செல், எனக்கும் உதவியாயிருக்கும்.

வீமன் தன் விரல்களால் அந்த வாலை மிக இலகுவாக நகர்த்தலாம் என எண்ணி அசைக்கின்றான் வால் அசைய மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கின்றது. முழுமையாக முயற்சித்தும் வால் சிறிதும் நகருவதாக இல்லை. வீமனுக்கு வியர்த்துக் கொட்டுகிறது. என்ன ஆச்சரியம்! ஆஞ்சநேயர் "ராம ராம" எனச் ஜெபித்த படி தியானத்தில் ஆழ்ந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்.

கண்ணா! என்னைக் கைவிட்டுவிடாதே! வீமன் கண்ணனை வேண்டுகின்றான். பகவான் அருளாலே, எதிரிலிருந்த கிழக் குரங்கின் தோற்றம் மாறுகிறது. நித்திய பிரமச்சாரியும், ஞான பண்டிதனும், ஸ்ரீராம பக்தனுமாகத் தோன்றியது வீமன் கண்களுக்கு. "அண்ணா" என்று கதறியவாறு ஆஞ்சனேயரது திருப்பாதங்களைப் பற்றிக் கொண்டான் வீமன். ஆனந்தமாகத் தன் தம்பியைத் தழுவிக் கொண்டார் ஆஞ்சனேயர்.

வீமன் தன் அண்ணாவிடம் வேண்டிக் கொண்டான். அண்ணா! தங்கள் தரிசனத்தால் என் ஆணவம் அகன்றது. அகந்தை ஒழிந்தது. பாரதப்போரில் அர்ச்சுனனது கொடியாய் தாங்கள் மிளிர வேண்டும். எங்கள் பலமும், தங்கள் ஆசியும் இருந்தால் போரில் எமது வெற்றி நிச்சயம். "அப்படியே" என்றார் ஆஞ்சனேயர்.

இராமகாவியத்தில் அபரிதமான பலசாலி ஆஞ்சனேயர். மகாபாரதத்தில் அபரிதமான பலசாலி வீமன். இருவரிடமும் பொதுப்படையாக, பலமாகக் கைகொடுத்தவை தெய்வ நம்பிக்கை, மன உறுதி என்னும் இரண்டுமே. எனவே, பக்தி உயிர்களுக்கும் எமக்கும் அதிமுக்கியம். பக்தி செய்பவரின் பயம் தெளியும். மனதில் உறுதி தோன்றும். இல்லையா?

●

## 04. அன்பும் பக்தியும்

இன்றைய இனிய காலைப் பொழுதினிலே அன்பின் சக்தி பற்றி சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

அன்பின் ஒரு வடிவமே பக்தி. ஆன்மீகத்தில் அன்பு பக்திஆகின்றது. அன்புதான் கருணை, பச்சாத்தாபம், ஈகை போன்ற பண்புகளுக்குக் காரணமாக அமைகின்றது.

அன்பு காட்டியவர்கள் அன்பின் வழி நடந்தவர்கள் ஆன்மீகத்தில் சரி, லௌகீகத்தில் சரி தோற்றுப் போனதாக சரித்திரமில்லை. அன்பின் வடிவமான பக்தியை செயற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடாகக் கொண்டு வாழ்ந்த மெய்யடியார்கள் ஈசனைக் கண்டவர்கள், அற்புதங்கள் பல ஆற்றியவர்கள். ஜீவ காருண்ணியத்தை வலியுறுத்தியவர்கள்.

திருமூல நாயனார் வரலாற்றை எடுத்துக் கொள்வோம். மேய்ப்பான் இல்லாத ஆநிரைகளைக் கண்டு கலங்கிய மகான் இவர். அப்பசுக்கூட்டங்களுக்காக தனது உடலையே தியாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் திருமூலருக்கு ஏற்பட்டமை நேயர்கள் அறிந்ததே.

மேலும் ஞானசம்பந்தப் பெருமான் அரவம் தீண்டி இறந்த தலைவனை எழுப்பி தலைவி துயர் தீர்த்தமை, அப்பர் சுவாமிகள் அரவம் தீண்டிய அப்பூதியடிகளின் புதல்வனை இறையருளால் உயிர் பெற்றெழச் செய்தமை. போன்ற வற்றிற்கெல்லாம் காரணம் மன்னுயிர்கள் மேல் அவர்கள் கொண்டிருந்த அன்பும், கருணையுமே ஆகும்.

மதம் என்று சொல்லி இறைவழிபாட்டோடு நின்றுவிடாது, அந்த மதம் மெச்சும் அடியார்கள் என்ன செய்தார்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை யாம் சற்று நிதானமாகச் சிந்தித்து பார்த்தாகவும் வேண்டும். அங்கே காணும் உண்மை களை யாமும் கடைப்பிடிக்க வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று நாம் கொள்ள வேண்டும்.

அன்பே சிவம் என்று நாம் கொஞ்சம் அன்புடைமை கொண்டு பேணி நடக்க வேண்டும். அன்புடைமை கொண்ட வர்கள் தியாக சிந்தனை உடையவர்களாயிருப்பர். சுயநல மற்றவர்களாய் திகழ்வர்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு**

என்கின்றது திருக்குறள், குழந்தைகளைப் பேணுவதும், விலங்குகளின் மேல் ஜீவகாருண்யம் காட்டுவதும் எமது கடமை அல்லவா? மரங்கள் வாடுவதையே காணச் சகிக் காது, அவற்றின் துயர் தீர்த்தவர்கள் உளர். வாடிய பயிர் கண்டு வாடியவர் வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க அடிகளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைக்குத் தேர் ஈந்தவன் முடி மன்னன் பாரி. நாடுவார் அற்று தேடுவார் அற்று நடை பாதையிலே படர்ந்து கவனிப் பார் அற்றுக் கிடந்த முல்லைச் செடி நன்கு படர்ந்து வளரட் டும் எனத் தன் தேரைக் கொடுத்தவன் பாரி வள்ளல். அன்பா, பாசமா, புரிந்துணர்வா, கழிவிரக்கமா என்னவென்று சொல்வது! ஆனால் ஒன்று சொல்லலாம், இவர்கள் நெஞ்சில் இறைவன் வாழ்கின்றான். அவன் உறைவதால் தான் அங்கே கருணை கசிகின்றது. இரக்கம் பிறக்கின்றது. பன்றிக் குட்டி களின் பசி தீர்க்க பன்றியாக எழுந்தருளியவரல்லவா எங்கள் பெருமான்? எனவே எங்கே அன்பும் கருணையும் இரக்கமும் ஜீவ காருண்யமும் உள்ளதோ, அங்கெல்லாம் தெய்வீகம் உறைகின்றது, புனிதம் பொங்குகின்றது, வாய்மை வளமாக ஆட்சி செய்கின்றது.

பரமாத்மா ஒன்று. இரண்டற்றது. அதுபோலவே அன்பும் ஒன்று தான். பரமன் பல வடிவங்கள் எடுப்பார். அது போன்று அன்பும் பல வடிவங்களில் எம்மில் இருந்து வெளிப்படும். இரக்கம், ஈகை, ஜீவகாருண்யம், புரிந்துணர்வு, உதவி செய் தல் இவை யாவும் அன்பின் வடிவங்களே. நாம் ஒருவரை எம்பால் ஈர்த்தெடுக்க ஒரே ஒரு வழி அன்பு தான். அன்பால் அகிலத்தையே வென்று விடலாம். அப்போ! இறையை யாம் விட்டு விட முடியுமா? இல்லை, இறைவன் தான் தம்மேல் மெய்யன்பு கொண்டோரை கைவிட்டு விடுவாரா? இல்லையே! இதற்கு சான்று தான் எமக்கு அருள் வழிகாட்டிகளாக அமைந்த நாயன்மார்களது அற்புத வரலாறுகள்.

இறையிடம் நாம் காட்டும் அன்புதான் பக்தி. மெய்யடியார் கள் பக்தி வயப்பட்டவர்கள். தன்னலம் அற்றவர்கள். தன்னலத்திற்கும் அன்புக்கும் வெகுதூரம் என்பதை யாம் அனுபவத்தால் காண்கின்றோம். சுந்தரரின் பக்தி ஈசனை தூது செல்ல வைத்தது. அப்பரின் பக்தி ஈசன் அப்பர் சுவாமிகளுக்கு அன்னமிட்டு பூவுலகில் கைலாசக் காட்சி யையே கண்டு தரிசிக்க வைத்தது. மணிவாசகரது மணியான பக்தியே ஈசனை குதிரை வியாபாரியாக்கியது. வந்தியம்மை யாரின் பக்தியோ எம்பெருமானை மண் சுமக்க வைத்தது, பாண்டியனிடம் பிரம்படி பெற வைத்தது, வைகையைப் பெருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தது. எம் உள்ளத்தில் பக்தி பிரவாகம் எடுப்பின் பரமனே எம்முள்ளே வந்து குடிகொண்டு விடுவான். இந்த உண்மையைத் தானே, மெய்யடியார்களது வரலாறுகள் கூறுகின்றன. காரணம், அன்பின் ஒரு வடிவம் தான் பக்தி.

நெஞ்சிலே பக்தி உள்ளவன் இறையை ஒரு பொருளாகக் காண்பான். பௌர்ணமி தினத்தன்று நிலா மிகவும் தெளி வாகத் தெரிகிறது. அது ஒன்று தான் வானத்தில் இருப்பது போல் தோன்றுகின்றது. அத்தனை ஒளிமயமாக அழகாகத் தோன்றுகின்றது அன்று அந்த வெண்ணிலா. அதுவே பல வாக எமக்குத் தோன்றினால் பார்வைக் கோளாறு என்று தான் சொல்லுவோம். இதேபோன்று மெய்யன்பு ஒன்றால் தான் பரம்பொருளை ஒன்றாகக் காணமுடியும். அதுவும், தெளிவாகக் காணமுடியும். இதுவே உண்மையும் கூட. எனவே அன்பு செய்வோம். ஆனந்தம் அடைவோம். முயற்சிப்போமா?

239733

## 05. குருவானவரும் மணிவாசகரும்

**பா**ண்டி நாடே பழம் பதி எனவும், தென் பாண்டி நாடே சிவலோகம் எனவும் புகழ் பெற்ற பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரிலே, அந்தண குலத்திலே சம்புபாத சிவாச்சாரி யாருக்கும் சிவஞானவதி என்பாருக்கும் குழந்தையாகப் பிறந்தவர் திருவாதவூரர் என இயற்பெயர் கொண்ட மணி வாசகப் பெருமான்.

நாட்டிலே அஞ்ஞான மாயை நீங்கவும், மக்கள் மனதில் தெய்வ நம்பிக்கை வளர்ந்தோங்கவும் ஞானசூரியன் போல் தோன்றினார் திருவாதவூரர்.

இறைவனே இவருக்காக பல திருவிளையாடல்களைச் செய்தமையை யாம் அறிவோம். சிவபெருமான் குருவடிவாக திருப்பெருந்துறையில் எழுந்தருளியமையும் அவர் சார்பில் குதிரை விற்பவராக பாண்டி நாடு சென்றமையும், மணிவாசக ரைக் கொண்டு திருவாசகம், திருக்கோவையார் என்னும் திருமுறைகளைப் பாடுவித்தமையும், பின் அவர் சொல்ல,



KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திருமுறைகளை "வாதவூரன் சொல்லப் பொன்னம்பலவன் எழுதியது" என்ற வகையில் எம்பெருமானே தமது திருக்கரங் களால் எழுதியமையும் அற்புத நிகழ்வுகளாம்.

சாதாரண ஒரு குருவின் உபதேசமே எம்மை நல்வழிக்கு கொண்டு வந்து விடும். இங்கு இறைவனே குருவாக எழுந்தருளி உபதேசித்தார் என்றால் பாண்டியனது அமைச் சராக இருந்த திருவாதவூரரில், எத்தகைய மாறுதல் நிகழ்ந் திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். குருவருள் பெற்ற திருவாதவூரர் இரும்பு பொன்னானாற் போல் மாறுதல் அடைந் தார். அந்த அருள் கலந்த அனுபவத்தால் சொல் நயம், பொருள் நயம், பக்தி ரசம் சொட்டப் பாட ஆரம்பித்தார். இவரது வாசகங்கள் மாணிக்கங்கள் போல் மிளிர்ந்ததால் மணிவாசகர் என்ற பெயரையும் இவர் தம் குருவானவர் மூலம் பெற்றார். அவரது சிந்தனை, வந்தனை யாவுமே எம்பிரானுக்கு அர்ப்பணமானது. தனக்குக் கிடைத்த ஞானகுரு வின் கருணையை எண்ணி எண்ணி மனம் நெகிழ்ந்து உருகிப் பாடலானார் மணிவாசகர். திருவாசகமும் பிறந்தது.

மணிவாசகருக்காக காட்டு நரிகளை பரிகளாக்கி, பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான், கொற்றக் குதிரை யின் மேல் வந்தருளிப் பாண்டியனைத் திருப்திப்படுத்திய பின் தன் திருவிளையாடலையும் காட்டினார் இறைவன். அரியோடு பிரமற்கு அறிவறியொண்ணான், நரிகளைக் குதிரை கள் ஆக்கி, மீண்டும் நரிகள் ஆக்க, குதிரைகள் கொண்டு வந்தவருக்கும் தனது மந்திரியார்க்கும் பரிசு நல்கி மகிழ்ந்த பாண்டியன், பெருஞ்சீற்றங் கொண்டு தனது மந்திரியாரான திருவாதவூரரை கடுமையாகத் தண்டிக்க உச்சி வெய்யிலில் தன் மெய்யன்பன் வருந்துவதைக் கண்ணுற்றார் கண்நுதலான்.

இறைவனின் அடுத்த திருவிளையாடல் ஆரம்பமாகின்றது. பாண்டிய நாட்டிலே மதுரையின் செல்வமான வைகை பெருக் கெடுக்கின்றது. ஆற்றின் சீற்றத்தைக் தடுக்க முடியாமல் நாடே அல்லற்படுகின்றது. பாண்டியன் நிலை பரிதாபத்திற் குட்பட்டதாயிற்று. அறியாது மெய்யடியார் ஒருவரை, எம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் அன்பனைத் தண்டித்து விட்டான் அல்லவா!

சீற்றமும் தவிப்பும் கொண்ட பாண்டியனின் கட்டளைப்படி நகர மக்கள் வைகைக்கு அணை கட்டுகின்றார்கள். மீண்டும் திருவிளையாடல் ஆரம்பமாகின்றது. தனது அடியாளான வந்தியம்மைக்கு ஆற்றுக்கு அணை கட்டும் கூலியாளாக எழுந்தருளுகின்றார் எம் பெருமான். அம்மையின் பிட்டினைக் கூலியாகப்பெற்று அணைகட்டி, தன் குறும்பால், பாண்டியனின் பிரம்படிக்கும் ஆளாகின்றார் ஐயன்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருந்துறைப் பித்தனின் பேரருளைப் பெற்ற மணிவாசகரின் பக்குவம் சொற்களில் அடங்கா.

**திண்போர் விடையான் சிவபுரத்தார் போர் ஏறு**
**மண்பால் மதுரையில் பிட்டு அமுது செய்தருளி**
**தண்டாலே பாண்டியன் தனை பணி கொண்ட**
**பண்பாடல் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ!**

என மாணிக்கவாசகரைப் பாடவும் வைக்கின்றார் திருப்பெருந்துறை மேவிய ஈசனார்.

இந்த வகையில் மணிவாசகர் ஞான மார்க்கத்தில் பக்தி பெற்று உய்வுற்றமை சொல்லுந்தரமன்று. ●

## ௦௬. மனிதனும் தெய்வ வியாபகமும்

**ம**னிதன் தெய்வ அருள் பெறுவதெப்படி என்பது பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

சமயம் ஒவ்வொரு மனிதனதும் வாழ்விலே, உடலுக்கு முது கெலும்பு போல் அத்தியாவசியமாக அமைந்துள்ளது. எமக்கு அறியும் பருவம் வரும் போது நாம் எந்த சமயத் தைச் சார்ந்துள்ளோம் என்பதை அறிந்து கொள்கின்றோம். மதங்கள், மார்க்கங்கள், வேறுபடலாம். ஆனால் உள்ளுணர்வு ஒன்று தான். அஃது தெய்வீக மானது, ஒளிமயமானது, தூய்மையானது, வளமானது, மகிழ்வுக்குரியது. நாம் நமது ஆத்மீக இலட்சியத்தை அடைய வழிகாட்டியாய் அமைவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் என்றால் என்ன? இவ்வினாவுக்கு பல விதமான விடை அளிக்கலாம். சுருக்கமாகக் கூறின் விதி முறைக்கு உட்பட்ட வழிபாடு என்று கூறலாம். எமது சமயத்திலே தூய்மை நியதி, உருவ வழிபாடு, விரதம், தியானம், சமய சின்னங்கள், தோத்திரம், பூசை, மந்திரம், நேர்த்தி, விழா எனப் பல அம்சங்கள் இருப்பது கண்கூடு. அதற்கு மேலாக உருவ வழிபாட்டிலே விதிமுறைக்கு உட்பட்ட வழிபாடு, விதி முறைக்கு உட்படாத வழிபாடு எனவும் 2 பிரிவுகள் எம்மவரிடையே இருந்து வருவது மரபு. பெருந்தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என இவற்றைக் கூறுவர்.

இங்கு நாம் ஆதி சங்கரர் வகுத்த ஷண்மதங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

சிவன், கணபதி, சக்தி, முருகன், விஷ்ணு, சூரியன் என ஒவ்வொரு தெய்வத்தையும் முழுமுதலாகக் கொண்டவை ஷண்மதங்கள். சிவனை முழுமுதலாகக் கொண்ட சமயம் சைவம் என்றும், சக்தியை முழு முதலாகக் கொண்ட சமயம் சாக்தம் என்றும், கணபதியை முழு முதலாகக் கொண்ட சமயம் காணாபத்தியம் எனவும், விஷ்ணுவை முழு முதலாகக் கொண்ட சமயம் வைணவம் எனவும், குமரக்கடவுளை முழு முதலாகக் கொண்ட சமயம் கௌமாரம் எனவும், சூரிய பகவானை முழுமுதலாகக் கொண்ட சமயம் சௌரம் எனவும் அழைக்கப்படுகின்றன.

ஒரு வகையில் ஆராய்ந்து பார்க்கின் இறைவனுடைய 6 பண்புகளுமே இந்த 6 சமயங்கட்கும் அடிகோலியுள்ளன எனலாம். இறைவனுடைய 6 பண்புகளாவன மங்கலம், நிறைவு, இளமை, இடர்களைதல், ஆற்றல், ஒளி என்பனவாம்.

இவற்றுள் மங்கலம், நன்மையின் வடிவமாக உள்ளது. இ்து சிவனுக்குரியது. சிவனாக மிளிர்வது.

இறைவனின் அடுத்த இயல்பு நிறைவு. எங்கும் நீங்கமற நிறைந்து நிற்கும் இயல்பு. இதனை வியாபகம் என்பர். இது விஷ்ணுவின் இயல்பாகின்றது.

இளமை - இறைவனின் இவ்வியல்பு என்றும் மாறாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையுடன் இயங்குவதாம். இப்பண்பு குமரக்கடவுளுக் குரியது. இளமை அழகன் முருகனின் வடிவமாகும்.

இறைவனின் அடுத்த பண்பு யாவரினதும் இடர்களையும் நீக்கும் நற்பண்பாம் விக்கினங்களைத் தீர்த்து அடியார்க்கு அருள் புரிபவன் விக்கினேஸ்வரன் அல்லவா?

ஆற்றல் - இறைவனின் அடுத்த பண்பு - அதுவே சக்தி ஆகும். அதுவே ஆற்றல், அதுவே இயக்கம், அவளே சக்தி. சக்தியின் ஆற்றல் எல்லையற்றது. அவளது தத்துவங்கள் சொல்லில் அடங்காதவை. பிரபஞ்சம் முழுவதுமே மாயா சக்தியின் சொரூபம். சக்தியின் திருவிளையாட்டை அணு முதல் அண்டம் வரை எங்கும் காணலாம். கிரகங்களை சுழலவைக்கும் சக்தி ஆகர்ணசக்தி எனப்படும். சக்தி ஏக காலத்திலேயே அன்னையுமாகின்றாள், கன்னியுமாகின்றாள், அண்டங்களை ஈன்ற அன்னை சக்தியே, புல் முதல் பிரம்மா வரை அவளது ஆற்றலே.

அடுத்து இறைவனின் ஒளி ஆற்றலாக எமக்கெல்லாம் ஒளியையும், வெப்பத்தையும், மழையையும் ஏன் உணவை யும் எல்லையேதுமின்றி காலங்காலமாக வழங்கி வருபவனாக சூரிய பகவான் விளங்குகின்றான். ஆதித்தன், பகலவன், ஞாயிறு, சூரியன், வெய்யோன், பரிதி எனப் பல்வேறு நாமங் களையுடைய சூரியன் இல்லையேல் அண்டமெல்லாம் இருள் சூழ்ந்து விடுமல்லவா? அவன் நாம் அன்றாடம் காணும் கண்கண்ட தெய்வமாகின்றான்.

இவற்றை விட கிராமியத் தெய்வங்களாக யாம் வழிபடும் தெய்வங்களும் எமது மரபில் உண்டு. கிராமியத் தெய்வங் களிலும் ஆண் தெய்வம் பெண் தெய்வம் என்ற பாகுபாடும் உண்டு. இவ் வழிபாடு ஆதியிலேயே ஆற்றோரங்கள், வயல் வெளிகள், காட்டுப்பகுதிகள், குளக்கரைகள், மர நிழல்கள் ஆகிய இடங் களிலே சூலம், விருட்சம், கல், சர்ப்ப வடிவம் ஆகியவற்றை வைத்து வழிபடும் முறையில் ஆரம்பமானது.

இந்த வகையில் நாக தம்பிரான், முனியப்பர், காத்தவரா யன், மதுரைவீரன், பெரிய தம்பிரான் வெறிமாடன், ஐயனார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரர், வைரவர் ஆகியோர், கிராமிய ஆண் தெய்வங் களாக வழிபடப்பட்டனர். மாரி, காளி, நாச்சியார், வராகி, சீதையம்மன், பேச்சி அம்மான் ஆகியோர் கிராமிய மட்டத்தில் பெண் தெய்வங்களாக இன்றும் வழிபடப்பட்டு வருகின்றனர். இவ்வழிபாட்டு முறை, மரபு வழியாக தமிழ் மக்களிடையே சில பொதுத்தன்மைகளோடும், பல சிறப்பு அம்சங்களோடும் இடம்பெற்று வருகின்றது. இவ்வழிபாட்டு முறையிலே அந்தணர் அல்லாதோரே பூசாரியாக அமைந்தனர். இவ்வழிபாட்டு முறையிலே நித்திய நியமங்கள் பெரிதாகக் காணப்பட மாட்டாது. ஆலய விதிகளும் அமைப்புக்களும் குறைவு. வழிபாட்டின் போது மடை பரவுதல், பொங்கல் இடல், பறை அடித்தல், பலியிடதல், சன்னதம் ஆடுதல், உருவருதல், ஓதிக்கொடுத்தல், திருநீறு போட்டுப் பார்த்தல், பேய்க்குப் பார்த்தல் இவ்வாறாக பல வித சடங்குகள் நம்பிக்கையின் அடிப்படையில் இடம்பெற்று வந்தன, வருகின் றன. இவை கிராமிய வழிபாட்டின் சிறப்பு அம்சங்களாம்.

எந்த வகையில் நோக்கினும், மனிதன் எந்த வழிபாட்டு முறையிலும் தனக்கு அப்பாற்பட்டதோர் சக்தியின் வியா பகத்தை உணர்ந்து அறிந்து ஏற்றுக் கொள்கின்றான். அச் சக்தியைத் தனது வாழ்வின் வழிகாட்டியாகவும், ஊன்று கோலாகவும் கொள்கின்றான். எந்தவழிபாடாக அமைந்தாலும் அங்கு முதற்கண் மனதிலே அசையாத தெய்வ நம்பிக்கையும் பயபக்தியும், தூய்மையும், அகிம்சையும், தியாகமும் அமைந் திருக்க வேண்டும். அப்போது தான் மனிதன், தெய்வத்தின் மேல் கொண்ட நம்பிக்கை பலன் அளிக்கும். சமய வழிபாடு வளரும், ஒழுக்கம் ஓங்கும், அமைதி நிலவும், நாடும் வாழ்வும் வளம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. தந்தையும் தனயனும்

உலகின் பல்வேறு உயிர்கட்கெல்லாம் தந்தையானவர் சிவபெருமான். கருணைக் கடல். இவருக்கு மைந்தன் முருகப் பெருமான். கலியுகவரதன், கண்கண்ட தெய்வம். இருவருமே குருவானவர்கள். தேனினுமினிய திருவாசகம் பாடிய மணி வாசகருக்கு திருப்பெருந்துறையிலே குருவாக எழுந்தருளிய வர் சிவபெருமான். இந்த சிவனுக்கே வேதங்களின் முதல் மொழியாகிய பிரணவப்பொருளை உபதேசித்தருளியவர் முருகப்பெருமான். இதனால் சிவகுரு என்றும், ஞானகுரு என்றும், தகப்பன் சுவாமி என்றும் போற்றப்படுவர் அழகன் முருகன்.

"சிவனார் மனம் குளிர உபதேச மந்திரமிருசெவி மீதிலும் பகர் செய்குருநாதா" என்றும் "ஓதுவித்த நாதர் கற்க ஓதுவித்த முனி காண ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமானே" என்றும் திருப்புகழில் முருகப் பெருமானின் குருத்தன்மை வர்ணிக்கப்படுகின்றது.

அதே நேரம் வீரவாகு தேவர்

"ஈசனேயவன் ஆதலால் மதலையாயினன்காண்" எனக்கூறு மிடத்து சிவன் வேறு குகன் வேறு அன்று என்னும் உண்மை இவ்விடத்து புலனாகின்றது.

சிவபெருமான் சிவமூர்த்தியாகவும், நடராஜமூர்த்தியாக வும், தட்சணா மூர்த்தியாகவும் காட்சியளிப்பது போல் முருக மூர்த்தியாகவும் வந்து அருள் புரிபவர் சிவனேயாம்.

சிவபெருமான் சனகாதி முனிவர்க்குக் கல் ஆலின் புடைய மர்ந்து எல்லாமாய், அனைத்துமாய் இருந்ததனை இருந்து காட்டிச் சொல்லாமல் சொல்லி உபதேசித்தருளினார்.

மணிவாசகப் பெருமான் செய்த தவப்பயன், எம்பெருமான் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் குரு வடிவமாக எழுந்தருளி அருள் புரிந்தார். அதனை மணிவாசகப் பெருமான் வாயிலாகவே சிவபுராணத்திலே கேட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே, பெற்றார் எதைச் செய்கின்றார்களோ பிள்ளைகளும் அதையே செய்ய விளைவார்கள். தந்தை பாடினால் மகனும் பாடுவான். சிவன் குருவாக வந்தருளினார். என்றால் மைந்தன் குருவாக வரக்கூடாதா? குருவாக இருப்பது அரிது, சீடனாக இருப்பது எளிது. ஆதலால் குருவாக நின்று உபதேசித்த சிவனார் சீடனாகவும் நிற்கத் திருவுளம் கொண்டார். அதனால் அரனார் தனக்குத்தானே மகனாகி தனக்குத் தானே உபதேசித்துக் கொண்டார்.

இதுபற்றி தணிகைப்புராணம் கூறியுள்ளது.

ஒரு சமயம் திருக்கையிலை மலையிலே இந்திரன், சந்திரன், விஷ்ணு, பிரமன், குபேரன், சித்தர், இயக்கர் முதலியோர் எம்பெருமானை வணங்கச் சென்றனர். அப்போது வாயிலிலே அமர்ந்த குகனையும் பணிந்து உட்சென்றனர்.

ஆனால், படைப்புத் தொழில் செய்யும் பிரம்ம தேவன் மட்டும் யான் சிருஷ்டி கர்த்தா, இவனோ நேற்றைய பாலன் என மனத்துள் எண்ணி அகந்தையுடன் முருகப் பெருமானை வணங்காது சென்றார்.

முருகப் பெருமான் பிரம்மன் அகந்தையை, அவரது பொய்மையை அடக்கத் திருவுளங் கொண்டார். பிரம்மனை அழைத்தார். பிரம்மனோ விழித்தார். ஆறுமுகன் அழைத்ததும் பிரம்மதேவனின் முகம் மாறுமுகமானது. முருகன் அழைக்கிறான். இன்று எனக்கு நாள் சரியில்லை குட்டுப்பட வேண்டியதுதான், சரி முருகப்பெருமான் கையால் தானே! என மனதுள்ளே எண்ணிக் கொண்டார் பிரம்ம தேவர்.

“உனக்கு வேதம் வருமா” என வினாவினார் முருகன்; “வரும்” “எங்கே ஓது” இது முருகப் பெருமான், வேதத்தை ஓத, பங்கயன் “ஓம்” என ஆரம்பித்தார்.

பொறுமையோடு கேட்ட முருகப்பெருமான், முதல் உரைத்த “ஓம்” என்னும் முதல் எழுத்தின் பொருளைக் கூறு என்றார். அகப்பட்டுக் கொண்டார் பிரம்மதேவர். “ஓம்” என்னும் பிரணவப் பொருளறியாது பிரம்மன் விழித்தார். வெட்கினார், விக்கினார், தலை குனிந்தார். வேதனை அவரை வேதனைப் படுத்தியது. அவருக்குப் பழைய ஞாபகம் வந்தது. சிவனாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் வேதம் கற்றவன் பிரம்மன். அவ்வேளையில் இது வெற்றெழுத்து என எண்ணி இதன் பொருளை வினாவி அறியாது விட்டேனே என மனம் நொந்தார்.

முருகனுள்ளே நின்ற பரமன், பிரம்மனைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். "நீ வேதம் ஓதும் அழகு இதுதானோ!" வேதத்தின் முதல் எழுத்துக்கே உரை தெரியவில்லை உனக்குப் படைப்புத் தொழில் வேறா? எனக் கூறி, பிரம்மனது நான்கு தலைகளிலும் தன் கைகளால் குட்டினார் முருகவேள். பிரமனின் நான்கு சிரங்களும் குலுங்கின. மூக்கிலிருந்து உதிரம் பெருக்கெடுத்தது.

குட்டியதோடு பிரம்மதேவனை விட்டுவிடவில்லை. அவரைக் கொண்டு சென்று கந்தவெற்பில் சிறை வைத்து விட்டு, தானே ஒரு முகமும், நான்கு திருக்கரங்களும் ஜெபமாலையும், கமண்டலமும் ஏந்தி, வரத அபய கரங்கள் அமைத்துப் படைத்தற்றொழிலைப் புரிவாராயினார்.

தேவர் உலகம் திடுக்குற்றது, காத்தற்றொழிலைச் செய்யும் விஷ்ணு முக்கண்ணனிடம் விரைந்தார். பிரமன் சிறைப் பட்டதைக் கூறினார். முக்கண்ணன் அறியாத விடயமா இது?

எம்பெருமான் நந்தியெம்பெருமானை முருகனிடம் அனுப்பி பிரம்ம தேவனை சிறைவிடுக்குமாறு கூறியருளினார். பிரணவத்தின் பொருள் தெரியாத பிரமனுக்கு சிருஷ்டித் தொழில் தக்கதல்ல என குமரனிடமிருந்து பதில் வந்தது.

ஐயன், தேவர் புடைசூழ உமையம்மையோடு முருகனிடம் விரைந்தார். "முருகா! என் புதல்வா! பிரம்மனைச் சிறையிலிருந்து விடுவாய்." எனத் திருவாய் மலர்ந்தார். கந்தவேளும் கமலனைச் சிறையிலிருந்து விடுவித்தார்.

சிவபெருமான் முருகப் பெருமானிடம் உபதேசம் கேட்க விரும்பினார். தான் சீடனாக விரும்பினார். தனக்கு பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசிக்கும்படி வேண்டினார். முருகப் பெருமானும் தான் சுவாமிநாதனாக குருபீடத்தில் அமர்ந்து தந்தைக்குப் பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசித் தருளினார். ஐயனும் தான் சீடனாக மாறி அடக்கமாகப் பணிந்து குருநாதரிடம் பிரணவப் பொருளைக் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் குளிர்ந்தார். இதனையே அருணகிரிநாதர்.

"சிவனார் மனம் குளிர உபதேச மந்திரம் இரு செவி மீதிலும் பகர் செய்குருநாதா"

"ஓதுவித்த நாதர் கற்க ஓது வித்த முனி காண ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்தபெருமானே" என்றும் பாடியுள்ளார்.

இவ்வண்ணம் ஒரு தனயன் யாருக்குக் கிடைப்பான்? சிவனருள் இருந்தால் கிடைப்பான் என்பது நம்பிக்கை இல்லையா? ●

## 08. "மணிவாசகத் தேன்"

"மணிவாசகத் தேன்" பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

தேன் இனிமையானது, சுவையானது, மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தது. இதே போன்று தான் மணிவாசகப் பெருமானது திருவாசகமும் கேட்கத் கேட்கத் தெவிட்டாதது. தெய்வீகமானது. உள்ளத்தை உருக்க வல்லது. இதனால்தான் திருவாசகத்தைப் பொருள் உணர்ந்து அனுபவித்தோர்,

"**திருவாசகத்திற்கு உருகாதோர்**
**ஒரு வாசகத்திற்கும் உருகார்**"எனக் கூறிப் போந்தனர்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி.**

என்ற வாசகம் யாம் அறிந்ததே. தென்னாட்டைச் சிவலோகமாகக் கருதியவர் மணிவாசகப் பெருமான். மார்கழி மாதத்தில் திருவெம்பாவை எமக்கு மணிவாசகப் பெருமானின் தேனான நினைவுகளை அள்ளித் தருவன. மார்கழிச் சூரியன் மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களைக் கேட்டுக் கொண்டன்றோ உதய மாகின்றான். மார்கழிப் பூக்கள் திருஎம் பாவைப் பாடல்களைக் கேட்ட வண்ணமே மலர்கின்றன. மார்கழி உதய காலத்தில் புள்ளினங்களும் திருவெம்பாவைப் பாடல்களைக் கேட்டவண்ணம் ஆர்ப்பரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் தேனினுமினிய திருவாசகப் பாடல்களை எமக்குத் தந்தருளிய மாணிக்கவாசக சுவாமிகள் சைவம் வளர்த்த சமய குரவர்களுள் ஒருவராக ஞானநெறி நின்று எம்பிரான் இன்னருள் பெற்றவர்.

“தாரமும் குருவும் தலைவிதிப்படியே” என்பது முன்னோர் வாக்கு. மணிவாசகப் பெருமானுக்கு குருவாக வாய்த்தவரோ சிவபெருமான் என்றால் இவரது பக்குவ நிலையை என்ன வென்று கூறுவோம்! குருவாக வந்து மணிவாசகருக்கு இன்ன ருளை, இறையருளை அள்ளிச் சொரிந்தவர் எம் பெருமான். எம் பெருமானின் இன்னருளில் திளைத்தவர் மணிவாசகர். இதனால் தான் இறைவன் காட்சி கொடுத்து மறைந்ததும் தாயைப் பிரிந்த சேயைப் போல் ஐயனைக் காணாது அரற்றிப் புலம்பியவர் மணிவாசகர்.

பாண்டி நாட்டிலே திருவாதவூரில் அந்தண குலத்தில் பிறந்தவர் மாணிக்கவாசகர். அவர் பிறந்த ஊரின் பெயரால் அவருக்குத் திருவாதவூரர் எனப் பெற்றோர் நாமமிட்டனர். இவரது உலக நெறி, ஞானநெறி, அறிவைக் கண்டு உணர்ந்த பாண்டியன் இவருக்கு “தென்னவன் பிரமராயன்” எனப் பெயர் சூட்டி தனது முதல் மந்திரியாகவும் ஆக்கிக் கொண் டான்.

பிரம்மம் தன்னையும் விளக்கி, பிரகிருதியையும் விளக்கி, தன்மயமாக இருப்பதால் மாசற்ற ஜோதி ஆகின்றது.

அ.்.து கல்லினுள்ளும் மறைந்திருக்கின்றது. அதே போன்று சிவபோதத்தை வளர்க்காத அறியாதவர்களின் உள்ளத்துள் ளும் சிவ ஒளி மறைந்தே காணப்படும்.

பரமாத்மா இருந்த படி எங்கும் செல்லக் கூடியவர். சய னித்த படி எங்கும் இயங்குவார். அந்த ஜோதியினை இன்ப மும் துன்பமும் இல்லானை என போன்றவர் அன்றி வேறு யார் அறிவார் என ஒரு சந்தர்ப்பத்தில் தகுதிவாய்தவர்கள் தான் பரம்பொருளை அறிந்து கொள்ள முடியும் என்னும் நோக்கில் யமதர்மனால் நசிகேதனுக்கு கூறப்பட்டதாக உபநிடதம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்” உள்ளவன் பரம்பொருள், சுய ஜோதிப்பிழம்பு என்பது இறைவனின் ஒரு வடிவம். இடையறாது மாறுபாடு அடைந்து கொண்டு வருகின்ற இந்த உலகிலே வெவ்வேறு வடிவங்கள் ஊடாக அறிவாக ஒளிர்பவன் இறைவன். இயற்கையில் உள்ள தாவர சங்கம சராசரம் யாவற்றிலும் நிறைந்து இயங்குபவன் பரம் பொருள்.

பக்தி நிறைந்த உள்ளத்தில் பரம்பொருளின் சான்னித்தியம் தெளிவடைகின்றது. கடலை அடையும் நதி தான் கடலா கின்றது. அதேபோன்று பூரணத்தை அடைபவன் பிறவி களையும் அதனின்று விளைகின்ற துன்பத்தையும் கடந்து அவற்றினின்றும் விடுபடுகின்றான்.

கடலில் அடிப்பகுதி அசைவதில்லை, மேற்பகுதி அசை கின்றது. அதேபோன்று நிர்க்குணபிரம்மம் அசைவதில்லை. சகுணபிரமம் அசைகின்றது. பரம்பொருள் வெகு தொலைவில் இருப்பது பக்குவமற்ற ஆன்மாக்கட்கே, பக்குவம் பெற் றோர்க்கு அது அந்தராத்மாவாக அமைகின்றது.

தவத்தின் மூலமும் பிரமச்சரியத்தின் மூலமும் மனிதனது அறிவு பக்குவமடைகின்றது. கூர்மையடைந்து நுண்ண றிவாகின்றது. மனதில் மாசு நீங்கும் போது ஈசனின் சான்னித்தியம் உணரப்படுகின்றது.

ஞானம் ஒளிமயமானது இறைவனும் ஒளி மயமானவன். ஊனக் கண் கொண்டு காண முடியாத இறைவனை ஞானக் கண் கொண்டு காண முடிகின்றது. “தோற்றச் சுடர் ஒளியாய்” சொல்லாத நுண்ணுணர்வாய் என்கிறது திருவாசகம்.

இந்து மத வழிபாட்டு முறைகளில் வேள்வி ஒன்றாகும். தெய்வ வழிபாட்டில் மக்களை ஈடுபடுத்துவது வேள்வி ஆகின் றது. ஹோமாக்கினி அல்லது வேள்வித் தீ எமது மதத்தில் ஒரு சின்னமே. அதில், இந்த வேள்வித் தீயில் சொரியும் பொருட்கள் உருமாறிப் பயன்படுவதுபோல, தேவர்கட்கு நிவேதிக்கப்படுவது போல் மனிதனும் தன் தூய வாழ்வின் மூலம் தன்னைத் தெய்வத்துக்கு ஒப்படைக்கின்ற போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் இலட்சியம் நிறைவேறுகின்றது.

விறகு தன்னைத் தீக்குக் கொடுத்ததும் அது தீயாகின்றது. அதேபோன்று வேள்வி வாயிலாக மனிதனும் தன்னை இறைக்கு அர்ப்பணிக்கின்றான். எங்கு வேள்வி நிகழ்கின்றதோ அங்கு தெய்வ சான்னித்தியம் உண்டாகின்றது.

மணிவாசகப் பெருமான் தன்னை இறை என்னும் வேள்வித் தீயில் ஆகுதியாகக் கொடுத்து ஆளப்பட்டமையை பாடியிருக்கும் அழகினைப் பாருங்கள்.

239733

அன்றே எந்தன் ஆவியும்
    உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
    ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
    எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
    நானோ இதற்கு நாயகமே.

# 09. வேதத்தின் இருதயம் ஐந்தெழுத்து

வேதத்தின் இருதயம் ஐந்தெழுத்து என்பது பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

நமசிவாய, சிவாயநம, என்பது ஐந்தெழுத்தாகும். இதுவே பஞ்சாட்சர மந்திரம் எனப்படும். யசுர் வேதத்தில் எவ்வாறு ஸ்ரீருத்ர மந்திரம் நடுநாயகமாக விளங்குகின்றதோ அதே போன்று ஸ்ரீருத்ரத்தில் நடுநாயகமாக விளங்குகின்றது நமசிவாய என்னும் மந்திரம். இப்பஞ்சாட்சர மந்திரம் வேதத்தின் இருதயம் போன்றது. மனித உடலுக்கு மனிதன் வாழ்வதற்கு இருதயம் இன்றியமையாதது. நாம் செயலாற்றினும் சரி, செயல் அற்று ஓய்வெடுத்தாலும் சரி எமது இருதயம் இயங்கிக் கொண்டேயிருக்கும். இயங்கியே ஆகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வாழ எவ்வாறு இருதயம் அவசியமாகின்றதோ, அதே போன்று ஆத்மீக வாழ்வுக்கு ஐந்தெழுத்து அவசியமாகின் றது. வேதம் ஓதுதல் எல்லோர்க்கும் எளிதன்று. ஆனால் நமச்சிவாய மந்திரம் நவிலுவது மிக எளிது.

மாணிக்கவாசக சுவாமிகள் சன்மார்க்கத்தைப் பின்பற்றிய வர். கோகழி என்றழைக்கப்படும் திருப்பெருந்துறையிலே இறைவனால், தான் ஆட்கொள்ளப்பட்ட காரணத்தால்.

"கோகழி ஆண்ட குருமணி" என எம்பெருமானை இங்கு சுட்டிப் பாடுகின்றார்.

நமச்சிவாய என்னும் மந்திரம் இந்துக்கள் யாவர்க்கும் பொதுவானது. தீட்சை பெற்றோரும் இம்மந்திரத்தைச் செபிக்கலாம். தீட்சை பெறாதோரும் இதனை ஓதலாம். தாயைக் கூவி அழைக்க சேய்க்கு உரிமை இல்லையா? என்ன! அதே போன்று இறைவனைக் கூவியழைக்க எல்லா உயிர்கட்கும் உரிமை உண்டு.

ஆத்ம சாதனங்களுள் ஜபம் மிக எளிதானது. எப்போது வேண்டுமானாலும் இறைவன் நாமத்தை ஓதிக் கொண்டே யிருக்கலாம். ஜபம் சக்தி வாய்ந்தது. பக்தன் அடைகின்ற பரிபக்குவங்களுள் ஜபசித்தி பெறுவதற்கு இறைவன் நாமத்தை இடையறாது ஓத வேண்டும். இறைநாமம் ஓதும் போது அவன் எம் நெஞ்சிலும் நீங்காது இடம் பெற்று விடு கின்றான். ஈசன் இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்காது இடம் பெற்று விடுகின்றான்.

ஒன்றாக இருப்பவனும் பலவாக இருப்பவனும் இறைவன். மணிவாசகரது மனோவேகத்தைத் தடுத்து அவர் மனத்தை ஒரு வழிப் படுத்தியவர் எம்பெருமான். ஒருவழிப்படுத்தியவர் என்பதிலும் பார்க்கத் தன்வழிப்படுத்தியவர் என்று கூறுதல் பொருந்தும். திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்ட பின் மணிவாசகரது வழி, இறைவன் வழியாக இருந்தது. எங்கும் சிவம், எதிலும் சிவம்.

எண்ணங்கள் மனதைக் கொதிப்படையச் செய்யும் போது எண்ணங்கள் யாவும் பூர்த்தி அடையப் பிறவிகளும் பெருகிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே போகின்றன. எண்ணங்களுக்கு வலிவு கொடுப்பது ஆசை. இந்த ஆசையை "வேகம்" என்றார் மணிவாசகப் பெருமான். ஆசைக்கு இருப்பிடம் அஞ்ஞானம். இறைவன் அருள் வாய்க்குமிடத்து அஞ்ஞானம் அகல்கின்றது. ஆசை அறுபடுகின்றது. எண்ணக் கொதிப்பு அடங்குகின்றது. இதுவே "வேகம் கெடுத்தாண்ட வேந்தனது செயல்"

விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு விளக்கை அறிகின்றோம். சூரிய வெளிச்சத்தைக் கொண்டு சூரியனை அறிகின்றோம். அதேபோன்று இறைவனது அருளைக் கொண்டே இறைவனை அடைய வேண்டும் என்பது மணிவாசகர் சிவபுராணத்தில் எமக்கு அறிவுறுத்தும் நெறி.

இயற்கை அல்லது பிரபஞ்சம் என்பதற்கு மற்றொரு பெயர் மாயை. ஒரு கணப்பொழுதில் இருப்பது போல் தோன்றி மறு கணப்பொழுதில் மறைவதெதுவோ அதுவே மாயை.

கண்ணுதலான் எம்பெருமான், அதாவது நெற்றியில் கண் உடையவன். அது ஞானக்கண். புருவத்தின் கீழ் உள்ள ஊனக்கண்கள் உலகப் பொருட்களைக் காட்ட, ஞானக்கண் பரம் பொருளைக் காட்டும் கண்ணாக அமைகின்றது. சிவ னைக் காட்டும் கண்ணாக அமைகின்றது. சிவனாரது ஞானக் கண் ஜீவாத்மாக்களுக்கு அருள் சொரிந்து அவர்கள் உய்வடைவதற்கு உறுதுணையாகின்றது.

விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய், எண்ணிறைந்த எல்லை இலாத எம்பெருமான், அண்டப கிரண்ட மாய்ப் பரந்து, அவையாவையும் கடந்து "கடவுள்" என நாமம் பெறுகிறார். அவரது தரிசனம் கிடைக்க எமது மனம் தூயதாக அமைதல் அவசியம். மனம் ஒரு தடாகம் போன்றது. அதன் கண் சேற்று நீர் இருந்தால் அதன் அடி மட்டம் தென்படாது. தடாகம் தூய நீரோடு அமைதியுற்றிருந் தால் தான் அதன் அடி "பளிச்செ‌ன" எனத் தென்படும். அது போலவே எமது மனமாகிய தடாகத்தின் கண் பந்தபாச அலைகளும் ஆசை என்னும் அழுக்கும் சேர்ந்து கொண்டால் ஆத்ம தரிசனம் எமக்கு அப்பாற்பட்டதாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடத்திலிருந்து தோன்றிய உயிர்கள் பல பிறவிகள் எடுக்கும் பெரும் பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் இறைவன் பாதங்களை அடைதலே வீடுபேறு அல்லது முத்தி எனப்படுகின்றது.

அடியவர்களை உய்விப்பது இறைவனது அருள் நோக்கமாகும். அதேநேரம் ஈசனிடம் தங்களை ஒப்படைக்க பக்தர்களும் அருட் துறையில் அரும்பாடுபட்டாக வேண்டும். அதற்கு நாம் கரம் குவித்து சிரம் தாழ்த்தி இறை நாமம் செபித்து இறைவன் பாதம் வணங்கியாக வேண்டும்.

# 10. மாதோர் பாகத்தன்

**மா**தோர் பாகனை பற்றி இக்காலைப் பொழுதில் சிந்திப்போம். அந்தமும், ஆதியும் இல்லாத கருணைக் கடலான சிவபெருமானுக்கு உரிய மூர்த்தங்களில் அர்த்த நாரீஸ்வர மூர்த்தமும் ஒன்றாகும்.

இவ்வடிவில் சிவன் பாதி, சக்தி பாதியாக எம்பெருமான் காட்சி தருகின்றார். ஆணும் பெண்ணும் சமம் என்ற மிகப் பெரியதோர் தத்துவத்தை விளக்கும் வகையில் சிவனும் சக்தியும் இணைந்த அற்புத அமைப்பே இந்த அர்த்த நாரீஸ்வர வடிவம்.

பிருங்கி முனிவர் சிவனின் தீவிர பக்தர் ஆவார். அவர் சிவபெருமானைத் தவிரவேறு எந்தத் தெய்வத்தையும் வணங்காதவர். உமையைத் தவிர்த்து அருகே அமர்ந்திருக்கும் சிவபெருமானை மட்டும் வணங்கிய அவரது அறியாமையைப் போக்கி அருள தமது உடம்பில் பாதியை உமையம்மைக்குத் தந்தருளி அர்த்தநாரீஸ்வர வடிவு கொண்டு முனிவரின் அஞ்ஞானத்தை நீக்கியருளினார் ஈசன்.

அடுத்து எம்பெருமானது மூர்த்தங்களில் முக்கியம் வாய்ந்தது கங்காதர மூர்த்தம். இதன் பின்னணியில் உள்ள வரலாற்றை நோக்குவோம். தனது முன்னோர்களின் பிதிர்கடன்கள் ஆற்றுவதற்காகப் புனித நீர் வேண்டி ஆகாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையை பூமிக்குத் தந்தருளுமாறு ஈசனை நோக்கிப் பெரும் தவமிருந்தான் பகீரதன். பகீரதனது தவத்தை மெச்சி ஈசன் கங்கையை பூமிக்கு அனுப்பி வைத்தார். ஆனால் கங்கை பாய்ந்து வந்த போது அதன் வேகம் எங்கே பூமியையே அழித்து விடுமோ என்ற அச்சத்தில் கங்கையைத் தன் ஜடாமுடியில் ஏற்றி, அதன் வேகத்தைக் குறைத்து தணித்து பகீரதனுக்காகப் பூமியில் பாயவிட்டார் எம்பெருமான். இதனால் கங்காதரன் ஆனார்.

சிவனாரது கங்காதர வடிவம் தமிழ் நாட்டிலே திருச்சிராப் பள்ளி மலைக்கோட்டையிலும், மாமல்ல புரத்து பாறைக் கோயிலிலும் இன்றும் காணப்படுகின்றது.

அடுத்து எம்பெருமானது பிட்சாடன மூர்த்தம் பற்றிப் பார்ப்போம்.

ஒருகால், தாருகாவனத்து முனிவர்கள் தமது தவவலி மையையும் புலனடக்கத்தையும் பற்றிப் பெருமிதமும், கர்வ மும் கொண்டனர். போதாக்குறைக்கு தத்தமது பத்தினி மார்களது கற்பு வலிமை பற்றியும் செருக்குற்றனர். ஒருவரது நல்ல செயல் நன்மையையும், தீய செயல் தீமையையையும் விளைவிக்கும் போது, பின் இறைவன் எதற்கு! என்று மூடத்தனமாகச் செயற்படத் தொடங்கினர் இம் முனிவர்கள்.

இவர்களது அறியாமையை அடக்கத்திருவுளம் கொண்ட ஈசன் தான் பிச்சாடண வடிவம் பூண்டு மகா விஷ்ணுவை யும், அழகான மோகினி வடிவம் கொள்ள வைத்து இருவருமாகத் தாருகாவனம் சென்றடைந்தனர்.

இறைவனது பிச்சாடன வேடம், அழகிய இளந்துறவியாக, வசீகரமாக அமைந்ததால் தாருகாவனத்து ரிஷி பத்தினிகள் அவரது மோகன வடிவத்தில் தம்மனதைப்பறி கொடுத்து தம் நிலை மறந்து அவர் பின்னே செல்லலாயினர்.

முனிவர்களும் தமது தவவலிமையை மறந்து அழகான மோகினியின் பின் செல்லலாயினர். பின்னர் உண்மையை அறிந்து தமது செயலை எண்ணி வெட்கி ஈசனோடு போர் புரியலாயினர். போரின் இறுதியில் மயங்கி வீழ்ந்த முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எழுப்பி அவர்களை மன்னித்து அருளினார் எம் பெருமான்.

பிட்சாடன வடிவத்தில் சிவனார் அருகே இரு குள்ளர்கள் காணப்படுவர். ஈசன் பின்னிரு கைகளிலும் சூலமும் உடுக் கையும் ஏந்தி நிற்பர். முன் வலது கரம் மானுக்கு புல் அளிப்பதாகவும் இடது கரம் கபாலம் ஏந்தியதாகவும் காணப் படும்.

அழகிய இச்சிற்ப வடிவங்கள் தமிழ் நாட்டிலே தாராபுரம், தஞ்சாவூர், பேரூர், வழுவூர் ஆகிய இடங்களில் காணப்படு கின்றன. இ஛து இறைவனது பிட்சாடன மூர்த்தமாகும்.

அடுத்து சிவபிரானது கஜசம்ஹார மூர்த்தத்தின் வரலாற்றை நோக்குவோம். கஜம் என்றால் யானை என்று பொருள். சம்ஹாரம் செய்தல் அழித்தல் என்று பொருள்படும். இம்மூர்த்தத்தில் எம் பெருமான் யானையை சம்கரித்து அதன் தோலை கஜவுரியாகப் போர்த்தியுள்ளார்.

தாருகாவனத்து முனிவர்கள் எம்பெருமானோடு போர் புரிந்த போது தமது தவவலிமையால் யாக குண்டங்களிலி ருந்து கொடிய விலங்குகளை உருவாக்கி அவற்றை ஈசன் மேல் ஏவினர். அத்தகைய விலங்குகளில் ஒன்று யானை. யானை ஈசனை நோக்கி வேகமாக வந்த போது எம்பெருமான் அதனைக் கொன்றழித்து அதன் தோலை உரித்து போர்வையாகத் தன் மேனி மேல் போர்த்தருளினார்.

இவ்வடிவத்தில் எம்பெருமான் பல ஆயுதங்களை கரங் களில் ஏந்தியுள்ளார். இடதுபாதத்தை யானையின் தலைமீது ஊன்றி உள்ளார்.

இவ்வடிவம் தமிழ் நாட்டிலே வழுவூர், தாராபுரம் ஆகிய தலங்களிலே சிறப்பாக அமைந்துள்ளன. காணக்கிடைக்காத காட்சியிது.

எம்பெருமான் யானைத்தோல் போர்த்த வரலாற்றை திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கோணமலைப் பதிகத்தில் பாடியுள்ளவாற்றைப் பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடிதெனவந்த கரிதனை உரித்து"
அவ்வுரி மேனிமேல் போர்ப்பர்
பிடிஎன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடு முடனாய்
கொடிதென கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலம் சுமந்து
குடிதனைப் நெருக்கிப் பெருக்கமாய் தோன்றும்
கோணமாமலை அமர்ந்தாரே.

## 11. தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே

உலகில் வகுக்கப்பட்ட சைவம் முதலாய அளவற்ற சமயங்களையும் தன்னுள் அடக்கி மேலோங்கி நிற்பது சைவ சித்தாந்தம். இதற்கு முழு முதற்கடவுள் சிவ பெருமான். சிவன் கடவுளர் வரிசையில் முன்னவனாக வைத்து எண்ணப்படுபவன் வணங்கப்படுபவன். அவனே முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளானவன். அவனே பொறிவாயில் ஐந்து அவித்தவன். அவன் கூறிய நெறியே பொய்தீர் ஒழுக்க நெறியாகிய சைவசித்தாந்த நெறியாகும். சைவசித்தாந்தமே சிவனை அடைய வழிகாட்டும் சீரிய நெறியாகும். அந் நெறியே எல்லா உயிர்களையும் பாதுகாக் கும் சீரிய நெறியுமாகும்.

இத்தகைய சைவசமயத்தின் ஜீவநெறியாகிய சைவ சித்தாந்த நெறியினை விளக்க எழுந்த இலக்கியம் பன்னிரு திருமுறைகள். இவ்வருள் நெறி நின்று ஒழுகும் சைவப் பெருமக்களுக்கு நல்லதோர் சாதனமாக அமைந்துள்ளதும், நற்பயன் அளிப்பதும் திருவைந்தெழுத்தான நமசிவாய என்பதாம்.

திருவைந்தெழுத்து ஆகிய "நமசிவாய" எம் பெருமானது திருநாமம் ஆகும். அதேபோன்ற சைவசமயத்தை வளர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுலகில் அவதாரம் செய்த அப்பர், சுந்தர, சம்பந்தர், மணிவாசகர் ஆகியோரது திருநாமங்களையும் மந்திரங்களா கவே நாம் கொள்வதில் தவறேதுமில்லை எனலாம்.

இதற்கோர் எடுத்துக் காட்டாக 63 நாயன்மார்களுள் ஒருவரான அப்பூதியடிகள் தனது பிள்ளைகளுக்கு நாவுக்கரச ரின் பெயரை வைத்து அழைக்கலானார். திருநாவுக்கரசு என்னும் பெயரை எழுதியும் ஓதியும் முத்தி பெற்ற இவர் வேறொரு தவமும் செய்ததாக இல்லை என சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளார் என்றால் இந்நாமத்தை மந்திரம் என்று சொல்வதில் தவறில்லை அல்லவா?

இதுமட்டுமல்ல. பெரியபுராணம் தந்த சேக்கிழார் சுவாமிகள் புராணத்தைத் தொடங்கும் போதே "வாகீசர் வாய்மை திகழ் பெரு நாமச்சீர் பரவல் கூறுகின்றேன் பேருலகில் ஒரு நாவுக்கு உரை செய்ய சீர் பரவலுறுகின்றேன்" என்று கூறி பெருமிதம் கொள்கின்றார்.

இதேபோன்ற பக்தி மார்க்கத்தைப் பண்ணிசை மூலம் பரப்பிய சமய குரவர்களில் வயதில் இளையவரான ஞானசம்பந்தரின் நாமமும் ஒரு திருமந்திரமாகவே விளங்கி யது. தம்மை அடைந்த ஆன்மாக்களை ஈடேற்ற அவதரித்த திருஞானசம்பந்தரை உபாசனா மூர்த்தியாகக் கொண்டு அவர் திருவடியை சதா உச்சரித்து முத்தி பெற்றவர் கணநாத நாயனார்.

இதேபோன்று நம்பியாரூரர் நாமம் புகன்ற தன்மையினால் நற்பேறுகள் பெற்றவர் சுறும்ப நாயனார். சோமாசிமாற நாயனார் குண்டையூர்க்கிழார் போன்ற பெரியார்களும் சுந்தர மூர்த்தி நாயனார் திருவடிக்கு அன்பு செலுத்தி உய்வு பெற்றவர்கள்.

சேக்கிழார் பெருமானே சுந்தரர் திருவடிகளை வணங்க வாய்ப்பளித்த தனது மனிதப் பிறவிக்கே வணக்கம் செலுத்து கின்றார் என்றால் சுந்தரர் பெருமை சொல்லும் தரமானதோ?

தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டர்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர் மென்கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவோம்

## 12. இறைவனும் மெய்யடியார்களும்

அப்பர் சுவாமிகள் தமது உடம்பைக் கோவிலாக்கி சித்தத்தை சிவமாக்கி இறைவனை அக்கோயிலில் எழுந்தருளச் செய்து சிவ பூசை செய்து அக வழிபாடு செய்து வந்தவர். அவர் ஒரு நடமாடும் கோயிலாகவே திகழ்ந்தார். இறைவனோடு இறைவியும் அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தாள். சிவன் தன் சிந்தையுள் குடிகொண்டிருந்த அழகை நாவரசர் சித்திரிக்கும் சிறப்பைப் பாருங்கள்.

முடி கொண்ட மத்தமும் முக்கண்ணின்
நோக்கும் முறுவலிப்பும்
துடி கொண்டகையும் துதைந்த வெண்
நீறும், கரி குழலாள்
படி கொண்ட பாகமும் பாயும் புலித்
தோலும், என் பாவி நெஞ்சில்
குடி கொண்டவா தில்லை அம்பலக்
கூத்தன் குரை கழலே

என்கின்றது அவரது பாடல்.

சிவஞானச் செல்வராகிய சிவப்பிரகாச சுவாமிகள் சமய குரவர்களது மேன்மையை நன்கு போற்றியவர். இவர் அப்பர் சுவாமிகள் ஒரு நடமாடும் கோவிலாக எவ்வாறு திகழ்ந்தார் என்பதை வர்ணிக்குமாற்றைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறைக்காட்டிலே திருக்கோவில் கதவினை திறப்பித்து, நீண்ட காலத்தின் பின் எம்பெருமானை நேர் வாயிலாக எல்லோரும் தரிசித்தது போல அப்பர் சுவாமிகள் தன் உடம்பாகிய கோயிலின் வாயிலை அடைத்து வைத்திருக்கும் ஆணவ மலமாகிய கதவினை திறக்க வைத்து தாயிலியாகி சிவனை யாவர்க்கும் காட்டி வைத்தார் என்னும் பொருள்பட சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளதையும் கேட்டுப் பாருங்கள்.

**"தாயிலியாகும் சிவபெருமான் தன் தான் எனும் ஓர் கோயிலின் ஆரறிவாகிய நாமமும் கொண்டிருந்த வாயிலின் ஆணவமாகும் கபாடமும் மன் திறந்து நோய் இலியாகிய சொல் இறை காட்டுவன் நோபாக்குதற்கே"**

தனக்கு ஒரு மூலம் இல்லாத சிவனைத் "தாயிலி" என்றழைப்பதுண்டு. உயிருக்குயிராய் உள்நின்று உணர்த்து வார். ஈசன் ஆதலால் உயிர் அனைத்தும் இறைக்கு ஆலயம் என்றார்.

பதி - இறைவன், பசு - ஆன்மா, இவை இரண்டும் அநாதி ஆதலால் இவ்விரண்டையும் முற்றாக அழித்தல் முடியாது. அது போலவே பாசமும் அநாதி: எனவே அதனை முற்றாக அழித்து விடுதல் முடியாது. அதனை மறைத்து, அதன் வலிமையை மங்கச் செய்தலே சாத்தியம். அதனால் தான் கபாடம் களைந்து என்னாமல் கபாடம் திறந்து என்று பாடினார் சுவாமிகள்.

சிவனை எமது உள்ளத்தே எடுத்துக் கொள்ளல் எளிதான காரியமல்ல. உடம்பைக் கோயிலாக்க எத்தனை முன் ஆயத்த ங்கள் செய்தாக வேண்டும்.

ஒரு வீட்டிற்குக் குடி போவதென்றால் உடனே போய் விட முடியுமா? அதுவும் நெடுநாளாகப் பூட்டிக் கிடந்த வீடென்றால் கேட்கவே வேண்டுமா?

முதலில் அவ்வீட்டைச் செப்பனிட்டாக வேண்டும். கதவு களைத் திறந்து இருள் போக்கி வெளிச்சம் உள்ளே வர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட வேண்டும். குப்பை கூளங்களைப் பெருக்கி நிலத்தைக் கழுவி தூய்மையாக்க வேண்டும். சுவருக்கு வெள்ளை அடித்து அழகு படுத்த வேண்டும். வீட்டுக்கு வருவோர் அமர ஆசனங்கள் அமைத்தாக வேண்டும்.

இதே போன்றே இறைவனை எம் சிந்தையுள் குடிபுக வைக்க நாம் எத்தனை பக்குவம் பெற்றாக வேண்டும். இதனை மணிவாசகர் எத்தனை அழகாய்ப் பாடியுள்ளார்.

"இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும் துன்பம் தொடர்பு அறுத்து சோதியாய் அன்பு அமைத்து சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே ஊராகக் கொண் டான் உவந்து"

வீட்டுக் கதவைத் திறந்தால் ஒளி உள்ளே வரும். எம் அக இருளைப் போக்க இறைவன் சோதியாய் வருவான். இவ்வாறு இறையை வர விடாது, எமது வஞ்சப் புலன்கள் ஐந்தும் தடுக்க முனையும். இதற்காகவே இறைவன் அருள் புரிந்து அடியவர்களின் வஞ்சப் புலன் ஐந்தின் வழி அடைக்க வைக்கின்றான் என்பதை மணிவாசகர்

"மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின் வழி அடைத்து அமுதே ஊறி நின்று என்னுள் எழு பரம் சோதி" என்றார்.

ஐம்புலன்களே எம்மை மயக்கி அறியாமையை உள்ளெ டுக்கும் வாயில்களாக எமது உடம்புக்கு அமைந்துள்ளன என அறியக் கிடக்கின்றது. துன்பம் தொடர்பு அறுத்து பாசம் நீக்கி எமது அகம் சுத்தமாக்கப்படவேண்டும். துன்பம் தொடர்பு அறுக்க இன்பம் பெருக்கி அருள்புரிய இறைவன் எம் அகத்தே எழுந்தருள்வார். அவர், அமர எம்மிடம் உள்ள மெய் அன்பே ஆசனம் ஆக அமையும்.

இந்த வகையில் அடியார்கள் உள்ளத்தில் இறைவன் அமரும் போது உடல் கோயிலாக அமைகின்றது. இந்த நிலையில் இவ்வுடம்பு பெறும் பேறுகள் அளப்பரியவை. கூற்றை உதைத்த குழகன் உள்ளே உறையும் போது கூற்றுவன் உள்ளே வரான். தீவினைகள் அகலும், காமம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுளி, மயக்கம் ஆகியவை தாமாகவே நீங்கும். துன்பம் அறுத்த மெய்யின்பத்தில் இவ்வுடல் கொண்டோர் வாழ்வர். இந்த உயர் நிலையை அப்பர் சுவாமிகள் பாடியுள்ளவாற் றைப் பாருங்கள்.

பாடல்

**வெம்ப வருகிற்பதன்று கூற்றம் தம்மேல்**
**வெய்ய வினைப்பகையும் பைய நையும்**
**எம்பரிவு தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்**
**எங்கு எழில் ஞாயிறு எளியோ மல்லோம்**
**அம்பவள செஞ்சடை மேல் ஆறு சூடி**
**அனல் ஆடி ஆன அஞ்சும் ஆடுகந்த**
**செம்பவள வண்ணச்செங்குன்ற வண்ணர்**
**செவ்வான வண்ணர் என் சிந்தையுள்ளே.**

சிவனாரின் செம்பவள மேனி வண்ணத்திற்கு நாவுக்கரசர் இப்பாடலில் 3 உவமைகள் கூறியுள்ளார்.

முதலில் செங்குன்றவண்ணர் என்றார். சிவந்த நிறம் குன்று முழுவதும் கலவாதிருத்தலால், அது இறைவன் உலகத் தினின்றும் பேதமாய் தோன்றுகின்ற அத்துவித நிலையைக் குறிக்கின்றது. அடுத்து செம்பவளவண்ணர் என வர்ணிப்பது சிவப்பு நிறம் பவளத்தின் உள்ளும் புறமும் கலந்திருத்தலால் ஆகும்.

இது உலகம் உயிர்கள் அனைத்திலும் கலப்புற்று அபேதமாய் தோன்றும் இறையின் அத்துவித நிலையைக் குறித்து நிற்கின்றது. மூன்றாவதாக செவ்வண்ணர் என்னும் போது செந்நிற ஞாயிறின் சிவந்த ஒளிக்கதிர்கள் அந்தி வானில் பட்டு சிவந்து தோன்றும் நிலையாகிய வர்ணனையில் இறைவன் எவற்றிலும் கலந்து நிற்கும். அவற்றில் பற்றில் லாதவனாய் நிற்கும் பேதாபேத அத்து வித நிலை குறித்து நிற்கின்றது. இந்த நிலைகளில் எம்பெருமான் மெய்ஞானி களின் சிந்தையுள் இருப்பதன் சிந்தையாரே என்கிறார் அப்பர் சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் மேல் கூற்றுவன் வரும் போது தடுக்கும் இறையின் நிலை பேரருள் உடைமையையும், வெய்ய வினைகள் நைதல் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கும் நிலையையும் எம்பரிவு தீர்த்தோம் என்பதானால் முடிவில் ஆற்றல் உடைமையையும், இடுக்கண் இல்லோம் என்பதால் இறையின் பேராற்றலையும் கருணையையும் அப்பர் சுவாமி கள் தன் அனுபவம் மூலம் பாடி வைத்துள்ளார். அவரது வாக்கில்,

1. **இயற்கை உணர்வினனாதல்.**
2. **இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குதல்.**
3. **தூய உடம்பினராதல்.**
4. **பேரருள் உடைமை.**

ஆகிய குணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இத்தகைய இறையின் பூரண அருளைப் பெற்ற மெய்ஞ்ஞா னிகளின் நிலை சூரியன் கிழக்கே உதித்தால் என்ன, வடக்கே உதித்தால் என்ன வடகோடு உயர்ந்தால் என்ன! தென் கோடு சாய்ந்தால் என்ன எமக்கேது குறை என்று அமைதி பெறும் நிலையாகும்.

இக்கருத்தை மணிவாசகப்பெருமானும் "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு" என்று பாடியிருப்பதை இங்கு தொடர்பு படுத்திப் பார்ப்போம்.

**"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று**
**அங்கப் பழம் சொல் புதுக்கும் எம் அச்சத்தால்**
**எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்.**
**எம்கொங்கை நின்னன்பர் அல்லர்தோள் சேரற்க**
**எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க**
**கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க**
**இங்கிப் பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்**
**எங்கெழில் என்! ஞாயிறு எமக்கேல் ஓர்**
**எம்பாவாய்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. விதி

கிடைத்தற்கரியது மானிடப்பிறவி. இது நிஜம். இது பற்றி மனிதனுக்குப் பெருமை வேறு. ஆனால் எந்த அளவுக்கு யாம் இறைவன் எமக்களித்த இந்தப் பிறவியினைப் பயன்படுத்துகிறோம் என்று வினாவினால், அதற்கு சாதகமான பதில் கிடைக்கவே கிடைக்காது. பதில் சொல்வதில் தயக்கம் தான் கிடைக்கும். இதுவும் நிஜமே.

மனித சரீரம் எமக்குக் கிடைத்ததே, மனிதன் இறையை வணங்கி நல்வாழ்வு வாழ்ந்து தருமங்கள் செய்து ஈற்றில் இறைபதம் அடைவதற்கேயாம். இவ்வண்ணம் நல்லை நகர் தந்த நாவலர் பெருமான் கூறியுள்ளார்.

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தாதார்**
**இறைவன் அடி சேராதார்”**

என்பது வள்ளுவம் தந்த வாக்கு. இதன்படி இகத்தில் இன்பத்தையும் பரத்தில் முத்தியையும் பெற யாம் ஆத்மீகத் தில் தவறாது ஈடுபட்டாக வேண்டும். இப்போது என்ன அவசரம் வயது வரப்பார்ப்போமே என்று அலட்சியமாக இருந்து விடக் கூடாது. எல்லாம் விதிப்படி நடந்தேறும் தானே என நாம் வாளாவிருக்கக் கூடாது. விதி என்பது விதிக்கப் பெறுவது ஆகும். அப்படி ஆயின் இது யாரால் யாருக்காக எப்போது எதற்காக விதிக்கப் பெறுகிறது? என்ற வினா நிச்சயம் எம்மி டையே எழலாம். சுருங்கக்கூறின், விதி என்பது யாம் முற் பிறவியில் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப இப்பிறப்பில் அனுபவிக்கும் பொருட்டு ஈசன் வகுக்கும் வாழ்க்கை நியதி என்று கூறலாம். இது இந்து மதக் கொள்கையும் ஆகும். இ.்.து இறைவனது விருப்பு வெறுப்புக் கேற்ப விதிக்கப் படுவதல்ல. எமது பாவ புண்ணிய, பலன்கள் தாமாக இயங்கி உரியவரைச் சென்றடைய மாட்டா. அவற்றை உரியவர் களிடம் உரிய காலத்தில் உரிய முறைப்படி சேர்த்து வைப்பவனே இறைவன். இதுவே விதியின் தன்மை.

எனவே எமது முன்ஜென்மச் செயற்பாடுகளின் பிரதி பலன்களே இப்போது எமக்கு கிடைத்திருக்கும் வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குலம், கோத்திரம், தோற்றம், வசீகரம், அழகு, பெற்றோர், உடன்பிறப்புக்கள், கல்வி, செல்வம், தாரம், புத்திரபாக்கியம், தொழில், நிம்மதியான வாழ்க்கை, யாவுமே யாம் கடந்த ஜென்மங்களில் செய்த செயற்பாடுகளின் படியே எம்மை வந்தடைகின்றன. எமது விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப இவற்றை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. கருணைக்கடலும் நீதவானுமாகிய ஈசன் பாரபட்சமின்றி எம் பழைய வினைகட் கேற்ப இப்பிறப்பில் எமக்கு வாழ்வைத் தந்துள்ளார். எனவே இந்த உண்மையை மனதில் கொண்டு யாம் இப்பிறப்பில் ஆராய்ந்து நிதானமாக நல்லவற்றை எண்ணவும், பேசவும், ஆற்றவும் முயன்றாக வேண்டும்.

எமது வாழ்க்கையின் இரு பக்கங்கள் ஆவன, ஆன்மீகம், லௌகீகம் என்பனவாம். இல்லற மல்லது நல்லறமன்று என வகுத்த முன்னோர்கள் தான் எமது ஆன்மீக செயற்பாடு களையும் வலியுறுத்தியுள்ளனர். எமது இல்லற வாழ்க்கை யைத் தளமாக வைத்தே எமது ஆன்மீகப் பங்கினை யாம் ஆற்ற முடியும், ஆற்றி ஆக வேண்டும்.

இதனை இவன் இவ்வாறு செய்தாக வேண்டும். நுகர்ந்தாக வேண்டும். என எல்லாம் வல்ல ஈசன் வகுத்துள்ளான். எனக் கூறுகின்றது வள்ளுவம்.

இளமைத் துடிப்பும், இளமை வசதியும் கொண்ட சிலர் விதியை மதிப்பதில்லை. விதியை நம்புவதாக இல்லை. பணமும், பலமும் இருப்பின் எதையுமே சாதித்து விடலாம் என எண்ணுகிறார்கள். ஆனால் சான்றோர்கள் அருளாளர்கள் விதியை, விதியின் செயற் பாட்டை விதியின் வலிமையை ஏற்கத்தான் செய்கின்றார்கள். ஆனால் விதியை சாடுபவர் களும், விவாதிப்பவர்களும் தாம், விதியின் கரங்களில் அவஸ் தைப்படும் போது தான் விதியின் பலத்தை, தன்மையை, இயல்பை, விளங்கிக் கொள்கிறார்கள்.

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும்.**

விதியின் வேகமும் செயற்பாடும் அத்தகையது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மறு ஜென்மத்திற்கு நல்ல விதி சமைக்க, நாம் இப்போதே செயற்படுவோம். செய்வோமா?

**வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.**

## 14. பொறுமை என்னும் அணி

**பொ**றுமை என்னும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள் என்கின்றது ஒரு வாசகம். ஏன் பெண்களுக்கு மட்டும் தான் பொறுமை வேண்டுமா? ஆண் பாலாருக்கு வேண்டாமா? ஆண்களுக்கும் பொறுமை அவசியம் தானே? ஆண்களிடமும் மிகப் பெரிய பொறுமை இருக்குமேயானால், பின்னர் பெண்கள் காட்டிலே மழை தான். சந்தேகமேயில்லை.

பொறுமை நற்பண்புகளுக்கெல்லாம் சிகரம் போன்றது. மணிமுடிபோன்றது. பொறுமையால் எத்தனை எத்தனை சாதனைகளைப் படைத்துள்ளனர் எமது முன்னோர்கள். அதே நேரம் பொறுமையை இழந்ததால் எத்தனை சாம்ராஜ்யங்களை இழந்துள்ளனர் சில வல்லவர்கள். எனவே எச்சந்தர்ப்பத்திலும் பொறுமையை இழக்கக் கூடாது. இ∴து எமக்கு வேண்டியதோர் உயர் பண்பாகும். அது என்றும் எவர்க்கும் மிகுந்த நன்மையையே தந்துள்ளது.

உயர் குணங்களுள் நற்பண்புகளுள் தேவசம்பத்துக்களுள் மிகச் சிறந்தது பொறுமை. பொறுமை இல்லையேல் வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது. நூற்றுக்கணக்கான தர்மங்களை விட ஆயிரக்கணக்கான யாகங்களை விட பொறுமை சிறந்தது, உயர்ந்தது.

பொறுமையை அவ்வப்போது கடைப்பிடித்துத்தான் ஆக வேண்டும்.

குட்டிக் குரங்கொன்று தோட்டம் செய்ததாம். விதை விதைத்து வெகு நாளாகியும் விதைகள் முளைக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரங்குக்குக் கவலை வந்து விட்டது. தனது அப்பாக் குரங்கிடம் போய் இது பற்றி முறையிட்டது. அப்பாக்குரங்கு சொன்னது, நீ போதிய அளவு நீர் ஊற்றியிருக்க மாட்டாய் அது தான் விதைகள் முளைக்காமல் போய்விட்டன. இது அப்பாக் குரங்கு சொன்ன காரணம்.

குட்டிக் குரங்குக்குக் கோபம் வந்து விட்டது. ஒரு விதைக்குப் 10 வாளி வீதம் நீர் தினமும் ஊற்றிவருகிறேன் விதை தான் முளைக்கவில்லை, கத்தியது குட்டிக்குரங்கு.

ஐயையோ! நீ அளவுக்கு மீறி நீர் ஊற்றி விட்டாய்! விதைகள் அழுகிப் போய் விட்டனபோலும் என்றது அப்பாக் குரங்கு. இல்லை! இல்லை! விதைகள் அழுகவில்லை. நான் அடித்துச் சொல்லுவேன். இது குட்டிக் குரங்கின் பதில். அது எப்படி உனக்குத் தெரியும்? கேட்டது அப்பாக் குரங்கு. குட்டிக் குரங்கு சொன்னது, "நான் தான் தினமும் மண்ணைக் கிண்டி விதைகள் முளைத்துள்ளனவா என்று பார்க்கிறேனே அப்போது தெரியும் தானே எனக்கு" என்றது குட்டிக்குரங்கு. எப்படி இருக்கின்றது?

எனவே பொறுமை எமக்கு அவசியம் வேண்டும். எதற்கும் காலம் வரும் வரை பொறுத்திருக்க வேண்டும். ஆனால் முயற்சியைக் கைவிடக்கூடாது.

விதிவிலக்குகளும் உண்டு. பொறுமை கூடிவிட்டால் ஆசிரியரால் மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. பெற்றோர்க்கு வீட்டில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாது. குழந்தைகள் அளவுக்கு மிஞ்சிப்போய் "அப்பாவுக்கு ரோஷம் மானம் இல்லை கோபமே அவருக்கு வராது. சுத்த எருமை மாடு போல" என்றே சொல்லி விடுவார்கள்.

பொறுமையிழந்து கோபித்து விட்டாலோ "அதுக்கு பிளட் பிரஷ்ஷர். அதுதான் தாம்தோம் என்று குதிக்கின்றது" என்பார்கள்.

அப்போ என்ன தான் செய்வது! சினம் பொறுமைக்கு எதிரி. கோபம் வந்து விட்டால் "நான் மனுஷனாய் இருக்க மாட்டேன்" என்று பலர் சொல்வதை கேட்டிருக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தீர்களா? உண்மையைத் தாமே ஒப்புக்கொள்கிறார்கள். இவர்கள் கோபம் வந்து விட்டால் நாம் மனுஷரேயல்ல. மிருகமே தான். எனவே விஷப்பரீட்சை வேண்டவே வேண்டாம். பொறுமையைக் கடைப்பிடிப்போம். வாழ்வில் சாதனைகள் புரிவோம். தோல்வியைத் தோற்கடிப்போம்.

## 15. மனிதப் பண்புகளும் மதமும்

எமது ஆசைக்குக் காரணம் என்ன? தம்மைத் தவிர இன்னொன்று இருப்பதாக எண்ணுவதால் தான் அதனிடம் ஆசை வருகிறது.

ஆனால் சிவம் ஒன்றே எல்லாமாக உள்ளது என்று எமது சமயம் கூறுகின்றது. அவன் அன்றி வேறொன்றும் இல்லை. அதனை புரிந்து கொண்டால் பிரச்சினைகள் எழ இடமில்லை.

ஒரு மாடு கண்ணாடியில் தன்னைப் பார்த்து விட்டு தனக்கு முன் இன்னுமொரு மாடு இருக்கிறது என்றெண்ணி முட்ட வருகிறது.

மனிதனும் கண்ணாடியில் தனது பிரதிபிம்பத்தைப் பார்க் கின்றான். ஆனால் அங்கு இன்னுமொரு மனிதன் இருக்கின் றான் என்றெண்ணுகின்றானா? இல்லையே இரண்டும் ஒன்று தான் என்று சாந்தமாக இருக்கின்றான்.

இவ்வண்ணம் நாம் பார்க்கும் போது அனைத்துமே ஒன்று தான். இரண்டாவது பொருள் ஒன்று உண்டு எனப்பார்க்கும் போது தான் எமக்கு ஆசை வருகின்றது. கோபம் வருகின்றது. கோபம் வரும்போது பாவங்களை நாம் செய்ய வேண்டி வருகின்றது.

அதனை விட்டு எல்லாமே ஒன்றுதான் என்ற ஞானம் வந்து விட்டால் வேறு ஒரு பொருள் இல்லை என்ற முடிவுக்கு நாம் வருகின்றோம். அதனால் ஒன்றைத்தேடி அலையும் சிரமம் எமக்கு இல்லை. ஆசை எம்முள் எழாது. கோபம் உண்டாக வாய்ப்பும் இல்லை. பாவம் செய்யவும் வாய்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. காரியம் இல்லை, ஜனனம் இல்லை, துன்பமும் இல்லை. எப்படி?

இந்த ஞானத்தை எப்படி நாம் பெறுவது! எப்படியும் பெற்றுத்தான் ஆக வேண்டும். சிறிது சிறிதாக நம்மை பெற்ற அன்னை எம் உடல் வளரப் பால் தருகின்றாள். அதே போன்றுதான் அறிவு என்னும் ஞானப்பாலை அம்பாள் தான் எமக்கு ஊட்ட வேண்டும்.

இதற்கு நாம் அவள் பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அவளது சொரூபத்தை எம்மனதிலே பதிக்க வேண்டும். அவள் பற்றிய சிந்தனைகளை எம்முள்ளே சர்வமும் கரைக்க வேண்டும். அப்போது எமக்கு ஞானம் வரும். அப்போது தான் மனிதனும் தெய்வம் ஆகின்றான்.

மனிதன் தெய்வமாகுமுன் அவன் தன்னை மனிதன் ஆக்கியாக வேண்டும். ஏன் தெரியுமா?

சிலமனிதர்கள் வடிவத்திலே மனிதராக இருந்தாலும் சொல் லிலும் சிந்தனையிலும் செயலிலும் மிருகங்களாகவே இருக்கின்றார்கள். இவர்களையே முதலில் மனிதராக்க வேண்டும்.

இவர்களது சிந்தனையில் சொல்லில் செயலில் பண்பை வளர்த்தாக வேண்டும். மற்றோரையும் இவர்கள் மதிக்கப் பழக்கியாக வேண்டும். பணிவை அவர்கள் மனதில் வளர்த் தாக வேண்டும். "நான் பெரியவன்" என்ற இவர்களது அறியா மையை அகந்தையை உடனடியாக அகற்றியாக வேண்டும்.

சிலர் இருக்கின்றார்கள் எம்மை எல்லோரும் மதிக்க வேண்டும், பாராட்ட வேண்டும் ஆனால் நாம் மாத்திரம் மற்றவரை மதியாது "ஏனோ தானோ" என்றிருந்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். இது அவர்களுக்கு சாத்தியமா? மரியாதை என்பது கொடுத்துப் பெற வேண்டியதோர் பண்பு. நாம் மாத்திரம் மதிக்கப்பட வேண்டும். மற்றவரை நாம் மதிக்க வேண்டிய அவசியமில்லை என்றிருப்பது மிகமிகத் தவறு. இவர்களிடம் தெய்வ அனுக்கிரகம் சிறிதும் இல்லை என்றே கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இத்தகையவர்கள் எல்லாம் முதலில் மனிதனுக்கு அவசியம் இருக்க வேண்டிய மனிதப்பண்புகளைப் பெற்ற பின்பே தெய்வமாகலாம். மனிதன் மனிதனாகி விட்ட பின்னரே தெய்வமாக முடியும். தெய்வமாவதென்றால் அசல் தெய்வ மாவதல்ல. தெய்வம் என மற்றவர் போற்றுமளவுக்கு உயர் நிலையை, நல்ல நடத்தைகளை அவன் பெறவேண்டும். செய்தாக வேண்டும்.

மனிதப்பிறவி எடுத்ததன் பயன் அன்பு செலுத்தி ஆனந்தமாக வாழுதல், தருமம் செய்து ஈற்றில் இறை பதம் அடைதல். எங்கு அன்பு இருக்கின்றதோ அங்கு ஆனந்தம் இருக்கின்றது. தெய்வீகம் இருக்கின்றது. ஈர்ப்பு இருக்கின்றது. அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பால் சாதித்து விடலாம். அன்பு செலுத்தும் போது துன்பமே தெரிவதில்லை. பகிரும் போது அன்பு பெருகும் துன்பம் குறையும். எனவே, எத்தனை கஷ்டங்கள் நேர்ந்த போதும் சினத்தை அடக்கி நிதானத்தைக் கடைப்பிடித்து அன்பு செலுத்துங்கள். வெற்றி உங்களதே. இதற்கு சமய வழிபாடு துணை நிற்கும்.

**அறியாமலா சொன்னார்கள்?**
**அன்பே சிவம் என்று!**

## 16. சத்தியம்

**உ**ண்மையைச் சொன்னால் உடம்பெல்லாம் எரிச்சல் என்பார், உண்மையா! அது சிலருக்கு கசக்கும் என்பர் ஒரு சிலர். ஆனால், நாம் உண்மையையே எமது உயிர் நிலையாகக் கொண்டு வாழவேண்டும். அது எம்மை வாழ வைக்கும் உயர் நெறியாகும் என்று கூறினர் எமது கற்றறிந்த முன்னோர்கள். அப்படியானால் உண்மை என்றால் என்ன என நோக்கின் உள்ளதை உள்ளவாறு கூறுதல் உண்மை ஆகும். எனின் அது ஏன் கசக்க வேண்டும்? சொல்கிறேன் உண்மையின் நிலைகள் இரண்டு. உள்ளதை உள்ளவாறு சொல்லுமிடத்து, நாம் செய்யும் நற்காரியங்களை ஒருவர் சுட்டிக் கூறும் போது அது எமக்கும் கசப்பதில்லை. பதிலாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிக்கிறது. அதே நேரம் நாம் செய்யும் நியாயத்திற்கு ஒவ்வாத காரியங்கள், தவறுகளை மற்றவர் உள்ளபடி சுட்டிக்காட்டுமிடத்து, அது எம்மால் விரும்பப்படுவதில்லை. இங்கே தான் உண்மை கசக்கிறது. எனவே தவறு எங்கே இருக்கின்றது என்று நோக்குவோமா? தவறு உண்மையிலும் இல்லை, தவறுகளை உள்ளபடி சுட்டிக்காட்டுபவர்களிடமும் இல்லை. தவறுகளைச் செய்யும் எம்மிடமே தான் உள்ளது.

எனவே, உண்மையை யாம் இனிக்க சுவைக்க வேண்டு மானால் நாம் நல்லவற்றை பேசவேண்டும், சிந்திக்க வேண்டும். நல்லவற்றைச் செய்ய வேண்டும். நாம் மாத்தி ரமல்ல நம்மைச் சார்ந்தவர்களும் கூட நல்லதை நாடி ஒழுக வேண்டும். அப்போது தான் உண்மை எல்லோராலும் வரவேற்கப்படும்.

எந்நேரமும் எச்சந்தர்ப்பத்திலும் உண்மையைக் கடைப் பிடித்தல் மிகக் கடினமான காரியம் தான். இது உண்மையே ஆனால், அதற்காக நாம் உண்மை பேசாமல் இருக்க லாமா? இல்லவே இல்லை! உண்மையின் மறு பெயர் வாய்மை, சத்தியம். சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தவன் அரிச்சந்திர மன்னன். உண்மையினின்றும் வழுவாத அம் மன்னன் பட்ட அவஸ்தைகள் இன்னல்கள் கொஞ்சநஞ்சமா? மன்னனைக் கொண்டு ஒரு பொய்யைத் தன்னும் பேச வைக்க விசுவாமித்ர முனி பட்டபாடு கொஞ்சமா? ஆனால்! கடைசி வரை மன்னன் சத்தியம் தவறவில்லை நாடிழந்து, நகரிழந்து, அரச பதவி துறந்து, மனை இழந்து, மனைவியை விலை பேசி, அருமைப் பாலனை இழந்து, ஈற்றில் மனைவியைத் தானே கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதும் அரிச்சந்திரன் சத்தியம் தவறவில்லை. தன்னுடன் சவால் விட்ட உண்மையை வென்று தனதாக்கிக் கொண்டான் மன்னன். அவன் தேவி சந்திரமதி வாக்கின் அர்த்தத்தைப் பாருங்கள்.

**பதி இழந்தனம், பாலனை இழந்தனம்**
**படைத்த நிதி இழந்தனம்**
**கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சந்திரன் தன் வாழ்வில் காப்பாற்றி வந்த, போற்றி வந்த, கடைப்பிடித்து வந்த உண்மை, சத்தியம், ஈற்றில் அவனைக் காப்பாற்றியது. தக்க தருணத்தில் அவன் போற்றிக் காத்த சத்தியம் அவனுக்குக் கை கொடுத்தது. தேவர்களும், முனிவர்களும், மன்னர்களும், ஏன் உலகம் முழுவதுமே அவனது வாய்மையைப் பாராட்டியது.

அவன் வளர்த்த உண்மை அவனை நற்பண்பாளனாக்கி வாழவைத்தது. இன்றும் உண்மைக்கு சத்தியத்துக்கு அரிச்சந்திரன் என்ற பெயர் நிலைத்து நிற்கிறது.

உண்மையைச் சிறிதும் வழுவாது கடைப்பிடிக்கும் பாதையில் நாம் கடுமையான சோதனைகளைச் சந்திக்க நேரிடும். அதற்கு உதாரணமாக அமைகின்றது அரிச்சந்திர னது வரலாறு. கடும் சோதனைகளையும் சமாளிக்க நாம் சிறிது சிறிதாக முயன்றால் உண்மையைக் கடைப்பிடித்தல் எமக்கு எளிதாகிவிடும்.

உண்மை பேசுபவரிடம் சுயநலம் இருக்காது. உண்மை, தூய்மை, சுயநலம் இன்மை, எங்கெல்லாம் காணப்படு கின்றதோ அங்கெல்லாம் அசாதாரண ஆற்றல் தென்படும். பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் உண்மை பேசுபவனை எதிர்த்து நிற்க முடியாது. ஒருவனுடைய வாழ்வின் உயர் நிலைக்கு அவன் பேசும் உண்மை, கடைப் பிடிக்கும் சத்தியநெறி அளவுகோலாக, உரைகல்லாக அமைகிறது. மரணம் வருவது உறுதியாக இருக்கும் போது நல்ல ஒரு காரியத்துக்காக உண்மை பேசி, உண்மையாக வாழ்ந்து நடந்து உயிரை விடுவது மேல் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

அந்த மட்டத்திற்குத் தன்னும் எம்மால் முயற்சிக்க முடியா விட்டாலும், நாம் எமது அன்றாட வாழ்வில் பேசும் உண்மை களைக் கடைப்பிடித்தல் நலம், பொய்யை மறத்தல் நலம் செய்வோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# 17. மூன்றாம் பிறை

சைவர்களாகிய நாம் மாதம் தோறும் ஆவலோடு தேடித் தரிசிக்கும் மூன்றாம் பிறை பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

மூன்றாம் பிறை. இந்த மிகத் துல்லியமான, அழகான, ஒளிக்கீற்றாக ஒளிரும். மூன்றாம் பிறையானது தெய்வீகமா னது என்பது எமது அசையாத நம்பிக்கை. இதனால் தான் 16 கலைகளாக சுந்தரவானில் வளர்ந்து வரும் மூன்றாம் பிறைக்கு நாம் ஆத்மீக முக்கியத்துவம் கொடுத்து வரு கின்றோம்.

மூன்றாம் பிறையை நாம் தேடி வானிலே கண்டு விட்டோ மேயானால், எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. கோடி புண்ணியம் கிடைத்தது போன்ற ஒரு உணர்வு. எம்பெருமான் சடா முடியிலே இந்த ஒளிக்கீற்று அமர்ந்திருப்பதாக எமக்கு அசையாத நம்பிக்கை. நீல வானிலே துல்லியமாக அழகாக ஒளிரும் ஒளிக்கீற்றாக, ஒரு சில கால அளவு நேரங்கள் மாத்திரம் தான் இது எமக்குத் தோன்றும். இந்த மூன்றாம் பிறையை 16 கலைகளுள் சிறந்ததாக, ஆத்மீக முக்கியத்து வம் வாய்ந்ததாக நாம் காலங்காலமாகப் நேசித்து போற்றி வருகின்றோம்.

அதிகமாக கோடை காலத்தில் தான் மேக மூட்டங்கள் குறைவான வானிலே நாம் இப்பிறையை காண முடியும்.

கார்த்திகை மார்கழி மாதங்களிலே மழை மேகங்கள் வானில் நிரம்பியிருப்பதால் இம்மாதங்களில் நாம் எத்துணை முயன்றாலும் இப் பிறையைத் தரிசித்து விட முடியாது. இதன் காரணமாகத் தான் எவரையாவது நீண்ட காலத்தின் பின்னர் அரிதாகச் சந்தித்து விட்டோமேயானால் உங்களைச் சந்தித்தது கார்த்திகைப் பிறை கண்டது போலிருக்கின்றது என்று உவமித்துக் கூறுகின்றோம்.

வானில் மிகக் குறைந்த கால அளவில் காணப்படும் இந்த மூன்றாம் பிறைத் தரிசனம் உண்மையில் தெய்வீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வாய்ந்த இறை தரிசனமாகத் கருதப்படுகின்றது. ஈஸ்வரனே தனது திருக்கரங்களால் தன் சிரசில் சூடியது இந்த மூன்றாம் பிறையை, என்கிறது புராண வரலாறு.

இத்தகைய மூன்றாம் பிறையின் பின்னணியில் உள்ள ஒரு கதையை இப்போது உங்கட்கு சொல்கின்றேன். தக்கனது 27 பெண்களையும் மணந்தவர் சந்திர பகவான். ஆனால் சந்தர்ப்ப வசத்தால் தட்சனது சாபத்துக்கு ஆளாகி தனது 16 கலைகளையும் இழந்தபோது சந்திரபகவான் அவற்றை மீண்டும் பெற இறைவனை நோக்கித் தவம் செய்யலானார். அவரது உருகும் தேகநிலையைக் கண்டு அவரது 27 மனைவியரும் தமது தந்தையாகிய தக்கனிடம் சென்று சந்திரனுக்கு இட்ட சாபத்தை திரும்பப் பெறுமாறு வற்புறுத்தினர். ஆனால் தட்சனோ அறியாமையினால் சந்திரனுக்கு யான் இட்ட சாபத்தால் எனது தபோபலமும் புண்ணியமும் வலுவிழந்து விட்டன. எனவே கொடுத்த சாபத்தை திரும்பப் பெறும் வல்லமை என்னிடம் இல்லை என்று உண்மையைக் கூறிவிட்டான்.

இதனால் குழப்பமடைந்த சந்திரனது தேவியர் சூரிய மண்டலத்தில் அமர்ந்து எம்பெருமானை நோக்கிக் கடும் தவம் புரிந்தனர். அவர்களது தவத்தால் மகிழ்ந்த சிவனார் "உங்கட்கு யாது வரம் வேண்டும்" எனத் திருவாய் மலர்ந் தருள அவர்கள் தாம் உத்தமமான தெய்வீக நிலையை அடைய அருளல் வேண்டும், என வேண்டிக் கொண்டனர். இறைவனும் அவ்வாறே வரம் அருளி வானில் சுடர் விடும் 27 நட்சத்திரங்களாக அவர்களைப் பிரகாசிக்க வைத்தார்.

இந்நேரத்தில் சந்திரபகவான் ஆற்றிய தவமும் கனியவே அவருக்கு இறைதரிசனம் கிடைத்தது. ஆனால் தனது தேவியரை ஸ்தூல உருவத்தில் காண முடியாமைக்கு வருந்தவே அவருக்காக இரங்கிய இறைவன் 27 நட்சத்திர தேவியருக்கும் மீண்டும் அவர்களது முன்னைய உருவை வழங்கியருள சந்திர பகவானும் மனம் களிப்புற்று மீண்டும் தம் தேவியருடன் சேர்ந்து தவமியற்றி சிவனாரின் சிரசில் மூன்றாம் பிறையாக அமரும் பேற்றினைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் 16 கலைகளையும் இழந்த சந்திரன் மாதத்தில் 15 நாட்கள் கலைகள் வளர்வதாகவும் அடுத்த 15 நாட்களில் கலைகள் தேய்வதற்குமான மாறுபட்ட வரத்தையும் பெற்றுக் கொண்டார். எப்படிப் பார்க்கினும் எம்பெருமானின் சிரசிலே அமரும் பாக்கியம் சந்திரபகவானுக்குக் கிடைத்ததென்றால் அதுவே பெரும் பாக்கியம்.

எனவே மாதம் ஒரு நாள் தானே; என்னதான் வேலைகள் இருந்தாலும் 3ம் பிறையைத் தேடித் தரிசிக்க மறந்து விடாதீர்கள். முயன்று பாருங்கள். பூமியிலுள்ளவர்கள் மூன்றாம் பிறையைத் தரிசித்தால் குடும்ப ஒற்றுமை, மனச்சாந்தி, தேகாரோக்கியம், தீர்க்கமான கண்பார்வை ஆகியன கிடைக்குமெனக் கூறப்பட்டுள்ளது. முயல்வோமா? ●

## 18. மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!

மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்ற அப்பர் சுவாமிகளது பாடலடியை இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

எம்பெருமான் திருவடி காணப்பெறின் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே எனப் பாடியுள்ளார் அப்பர் சுவாமிகள். சமய குரவர்களுள் அதிக ஆண்டுகள். அதாவது 81 வயது வரை வாழ்ந்து இறைபதம் அடைந்தவர் அப்பர் சுவாமிகள். முதுமை வருத்தினும் இறை தரிசனம் கிடைக்குமெனின் அது வரவேற்கத்தக்கது. பிறவிகள் பல எடுக்க நேரிடினும் தூக்கிய திருவடியுடையோனின் திவ்விய தரிசனம் கிடைக்குமெனின் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்பது அப்பரின் அனுபவ வாக்கு.

மனிதனுடைய வாழ்வை அவதானித்துப் பார்த்தால் அதனை எப்படியோ வாழ்ந்து விடலாம் என்றிருத்தல் வாழ்க்கை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நல்லதோர் குறிக்கோ ளோடு வாழ வேண்டியதே மனித வாழ்க்கை.

உயிர் பக்குவமடைய, உயிர் உய்வதற்கான வாய்ப் பினையே மனித வாழ்வில் நாம் எதிர்பார்க்க வேண்டும்.

ஆசையிலே அழுந்தி அல்லல் உற்று இன்னல்களால் இடிந்து உண்பதுவும், உறங்குவதுமாய் முடிந்து விடக்கூடாது எமது வாழ்க்கை.

அல்லற்பிறவி அறுத்து பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதற்குத்தான் மனித்தப் பிறவியே தவிர பொருளல்லாதவற்றைப் பொருள் என்று கொள்ளும் மருளால் மருட்சியால் பிறவிப் பெருங்கடலில் அழுந்தி வருந்துவ தற்கல்ல மனித வாழ்க்கை. மனிதனின் குறிக்கோள் தீராத வகையிலே மாறாத கவலைக்கு இடம் கொடுத்து மயங்கு வதற்கன்று.எமது வாழ்க்கை.

**நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு**

என்கிறது குறள்.

இந்த அழகிலே, அதாவது நேற்று வாழ்ந்தவன் இன்று இல்லை என்ற நிலையற்ற வாழ்க்கையிலே நாம் வாழக் கிடைத்த நாட்களிலே வாழாவிருக்கலாமா? மண்ணிலே பிறந்த ஒவ்வொருவனும் மடிந்து தான் ஆகவேண்டும். இது உலக நியதி. எனவே எவ்வளவு காலம் வாழ்ந்தான் இம்மண் ணிலே என்பதை நோக்காது, எப்படி வாழ்ந்தான் என்பதைத் தான் நாம் கருத்தில் கொண்டாக வேண்டும். பசிப்பதுவும், புசிப்பதுவும் தான் மனித வாழ்க்கை என்றில்லாமல் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரை சேரும் வழியை தேடுவதிலும் நாம் வாழ்நாளில் ஒரு பகுதியைச் செலவழித் தாக வேண்டும் என்பதை மனதில் அவசியம் கொண்டு நாம் வாழ்ந்தாக வேண்டும்.

பிறவியைப் பெருந்துன்பம் என்று கருதுபவருக்காகத்தான் அப்பர் சுவாமிகள் பின்வருமாறு பாடித்தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

இ∴து அப்பர் சுவாமிகள் கூறுவது.

எனவே மனிதப் பிறவியின் மகத்துவம், மனம், மொழி, மெய்யால் தனக்கு உவமை இல்லாதானை நினைத்துருகி மனக்கவலையை மாற்றியமைக்க வழிதேடுவதிலேயே தங்கி உள்ளது.

மனித வாழ்வின் மாண்பெல்லாம் விலங்குகள், பறவைகள் போலல்லாது தனி ஒரு முதல்வனை நாடி நிலையற்ற பிறவித் துயரை நீக்குவதில் முனைவதாம்.

**"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது..........."**
**"நாதன் நாமம் நமச்சிவாயவே"**

என்னும் பெரும் உண்மையை நாம் நன்கு புரிந்து கொண்டு இறையைச் சிந்தித்து, வந்தித்து அவன் தாளை இறுகப்பற்றிக் கொண்டாக வேண்டும்.

இறைவனால் இப்பூமியில் இன்பம் பல தரப்பட்ட போதும் அவை நிலையானவை அல்ல என்பதை யாம் அறிவோம். எனவே அவற்றை யாம் தகுந்த வழிகளில் பயன்படுத்தி நிலையான பேரின்பம் பெற முயன்றாக வேண்டும். இறைவனாலே இயங்குகின்ற உலகம் இன்பம் அற்றது என்று எவராலும் சொல்லி விடவும் முடியாது. ஆனால் இது அழிவற்ற இன்பம் என்றும் சொல்லிவிட முடியாது. அதனாலே தான், வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி உடலாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டும் குமிண் சிரிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமானை, நினைந்துருகி நெஞ்சம் பெறும் இன்பமிருக் கிறதே அது ஒன்றுமட்டும் தான் எல்லையற்ற இன்பம் இணை யற்ற இன்பம், அழிவற்ற இன்பம் என்பதை அறிவோம். இதனாலே தான் அதனைப் "பேரின்பம்" என்றழைக்கின்றோம்.

மணம் வீசும் அழகான மலர்வனம் தேனீயைக் கூவாமல் அழைக்கின்றது. அத்தும்பிக்கு கூறுவது போல் மணிவாசகர் "அற்ப இன்பங்களை நாடாமல் பேரின்பத்தை நாடு" என எமக்காகப் பாடியுள்ளதைப் பாருங்கள்.

**தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் என்றென்றும் அனைத்து எலும்பு உள் நெகு ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.**

## 19. புண்படா உடலும் புரைபடா மனமும்

அமைதி நிறைந்த இடமே பண்பாட்டுக்குரிய சிறந்த இடமாகும். இறையை வழிபடும் போது எமது மனம் கோயி லாகின்றது. சிந்தனையும் தூய்மை அடைகின்றது. சிந்தனை தூய்மை அடையும் போது நாம் நல்லவற்றை சிந்திப்போம். நல்லவற்றையே செய்ய முற்படுவோம். தீய வினைக ளிலிருந்து தப்பித்துக் கொள்வோம்.

இன்றைய உலகத்திலே நாம் மனதால், உடலால், வாக்கால் பாவங்கள் செய்யச் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. இவை இழி செயல்களாம். இவற்றைச் செய்வோர் இழிந்தோர் ஆவர். இத்தகைய மக்களை நம்பினால், பின்பற்றினால் இம்மைக்கோ மறுமைக்கோ யாதொரு பயனும் கிடையாது.

இதனால் தான் வள்ளல் பெருமான் "உண்பவனே எனினும் உடுப்பவனே எனினும் உலகோரை நம்பேன்" எனக்கூறி வைத்தார்.

அப்பர் சுவாமிகள் என்றழைக்கப்படும் நாவுக்கரசர் என்ன கூறியுள்ளார் என்று பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனதை ஆடவல்லான் நடமாடும் மன்றமாக்கினால், எல்லோரும் நல்லவர்களாக மாறும் வாய்ப்பு ஏற்படுகிறது, என்கிறார் அப்பர் சுவாமிகள் எனப்படும் வாகீசர்.

தெய்வத்தை அடைதற்பொருட்டே மனிதன் பிறக்கின்றான். பின் வாழ்கின்றான், மடிகின்றான். தெய்வத்தை அடையும் பரியந்தம் மனிதன் பிறப்பதும், வாழ்வதும், மடிவதும் சக்கரம் சுழல்வது போல் மாறிமாறி வந்து கொண்டிருக்கும்.

கடலை அடையும் வரை நதியானது ஓடிக்கொண்டிருக்கிறது, கடலை அடைந்ததும் நதியின் ஓட்டம் நின்றுவிடுகின்றது. அதேபோலத் தான் தெய்வத்தை அடையும் வரை மனிதன் பிறந்து கொண்டேயிருப்பான், வாழ்வான், மடிவான்.

தெய்வத்தை அடைந்ததும் மனிதனுடைய பிறப்பு முடிவை அடைகிறது. இந்தவகையில் மண்ணுலகில் பிறந்த மனிதன் அவன் எந்த இயல்பினை உடையவன் ஆயினும் தெய்வீக இயல்பினை அடைதலே நோக்கமாகின்றது. அவ்வியல்பினைப் பெற்றதும் அவன் தன்னைத் தெய்வத்தோடு ஒன்றுபடுத்துதலே இலட்சியமாக அமைகிறது.

புண்படா உடம்பும், புரைபடா மனமும் பொய்படா ஒழுக்கமும் பொருந்தி, கண் உறங்காது இரவும் பகலும் இறைவனை எண்ணிப் போற்றினால் எமது மனம் தூய்மை பெறும்.

இதற்காகவே, இவ்வுயர் நிலையை நாமும் எய்தவே எமக்குப் பிரார்த்தனை அவசியமாகின்றது. பிரார்த்தனை மனதை புனிதமாக்குகின்றது.

மகாத்மா காந்தி ஒரு இந்துவாதலால் பிரார்த்தனையில் ஈடுபட்டது அதிகம். அவர் தனது அனுபவத்தை பின்வருமாறு கூறுகின்றார்.

"பிரார்த்தனையே என் வாழ்வை வளமாக்கி வருகிறது" அது இல்லாவிட்டால் வெகு நாட்களுக்கு முன்பே எனக்கு பைத்தியம் பிடித்திருக்கும் "

எனக்கு ஏற்பட்ட மனக் கலக்கங்களும், வேறு பல துன்பங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் நீங்க ஒப்பற்ற சாதனமாக இருந்தது பிரார்த்த னையே. முன்பு கடவுளிடத்திலும் பிரார்த்தனையிலும் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. பின்னர் உடல் வளர்க்க உணவு எங்ஙனம் இன்றியமையாததோ அது போலவே உயிரை வளர்க்க பிரார்த்தனை மிக இன்றியமையாதது, என்னும் உண்மையை உணர்ந்து கொண்டேன்.

"அன்று முதல் நான் பிரார்த்தனை செய்யத் தவறுவதில்லை"

இது மகாத்மா காந்தியின் மணிவாக்கு.

எமது மனதில் வீற்றிருக்கும் இறைவனை மறைக்க வல்ல மாயைத் திரையை அகற்ற அவசியமாகின்றது பிரார்த்தனை. தனித்திருந்து விழித்திருந்து மனதை ஒருவழிப்படுத்திப் பிரார்த்தனை செய்தால் உண்மை ஒளி பெறலாம்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒளியின் சுடரில் சக்தியின் தரிசனத்தைக் கண்டவர். காளிதேவி தரிசனம் எனக்குக் கிடைக்காவிட்டால் என்னையே நான் மாய்த்துக் கொள்வேன் என்று கூறி ஒரு சமயம் தன்னை மாய்த்து கொள்ள கை வாளை எடுத்தார். உடனே சக்தி சைத்தன்யம் அவருள் பாய்ந்தது. பின்னர் வாளுக்கு ஏது வேலை?

ஜன்மத்தின் பலனே ஜன்மநிவிருத்திதான். ஜன்ம நிவிருத்திக்காகவே, மனித ஜன்மம் எமக்குக் கிடைத்திருக் கிறது. ஜன்மம் நிவிருத்தியடைய வேண்டுமானால் நாம் பாவம் செய்யக் கூடாது. பாவம் செய்யாதிருக்கக் கோபம் தவிர்க்கப்படல் வேண்டும். கோபம் போக்க உண்மை ஞானம் கிடைக்க வேண்டும். உண்மை ஞானமும் தெளிந்த அறிவும் கிடைக்க பிரார்த்தனை வழிகோலுகின்றது.

அடுத்து, பரம்பொருளைக்கண்டு அறிய, அன்பும் ஒரு சாதனமாக அமைகின்றது. அன்புக்கு அழிவு இல்லை. அழியாத ஒரு பொருளிடம் அன்புவைத்தால் பிரச்சினையே இல்லை. சுவாமி எப்பொழுதும் எம்மிடம், எம்மோடு இருக்கிறார். எமக்கு எதிலும் வெற்றி தான்.

அழியும் பொருளில் நாம் வைக்கும் அன்பு அப்பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்ததும் எத்துணை துன்பத்தை எமக்குத் தருகின்றது பாருங்கள்.

எனவேதான் அழியா வஸ்துவான பரம்பொருளிடம் நாம் அன்பு வைக்க வேண்டும். அவ்வண்ணம் வைத்தோமானால் நாம் துயரிலிருந்து தப்பி விடுவோம்.

பரம் பொருளிடம் நாம் வைக்கும் அன்பு சாசுவதமானது. நாம் அடுத்த பிறவி எடுத்தாலும் இறையே அதற்குக் காரண மாக இருந்து எம்மைக் காப்பாற்றுவார். அவரிடத்தில் அன்பு செய்தால் அது தன் வழியே சகல உயிர்களிடத்தும் எம்மை அன்புவைக்கச் செய்கிறது. ஈஸ்வர பக்தியே சகல பிராணிகளிடத்தும் அன்பாக மாறும்.

பிரார்த்தனை செய்வதோடு யாம் வாழ்வில் அகிம்சையை யும் கைக்கொள்ள வேண்டும். அன்புக்கு அறிகுறி அஹிம்சை. அஹிம்சை என்று வெறுமனே வார்த்தையில் மாத்திரம் சொன்னால் போதாது. சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக இருக்கக் கூடாது. மனம் வாக்கு காயம் மூன்றினா லும் உயிர்களுக்கு இம்சை செய்யாமல் இருக்க வேண்டும் என சகல மதங்களும் கூறுகின்றன.

ஆனால் இன்று பல நாடுகளிலும் நடப்பது என்ன?

ஆடு, மாடு, கோழி என்று ஆரம்பித்து பாம்பு, தவளை, முதலியவற்றைக் கூட பிடித்துச் சாப்பிடுகிறார்கள். அன்று யாகம் செய்வது தப்பு அதில் ஜீவ இம்சை இருக்கிறது என்று போர்க்கொடி பிடித்தவர்கள் இன்று மறுவார்த்தை பேசாது மாமிசம் புசிக்கின்றார்கள். இப்படியே போனால் மனித இனம் உள்ளவரை அஹிம்சை என்னாவது?

எனவே அன்பு காட்டுவதில் சொல்வீரர்களாக மாத்திரம் இருந்து விடாது, செயலிலும் ஜீவகாருண்யம் காட்டியாக வேண்டும். எனவே புண்படா உடலும் பொய்படா மனமும் வேண்டின் நாம் நல்லவற்றை நாடி அல்லாதவற்றிற்கு அஞ்சி நடந்தாக வேண்டும். செய்வோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. இல்லறம் அல்லது நல்லறம் அன்று

“இல்லறம் அல்லது நல்லறம் அன்று” என்பது அனுபவம் வாய்ந்தோர் வாக்காகும். இல்லறத்தில் சமய அனுட்டானங்கள் பின்னிப் பிணைந்துள்ளன. அத்தியாவசியமான சமய அனுட்டானங்கள் ஆற்றுவதற்கு இல்லறம் மிகவும் கைகொடுப்பதால் மனிதனை மேல் நிலைக்கு உயர்த்துகின்ற தர்மங்களில் இல்லற தர்மமே முதல் தர்மமாகின்றது என்பது சுவாமி கெங்காதரானந்தாவின் கூற்றாகும். விருந்தோம்பலைச் செவ்வனே ஆற்ற இல்லறம் போன்று வேறு எதுவுமே உதவ முடியாது. அதனால் இல்லறதர்மத்தை ஒவ்வொருவரும் முறையாக அனுசரித்து வாழுதல் மிகமிக அவசியம் ஆகின்றது. இல்லத்திலே தந்தையின் கடமைகள், தாயின் கடமைகள், பிள்ளைகளது கடமைகள் என பல அம்சங்கள் உண்டு. இங்கே ஒவ்வொரு வரும் தத்தம் கடமைகளை சரிவர செய்தாகின்ற போது தான் இல்லறம் நல்லறம் ஆகின்றது.

இல்லத்தில் தமது கடமைகளை அனுசரித்து வாழ்கின்றவர்களே உத்தம மனிதர்கள். இவர்களே ஞானவான்களாகப் பரிணமிக்க முடியும். பக்தியைச் செயலாற்ற முதலில் நாம் வாழும் இல்லம், எமது குடும்பத்தவர், ஒழுங்காக அமைய வேண்டும். அமைய ஒவ்வொருவரும் தமது இல்லற வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொள்ள வேண்டும். ஆகாயவிமானத்தைப் பாருங்கள். அது பூமியில் சிறிது நேரம் ஓடிய பின்னர் தான் மேல் எழுந்து பறக்கின்றது. விமானம் மேலெழுந்து பறக்கின்ற சக்தியும் வேகமும் அது தரையில் ஓடுகின்ற ஓட்டத்திலிருந்து தான் பெறப்படுகின்றது.

இதேபோன்றது தான் எமது நிலையும். இப்பூவுலக வாழ்க்கையை கிரமமாய் வாழ்ந்து முடிப்பவர்களுக்குத்தான் மேலான ஞானவாழ்க்கைக்குரிய சக்தியும் மனபக்குவமும் கிடைக்கின்றன.

இல்லற தர்மத்தின் ஒவ்வொரு படியையும், ஒழுங்காக ஏறிச் செல்பவர்களே இறுதியில் ஞானத்திற்கு அருகதை உடையவர்களாயிருப்பார்கள், என்பது நிஜம். இல்லற தர்மம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனது ஆரம்ப தர்மமாகும். இதனைச் செவ்வனே செய்து முடிக்காதவர்கள் எவ்வுலகத்திலிருந்தாலும் சரி அவர்கள் கர்மதோஷத்தினால் சதா துன்பப்பட்டுக் கொண்டேயிருப்பார் கள்.

இத்தகைய முதல் தர்மமாகிய இல்லறதர்மத்தின் மகிமையையும் பெருமையையும் இயல்பையும் எடுத்துக் காட்டவே நமது தெய்வங்களும், அவதார புருஷர்களாகிய இராமர், கிருஷ்ணர் போன்றோரும் இல்லறவாசிகளாகத் திகழ்ந்தனர்.

தனது கடமைகளை நன்கு செய்யும் ஒருவன் இந்த விசாலமான சம்சார சாகரத்தை வெகு சாதுரியமாகக் கடந்து நற்கதி அடைவான்.

இல்லறவாசிக்கு தனது சொந்தக் கடமையிலிருந்து தேசக்கடமை வரையிலும் பல்வேறு கடமைகள் உள்ளன. இக்கடமைகளை ஆற்ற இல்லத்தில் தலைவனோடு தலை வியும் ஒத்துழைக்க வேண்டும். சம்சாரம் என்பது தர்ம சாரம் சுக ஜீவன ஆதாரம். இந்த சம்சார சாகரத்திலே துயரங்கள் ஏற்படும் போது தாரமோடு கணவன் அதைத் தாங்கி வாழ வேண்டும். மனிதன் தன் கடமைகளைச் செய்யு மிடத்து ஏற்படும் இடையூறுகளே வாழ்க்கைப் பிரச்சினைகள் என்று சொல்லப்படுகின்றன.

இன்றைய காலத்தில் பெரும் மூளைசாலிகளாக மனித இனம் வளர்ந்து கொண்டு வருதல் உண்மை. ஆனால், அதனிலும் மேலாக வாழ்க்கைப் பிரச்சினைகளும் மனிதனை மீறி வளர்ந்து கொண்டு வருதல் கண்கூடு. கெட்டிக் காரர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் கூட இன்றைய வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாது. தடுமாறி நிற்பதைக் காண்கின்றோம். இவர்களுடைய அறி வாற்றல் எல்லாம் வாழ்க்கையின் மர்மங்களை அறிவதற்கு பயன் அற்றவையாகின்றனவோ என எண்ணத் தோன்று கின்றது.

வாழ்க்கைத் தர்மங்களை, சமயங்கள் கூறுமாப்போல் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரக் கற்றுக் கொள்ளாத காரணத்தால் தான், இன்று தனி மனிதனிலிருந்து உலகம் பூராகவும் குழப்பங்களும் கொலை களும் நிரம்பியுள்ளன.

எனவே மனிதன் செயலாற்றும் திறமைசாலியாக இருந்தால் மட்டும் போதாது, தன்னை எதிர்நோக்கி வரும் பிரச்சினை களைப் புரிந்து கொண்டு அவற்றை சாதுரியமாக தீர்த்துக் கொள்ளும் நுண்ணறிவாற்றல் பெறவேண்டும். இதற்கு சமய சிந்தனையே கைகொடுக்கும். முயற்சிப்போமா?

## 21. ஸ்ரீ ராமன்

இதிகாசங்களுள் ஒன்று இராமாயணம். இராமனே இக் காவியத்தின் நாயகன். விஷ்ணு பகவானுடைய தச அவதாரங் களுள் இராம அவதாரம் ஒன்றாகும். நாம் சிறு வயதி லிருந்தே இராம சரித்திரத்தைப் படித்து வந்திருக்கின்றோம்.

இந்த இராம காவியம் எமக்கு கற்பிக்கும் படிப்பினைகள் ஏராளம். புத்திரபாசம், நட்பு, அபயம் என வந்தோருக்கு அடைக்கலம் அளித்தலின் அவசியம், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு, பக்தியும் சேவையும் இப்படியாகப் பல படிப்பினைகளை யாம் இக்காவியத்தில் காண்கின்றோம்.

தசரத மன்னன் இராம பிரானிடத்து வைத்திருந்த புத்திரபாசம் மிக உயர்ந்தது. அதற்கு விலை மன்னனது உயிர். ஸ்ரீராம பிரானுக்கும், படகோட்டி குகனுக்கும் இடையே அமைந்த உறவு, சிறந்த நட்புக்கு உதாரணமாகும்.

இலங்கேஸ்வரனுக்கு சீதாபிராட்டியை ஸ்ரீ ராமனிடம் அனுப்பி வைக்கும் படி அறிவுரை கூறுகிறான் இலங்கே ஸ்வரனின் தம்பி விபீடணன். "பிறன் மனை விழைதல்" பெரும் பாவம் அண்ணா! அதிலும் நீ வேதம் கற்றவன்: வேதத்தை நன்கு புரிந்து கொண்டவன், சிவபக்தன், இசையில் வல்லவன், வீணைக்கொடியோன், சாமகானத்தால் அந்தப் பரமேஸ்வர னையே மகிழ வைத்து வாளும் வரமும் பெற்றவன், பராக்கிரமம் வாய்ந்தவன் இப்பேற்பட்ட நீ இன்னொருவனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியைக் கொண்டு வந்து வைத்திருக்கலாமா அண்ணா!

இது விபீடணனது அறிவுரை. ஆனால் இராவணனுடைய விதி வேறு பாதை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. எனவே இந்த அறிவுரைகள் எல்லாம் பயன் அற்றுப் போகி ன்றன. செவிடன் காதில் ஊதிய சங்க நாதம் போல.

செய்வதறியாது ஸ்ரீ ராமனிடத்தில் அடைக்கலம் புகுகின் றான் விபீடணன். அபயம் அளிக்கின்றார் ஸ்ரீராமசந்திரமூர்த்தி. ஈற்றில் இலங்காபுரியின் மணி மகுடமே விபீடணனுக்கா கின்றது.

இராமாயணத்தில் இடம் பெற்ற ஒரு சம்பவத்தை திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கதையாகக் கூறியுள்ளார். அதனை நீங்களும் கேட்டுப் பாருங்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் இராமர், இலட்சுமணர் விஸ்வாமித்திரர் மூவரும் படகொன்றில் ஏறவருகிறார்கள். படகோட்டி இலட்சு மணரையும் விஸ்வாமித்திரரையும் படகில் ஏற்றிக் கொள் கின்றான். ஸ்ரீ இராமரை மாத்திரம் அவரது பாதத்தை ஆற்றில் கழுவிவரச் சொல்கிறான். தானே அவரது பாதத்தை நீரால் அபிஷேகம் செய்கிறான். "எதற்காக இந்த நிபந்தனை?" என்று கேட்கிறார் இராமபிரான்" உமது பாதம் பட்டு கல் ஒன்று அழகிய பெண் ஆனதைக் கேள்விப்பட்டுள்ளேன். எனது படகில் பாரத்துக்காக அடியில் கற்கள் வைத்திருக்கின்றேன். தங்கள் பாதம் பட்டு அத்தனை கற்களும் பெண்களாகி விட்டால் நான் எப்படி அவர்களை வைத்துக் காப்பாற்றுவேன்? வீட்டில் என் சம்சாரம் சண்டைக்கு வந்துவிட மாட்டாளா? என்கிறான் படகோட்டி. ஸ்ரீராமபிரான் சிரித்தார்.

பயணம் முடிந்து படகால் இறங்கும் போது தன்னிடம் இருந்த விலையுயர்ந்த மோதிரம் ஒன்றை ஸ்ரீராமர் படகோட்டிக்குப் பரிசாகக் கொடுத்தார்.

படகோட்டி அதனை வாங்க மறுக்கிறான். "தாங்களும் படகோட்டி அடியேனும் படகோட்டி. ஒரே தொழில் செய்யும் இருவரும் ஒருவரிடம் மற்றவர் கைம்மாறு வாங்கக் கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறான், அவன். இராமர் யோசித்தார். "ஒன்றும் புரியவில் லையே! சற்று விளக்கமாகத்தான் சொல்லேன். நீ கூறுவதன் அர்த்தம் தான் என்ன?" என்கிறார் இராமபிரான்.

படகோட்டி பதில் அளித்தான் "இராமபிரானே! தாங்கள் சங்கடங்கள் நிறைந்த வாழ்க்கைப் பிரவாகம் எனும் ஆற்றைக் கடந்து முத்தியை அடைய அடியார்க்கு உதவுகின் றீர்கள். அடியேனோ வெறும் ஆற்றைக் கடப்பதற்கு வாடிக்கை யாளர்கட்கு உதவுகிறேன். ஆக இருவருமே ஒரு தொழிலைச் செய்கின்றவர்கள் தான்." என்றான் படகோட்டி

அறிவும், ஆழ்ந்த சிந்தனையும் எங்கெல்லாம் இருக்கின்றது பாருங்கள்! இதில், நீங்கள் எப்படி?

## 22. தலைவன்

**ப**ல்வேறு விதத்தில் பல்வேறு காலங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்து நடாத்தி வர கடவுள் ஒருவர் இருந்து தான் ஆகவேண்டும் என்பது ஆஸ்திகர்களது கருத்து. அதற்கு மாறான கருத்து உடைய வர்கள் நாஸ்திகர்கள்.

ஒரு காரியம் செய்தால், நடந்தால் அதற்கான விளைவு இருந்தே ஆக வேண்டும். எமது செயல்களுக்கு பலனைத் தருபவர் ஆண்டவனே! என்பதை அடித்துச் சொல்பவர்கள் ஆஸ்திகர்கள். இருந்தால் இருக்கட்டுமே அதற்காக இறை யிடம் பக்தி செய்தாக வேண்டுமா? என வினா எழுப்பவும் தயங்குவதில்லை நாஸ்திகர்கள்.

எம்மைக் கேட்டுக் கொண்டா எம்மை இறைவன் படைத் தான்? எம்மை இப்பூமியில் படைத்தால் எமக்கு எத்துணை சிரமங்கள் என்பவர் ஒரு சாரார்.

"சிரமங்களைத் தீர்க்கவும் தான் இறைவனால் முடியுமே" இது ஆஸ்திரிகரது வாதம். நாம் பக்தி செய்தால் தான் ஆண்டவன் எமது கஷ்டங்களைப் போக்குவான் என்றால் இயற்கையாக அவன் கிருபாமூர்த்தி கருணைக்கடல் என்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றீர்களே அது பொய்த்து விடுமே! என்கிறார்கள் மீண்டும் நாஸ்திகர்கள்.

இவ்வாறு ஆஸ்திகர்களது ஒவ்வொரு கூற்றுக்கும் எதிர்வாதம் காண்பதில் நாஸ்திகர்கள் முனைவதைப் பார்த் தால் எம்மிலும் பார்க்க நாஸ்திகர்கள் தான் அதிகம் நேரம் ஆண்டவனை பற்றி சிந்திப்பதில் நேரம் செலவழிக்கிறார்கள் போல் தெரிகிறது. இல்லையா!

நாம் இறைவனை வணங்கும் போது எமது வேண்டு தல்களை சொல்லி வணங்க வேண்டுமா? என்பது சிலரது வினா.

இதற்கு நீல கண்ட தீட்சிதர் தரும் விடையைப் பாருங்கள். இவர் ஒரு சக்தி உபாசகர். தாயே! உன்னை வணங்கும் போது எனது கஷ்டங்களை உன்னிடம் சொல்லக் கூடாது என்பது எனக்கு நன்கு தெரியும். ஆனாலும் உன்னிடம் எனது கஷ்டங்களை வாய் திறந்து மனம் விட்டுச் சொல்லும் போது மனதுக்கு ஒரு தற்காலிக ஆறுதல் கிடைக்கின்றது. ஒரு தெம்பு மனதுள்ளே பிறக்கின்றது. அதனாலே உனக்கு எல்லாம் தெரிந்திருந்தாலும் நான் எனது கஷ்டங்களை மனம் விட்டுச் சொல்லி உன்னை வணங்குகின்றேன். இது நீலகண்ட தீட்சிகரது கருத்து.

எமது மனக் கஷ்டங்களை யாருக்காவது சொல்லி மனம் ஆறுவது சரி. அதில் ஒரு நிம்மதி பிறக்கத்தான் செய்கிறது. ஆனால் அதைக் கண்டவர்களிடம் போய் சொல்லக் கூடாத ல்லவா? அதனால் எமக்கும் கேட்பவர்க்கும் நன்மையில்லாமல் போய் விடும். எனவே இவற்றை ஈசனிடம் கூறுதல் சரிதானே?

அதிகமாக இந்துக்கள் தினமும் வீட்டில் பூஜை செய்வார் கள். பூஜை செய்ய அவகாசம் அதிகமாகக் கிடைக்கின்றது. காலையில் பெண்பாலார் அடுக்களையுள் வேலை செய்யும் போது ஆண்கள் இறைவழிபாட்டில் ஈடுபடலாம் அல்லவா?

பூசை என்பது பெரிய அளவில் வீடுகளில் செய்வது சிரமம் என்றால் தினமும் எமது வீட்டில் சுவாமிப் படங்க ளுக்கு மலர்கள் சாத்தி தீபமேற்றி வழிபடலாம். ஒரு வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரன், அம்பாள், விஷ்ணு, விநாயகர், ஷண்முகன், சூரியன் என்னும் மூர்த்தங்களை வைத்து வணங்குதல் அவசியம் என்றும் இது பஞ்சாயதன பூசை எனவும் அழைக்கப் படுகின்றது.

இந்த 5 தெய்வங்களுக்கும் விக்கிரகங்கட்குப் பதிலாக இயற்கையாகவே கிடைக்கும் 5 வகைக் கற்களை வைத்து அவற்றில் இம் மூர்த்திகளை ஆவகனம் செய்து பூசை செய்யும் வழக்கம் உண்டு.

எம்மவரிடையே சுவாமிப் படங்களை வைத்து வணங்கும் வழக்கமே பெரும்பாலான வீடுகளில் உண்டு. சுவாமிப் படங்களையும் தினமும் துடைத்து, பொட்டிட்டு, பூவிட்டு தீபம் காட்டி வணங்கி வரும் போது அதுவே ஒரு ஆலயமாக அமைகின்றது. அங்கே தூய்மையும் அருளும் பொலிகின்றது. எமது மனதில் நம்பிக்கை ஒளி பிறக்கின்றது. தினமும் சுவாமிக் குரிய கடமைகளை செய்து முடித்த பின் எமது காரியங்களை ஆரம்பிக்கும் போது மனதில் ஒரு நிறைவும் மனோதிடமும் பக்கபலமாக அமைகின்றது.

எனவே, கோயிலில் மாத்திரமல்ல வீட்டிலேயும் எமது சுவாமி அறையில் ஒரு புனிதமான சூழ்நிலையை யாம் உருவாக்க முடியும். இங்கே ஆரவாரமின்றி குழப்பமின்றி தெய்வ சிந்தனை செய்ய முடியும். இவ்வாறு செய்பவர்க்கு அதன் உண்மை புலப்படும்.

கிணற்று நீருள் நீர் நிரம்பிய குடத்தை இழுக்கும் போது அதன் கனம் தெரிவதில்லை. ஆனால், குடமானது நீரின் மட்டத்துக்கு வெளியே வந்தவுடன் கனக்க ஆரம்பிக்கின்றது. பெரிய மரங்களைக் கூட பெரும் வெள்ளத்தின் அடியே வைத்தே புரட்டி இழுத்து வருவார்கள். அப்போது அதன் பலம் தோற்றாது.

அதேபோன்று தான் எமது துன்பங்களும் இறைவழி பாட்டுள் அடங்குமேயானால் எமக்கு இன்பமே அன்றி வேறொன்றுமில்லை.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. அரச மர மகிமை

எமது இந்து மதத்தில் அரசு என்று சொல்லப்பட்ட சில விருட்சங்களுக்கு பெரு மதிப்புண்டு. அம்மரங்களையும் தெய்வங்களாகவும், தேவதைகளாகவும் போற்றி வணங்கு கின்றோம். உதாரணத்துக்கு அரசு, வேம்பு, வில்வம், வன்னி, நெல்லி, துளசி போன்றவற்றைக் கூறலாம். இவற்றுள்ளும் அரசமரம் இருக்கின்றதே. அதற்கு என்று ஒரு தனி மவுசு உண்டு. அது தான் அரச மரமாச்சே. அரசு, மரங்களுக் கெல்லாம் அரசானதற்கு ஒரு வரலாறு உண்டு.

அரச மரத்தை அச்வத்தம் என்றும் அழைப்பதுண்டு. வேள்விக்கும் அரசு பயன்படுவதால் அரசுக்கு யாக்ஞக விருட்சம் என்றும் ஒரு பெயர் உண்டு. இதன் குச்சிகள் ஹோமத்திற்குச் சிறந்தவை. அரச மரத்தை வெட்டுவதோ எரிப்பதோ ஒவ்வாத செயலாகக் கருதப்படுகின்றது.

புத்திரப் பேற்றுக்கு அரசமரம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அரச மரம், வேப்பமரம், மாமரம் ஆகிய வற்றைப் பேணி வளர்ப்பதே புண்ணிய காரியமாகும். புத்திர பாக்கியம், செல்வம் ஆரோக்கியம் ஆகியவற்றை விரும்பும் மனிதன் இரண்டு அரச மரங்களை பக்கத்திலே நாட்டி வைத்து பிரதிஷ்டை செய்து வளர்க்க வேண்டும். பின்னர் அவற்றைத் தனித்தனி பூசை செய்து வழிபட வேண்டும். இந்த இரு மரங்களுக்கும் காவலாக அருகே ஒரு வேப்ப மரத்தையும் வளர்த்து அதனையும் பேணிப் பூசை செய்து இந்த மரங்களைச் சோடி சேர்த்தால் கிடைப்பது பெரும் பாக்கியமாகும். அதிலும் புத்திர பாக்கியம் சொல்லப்பட்ட வகையில் கிடைக்கும் என்பது ஆன்றோர் அனுபவ வாக்கு. அரச மரத்தைப் பிரதட்சணம் செய்து நிறைவான பயன்கள் பெற்றவர்களின் வரலாறு பல உண்டு.

அமாவாசைத் திதி திங்கட்கிழமைகளில் வரும் போது அரசமரத்தைப் பிரதட்சணம் செய்தால் உயர் பலன் கிடைக்கும் என்பதும் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதட்சணம் செய்தல் என்பதன் அர்த்தம் உடலால் பிரணவ மந்திரத்தை எழுதுதல் என்று ஐதீகம் உண்டு. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இவ்வகையில் பிரதட்சணம் செய்தால் நாம் கோரிய வரங்களைப் பெறலாம்.

ஒரு முறை அக்னி பகவான் மனக்குழப்பம் அடைந்து தேவசபையை விட்டு வெளியேறினாராம். அக்கினியை சமாதானப்படுத்த தேவர்கள் அவரை விரட்டிக் கொண்டு பின்னால் சென்றனராம். குதிரை வடிவில் ஓடிச் சென்ற அக்னி, தன்னை ஒரு அரச மரத்தில் மறைத்துக் கொண் டாராம். அசுவம் என்றால் வடமொழியில் குதிரை என்று அர்த்தம். அசுவம் சென்று அதனுள் மறைந்ததால் அரச மரத்திற்கு அசுவத்த விருட்சம் என்றும் பெயர் உண்டு.

பகவத் கீதையில் கண்ணன் மரங்களில் தான் அரச மரமாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

பத்திரங்கள் என்று எடுத்துக் கொண்டால் சிவபெரு மானுக்கு வில்வமும், திருமாலுக்கு துளசியும், விநாயகருக்கு அறுகும், அம்பிகைக்கு வன்னி, நெல்லியும் உகந்தவை.

மலர்கள், பத்திரங்கள் பலவாக இருப்பினும் வழிபாட்டின் போது எமது மனம் நிஜமாகவே இறைவன் பால் ஒரு வழிப்பட்டு இருத்தல் தான் முக்கியம். மலர் கிடைக்கவில் லையே என்ற கவலை வேண்டாம். பச்சிலை பத்திரங்கள் இருக்கவே இருக்கின்றன. இல்லை என்று கவலை வேண்டாம். மெய்யன்போடு எமது உள்ளமாகிய கமலத்தையே இறைவன் விரும்புகின்றான். இக்கருத்தினை விபுலானந்த அடிகள் எத்தனை அழகாகக் கூறியுள்ளார் என்று பாருங்கள்.

**வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர்எதுவோ**
**வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.**

தாமரை, றோஜா, மல்லிகை, முல்லை, செவ்வரத்தை, நீலோற்பலம் என இறைவனுக்கு சாற்ற பல்வேறு மலர்கள் கிடைக்கலாம், சிலவேளைகளில் கிடைக்காமலும் போகலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக நாம் கவலை கொள்ள வேண்டாம். எமது உள்ளமாகிய மலரை இறைவன் பாதங்களில் மெய்யன்போடு சமர்ப்பித்து வணங்கினால் அதுவே இறைவன் உவந்தேற்கும் மலர் என்கிறார் விபுலானந்தர்.

அரச மரத்தை நாள்தோறும் வழிபடுவது நல்லது. சோமவாரம், செவ்வாய், வெள்ளிக் கிழமை நாட்களும் அரசமர வழிபாட்டுக்கு மிக உன்னதமானவை. அரச மரத்தைப் பிரதட்சணம் செய்தல் மிக அர்த்தமான செயலாகும். மரத்தின் மருத்துவப்பயன் பிரதட்சணம் செய்யும் போது எமது உடலில் பதிய வாய்ப்புண்டு. இது பிரதட்சணம் செய்தலின் பயன்களில் ஒன்றாகும். தேக்கு, அகில் முதலிய மரங்கள் மிக விலை உயர்ந்தனவாகக் காணப்படினும், அரசு, வேம்பு, ஆல் முதலிய மரங்களே தெய்வீகமும், புனிதமும், மதிப்பும் பெற்றவையாக உள்ளன. அரச மரத்தை வெட்டுவது பாவம். மரங்களை வளர்ப்போம், வழிபடுவோம், வழிபட்டு வளமாக வாழ்வோம். ●

## 24. இறைவனும் இறைவியும்

இறைவனும் இறைவியும் ஒரு போது சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாட்டிலே ஈசனை வென்ற காரணத்தால் பெருமிதம் கொண்டாள் தேவி. இது சுவாமிக்குப் பிடிக்காததால் இறைவியைப் பூவுலகத்திலே பசுவாகப் பிறந்து திரியுமாறு இறைவன் சாபமிட்டார்.

இச்சாபத்தால் இறைவியிலும் பார்க்க வேதனை அடைந்தவர் மகாவிஷ்ணு தான். தன் அருமைச் சகோதரிக்கு இப்படி ஒரு நிலை வந்து விட்டதே என்ற வேதனை அவருக்கு.

எப்படியாவது தன் சகோதரியை ஈஸ்வரனோடு சேர்த்து விட வேண்டும் என்று பிரார்த்தனையும் பூஜையும் பண்ணிக் கொண்டிருந்தார் விஷ்ணு பகவான்.

பகவானின் பிரார்த்தனையாலும் பூஜையாலும் மனம் குளிர்ந்த இறைவன் மகாவிஷ்ணுவிடம் "நீ அம்பாளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவை காவேரியில் நீராடவை. அப்போது அவளது பழைய உருவம் வரும். அப்புறம் யானே வந்து எப்போது அவளைத் திருமணம் பண்ணுவது என்று சொல்வேன்." என்று திருவாய் மலர்ந்தருளினார்"

இறைவன் சொன்னபிரகாரமே கோசகரான விஷ்ணு அம்பாளான பசுவை காவேரியில் நீராட வைத்து அடுத்த ஊர் சென்றடைந்தார். அந்த ஊர் தான் இப்போது திருவாவடு துறை என்றழைக்கப்படுகின்றது. ஆ அடு துறை என்று வந்தது. ஆ என்றால் பசு. பசு சென்றடைந்த இடம் என்ற காரணத்தால் ஆ அடுதுறை என அழைக்கப்படுகின்றது.

இங்கே தான் திருமூலர் இடையனை இழந்த பசுக்களுக் காக இரங்கி, இறந்த இடையனின் உடலில் புகுந்து பின் திருமந்திரமும் பாடியதால் திருவும் சேர்ந்து திருவாவடுதுறை எனப் பெயர் வழங்கலாயிற்று.

ஈஸ்வரன் கொடுத்த வாக்கின் படி அம்பாளுக்குப் பசுவின்ரூபம் நீங்கி சுயரூபமும் வந்தாகிவிட்டது. ஈஸ்வரனும் சொன்னபடி ஆங்கு பிரத்தியட்சமானார்.

ஆனால் அவர் இன்னமும் சில கூத்து நடாத்தத் திருவுளம் கொண்டார். இச்சம்பவம் நடந்த இடத்துக்கு அருகே குற்றாலம் என்று ஓர் அருவி இருந்தது.

இது அருவி விழும் குற்றாலமல்ல. இது தஞ்சாவூருக்கு அருகே மாயவரத்துக்குப் பக்கத்தே உள்ளது. இங்கு அம்பாளைத் தன் பெண்ணாகப் பெற்று வளர்க்க வேண்டும் என்று ஒரு ரிஷி தவம் செய்து கொண்டிருந்தார்.

அம்பாள் பூலோகத்துக்கு வந்தது தான் வந்தாள். ரிஷியினுடைய இஷ்டத்தையும் பூர்த்தி செய்ய இந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி விடுவோமே என இறைவன் திருவுளங்கொண்டார். அதனால் ஈஸ்வரன் அம்பாளிடம் "நீ போய் திருத்துருத்தி என்றழைக்கப்படும் குற்றாலத்திலே அந்த ரிஷிக்குப் பெண்ணாகப் பிறந்து கொஞ்சக் காலம் இரு. அப்புறம் யான் வந்து உன்னைத் திருமணம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறேன்'' என்றார்.

அம்பாளும் அப்படியே செய்தார். பின்னர் சுவாமி அங்கு பிரசன்னமானார். அங்கு வேதேச்வரர் என்ற பெயருடன் சுவாமி இன்றும் விளங்குகிறார்.

ரிஷி ஒருபுறம், தன் சகோதரியின் கல்யாணத்துக்காக மகாவிஷ்ணு மறுபுறம், அங்கு காத்திருந்தனர். இதனால் அந்த ஊருக்கு "எதிர்கொள்பாடி" என்ற பெயரும் ஏற்பட்டது.

இந்த ஊருக்கு அருகே அன்னையின் திருமணத்துக்கு முன்னால் ஹோமம் செய்து வேள்வி ஒன்றும் ஆக்கிய காரணத்தால் அந்த ஊர் வேள்விக்குடி என்றும் பெயர் பெறலாயிற்று. அடுத்து அம்பாள் மணப்பெண்ணாகப் பார்த்து பாலிகை தெளித்த இடம் ஆதலால் முளைப்பாலி என நாமமும் இவ்வூருக்கு வரலாயிற்று. திருமணநாள் வந்தது. இறைவன் இறைவி திருமணத்திற்காக மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்துப் பெரிய பந்தர் ஒன்று போடப்பட்டது. அதற்கு மத்யமாக இருந்த ஊருக்கு திருமணச்சேரி எனவும் நாமம் வழங்கலாயிற்று.

இங்கே தான் தன்மனம் குளிர மஹாவிஷ்ணு தன் சகோதரியை ஈஸ்வரனுக்கு திருக்கல்யாணம் செய்து வைத்தார்.

இந்த வகையில் தேரெழுந்தூர், திருக்குளம்பியம், திருவாவடுதுறை, குற்றாலம், எதிர் கொள்பாடி, வேள்விக்குடி, குறுமுளைப்பாலி, திருமணஞ்சேரி என்று ஊர்களின் தலப் பெருமைகளை யாம் அறிந்தோம். அது மாத்திரமல்லாது இவ்வரலாறுகள் மூலம் சூதாட்டம் என்னும் விளையாட்டு பாவமானது, பதிக்குப் பத்தினி கட்டுப்பட்டு அடக்கமாக வாழ வேண்டும், சகோதரவாஞ்சை என்பது ஒரு பெரும் தர்மமாகும், என்னும் பல நற்சிந்தனைகளையும் யாம் அறிகின்றோம்.

எனவே எமது சமய தலங்களின் வரலாற்றையும் அவை வெளிப்படுத்தும் பேருண்மைகளையும் யாம் அறிந்து பயன்பெற வேண்டும். தமிழ் நாட்டுக்குத் தல யாத்திரை செய்பவர்கள் இத்தலங்களைத் தரிசிக்கவும் தவற வேண்டாம். முயல்வோமாக! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. ஆசை

எமது சமயம் மட்டுமல்ல, மற்றைய எல்லா மதங்களுமே "ஆசை" யை அழித்து ஒழித்து விடு என்று தூண்டுகின்றன.

ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று கண்டார் புத்தர் பகவான். "அற்றது பற்றெனில் உற்றது விடு" என்றார் ஆழ்வார்களில் ஒருவர். திருமூலர் இன்னும் சில படிகள் மேலே சென்று "**ஆசை அறுமின்காள் ஆசை அறுமின்காள் ஈசரோடாயினும் ஆசை அறுமின்காள்....**" என்று கடவுள் மீதான ஆசையை கூடக் கண்டிக்கின்றார்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என ஆசையை மூன்றாக வகுத்தனர் எமது முன்னோர். இப்போதும் கூறலாம், பொருள்மேல் பற்று, தன்மீது தான் கொண்ட பற்று, எப்படிப் பார்த்தாலும் இவற்றிற்கு அடிப்படை ஆசையே தான். இல்லையா?!

பொருளை எடுத்துக் கொள்ளுங்கள்! வெளியே பார்க்கும் போது ஏதோ எம்மை வாழ வைக்கும் எமது அந்தஸ்தை உயர்த்தும் கருவியாகத் தோன்றும் பொருள், எத்தனையோ பேரின் கல்லறைக் கதவுகளைத் திறக்க வைத்துள்ளது. இது வரலாறு கண்ட உண்மை. பூச்சி கொல்லி மருந்து உண்டு. அது எமக்கு வெளிப்படையாகத் தெரியும். பொருள், பண்டம், பணம், இவை ஆட்கொல்லி மருந்து என்றார் ஒரு சமணத் துறவி. இந்த இடத்தில் ஒரு கதை சொல்கிறேன். காட்டு வழித்துறவி ஒருவர் அவ்வழியே பயணித்துக் கொண்டிருந்தார். பாதையில் தம்மால் பிற உயிர்கட்கு குறிப்பாக, ஊர்வனவற்றிற்குத் தீங்கு வந்து விடக்கூடாதே என்று கையில் வைத்திருந்த தடியால் நிலத்தில் தட்டிக் கொண்டே நடந்தார். திடீரென "ணங்" என்றொரு சத்தம் கேட்டது. தடியால் அந்த இடத்தை விலத்திப் பார்த்த போது அங்கே ஒரு புதருள் வெண்கலப் பானையொன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அது நிறையத் தங்க நாணயங்கள் பளிச்சிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்தின் கைவரிசை துறவியிடம் பலிக்கவில்லை. ஐயய்யோ! பானை நிரம்ப ஆட்கொல்லி இருக்கிறதே ஆபத்து என்று அந்த இடத்தை விட்டு ஓடித்தப்பினார் துறவி.

அதே நேரம் அதே வழியால் வந்த திருடர் இருவர் கண்களுக்கு அகப்பட்டது இந்தப் பானை. வேட்டைதான். இருவரும் அதைக் கொட்டி எண்ணிப் பங்கிடுவது எனத் தீர்மானித்தனர். இரவு வரும் வரை காத்திருந்து இருட்டினிலே ஊருக்குள் பானையுடன் செல்வோம் என்பது அவர்களது முடிவு. மிக்க நல்ல கருத்தொருமித்த முடிவு.

ஆனால் பசி இருவரையும் வாட்டியது. ஊருள் போய் ஒருவர் உணவு வாங்கி வருவது என முடிவும் எடுத்தனர். யார் பானையோடு இருப்பது? யார் உணவு வாங்கச் செல்வது? தனி ஒருவனைப் பானையுடன் விட்டுச் செல்ல அவர்களுக்குள் நம்பிக்கையின்மை வந்து விட்டது. பானை யுடன் இருப்பவன் தப்பி ஓடி விட்டால்? கடைசியில் பிள்ளை குட்டி மனைவி மீது சத்தியம் வாங்கிய பின் ஒருவனைப் பானையுடன் காவலாக அமர்த்தி விட்டு மற்றவன் வேகமாக உணவு வாங்கச் சென்றான். ஆசை யாரை விட்டது?

அதுவும் பொன்னாசை. தங்க நாணயங்கள் பானை நிரம்ப திடீரென பக்கத்திலே நின்ற மூங்கிலைப் பிடுங்கி கத்தியைப் போல் கூராக்கி வைத்துக் கொண்டான், தங்கத்துக்காக காவல் இருந்தவன். உணவுப் பொதியுடன் வந்தவன் உணவைக் கொடுத்து விட்டு நிமிர முன், கூரிய மூங்கிலை அவன் வயிற்றுள் பாய்ச்சினான். அலறி மண்மேல் சாய்ந்தான் குத்துப்பட்டவன்.

நம்பிக்கைத் துரோகம், ஒரு கணம் சிந்தித்தான் கொலை செய்தவன். மறு கணம் பொன்னாசை வென்றது. இறந்தவன் கொண்டு வந்த உணவை உண்டு பின் தங்கத்தோடு தப்பியோடி விடுவோம் என்று அவசர அவசரமாக உணவுப் பொதியை அவிழ்த்து பசியாற உண்டான். அப்பாடா பசி மயக்கம் தீர்ந்தது.

ஆனால், ஆனால் என்ன? வேறேதோ ஒரு வித மயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைத் தழுவியது. தலை சுற்றியது. கண்கள் இருண்டன. சரிந்து விழுந்தான். அவன் உணவுப் பொதி கொண்டு வந்தவன் உணவோடு இவனைக் கொல்ல விஷத்தையும் கலந்து வைத்த செய்தி இவனுக்குத் தெரியுமா என்ன? எனவே மிஞ்சியது தங்கப் பானையின் இரு பக்கத்திலும் இரு கொலைகாரப் பிணங்கள்.

காலையில் அந்தவழி சென்ற அதே துறவி மாலையில் அதே வழியால் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

ஐயனே! ஆட்கொல்லி இருவரைக் கொன்று விட்டது. இன்னும் எத்தனை பேரோ! தொடர்ந்து வேகமாக நடந்தார் துறவி.

**பொருளாசைக்கு அடிபணியாதவன் துறவி!**
**பொருளின் தேவையை வென்றவன் ஞானி!**

இவர்களுள் நாம் எந்த வகை? சிந்திப்போமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. உருவங்கள் மாறலாம்

இந்தியாவிலே, பத்ராசலம் என்னும் இடத்திலே இராம தாசர் என்ற ஓர் அடியவர் இருந்தார். அவர் இராமதாசர் அல்லவா? எந்நேரமும் ஸ்ரீ ராமபிரானையே மெய்யன்போடு வழிபடுவதில் தனது பொழுதைத் தவப் பொழுதாகக் கழித்து வந்தார். அவருக்கு ஸ்ரீராமனை நேரில் தரிசிக்க வேண்டும் என்று நீண்ட நாள் அவா.

எனவே, ஒரு நாள் இராமதாசர், தன் குருவை பணிந்து வணங்கிய பின்னர் குருவிடம் பின்வருமாறு கேட்டார், "குருவே! நீங்கள் பலமுறை ஸ்ரீ ராமபிரானை நேரில் தரிசித்த தாகக் கூறியுள்ளீர்கள். எனக்கு ஒருமுறை அவர் தரிசனம் கிடைக்க அருள் செய்ய மாட்டீர்களா?" என்று பணிவுடன் வேண்டினார்.

இராமதாசரின் விருப்பத்தை கண்டு மகிழ்ந்த குரு "நாளை உன்னுடைய வீட்டிற்கு ஸ்ரீ ராமபிரான் வருவார். அவரை வரவேற்பதற்கு நீ தயாராக இரு" என்றார். இதனை செவி மடுத்த இராமதாசருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. எல்லை யற்ற குதூகலத்துடன் தனது இல்லம் திரும்பினார்.

தெய்வ அவதாரமான ஸ்ரீ ராமபிரான் என் இல்லம் எழுந்தருளப் போகின்றாரே! என்று மகிழ்ந்தார். அவர் இதனைத் தன் அயலவர்களுக்கும் கூறிப் பெருமையடைந் தார். மறுநாள் ராமதாசர் வீட்டில் ஊரே கூடிவிட்டது. எல் லோருமாக அவரது இல்லத்தையும் வீதியையும் அலங்கரித் தனர். சுவையான விருந்தும் தயாரித்தனர். மிகுந்த ஆவலோடு ராமதாசரின் வீட்டு முன்றலில் கூடி நின்றனர். ஸ்ரீ ராமபிரானின் வருகைக்காக வழி மேல் விழி வைத்து ஆவலுடன் காத்தி ருந்தனர்.

நீண்ட நேரமாகியும் ஸ்ரீ ராமபிரான் வருவதாக இல்லை. அப்போது எருமை மாடு ஒன்று தான், வாலைத் தூக்கியபடி ராமதாசரின் திறந்து கிடந்த வீட்டினுள் நுழைந்தது. அங்கு பூசைக்கு ஆயத்தமாக வைத்திருந்த பொருட்களையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டி உருட்டி, அங்கு வைத்திருந்த உணவையும் சுவைக்க ஆரம்பித்தது.

ஸ்ரீ ராமபிரானின் திவ்விய தரிசனத்திற்காகக் காத்திருந்த மக்களுக்கு எருமை மாட்டின் செயல் மிகுந்த கோபத்தைத் தான் ஏற்படுத்தியது. அங்கு நின்றோர் கையால் கிடைத்த பொருட்களால் மாட்டை நையப் புடைத்தார்கள். இராம தாசரும் சேர்ந்து மாட்டை அடித்து விரட்டிவிட்டார்.

காளை மாடோ வலி தாங்க முடியாமல் ஓட்டம் பிடித்தது.

ஸ்ரீ ராமரை எதிர்பார்த்திருந்த சமயத்தில் இப்படி எருமை மாடு நுழைந்து, பூசை அறையில் களேபரம் செய்து விட்டதே என்ற கவலையும் ஏமாற்றமும் இராமதாசருக்கு.

மீண்டும் ஒரு நம்பிக்கை இராமதாசருக்கு. எப்படியாவது தனது குரு சொன்னவாறு ஸ்ரீ ராமர் வருவார் என்று. ஆனால் பொழுது மறைந்தும், ஸ்ரீ ராமபிரான் வந்த பாடில்லை. ஊர் மக்களும் ராமதாசரை கேலி செய்து விட்டு தத்தம் வீடு திரும்பினர்.

கனத்த இரவொன்று நகர்ந்தது இராமதாசருக்கு.

பொழுது புலர்ந்தது. விடிந்ததும் விடியாததுமாகத் தன் குருவிடம் ஓடினார் இராமதாசர். ஏமாற்றம், கோபம், கவலை யாவும் கலந்த குரலில், "ஸ்ரீ இராமருக்காகக் காத்திருந்த போது காளை மாடு தான் வந்தது. அதை அடித்து விரட்டி னோம். நீங்கள் சொன்னபடி ராமபிரான் வரவேயில்லை. இப்படி என்னை ஏமாற்றலாமா குருவே!" எனக் கேட்டார் இராமதாசர்.

அதைக் கேட்ட குரு ஸ்ரீ இராமபிரான் இங்கு வந்து என்னிடம் தன் முதுகைக் காட்டினார். அவர் முதுகில் ஏராள மான காயங்கள் இருந்தன. வேதனையுடன் அவர் என்னிடம் "உன் பேச்சைக் கேட்டு அடியவர் வீட்டிற்கு காளை மாடு வடிவில் சென்றேன், எனக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்தாயா?" என்று சொல்லி விட்டுச் சென்றார் என்று பதிலளித்தார் குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமதாசர் குரு கூறியதைக் கேட்டு திகைத்தார். காளையாக என் வீடு தேடி வந்தது இறைவனா? உண் மையை உணராமல் ஐயனை அடித்து விரட்டிவிட்டேனே! என் செய்வேன். ராமதாசர் அழுதார், புலம்பினார், தனக்குத் தானே அடித்துக் கொண்டார்.

இராமதாசரின் உண்மை அன்பை உணர்ந்த ஸ்ரீ ராமர் அவருக்கு பின்னர் நேரில் தரிசனம் கொடுத்தார். ராமதாசர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. நான் என் பிறவிப் பயனை அடைந்து விட்டேன் எனக் களிப்பெய்தினார்.

எனவே நாம் எல்லோரும் இறைவனின் குழந்தைகள். நாம் என்ன பிழை செய்தாலும் இறைவன் எம்மை மன்னித் தருள்வார். ஆனால், இறைவனிடம் நாம் காட்டும் அன்பு, பக்தி, மெய்யன்பாக இருக்க வேண்டும். மெய்யன்பு எம்மிடம் உண்டேல், இறைவன் எம்மிடம் எவ்வடிவில் வந்தாலும் அதனை புரிந்து கொள்ளும் பக்குவம் எமக்குக் கிடைக்கும்.

உருவங்கள் மாறலாம். ஆனால் ஆண்டவன் கருணை மாறாது. நேயர்களே! இனம் காண்பது உங்கள் பொறுப்பு. முயற்சிப்போமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. வாழ்வின் இலட்சியம்

குறி இல்லாமல் அம்பை எய்தால் அந்த அம்பால் ஆபத்துக்களே விளையும். இது போன்றதே மனித வாழ்க்கையும். மனிதனாகப் பிறந்தவன் ஒரு உயர்ந்த இலட்சியத்துடன் வாழ வேண்டும். எமது அன்றாடக் கடமைகளை ஆற்றும் போது அவை எமது இலட்சியத்தோடும் பொருந்துமாறு நாம் அமைத்துக் கொண்டோமாயானால் நாம் புத்திசாலிகள் தான்.

எமது செயல்களின் பலாபலன்களை நாம் எமது இலட்சியத்துக்கே சமர்ப்பணம் செய்து விடுவோமேயானால், அவை எம்மைப் பெரிதளவில் பாதிக்கமாட்டா.

உயர் ஞானத்தைப் பெறுதல் எமது இலட்சியமாக அமைய வேண்டும். இத்தகைய இலட்சியத்தை நாம் எமது வாழ்க்கையோடு இணைத்துக் கொள்ளாவிட்டால் எமது வாழ்க்கை என்னும் தேரின் அச்சாணி உடைந்து விடும்.

பணமும் பொருளும் மனித வாழ்வில் தேவைதான். அவசியம் தான் ஆனால் அவ்விரண்டையுமே நாம் பெரு நோக்காகக் கொண்டால் அவை எம்மை வெறும் பொருளாதாரப் பிராணியாக மாற்றி விடும் ஆபத்து எமக்குண்டு. ஆகவே தான் நாம் எமது ஆன்மீக இலட்சியத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மனிதன் சிறிது சிறிதாக உலக இன்பங்களை அனுபவித்து பின் பக்குவம் அடையும் போது அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல அவன் சிந்தனைகளும் உலகத்தை விட்டுப் பறந்து மேல் நோக்கிச் செல்கின்றன.

பாடசாலையிலே ஆசிரியர் மாணவர்களின் தராதரத்தை அறிய அடிக்கடி பரீட்சைகளை வைக்கின்றார். அதே போன்று தான் இறைவனும் பக்தர்களை அடிக்கடி சோதனை செய்து பார்க்கிறார். மறுபக்கம் பார்த்தால் முக்காலமும் உணர்ந்த முழு முதல் மூலமூர்த்தி, சோதனை மூலமாக பக்தர்களின் உள்ளத்தை அறிய வேண்டுமா? என வினா எழலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியல்ல. பின்னர் இறைவன் நம்மை எல்லாம் சோதிப்பது எதற்காக? அது எமக்கு வாழ்க்கை அனுபவத்தைத் தரவே, வேறொன்றுக்குமாக அல்ல. நம்மை நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்தவர்களுக்கு துன்பமும் இல்லை, துயரமும் இல்லை. தெய்வம் நம்மை வருத்துவதை உணர்ந்தவர்கள் தெய்வசங்கற்ப்பத்தின் படி நடந்து ஞானத்தின் ஏழுபடிகளையும் தாண்டி உயர்நிலை எய்துவர்.

இதற்கு நாம் உண்மை எது என்பதை உணர்ந்தாக வேண்டும். ஆணவம், பொறாமை, பேராசை என்பவற்றை முற்றாக நீக்க வேண்டும்.

உதாரணமாக, பாரதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பாரதத்தில் துரியோதனனின் நிலையைப் பார்ப்போம். கிருஷ்ண பகவானுடைய உயர் ஆற்றலை அறிந்திருந்தும் அவரோடு உறவாடும் அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தும் அவன் ஸ்ரீ ஹரிக்கு எதிர்மாறகவே செயற்பட்டு, ஈற்றில் பகவானுடைய எதிரியாகவே மாறிவிட்டான்.

பகவானுக்கு எதிராகச் செயலாற்றும் துணிவு அவனுக்கு எங்கிருந்து வந்தது? அவனுடைய ஆணவத்தாலும், பேராசையாலுமே அவனுக்கு அந்தத் துணிவு ஏற்பட்டது. இவ்விரு கொடிய குணங்களாலும் அவனுடைய ஆட்சியும், அந்தஸ்தும் வாழ்வும் பறிக்கப்பட்டன.

எனவே, ஆணவத்திமிரும், பேராசையும் இருக்குமானால், துரியோதனன் கதைபோல் தான் எமது கதையும் முடியும்.

நாம் எமது முன்ஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனாகவே எமக்கு பூவுலக வாழ்க்கை அமைகிறது. இறையிடம் எமக்கு எமது பூர்வீக பக்தி தோன்றுமேயானால் இந்தப் பக்தியையும் பக்தி உணர்வையும் நாம் ஞான அனுஷ்டானங்கள் மூலம் வளர்க்க வேண்டும். அப்போது தான் இறைவன் அருளைப் பெற முடியும்.

உதாரணமாக, பெரும்பாலான மக்கள் பிரதான தர்மத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி ஒன்றும் செய்யாமல் கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைத்து, ஒரு தேவாரமும் பாடினால் போதும் கடவுள் ஆகா ஓகோ என்று காரியமெல்லாம் ஆக்கித் தர வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

களஞ்சியத்தில் இருக்கும் நெல்மணி அங்கே இருந்த படி முளைத்துக் காய்த்து பலன் தர மாட்டாது. பண்படுத்திய நிலத்தில் அதனை விதைத்து, பசளையிட்டு, நீர் இறைத்து, களை அகற்றி பக்குவமாய் வளர்த்தால் தான் அது பலன் தரும்.

அதே போன்று தான் பக்தியும் எமது மனதின் அடியில் உறைந்திருக்கும். பக்தியை, பக்தி உணர்வை ஞான அனுஷ்டானங்களால் விழித்தெழ வைத்து விருத்தி செய்ய வேண்டும். இது என் தனிப்பட்ட கருத்தல்ல. சுவாமி கெங்காதர ஆனந்தாவின் கருத்தாகும்.

இறையை யாம் சரணாகதி அடைய வேண்டும். அவன் காப்பாற்றுவானா என்ற ஐயம் இன்றி அவனே சரணாகதி என்ற திடம் எமது மனதில் உறுதியாக இருக்க வேண்டும். அப்போது தான் இறைவன் இன்னருள் எமக்குக் கிட்டும்.

துச்சாதனன் பாஞ்சாலியைத் துயில் உரிந்த போது ஒரு கையில் சேலையைப் பற்றியபடி மற்றைய கையை உயர்த் தியே அவள் கண்ணா! கண்ணா! என்று அலறினாள், உதவி கோரினாள். ஆனால் அப்போது கண்ணன் உதவிக்கு வரவே யில்லை. இறுதியில், அவள் தன்னிருகரங்களையும் உயர்த்தி நெஞ்சுருகி கதறிய போதே கண்ணன் தரிசனம் கொடுத்தான்.

இந்த வகையில், பாஞ்சாலி ஈற்றில் எய்திய தன்னை மறந்த நிலையில் கண்ணனைச் சரணாகதி அடைந்த பக்குவம் ஒருவனுக்கு வரும்போது தான் இறைவனது அருளாசிகள் அவனுக்கு கிடைக்கும் என்பது திண்ணம்.

இறைவன் எமக்கு எல்லாம் தருவார் என்ற நம்பிக்கையை விட, எல்லாம் தந்திருக்கிறார் என்று நாம் உணரும் போது தான், எமக்கு எல்லாமே கிடைத்தது போன்ற நிறைவு ஏற்படும் இல்லையா?

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. சத்சங்கம்

அன்பு கலந்ததாகவும், அறிவு பொருந்தியதாகவும் அருளோடு பிணைந்துள்ள பொருள் நிறைந்ததாகவும் இருப்பது எதுவோ அதுவே சத்சங்கம் எனப்படும்.

எமது வாழ்வு மேன்மைபெற வேண்டுமானால் எமக்கு சான்றோருடைய கூட்டுறவு மிக அவசியம்.

"சான்றோர் இனத்திரு" என்பது ஔவை மூதாட்டியின் அமுதவாக்காகும். ஸ்தூலமாக இல்லாவிடினும், சூட்சுமமாக வேனும் அருளாளர்களுடன் நாம் தொடர்பு கொள்ள வேண்டும்.

நல்லாரைக் காண்பதுவும் அவர்கள் சொல் கேட்பதுவும் அவர்களோடு இணைந்திருப்பதுவும் நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்று என நாம் இளமையிலேயே கற்றோம் அல்லவா?

ஆனால் இப்போது நடப்பது என்ன? காலத்தின் கோலம் என்ற போர்வையுள் மனிதன் சந்தர்ப்பவாதியாகி விட்டான். நல்லவன் என்று தெரிந்து நாம் பழகுகின்றோமா? எவர் எமக்குச் சாதகமாக நடக்கின்றாரோ, எவர் நாம் சொல்வ தற்கெல்லாம் சரி என்று தலை ஆட்டுகின்றாரோ, அவரை அல்லவா எம் மனம் நாடுகின்றது. இது சரியா? தப்பா? என்பது நிதானமாக இருந்து சிந்திக்க வேண்டிய விடயம்.

தடித்த தோலுடன் முட்களும் நிறைந்து காணப்படும் பலாக்கனி இனிய சுவையான சுளைகளைத் தருகின்றது. ஆனால், சிறிய உருண்டை வடிவில் அழகான வண்ணம் கொண்ட காட்டுப் பழம் கொடிய நஞ்சாகின்றது. எனவே தோற்றம் கண்டு நாம் ஒருவரை எடை போடக் கூடாது.

நாம் உறவு கொண்டாடும் மக்கள், இதய சுத்தி உடைய வர்களாக இருக்க வேண்டும். மனச்சாட்சிக்கு அஞ்சுபவர் களாக இருக்க வேண்டும். இவ்வாறு நல்லோரை இனங்கண்டு நாம் உய்ய வேண்டுமானால் எமக்கு அருளாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு, துணை அவசியம்.

வானத்திலிருந்து பொழியும் மழைநீர் தூய்மையானது தான். ஆனால் அது சேற்றில் விழுந்தால் சேறாகி விடுகின்றது. சாக்கடையில் விழுந்தால் சாக்கடை நீராக மாறி விடுகின்றது. அதுவே கங்கையில் வீழ்ந்தால் புனித கங்கா தீர்த்தமாகி விடுகின்றது.

அதுபோன்றே நாமும் எத்தகையவர்களோடு சேருகின் றோமோ அதற்கேற்பவே எமது பண்பும், குணமும் அமையும் மாறுபடும்.

அதனால் தான் எமது நல்வாழ்வுக்கு ஊன்று கோலாக எமக்கு நல்லோர் தொடர்பு அவசியம். நல்லோர் தொடர்பு சத்சங்கம் ஆகும்.

நாங்கள் பெற்ற பேற்றினை மற்றவர்களும் பெற்று உய்ய வேண்டும் என்ற உயர் நோக்கோடு செயற்படுதல், பெரியோர், சான்றோர் இயல்பாகும். இதற்கு மாறாக தீயோர் நட்பு எமது வாழ்வை, வளத்தையே அழித்து விடும்.

ஆனால் எம்மில் பலர் எமக்கு எல்லாம் தெரியும் எம்மை எவரும் வழிநடத்த வேண்டிய அவசியம் இல்லை. நாம் சரியான உண்மை நிறைந்த பாதையில் தான் சென்று கொண்டிருக்கின்றோம் என நினைத்துக் கொண்டிருக்கின் றோம். இது எங்கே போய் முடியும்? எம்மை நாம் அறிந்து கொள்வது எப்போது?

இச்சந்தர்ப்பத்தில் ஒரு கதையைக் கேட்டுப் பாருங்கள்.

சந்நியாசி ஒருவர் கனவு ஒன்று கண்டார். அக்கனவில் அவர் சொர்க்கம் சென்று அங்கு இடம் பெறும் ஒரு விழாவைக் காண்கிறார்.

எங்கும் அலங்கார வளைவுகள், மகரதோரணங்கள், வண்ண விளக்குகள், அழகுக் கோலங்கள், வண்ண மலர்க் குவியல்கள், எங்கும் ஒரே ஒளி வெள்ளம்.

சந்நியாசிக்கு ஒன்றும் புரியவில்லை “இங்கே என்னதான் நடக்கிறது?” என்று கேட்கிறார் அயலில் நின்ற ஒருவரிடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசயம் தெரியாதா உங்களுக்கு? இன்று இறைவனின் பிறந்த நாள். அதைக் கொண்டாட ஊர்வலம் எற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் இறைவனும் கலந்து கொள்கிறார் என்றால் பாருங்களேன். அருகில் இருந்தவர் தந்த பதில் இது.

சந்நியாசி பாதையின் ஓரத்தே சென்று நின்று ஊர்வலத்தைக் கவனித்தார்.

ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. யானைகள், குதிரைகள், குடை, கொடி, ஆலவட்டங்கள் மக்கள் வெள்ளம் அலை அலையாக வந்து கொண்டிருந்தது.

முதலில் ஒரு குதிரை வந்தது. அதன்மீது ஒருவர் வாட்டசாட்டமாக அமர்திருந்தார். அவர் பின்னே ஒரே மக்கள் கூட்டம். கொடி, குடை, ஆலவட்டம் குதிரையில் இருப்பவர் யார்? அவர் பின்னே இத்தனை மக்கள் கூட்டம் வருகிறதே. சந்நியாசி தன் அருகில் நின்றவரை கேட்டார். அவர் ஒரு மதத்தின் பெயரைச் சொல்லி அந்த மதத்தின் தலைவர் இவர். அவர் பின்னால் வருபவர்கள் எல்லாம் அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் என்று பதில் அளித்தார்.

ஊர்வலம் தொடர்ந்தது. அடுத்து ஒரு பெரிய யானை மேல் ஒருவர் வந்தார். அவர் பின்னாலும் ஏகப்பட்ட கூட்டம் “இவர் யார்?” என்ற வினாவினார் சந்நியாசி. அருகில் நின்றவர் இன்னுமொரு மதத்தின் பெயரைச் சொல்லி அந்த மதத்தின் தலைவர் இவர். பின்னால் வருபவர்கள் அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் என்று பதில் அளித்தார்.

அந்த ஊர்வலத்தின் முடிவில் முடி நரைத்த வயதான ஒருவர் ஒட்டி உலர்ந்த குதிரை மேல் வந்து கொண்டிருந்தார். ஆனால் அவருக்குப் பின்னே எவருமே வந்ததாக இல்லை. கொடி, குடை, ஆலவட்டம் எதுவுமே கிடையாது.

“இவர் யார்? இவர் மட்டும் ஏன் தனியாக வந்து கொண்டிருக்கின்றார்?” இவர் இந்த ஊர்வலத்தைச் சேர்ந்தவர் இல்லையா? என்று கேட்டார் சந்நியாசி.

“ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்? இவர் தான் கடவுள். இவரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய பிறந்த நாள் தான் இன்று. அதனைக் கொண்டாடத்தான் இந்த ஊர்வலம் ஏற்பாடெல்லாம்" என்றாரே பார்க்கலாம் பக்கத்தில் நின்றவர்.

சந்நியாசி திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொண்டார். மக்கள் எல்லாம் தாம் சரியான பாதையில் போகின்றோம் என நினைத்துக் கொண்டு தவறாகப் போய்க் கொண்டிருக்கின்றார் கள். உண்மைதான், கடவுளைப் பின்பற்றுவதாக நினைத்துக் கொண்டு தாம் செயற்படுவதும் சரியானதே என்ற நினைவில் தம்மைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் பலர். ஆனால், உண்மையில் அவர்கள் கடவுளை நேசித்ததாக இல்லை. தம்மையே பிரபல்யப்படுத்துகின்றார்கள். யதார்த்த மாக யோசித்துப் பார்த்தால், உண்மைக்குப் பின்னே தான் நாங்கள் போய்க் கொண்டிருக்கின்றோம் என எங்களில் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மை தனியே அநாதையாய் போய்க் கொண்டிருக்கின்றது.

எனவே! இவர்களுள் நாம் எந்த வகையைச் சேர்ந்தவர் கள்? என்று யோசிக்கின்றீர்களா? யோசித்துப் பாருங்கள் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. இறை அன்பு

இறையன்பு அளப்பரியது. சமுத்திரம் போன்றது. இறைவன் தந்தையும் தாயும் ஆனவன். நாம் அவருக்குக் குழந்தைகள். இங்கு அன்புக்குப் பஞ்சம் ஏது?

இறைவன் எம்மீது செலுத்தும் அன்பு கருணை ஆகும். நாம் அவன் மேல் செலுத்தும் அன்பு பக்தி ஆகும். உலக வாழ்க்கையில் பெற்றோர் தமது குழந்தைகளின் மேல் செலுத்தும் அன்பு தன்னலமற்றது. தியாகம் நிறைந்தது. அப்படியிருப்பின் ஆண்டவன் எம்மீது காட்டும் கருணை எத்தனை உயர்ந்ததாக இருக்கும்! இத்தன்னலமற்ற கருணையே அடியவனை ஆண்டவன் பால் ஈர்க்கின்றது. மெய்யடியார்கள் மனதில் இறைவன் குடி கொள்கிறான். அவர்கள் மனதில் ஞானம் நிறைகின்றது. அவர்களுக்கு சந்தேகம் எழுவதில்லை. அவர்கள் இறைவன் பாதத்தைப் பற்றிக் கொள்கின்றார்கள். ஏன்? என்ற வினாவுக்கு அவர்கள் வாழ்வில் இடமேயில்லை. அறியாமலா சொன்னார்கள்! ஞானிகள் கேள்வி கேட்பதில்லை. முட்டாள்களும் கேள்வி கேட்பதில்லை என்று. இறையன்பு எமது சுயநலத்தை வளர்க்க வழிகாட்டுகின்றது. நாம் யார்? எமது கடமை என்ன? என்பதைச் சிந்திக்க வைக்கிறது.

இறையன்புக்கு ஏங்காத அடியார் ஒருவர் இருக்க முடியுமா?

பக்தி வாழ்க்கை வாழ்ந்த நாயன்மார் நால்வரும் இறையுன்புக்காக ஏங்கினார்கள் என்பது நீங்கள் அறியாத தல்ல. ஆனால் அவர்கட்கு இறை அருள் கிடைத்த விதமோ வெவ்வேறு ஞானசம்பந்தர் மிகச் சுலபமாக இறையருளைப் பெற்றார். உமையம்மையின் திருமுலைப் பாலாக கிடைத்தது அவருக்கு இறையன்பு.

சுந்தரருக்கோ தோழமை வடிவில் கிடைத்தது இறையருள். எம்பெருமானால் வலிய வந்து ஆட்கொள்ளப்பட்டவன் தொண்டர் சுந்தரர்.

மாணிக்க வாசகர் - மணியாகத் திருவாசகம் பாடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு குரு வடிவில் கிடைத்தது இறையன்பு.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பர் எமது மூத்தோர்.

அப்பர் பெருமான் 81 ஆண்டுகள் இறையருளுக்காக ஏங்கினார். அவரது மார்க்கம் தாசமார்க்கம் அல்லவா? சூலை நோய், சமணர்களது கொடும் தண்டனை, எத்தனை சோதனைகள் அவரது வாழ்க்கையில்! எத்தனை இடர்கள் மத்தியிலும் அவர் மனம் தளரவில்லை. கைலைக் காட்சி காண அவர் பட்டபாடு நடந்து, உருண்டு, தவழ்ந்து, இரத்தம் சிந்தி அவர் மேற்கொண்ட பயணம் இறைவனையே அவர்பால் வந்தருள வைத்தது. நெஞ்சுருகிப் பாடுகிறார் அப்பர் சுவாமிகள்.

கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.
இறையருள் பெற்றோருக்கு வேறு என்ன வேண்டும்.

விஷ்ணு பக்தரான ஒருவர் பகவான் அருளை ஏங்கிப் பாடுவதைக் கேளுங்கள்.

**அச்சுதா அமரர் ஏறே!**
**ஆயர் தன் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய்**
**இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை தரினும் வேண்டேன்**
**அரங்கமாநகர் உள்ளானே!**

என்று அரங்கனை நோக்கி அமுதாகப் பாடியுள்ளார். தொண்டர் அடிப் பொடியாழ்வார்.

இறைவனுக்குப் பூஜை செய்வது வெறும் புறக்கிரியை மாத்திரமல்ல. அது ஆண்டவனுக்கும் பக்தனுக்குமிடையே தொடுக்கப்பட்ட அன்பு எனும் பக்தி இழையாகின்றது. ஏழை களிடம் காட்டும் பரிவு இறைவனிடம் காட்டும் பரிவுக்குச் சமானம். ஏழை எனும் போது செல்வம் இல்லாதவன் மாத்திரம் ஏழை ஆகமாட்டான். சிலர் புத்தியில்லா ஏழை களாக உள்ளனர், சிலர் அன்பு, ஆதரவு அற்ற ஏழைகளாக உள்ளனர். சிலர் புத்திர பாக்கியம் அற்ற ஏழைகளாக உள்ளனர். எங்கெங்கு எவர்க்கு என்ன தேவையோ அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து அன்பு காட்டியாக வேண்டும். அன்பு காட்டும் போது அது நாம் இறைவன் பால் செலுத்தும் அன்பாகின்றது.

**இறைவன் எந்த வடிவத்தில் இல்லை என்று சொல்லுங்கள்.**
**மங்கும் பொழுதளவில் வாடித் தொழில் புரியும்**
**மக்கள் எல்லாம் இறைவன் வடிவல்லவோ!**
**அங்கம் குறைந்தழுகி ஐயா எனக்கையேந்தி**
**அகத்தின் கதவருகே அழைப்போன் அவன் அல்லவோ!**

என்கிறார் ஒரு கவிஞர்.

இதுவே இறைவனின் சர்வவியாபகம். எனவே யாம் எப்பக்கம் திரும்பினும் இறைவனது பார்வை எங்கள் மேல் என்பது நிச்சயம். எனவே நல்லது செய்வோம். இறையருள் பெறுவோம். முயல்வோமா? ●

# 30. மனிதனும் தெய்வமாகலாம்

**மி**ருகத்தை விட மனிதன் உயர்ந்தவன் என்பது அவன் வளர்கின்ற பாங்கிலே தெரிகின்றது. அதாவது மிருகங்கள் குறுக்குவாட்டில் வளர்கின்றன. ஆனால் மனிதனோ உயர்ந்து மேல் நோக்கி வளர்கின்றான். இவ்வாறு உயர, உயர வளரும் மனிதன் தனது நோக்கத்தையும், செயல்களை யும் சிந்தனைகளையும் கூட உயர்ந்தனவாகக் கொண்டு செயலாற்ற வேண்டும். அப்போது தான் மனிதன் மிருகத்தி லிருந்து நிஜமாக வேறுபடுகின்றான்.

ஆனால் மனிதன் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வாக்கின்படியா இன்று வாழ்கின்றான்? இல்லையே! பெரும்பாலான மனிதர்களின் செயல்கள், சிந்தனைகள் எல்லாம் அவன் வளர்ச்சிக்கு மாறாக கீழ்நோக்கி அல்லவா போய்க் கொண்டிருக்கின்றன! விதி விலக்குகள் இல்லாமல் இல்லை.

மேலான நோக்கங்களோடு மனிதன் வாழ முற்பட்டால் நிஜமாக அவன் மற்றைய ஜீவராசிகளைவிட அதிக சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால் நடைமுறையில் இன்றைய உலகிலே மனிதன்தான் அதிகமான துன்பத்தை அனுபவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றான். இதற்குக் காரணமும் அவனே தான் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை.

மனிதனுக்குத் தான் காமம், கவலை, பாவம், அவமானம் இவ்வாறு எத்தனையோ குறைபாடுகள். மிருகங்களுக்கு இத்தனை கவலைகள் இல்லையே!

ஒரு வகையில் பார்த்தால் மிருகங்களுக்கு கொடுத்திருக்கும் சௌகரிகங்களை ஆண்டவன் மனிதனுக்கு கொடுக்கவில்லைப் போல தோன்றலாம். உதாரணமாக, எம்மை திடீரென ஒருவர் தாக்கினால் எமக்குத் திருப்பித் தாக்க ஒரு ஆயுதமும் கைவசம் இல்லை.

ஆனால், மாட்டை நாம் அடித்தால் அதற்குக் கொம்பு இருக்கின்றது. அதனால் அது எம்மை முட்ட வருகின்றது. கொடிய காட்டு விலங்குகட்கு கூரிய நகங்களைக் கொடுத்திருக்கின்றார் இறைவன். அவற்றால் அவை தம்மைப் பாது காத்துக் கொள்கின்றன.

குளிரிலிருந்து காப்பாற்ற அவற்றிற்கு உரோமத்தைப் போர்வையாக இறைவன் கொடுத்துள்ளார். ஆனால் மனிதனை வழித்து விட்டிருக்கின்றார் இறைவன்.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! குதிரைக்குக் கொம்பில்லை. ஆனால் அதற்கு ஓடித் தப்ப வேகத்தைக் கொடுத்திருக்கின்றார் இறைவன். மனிதனால் அத்தனை வேகத்தில் ஓடமுடியுமா?

இல்லையே! ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் ஒன்றை மனிதனுக்கு அதிகமாகக் கொடுத்திருக்கின்றார். அதுதான் புத்தி - பகுத்தறிவு அதனால் மனிதன் மற்றைய ஜீவராசிகளிடமிருந்து தனித்துவம் பெற்றுள்ளான்.

இதனால் அவன், பிராணிகளின் போர்வையைப் பறித்து கம்பளியாக்கித்தான் போர்த்துக் கொள்கின்றான். வேகமாக ஓடும் குதிரையைப் பிடித்து வண்டியில் பூட்டி தான் வேகமாக ஓடக் கற்றுக் கொண்டு விட்டான்.

இதற்கெல்லாம் அவன் பயன்படுத்துவது ஆண்டவன் அவனுக்கு அளித்த பகுத்தறிவே. இதனை இவ்வாறா பயன்படுத்து வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புத்தியை, அறிவை, பகுத்தறிவை வைத்துக் கொண்டு மனிதன் மற்றைய ஜீவராசிகள், ஜட பிரபஞ்சம் அனைத்தையும் தானே ஆளுகின்றான். இதே புத்தியை வைத்துக் கொண்டு மனிதன் சிரமப்பட்டு கவலை கொள்ளவும் செய்கின்றான். பிறவி எடுத்ததால் தானே இத்தகைய கஷ்டங் கள், துன்பங்கள் இனிப்பிறவாதிருக்க என்ன செய்யலாம் என சில சந்தர்ப்பங்களில் சிந்திக்கவும் செய்கின்றான்.

பாவங்களைச் செய்வதால் ஜனனம் ஏற்படுகின்றது. காரியங்கள் செய்யக் காரணம் ஆசை. ஆசையால் கோபமும் ஏற்படுகின்றது. காமமும் எழுகின்றது. பாவம் செய்ய நேரிடு கின்றது. எனவே மீண்டும் பிறப்பு.

எல்லாம் ஒன்று என்ற ஞானம் எமக்கு ஏற்பட்டுவிட்டால் ஆசை எமக்கு ஏற்படாது. ஆசை இல்லையேல் கோபம் இல்லை, பாவம் இல்லை, காரியம் இல்லை, ஜனனமும் இல்லை, துன்பமும் இல்லை.

நிலையாக எல்லாமே ஒன்றாக இருப்பது "சிவம்" ஒன்று தான். பகவானும், பக்தனும் ஆரம்பத்தில் இரண்டாகத் தோன்றி னாலும் பக்குவம் வரும் போது இருவரும் ஒன்றாகி விடுகின்ற னர். இதையே இரண்டறக்கலத்தல் என்கின்றோம்.

இந்துமதம், ஒருவரான கடவுளுக்கு அவரவர் மனோ பாவங்களுக்கு ஏற்ற வகையில் வழிபடுவதற்காக பல ரூபங் களில் பல தெய்வங்களைக் காட்டியுள்ளது. இவ்வடிவங்கள் வெறும் கற்பனையில் எழுந்தவை அல்ல. ஒன்றாக இருக்கும் பரமாத்மா தான் பல்வேறு மகான்களுக்கு பல வடிவங்களில் தரிசனம் தந்துள்ளார். அந்த மகான்களும் அந்தந்த மூர்த்தி களுடன் பிரத்தியட்சமாகப் பழகி பக்தி செய்துள்ளதை நாம் படித்துள்ளோம். அதே போன்று நாமும், தரிசிப்பதற்காக இன்ன மந்திரத்தை இன்ன உபாசனையுடன் மேற்கொண்டால் கறிப்பிட்ட மூர்த்தியின் அருளைப் பெறலாம் என முன்னோர்கள் எமக்கு வழிவகுத்துத் தந்துள்ளார்கள்.

எனவே வழிபாட்டு முறை எதுவானாலும், பக்தி ஒன்று தான். எந்த மதமானாலும் பக்தி அங்கு மத்தியஸ்தானம் வகிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, நாமும் எமக்கு எந்தத் தெய்வ முகூர்த்தம் உகந்ததோ அதைப் பின்பற்றி நாள்தோறும் தியானித்து வழிபட்டு நல்லன செய்து நலம் பெறுவோம். ●

## 31. துளசி

**து**ளசிப் பத்திர வைணவர்களாலும் சைவர்களாலும் பூசிக்கப்படுவது கண்கூடு. இப்பத்திரத்தின் மேன்மையும், தூய்மையும் சொல்லுந்தரமன்று. இப்பத்திரத்தின் பின்னால் இருக்கும் வரலாறு ஒன்றை நோக்குவோம்.

தூய்மையை அருளும் துளசி முற்பிறப்பில் ஒரு பெண்ணாக வாழ்ந்தாள். இவள் கண்ணபிரான் அருளைப் பெற்ற ராதை யின் தோழியாக இருந்தவள். அப்போது சந்தர்ப்பவசத்தால் கண்ணனின் சாபம் பெற்று பூவுலகில் தர்மசத்துவசன் என்பவனுக்கு மகளாகப் பிறக்க நேரிட்டது. இக்குழந்தைக்கு பெற்றோர் துளசி எனப் பெயரிட்டு சீர் சிறப்போடு வளர்த்து வந்தனர். துளசி என்ற சொல்லுக்கு "தன்னிகர் இல்லாதவள்" என்றும் பொருள் உண்டு.

பூர்வ ஜன்ம பலனின்படி, அழகும் குணமும் நிரம்பிய துளசி வளர்ந்து சங்கசூடன் என்னும் அரசிளங்குமரன் ஒருவனை மணந்தாள்.

சங்கசூடன் தேவிபக்தன். வீர பராக்கிரமம் உள்ளவன். தேவியின் வலிமையால் ஒப்பற்ற வரங்களைப் பெற்றவன். ஆனால் தான் பெற்ற வரம்பிலா வர வலிமை காரணமாக சங்கசூடன் தற்பெருமையும் அகந்தையும் கொண்டான். எல்லோரையம் அடக்கி ஆள முற்பட்டான். தேவர்களையும் பிடித்துச் சிறை வைத்தான்.

வழக்கப்படி தேவர்கள் சங்கசூடனின் கொடுமைகளை எம்பெருமானிடம் முறையிடவே எம்பெருமான், அவனை அழிக்கத் திருவுளம் கொண்டார்.

அதற்குத் திருமாலின் உதவியையும் நாடினார். கற்பிற் சிறந்த பதிவிரதையான துளசியின் சக்தி, மிக வலியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கற்புடன் திகழும் வரை யாராலும் சங்கசூடனைக் கொன்று வெற்றி கொள்ள முடியாது. என்ற உண்மையை அறிந்த திருமால் ஓர் உபாயம் செய்தார்.

தான் சங்கசூடனின் வடிவெடுத்து வந்து துளசியின் முன் நின்று தன்னையே அவள் கணவன் என எண்ணவும் வைத்தார்.

இதனால் அவளுடைய பதிவிரதா தர்மம் களங்கமடைந்தது. பின்னர் இதனை உணர்ந்த துளசி பதை பதைத்தாள். கடும் சினமும் கொண்டாள்.

திருமால் அவளைச் சாந்தப்படுத்தி "நீ அடுத்த ஜன்மத்தில் என்னையே கணவனாக அடைவாய்" என்று உண்மையை உணர்த்தினார். பின்னர் சங்கசூடனைத் சங்கரித்தார்.

சங்கசூடனின் உடலோடு தானும் தீயில் வீழ்ந்து தன் வாழ்வை முடித்துக் கொண்டாள் துளசி.

அவள் உடலைத் துளசிச் செடியாக மாற்றி அவளைச் சிரஞ்சீவியாக்கினார் திருமால். அன்று முதல் துளசி பரிசுத்த மானவளாக பாவங்களைப் போக்கும் பரம கல்யாணியாகத் திகழ்கின்றாள்.

மகாலஷ்மியின் சொரூபம் துளசி: எனவே துளசி இருக்குமிடத்தில் மகாவிஷ்ணுவும் எப்பொழுதும் வாசம் செய்வார்.

துளசிப்பத்திரம் கொண்டு பூசை செய்தால் 1000 பாற்குடங்களால் விஷ்ணு பகவானுக்கு அபிஷேகம் செய்யும் பயன் கிடைக்கும்.

விஷ்ணுவுக்குரியதெனக் கூறப்படும் துளசி சிவபெருமானுக்கும் அர்ச்சிக்கப்படுகின்றது. எடுத்து வைத்த துளசிப் பத்திரங்களை மூன்று நாட்களுக்குப் பூசை செய்யப் பயன்படுத்தலாம். அத்தோடு துளசி அதி மருத்துவ மகிமையும் வாய்ந்தது.

எனவே, இத்துணை மேன்மை பொருந்திய துளசிச் செடியை யாமும், எமது இல்லங்களில் புனிதமாக வளர்த்து வழிபாட்டுக்குப் பயன்படுத்தி நற்பயன் பெறுவோமா!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. இறைவனை எப்போது காண்பது!

இறைவன் இருக்கின்றானா என்ற கேள்வி எழுப்பும் சிலரின் மனதிலே இறைவனைக் காணுதல் என்பது எவ்வாறு சாத்தியமாகும்! இறைவன் இருக்கின்றானா? அவ்வாறு ஆயின், அவன் எங்கே? என்று ஒருவன் கேள்வி எழுப்புவானே யாகில், அவன் நன்றாகக் குழம்பியிருக்கிறான் என்பது தான் அர்த்தம் - இவ்வாறு அவனை வினா எழுப்பத் தூண்டியதும் அந்த ஆண்டவனே தான் என்று நாம் கொண்டு மனம் ஆற வேண்டும். அதிலும் ஒரு உள்ளர்த்தம் இருக்கத்தான் செய்யும்.

இறைவனைக் காண்பது கடினம் தான். இது சுலபமான காரியமல்ல – கடினமானது எது எனின் அவனைப் பார்ப்பதற் குரிய கண்ணாடியாகிய எமது இருதயத்தைப் பரிசுத்த மாக்குவது தான். இதற்காக நாம் இறைவன் பொருட்டு, எமக்கு பிடித்தமான சிலவற்றை விட்டு தியாகம் செய்வதற்கும், எமக்கு மிகவும் வெறுப்பான சிலவற்றை ஏற்றுக் கொள்வ தற்கும், தயாராக நாம் இருக்க வேண்டும். இதுவும் சற்றுக் கடினமானது தான். ஆனால், இதைப் பயிற்சியில் கொண்டு வரக் கூடியவன் தான் உண்மையில், ஒரு யதார்த்தமான இறைபக்தன்.

இறையை எண்ணிப் பார்க்க நல்ல அறிவு வேண்டும். அவனை அணுக ஞானம் வேண்டும். ஞானம் என்பதை, ஒரு இரவிலோ அல்லது ஒரு நாளிலோ எம்மால் அடைந்து விட முடியாது. ஞானம் என்பது நாக மணியைச் சுற்றிக் கிடக்கும் நாகத்தைப் போன்றது. ஆத்மாவைச் சுற்றி வளைத்திருக்கும் நாகம் போன்றது. இத்தகைய நாகம் போன்ற தீயவற்றைச் சுட்டுப் பொசுக்க கடும் தவம் போன்றவை வேண்டும். கடும் தவம் போன்ற முயற்சியால் தான் எமக்குள் ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்யமுடியும்.

காணக் காணச் சலிக்காத, பழகப்பழக அலுக்காதது எதுவோ, அதுவே சாஸ்வதமான அன்பையும், இன்பத்தையும் தரவல்லது. எம்முள் புல் உணர்வுகள் கடுகளவு தன்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் வரை இறைவனது ஞான ஒளியை நாம் காணுதல் என்பது சாத்தியமன்று. அதுவெறும் மனச் சங்கற்பமாகவே அமையும். பக்தி என்னும், எமது மன உணர்வுகள் கடந்து அப்பாற் செல்லும் போது தான் பேரானந்தம் பிறக்கின்றது.

இந்தப் பிரபஞ்சம் இருக்கிறது. இதை நாம் நம்புகின்றோம். இதை நாமோ அல்லது எமது மூதாதையரோ, படைக்க வில்லை என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். எனவே, இப்பிரபஞ்சத்தைப் படைத்த இன்னொருவன் இருக் கின்றான். சரி, நாம் வாங்கி அணியும் ஆடைகளை தைத்த வரை நாம் நேரில் காணாவிடினும், அவ்வாடைகளை நிர் மாணித்தவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை நாம் நம்பித் தானே ஆக வேண்டும். அதுபோல் தான் இறைவனையும் இந்த வகையில் பிரபஞ்சத்தைப் படைத்த ஒருவன் உள்ளான் என்ற பிரத்தியட்ச ஞானம் எம்முள் எழும் போது, நாமோ, மற்றவரோ கர்த்தாக்கள் அல்ல, வெறும் கருவிகளே என்பதை நாம் சுலபமாக அறிந்து கொள்வோம். இந்நிலையில் எமது அகங்காரம், ஆணவம் அழிய ஆரம்பிக்கின்றது.

எமது மன சலனங்களைத் தீர்ப்பதற்கு பெரியோர் உப தேசங்களைக் கேட்க வேண்டும். இதற்கு வாய்ப்பில்லையேல் குரு உபதேசங்களை படித்தாகத் தன்னும் வேண்டும். எமது துன்பங்களைத் தீர்க்கும் ஆற்றல், எமக்கில்லாவிடினும், அதனை தீர்க்கவல்ல சக்தியை அல்லது மார்க்கத்தை நாம் தேடிப் போகலாமல்லவா!

உலகம் முழுவதும் குப்பை கூளங்கள் பரந்து கிடக் கின்றன. அவை யாவற்றையும் எம்மால் முற்றும் முழுதாக சுத்தப்படுத்த முடியாவிடினும், எமது வீட்டு முற்றத்தை தன்னும் நாம் தினமும் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைத்தி ருக்கலாம்தானே. அதேபோன்று உலகத்தோர் மனங்களை எல்லாம் எம்மால் சுத்திகரிக்க முடியாவிடினும், எமது மனதின் அழுக்குகளைத் தன்னும் நீக்கி நாம் வாழ முயற்சிக்க வேண்டும்.

இதனை ஒவ்வொரு தனி மனிதனும் மேற்கொண்டால் வீட்டில், பின்னர் நாட்டில், ஏன் உலகில் குற்றவாளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏது? குறையேது? பூமியே சொர்க்கமாகிவிடாதா? எனவே! இன்பமும் துன்பமும் எம் கையிலேதான் உள்ளன. இல்லையா?

*"இன்பமும் துன்பமும் பிறர் தர வாரா."*

## ௩௩. வாழ்க்கையும் ஒரு வியாபாரமே!

எமது வாழ்க்கையும் ஒரு வகை சந்தையே! ஒரு வகை வாணிபமே. அங்கே ஏற்ற இறக்கங்கள், நயநட்டங்கள், சுகதுக் கங்கள், கூட்டல், கழித்தல்கள், வரவு, செலவு, கொடுக்கல், வாங்கல், பேரம் பேசல், எதிர்பார்ப்புக்கள் என்பன இடம் பெறுதல் வழமை. இவ்வாணிபச் சந்தையின் மத்தியிலும் நாம் முக்திக்குரித்தான பக்தியை மறந்து விடலாகாது. பக்தி, வல்லமை வாய்ந்தது.

மக்கள் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் எம்முள் மூன்று வகையினர் உளர். அவர்களுள் ஒரு சாரார் பிறரின்பம் கண்டு மகிழ்வோர், பிறரை பொருட்படுத்தாது தம்இன்பம் நாடுவோர் மற்றுமொரு சாரார். பிறர் இன்பம் தடுப்போர் ஒரு சாரார்.

எம்முள் கோபம், பொறாமை, பேராசை ஆகியன தவிர்க் கப்படல் வேண்டும். அவை சத்குணங்களேயல்ல, சகதி. அவற்றிலிருந்து விடுபட்டு அவற்றுடன் ஒட்டாது நாம் வாழ முயல வேண்டும். தாமரை மலரைப் பாருங்கள்! நீரிலிருந்து மேல்வரினும் தாமரை, நீரில் ஒட்டாது. நீரில் நனையாது, இவ்வண்ணம் தீய குணங்களிலிருந்து நாம் விலகி வாழ முற்பட வேண்டும். சற்று நின்று தாமரையைப் நோக்குங்கால் அதற்கும் சகதிக்குமான தொடர்பு ஏதாவது தெரிகிறதா? இல்லையே! இயற்கையைக் காண்கின்றோம். இரசிக்கின் றோம்.

ஈஸ்வரனின் தேகம் தான் இயற்கை. கடவுள், இயற்கை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் இதுவே வரிசைக்கிரமம். ஆனால் இன்று நம்முள் பவர் இவ்வரிசைக் கிரமத்தை மாற்றி அமைத்து மனிதன், இயற்கை, கடவுள் எனக் கொண்டு நடக்கத் தலைப்பட்டுள்ள னர். எப்படியிருக்கின்றது? மூடத்தனம். மனிதன் தனது நன்மையில் அதிக கவனம் செலுத்துகின்றான். தனது வசதிக் காக இயற்கையை அழிக்கவும் அவன் தயங்குவதில்லை. இயற்கை இறைவனின் சொத்தல்லவா? இயற்கையை அழித்தல் தெய்வ நிந்தனை என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டாமா? மனிதன், மூன்றாமிடத்தில் கடவுளை வைக்கலாமா? இறைவனின் கர்ப்பத்தில் உள்ள குழந்தைகளே நாம். கருவின் கடும் உதைப்புக்களை தாயான வள், பெருமையையுடன் தாங்கிக் கொள்ளவில்லையா? இது போலவே இறைவனும் எமது தவறான செயல்களை, அட்ட காசங்களை, தன் கருணையாலும் சகிப்பு தன்மையாலும் தாங்கிக் கொள்கிறான் என்பதை நாம் உணர வேண்டாமா? இறைவன், துர்க்கையாக வரம் தருகிறார். இலக்குமியாக வளம் தருகிறார். சரஸ்வதி ஆகி ஞானம் தருகின்றார். இவற்றிற்கெல் லாம் நாம் இறை என்னும் தாய்க்கு என்ன கைமாறு செய்கின்றோம்? ஒரு துதி தன்னும் தவறாது நன்றிக் கடனாக செலுத்த வேண்டாமா? சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம் இது.

இறைவன் யாருக்காக சிருஷ்டியை ஆரம்பித்தான்! தன்னை வெளிக் காட்ட இறைவன் எண்ணினான். மலைகள் தோன்றின, நதிகள் பாய அரம்பித்தன. கீழே பூமி, மேலே வானம், சமுத்திரம், கடல், நிலம், ஓடும் நதிகள், சூரியன், சந்திரன், பாலைவனங்கள் யாவும் தோன்றின. யாவும் இறையின் அம்சங்களே! எம்மிடம் சக்தி என்று ஒன்றுமேயில்லை. எமது நினைப்புத்தான் பெரிது.

நாம் பறவைகள் தாம், ஆனால் இறகுகளோ ஈசனிடம்.
எம்மிடம் பாதங்கள், ஆனால், பாதையோ அவனிடம்.
நாம் பார்க்கும் கண்கள் எமதே, ஆனால் வடிவம் இறைவன் வசம்.
உலகம் நம்மிடம் ஆனால் மோட்சம் அவனிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எமது தேவைகள் என்ன? சிந்திப்போமா?

கல்வி மனிதனைச் சம்பூரணம் ஆக்குகின்றது. வாழ்வின் பெரும் சாபக்கேடே, அறியாமையே தான். அறியாமையை உருவாக்கித் தருவது பெரும் துன்பங்களே! ஆசைகளே! நாமே எமது அறியாமைக்கு பாத்திரவாளிகள். யாரையுமே குறை சொல்ல வேண்டாம். எமது அகங்காரமே எமது அழிவுக்கு காரணம். சற்று சிந்தியுங்கள்! பார்க்க முடியாதவன் குருடன் அல்லன். பார்க்க மறுப்பவனே குருடன். எனவே குழப்பங்கள் அகல பணிவு தேவை. நாம் சிரமப்பட்டு பணிவை மேற்கொள்ள வேண்டும். நல்லவற்றைக் கற்க வேண்டும். பணிவான மார்க்கங்கள் சமயத்திடமே உள்ளன. பணிவு என்பது சமயவாதிகளிடம் உள்ளன. அதுவே எமது வெற்றிக்கு வித்தாகும். சமயமே எமக்கு வழிகாட்ட வேண்டும். எனவே நாம் சமயத்தை நாடி எமது பயணத்தை திசை திருப்புவோம். அதற்காக நாம் துறவி ஆக வேண்டும் என்பதல்ல அர்த்தம். இல்லறமே நல்லறம். அதிலும் தர்ம சிந்தனைக்கு இடமுண்டு. கடமைகள் உண்டு. சமய சடங்கு களை ஆற்ற, விருந்தோம்ப, உகந்தநிலை இல்லறமே. இதன் காரணமாகத்தான் "இல்லறம்" என்று தனிப்பட கூறாமல், "இல்லற தர்மம்" என நூல்கள் கூறியுள்ளன. இல்லறத்திலேயும் பக்தி இடம்பெற வேண்டும். தர்மம் தலை காக்க வேண்டும்.

இந்த இல்லறம் என்னும் பயணத்தை யாம் நடாத்தும் போது, எமக்கு எத்தனையோ எத்தனையோ விதமான தடங்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அங்கு தான் நாம் விழிப்பாக இருந்தாக வேண்டும். இந்நேர விழிப்பால் தான் வாழ்வில் வெற்றியடைய முடியும்.

இதனை அப்பர் சுவாமிகள் மிக அழகாக விளக்கி உள்ளார். எப்படியென்று பாருங்கள்!

**மனமெனும் தோணி பற்றி மதி எனும் கோலை ஊன்றி**
**சினமெனும் சரக்கை ஏற்றி செறிகடல் ஓடும் போது**
**மதன் எனும் பாறை தாக்கி மறியும் போது அறிய ஒண்ணாது**
**உனை உன்னும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது அப்பர் சுவாமிகளது தேவாரம். பிறவியை ஒரு கடல் என உருவகிக்கிறார் அப்பர் அடிகள். அதிலே ஒருநிலை தான் இல்லறம். பிறவி எனும் கடலிலே நாம் பயணம் செய்யும்போது நாம் ஒரு தோணியை அமர்த்திக் கொண்டு பயணிக்கின்றோம். அத்தோணிதான் எமது மனம். அத் தோணியைச் செலுத்தும் கோலாக நாம் எமது மதியை உபயோகித்தாக வேண்டும். கடல் பாதையிலே காமம் என்னும் பாறை எமது பிறவித்தோணியோடு மோத நேரிடும். "அந்நேரமே நமசிவாய" எனும் மந்திரத்தை யான் செபிக்க நீ எனக்கு அருள்வாய் இறைவா என இறைவனை இறைஞ்சுகிறார் அப்பர் சுவாமிகள். அலை கடலில் தத்தளிக்கும் நேரத்தில் எமக்கு அபயம் அளிப்பது "நமசிவாய்" என்னும் பஞ்சாட்சர மந்திரம் ஆகும்.

கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயவே.

ஐந்தெழுத்தின் புணை பிடித்து போற்றிப் புகழ்ந்து வாழ்ந்தவர் மணிவாசகப்பெருமான், "நமச்சிவாய" எனும் மந்திரத்தைக் கெட்டியாய் பற்றிய வண்ணம், தம்மை துன்பக் கடலினின்றும் காப்பாற்றியருள்வாய் என, எம்பெருமானை பின்வருமாறு பாடியுள்ளார்.

**"போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகிறேன்**
**போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை**
**போற்றியோ நமச்சிவாய புறம்எனை போக்கல் கண்டாய்**
**போற்றியோ நமச்சிவாய, ஜயஜய போற்றி போற்றி"**

அப்பர் சுவாமிகள், மணிவாசகர் போன்றோர் இத்துணை தூரம் பஞ்சாட்சர மந்திரத்தின் அருமை, உண்மைகளை உணர்ந்து அதனை இடைவிடாது செபித்து வாழ்ந்திருந்த வரலாறு படித்தும் நாம் இன்று என்ன செய்கின்றோம். எப்போதாவது செபிக்கின்றோம். அதில் ஒழுங்கில்லை சிரத்தையில்லை இதனால் எம்வாழ்விலும் ஒழுங்கில்லை, நிம்மதியில்லை, காலையும் மாலையும் வெண்ணீறு அணிகையில் பஞ்சாட்சர மந்திரத்தை சில நிமிடங்கள் தன்னும் நாம் தவறாது, சிரத்தையோடு உச்சரிக்க வேண்டும். மனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியும் இணைந்து செபித்தால் பஞ்சாட்சர மந்திரம் எத்துணை இடர்வரினும் எமைக் காப்பாற்றி நிற்கும் என்பது உறுதி.

**“கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயவே”** எனும் அப்பர் சுவாமிகளது பாடல் வரிகள் நாம் எல்லோரும் அறிந்ததே.

எம்மிடம் ஆன்மீகம் உறைந்துள்ளது. ஆனால், நாம் அதனை உணர்ந்ததாக இல்லை. அதனை உறைநிலையில் விடக் கூடாது. அதனை இன்னமும் உறைய விட்டுள்ளோம் நாம் என்றே கூறலாம். இதன் காரணமாகத் தான் முன்பில்லாத துன்பங்கள், துயரங்கள் எம்மேல் இன்று வந்து உறைகின்றன.

“அருந்தவம் தரும் அஞ்செழுத்து ஓதினால் அனைத்தும் வெற்றி” என்பது அருள் வாக்கு. இந்த இடத்தில் அப்பர் சுவாமிகள் வாழ்வில் இடம்பெற்ற ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைச் சொல்கிறேன், கேட்டுப் பாருங்கள்!

பணக்காரன் ஒருவன் இறந்து விட்டான். இவனிடமிருந்த பணத்தை அனுபவிக்க அவன் இன்னமும் பல்லாண்டு காலம் வாழ்ந்திருக்கலாம் எனத் தோன்றியது, அவனது சுற்றத்தார்க்கு. அவர்கள், மிகுந்த ஆதங்கத்துடன் அப்பர் சுவாமிகளை அணுகி இவன் **“பிழைப்பானா இறப்பானா”** என வினாவினர்.

அதற்கு சுவாமிகள் இவன் வாழ்ந்த போது **“நமசிவாய”** மந்திரத்தை வாயார ஓதினானா? எனக் கேட்டார். “ஐயோ! நமச்சிவாயத்தை கேட்டும் அறியான் இவன். அவனுக்கு மூன்றெழுத்து மந்திரமான “பணம்” என்ற சொல்லே, தாரக மந்திரமாயிருந்தது” என்று பதில் வந்தது.

“சரி, அஞ்செழுத்தை நெஞ்சழுத்தாது போனால் போகட்டும்! செந்தழல் மேனியான் சிவன் பற்றித் தன்னும் எப்போதாவது அவன் பேசியிருப்பானா?” என்று கேட்டார் சுவாமிகள்.

**“கடவுள்”** என்ற சொல்லே அவன் காதில் பட்டிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒரு பெரிய குடும்பத்தின் தலைவன். பொருள் வேட்டை யில் ஈடுபட்டிருந்த அவனுக்கு சிவனார் பெருமை எங்கே தெரிந்திருக்கப் போகின்றது? இது பதில்.

"சரி, விடுங்கள். வாழ்க்கையில் ஆலய தரிசனம் செய்திருப் பானா? கோயில் வலம் வந்தானா இவன்?" என வினாவினார் சுவாமிகள். சுவாமி! "பொருளைத் தேடி உலக நாடுகளை வலம் வந்தானே ஒழிய எம்பெருமான் திருக்கோயிலை இவன் ஒரு முறை தன்னும் வலம் வந்தது கிடையாது" எனப் பதில் வந்தது. இருக்கட்டும், உணவு உண்பதற்கு முன்னர் சில மலர்கள் தன்னும் தூவி இறையை வழிப்பட்டானா? அப்பர் சுவாமிகள் தொடர்ந்து வினாவினார். இல்லையே! சுவாமி வெந்தது பாதி வேகாதது பாதி என்று அவசரத்தில் ஓடி ஓடி இவன் உண்டானே ஒழிய, இவன் எங்கே உண்ணு முன் மலர் தூவி இறை சிந்தனை செய்தான்? எனப் பதில் வந்தது.

சரி, காலை, மாலை வெண்ணீறு அணியும் வழக்கம் தன்னும் இவனிடமிருந்ததா? கேட்டார் சுவாமிகள். இல்லையே ஐயா. நீராடியதும் ஒரு வித வாசனை மாவை முகத்தில் ஒத்திக் கொள்வான் அவ்வளவுதான். வெண்ணீறு அணியும் பழக்கம் ஒன்றும் இவரிடம் இருந்ததாக இல்லை.

அப்பர் சுவாமிகள் பெருமூச்சு விட்டார். அத்தகையவன் ஏன் பிறந்தான்? சாவதற்குத்தான் பிறந்தான். ஏன் இறந்தான்? மீண்டும் பிறப்பதற்காக இறந்தான். பிறந்து இறந்து வாழ்வதே இவன் போன்றோர் தொழில். சிவ சிந்தனையற்றோர் எவரா யினும் அவர் கதி இதுதான். அப்பர் சுவாமிகள் மேலும் அங்கு நிற்க விரும்பவில்லை. தொடர்ந்து நடந்தார்.

இதை எல்லாம் ஏன் இங்கு சொன்னேன் என்றால், இப்பணக்காரன் போல் யாமும் லௌகீகத்தில் மூழ்கி ஆத்மீகத்தை மறந்து விடக்கூடாது. இவன் செய்யத் தவறிய ஒவ்வொன்றும் வாழ்வில் யாம் செய்ய வேண்டியவை. அவற் றைத் தவறாது செய்வோம். பிறந்த பயனை அடைவோம். முயல்வோமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. பக்தி வயலில் பெண்மணிகள்

பெண் - பெண் என்றால் கிணற்றுள் போட்ட கல் போல் பேசாமல் அடங்கிக் கிடப்பாள் என்று எண்ணி விடக்கூடாது. பெண் என்பவள் அமைதியாகத் தோன்றும், ஆனால் ஆற்றல் மிக்க, உணர்ச்சிகளின் குவியல் என்று கூறலாம். பெண் நினைத்தால் எதையும் சாதித்து விடுவாள். ஆனால், நினைப்பதை நியாயமாக நினைத்தால் சரிதான். இல்லையா!

அடுக்களையிலிருந்து ஆத்மீகத்தின் உச்சி வரை பெண் காணப்படுகின்றாள். அதிகம் போவானேன். இந்து மதத்தில் அம்மை அப்பனாக எம்பெருமானின் அர்த்தநாரீஸ்வர வடிவத்தில் சரி பாதியாக இருக்கும் சக்தி யார்? பெண் தானே. சிவனுக்கோர் உமையாள், தேவேந்திரனுக்கோர் இந்திராணி, பிரம்மனுக்கோர் சரஸ்வதி, காஞ்சியில் காமாட்சி, காசியில் விசாலாட்சி, மதுரையில் மீனாட்சி என பெண்ணின் பெருமை வீறுகொண்டுள்ளது.

## பெண்களும் ஆத்மீகமும்

கிறிஸ்தவர்களுக்கு ஓர் அன்னை மேரி என நோக்கின் இந்துமத ஆத்மீகத்துறையில் அன்றிலிருந்து இன்று வரை பெண்களின் பங்கு அளப்பரியது. உபநிடத காலத்தில் மைத்ரேயிலிருந்து ஆரம்பித்து, காரைக்கால் அம்மையார், பாண்டிமாதேவியார், மங்கையர்கரசியார் மற்றும் மெய்யடி யார்களான நாயன்மார்களின் பத்தினிமார்களாக அமைந்த பெண்பாலார், இராமகிருஷ்ணபரமகம்சருக்கு அமைந்த அன்னை சாரதாதேவியார் எனத் தொடர்ந்து இன்று எமது நாட்டின் வடக்கே தெல்லிப்பழையில் சமய வாழ்வே தனது வாழ்வென, சமயத்திற்கே தன்னை அர்ப்பணித்து அங்குள்ள மக்களை அறநெறியில் அணைத்துச் சென்ற துர்க்கா துரந்தவி செல்வி தங்கம்மா அம்மையார் வரை, பெண் ஆன்மீகவாதி களாகக் குறிப்பிடலாம்.

பாண்டிமாதேவியின் சமய ஈடுபாடு பாண்டியனை வெப்பு நோயிலிருந்து காப்பாற்றியது. ஞானக் குழந்தையாம், ஞான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தரை "மந்திரம் ஆவது நீறு" எனப் பாட வைத்து, சமய இலக்கியத்துக்கு ஒரு திருநீற்றுப் பதிகத்தைத் தந்தது. பாண்டிய மன்னனையும், மக்களையும் மீண்டும் சைவ சமயத்தின் புனித எல்லைக்குள் நுழைய வைத்தது. இஃது பாண்டிமாதேவியின் ஆன்மீக ஈடுபாட்டுக்கோர் எடுத்துக்காட்டு.

இனி, பெரிய புராணத்துக்கு வருவோம். சிறுத்தொண்டரின் பக்தியை உலகத்தோர்க்கெடுத்துக் காட்ட விழைகின்றார் ஈசன். சிவனடியாராக எழுந்தருளி சிறுத்தொண்டரிடம் பிள்ளைக் கறியமுது கேட்டு நிற்கின்றார். பிள்ளைக் கறி அமுது வேண்டும் என்ற வாக்கில், பிள்ளைக் கனி அமுதையே கேட்டால் பெற்றோர்க்கு எப்படியிருக்கும்! அதிலும் அப் பிள்ளையைப் பெற்றெடுத்த அன்னையின் மனோநிலையை எண்ணிப் பார்க்கவே வேண்டாம். ஆனால் அந்த அன்னையும் தந்தையோடு இணைந்து வாளால்மகவரிந்து எம்பிரானுக்கு அமுதூட்ட முன் வந்தாள் என்றால் அவளது பக்தியை, பண்பை, ஒழுக்காற்றலை, இறைத் தொண்டின் மேன்மையை, இறை நம்பிக்கையை, ஆத்மீக ஈடுபாட்டை என்னவென்று சொல்வது! இவை இடம்பெற்றது அன்று. இன்றைய நிலைக்கு வருவோம்.

பெண்கள் சகல துறைகளிலும் முன்னேறிக் கொடி கட்டிப் பறக்கும் காலம் இது. கலையா, கணனியா, இலக்கியமா, கற்பித்தலா, சட்டமா, வைத்தியமா, ஏன் காவல் துறையா எங்குமே பெண்கள்! பெண்கள்! பெண்கள்!

இருப்பினும், ஒரு இல்லத்தின் தலைவியாக, மணிமகுடமாக, சுயநலமற்ற தியாகியாக விளங்கும் பெண்ணுக்கு சமய அறிவும், பக்தியும், சமய ஈடுபாடும் இருந்தால் தான் அந்தக் குடும்பம் சிறப்புறும். அதன் வழி அந்த சமுதாயமே நேர்மை யானதோர் நிம்மதி நிறைந்த சமுதாயமாக உருவாகும். எந்த மதமாக இருப்பினும் சரி, அதற்கு பெண்ணின் சமய ஈடுபாடு மிக அவசியம். வீட்டில் அம்மா கும்பிடுவதைப் பார்த்துத்தான் குழந்தையும் "அப்புசாமி" என்று மழலை பேசிக் கை கூப்பும். வீட்டிலிருந்து தான் பக்தி நெறி நாட்டுக்குப் பரவ வேண்டும். அதுவே இயல்பு முறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட. வேலைகளின் பழுவின் காரணமாக வீட்டில் அன்னையின் ஆன்மீக ஈடுபாடு பெரிதளவு அமைய முடியாவிட்டாலும் தினமும் பிரார்த்தனை சிறிது நேரம் தன்னும் இல்லத்தில் ஒழுங்கானதாக, புனிதமானதாக, தூய்மையானதாக, கிரமமானதாக அமைய வேண்டும். சிறிது நேரம் தன்னும் இல்லம் ஒரு அறநெறிக் கூடமாக அமைய வேண்டும். அன்னை இறை நம்பிக்கையைப் பேணினால் குழந்தை அதனை பின்பற்ற முடியும். இ∴து பக்தியின் அடிப்படை. மனோபலத்திற்கு ஒரு மார்க்கம். எந்த மதமாக இருப்பினும் இல்லத்தில் சமய வழிபாடு அற்ற வாழ்வு ஆதாரமற்றது, பலமற்றது, அடித்தளமற்றது. எனவே, இன்று நாம் கொண்டுள்ள சமய ஈடுபாட்டோடு எமது எதிர்கால பரம்பரையையும் மேலும் நல்ல மனம் படைத்த, புரிந்துணர்வு கொண்டதோர் சமுதாயமாக்க தாய்க்குலம்தான் மனம் வைக்கவேண்டும். குழந்தையும் அன்னையின் கரங்களிலே தான். அவர்களின் எதிர்காலமும் அவளின் கையிலேதான். இது அன்னையர்க்கு ஓர் அன்பான வேண்டுகோள், சமர்ப்பணமும் கூட. ●

## 35. அருளின் வேகம்

**வா**யு வேகம் மனோ வேகம் என்பார்களே, அவற்றிலும் பார்க்க வேகமானது ஒன்று உள்ளது. அது தான் என்ன என்று இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

வாயு வேகம். வாயுவிலும் பார்க்க அதி வேகமானது மனோ வேகம், நாம் இருந்த இடத்தில் இருக்க எமது மனமோ எண்ணிய உடனே எங்கு செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் நொடிப் பொழுதில் சென்று திரும்பியும் விடும். இது தான் மனோ வேகம். இது நாம் அனுபவத்தில் கண்ட உண்மை.

ஆனால், இந்த வாயு வேகம், மனோ வேகம் இரண்டிலும் பார்க்க மிக அதி வேகம் வாய்ந்தது தான் இறைவனது அருள் வேகம், கருணை வேகம். தனது மெய்யடியார்களுக்கு இன்னல் ஏற்படும் போது இறைவன் துடிதுடித்து அருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியும் வேகம் இருக்கின்றதே, அதுவே இரண்டையும் விஞ்சும் அளவுக்கு அதி வேகம் வாய்ந்தது.

உதாரணம் வேண்டுமா? சொல்கின்றேன்.

முதலாவது, தாயுமான சுவாமிகள். தனது மெய்யடியாளுக் காக அவரது மகளுக்கு காவேரி கடந்து வந்து பிரசவமே பார்த்த வேகம். இரண்டாவது, பகவானுக்குத் தாமரை பூ கொய்ய ஆற்றில் இறங்கிய கஜேந்திரன் என்னும் தலைவன் யானையை முதலை வடிவில் இருந்த முன்னாள் சபிக்கப்பட்ட கந்தர்வன் என்பவன் நீருள் இழுக்க, கஜேந்திரன் முதலை யோடு போராடுகின்றான். ஒரு புறம் பகவானுக்கு பறித்த தாமரை மலர் கீழே விழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது, தன்னை முதலையிடமிருந்து காப்பாற்றியாக வேண்டும், போராட்டம் நீடிக்கின்றது, தாமரை பிடித்த தன் தும்பிக்கையைஉயர்த்தியபடி, போராடுகின்றான். முதலையோடு கஜேந்திரன்.

இந்த நேரத்தில் தான் பகவான் கஜேந்திரன் மேல் கருணை பொழிய ஆரம்பிக்கின்றார். இச்சம்பவம் கஜேந்திர மோட்ச கதையில் வருகின்றது. வைகுந்தத்திலிருந்து நாராயணர் கஜேந்திரன் என்னும் யானையைக் காப்பாற்றப் பறந்து (ஓடோடி) வந்த வேகம் இருக்கின்றதே அது தான் கருணை வேகம். பக்தி உலகில் அந்தக் கதைக்கு ஒரு தனி மவுசு உண்டு. பெருமாள் கஜேந்திரனைக் காப்பாற்றப் புறப்பட்ட போது, அவர் தன் மேல் ஏறிப் புறப்படுவார் என்று கருடன் அவர் முன்னே வந்து நின்றதாம், "இவன் வேகம் போதாதே. இவன் வேறு குறுக்கே வருகின்றானே" என்று அவனைக் கையில் எடுத்து கக்கத்தே அடக்கிக் கொண்டு புறப்பட்டாராம் பகவான்.

புறப்பட்ட அவசரத்தில், பெருமாள் தன்னருகேயிருந்த இலக்குமிதேவியின் மேலாடையை உருவித் தன் தோளில் போட்டுக் கொண்டு கஜேந்திரனைக் காத்திட விரைந்தாராம். இவ்வாறு கற்பனை செய்து கஜேந்திர மோட்ச கதையை ஆந்திர தேசத்தில் சொல்வோருமுண்டு. இக்காட்சியைக் கண்ட கஜேந்திரன், முதலை காலைக் கௌவியதால், ஏற்பட்ட வலியில் துடித்து கொண்டிருந்த வலியையும் மறந்து, தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய கண்களை இறுக்கிக் கொண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தானாம்.

இங்கு நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது, வாயு வேகத்தையும் மனோ வேகத்தையும் தாண்டிய, ஈசனின் கருணை வேகத்தையேயாம்.

பகவான் இப்படி எல்லாம் போக மாட்டார், சங்கு, சக்கரம், கிரீடம், பட்டுப் பிதாம்பரம், குண்டலம் என்றல்லவா இலாவண்யமாகப் போவார். என்னைப் பாருங்கள்! நான் எத்தனை அழகாக பட்டுடுத்தி பொட்டு வைத்து ஜவ்வாது பூசித் தானே எங்கும் புறப்படுவேன். அரச அவைப் புலவர் ஆன நானே இப்படி என்றால் பகவான் அப்படிச் செல்வாரா? என்று வாதாடினாராம் ஓர் அரச அவைப் புலவர். எல்லாம் தனக்கு வந்தால் தெரியும் எவை அவசியம் என்று கூறிப் போந்தார், கதை சொல்ல வந்தவர். ஒரு நாட்காலையிலே குளிக்க ஆயத்தமாகி அரையில் ஒரு துண்டோடு மாத்திரம் எண்ணெய் வழிய வழிய நின்ற அரச அவைப் புலவரிடம் உமது பேரப்பிள்ளை கிணற்றில் வீழ்ந்து விட்டான் காப்பாற் றும் என்று வந்தவன் பதற்றத்துடன் கூற புலவர் துண்டும் துணியும் நிலத்தில் வீழ்ந்தது தெரியாமல் ஒரே ஓட்டமாக தெருவில் இறங்கி ஓட, அங்கே சிரித்தபடி பேரக் குழந்தையோடு கதை சொல்பவர் நிற்க கண்டார். அப்போது அரண்மனைப் புலவரைப் பார்த்து கதை சொல்பவர் கூறினார் "உமது பேரக்குழந்தைக்கு ஆபத்து என்றதும் உமது பட்டு வஸ்திரமும் ஜவ்வாதுப் பொட்டும் எங்கே ஐயா போயிற்று? கௌபீனத்தோடு ஓடினீரே! உமது வேகம் இப்படி என்றால் பகவான் தன் அடியார் துன்பம் தீர்க்க எத்தனை வேகத்தில் சென்றிருப்பார்!" என்றாராம்.

எனவே, நாமும் தினமும் சிறிது நேரமாவது மனதார இறையை வழிபட்டு, இறைவனின் இந்தக் கருணை வேகத்தை அனுபவிக்க முயற்சிப்போமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. யாமிருக்கப் பயம் ஏன்?

இந்த இனிய புனிதமான காலைப் பொழுதினிலே, பயபக்தி பற்றிச் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

பயமும் பக்தியும் ஒன்றிணைந்தது தான் பயபக்தி. இங்கேயும் ஒரு கூட்டணி உண்டு. கூட்டணி அரசியலுக்கு மாத்திரம் உரியதல்ல, ஆத்மீகத்துக்கும் உரியதே. ஆத்மீகத்தில் பயம், பக்தியோடு கூட்டணி சேர்ந்தால் தான் பக்தி பலன் தரும்.

எம்மை, எமது உடம்பை எடுத்து கொள்ளுங்கள். இங்கேயும் ஒரு கூட்டணி உண்டு. எலும்பு, நரம்பு, இரத்தம், சதை, மனம் இவை யாவும் உயிர் என்னும் தனிக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்துள்ளன. இந்த அணியைப் பிரித்தால் அங்கு மரணம் சம்பவிக்கின்றது. ஒத்துழையாமை பிறக்கின்றது.

குழந்தை பிறந்த உடன் அதற்கு பெயர் சூட்டுகின்றோம். முன்பெல்லாம் எமது மூதாதையர்கள், இறைவனின் பல்வேறு நாமங்களை தம் குழந்தைகளுக்குச் சூட்டினார்கள். குழந்தை களை அழைக்கும் சாக்கில் தினமும் இறை நாமத்தைப் பற்பல தடவை அவர்களால் உச்சரிக்க முடிந்தது. எத்தனை நல்ல பயனுள்ள வாய்ப்பு அன்று! ஆனால், இன்று எல்லாமே தலை கீழாக மாறி வருகின்றது. இன்றைய குழந்தைகளுக்கு சூட்டும் பெயர்கள் எல்லாம் வளர்ப்புப் பிராணிகளுக்குச் சூட்டும் பெயர்கள் போல் அமைந்துள்ளன. சில பெயர்கள் வாகனங்களுக்கு அமையும் பெயர்களாக அமைந்துள்ளன. இங்கே தான் பயபக்தி அருகிக் காணப்படுகின்றது. இதற்கு விதி விலக்குகளும் இல்லாமல் இல்லை. ஒரு வேளை இந்த நவீன நாமங்கள் எண் சோதிடத்திற்குப் பொருத்தமாயிருக் குமோ?

பாட்டன், பாட்டி, தாத்தா முதலியவர்களது பெயர்களைத் தம் வாரிசுகளுக்குச் சூட்டும் வழக்கமும் முன்பு எம்மவரி டையே இருந்து வந்தது. இங்கே பயபக்தி தமது மூதாதை யர்கள் மேல் காட்டப்பட்டது, செலுத்தப்பட்டது. ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று?

'முருகன்' என்ற பெயரை எடுத்துக் கொள்வோம். இதில் எத்தனை பொருள்! அழகு, இளமை வனப்பு எல்லாமே அடங்கியுள்ளது.

முன்பு ஒரு குழந்தைக்குப் பெயர் சூட்டும் உரிமை யாருக்கு உண்டு என்ற சம்பிரதாயம் எம் மூதாதையர் களிடையே காணப்பட்டதுண்டு. பெற்றோரின் பெற்றோரை தவிர, குரு, குலகுரு இவர்கட்கே அந்த உரிமை வழங்கப் பட்டது.

குரு, உயிர், ஆத்மா, இதனைப் பற்றி எமக்கு புரிய வைப்பவனே குரு தான், ஆசான் தான். இவனே ஞான குரு. இவனுக்கு இல்லாத உரிமையா? இத்தகைய குருமாரிட மும் யாம் பயபக்தியுடன் பழகியாக வேண்டும். இதிகாசங் களை நோக்குவோம். இராமாயணத்தில், இராமனுக்குப் பெயர் வைத்தவர் யார்? சாட்சாத் வசிஷ்டர் முனிவர். இராமன் இலட்சுமணன், பரதன், சத்துருக்கன் இவை எல்லாம் வசிஷ்டமா முனிவர் சூட்டிய பெயர்களே.

**இராமன் எனப் பெயர் ஈந்தான்**
**பரதன் எனப் பன்னினான்**
**இலக்குவன் என்று இசைத்தனன்**
**சத்துருக்கன் என்று சாற்றினான்**
**என்கின்றது கம்பராமாயணம்.**

எமது சமயம் மாதா, பிதா, குரு, தெய்வம் என நால்வ ரைப் போற்றி வருதல் கண்கூடு. இதுவும் ஒரு கூட்டணியே. இராமாயணத்தை எடுத்துக் கொண்டால் இராமனைப் பெற்றெடுத்த பெரிய அன்னை – மாதா கோசலை தான். தான் கொடுத்த வாக்குக்காக உயிரைத் தியாகம் செய்த மேன்மை பொருந்திய தந்தை தசரதன். குரு, ஞானம், தவம், சீலம், நிறை நலம் நிரம்பப் பெற்ற வசிஷ்டர்.

எனவே, நாம், பழையவை தானே என்று எமது விழுமியங் களை, பழக்கவழக்கங்களை, எக்காரணம் கொண்டும் ஒதுக்கி வைத்து விட முடியாது. கூடாது. பயபக்தியை இறைவனிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதோடு நின்று விடாமல் எம் மூத்தோர், பெற்றோர், குருவானவர்கள் போன்றோரிடமும் காட்டுவோம். இறை நாமங்களை எம் வாரிசுகளுக்குச் சூட்டி, தினமும் இல்லங் களிலும் இறை நாமத்தை உச்சரிப்போம். அறிந்தோ, அறியா மலோ நல்லவற்றை சுலபமான வழியில் செய்வோம், முயல்வோமா? ●

## 37. இல்லற தர்மம்

இன்றைய சிந்தனைக்கு இந்து மதம் இல்லறத்தானுக்கு வகுத்துள்ள கடமைகள் பற்றி சிறிது சிந்திப்போம்.

நாம் இப்பூவுலகில் வளமாக வாழ்வாங்கு வாழ வேண்டு மாயின், எமக்குரிய கடமைகளை யாம் செவ்வனே ஆற்றி யாக வேண்டும். வள்ளுவமும், தென்புலத்தார், தெய்வம் விருந்து, ஒக்கல், தான் எனப்படுவோருக்கு யாம் கடமைகள் செய்தாக வேண்டும் என்று நயமாகவும், பயமாகவும் வகுத்துத் தந்துள்ளது. இல்லறத்திலே வாழும் போது ஆற்ற வேண்டிய கடமை முதலில் தென்புலத்தார்க்கு உரியன எனக் கூறப்பட் டுள்ளது. இந்த தென்புலத்தார் யார்? இவர்கள் தாம் இப்பூவுல கிலே வாழ்ந்து மறைந்து பிதிர்களாக இருக்கும் எமது முன்னோர்கள். இவர்களில் சிலர் மறுபிறவி எடுத்துமிருக்க லாம்.

இவர்களுக்கு புத்திரர் ஆற்ற வேண்டிய கடமைகள் சிரார்த்தம் எனப்படும். சிரத்தையோடு செய்யப்பட வேண்டியது சிரார்த்தம். இதனை மூன்று தலைமுறையினருக்கும் சேர்த்துச் செய்தலே முறையாம். எமது பெற்றோர், அவர்களின் பெற்றோர், அவர்களின் பெற்றோர் இவர்களின் பெயர்களைத் தெரிந்து வைத்து தர்ப்பணச் சடங்கின் போது சிரத்தையோடு உச்சரித்தாக வேண்டும். இவர்கள் உலகை நீத்த பின், அவர்களிடம் நாம் கொண்டுள்ள நன்றி உணர்வை வெளிப் படுத்தலே சிரார்த்தம் எனும் செயல்முறை ஆகும். எமது முன்னோர்கள் தம் வம்சத்தில் வந்தவர்கள் தமக்குச் செய்யும் சிரார்த்தத்தை "கயை" எனும் இடத்திலே வந்து செய்ய மாட்டார்களா என்று ஆவலோடு காத்திருப்பார்கள் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. "கயை" என்பது பாரதத்திலே உள்ள புனித தலமாகும்.

இதனோடு தொடர்புள்ள ஒரு வரலாற்றைக் கூறுகின்றேன். கேட்டுப்பாருங்கள்.

முன்னொரு காலத்தில், கயாசுரன் என்னும் ஓர் அரக்கன் கடும் தவம் ஆற்றி அதன் பயனால் உயரிய வரமொன்றை விஷ்ணு பகவானிடமிருந்து பெற்றான். அந்த வரமாவது தனது உடல், முனிவர், தேவர்கள், ரிஷிகள் யாவரது உடல் களிலும் பார்க்க புனிதம் அடைய வேண்டும். தன்னை வணங்கித்தன் உடலைத் தொட்டோர் சொர்க்கத்தை அடையும் பேற்றையும் பெற வேண்டும். விஷ்ணு பகவான் அவன் கேட்ட வரத்தைத் தந்தார்.

பூவுலக மக்கள் மிக சுலபமாக கயாசுரனை வணங்கி அவனது ஸ்பரிசம் மூலம் சொர்க்கத்தை அடையலாயினர். நரகத்தில் ஆள் நடமாட்டமே இல்லாமல் போக ஆரம்பித்தது. இதனை அவதானித்த யமதர்மராஜன் சிந்தித்தார். நரகலோக பயமே மக்களுக்கு இல்லாமற் போய்விட்டது. அவர்கள் தவறுகள் செய்ய அஞ்ச மாட்டார்கள். இதனால், தர்மம் தவறலாம். இதற்கு ஆவன செய்தாக வேண்டும். தனது கருத்தை பகவானிடம் முறையிட்டார். பகவானும் யமதர்ம ராஜனுடைய அச்சம் நியாயமானது தான் எனப் புரிந்து கொண்டார்.

கயாசுரனை அழைத்து ஒரு யாகம் செய்வதற்கு உனது உடலைத் தானமாகத் தருவாயா? எனக் கேட்டார். பகவான். "நல்ல காரியத்துக்கு எனது உடல் பயன்பாடுமேயானால், அதைவிட மகிழ்ச்சி எனக்கு வேறென்ன உண்டு?" என்று மகிழ்ச்சியோடு பதிலளித்தான். கயாசுரன் 'பட்'டென்று தரையில் வீழ்ந்து, வேள்விக்காக தன் உடலைத் தரையிலே கிடத்தினான். இந்த இடம் தான் கயை என இன்று அழைக்கப்படும் 'சுதாதர' ஷேத்திர தலமாகும்.

விஷ்ணுவின் விருப்பப்படி, பிரம்ம தேவன் வேள்வியை ஆரம்பித்தார். ஆனால், கயாசுரனின் தலை ஆட ஆரம்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வியைக் குழப்பியது. யமதர்மன் பெரியதொரு பாறாங் கல்லை அவன் தலையில் வைத்து ஆட்டத்தை அடக்க முயல, அவனது உடல் தொடர்ந்து ஆட ஆரம்பித்தது. விஷ்ணு தன் கதாயுதத்தைப் பயன்படுத்தி அந்த உடலின் ஆட்டத்தை நிறுத்தி வைத்தார். அப்போது கயாசுரன் கூறினான். நானாக என் உடலைத் தந்த போது நான் ஒரு வார்த்தை கூறியிருந்தால் ஆட்டம் உடனே நின்றிருக்கும். பகவானே! நீங்கள் கதாயுதத்தைப் பயன்படுத்தியிருக்க தேவையில்லை என்றான்.

அதற்கு பகவான் கூறியதாவது. "உயிர் ஒடுங்குவதற்கும் இறைவனது ஆக்ஞை வேண்டும்" என்பதைக் காட்டவே இவ்வண்ணம் செய்தேன்" "உனக்கு மேலும் வரம்தர உள்ளேன். கேட்பாயாக" என்றார். கயாசுரன் பதில் தந்தான். "சூரிய, சந்திரர், நட்சத்திரங்கள், பூமி உள்ள காலம் வரை எல்லாத் தெய்வங்களும் இத்தலத்திலே என்னோடு உறைய வேண்டும். இச்சேத்திரம் "கயை" என்ற பெயருடன் விளங்க வேண்டும். இத்தலத்திலே பிண்டம் போட்டு, சிரார்த்தம் செய்பவர்களின் பிதிர்கள் யாவும் சொர்க்கத்தை அடைய வேண்டும்" பகவானும் அவ்வண்ணம் வரமருளினார்.

இன்றும் இத்தலத்தில் ஏராளமானோர் தம் முன்னோரின் மூன்று தலைமுறையினருக்கு சிரார்த்தம் செய்து வருகின்ற னர். இங்குள்ள நதியின் பெயர், பல்குனி. அங்கு ஊற்று நீர் உண்டு. அதில் மூழ்கிப் பிண்டம் போடுவது வழமை.

என்ன! சிரார்த்தம் செய்வதே பெரிய சிரமங்களின் மத்தியிலே, இதற்கு வேறு "கயை" க்குப் போக முடியுமா? என்று நினைக்கின்றீர்களா?

பாரதத்துக்கு யாத்திரை செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது வாழ்வில் ஒரு முறை தன்னும் இந்த நல்ல காரியத்தைச் செய்து பாருங்களேன். எமது முன்னோர்களின் ஆசிகளும் எமக்கு கிடைக்கும் அல்லவா? செய்வோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. வெண்ணீறணிந்ததென்ன!

இந்த இனிய காலைப் பொழுதிலே உங்கள் அனை வருக்கும் வணக்கம் சொல்லக் கொடுத்து வைக்க வேண்டும். வணக்கம் சொல்லும் போது எம்மிடம் ஒரு விதப் பணிவு பிறக்கின்றது. பணிவு என்னும் பண்பு எமக்கு வாழ்வில் நிச்சயம் வெற்றியைத் தரவல்லது என்பது நீங்கள் அறிந்ததே. ஒருவன் பணக்காரன் என்று பெயர் எடுப்பதிலும் பார்க்க பண்பாளன் என்றழைக்கப்படுவதில் எத்தனை உயர்வும் மேன்மையும் இருக்கின்றது இல்லையா? காரணம் பண்பாளன் நம்பிக்கைக்குரியவன் நம்பத்தகுந்தவன் ஒழுக்கநெறிக்குக் கட்டுப்பட்டவன்.

இனி இன்றைய சிந்தனைக்கு வருவோம். சைவ சமயத்துக் குரிய சின்னங்களில் ஒன்றானதும் எம்மை தூயவராகத் தோற்றமளிக்க வைப்பதுமான திருநீறு பற்றி இன்று சிறிது சிந்திப்போம்.

“நீறில்லா நெற்றி பாழ் - நெய்யில்லா உண்டி பாழ் - ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” என்பது கற்றோர் வாக்கு. சைவர்களாகிய எமது நெற்றிக்கு சிறப்பைத் தருவது திருநீறு எனப்படும் விபூதி ஆகும். நெற்றியில் விபூதியுடன் ஒருவரைக் காணும் போது அவரிடம் ஒரு மதிப்பும் நம்பிக்கையும் எமக்கு உண்டாகின்றது.

இத்தகைய திருநீறு, அந்தமில் இன்பத்து அழிவில்லா வீடாகிய முத்திச் செல்வத்தைத் தருவதால் “விபூதி” என அதாவது மேலான செல்வம் என பெயர் பெறுகின்றது.

திருநீற்றின், பின் உள்ள தத்துவத்தை நோக்கின் அதன் வெண்மை, தூய்மையைக் குறிக்கின்றது. அதனை அணியும் போது நாமும் தூய்மை அடைகின்றோம்.

விபூதியின் சாம்பல் வடிவம், உலக அழிவையும், உடலின் அழிவையும் குறித்து நிற்கின்றது. “முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பர் ஆகின்றனர்”. உலகம் எமது உடல் ஆகியவை அநித்தியம் ஆனவை சிவமே மெய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள். எனவே நாம் எமது உடல் இருக்கும் போது நல்லவற்றைச் செய்து ஆத்மீகப் பேரின்பத்திற்கு வழி தேட வேண்டும் என்பது இதன் உண்மை ஆகும். அத்தோடு, இறைவனை மெய்யன்போடு வழிபட்டால், எமது தீவினைகள் பஸ்மமாகிவிடும் என்பதுவும் உண்மை.

விபூதி எப்போதும் தூய வெண்ணிறமாக இருக்க வேண்டும். நெருப்பினால், சுடப்பட்ட பசுவின் சாணமே விபூதி ஆகின்றது.

"சுந்தரமாவது நீறு" என்கின்றது ஞானசம்பந்தர் தேவாரம். திருநீற்றின் மகிமை சொல்லி முடியாது. தேவாரம், திருமந்திரம், நல்வழி, பழமொழிகள் யாவும் திருநீற்றின் பெருமை கூறுகின்றன.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும், சாரும் சிவகதி,
சிங்காரமான திருவடி சேர்வரே
என்கின்றது திருமந்திரம்.

இவ்வாறு திருநீற்றின் பயன் பல கோடியாக இருக்க, இன்று, அதன் மகிமையை உணர்ந்து பக்தியுடன் அணியும் இளைய தலைமுறையினர் மிகச் சிலராகவே உள்ளனர். இத்தவறிற்கு குடும்பத்தின் பின்னணியே காரணம். பெற்றோர் நீற்றின் பெருமையை உணர்ந்து செயற்பட்டால், நிச்சயம் குழந்தைகளும் அதனைப் பின்பற்றுவர். இது சைவப் பெற்றோரின் பெருங் கடமைகளில் ஒன்றாகும். இது பற்றிய ஒரு வெண்பாவைக் கேட்டுப் பாருங்கள்.

சிவகருமம் செய்யார், திருநீறு அணியார்
தவ நிலையாம் சைவம்சாரார் – அவனிதனில்
கான்பரந்த பச்சை களாநிலை கைதொழார்
ஏன் பிறந்தார் மானிடராய் இன்று!!!

எனவே, இந்த இனிய காலைப் பொழுதினிலே நாமும், நீராடி, தூய வெண்ணீறணிந்து, இறை நாமம் ஜெபிப்போமா? பல நிமிடங்கள் அல்ல, சில நிமிடங்களே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. இலட்சுமி கடாட்சம்

இலட்சுமி வாசம் செய்யுமிடத்தில் விளங்கும் பொலிவு, தெய்வீகம், அழகு, வளம் இத்தனையும் இலட்சுமி காடாட்சம் எனப்படும்.

பெண் இலட்சுமி கடாட்சமாக இருக்கின்றாள் என்றோ, இல்லம் இலட்சுமி கடாட்சமாக துலங்குகின்றது என்றோ சொல்லிக் கொள்கின்றோம். எங்கு செல்வத்துக்கு அதிபதி யான இலட்சுமி மனமுவந்து வாசம் செய்கின்றாளோ அங்கு இலட்சுமீகரம் துலங்கும். அங்கு தூய்மையும், தெய்வீகமும், புனிதமும், பேரழகும், பொலிவும் அமைந்திருக்கும். நிறைந் திருக்கும்.

எந்த ஒரு வீடு, அழகாகக் கூட்டி, கழுவி, முன்றிலில் கோலமிட்டு, தீபமேற்றி, மலர்கள் பரவிக் காணப்படுகின்றதோ அந்த இடம் அவ்வழியே போவோர், வருவோரை நிச்சயம் தன்பால் ஈர்க்கும். காரணம், அங்கு இலட்சுமி வாசம் செய்ய வந்து விடுவாள்.

நாம் எம்மை மாத்திரம் அழகுபடுத்தினால் போதாது. நாம் வாழும் இல்லத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக அழகுபடுத்தி ஆசாரமாக வைத்திருத்தல் மிக அவசியம். தூய்மையான இடங்கள் தேவர்களால் ஆசீர்வதிக்கப்படு கின்றன.

இலட்சுமி திருமகள் எனப்படுபவள். அவள் விரும்பி உறையும் இடங்கள் பல. பூரணகும்பம், மஞ்சள், குங்குமம், மாக்கோலம், சந்தனம், வாழையிலை, மாவிலை தோரணம், வெற்றிலை, பசு, கண்ணாடி, உள்ளங்கை ஆகியவற்றில் இலட்சுமி நித்திய வாசம் செய்கின்றாள்.

அழகு, அடக்கம், ஆற்றல், முயற்சி, கடும் உழைப்பு, தர்ம சிந்தனை, பொறுமை, தெய்வ பக்தி ஆகிய நற்குணங் கள் உடைய மனிதரையே மகாலட்சுமி நேசிக்கின்றாள்.

ஸ்ரீலட்சுமியை வில்வத்தால் அர்ச்சித்து பூசிப்பது விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது. இவ்வண்ணம் அர்ச்சிக்கும்போது, வில்வத்தை தலைப்பக்கமாக பூசிக்க வேண்டும். தாமரை மலரால் பூசிக்கும் போது, தாமரை மலரின் பூ உள்ள பக்கமாக வைத்து அர்ச்சித்தல் முறையாகும்.

இலட்சுமி கடாட்சமும் எமக்குச் சேர வேண்டிய காலம் வந்தால் தான் வந்து சேரும் என்பதற்கு ஒரு முனிவருடைய கதையைச் சொல்கின்றேன். கேளுங்கள்.

ஒரு காட்டில் ஒரு முனிவர் வசித்து வந்தார். அவருடைய பன்னசாலை தூய்மையாக, அழகாக, பசுமையாக, காட்சி அளித்தது. முற்றத்தில், துளசிச் செடிகள் வளமாக வளர்ந்தி ருக்க, பூஞ்செடிகள் ஆங்காங்கே பூத்துக் குலுங்கி நின்றன. எங்நேரமும் திருவிளக்கு சுடர்விட்டெரிந்து கொண்டிருந்தது. இக்காட்சியை கண்ணுற்றுக், களித்த மகாலட்சுமி, தான் அங்கு வாசம் செய்ய எழுந்தருளினாள். அவள் வருகையைக் கண்ட முனிவர் இலட்சுமியை வரவேற்று உபசரித்தார். இன்று தொடக்கம் உமக்கு அட்ட ஐஸ்வரியங்களையும் வர்ஷிக்கப் போகிறேன் என்றாள் திருமகள், முனிவரை நோக்கி. அவர் சற்று சிரித்தார். "பற்றற்ற பரமஞானிக்கு, பொன்னும் பொருளும் வேண்டாம், தாயே! உன்னைத் தியானிக்கும் பக்தி நிலையை எனக்குத் தந்தருளினால் போதும்." என்று சொல்லி விட்டார் முனிவர்.

மகாலட்சுமியும் முனிவரை விடுவதாக இல்லை. "முனிவரே! நீர் முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனாக, இப்பிறப்பில் அஷ்ட ஐஸ்வரியங்களையும் யான் உமக்கு தந்தாக வேண்டும். நீர் விலகினாலும், அட்ட ஐஸ்வரியங்கள் உம்மைப் பின் தொடரும்" என்று பதிலளித்தாள் மகாலட்சுமி.

முனிவர் கூறினார் "தேவி! உன் சித்தம் அதுவானால், யான் உன்னை விட்டு விலக வழி தேடுவேன்" என்றார்.

முனிவர் நீண்ட நேரம் சிந்தித்தார். விடிந்ததும் ஜபதபங் களை முடித்துக் கொண்டு பன்னசாலையை விட்டு வெளி யேறினார். எப்படியாவது அந்நாட்டு மன்னின் சீற்றத்துக்குள் ளாகி, சிறைதண்டனை பெற்று விட்டால், தேவி எவ்விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் தங்க முடியும் என எண்ணித் தன்னுள் நகைத்துக் கொண்டார் முனிவர்.

காட்டிலே வேட்டையாடச் சென்ற மன்னன் மரநிழலில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட முனிவர், உடனே அங்கு சென்று மன்னனின் மகுடத்தை எட்டி உதைத்தார். இது கண்ட மந்திரி முனிவரை வெட்ட வாளை உருவினார். மன்னன் முடியிலிருந்து பாம்பொன்று சீறி வெளியே சென்றது. முனிவர் மன்னனைக் காப்பாற்றிவிட்டார் என்ற செய்தி ஊர் எங்கும் பரவியது. மன்னன் முனிவரைப் பல்லக்கில் அழைத்துச் சென்று அரண்மனையில் தங்க வைத்தார்.

அருந்தவசிக்கு அரண்மனைவாசம். தேவியின் லீலை முனிவருக்குப் புரிந்து விட்டது. தேவி! என்னோடு விளையாட வேண்டாம். நான் உன்னை விட்டு விலகியே தீருவேன். இது முனிவரது உறுதி.

அடுத்த நாள் உத்தரவின்றி அந்தப்புரத்தினுள் நுழைந்த முனிவர், அங்கிருந்த அரசியை வலியப் பிடித்திழுத்து வெளியே கொண்டு வந்து தள்ளுவதற்கும் மண்டபம் இடிந்து விழுவதற்கும் சரியாக இருந்தது.

மீண்டும் முனிவருக்கு அரச உபசாரம். இம்முறை முனிவரை மன்னன் கௌரவித்து கனகாபிஷேகம் செய்வித்தான். தேவி முகம் மலர்ந்தாள்.

முனிவரோ! செய்வதறியாது திகைத்தார். பேரின்பத்தை மறந்தார். சிறிது சிறிதாக இந்த உபசாரங்கள் அவருக்கு மனசிற்கு பிடித்து கொண்டன.

தேவி! நீ நிரந்தரமாக என்னுடன் தங்கிவிடு என வேண்டினார்.

ஆனால், திருமகளோ! அதற்கு மேல் அவருடன் வாசம் செய்ய விரும்பவில்லை. அவரது புண்ணிய பலன் முடிந்து விட்டது.

மறுநாள் முனிவர் மன்னனுக்கு அளித்த பூசைப் பிரசாதம், மன்னனை மயங்கி விழச் செய்தது. அதில் நஞ்சு கலக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது என்றார்'' வைத்தியர். வேந்தன் வெகுண்டான். முனிவரை நாட்டை விட்டே துரத்திவிட்டான்.

முனிவர் சிந்தித்தார். ''தேவி! புகழ் வேண்டாம் பொருள் வேண்டாம் என்றேன். இல்லை என அள்ளித்தந்தாய். இப்போது பொருள் வேண்டும் என்றேன் எட்ட விலகுகின்றாய்!'' முனிவர் தனக்குள் நகைத்துக் கொண்டார். முன் ஜன்ம வினைப்பயன் களின் பலன் தான் இவை என எண்ணித் தேறினார் முனிபுங்க வர்.

இது பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்? இதை யான் உங்களுக்குச் சொல்ல வைத்ததே யான் செய்த புண்ணிய பலன் தான். ●

## 40. அன்பு என்னும் இன்ப உணர்வு

அன்பு என்று சொல்லும் போதே அது மனதிற்கு இதமாக இருக்கும். யாரோ எம்மை மயில் இறகு கொண்டு வருடுவது போல் இருக்கும். தென்றல் எம்மைத் தழுவுவது போலிருக் கும்.

இந்த அன்பு சந்தர்ப்பங்களுக்கேற்ப பல நாமங்களைப் பெறும். தெய்வத்திடம் நாம் காட்டும் அன்பு பக்தியாகும். எமது குழந்தைகளிடம் நாம் காட்டும் அன்பு பாசம் ஆகும். நண்பனிடம் காட்டும் அன்பு தோழமை ஆகும். ஏழைகளிடம் நாம் காட்டும் அன்பு இரக்கமாகும். ஈசன் உயிர்களிடத்தில் வைக்கும் அன்பு அருள் எனப்படும். இந்த வகையில் அன்பு ஒரு நீர் ஊற்று. அதனை நாம் எல்லோருக்கும் பகிர்ந்தளித் தாக வேண்டும். அள்ளி அள்ளி வழங்க வேண்டும். உள்ளத்தை வளமாக ஆக்குவது அன்பு.

வள்ளுவர் பெருமான் அன்பைப் பற்றி நிரம்பச் சொல்லி வைத்துள்ளார்.

1. அன்பின் வழியது உயிர் நிலை என்றார்.
2. அன்பில்லாதவன், அவன் மனிதனே அல்ல. அவன் என்பு தோல் போர்த்த உடம்பு என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இறைவனது அருள் ஈன்ற குழந்தை தான் அன்பு என்பார்.

உயிருக்கும் உடலுக்கும் எத்தகைய ஈடுபாடு நெருக்கம் உண்டோ அத்தகைய நெருக்கம் வாழ்க்கைக்கும் அன்புக்கும் உண்டு. அன்பு காணா உயிர், நீர் காணாப் பயிர் போல் வாடிவிடும்.

அன்புக்கும் உயிருக்கும், உடம்புக்கும், இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அது எப்படி என்று பார்ப்போம்.

அன்பில்லாத உயிர் வாடிவதங்கி விடும். அதற்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்போ கிடையாது. உயிர் இல்லாத உடம்பு பிணமாகிவிடும். இறைவனே அன்பின் வடிவம் தான். அவன் வேண்டுவது மெய்யன்பு.

சுயநலத்திற்கும் அன்பிற்கும் வெகுதூரம். பெரிய இடைவெளி உண்டு. இதனை வள்ளுவர் மிக அழகாகக் கூறியுள்ளார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அகத்திலே அன்பில்லாதவன் சகலதும் தனக்குத் தான் வேண்டும் எனக் கருதுவான். பட்டம், பதவி, புகழ், போகம் எல்லாமே தனக்கு என்பான் அவன்.

அன்பும் கருணையும், அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள். அன்பு உள்ள இடத்திலே தான் கருணை இருக்கும். கருணை உள்ள இடத்திலே தான் இரக்கம் இருக்கும். உதாரணத்துக்கு சிபிச்சக்கரவர்த்தியை, பாரி வள்ளலை எடுத்துக் கொள்ளுங்கள். சிபிச்சக்கரவர்த்தி, ஒரு முறை ஒரு வேடனைச் சந்திக்கின்றார். அவன் ஒரு அழகிய புறாவை கூண்டில் அடைத்துச் செல்வதைக் காண்கின்றார். அந்தப் புறா மேல் இரக்கம் கொண்ட சிபி அந்தப் புறாவை பறக்க விடும்படி கேட்கின்றார். அவன் என்ன தொகை பணம் கேட்டாலும் தான் தருவதாகக் கூறுகின்றார். ஆனால் வேடனோ பணம் காசு வேண்டாம். அப்புறாவின் எடைக்கு எடை அரசனது உடலிலிருந்து சதை தந்தால் தான் புறாவுக்கு விடுதலை அளிக்க முடியும் என்கிறான். சிபிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்தியும் அவ்வாறே செய்து புறாவை விடுவித்தான். இது சிபிச் சக்கரவர்த்தியை பரீட்சிப்பதற்கு இறைவன் செய்த ஒரு திருவிளையாடல்.

பாரிவள்ளல் தனது தேரில் பவனி வந்து கொண்டிருக்கின்றார். வழியிலே முல்லைக் கொடி ஒன்று படரக் கொழு கொம்பு இல்லாமல், தரையெல்லாம் படர்ந்து, காலால் உழக்கப்படுவதைக் காண்கின்றார். அதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவரது இரக்க சிந்தனை சிந்திக்கின்றது. அவர் உடனே தனது தேரை ஒரு ஓரத்திலே நிறுத்தி, முல்லைக் கொடியை அதன் மேல் படரவிட்ட பின், தான் நடந்து செல்கின்றார். இது பாரியின் இரக்க சிந்தனையின் செயல். இதனால், முல்லைக்குத் தேர் ஈந்தான் முடி மன்னன் பாரி என்று உலகமே அவரைப் போற்றுகின்றது.

எனவே, அன்பு என்பது தெய்வத்தின் ஒரு வடிவம். அன்பு கண்களுக்குப் புலப்படாது. தெய்வமும் கண்களுக்குப் புலப்படாது. ஆனால் இரண்டும் மனிதனுக்கு மிக அவசியம். அன்பால் எதனையும் வென்று விடலாம்; அத்தனை வசீகரமும் ஈர்ப்பும் கொண்டது அன்பு. இதுவே மெய்யன்பு. இதனையே இறைவனும் எதிர்ப்பார்க்கின்றார்.

எனவே

அன்பு செய்வோம்

அகிலத்தை வெல்வோம்!

செய்வோமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. நாம் செல்லும் பாதை

நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்! என்பதை இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

எமது வாழ்க்கை வளமாக அமைய வேண்டுமானால், நாம் ஆன்மீகத்திலும், லௌகீகத்திலும் சில ஒழுங்குகளைப் பின்பற்றியே ஆக வேண்டும். ஆன்மீகத்தில் நேரம் செலவழிப் பதால், எமது சாதாரண நடவடிக்கைகளுக்கு பொழுது போதாமல் போய்விடும் என்றும் வயது போக, முதுமைப் பருவம் வர, நாம் சமய வாழ்வு வாழ்ந்தால் போதும் என் றும் நாம் நினைப்போமானால், அது எமக்கு நஷ்டத்தையே விளைவிக்கும். இது எமது அறியாமையையே சுட்டி நிற்கும் எனலாம்.

எமது வாழ்வு எமது சமயத்தோடு பின்னிப் பிணைந் துள்ளது. சமயச்சடங்குகள் எமது பிறப்பிலிருந்து இறப்பு வரை சங்கிலித் தொடராக இணைந்து இருப்பது எமக்கோர் வரப்பிரசாதமாகும். எமது சமயம் இறை வழிப்பாட்டினை எமக்குச் சொல்லித் தந்ததோடு நின்று விடவில்லை. அவற்றோடு கூட பலதரப்பட்ட மனித விழுமியங்களையும் நாம் கடைப்பிடித்தொழுக வேண்டும் எனவும் வலியுறுத்தி யுள்ளது. விழுமியங்கள் அற்ற வாழ்வு விடிவு அற்றது. கண்ணிருந்தும் பார்வையற்ற நிலையே இவ்வாழ்வாகும்.

நாம் பண்பாடின்றி, நாகரிகமின்றி, மனித நேயமின்றி, மிருக வாழ்வு வாழ்வதற்கு, எக்காரணத்தையும் நாம் எளிதில் கூறிவிட முடியாது. ஏனெனில் உலகின் பல பகுதிகளில் மனித இனம் ஆடை கூட இன்றி நாகரிக வளர்ச்சி அடை யாமல் இருந்த வேளையில் எமது இனம் தரும நெறியில் வாழ்ந்து ராஜ போகங்களையும் அனுபவித்திருந்தமை எமது பழமை மிக்க வரலாறுகள் கூறும் உண்மைகளாம். ஆனால், இன்று நாம் எமது முன்னோரின் பண்பாட்டை, பக்தியை, நாகரிகத்தை, மனித நேயத்தை அடியொற்றித்தான் வாழ்கின் றோமா? ‘இல்லை’ என விடையளிக்கத் தயங்கினாலும் அது தான் உண்மை, நிஜம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பல துறைகளில் எமது முன்னோரிலும் பார்க்க வளர்ந்திருக்கலாம். விஞ்ஞான ரீதியாக உலகத்தைச் சுருட்டி உள்ளங் கைக்குள் அடக்கி வைக்கும் நிலைக்கு மனிதன் முன்னேறிவிட்டான். ஆனால், வாழ்க்கையின் அடித்தளமான பண்பாடு, பயபக்தி, பொறுமை, இரக்கம், வாய்மை ஆகிய சீலங்களில் இருந்தும் மனித இனம் சிறிது சிறிதாக விலகிப் போகின்றதோர் உணர்வு எமக்குத் தோன்றவில்லையா?

மக்கள் இப்போது இயற்கையை விட்டு செயற்கையாக வாழத் தலைப்பட்டுள்ளனர். நாகரிகம் என்ற போர்வையில், அநாகரிகமான செயல்கள் எம்மை ஆட்சி செய்ய ஆரம்பித் துள்ளன. நடை, உடை, பாவனை என்ற மூன்றிலுமே எம்முள் பலர் முற்றாக மாறியுள்ளனர். உணவு வகைகளில் ஏகப்பட்ட மாற்றங்கள். இது நாம் அன்றாடம் காணும் உண்மை. இதன் விளைவு ஏகப்பட்ட புதிய நோய்களுக்கு நாம் இலக்காகின்றோம் இரையாகின்றோம். உடையோ, சொல்லத் தேவையில்லை, காஞ்சிப் பட்டுடுத்தி கஸ்தூரிப் பொட்டு வைத்து தேவதை போல் நடந்து வந்த எம் மெல்லியலார், இன்று உடுத்தும் ஆடைகள் நாம் சொல்லித்தான் மற்றவர்கள் அறிய வேண்டும் என்றில்லை. நிமிர்ந்து பார்க்கவே கூசும் பாவனையில் சில உடைகள்; சிக்கனமான சில உடைகள். எத்தனை காரணம் காட்டினாலும் எந்த அர்த்தத்திலும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. சமய உணர்வு எம்மவரிடம் ஆழமானதாக அமைந்துள்ளதாகத் தெரியவில்லை. ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு இன்றைய நிலைமாறி வருகிறது! தலை வாரிப் பூச்சூடி கொண்டை போட்ட காலம் போய், இன்று மெல்லியலாரின் அழகான கூந்தல் அவிழ்த்து விடப்பட்டுக் காற்றில் அலைகின்றது. தலை விரிகோலமாக நின்ற அவல நிலை, கையில் சிலம்பேந்திய கண்ணகியினது. எனவே, எமக்கேன் இந்தக் கோலம்? கொண்டை போட்டுக் கொள்ளவும் பின்னிப் பூச்சூட்டிக் கொள்ளவும் நாம் ஏன் தயங்க வேண்டும்? இது எம்முடைய பாரம்பரியம் இல்லையா? கலாசாரமில்லையா? அந்நிய கலாசாரத்தில் அத்தனை மோகமா? நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்! இனி, நாம் நடக்க வேண்டியவற்றை நோக்குவோம். இதன் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியாக இளம் தலைமுறையினரிடையே பக்தி ஒழுக்கத்தை வளர்க்க பெற்றோரும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும். பிள்ளைகளுக்குரிய கடமைகள், விருந்தோம்பல், ஒழுக்கம், பெண்களுக்குரிய கடமைகள், குரு பக்தி, சகோதர பாசம், தர்ம சிந்தை, பரோபகாரம், வாய்மையின் அவசியம், வாக்குத் தவறாமை, நேர்மை, நிதானம், ஜீவகாருண்யம், விடாமுயற்சி, மாறாத விசுவாசம், செய்நன்றி மறவாமை, உண்மை நட்பு, சினம் கொள்ளாமை, பொறுமை கடைப்பிடித் தல் ஆகிய நற்பழக்கங்களை வளரும் தலைமுறையினருக்கு அவர்கள் மனதில் பதியும் வண்ணம் கதைகளாக, உதாரணங் களாக எடுத்துக் கூறவேண்டும். அதற்கு உதாரணமாக நாமே நடந்து காட்டி விட்டால் இருசாராருக்கும் இது நன்மை பயக்கும் அல்லவா?

ஒன்றை ஆரம்பிக்கும்போது, பிள்ளையார் சுழி போட்டு எழுத வேண்டும் என்பதிலிருந்து, பெரியவர்க்கு ஒரு பொருளைக் கொடுக்கும் போதோ, பெறும் போதோ இரு கரங்களையும் உபயோகிக்க வேண்டும் என்பது வரை நாம் குழந்தைகட்குச் சொல்லியாக வேண்டிய நிலையில் இன்று நாம் உள்ளோம். விதி விலக்குகள் இதற்கு இருந்தாலும் அனுபவத்தில் நாம் காணும் தவறுகளை நாம் அசமந்தப் போக்கில் விட்டுவிடக் கூடாது. ஏற்கனவே எமக்கும் எமது குழந்தைகட்கும் இடையே பெரிய இடைவெளி ஒன்று உருவாகி உள்ளது. எல்லா வகையிலும்தான். அதனை மேலும் பெரிதாக்க நாம் விடக் கூடாது. நாம் விழிப்படைந் தாக வேண்டும்.

பெற்றோரை மகிழ்விப்பது, கௌரவிப்பது புத்திரர் கடமை என்பதற்கு ஸ்ரீராமன் தந்தை சொற்படி ஆரணியம் சென்றமை உதாரணம் ஆகும். இக்கதை நாம் அறியாததா? "அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதுவும் "விருந்துக்கழகு விருப்புடன் அளித்தல்" என்பதும் நாம் அறியாத வாசகங் களா? "குல மகட்குத் தெய்வம் கொழுநனே" என்ற ஒரு வாக்கியம் போதுமே எம் பெண்களைக் கற்பின் திலகங்களாய் ஆக்குவதற்கு; குரு பக்தியினால் கை கூடாதது ஒன்றுமே இல்லை. இஃது இன்றைய மாணவ பரம்பரையினருக்கு மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படும் ஒரு வாசகம். சகோதர பாசமும் மரியாதை பேணலும் எத்துணை அவசியம்! அண்ணன் தந்தைக்குச் சமம். தம்பி பிள்ளைகளுக்குச் சமம் என்கிறது இராமாயணம். சகோதர மரியாதை சேர்ந்த வாழ்க்கையே சிறந்த வலிமை, பலம் என்பதை மகாபாரதம் எமக்குக் கற்றுத் தந்துள்ளது. தருமம் தலை காக்கும். பரோபகாரமே பாரில் பரம தர்மமாகும். எனவே, அறம் கூறும் எமது ஆன்மீக வழிகளையும் பின்பற்றி எமக்கும் பிறர்க்கும் நற்பயன் தேடுவோமா?

●

## 42. பக்தி எதற்கு எமக்கு?

எமது வாழ்க்கைக்கு பக்தி அவசியம் என்று பெரியோர்கள் சொல்லியுள்ளார்கள். சாஸ்திரங்களும் கூறியுள்ளன. ஆச்சாரிய சுவாமிகள் என்ன சொல்கின்றார் என்று பாருங்கள்! "தெய்வ பக்தி, குரு பக்தி இரண்டும் எமது வாழ்க்கைக்கு அவசியம்" என்பது அவரது உபதேசமாகும். தெய்வ பக்தியே ஈஸ்வர பக்தி எனப்படுகின்றது. எந்த மதத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எல்லா மதங்களுமே மனித வாழ்க்கைக்குப் பக்தி அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன. எமக்கு மேலே ஒருவன் உள்ளான். அவனிடம் நாம் புனிதமான, உண்மை யான பக்தி வைக்க வேண்டும். மெய் அன்பு கொள்ள வேண்டும். அந்த இறைவன் யார்? அவனே எம்மை எல்லாம் படைத்தவன்; எம்மை எல்லாம் காப்பவன் என்பதை பெரும் பாலான மதங்கள் ஒத்துக் கொள்ளத்தான் செய்கின்றன.

ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கிறதல்லவா! அதுபோலவே தான் இறைவன் உண்டு என்ற முடிவும் எடுக்கப்படுகின்றது. ஒரு புத்தகம் இருக்கிறது; அது யாரோ ஒருவரால் எழுதி, அச்சிடப்பட்டிருக்க வேண்டும். ஒரு ஆலயம் உள்ளது; அதனை ஒரு கொத்தனார் கட்டியிருக்க வேண்டும். இந்த உண்மையை எவரும் மறுக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோன்றுதான், இந்தப் பிரபஞ்சத்தைப் பாருங்கள்.....! இந்தப் பரந்த உலகைப் பாருங்கள்........! இங்கே இடம் பெறும் காரியங்கள் தான் எத்தனை! எத்தனை!! அத்தனைக் கும் காரணமாக ஒருத்தன் இருக்கதான் வேண்டும். அவனே ஆண்டவன், இறைவன், ஈஸ்வரன். எல்லாம் வல்லவன். இறைவன் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்ததோடு மாத்திரம் விட்டானா! இல்லையே! எமது சரீரம், நாமாகப் பண்ணிக் கொண்டதல்லவே!! எவனோ ஒருவன் அதனை சிருஷ்டித் துள்ளான். அவனே இறைவன்!

எமது சரீரம்; அதனைப் புஷ்டியாக வைத்துக் கொள்ள பல்வகை ஆகாரங்கள்; அவற்றை ஜீரணிக்க எமக்கு சக்தி – இவ்வாறே காற்று, நிலம், நீர், வெப்பம். இவற்றை எல்லாம் சிருஷ்டித்த இறைவனுக்கு நாம் பக்தி செய்ய வேண்டாமா? பல மணி நேரமல்ல. சில நிமிட நேரம் தன்னும். இப்பிரபஞ் சத்தை எம்மைக் கேட்டுக் கொண்டா ஆண்டவன் படைத்தான்! இல்லையே! தானே படைத்தான்! தானே இரட்சிக்கின்றான். அவன் பெரியவன். அவனது இயல்புகளைச் சற்று பார்ப் போமா!? இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேதங்கள், பிரம்மஸூத்திரம் ஆகியவை கூறியுள்ளதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

பக்தியை நாம் இறைக்காகவா செய்கின்றோம்.!

எத்தனை சுகங்கள், எத்தனை துன்பங்கள், எல்லாம் ஒவ்வொருவர் வாழ்விலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. துக்கம் ஏற்படுவதற்கு உரிய செயல்களை நாம் இப்பிறவியில் செய்யாமல் இருந்தபோதும், துக்கம் எம் வாழ்வில் வரத்தான் செய்கிறது. அது பூர்வ ஜன்ம பலன் என்றுதான் வைத்துக் கொண்டாலும் அவரவரது கன்ம பலனை அவரவரிடம் சேர்ப்பிப்பவன் பேரறிவும் சர்வ சக்தியும் கொண்ட இறைவனே என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். கட்புலனுக்கு அப்பாற்பட்ட சக்தி இறைவன். புலன் அறிவு மூலம், நாம் இறை உணர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில், பக்தி எமக்கு அவசியப்படுகிறது. இறையை உணர்ந்து விளங்கிக் கொண்டோமானால், எம்முள் உள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக உணர்ச்சி, மலர்ந்து விடும். இதற்கு எமக்கு பக்தி வேண்டும்.

மேலை நாடுகளில் சமய உணர்வு, வாழ்க்கையின் பல அம்சங்களில் ஒன்று எனக் கருதப்படுகின்றது. எமது மெய்யடி யார்களும் ஞானிகளும் அருளாளர்களும் சமய பக்தியும் சமய உணர்வுமே வாழ்வின் முழுமை என உபதேசித் துள்ளனர்.

மக்கள் பல வழிகளில் இறைவனுக்கு பக்தி செய்கின்றனர். வழிபாடு செய்கின்றனர். இறைவன் ஒருவனே என்பதுதான் இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கையாக இருந்து வந்துள் ளது. பல நிறப் பசுக்கள், வெண்மையான ஒரே விதமான பாலையே தருவது போல் பல வழிகளும் வழிபாட்டு முறைகளும் எம்மை இறைவனிடம் அழைத்துச் செல்கின்றன. இது உபநிடதம் கூறும் கருத்து.

''மனிதர்கள் எம்முறையில் என்னை அணுகினும் அம்முறை யில் அவர்களை நான் ஏற்கிறேன்''. ஆதி ஆசாரியார், இராமனுஜர், மத்துவர் எல்லோருமே ஈஸ்வரன் பிரபஞ்ச சிருஷ்டிக்கெல்லாம் கர்த்தா என்று கூறியுள்ளனர். இதனால் தான் வேதத்திற்குப் புறம்பான மதங்களும் ஈஸ்வரனைக் 'கர்த்தா' என்கின்றனவோ!

சிருஷ்டி மாத்திரம் இறைவனின் வேலை அல்ல. எம்மை, எமது காரியங்களை, கணக்குப் பண்ணி அவற்றுக்குத் தகுந்த படி கர்ம பலனைக் கொடுப்பவனும் அவனே தான். நாம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் நல்லதைச் செய்ய முற்படுகிறோம். சில சமயங்களில் தப்பான காரியங் களையும் செய்து விடுகின்றோம். இவற்றைக் கணக்குப் பண்ணி, அதற்குத் தக்க கன்ம பலன்களை எமக்கு அளிப்ப வன் அந்த ஆண்டவனே.

உலகத்தைச் சிருஷ்டித்தவன் அவன். அவன் தானே உலகத்தையும் உயிரினங்களையும் காப்பாற்றியாக வேண்டும். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றித் தானே ஆக வேண்டும். அதற்கு நாம் ஏன் பக்தி செய்ய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சந்தேகம் கொள்பவர்களும் எம்மிடையே இருக்கத் தான் செய்கின்றார்கள். சிருஷ்டித்தான் – இரட்சித்தான் என்றிருந்துவிடலாமே, நாம், என்ற எண்ணம் இவர்களது மனதில். விருப்பு, வெறுப்பு இல்லாத இறைவனுக்கு எமது பக்தி அவசியமா? என்கிறார்கள். ஆனால், இது இவர்கள் போடும் மேலோட்டமான, சோம்பேறித்தனமான, அர்த்தமற்ற தப்புக் கணக்கு. எதுஎவ்வாறிருப்பினும், எமக்கு மேலிருக்கும் அந்தப் பரம்பொருளை யாம் அடைந்தே ஆக வேண்டும். அதற்கான மார்க்கமே பக்தி. எனவே, பக்திசெய்வோம். பலனைப் பெறுவோம். செய்வோமா?

## 43. குருவும் சிஷ்யனும்

அவர் ஒரு குருவானவர்; அவருக்கு ஒரு சிஷ்யன். அவன் தனக்குச் சிஷ்யனாகக் கிடைத்தான் என்று பெருமைப்படு வதா! அவனை மேலும் நெறிப்படுத்துவதா! சிஷ்யன் என்ற ஒருவன் கிடைத்தாலே குருவுக்கு பெரிய பொறுப்புதான்.

தனது சிஷ்யனைக் குருகுலவாசம் செய்ய வைத்து, அவனை நல்லதோர் ஞானஸ்தன் ஆக்க முயன்று கொண்டி ருந்தார் குரு. காலம் ஓடியது. ஓரளவு பக்குவமடைந்த தனது சிஷ்யனை தனியே வேறொரு ஊருக்கு அனுப்பி வைத்தார் அவர். அங்கு அனுபவமும் தியானப் பயிற்சியும் செய்து அவன் உயர் ஆத்ம ஞானம் பெற வேண்டும் என்பது அவரது நோக்கம். சிஷ்யனும் குருவின் வார்த்தை களை சிரமேற்றுக் கொண்டு வேறு ஊருக்குப் புறப்பட்டு விட்டான். அங்கே தனிமையில் அவனுக்கு தியானப் பயிற்சி.

காலம் தொடர்ந்து ஓடியது. தனது சிஷ்யன் எவ்வாறு இருக்கிறான் என அறிய ஆவல் கொண்ட குரு தனது சிஷ்யன் வாழ்ந்து வந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆனால், மாறுவேடத்தில் சென்றார்.

அவர் அவனது ஊரை அடைந்தபோது, அங்கு ஊரே விழாக் கோலம் பூண்டிருந்தது. மாவிலை தோரணங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கல தீபங்கள், அலங்கார வளைவுகள், யானை, குதிரை ஊர்வலம், வாத்தியங்கள் ஒலிக்க இசை முழங்க, நடன மாதர் ஆடி வர, குயிலின் குரலுடையோர் பாடி வர, மன்னன், யானை மீது அம்பாரியில் உட்கார்ந்து உலா வந்து கொண்டிருந்தான். "மன்னன் ஊர்வலம் வருகின்றார்" என அங்கு ஊர் மக்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

சிஷ்யனைக் காண வந்த குரு சற்று ஓரமாக நின்று நடப்பவற்றை அவதானித்துக் கொண்டு நின்றார். தூரத்திலே ஒருவர் தனியே நின்று ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதனையும் கண்டார் குரு. அவர் அருகே சென்றார். அங்கு நிற்பவர் வேறு யாருமல்ல. சாட்சாத் தன் சிஷ்யனே தான் என குரு கண்டுகொண்டார். குரு மாறுவேடத்தில் இருந்ததால் சிஷ்யன் குருவை அடையாளங்காண முடியவில்லை.

குரு தன் சிஷ்யனின் பக்குவ நிலையை சோதிக்க விரும்பினார். அவனருகே சென்று, இங்கு என்ன நடக்கிறது? என வினாவினார். "தெரியவில்லை! இந்த ஊர் ராஜா ஊர்வலம் வருகின்றார்" என்றான் சிஷ்யன். எங்கே ராஜாவைக் காணோமே! இது குருவின் கேள்வி. "அதே மக்கள் மத்தியில் போகின்றாரே அவரேதான் ராஜா." இது சிஷ்யனின் பதில். "மக்கள் மத்தியிலா? மக்கள் மத்தியில் எவ்வளவோ பேர் போகின்றார்களே. அவர்களில் ராஜா யார்?" இது குருவின் கேள்வி. ஆண்டவா! அதோ யானை மேலே அம்பாரி. அதில் உட்கார்ந்திருக்கிறாரே அவர் தான் ராஜா. அப்படியா? சிறிது நேரம் யோசித்தார் குரு. "யானை எது? அம்பாரி எது? அது புரியவில்லையே." இது குரு.

சிஷ்யன் குருவானவரை ஏற இறக்கம் பார்த்தான். என்னய்யா இது! யானை தெரியாதா? அதோ பாரும்! கீழே இருப்பது யானை. மேலே இருப்பது அம்பாரி. அப்படியானால் கீழ் எது? மேல் எது? கேட்டார் குரு. அட ராமா! இதற்கு என்ன பதில் சொல்வேன்! யோசித்தான் சிஷ்யன். ஆனால், அவனும் சளைத்ததாக இல்லை.

தான் கீழே யானை மாதிரி குனிந்து நின்று கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவை தன் மேல் இருத்திக் கொண்டு, "இப்போ பாருங்கள். நான் தான் கீழ். நீர் தான் மேல். புரிகிறதா" என்றான் சிஷ்யன்.

குருவானவர் கேட்டார்: "நீ என்றால் யார்? நான் என்றால் யார்?" திகைத்துவிட்ட சிஷ்யன், "நீ என்றால் யார்? நான் என்றால் யார்? இதற்கு விடை தெரிந்தால் நான் ஏன் இங்கு வர வேண்டும். விடைகளை அறிந்து வரத் தான் எனது குருவானவர் என்னை இங்கு அனுப்பினார். நீங்களே இந்த வினாக்களுக்கு விடையையும் அளியுங்கள்" என்றான் சிஷ்யன்.

குரு தன்னை யார் எனத் தன் சிஷ்யனுக்கு வெளிப்படுத் தினார். "நீ வேறு, நான் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அதை நீ பூரணமாக உணர்ந்த பின் மீண்டும் என்னிடம் வா" என்று கூறிப் பயணமானார். சிஷ்யன் ஒரு புத்துணர்ச்சி யோடு மீண்டும் தியான மண்டபம் நோக்கி விரைந்தான். என்ன நேயர்களே! முதலில் நாம் நம்மை அறிந்து கொள் வோம்! செய்வோமா?

## 44. சமயங்களில் தத்துவம்

**நா**ம் வாழும் இப் பூமியின் படைப்பு அதி அற்புதமானது. பூமியில் பல்வேறுப்பட்ட பொருட்களைக் காண்கின்றோம். எங்களையும் உள் அடக்கித்தான். இவற்றை சற்று நேரம் ஒதுக்கி, கூர்ந்து ஆராய்ந்தால் அவை ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு உண்மையை நாம் அறியலாம். இப் பிரபஞ்சத் திலே ஒரு பொருளை முற்றிலும் ஒத்திருக்கிற மற்றொரு பொருளாகக் காண்பதரிது. உயிர் வாழ்வன, உயிர் அற்றன ஆகிய அனைத்துக்கும் இது பொதுவான உண்மை. இந்தப் பேதத்தை உருவாக்குவது சிருஷ்டி. படைத்தவன் படைத்திருக்கும் திறமைக்கு இந்த வேறுபாடே சான்றாகின்றது.

சமயங்களும் அவ்வாறே. உள்ளத்தின் இயல்புக்கேற்ற வாறு சமயங்களும் பல தரப்படுகின்றன. உடல் வேற்று மையை விட உள வேற்றுமையே மனிதனைத் தரம் பிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு உதவுகின்றது. அவரவர் மனப்பக்குவத்துக்கு ஏற்ப மேலோர் என்கின்றோம் கீழோர் என்கின்றோம். உடலுக்கு உறுதி அளிக்கும் உணவு வகைகளை போஷாக்குணவு என்றாற் போல் மனதை பண்படுத்துவனவற்றை மேலான சமயங்கள் என்கிறோம்.

சமயங்களை, சீர்தூக்கிப் பார்ப்பது எளிதான காரியமன்று. சில செயற்பாடுகளில் கொள்கைகளில் சமயங்கள் வேறு படலாம். ஆனால், நோக்கங்கள் பொதுவாக ஒத்திருக்கும். உதாரணமாகப் பாருங்கள். விக்கிரக ஆராதனை பண்ணுவது ஒரு மதத்தாருக்கு தேவ நிந்தனையாகவும் பாவச் செயலாகவும் தெரிகிறது.

அதே நேரத்தில் இதே செயல் மற்றொரு மதத்தினருக்கு சிறந்ததோர் சாதனமாக தெரிகிறது. மாறுபட்ட இந்த இரு கோட்பாடுகளையும் மனிதன் தன் முன்னேற்றப் பாதையிலே சந்திக்கின்றான். ஒருவரது உடலுக்கு அமுதமாக அமைவது மற்றொருவருக்கு விஷமாக அமையலாம். எனவே, நாம் எமது குறிக்கோளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சமயங்களைப் பொறுத்த அளவில் அவரவர் நெறியில் நின்று முன்னேற்றமடையவே நாம் கடமைப்பட்டுள் ளோம். சமயங்கள் பல ஒரு சமயம் மற்றொரு சமயத்துக்கு அளவுகோல் ஆகாது.

மதங்கள் பலஅமைந்திருப்பதுவும், இறைவனின் செயற்பாடு எனலாம். சிருஷ்டியே, தன் குழந்தையின் உடல் நிலைக்கு ஏற்றவாறு தாயானவள் உணவு வகைகளை வேறுபடுத்திச் சமைப்பது போல், மாந்தரது மன நிலைக்கு ஏற்றவாறு பல சமயங்கள் இறைவனால் வகுத்துத் தரப்பட்டுள்ளன. பல தரப்பட்ட சமய ஆச்சாரியர்கள் நம்மிடையே அமையப் பெற்றதுவும், இறைவனது மிகப் பெரிய திட்டமென்றே கூற வேண்டும்.

அவனன்றி அணுவும் அசையாது அல்லவா!

எவ்வாறு ஒரு மரத்தின் தரத்தை அதனின்று பெறப்படும் கனியிலிருந்து அறிகின்றோமோ அதே போன்று ஒரு சமயத்தின் தரமும் அதனின்று உருவாகும் சான்றோர்களைக்



11104C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அறியப்படுகின்றது. சான்றோர்களை உருவாக்கு வதே சமயங்களின் சிறப்பு நோக்கமாகும். இறைவனது பேரருளுக்குப் பாத்திரமான இந்த மகான்கள் வையத்தில் என்றென்றும் வாழ்வாங்கு வாழ்கின்றார்கள். ஒன்று அவர்களது வரலாறு அவர்களது தூய வாழ்வில் இடம் பெற்ற இறைவ னின் அருட் செயல்கள்.

இரண்டாவது, அவர்கள் தமது தெய்வானுபவங்களை வைத்து ஆக்கித் தந்த நூல் வகைகள், பாடல்கள், தோத்திரங்கள் என்பனவாம்.

உதாரணமாக, எமது சமயத்தை எடுத்துக் கொள்ளுங்கள், நாயன்மார்கள், அனுபூதிமான்கள், இன்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். உதாரணமாக, ஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் இவர்களது தேவாரப் பதிகங்கள், திருவாச கம், திருக்கோவையார், திருப்புகழ், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார்பாடல்கள், இராமலிங்க சுவாமிகள் பாடல்கள் யாவும் எமது மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதுடன் எம்மையும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

தேவார திருவாசகங்கள் எமது சைவசமயத்தைப் பொறுத்த மட்டில், ஆத்ம சாதகனுக்கரிய அருட் பொக்கிஷங்களாக உள்ளன. உதாரணமாக, திருவாசகத்தை எடுத்துக் கொள் வோம். திருவாசகம் படிப்பவனுக்கு அவனது பக்குவத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. எவ்வாறு தரையில் விழுந்த ஒரு மீனானது. தனது சொந்த நீர்ப்பரப்பை விட்டு விலகியதை உணர்ந்து, துள்ளித் துடித்து, பின் சதுப்பு நிலத்தை எட்டி விட்டால் சிறிது ஆறுதல் பெற்று, மேலும் ஒரு நீர் நிலையை அடைந்தால் கொஞ்சம் நிம்மதி பெற்று, மீண்டும் அதனது எத்தனத்தில் ஒரு ஆற்றையோ ஆழ்கடலையோ அடைந்தால் தனக்கேற்ற வீடு கிடைத்தாற் போல் நிம்மதி அடைகிறதோ அதே போன்று தான், இறைவனைப் பிரிந்து வந்த ஆத்மாவின் நிலையும். கடவுளிடமிருந்து பிரிந்து பிரபஞ்சம் வாழ்வுக்கு வந்துள்ள மனிதனது ஆத்மாவின் நிலையும் இதுவேதான். தெய்வநிலை பெற அவன் பிறவிகளில் பல்வேறு அல்லல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை, நிலைகளைத் தாண்டி ஈற்றில்,

"மெய்யே உன்பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என்று அவனது முடிவான நிலையை எய்துகின்றான். ஆதியோடு அந்தமாக, இச் சகல நிலைகளிலும் வழிபாட் டுக்கு அவனுக்கு உதவுபவை பக்திச் சுவை தோய்ந்த தேவார திருவாசகப் பாடல்களாகும்.

எனவே, நாமும் எமது வாழ்வில் தினமும் சிறிதளவு நேரத்தை தேவார திருவாசகத்துக்கு ஒதுக்குவோம். ●

## 45. இறைவழிபாடு - எந்த வகையில்?

இறைவழிபாடு எந்த வகையில்? என்பது பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். தெய்வத்தை எவ்வா றெல்லாம் மகிழ்விக்கலாம் பிரீதிப்படுத்தலாம் என்று யாம் யோசிக்கின்றோம். அந்த நோக்கில் பல வழிகளில் தெய் வத்தை வழிபடுகின்றோம். ஆலய தரிசனம், பூசை, அர்ச்சனை, தோத்திரம், விரதங்கள், விழாக்கள், பஜன் இவ்வாறு பலபல மார்க்கங்களை யாம் கைக் கொள்கின்றோம். இறையைப் பிரீதிப்படுத்தி யாம் அவரிடம் கேட்டதெல்லாம் பெறுவதற்காக. இது எமது நம்பிக்கை, இவற்றைவிட, உண்மையான "உழைப்பே கடவுள்" என்கிறார் தாகூர்.

ஏழையின் தேவையைப் பூர்த்தி செய்தால், அதுவும் இறைவனை மகிழ்விப்பதுதான். இதற்கு நான் ஒரு கதை சொல்லட்டுமா? பண்ணையார் ஒருவர் பெரிய வாழைத் தோட்டம் ஒன்றை அமைத்தார். அத்தோட்டத்தில் முதலில் கிடைக்கும் வாழைக்குலையை முருகன் கோயிலுக்கு அளிப்பதாக நேர்த்தியும் வைத்தார். மரங்கள் வளர்ந்து கனிகள் தந்தன. சொன்னபடி பண்ணையார் முதல் வாழைக் குலையை தனது பண்ணையில் வேலை செய்பவனிடம் கொடுத்து முருகன் கோயிலுக்கு அனுப்பிவைத்தார்.

குலையில் 108 கனிகள் இருக்கின்றன, "பத்திரமாக கொடுத்துவிட்டு வா" எனப் பணியாளனுக்குப் பணித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணையார். பண்ணையிலிருந்து முருகன் கோயில் 10 கிலோ மீற்றர் தூரம். செலவுக்கு பணம் ஒன்றும் அவனுக்குக் கொடுக்கவில்லை அவர். பண்ணையாளன் குலையைச் சுமந்த படி சென்றான். வழியில் அவனுக்கு பசி வந்தது. களைப்பும் உடன் வந்தது. ஏதாவது வாங்கி உண்ணலாம் என்றால் பண்ணையார் பணமும் தந்து விடவில்லை. பசிவந்தால் பத்தும் பறந்து விடும். இது அனுபவ உண்மை.

பசியைத் தாங்க முடியாத நிலையில், தான் சுமந்து வந்த வாழைக் குலையில் 4 பழங்களை மாத்திரம் பறித்து உண்ட பின், பத்திரமாக பழக்குலையைக் கொண்டு போய் கோயிலில் ஒப்படைத்தான் பணியாளன்.

பழக்குலையை ஏற்றுக் கொண்ட கோயில் நிர்வாகி குலையை ஏற்றுக் கொண்ட பழங்களை எண்ணி குலையில் 104 கனிகள் இருந்தன என்று எழுதிப் பற்றுச் சீட்டும் கொடுத்தனுப்பிவிட்டார்.

வஞ்சகமில்லாத பணியாளன் பற்றுச் சீட்டை பத்திரமாகக் கொண்டு வந்து பண்ணையாரிடம் கொடுத்தான். வேலையை செய்து முடித்த திருப்தி அவனுக்கு.

பற்றுச் சீட்டைப் படித்துப் பார்த்த பண்ணையார் கொதித் தெழுந்தார். 4 பழங்களை எடுத்து உண்டதற்காக பணியா ளனை தன் கை வலிக்கும் வரை நையப்புடைத்து போட்டு விட்டார் பண்ணையார். கடும் பசி அதனாலே தான் நான் 4 பழங்களைப் பறித்து சாப்பிட்டேன் ஐயா! அதைத் திருட்டாக எண்ணவில்லை. வேலைக்காரன் மன்றாடினான்.

பண்ணையார் அதை எல்லாம் ஏற்பதாக இல்லை. அவனது பசி அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. காரணம் அவருக்குப்பசியின் கொடுமை தெரிந்திருக்க நியாயமில்லை தானே. எனவே, 4 பழங்களைக் குலையிலிருந்து பறித்து அவன் பசியாற உண்டதற்காக அவன் மேல் திருட்டு பட்டமும் சூட்டிவிட்டார் அவர்.

வேலைக்காரன் ஏழையானாலும் ரோசக்காரன். அவன் மனம் நொந்து முருகனை வேண்டினான். அப்பா! முருகா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பசி தாங்க முடியாமல் தான் உனக்குத் தந்த பழத்தில் நான்கினை எடுத்து உண்டேன். இது திருட்டா? என்னை மன்னித்துவிடு.

இரவும் வந்தது. பண்ணையார் தூங்கி விட்டார். அவர் கனவில் முருகப் பெருமான் காட்சி தந்தார்.

"அன்பனே! நீ கொடுத்தனுப்பிய நான்கு பழங்கள் கிடைத்தன. உண்டு மகிழ்ந்தேன்" என்றார் முருகன்.

அப்போது தான் பண்ணையாருக்குப் புத்தி வந்தது. தான் அனுப்பிய ஒரு முழுவாழைக் குலையில் ஏழைப் பணியாளன் தன் பசியாற்ற உண்ட 4 பழங்களையும் தான் முருகன் கணக்கில் எடுத்திருக்கின்றார். எப்படியிருக்கிறது.! பண்ணை யார் அந்த ஏழையை அடித்தமைக்கு மனம் நொந்தார். தன் பிழையையும் ஒத்துக் கொண்டார். தனக்குத்தானே அடித்துக் கொண்டார்.

எனவே, நேயர்களே! உண்மையில் பசியால் வாடுபவ னுக்கு உணவு அளிப்பது இறைவனுக்கு நாம் படைக்கும் நிவேதனமாகின்றது. அபிடேகத்திற்கு குடம் குடமாகப் பால் வழங்குகின்றோம். அதே நேரம் உண்மையான ஒரு ஏழைக் குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுத்தால் அந்தப் பால் பால முருகனுக்குப் படைக்கும் அபிடேகப் பால் ஆகிவிடாதா?

ஏழைவயிற்றுக்குக் கஞ்சி ஊற்றினாலே அது ஏழேழு ஜன்மங்கட்கும் பயன் தரும். சிந்திப்போமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46. வழிகாட்டிகள்

அன்பு வணக்கம்! எமக்கு அமைய வேண்டிய வழிகாட்டி கள் பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

"இந்து மதம் தான் எல்லா மதங்களுக்கும் தாய் மதம்." இவ்வாறு கூறியவர் சுவாமி விவேகானந்தர். இந்து மதத்தினர் மற்றைய மதத்தினரை தமது மதத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும் என சிறிதும் கருதுவதில்லை. அதில் நேரம் செலவிடுவதும் இல்லை. காரணம், எல்லா மதங்களும் கடவுளை நோக்கிச் செல்லும் வழிகள் தான், பாதைகள் தான், மார்க்கங்கள் தான் என்று நினைப்பது இந்து மதம். எனவே தான் அதற்கு மதமாற்றம் என்பது அவசியமில்லை.

இந்து மதத் தத்துவங்கள் உலகளாவப் பரவி உள்ளன என்பதிலும் சந்தேகமே இல்லை. துன்பங்களை எதிர்கொள்ளத் தக்க சாதனமாக ஆத்மீக வழிபாடு அமைகின்றது. கடவுள் வழிபாடே அதன் ஆரம்பம். "அவனின்றி அணுவும் அசை யாது"என்பது எமது முன்னோர் வாக்கு. இதனை ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை விளங்கும்.

கடவுள் மீது பக்தி ஏற்பட்டு எல்லாம் அவன் செயல் என்று தெரிந்து விட்டால் யாவும் இறைவனின் ஆணைப்படி நடப்பது என்ற அறிவு எமக்கு ஏற்படும்.

எமது மதம் மறு ஜன்மத்தில் நம்பிக்கை வைத்துள்ளது. அதுவும் ஒரு வகையில் நன்மை தான். இதனால் ஒரு பாவத்தைச் செய்ய முற்படும்போது இப்பாவம் எம்மை மறு பிறப்பில் பாதிக்கும் என்ற பயம் எமக்கு ஏற்படுகின்றது. எனவே, பாவம் செய்யத் தயங்குகின்றோம், பயப்படுகின்றோம். இது எம்மை பாவம் செய்யாமல் வாழ வழிவகுக்கின்றது.

கீழை நாடுகளில் உள்ள மதங்கள் யாவும் மறு ஜன்மத்தில் நம்பிக்கை வைத்துள்ளன. மேனாட்டு அறிஞர்கள், ஏன் தற்போது விஞ்ஞானிகள் கூட மறு ஜன்மத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வழிபாட்டில் பூஜை விக்கிரகங்களோடு மந்திரங் களும் யந்திரங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவற்றில் யந்திரங்கள் அதிக சக்தி வாய்ந்தவை என ஆன்மீகப் பெரியோர் கூறியுள்ளனர். நாம் செய்யும் அர்ச்சனைகள் கூட தெய்வத்தின் பெயரில் செய்தால் தெய்வத்திற்கு பிரீதி அதிகம் ஏற்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அர்ச்சனை என்பதே கடவுளின் பெயர்களைக் கூறி அவன் கருணையை மெச்சுவது தான்.

மனம் ஒரு நிலைப்பட்டால் தான் எமது ஆத்மா பிரகாசிக் கும். அதாவது நிஜமான ஆனந்த நிலை தெரியும். மனதை ஒருநிலைப்படுத்த, நெறிப்படுத்த ஒரு குரு எமக்கு அமைய வேண்டும். எமக்கு குரு பக்தி அவசியம் என எமது மத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

குருவின் அனுக்கிரகத்தினாலேயே ஒருவனுக்கு நிறைவான, உண்மையான ஞானம் கிடைக்கின்றது என உபநிஷதத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த இடத்தில் சாந்தோக்கிய உபநிடதம் கூறும் ஒரு சிறு கதையைக் கேளுங்கள்.

ஒருவனை அவனுக்கு முன், பின் தெரியாத ஒரு காட்டில் கண்ணைக் கட்டி விட்டால் அவன் எங்கே போவான்? கிழக்கா, மேற்கா, தெற்கா, வடக்கா என திசையறியாது தவித்துக் கொண்டிருப்பான். அந்நேரத்தில் ஒருவன் அக்காட்டு வழியே வருகின்றான். அவனது கட்டை அவிழ்த்து விடுகின் றான். அதற்கப்புறம் இவன் தன் ஊருக்கு வழி அறிந்து தன் ஊர் போய்ச் சேருகின்றான்.

இதேபோன்றது தான் எமது நிலையும். எமக்கு ஒரு உத்தம குரு வேண்டும். அவரது உபதேசத்தின் மூலம் நாம் எங்கிருந்து வந்தோமோ அந்தப் பராத்ம ஸ்தானத்துக்கு வழி அறிந்து அங்கு போய்ச் சேர நிச்சயம் வாய்ப்பு உண்டு.

ஒருவனுக்கு எத்தனை புகழ், பணம், பெருமை இருந்தும் என்ன பயன்? அவனிடம் மன நிறைவு கிடைக்காவிட்டால்!

கல்வி சரி, மற்றும் விடயங்கள் சரி எதையும் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைப்பட்டுக் கேட்காவிட்டால் பிரயோசனமில்லை. நாம் எவ்வளவோ உபந்நியாசங்கள் கேட்கின்றோம். உழுத இடத்தில் விதை ஊன்றினால் அது முளை விடும். அதே போன்று தான் ஒரு விஷயத்தில் எமது மனம் லயித்தால் தான் அது எமது மனதில் பதியும். எமது மனதில் விஷயங்களைப் பதிய வைக்க, வழிகாட்ட ஒரு குரு எமக்கு அமைய வேண்டும்.

எனவே, ஈஸ்வர பக்தி போன்றதே குரு பக்தியும். இரண்டும் எமது வாழ்வின் முன்னேற்றத்திற்கு மிக மிக அவசியம். இவை இரண்டும் எமக்குச் செம்மையான வழிகாட்டிகளாம். இன்றைய மாணவர்களுக்கும் சொல்கின்றேன், நீங்கள் கல்வி கற்கும் ஆசிரியரிடம் பணிவும் நம்பிக்கையும் வையுங்கள். அவர்கள் சொல்வதை வேதவாக்காக உங்கள் மனதில் பதித்துக் கொள்ளுங்கள். வெற்றி உங்களதே! ●

## 47. மறு ஜன்மம்

ஜன்மம் என்பது பிறப்பு என்று பொருள்படும். இந்து மதம் மறு ஜன்மத்தில் நம்பிக்கை உடையது. இந்த ஜன்மத் தில் நாம் செய்யும் செயல்களின் விளைவை நல்லதோ, கெட்டதோ, யாம் மறு ஜன்மத்தில் அவற்றை அனுபவித்தாக வேண்டும் என்பதை இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் ஏற்றுக் கொள்வர். இதனால் நாம் அடையும் நன்மை மிகப் பெரியது. நாம் தீது செய்ய அஞ்ச வேண்டும். நல்லது செய்ய முன்வர வேண்டும். நாம் இப்பிறப்பில் வளமாக வாழ்ந்தால் ஏதோ நாம் செய்த பூர்வ புண்ணிய பலன் என்று சொல்கின்றோம். பூர்வ ஜன்மத்தில் செய்த நற்காரி யங்கள் ஒவ்வொன்றுக்கும் மறு ஜன்மத்தில் நற்பலன் உண்டு என்பதை புராணங்களும் வலியுறுத்தி உள்ளன. உதாரணத் துக்கு ஆலயத்தில் ஓடித் திரிந்த எலி ஒன்று அணைய இருந்த தீபத்தின் திரியை தற்செயலாகத் தூண்டிய காரணத் தால் மறு ஜன்மத்தில் அந்த எலி முசுகுந்தச் சக்கரவர்த்தி யாகப் பிறந்த வரலாற்றை யாம் அறிவோம். அதேபோன்று வேட்டையாடச் சென்ற வேடன் ஒருவன் புலி ஒன்றினிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்து உயிர் தப்புவதற்காக இரவுப் பொழுது முழுவதும் உயரத்தில் ஒரு மரக் கிளையில் இருக்க வேண்டியிருந்தது. வாளாவிருந்தால் எங்கே தூங்கிவிடுவேனோ என்று பயந்து, அம்மரக் கிளையின் இலைகளை ஆய்ந்து ஒவ்வொன்றாக கீழே போட்டுக் கொண்டிருந்தான் அந்த வேடன். இரவும் கழிந்து பொழுதும் விடிந்தது. புலியும் மரத்தடியை விட்டுச் சென்று விட்டது. அந்த வேடன் அமர்ந்திருந்த மரம் வில்வ மரம். அன்றைய இரவு சிவராத்திரி. சந்தர்ப்ப வசத்தால் அம்மரத்தின் அடியில் அமைந்திருந்த சிவலிங்கத்தின் மீது, அவன் கொய்து போட்ட வில்வபத்திரங்கள் வீழ்ந்ததால் தெரிந்தோ. தெரியாமலோ அவன் சிவராத்திரி தினத்தன்று சிவ பூசை செய்த பலனைப் பெற்றான். இந்த சிவ புண்ணிய காரியத்தின் விளைவாக மறு ஜன்மத்தில் அந்த வேடன் மன்னனாகப் பிறந்ததாக புராண வரலாறு கூறுகிறது. எனவே, நல்லதோ, கெட்டதோ, நாம் செய்யும் காரியங்களுக்கு பலன் மறு ஜன்மத்தில் எமக்குக் கிடைத்தே தீரும் என்பது நம்பிக்கை.

உதாரணத்துக்கு, ஒரு கதை சொல்கிறேன். கேட்டுப் பாருங்கள்.

தமிழ் நாட்டிலே திருஈங்கோய் என்றொரு மலை உண்டு. அங்கு சிவன் உறைவதாகவும் சொல்லப்படுகிறது. பச்சைப் பசேல் என்ற பசுமையான மலை. அங்கு பெரிய பெரிய விருட்சங்கள் காய் கனிகளுக்குப் பஞ்சமேயில்லை. ஒரு நாள் அங்கு வந்த குரங்கு ஒன்று அந்த மலையின் வனப்பை நோக்கியது. சுற்றிச் சுற்றிப் பார்த்தது. மலையின் ஒரு பக்கம் முழுவதும் மா, பலா, வாழை ஒரே தோப்பு. மறு பக்கம் பூக்கள், பூக்கள், பூக்கள்! எங்கு நோக்கினும் பூக்கள். எல்லாம் முகம் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன. சுற்றியுள்ள மலைகள் எல்லாம் சாதாரணமாயிருக்க இந்த மலை மட்டும், மரகத மலையாகக் காட்சி தருகிறதே என்று அந்த குரங்கு உற்சாகத்தால் அங்குமிங்கும் துள்ளிக் குதித்துத் தாவி மகிழ்ந்தது.

மலையின் நடுவே, நடு நாயகமாய் நின்றிருந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புளிய மரம் அதன் கண் சின்னச் சின்ன இலைகள். வெளியே தெரியாதபடி காயும் பழமுமாய் காய்த்துத் தொங்கியது. இந்த புளிய மரத்தால் தனக்கு பெரிய அதிஷ்டம் வாழ்க்கையில் காத்திருக்கிறது என்பது அப்போது அந்தக் குரங்காருக்குத் தெரியாது.

அங்கிருந்த வாழைப்பழங்களை வயிறு முட்டத் தின்றபின், அந்த ஈங்கோய் மலையில் தள்ளாடித் தள்ளாடி நடந்தது அந்தக் குரங்கு. ஆயுள் முழுவதுமே இந்த மலையில் வாழ்ந்து விடுவோம் என்ற நினைப்புடன் அந்த மலையை சுற்றி சுற்றி வந்தது.

வெய்யிலும் சூடு பிடித்தது. வயிறும் நிரம்பிவிட்டது. தூக்கம் கண்களைச் சுழற்றியது. எங்கே தூங்கலாம் என்று சுற்று முற்றும் பார்த்தது. குட்டிக் கரணம் அடித்து சுற்றும் முற்றும் இடம் தேடிய குரங்காரின் கண்களிலே மீண்டும் அந்தப் பெரிய புளிய மரம் தென்பட்டது. அந்தப் புளிய மர நிழலிலே காலை நீட்டிப் படுக்கலானார் அந்தக் குரங்கார்.

சுகமான புளியங்காற்று இதமாக வீசித் தாலாட்ட சுகமாகத் தூங்கி எழுந்தார் குரங்கார். தூக்கத்தின் சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சியுடன் "ஆடுரங்கா ஆடு" என்று யாரும் கூறாமலேயே சிறிது நேரம் குட்டிக் கரணம் போட்டு ஆடியது அக் குரங்கு.

காலையிலிருந்து வாழைப்பழத்தையே உண்ட குரங்காருக்கு ஏதாவது காரமாக, அல்லது புளிப்பாக உண்ண வேண்டும் போல் தோன்றியது. உடனே தாவிக் குதித்து புளிய மரத்தின் மேல் ஏறி, கிளைக்குக் கிளை தாவி வேண்டிய அளவு புளியம் பழங்களை குஷியாக உண்டது. தேவைக்கு மேல் உண்டதால், புளியின் சூட்டால் குரங்காரின் நாக்கு ரணமாக எரிச்சல் எடுத்தது. தாகம் வேறு எரிச்சல் காரணமாக நாக்கை வெளியே தொங்கப் போட்டுக் கொண்டது. நீருக்கு எங்கே போவது? மலையடிவாரம் போயாக வேண்டும். தீவிரமாக சிந்தனை செய்த குரங்காருக்கு திடீரென ஒரு இன்ப உணர்ச்சி. மரத்தின் மேல் இருந்து இரண்டு சொட்டுத் தேன் துளிகள் அதன் நாவிலே வீழ்ந்தன. ஆகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தம் தாங்க முடியவில்லை. வாயைச் சப்புக் கொட்டிய வாறு அண்ணாந்து பார்த்த குரங்காரது கண்களிலே மரத்தின் உச்சிக் கொப்பில் இருந்த தேனடை ஒன்று புலப்பட்டது.

"தேன் வேண்டும்" "தேன் வேண்டும்" என்ற படி உற்சாகமாக புளிய மரத்தின் மேல் "சர சர" என்று ஏறினார் குரங்கார். அருகே சென்றதும் மிகப் பெரிய தேனடை அது எனக் கண்டு கொண்டது. இன்று இரவு முழுவதும் தேன் தான் எனக்கு உணவு என்று தீர்மானித்த படி தேனடையை அணுகியது.

"குரங்குப் புத்தி" என்பார்களே! அதுவும் சரிதான். சற்றும் யோசிக்காமல் ஆயிரக் கணக்கில் தேனீக்கள் மொய்த்திருந்த அத் தேன் கூட்டில் சடாரெனக் கையை வைத்தது. குரங்கின் கைபட்டது தான் தாமதம் தேனீக்கள் கலைந்து குரங்காரை வேண்டியளவு கொடுக்குகளால் கொட்டித் தீர்த்து விட்டன.

வலி பொறுக்க முடியாத குரங்கார் தேனடையை பிடித்துக் கொண்டு தொங்கவே, தேனடை கழன்று தரையில் விழுந்தது. குரங்காரும் கிளைகள் மேல் தாவி கீழே விழுந்தார். தேனடையைக் காவிக் கொண்டு மலையின் மீது ஓட ஆரம்பித்தார். தேனடையிலிருந்து தேன் சிந்தலாயிற்று. மலையிலிருந்த, மலைக் கொழுந்தீஸ்வரரான சிவனார் மீது அத்தேன் துளிகள் சிதறியது. சிவனார் தனக்கு நிகழ்ந்த தேன் அபிஷேகமாகவே இந்நிகழ்வை எடுத்து கொண்டு மகிழ்ந்தார்.

எனவே, சிவனுக்குத் தேனாபிஷேகம் செய்த புண்ணியம், குரங்காருக்குக் கிடைத்தது. இதன் காரணமாக இந்தக் குரங்கு மறு பிறவியில் ஒரு அரசனாகப் பிறந்தது. மகத தேசத்து மன்னன் சுப்பிரபனாக ஜனித்தது.

மன்னன் சுப்பிரபன், மனுநீதி தவறாமல் ஆட்சி புரிந்தான். மன்னுயிர்களைத் தன்னுயிர் போல் பாதுகாத்து வந்தான். நிரம்பிய இறைபக்தி கொண்டிருந்த அவனுக்கு தனது முன்னைய ஜன்ம வரலாறு ஒன்றும் தெரியாது. தெரிந்திருக்க நியாயமுமில்லை.

இவ்வண்ணம் சிறந்த மன்னன் எனப் பெயர் கேட்டு, மிகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக வாழ்ந்த மன்னன் சுப்பிரபனை சிவபெருமான் சோதிக்க விரும்பினார்.

நாட்டிலே ஒரு வித குறையும் இல்லாத காரணத்தால் மன்னன் தனது மனைவி மக்கள், மந்திரி, பாதுகாப்பு படை ஆகியவற்றுடன் ஷேத்ராடனம் செய்யப் புறப்பட்டான். நாடு நாடாய் சென்று தலங்கள் எல்லாம் தரிசித்து இறைவழிபாடு செய்தான் மன்னன். பல தலங்களையும் தரிசித்த பின் கடைசியாக திருஈங்கோய் மலையை வந்தடைந்தான். அந்த மண்ணில் பாதம் பதித்த நிமிடமே அவனை இனம் தெரியாத ஒரு வித உணர்ச்சி உலுப்பியது. தனக்கும் அந்த மலைக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பிருப்பது போல் உணர்ந்தான் மன்னன். ஆனால், ஒன்றுமே புரியவில்லை. இதே ஊர் தான் அவன் குரங்காக வாழ்ந்த ஊர்.

ஒன்றும் புரிபடாத நிலையில் அகண்ட காவிரியில் ஸ்நானம் செய்த பின், ஈங்கோய் மலையடிவாரத்தை அடைந்து அங்கு ஆலயத்தில் வீற்றிருந்த மரகதாலேஸ் வரரையும் மரகதவல்லியையும் வணங்கினான் மன்னன். கோதானம், ஸ்வர்ண தானம் என்பனவும் செய்தான்.

பின்னர், அங்குள்ள தல விருட்சமான புளிய மரத்தை தரிசித்த போது, அவனுக்கு மீண்டும் இனம் தெரியாதோர் உணர்வு, அங்கேயே தங்கிவிடலாமா என்று தோன்றியது. அங்கு தங்கி ஆலய பணிகள் சில செய்தான். ஆலயம், மண்டபம், சுற்றுப் பிரகாரம் யாவையும் செப்பனிட்டான்.

தினமும் பூசை செய்வதோடு, அங்கு தாராளமாகக் கிடைத்த தேனால் இறைவனுக்கு அபிடேகமும் செய்வித்தான். மரகத ஆலேஸ்வரர் தேனில் குளித்தார். மன்னன் மனம் மகிழ்ந்தான்.

மகிழ்ந்திருந்த மன்னனை சோதிக்க விரும்பினார் இறைவன். அந்த சுற்றாடல் முழுவதிலுமே தேன் கிடைக்காமல் செய்தார் ஈசன்.

அபிடேகத்திற்கு தேன் கிடைக்கவில்லையே என்று மன்னன் தவியாய் தவித்தான். மாற்று வழியாக என்ன செய்யலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என யோசித்த மன்னனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

சிவபிரானுக்கு அபிடேகம் செய்ய கொம்புத் தேன் தான் வேண்டுமா? ஐயனே! உன் மேல் பாடப் பெற்ற தேனினுமினிய பாடல்களைத் தினமும் செவிமடுத்த எனது செவியும் தேனாய்த் தான் தித்திக்கின்றது. எனவே இனி தயங்க மாட்டேன். ஈசன் திருநாமத்தையே தினமும் கேட்கும் எனது செவித்தேனா லேயே சிவனாரை அபிஷேகிப்பேன். எனது செவியை அறுத்து அந்த ரத்தத்தால் ஈசனுக்கு அபிஷேகம் செய்கிறேன் என்று கூறி தனது செவியை வெட்ட் வாளை உருவினான் மன்னன் சுப்பிரபன்.

நெஞ்சம் நெகிழ்ந்தார் ஈசன் உமையோடு அங்கே தரிசனம் கொடுத்து, ஓங்கிய வாளொடு நின்ற சுப்பிரபனைத் தன் மடி மீது இருத்தினார். கைலைக்கு அழைத்துச் சென்று அவனை சிவகணங்களுக்குத் தலைவராக்கினார்.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்றிடச் சிவகதி தானே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48. இறைவனின் கருணை

உலகம் நியதி தவறாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றது. இயற்கை பருவம் தவறாமல் தன் செயல்களை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. உலக நியதியில் பிசகு ஏற்படுவதில்லை. பிசகு என்று ஒன்று எமக்குத் தெரிந்தால், அது எம்முடைய பிசகே அன்றி உலகத்தினுடைய பிசகு அல்ல.

எமது மனம் குழப்பமடைந்திருக்கும் போது நாம் காணும் காட்சி வேறு, மனம் தெளிந்த பின் காணும் காட்சி வேறு பிசகு காட்சியில் அல்ல. குழப்பம் அடைந்த எமது மனதிலே தான்.

மனிதன் கலக்கம் அடையும் போது, குதர்க்க நியாயம் பேசுவான். கலக்கம் தெளிந்தால் சந்தேகம் தீரும். குழப்பம் தீரும், மனம் சாந்தி அடையும். இதற்கு இறை சிந்தனை அவசியம். தியானம் பயிலல் நன்று.

இவ்வுலகத்திற்கு நாம் வருமுன்னரேயே நாம் இப்பூவுலகில் வாழ எமக்கு வேண்டிய எல்லாவற்றையும் ஒரு குறையுமில் லாமல் நமக்கு முன்னே ஆக்கி வைத்து பின்னர் தான் இறைவன் எம்மை இவ்வுலகில் இறக்கிவிடுகின்றான்.

இவ்வளவு தூரம், தமது பெருங்கருணையால் எம்மை காக்கும் இறைவனின், மகாதயாள குணத்தை ஒரு கணம் சற்று நிதானமாகச் சிந்தித்தால் போதும் இறைவன் மேல் எமக்குப் பக்தி பிறப்பதற்கு.

இனி, உலகிலே இறைவன் எமக்கு தந்தருளிய சகலதை யும் நல்வழியில் பயன்படுத்தி நற்பயன் பெறுவது எமது கையிலும் தங்கியிருக்கின்றது. எல்லாமே 'விதி' என்று கூறி, அந்தப் போர்வையின் கீழ் நாம் வாளாவிருந்தால் எமது எதிர்காலம் என்னாவது? எமது பிறவியே வீணாகிப் போய் விடாதா?

நாம் அடுத்தவருக்கு ஒரு சிறு உபகாரம் செய்தால் அதற்கு பிரதிபலனை எதிர்பார்ப்பது வழக்கம். பிரதிபலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கா விட்டால், அவர்களை நன்றி கெட்டவர்களாகக் கருதி, வெறுக்க ஆரம்பித்து விடுகின்றோம்.

இது இவ்விதமிருக்க எம்மை எல்லாம் படைத்து இமைப் பொழுதும் மறவாமல் காத்துவரும் இறைவனுக்கு நாம் உபகாரம் செய்யாவிட்டால், நாம் இறைவனுக்கு நன்றி கெட்டவர்களாக ஆகி விடுவோம் இல்லையா!

ஆனால், இறைவன் சலமிலன், சங்கரன், எம்மை விருப்பு வெறுப்போடு அவன் நடாத்துவதில்லை. எல்லோர்க்கும் சமமாகக் கருணை மழை பொழியும் அருங்குணமுடையவன் இறைவன். அது அவன் பெருங்குணம்.

எனவே, நாம் துன்பம் வந்துற்ற போது மாத்திரமல்லாது, இன்பம் வந்தெமை மகிழ்விக்கும் போதும் இறைவனைத் தஞ்சமெனக் கொள்ள வேண்டும். அவ்வாறு நிற்பின் நாம் ஒரு பொல்லாப்புமில்லாமல் வாழலாம்.

மனம் நொந்து தளர்ந்த நிலையில், இறைவன் பாற் கொள்ளும் சரணாகதியை தவிர மனக்கிலேசம் தீர்க்க வேறென்ன வழி! இந்த உண்மையை யாம் நினைத்து நடந்தால் நாம் உய்வது நிச்சயம்.

எம்மைப் பற்றி சற்று வித்தியாசமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

நாம் எமது மனதைக் கொண்டு வாழ்கின்றோம். அதனால் தான் "மனம்போல் மாங்கல்யம்" என்று பெரியோர் சொன்னார் களோ என்னவோ!! மனம் எம்மை ஆளாமல், நாம் மனதை ஆளுவோமேயானால், பூத்து மலரும் நறுமண மலர் போல் எமது வாழ்வும் அமையும்.

ஆராய்ந்து பார்த்தால் இரு மாறுபட்ட தன்மையான உணர்வுகள் எம் மனதிலே உள்ளத்தை யாம் அறிவோம். ஒரு பக்கம் மகிழ்ச்சி, திருப்தி, அன்பு, ஒற்றுமை போன்ற பசுமையான உணர்வுகள் இருப்பதைக் காணலாம்.

மறுபக்கம் பார்த்தால், பகை, சினம், வெறுப்பு, கோபம், வஞ்சனை, சூதுவாது போன்ற புன்னெறி உணர்வுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிற்குமிழி போல் எமக்குள் தோன்றி மறைவதைக் காண லாம். இப்பல்வகையான மாறுபட்ட உணர்வுகளும் தோன்றி மறையும் தளம் எமது ஒரே ஒரு மனம் தான்.

இம் மாறுபட்ட உணர்வுகளால் எமது மனம் சமநிலையை இழந்து அவஸ்தைப்படுவதையும் யாம் அறிவோம். இந்நிலை அகல நாம் எண்ணங்களை வைத்துக் கால் பந்து விளையாடும் எமது மனதை அந்த விளையாட்டரங்கினின்று எடுத்து ஆத்மாவின் பிரசாந்தமதுரமயமான வெளி அரங்கில் வைத்து வாழ முயன்றால், தான் நாம் மனிதனாக வாழ முடியும்.

மது, மாமிசம், விபசாரம், கொலை, களவு, கொள்ளை, இலஞ்சம் போன்ற மகா பாதகங்களை அடி மனதிலிருந்து அறவே அகற்றி உண்மை பேசி தர்மத்தின் வழி நடக்க நாம் முயல வேண்டும். மனதில் அசுத்தங்களை வைத்துக் கொண்டு, இறைவனை வழிபட்டால், இவ்வழிபாட்டால் நன்மை பெற முடியாது.

எமக்கு மனித ஜன்மம் கிடைத்திருப்பது எதற்கு என்று ஆழ்ந்து சிந்தித்தால், அது பஞ்சமா பாதகங்களைச் செய்து ஐம்பொறிகளையும் கெடுப்பதற்கல்ல. கிடைத்த ஜன்மத்தை ஈடேற்றுவதற்காகவே என்றே பதில் கிடைக்கும். எமது ஜன்மத்தில் பாவக் கறை படிய யாம் விடவே கூடாது. எமது மனமானது ஆத்மீக சிந்தனையில் உயரப் பறந்தாலும் நாம் வாழும் வரை இவ்வுலகிலே நற்கருமங்களைச் செய்தேயாக வேண்டும்.

வானம்பாடி, வானத்தில் பறந்து திரியும் பறவை ஆனாலும், பூமியில் இறங்கித்தான் இரையைத் தேடுகின்றது. அதே போன்று தான் மனிதன் தனது மனதை இறைவன் பாற் செலுத்தினாலும் நாம் ஆற்றும் கருமங்களையும் நல்ல முறையில் ஆற்ற வேண்டும்.

ஆகாய விமானம் பூமியில் சிறிது நேரம் ஓடிய பின்னர் தான் மேல் எழுந்து பறக்கின்றது. விமானம், மேல் எழுந்து பறக்கின்ற சக்தியும், வேகமும் அது தரையில் ஓடுகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டத்திலிருந்து தான் பெறப்படுகின்றது.

எனவே தான், பூவுலகில் நாம் வாழும் வாழ்க்கையை மனச்சாட்சிக்கு அமைய முறையாக வாழ்ந்து முடிப்போர்க் குத்தான் மேலான உயர்நிலை கிட்டும். இவர்களே உத்தம மனிதர் எனப்படுவர். இல்லற தர்மம் மூலம் மனிதன் முதல் நிலை அடைய வாய்ப்பு நிறைய உண்டு. அதற்கு இல்ல றத்தை நாம் நல்லறமாகக் கொண்டு வாழ வேண்டும்.

இதிகாசங்களில் இராமரும், கிருஷ்ணரும், இல்லறவாசி களாகவே வாழ்ந்து எமக்கு இல்லற தர்மத்தை உணர்த்தினார் கள். கர்ம யோக மார்க்கத்தை முறையாகப் பின்பற்றினால், சம்சாரசாகரத்தை வெகு சாதுரியமாகத் தாண்டி விடலாம் என்பது ஞானிகளின் கருத்து.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனது சொந்தக் கடமை யிலிருந்து தேசக் கடமை வரையில் உள்ளது. இவற்றை ஆற்றும் வழியிலே எமக்கு ஏற்படும் தடைகளைத் தான் நாம் வாழ்க்கைப் பிரச்சினைகள் என்கின்றோம்.

தெய்வநம்பிக்கை எம் சித்தத்தில் இருக்குமேயானால், எமது துயர்கள் இறையருளால் ஆதவனைக் கண்ட பனி போல் அகன்று விடும். பன்றிக் குட்டிகளுக்கும் தாயாக வந்து பால் சுரந்த பரமன் எம்மேல் பராமுகம் காட்டுவானா? கிடையாது. எனவே இறைவன் கருணை எம்மேல் பொழியும் என்ற நம்பிக்கையோடு, தூய மனதோடு, எமது கடமைகளை ஆற்றுவோம். பயனைப் பெறுவோம் முயற்சிப்போமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49. கலியுகத்தில் பக்தி

ஒரு காலத்தை வெல்ல வேண்டுமானால், அக்காலத்துக் கேற்ற செயலை நாம் செய்தாக வேண்டும். எக் காலத்திலும் எல்லாச் செயலையும் யாம் செய்து விட முடியாது. அவ்வாறு செய்தல் பொருத்தமுமாகாது. காலம் யுகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஆயிரம் சதுர்யுகங்களையும் ஒரு 'கல்பம்' என்றழைப்பர். கல்பம் முடிவுக்கு வந்ததும். உலகம் பிரளயத்தில் அழிந்து போய் விடும். மீண்டும் அடுத்த கல்பம் தொடங்கும் போது அத்தனை உலகங்களும் படைப்புக்குள் இடம் பெறும்.

இவ்வாறு காலம் படைத்து, காத்து, அழிக்கின்றது என்ற வகையில் கடவுளே கால வடிவை எடுக்கின்றார் என்பது கண்கூடு.

கிருதயுகம், திரோதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களுக்கும் நான்கு வெவ்வேறு வழிபாட்டு முறைகள் கூறப்பட்டுள்ளன.

வழிபாட்டு முறைகளில், கிருதயுகத்திற்கு தியானமும், திரோதாயுகத்திற்கு யக்ஞங்கள் என்னும் கர்ம வழியும் துவாபரயுகத்திற்கு அர்ச்சித்தலும், கலியுகத்திற்கு பக்தியும் கூறப்பட்டுள்ளது.

கலியுகத்தில் விஷ்ணு மேல் பக்தி கொண்டு பகவானை அடைந்தவர்கள் என ஸ்ரீ ஆண்டாள், ஆழ்வார்கள், மீரா, இராம தாஸர், கபீர்தாஸர், துளசிதாஸர், ஞானேஷ்வர் ஆகியோரை விஷ்ணு புராணம் குறிப்பிடுகின்றது.

சைவத்தில் காரைக்கால் அம்மையாரில் ஆரம்பித்து சமய குரவர்கள், சந்தான குரவர்கள் மற்றும் மெய் அடியார்கள் சிவனார் மேல் பக்தி செய்து முத்தி எய்தியதை யாம் அறிவோம்.

கலியுகத்திற்கு மிகவும் ஏற்றது பக்தி மார்க்கமே.

பக்தியைப் பற்றி பல்வேறு விதத்தில் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனால் ஆட்கொள்ளப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தினால் இறைவன் மேல் பற்றுக் கொள்வதும் பக்தி தான். இறைவனது அருட்செயல்களையே மீண்டும் மீண்டும் கேட்கப் பிரியப்படுவதும் பக்தி தான். இறைவனது அன்பைப் பெற, ஏங்குவதும் பக்தி தான். இறைவனின் மூர்த்தம் ஒன்றை அபிடேகித்து, பூசித்து, அலங்கரித்து, விழா எடுப்பதும் பக்தி தான். இறைவன் இன்னருள் பெற விரதமிருத்தல், உபவாச மிருத்தலும் பக்தி தான்.

பக்தி செய்யும் பொது ஒருவனது மனம் உலக விடயங்களில் தனது ஈடுபாட்டைக் குறைத்துக் கொள்கின்றது. ஆண்டவனைத் தன் உயிராகக் கருதி ஈடுபடுகின்றது. ஆண்டவனிடம் தன்னை அர்ப்பணிக்கின்றது. அவனிடம் அடைக்கலம் புகுகின்றது. இறைவனைச் சிந்திக்கும் பொழுதையே தவப் பொழுதாகவும், மற்றைய பொழுதை அவப் பொழுதாகவும் கருதுகின்றது.

பக்தி மனத்தை நெகிழ்ச்சி செய்து, உணர்வுகள் அனைத்தையும் இறைவனிடம் ஒன்றி விடச் செய்கின்றது.

இறையின்பம் வேறு, உலக இன்பம் வேறு. இறை இன்பம் நிரந்தரமானது. ஆனால், உலகப் பொருள்கள் தரும் இன்பம் அவ்வாறல்ல. உலகத்தில் காணப்படும் பொருள்கள் எல்லாம், எல்லோர்க்கும் எப்போதும் இன்பம் தரா. சில பொருட்கள் சிலருக்கே இன்பம் தரும். பலருக்குப் பயன்தரா.

இதிலிருந்து அவரவர் விருப்பம் எதிலோ, அப்பொருளில் தான் இன்பம் பெற முடியும் என்பது விளங்குகின்றது. ஆகவே, விரும்பும் மனதால் தான் எந்தப் பொருளிலும் இன்பம் உண்டாகின்றது. எனவே மனதின் விருப்பமே இன்ப துன்பத்திற்கு காரணமாக அமைகின்றது என முடிவு செய்யலாம்.

நிலையற்ற பொருளுக்குப் பொருள் தாவும் மனதை நாம் கட்டிப் போட்டேயாக வேண்டும். கட்டிப் போடும் கம்பமே கடவுள், கயிறே பக்தி.

ஆலயத்துக்குச் செல்வதோடு, ஆலய வழிபாட்டின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளையும் நாம் கவனித்தாக வேண்டும். ஆலயத்துக்குச் செல்லும் போது எமது அகமும், புறமும் தூய்மையானதாக இருக்க வேண்டும், எமது எண்ணங்களை இறைவழிபாட்டில் முற்றாகச் செலுத்த வேண்டும். எமக்குத் தெரிந்தோரை ஆலயத்தினுள் சந்திக்க நேர்ந்தாலும் அவர்களோடு குசலம் விசாரித்து. ஆலயத்தின் அமைதியான சூழலைக் குலைப்பது, வரவேற்பதிற்கில்லை. ஆலயத்துள் ஒருவரோடு ஒருவர் பேசுதல், சுகம் விசாரித் தலைத் தவிர்த்துக் கொள்ளல் பண்பாகும்.

ஆலய அமைப்பிற்கும், எம்முடைய உடம்பின் அமைப்பிற் கும், உலத்தின் அமைப்பிற்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு.

உலகம் பஞ்சபூதங்களால் ஆனது, மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங்களாம். இவற்றை பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் அழைப்பதுண்டு. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்பதை,

"நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" என தொல்காப்பியர் மரபியலிற் கூறியுள்ளார்.

இதேபோன்று தான் எமது உடம்பும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனதே.

"அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்" என்பது ஞானிகள் வாக்கு.

தமிழ் நாட்டிலே அமைந்த திருத்தலங்களில் பிருதுவித்தல மாக காஞ்சிப்புரமும், அப்புத் தலமாக திருவானைக்காவும், தேயுத் தலமாக (அதாவது அக்கினித்தலமாக) திரு வண்ணாமலையும், வாயுத்தலமாக திருக்காளத்தியும், ஆகாயத்தலமாக சிதம்பரமும் அமைந்துள்ளன.

ஒரு ஊர், அங்கு அமைந்துள்ள ஆலயத்தினாலேயே, மேன்மைபெறுகின்றது என்றால் மிகை ஆகாது. ஊர் மக்களுக்கு ஆத்மீக பலத்தையும், பாதுகாப்பையும் அவர்கள் மனிதர்களாக வாழும் பக்குவத்தையும் அருளுவதும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுவதும் அங்கு அமைந்துள்ள ஆலயமே ஆகும். ஒரு ஊரில் அமைந்துள்ள ஆலயத்தின் அழகுமிகு கோபுரமே, அவ்வூருக்கு மகுடமாக அமைகின்றது. ஆலயம் இல்லாத ஊர் அடவிகாடாகும் என்பது அப்பர் சுவாமிகள் வாக்காகும். இக்கருத்தைக் கொண்ட அப்பர் பாடல் ஒன்றைக் கேட்டுப் பாருங்கள்.

**திருக்கோயில் இல்லாத திருவிலூரும்**
**திரு வெண்ணீறணியாத திருவிலூரும்**
**பருக் கோடிப் பயக்திமையால் பாடாவூரும்**
**பாங்கினொடு பல தளிர்கள் இல்லா ஊரும்**
**விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும்**
**விதானமும் வெண் கொடியும் இல்லா ஊரும்**
**அருப்பொடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும்**
**அவை எல்லாம் ஊர் அல்ல அடவி காடே!**

இது அப்பர் பாடல், இப்பொழுது தமிழ் நாட்டில் சரி, எமது நாட்டில் சரி, பெரிய ஆலயங்கள் பல அமைந்துள்ளன.

ஆனால் வேத காலத்தில் ஆலயங்கள் என்ற தனிப்பட்ட வழிப்பாட்டுத் தலங்கள் அமைந்ததாக இல்லை. இயற்கை சூழ் நிலைகளே வழிபாட்டுக்குரிய இடங்களாக அமைந்தன.

வேள்வித் தீயின் மூலம் வழிபாடு நடாத்தி, இறை ஆசி பெற்றனர் வேதகால மக்கள். நதிக் கரைகளிலும், சோலை களிலும் தெய்வ வணக்கம் நிகழ்ந்தன. அத்தகைய விருட்சங்கள் தல விருட்சங்கள் ஆயின.

காலப்போக்கில் ஆகமங்களை அனுசரித்தே ஆலயங்கள் அமைக் கப்பட்டன. ஆரம்பத்தில் மலைகளைக் குடைந்தும் கற்களை அடுக்கியும் காலப் போக்கில் பிரமாண்டமான ஆலயங்கள், மன்னர்களால் கட்டி எழுப்பப்பட்டன.

மானிட சரீரமே ஆலயங்களுள் சிறந்தது என்பதை ஆன்றோர்கள் அங்கீகரித்துள்ளமை யாம் எல்லோரும் அறிந்ததே. எனவே எமது ஆத்மீக முன்னேற்றத்திற்கு ஆலய வழிபாடு மிக அவசியம், என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்!.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50. பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது இறைவனை நோக்கிச் செய்யப் படுவதொன்றாகும். உள்ளங்கள் ஒரே பாங்கில் அமையும் போது, பிரார்த்தனை பொதுவானதாக அமையும். நோக்கம் ஏகோபித்து இருக்கும் போது ஒற்றுமை நிலவும், அன்பின் ஐக்கியம் ஏற்படும். எண்ணங்கள் இணையும், இணக்கங்கள் நிறைவெய்தும். உயிர்கள் அனைத்தின் நலனுக்காகப் பிரார்த் திப்பதும் பிரார்த்தனை தான், நாம் நமது நலனுக்காகப் பிரார்த்திப்பதும் பிரார்த்தனை தான்.

பிரார்த்தனை இரு வகைப்படும். காமியப் பிரார்த்தனை, நிஷ்காமியப் பிரார்த்தனை என்பன அவை இரண்டுமாகும்.

உலக சம்பத், ஆரோக்கியம். சுவர்க்க பிராப்தி, ஆயுள் ஆகியவற்றை வேண்டுதல், காமியப் பிரார்த்தனையுள் அடங் கும். பக்தி, ஞானம், அருள், வைராக்கியம், விவேகம், முக்தி ஆகியவற்றை வேண்டுதல். நிஷ்காமியப் பிரார்த்தனை யுள் அடங்கும். ஆத்ம சாதகர்களுக்குரியது, நிஷ்காமி யப் பிரார்த்தனையே ஆகும்.

மணிவாசகப் பெருமான் தனது தேனினும் இனிய திருவாச கத்தில், பிரார்த்தனைப் பத்து என்றொரு பகுதியை அருளிச் செய்துள்ளார். இதனை சுவாமிகள் திருப்பெருந்துறையிலே பாடியருளியுள்ளார்.

அடிகளாரை எம்பெருமான் குருவாக வந்து திருப்பெருந் துறையிலே, குருந்த மர நிழலிலே ஆட் கொள்கின்றார். மணிவாசகர் செய்த புண்ணிய பலன், ஆண்டவனைக் குருவாக அடையும் பாக்கியம் கிடைக்கின்றது. இந்நிலையில் சிவஞானபோதம் என்பதன் விளக்கம் அடிகளாருக்கு இறைவனால் போதிக்கப்படுகின்றது.

குரு உபதேசம் முடிந்த பின், எம்பெருமான் தனது கணங்களோடு மறைந்து விடுகின்றார். மணிவாசகர் தனித்து விடப்படுகின்றார். அவரை எம்பெருமானது பிரிவு வாட்டுகின் றது. துயர் தொடர்கின்றது. இருப்பினும் அவரது உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனின் கோயிலாக அமைகின்றது. பக்திப் பெருக் கெடுத்து ஓடும் பக்தர்களது உள்ளமே ஆண்டவன் ஆலயமாக அமைகிறது என்பது கோட்பாடு. அங்கே இறைவன் சான்னித் தியமாகின்றான்.

"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக, வாக்கையும் மனதையும் ஒன்றுபடுத்துவது யோகம். பேசியதையே மனதில் கொள்ள வேண்டும். மனதில் கொண்டதையே பேசவும் வேண்டும். உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுபவன், அருளுக்குப் புறம்பாகின்றான். எனவே வாக்காலும் மனதாலும் உலக ஞானத்தோடு நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். காலத்தை நன்கு பயன்படுத்துவது கடவுள் வழிபாடாகும். காரணம், கடவுள் கால சொரூபியாக உள்ளார். சத்தியம் பேசுதலும் ஒரு வித பிரார்த்தனை தான். குரு பக்தியும் ஒப்பற்ற பிரார்த் தனையாக அமைகின்றது.

குரு வடிவாக வந்து தன்னை ஆட்கொண்ட எம்பெருமான், தன்னை, உடன் அழைத்துச் செல்லாததையிட்டு மணிவாசகப் பெருமான் உருகிப் பாடியவைகள் எத்தனை!!

இறையருள் தனக்கு எளிதாகக் கிடைத்தமையை, அதாவது குதிரை கொள்ளப் பயணம் செய்த தன்னைகுருந்த மர நிழலிலே குருவடிவாக எழுந்தருளி ஆட்கொண்ட அதிசயத்தை திருப்பெருந்துறையிலே அற்புதப் பத்தாகப் பாடியருளுகின்றார் மணிவாசகர்.

பிறவிப் பிணி என்பது பரமன் அருளாலேயே நீங்க வேண்டும். நிலையற்ற பல செய்த என்னை, நிலையான நீ வந்து ஆட் கொண்ட விந்தையை, பரமானந்தத்தை என்னவென்று சொல்லுவேன்? என்கிறார் அடிகளார்.

பிரார்த்தனையால் பெறப்படுவது சிவானந்தம் என்னும் தேன், இதனைப் புசிக்கப் புசிக்க அது தெவிட்டாது. இதனை யான் புசிக்க நேர்ந்தால் எனது நல்வினை தீவினை யாவும் பொசுங்கிப்போம். பஞ்ச பூதங்களோடு எமது உடலும் வெந்துபோம், எஞ்சி நிற்பது என்ன? நீறு போன்ற சிவானந் தமே. இது அடிகளார் அநுபவ வாக்கு.

சிவானந்தம். இது முக்தியை நல்கின்றது. சிவன் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபூரணனோடு, அற்பனான என்னை கலக்க வைக்கிறது. இக்கருணைக்கு யான் எத்துணை கைம்மாறு செய்வேன்!

மும்மூர்த்திகளும், தேவரும், ஆதித்தியர்களும், வசுக்க ளும், வணங்கவும், கட்புலனுக்கப்பால் நின்று அப்பரம் பொருள் அருள் மழையாக மேலிருந்து எனை நோக்கிக் கீழ் இறங்கி ஆட்கொள்ள குதிரை மேல் சேவகனாய் வந்ததை, இந்த இன்னருளை என் என்பேன்! ஏதென்பேன்?

இறைவன் ஒருவனே அருமருந்து, அவனே வைத்தீஸ் வரன், சர்வரோக நிவாரணன் ஆனால் அந்த வைத்தியனை யாம் எளிதில் பெற முடியுமா? முடியாதா? அவனை வழிபட வேண்டும். பிரார்த்திக்க வேண்டும். தியானிக்க வேண்டும். தோத்தரிக்க வேண்டும். இந்த வைத்திஸ்வரனையே உமாபதி சிவாச்சாரியார் தனது அருள் நூலாகிய திருவருட்பயனில் "மன்னுபவம் தீர்க்கும் மருந்து" என்றார்.

**"உன்னுமுளது ஐயமிலது உணர்வா ஒவாது**
**மன்னுபவம் தீர்க்கும் மருந்து"**

இறையைச் சிந்திக்கச் சிந்திக்க பக்குவம் கிடைக்கின்றது. பக்குவம் பெற இரும்பும் காந்தமாகின்றது. சிவயோகம் சித்திக்கின்றது. அஞ்ஞானம் அகல்கின்றது. ஞானம் உதிக்கின்றது. எது நிலையானது, எது நிலையற்றது என்ற வேறுபாடு புரிய வருகின்றது. இதற்கெல்லாம் தேவை வழிபாடு, பிரார்த்தனை. வழிபட்டவன் வழியை அறிகின்றான். எதற்கு வழி? நிலையான பேரின்பத்திற்கான வழி. கற்பகத் தருவான கடவுளைக் காணும் வழி. பாவங்கள் அணுகாத புண்ணிய வழி. பாவம் அறுக்கும் பண்பு வழி. வனாந்திரத்தில் பயணிப்பவன் பூஞ்சோலையை அடையும் வழி. உள்ளம் ஆண்டவனின் ஆலயமாக அமையும் வழி. இந்த வழியின் முடிவே எல்லையற்றது. பேரின்பம், அதுவே எமது ஆன்மீக இலட்சியம். எனவே, எமது அன்றாட வாழ்வில் யாம் எதைச் செய்யாது, தவறினும் எம்பெருமானை இமைப்பொழுது தன்னும் பிரார்த்தனை செய்வதைத் தவறவிடாதிருக்க சங்கற்பம் செய்வோம்.

**இமைப்பொழுதும் எந்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.** ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. திருமணப் பந்தலிலே....

இறைவனின் திருவிளையாடல்கள் அனைத்தும் ஈசன் யாரோடு விளையாடுகின்றார்? எல்லாம் தன்னை இமைப் பொழுதும் மறவாத தனது மெய்யடியார்களோடு தான். அவரது விளையாட்டுக்களைத்தான் சற்றுப் பார்ப்போமே!

மணிவாசகருக்காக நரிகளைப் பரிகள் ஆக்கினார் எம்பெருமான். வந்தி அம்மைக்காக பெண் சுமந்த மேனியன் மண் சுமந்தார், பிரம்படியும் பெற்றார்.

இவை மாத்திரமல்ல, தாய்ப் பன்றியை இழந்த பன்றிக் குட்டிகளுக்காக பன்றி வடிவெடுத்துப் பால் கொடுத்ததும் ஈசன் தான். திண்ணனாரின் பக்தியின் மேன்மையை சிவ கோசரியாருக்கு வெளிப்படுத்த தன் கண்ணிலிருந்து குருதி வடியச் செய்ததும் காளத்தியப்பரான ஈசன் தான். உடல் சலித்தும் மனம் சலியாத அப்பர் சுவாமிகளுக்கு அவர் தன்னுடல் தேயக் கையிலையைக் காண்பேன் என பிடிவாதத் துடன் கையிலை நோக்கி சிரமத்துடன் பயணிக்கையில் அவர் மேல் கருணை கொண்டு, கயிலைக் காட்சி யைத் திருவையாற்றிலே காட்டி, அப்பர் சுவாமிகளை வியப்பும், களிப்பும் அடையச் செய்தவரும் ஈசன் தான்.

இத்தகைய திருவிளையாடல்களை விந்தையாகப் புரிந்த எம்பெருமான், தனது தோழனான தம்பிரான் தோழராம் சுந்தரர் வாழ்வில் புரிந்த திருவிளையாடலைச் சற்று நோக்குவோம்.

இதற்கு யாம் மானசீகமாக திருக்கையிலை சென்றாக வேண்டும்.

ஆலால சுந்தரர் திருக்கயிலையிலே சிவபிரானுக்கு மலர் கொய்து பூமாலை கட்டி பணிவிடை செய்து வந்தவர், அதே நேரம், நந்தவனத்திலே உமையம்மைக்கு, மலர் கொய்து பணிவிடை செய்த உமையின் சேடியரான அநிந்திதை, கமலினி ஆகிய இரு பெண்கள் பால் ஆலால சுந்தரர் தனது மனதைப் பறிகொடுக்கலானார். இதனால் இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானிடம் தண்டனை பெற வேண்டி ஏற்பட்டது. இறைவன் கட்டளைப் பிரகாரம் ஆலால சுந்தரர் மீண்டும் பூமியில் மானிடனாகப் பிறந்து இவ்விரு பெண்களையும் மணம் புரிய வேண்டிய நிர்ப்பந்தம். தன் தவறை உணர்ந்த ஆலால சுந்தரர் மனம் மிக நொந்தார். பூமியில் தான் இல்லற வினைகளில் ஈடுபடும் சமயம் தன்னைத் தடுத்தாட் கொள்ளும்படி இறைவனிடம் இறைஞ்சினார். எம் பெருமானும் அதற்கு உடன்பட்டார்.

ஆலால சுந்தரர் திருமுனைப் பாடி நாட்டிலே திரு நாவலூா ரிலே பிறந்து திருமணப் பருவமும் எய்தி திருமணமும் நிச்சயிக்கப் பெற்று மணப்பந்தலிலே மாப்பிள்ளையாக வீற்றிருக்கும் சமயம் எம்பெருமான் முதிய அந்தண வடிவம் தாங்கி நம்பியாரூரர் எனப் பெயர் பெற்ற ஆலால சுந்தரரை தடுத்தாட் கொள்ள வருகின்றார்.

திருமணப் பந்தலில் பிரவேசித்த எம்பெருமானான கிழ வேதியர் சபையோரை நோக்கிக் கூறுகின்றார்.

"மறையோர்களே! இந்த நாவலூர் நம்பி எனக்கு அடிமை - இந்த வழக்கைத் தீர்த்துக் கொண்ட பின் இவன் என் சம்மதத்தோடு திருமணம் புரியட்டும்."

சபையோர் இம் மொழி கேட்டுத் திகைத்தனர். சிலர் நகைத்தனர். நம்பியாரூரர் சினம் கொண்டார். குற்றமற்ற சிவவேதியர்கள் வேறொரு வேதியர்க்கு அடிமையாதல் வழமையே அல்ல. எனவே நீர் பித்தனோ அல்லது பேயனோ? நம்பி இவ்வழி மொழியலானார்.

முதிய அந்தணர் தொடர்ந்தார். நீ என்னை அறிந்து கொண்டாயில்லை. அதனால் தான் என்னை நீ பித்தன் என்றும் பேயன் என்றும் வித்தகம் பேசுகின்றாய். எது பேசினும் நீயும் உனது முன்னோரும் எனக்குப் பணி செய்யும் அடிமை களே! இன்றும் நீ எனக்கு நான் இடும் பணியைச் செய்தாக வேண்டும் என்றார் யாவரையும் வேற்றடிமை கொண்ட பெருமான்.

இவ்வண்ணம் வாதாடி முடிவில் நம்பியை தனது இல்லத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு வா நீயும் உனது முன்னோரும் எனக்கு அடிமை என்று எழுதப் பெற்ற மூல ஓலையைக் காட்டுகின்றேன் என்று கூறி இறைவன் நம்பியைத் திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்திற்கு அழைத்துச் செல்கின்றார்.

அங்கே தன் தரிசனத்தைத் தந்து நம்பியை நெகிழ வைக்கின்றார் ஈசன். ஆலால சுந்தரரான நம்பியாரூரர் மட்டில்லா மகிழ்வும், வியப்பும் அடைந்து எம் பெருமானைத் தொழுகின்றார்.

ஐயனே! இது என்ன விளையாட்டு! அடியேன் தேவரீரை உணராது "பித்தா பேயா" என்று ஏசி விட்டேனே! இதற்கு யான் எவ்வண்ணம் பரிகாரம் செய்யப் போகின்றேன்? நம்பியாரூரர் பாகாய் உருகுகின்றார்.

நீ என்னை எவ்வண்ணம் ஏசினாயோ அவ்வண்ணமே நீ என்னைப் பாடு. நான் மகிழ்வேன் திருவாய் மலர்கின்றார் ஈசன். பிறக்கின்றது பதிகம்! ஒலிக்கின்றது தேவாரம்.

**பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தன்பால்**
**வெண்ணெய் நல்லூர் அருட்துறையில்**
**அத்தா எனக்காளாயினி**
**அல்லேன் எனலாமே.**

எம் பெருமான் சுந்தரருக்காகப் புரிந்த ஒரு திருவிளையாடல் தான்.

முன் குறிப்பிட்டபடி, தான் தோழனாகப் பெற்ற நம்பியின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி, அத்தனையையும் நெஞ்சில் ஏற்று, ஏசிய வாயால் தம்பிரான் தோழனைப் பாடவைத்து, அவரைத் தன் மீளா அடிமையாகக் கொண்டதும் ஈசன் திருவிளையாடல் தான்.

"மீளா அடிமை உனக்கே ஆளாய் பிறரை வேண்டாதே
மூளாத் தீபோல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாங்கிருக்கும் அடியார் தங்கள அல்லல் சொன்னாக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்த போதீரே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இத்தகைய ஈசன் அருளை இம்மியளவேனும் பெற யாம் முயற்சிக்க வேண்டாமா?

●

## 52. தானம்

தானம் என்றால் கொடை என்று கொள்ளலாம். தானம் பல வகைப்படும். கோதானம், பூ தானம், அன்னதானம், சிரமதானம், கன்னிகாதானம், வித்தியாதானம், ஸ்வர்ண தானம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவற்றுள் வித்தியா தானமே சிறந்தது என்கிறார் மகாகவி பாரதி.

**இன்நறுங்கனி சோலைகள் செய்தல்**
**இனிய நீர்த் தண் சுனைகள் அமைத்தல்**
**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் கட்டல்**
**பின்னர் உள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்துதல்**
**அன்ன யாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

இப்பாடலின் படி பாரதியார் என்ன சொல்கின்றார் பாருங் கள்.

இனிய பழங்களைத் தரும் சோலைகள் அமைத்தல், தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்தல், அன்ன சத்திரம் அமைத் தல், ஆலயங்கள் பல நாட்டல், இப்புண்ணிய கருமங்கள் யாவிலும் பார்க்கச் சிறந்தது ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல் என்கிறார். இந்த வகையில் வித்தியாதானமே சிறந்தது என்பது சுப்பிரமணிய பாரதியாரின் கருத்து.

தானத்திற்கும் தருமத்திற்கும் புண்ணியத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இதனாலேயே தான் இரண்டை யும் சேர்த்து தான தருமம் என்கின்றோம்.

எமது சமயம் எம்மை இயன்ற அளவு புண்ணியம் செய்யும் படி கூறுகின்றது. தானம் புண்ணியம் தரும். தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மிகுந்த செல்வந்தர்களால் அதாவது பணக்காரர் களால் தான் செய்யலாம் என்ற ஒரு எண்ணம் எம்மிடையே நிலவி வருவது உண்மை. ஆனால் மனமிருந்தால் மார்க்கம் உண்டு.

மனம் இருந்தால் தானம் செய்தல் எல்லோருக்கும் சாத்திய மாகலாம். அவரவர் இயல்புக்கு அவரவர்க்கு வேண்டிய நேரங்களில் மனமுவந்து உதவுவதும் ஒரு வகைத் தானம் தான். புண்ணியமான நற்காரியங்கள் சிறு அளவில் இருந்தா லும் கூட, அவை தானத்தின் பலனைத் தந்தே தீரும் என்பது வெள்ளிடைமலை.

ஒருவருக்கு பசித்த வேளையில் ஒரு வேளை உணவை அந்த நேரத்தில் கொடுத்து, அவர் பசி ஆற்றுவதும் ஒரு தானம் தான். ஒருவருக்கு உதவ ஒன்றைக் கொடுக்க பணத்திலும் பார்க்க மனம் இருக்க வேண்டும். ''மனம் கொண் டது மாளிகை'' ''மனமிருந்தால் மார்க்கம் உண்டு'' என்பதற்கு ஒரு கதையைக் கேட்டுப் பாருங்கள்.

ஒரு ஊரில் ஒரு கமக்காரன் இருந்தான். அவன் கமக்கார னாக இருந்த போதும் அவனுக்கென்று சொந்தமாக ஒரு வயல் துண்டு நிலம் கூட இருக்கவில்லை. எனவே அவனுக்கு ஒரே வறுமை. மூன்று வேளை சாப்பிடுவதே பெரிய காரிய மாக இருந்தது அவன் குடும்பத்தினருக்கு.

அவன் குடும்பத்தில் மகன், மனைவி இவர்களே அவனது குடும்ப உறுப்பினர். அவன் வயலில் சிந்திக் கிடக்கும் நெல் மணிகளைத் தினமும் பொறுக்கி வந்து வீட்டிலே கொடுப்பான். அவற்றை அவன் மனைவியும் மருமகளுமாகச் சேர்ந்து மாவாக்கி எப்படியாவது நான்கு அப்பம் தயாரிப்பார்கள். நாலு பேருக்கும் ஆளுக்கொரு அப்பம். அந்த அப்பங்களை ஆண்டவனுக்கு நிவேதித்து விட்டு, அவர்கள் உண்பார்கள். அன்று முழுவதுவும் அது தான் அவர்களது உணவு. அந்த வாழ்க்கையிலும் அவர்கள் திருப்தி கண்டார்கள். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து அல்லவா?

ஒரு நாள் இவர்கள் வீட்டிற்கு ஒரு சந்நியாசி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குக் கடும் பசி வீட்டின் தலைவன் அந்த சந்நியாசியை அன்போடு வரவேற்று அவரது பசியை தீர்க்க விரும்பி தனது பங்கான ஒரு அப்பத்தை அவருக்குக் உண்ணக் கொடுத்தான்.

அதைச் சாப்பிட்டு முடித்த சந்நியாசியின் பசி தீரவில்லை. அவரது முகத்தைப் பார்த்த வீட்டுத் தலைவி தனது பங்கு அப்பத்தையும் சந்நியாசிக்கு உண்ணக் கொடுத்தார். அதை உண்ட பின்னும் சந்நியாசியாரது பசி தீர்ந்ததாக இல்லை. எனவே, அவ்வீட்டு மகனும், மருமகளும் தமது பங்கு அப்பங் களை அச் சந்நியாசிக்கு அளித்தனர்.

அப்பம் நான்கையும் உண்டதும், சந்நியாசி பூரணமாகப் பசி ஆறி அவர்களை வாழ்த்திச் சென்றார். அன்று அவர் களுக்கு உண்ண வேறு உணவு ஒன்றும் வீட்டில் இருக்க வில்லை. அவர்கள் வயிறு வெறுமையாக இருந்தது. ஆனால் தாங்கள் ஒரு சந்நியாசியின் பசியைத் தீர்த்து வைத்த தர்ம காரியத்தை நினைத்து அவர்கள் மனம் பூரித்து நிரம்பியிருந்தது.

இந்த வேளை அந்த வீட்டிலே அப்பத்துக்கு மாக்குழைத்த இடத்தே சிந்தியிருந்த மாவை உண்ண வந்த ஒரு கீரிப் பிள்ளை அதன் மேல் உருண்டு புரண்டது. அப்போது அதன் மாவில் புரண்ட பக்க உடம்பு, பொன்னாக மாறியது.

இதே நேரத்தில் தருமர் சிறப்பாக ஒரு பெரிய யாகம் செய்து கொண்டிருந்தார். தானங்கள் அமோகமாக நடந்து கொண்டிருந்தன. முனிவர்கள், அந்தணர்கள், அடியார்கள், ஏழைகள் எல்லோரும் எல்லாம் பெற்றுச் சென்று கொண்டிருந் தனர்.

இந்தக் கீரிப்பிள்ளை தர்மரது யாக சாலைக்குள் புகுந்தது. அங்கே யாக மண்டபத்தில் சிந்தியிருந்த உணவுப் பதார்த்தங் களின் மீது உருண்டு புரண்டு பார்த்தது. ஆனால் அது எதிர்பார்த்தபடி அதன் உடலின் மறு பக்கம் பொன்னாக மாறவில்லை. அதற்கு ஒரே ஆச்சரியம்.

அது தனக்குத்தானே சொல்லிக்கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு சிறப்பாக தர்மர் செய்த யாகத்தை விட அந்த ஏழை செய்த அப்பதானம் மிக மிக உயர்ந்தது என்பது இப்போது தான் எனக்குப் புரிகிறது.

எனவே தானமும் தர்மமும் செய்யப் பணம் தான் தேவை என்றில்லை. பணமும் தேவை. ஆனால் அதற்கு மேலாக மனம் தேவை. இல்லையா? ●

## 53. அஹிம்சை

எமது வாழ்வில் நாம் அன்றாடம் பின்பற்ற வேண்டிய பல நல்ல அம்சங்களை மனு தர்ம சாஸ்திரம் விதித்துள்ளது. அவை ஒவ்வொன்றும் எமது நன்மைக்கே என்பதை முதலில் யாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் பொதுவான ஒரு தர்மம் அஹிம்சை. பிற உயிர்களை துன்புறுத்தாமல் இருப்பது அஹிம்சையின் பாற்படும்.

அஹிம்சையை மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடைப்பிடித்தல் அவசியம். சரீரத்தால் மாத்திரமின்றி வார்த்தைகளாலும் மனதாலும் கூட பிறருக்கு நாம் தீங்கு விளைவிக்கக் கூடாது.

இயற்கையிலே மனிதனுக்குப் பிறரை இம்சிக்க வேண்டும் என்ற வேண்டாத குணம் இருப்பதில்லை. ஆனால் பிறர் அவனைச் சீண்டும் போது, அவர்கள் தமக்கு கெடுதல் செய்யும் போது, மனிதன் தானும் பதிலுக்கு கெடுதல் செய்ய முற்படுகின்றான்.

இந்த இடத்திலே தான் நாம் மிக விழிப்பாக இருக்க வேண்டும். பிறர் எமக்கு செய்யும் துன்பங்களை நாம் சகித்துக் கொள்ளப் பழக வேண்டும். இது சுலபமான காரியம் அல்ல. இருப்பினும் நாம் இந்த வழியில் முயற்சி செய்து தான் ஆக வேண்டும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயம் செய்து விடல்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வள்ளுவனார் வாக்கு.

உதாரணமாகப் பாருங்கள். எமது வீட்டுக் குழந்தை எமக்கு வேண்டிய ஒன்றை உடைத்து விட்டது என்று வைப் போம். உடனே அக் குழந்தையை நாம் இம்சிக்கின்றோமா இல்லையே. மறுநாள் முதல் அப்படியான காரியத்தை அக் குழந்தை செய்யாமல் இருக்க நாம் பார்த்துக் கொள்வோம்.

இதே போன்று தான் எமக்கு இன்னல் செய்யும் மற்றவரை யும் நாம் கருத்தில் கொண்டு அவர்களை மன்னிக்கும் சுபாவத்தை நாம் எம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் எமது மனம் எம் வசப்படுகின்றது. எம் மனம் மட்டும் எம் வசப்படுமானால் நாம் எவ்வளவோ சாதனை களை படைத்து விடலாம். நிம்மதியாக வாழலாம். எமது மனம் யானைப் பலம் கொண்டது. அதனை எம் வசப்படுத்தி அடக்குதல் மிக மிகச் சிரமமானது. யானையை அடக்கிப் பழக்குதல் சிரமம். ஆனால் அதனை அடக்கிப் பழக்கி விட்டோமேயானால் பின்னர் அதனைக் கொண்டு நாம் மிகப் பெரிய வேலைகளைச் செய்விக்கலாம்.

ஆஞ்சநேயர் தனது மனதை ஜெயித்ததால் தான் அத்தனை சக்திகளை பெற்றார். அஹிம்சையை அனுசரித்ததனால், தான் தாம் தமது மனதைக் கட்டுப்படுத்த முடிந்ததென எத்தனையோ மாகான்களும் யோகிகளும் கூறியுள்ளார்கள்.

அஹிம்சையை நாம் அனுட்டிக்கும் போது எம்மிடம் இருக்கும் குரூர குணம் நீங்கி சாந்தம் உண்டாகும். அத்தோடு எம்மோடு இருப்பவர்களும் அன்பு. வயப்பட்டு நன்மை அடைவார்கள்.

தனது உடலைப் பெருக்க பிற உடலைத் தின்பவன் அஹிம்சையைப் பற்றி சிந்திக்கவே முடியாது.

**தன்ஊண் பெருக்கற்குத் தான்பிறிது ஊண் உண்பான்.**
**எங்ஙனம் ஆளும் அருள்**

என்கிறது குறள்.

பயன் இல்லாத ஊன் பெருக்கலை பயன் என்று கருதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கொடிய செயலைச் செய்பவனிடம் அன்புக்கும், அருளுக் கும் அஹிம்சைக்கும் இடமே இல்லை. இதை சற்று ஆழ மாகச் சிந்தித்துப் பார்த்தால், உண்மை புரியும். அதைத் தொடர்ந்து வள்ளுவர் பெருமான் கூறுவதைப் பாருங்கள்.

"அருள் என்பது யாதெனில் கொல்லாமை கோறல்" என்றார்.

முன்னர் யாகங்களில், யக்ஞங்களில் உலக ஷேமத்திற் காக சில தேவதைகளைத் திருப்திப்படுத்துவதன் பொருட்டு பிராணிகளை பலி கொடுக்கும் வழக்கம் இருந்து வந்தது. பின்னர் இவ்வழக்கம், வெகுவாக அருகி விட்டமை குறிப்பிட தக்கது.

கொல்லாமை என்னும் வழக்கத்தை "விதி" போட்டு கட்டுப் படுத்துவதிலும் பார்க்க தாமாகவே பிரியப்பட்டு தம் மனதைக் கட்டுப்படுத்தி வெற்றி காண்பதே சிறப்பும் பூரண வெற்றியும் ஆகும்.

சந்நியாசிகள் பூரண அஹிம்சையை அனுஷ்டிக்க வேண்டும் என இந்து தர்மம் கூறி உள்ளது. சந்நியாசி ஒரு இலையைக் கூடக் கிள்ளக் கூடாது. தாவரத்தினைக் கூட அவன் இம்சிக்கக் கூடாது. அஹிம்சை காரணமாக அவனுக்கு அக்கினி காரியமே விதிக்கப்படவில்லை. அக்கினி என்றிருந்து விட்டால், அதில் பூச்சி புழு தவறி விழுந்து சாகக் கூடும். தீயில் விழுந்ததை காப்பாற்றி விடமுடியாது. இதனால் தான் யாகம், ஹோமம் என்பன துறவிக்கு இல்லை.

அக்கினி காரியம் செய்யாததால் கடைசியில் சந்நியாசிக்கு தகனம் என்னும் அக்கினி காரியம் இல்லை. அவனுடைய சரீரம் பூமியில் அடக்கம் செய்யப்படுகின்றது.

"சகல பிராணிகளுக்கும் என்னால் பயம் இல்லாமல் போகட்டும்" என்பது, ஒரு சந்நியாசி சந்நியாசம் வாங்கிக் கொள்ளும் போது எடுத்துக் கொள்ளும் பிரதிக்ஞை ஆகும்.

எனவே அஹிம்சை என்னும் நல் ஒழுக்கத்தை யாம் எம்மால் இயன்ற அளவு கடைப்பிடிப்போம். இதனால் நாம் மாத்திரம் அல்லாமல் எம்மை சுற்றி இருப்பவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பனவும் இன்பமாக வாழ இடமுண்டு இல்லையா?

கொல்லான் புலாலை மறுத்தானைக்
கை கூப்பி எல்லா உயிரும் தொழும்.

## 54. ஜபம்

இறைவனை வழிபடும் மார்க்கங்களில் ஜபம் ஒன்றாகும். ஜபம் என்பதன் பொருள் இறைவனின் திருநாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் ஆன்மீகப் பயிற்சியே என்பதாகும்.

எமது மனதில் பக்தியை தோற்றுவித்து மனதை இறை வனிடம் ஒரு முகப்படுத்துவதே ஜபத்தின் நோக்கம். ஜபம் எமது உள்ளத்தில் இறைபக்தியை ஏற்படுத்தும்.

நாம் ஜபிப்பது மந்திரமாகவோ தேவ நாமம் ஆகவோ சுலோகமாகவோ இருக்கலாம். ஜபம் செய்யும் போது நாம் பயன்படுத்தும் மந்திரம் திறவுகோல் போன்று மூலச் சொற் களாக அமைகின்றன.

ஜபம் செய்யும் வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. எமது சமயம் எத்தனை பழமையானதோ அத்தனை பழமை யானது ஜபம். எல்லா மதங்களுமே ஜபத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளன.

நாம் மற்றைய எண்ணக் கோவைகளிலிருந்து விடுபட்டு இறை நினைவுடன் வாழ்வதற்கு ஜபம் நல்லதோர் சிறந்ததோர் மார்க்கமாகும்.

ஒரு சாதகன் ஜபம் செய்யச் செய்ய அது படிப்படியாக அவனைத் தியானத்தில் ஆழ்த்துகின்றது. மந்திரங்கள் புனித சக்தியை வெளிப்படுத்துகின்றன. பக்தியை ஊட்டுகின்றன, தியானத்தில் லயிக்க வைக்கின்றன. இதனால் ஆத்ம தரிசனம் கிட்டுகின்றது. சடங்குகள், பூஜைகள், துதிகள் யாவும் காயத் திரி மந்திரத்துள் அடங்கியுள்ளன. காயத்திரி பிரணவத்துள் அடங்கியுள்ளது. பிரணவம் சமாதியுள் ஒடுங்குகின்றது. பகவானது பல்வேறு திருநாமங்கள் பகவானைக் காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புத கருவிகளாக அமைகின்றன. அவ்வாறெனின் இறை நாமத்தை இடையறாது ஜபிப்பதில் எத்தனை உயர் பலன் கிடைக்கிறது, என்பதை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்!

இவற்றை விட ஒரு பூசை செய்பவருக்கு வேண்டிய ஒழுக்கம், மனக் கட்டுப்பாடு, மனவலிமை, நிலையான ஆசனம், ஆயத்தங்கள் ஆகியவை ஜபம் செய்வதற்கு தேவைப்படுவதில்லை. இடம், காலம், நேரம், சூழல், ஆசனம், எதையுமே பொருட்படுத்தாது நாம் இறை நாமத்தையோ மந்திரத்தையோ வேத வாக்கியங்களையோ ஜபிக்கலாம். அது நம்மைத் தூய்மைப்படுத்தி விடும். அத்தனை சக்தி வாய்ந்தது ஜபம். இதற்கு எமக்கு மனோ வலிமை அவசியம்.

இறைவனின் நாமத்தை உனது ஒவ்வொரு மூச்சோடும் உச்சாடனம் செய்தால், உன்னால் உனது கடைசி மூச்சின் தரம் எது என்று உனக்கே தெரியாது.

இது கபீர் தாகூர் கூறும் கருத்தாகும். சமயங்கள் வேறு படலாம் ஆனால் அவரவரது இறை நாமத்தை ஜபிப்பதும், மந்திரங்களை ஓதுவதும், எல்லா மதங்களிலும் வழக்கத்தில் உள்ளதை நாம் காண்கின்றோம்.

எமது மதத்தை நோக்கின் பிரணவ மந்திரம், "ஓம் நமசிவாய" என்னும் பஞ்சாட்சர மந்திரம், காயத்திரி மந்திரம், "ஓம் சரவணபவ" என்னும் திருமந்திரம் வேத வாக்கியங்களான "அகம் பிரமாஸ்மி", "தத்துவமசி", "ஸ்ரீ ராம் ஜயராம்", "ஹரே கிருஷ்ணா" யாவும் எம்மால் எந்நேரமும் ஜபிக்கத் தக்கனவாம்.

வேதாந்தம், யோக சாஸ்திரங்கள், சாஸ்திர நூல்கள் யாவும் எமது மனதை ஒரு வழிப்படுத்த உதவுகின்றன.

ஜபம் மனதைத் தூய்மைப்படுத்தும் அரும் பெரும் சக்தி கொண்டது. அத்தோடு பூஜை சடங்குகள் போல் ஆரவார மற்ற சூட்சுமமான வழிபாடாகவும் அமைகின்றமை ஜபத்தின் தனிச் சிறப்பாகும். வேதாந்த நூல்களில் தியானத்திற்கு அடுத்து ஜபம் இடம்பெறுகின்றது.

தியானம் பழக முடியாதவர்கள் ஜபத்தினையும் அதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் செலுத்த முடியாதவர்கள் பூசை போன்ற சடங்கு களையும் வழிபாட்டில் பின் பற்றலாம்.

மந்திரம் மந்திரம் என்கிறோமே ! அதன் விளக்கம் என்ன என்பதைச் சற்றுப் பார்ப்போமா? மந்திரம் என்பதற்கு "ஜபிப்ப வனைக் காப்பாற்றி மோட்சம் அளிப்பதே மந்திரம்" எனப் பொருளாகின்றது. மந்திரம் இறை சக்திக்கு நிகரான ஒலி யாகும். மந்திரம் உச்சரிப்பால் ஏற்படும் ஒலி அலைகள் நம்முள் தெய்வ சக்தியைத் தோற்றுவிக்கும் தன்மை வாய்ந்தன. அத்தெய்வ சக்தி, ஜபிப்பவனுக்கு இறை ஞானத்தை கொடுக்கின்றது.

தெய்வம், அதன் நாமம், அதன் உருவம், அதன் மந்திரம் அத்தனையும் ஒன்றுக்கொன்று சமமான சக்தி வாய்ந்தவை. ஞானிகளும் ரிஷிகளும் ஆத்ம ஞானம் பெற்ற சமயத்தில் அந்தந்த மந்திரங்களை ஒளி வடிவிலும் ஒலி வடிவிலும் தரிசித்து ஆத்ம ஞானம் பெற்றார்கள் என்பது வரலாறு.

எவ்வாறு ஒரு சிறிய ஆலம் விதையில் பிரம்மாண்டமான ஒரு பெரிய ஆலமரமே அடங்கியுள்ளதோ அதே போன்று ஒரு மந்திரத்தில் மிகப்பெரிய ஆத்ம ஞானம் சூக்குமமாகப் படிந்துள்ளது.

ஒரு சாதரண மனிதனுக்கு வெறும் சப்தமாகவே ஒலிக்கும் மந்திரம் ஆத்ம சாதகன் ஒருவனுக்கு ஆத்ம ஞானத்தை அளிக்க வல்ல சர்வ சக்தி வாய்ந்த சொல்லாக அமைகின்றது.

ஜபிக்கும் மந்திரங்கள் பற்றி இன்னுமொரு உண்மையினை யாம் அறிந்து கொள்ள வேண்டும். தன் மூலத்தை சமஸ் கிருதத்தில் கொண்டிருக்கும் மந்திரத்தை வேறு எந்த மொழி யிலும் மொழி பெயர்த்தல் முடியாது, கூடாது. அப்படியே செய்தாலும் அது உரிய பலனைத் தராது என்பது அனுபவ மாகான்களது வாக்கு.

சாதாரண மனிதர்களுக்கு ஓம் ஹரீம் போன்ற சக்தி வாய்ந்த சொற்கள் பொருளற்ற வெறும் சொற்களாகத் தோன்றினாலும், அதன் சக்தி மூலம் நாம் உபாசிக்கும் தெய்வம் நமது ஜபத்திற்குப் பயன் அளிப்பது நிச்சயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானம் முடியாதவர்கள் ஜபமும் ஜபத்தில் மனதைச் செலுத்த முடியாதவர்கள் பூஜை சடங்களிலும் ஈடுபட்டு இறைவழிபாடு செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

இருப்பினும் நாமும் தினமும் வழிபாட்டின் போது சிறதளவு தன்னும் ஜபம் செய்ய முற்படுவோமா? முயன்றால் எது தான் முடியாது?

## 55. ஞானச் சிரிப்பு

இறைவனின் இனிய சின்னம் சிரிப்பு. மனிதனுக்கு இச் சொத்து இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. சிரிப்பு என்பது பிறப்பின் போரொளி: கவலையின் பகைவன்: மகிழ்ச்சியின் வெளிப்பாடு: மனித குலத்திடமிருந்து பறித்தெடுக்க முடியாத வகையில் உடைமையாய் உள்ளது, சிரிப்பு. கோடி பொன்னைக் கொட்டினாலும் மனிதன் தனது சிரிப்பை இழந்து விடக் கூடாது. இடரிலும் தளரினும் இடைவிடாது போற்றிக் காக்கப்பட வேண்டியது இந்தச் சிரிப்பு.

மனிதன் ஒருவனால் தான் சிரிக்க முடியும் இல்லையா? இது மனிதனுடைய தனித்துவத்தை, ஏற்றத்தைக் காட்டி நிற்கிறது. ஏனைய உயிரினங்களால் சிரிக்க முடியாது. கவலைக்கு கை கண்ட மருந்து சிரிப்பு என்பர். இதனையே "இடுக்கண் வருங்கால் நகுக" என்கின்றது பொய்யா மொழி.

இனி இறைவன் சிரித்த சந்தர்ப்பங்களை நோக்குவோம். இறைவனது சிரிப்பின் பின்னணியில் எத்தனையோ நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் என இறைவனின் புன் முறுவலை இத்தனை அழகாக தத்ரூபமாகப் பாட அப்பர் சுவாமிகளால் தான் முடிந்தது.

சிவனின் ஒரு மூர்த்தத்தில் தாருகாவனத்து முனிவர்கள் அவருடன் பொருத்துகிறார்கள். சிவனார் மேல் கோபம் கொண்ட முனிவர்கள் தமது அகந்தை, செருக்கு, அறியாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக யானை ஒன்றை அவர் மேல் ஏவி விடுக்கின்றார் கள். இதனைப் பார்க்க இறைவனார்க்கு சிரிப்புத்தான் வந்தது. ஆனால் உமையோ நடு நடுங்கி விட்டார். சிவனார் தன்னை நோக்கி எதிர்த்து வந்த யானையைப் பார்த்து வேடிக்கை யாகச் சிரித்து அதனைக் கொன்று அதன் தோலை உரித்துத் தன் திருமேனி மீது போர்த்தருளினார் என்பது புராண வரலாறு. இக்காட்சியை வெகு அழகாகப் பாடித் தந்துள்ளார். சம்பந்தர் அடிகள் தனது பதிகத்தில்.

**கடிதென வந்த கரிதனை யுரித்து**
**அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்**
**பிடியென நடையாள் பெய்வளை மடந்தை**
**பிறைநுத லவளொடு முடனாய்க்**
**கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து**
**கொள்ளமு னித்திலஞ் சுமந்து**
**குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்**
**கோணமா மலையமர்ந்தாரே!**

இனி இறைவியின் புன்முறுவலை நோக்குவோம். இறைவன் திருவிளையாடல் புரியும் போது விளையாட்டுப் பிள்ளையாக மாறிவிடுவார். அதே நேரம் வேதங்களை ஓதும் அவர் திருமணிவாய் அனைவரையும் நெறிப்படுத்தும். சிவனாரின் அம்மை அப்பர் திருவடிவத்திலே இடப்பாதி அம்மையின் வடிவம், வலப்பாதி அப்பனின் வடிவம், வலப்பக்கத்திலே ஐயன் வாய் வேதம் ஓதுதலைக் கண்ணுற்று, அம்மை பெருமிதத்தோடு புன்னகைப்பாளாம். இப் புன் முறுவலை அப்பர் சுவாமிகள் "மெல்ல நகுமால்" எனப்பாடுவர்.

கடவுள் இல்லை என்று கருதுபவர்களும், கடவுளின் உண்மையில் ஐயப்பாடு கொண்டவர்களும், கடவுள் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி இருப்பதாக எண்ணுபவர்களும், கடவுள் எங்கே நம்மைக் கவனிக்கப் போகிறார் என்று நினைத்துத் தீவினைகளை பல்வேறு வழிகளில் செய்து வருகின்றார்கள். ஒரு சிலர் மெய்யடியார்கள் போல் நடித்து உலகை ஏமாற்றி வருகின்றார்கள். இவர்களது கள்ளத் தனத்தை எல்லாம் எள்ளத்தனையும் தவறாமல் கடவுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிருந்து உடனுக்குடன் அவதானித்து வருகின்றார்.

தந்தைக்கு ஒளித்து நாம் ஒன்றைச் செய்து விடத்தான் முடியுமா? இதற்கு ஒரு கதை கேட்டுப்பாருங்கள். ஒரு தந்தை தன் மகனிடம் கூறினாராம். "மகனே! நான் வெளியே செல்கின்றேன் வரும் வரை இந்தக் குதிலை எக் காரணம் கொண்டும் திறந்து பாராதே இது என் ஆணை" தந்தை சென்ற பின் மகனுக்கோ ஒரே ஆவல். எப்படியாவது அப்பா வருமுன் இக்குதிலுக்குள் என்ன இருக்கின்றதென்று பார்த்து விட வேண்டும். அங்கும் இங்கும் பார்த்து விட்டு சட்டென்று குதிலைத் திறந்து பார்த்தான் பையன். குதிலுக்குள் இருந்து அப்பா வெளியே வந்தார்.

எப்படியிருக்கும் மகனுக்கு? கையும் களவுமாக அல்லவா பிடிபட்டு விட்டான்! இதே போன்று தான் கடவுளையும் ஒளித்து எண்ண ஓர் எண்ணமுண்டோ? எம்முள்ளே ஈசனை வைத்துக் கொண்டு நாம் அவனுக்கு எதனை ஒளிப்பது? எப்படி ஒளிப்பது? எங்கே ஒளிப்பது? இதனைக் கண்ணுறும் இறைவன் போலி வேட தாரிகளைக் கண்டு சிரியாமலா இருப்பான்?

எனவே கள்ளம் வேண்டாம். வெள்ளை உள்ளத்தோடு செயற்படுவோம். நிட்சயம் வெள்ளை விடையேறியோன் அருள் எமக்குக் கிடைக்கும்.

•

## 56. மானிடமும் இறையும்

மனிதப் பிறவி மிக உயர்ந்துள்ளது: சக்தி வாய்ந்தது, பகுத்தறியும் உணர்வே அதன் சக்தி உரிய முறையில் ஆகும். இப்பிறவியை யாம் பயன்படுத்த வேண்டுமெனின் எம்மிடம் பக்தி, அன்பு, கருணை, ஒழுக்கம், புரிந்துணர்வு, முயற்சி ஆகிய நற்குணங்கள் இருந்தே ஆக வேண்டும். அவற்றை நாம் அன்றாடம் பயின்றே ஆக வேண்டும். எமக்கு இப்பிறவியை அளித்த ஆண்டவனை நாம் மகிழ்விக்க வேண்டுமானால், அவர் அருளைப் பெறவேண்டுமேயானால் நாம் மேற்கூறிய நற்பண்புகளைக் கடைப்பிடித்தல் அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகின்றது.

எமது வாழ்வை சமயத்தோடு இறைவழிபாட்டோடு இணைத்து வாழ நாம் பழகிக் கொள்ள வேண்டும். நாம் மட்டும் தூய வாழ்வு வாழ்ந்தால் போதாது, எமது இளைய தலைமுறையினருக்கு நாம் இவற்றை உணர்த்தியாக வேண்டும். இது எமது தலையாய கடமை ஆகும்.

அன்பு, கருணை, பணிவு, மூத்தோரை மதித்தல், ஒழுக்கம், ஆகியவற்றிற்கும் சமயத்துக்கும் நிறைய சம்பந்தம் உண்டு. இந்த நற்குணங்கள் எம்மிடம் இருப்பின் எம்மையே அறியாம லேயே எம்மிடம் தர்ம சிந்தனை இருக்கும். தீயவற்றைத் தீண்டும் போது பயம் ஏற்படும். இந்தப் பயம் நல்ல மார்க்கங் களில் எம்மை இட்டுச் செல்லும். நல்ல வழிகளில் ஒன்று பக்தி மார்க்கம் ஆகும்.

ஆகவே தான் இந்த நற்பழக்கங்களை நாம் எம் இளம் சந்ததியினரின் மனதில் ஆரம்பத்திலேயே விதைத்து விடவேண்டும். இதனால் வளரும் சிறார்கள் நல்லதையே நாடுவர், நல்லதையே சிந்திப்பர், நல்லதையே செய்வர். தீயவைக்கு அஞ்சுவர். இதன் பயனாக முதலில் வீடு பயன் அடையும். தொடர்ந்து நாடும் பயன் அடையும்.

எமது பிறப்பினால் பெற வேண்டியதை காலமுள்ள போதே யாம் பெற முயற்சிக்க வேண்டும்.

மீண்டும் பிறவாமல் இருக்க முயற்சி செய்வதே மனிதப் பிறவியின் இலட்சியமாகும்.

ஏதோ சம்பாதிப்பதும், சாப்பிடுவதும், இறப்பதும் தான் மனிதனின் வாழ்க்கையல்ல.

வெந்ததைக் தின்று விட்டு விதி வந்தால் சாவோம் என்று சாமானியமாக இராது, உன்னதமான மனிதப் பிறவியின் பயனை, நாம் பக்தி மார்க்கத்தை, அஹிம்சையை, தர்மத்தை கருணையை கடைப்பிடித்துப் பெற முயல வேண்டும்.

எமது மனதில் பக்தி, இறை நம்பிக்கை, தூய்மை, இருப்பின் நாம் யாருக்கும் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் சுவாமிகளின் வாழ்வில் இடம் பெற்ற ஒரு சம்பவத்தைப் பாருங்கள்.

வேற்று மதத்தினனான மன்னன் அப்பருக்கு ஆள் அனுப்பி அவரை தன்னிடம் வரும் படி கட்டளை பிறப்பித்தான். அவரை பக்தி வைராக்கியத்தில் இருந்த அப்பர் சுவாமிகள் மன்னன் கட்டளைக்கும் சிறிதும் அஞ்சவில்லை.

"நாம் ஆர்க்கும் குடி அல்லோம்" என்று பதில் அளித்தார் அப்பர் சுவாமிகள்.

மன்னன் அழைப்பினை மறுத்தால் மரண தண்டனை கிடைக்கும் என ஏவலர் அச்சுறுத்தினார்.

"எமனை அஞ்சோம்" என்றார் அப்பர் சுாமிகள்.

"நகர வேதனைக்கு உட்படுவீர்" என்றார்கள்,"நகரத்தில் இடர்ப்படோம்" என்று பதில் வந்தது அப்பர் சுவாமிகளிடமிருந்து.

இவ்வாறான அவரது பதில்களுக்குக் காரணம் அவர் உள்ளத்தில் பக்தி உணர்வும் மன வைராக்கியமும் ஓங்கி இருந்தமையே ஆகும். பக்தி ஓங்கி வர பிறப்பு இறப்பு பற்றிய பயம் அகலும். பக்திக்கும் உலகப்பற்றுக்கும் வித்தியாசம் உண்டு.

பக்தி, அனைத்தையும் தன்மயமாகக் கருதுகிறது. தூய அன்பை உருவாக்கிறது. உலகப்பற்றோ எம்மைத் தவறுகள் செய்யவும் வழி அமைக்கின்றது. ஆசை திருட வைக்கிறது. ஒரு உயிரைக் கொல்லுதலும் பாவம் தான். உரிய நேரத்தில் எமது கடமையைச் செய்யாமலிருத்தலும் அதற்கு ஈடான பாவம் தான்.

எம்மால் பிறருக்குத் துன்பம் ஏற்படாமல் வாழ வேண்டும். என்று நினைப்பது மிக உயர்ந்த எண்ணமாகும். இவ்வாறு எண்ணிப் பார்த்தால் நாம் செய்யும் தவறுகள் எமக்கு எளிதில் புலப்படும். எமது தவறுகள் மற்றவர்களுக்கு மறைக்கப்பட்டாலும், அவை எமக்கு நன்கு தெரிந்து விடும்.

எனவே மனிதப் பிறவியில் நாம் சாதிக்க வேண்டியவற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையானது "தன்னைத் தானே திருத்திக் கொள்வதாகும்"

இது பற்றி சிந்தித்துச் செயற்படுவோமா?

•

## 57. எண்ணமும் செயலும்

மனிதர்களில் பல விதம் உண்டு. ஒருவருக்கொருவர் வேறுபட்ட குண இயல்புகள், வேறுபட்ட ஆளுமை, வேறுபட்ட எண்ணங்கள் ஆகியவற்றோடு காணப்படுவது கண்கூடு. ஆனால் இவர்கள் எல்லோரையும் படைத்தவன் ஆண்டவன் ஒருவனே. கவிஞர் கூறிய படி பிறக்கும் போது எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகத் தான் பிறக்கின்றன. பின் ஏன் இந்த மாற்றம்? அதிலும் சிலரில் வேண்டத் தகாத மாற்றங்கள், வக்ர குணங்கள், மமகாரம், இப்படியான வேறுபாடுகள்..

ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், ஒரு தனி மனிதனுடைய தன்மைக்கும் இயல்புக்கும் நடத்தைக்கும் அவன் வாழும் வாழ்க்கைச் சூழலும் அவனது மரபு வழித் தன்மையும் மிக முக்கிய காரணங்களாக அமைகின்றன.

இந்த வகையில் நல்ல சூழலும் உயர் மரபு வழிப் பண்பும் ஒருவனுக்கு உதவியாக அமையாத போது, அவன் அவசியம் தன் சிந்தனைப் போக்கை உயர்ந்ததாக கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க முயல வேண்டும். மற்றைய இரு காரணிகளும் பொய்த்தாலும் அவனை உயர்த்த அவனது உயர் சிந்தனை நற்சிந்தனை ஆத்மீகப் போக்கு அவனுக்கு கை கொடுக்கும். இதில் சந்தேகம் கிடையாது. ஏன் எனில் "எண்ணம் போல் இருப்பாய் என்றும்" "மனம் போல் வாழ்வு" என்றும் கூறும் முது மொழிகளுள் இவற்றின் உண்மை அடங்கியுள்ளது.

ஒருவனுக்கு நல்ல வாழ்க்கைச் சூழலும் நல்ல மரபு வழிப்பண்பும் அமைந்து விட்டால் அவன் கொடுத்து வைத்தவன்.

சிலருக்கு நல்ல சூழல் அமையலாம், மரபு வழிப் பண்பு இல்லாதிருக்கலாம், ஒரு சிலருக்கு நல்ல மரபு வழிப் பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து, நல்ல சூழல் கிடையாமல் போகலாம்.

இவ்வாறு ஒன்றிலிருந்து மற்றொன்று இல்லாது போகும் ஒருவனுடைய வாழ்வு சிறப்படையுமா? இல்லை சீரழியுமா? என்பதை முன் கூட்டிச் சொல்ல முடியாது.

இருப்பினும், எப்படிப்பட்ட சூழலிலும் தன்னுடைய நிலை யிலிருந்து தாழாமல் தன்னுடைய ஆளுமையை உயர்த்தி, தன் வாழ்க்கையும் ஒருவன் மேம்படுத்திக் கொள்ள வழிகள் இல்லாமல் இல்லை.

அவற்றுள் இறைபக்தி மன உறுதி, நல்ல எண்ணங்கள், தயாள குணம் இரக்க சிந்தனை போன்றவற்றை யாம் தேடிக் கொள்ள வேண்டியவை.

நம் ஒவ்வொருவரது மனதிலும் நல்ல எண்ணங்களும் தீய இயல்புகளும் உண்டு. நாம் நல்லியல்புக்கு ஆட்பட்டுச் செயற்படும் போது நல்லவற்றைச் செய்கின்றோம். தீய இயல்புகட்கு ஆட்பட்டுச் செயற்படும் போது, தீயவற்றை செய்கின்றோம்.

நல்லது எது கெட்டது எது என்பது எமக்கு நன்கு தெரியும், புரியும். இதனை அறிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை.

எனவே நாம் நல்ல செயல் என்று ஒன்றை அறிந்து கொண்டால் அக்காரியத்தைச் செயற்படுத்துவதில் தாமதிக் காது உடனே செயற்பட வேண்டும். இதே போன்று தீயதை யாம் தள்ளிப் போட வேண்டும். தீய எண்ணங்கட்கு நாம் எம் மனதில் இடம் கொடுத்தல் ஆகாது.

சில சமயங்களில் எமது மனதினுள்ளே ஒரு புரட்சியே நடக்கும். இதைச் செய்வதா, விடுவதா இதனைக் கூறுவதா விடுவதா இது சரியா, தப்பா அதனால் விளைவது நன்மையா, தீமையா இந்த நிலையிலே நாம் எமது நிதானத்தை இழக்கக் கூடாது.

நிதானத்தை இழந்து தவறு செய்த பின் அதனை ஒரு புரட்சி முடிவு என்று வெளியே சொல்வது வெறும் பாசாங்கு தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நாம் எமது மனதுக்கு இடம் கொடுக்கையில், மனதின் கோரிக்கை நியாயமானதா என்று பார்த்தாக வேண்டும். "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்னும் அமுத வாக்கு நாம் எல்லோரும் அறிந்ததே.

இந் நிலையில் நாம் இறை பக்தியிடம் தஞ்சம் புகுவதே மேலான செயலாகும். பக்தியை நாம் தளமாகப் பயன்படுத் தினால் நாம் முன்னே குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழல் மரபு வழிப் பண்பு, ஒத்தாசை புரியாவிட்டாலும் நாம் எமது வாழ்க்கையை எமது ஆளுமையை உயர்த்த முடியும். எமது வாழ்வும் மேம்படும். இதற்கெல்லாம் ஒரு வழி, சற்று சிந்தித்து நிதானமாக எமது ஆத்மீக நிலையை எமது ஆளுமையை, தனித்துவத்தை, நன்நெறிப்படுத்த சமய வாழ்வை தளமாகக் கொள்ளல் மிக அவசியம் ஆகும்.

●

## 58. சிக்கெனப் பிடித்தேன்

எந்தக் காரியத்தையும் நாம் முறையோடு செய்ய வேண்டும். நியாயம் என்றால் முறை என்று பொருள்படும். பாதையில் நாம் நடக்கும் போது இடது பக்கமாகப் போவது முறை. பெரியோர்கள் ஒவ்வொரு காரியத்துக்கும் பொதுவான முறை ஏற்படுத்தி உள்ளார்கள். அவர்கள் சொல்லிய வழியில் செல்வது தான் எல்லோர்க்கும் நல்லது.

ஆண்டவனிடம் போவதற்கும் இரண்டு வழிகள் எமக்கு வகுக்கப்பட்டுள்ளன. ஒன்று குரங்குக் குட்டி முறை. மற்றையது பூனைக் குட்டி முறை. சமஸ்கிருத மொழியில் குரங்கு என்றால் மார்க்கடம் என்றும் பூனை என்றால் மார்ஜாரம் என்றும் பொருள் பெறும். கிசோரம் என்றால் குட்டி என்றும் அர்த்தம்.

ஆகவே வட மொழியில் மார்கட, கிசோர நியாயம் என்றும் மார்ஜார கிசோர நியாயம் என்றும் கூறும் வழக்கம் உண்டு.

பூனை குட்டி போட்டால் அக்குட்டி தானாக நடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை தாய்ப்பூனை தானே தன் வாயால் தனது குட்டியைக் கவ்விச் செல்லும். பூனைக்கும் புலிக்கும் தம் குட்டிகள் மேல் ரொம்ப பிரியம், வாத்சல்யம்.

இறைவனுக்கும் அப்படித்தான். இறைவன் எல்லாக் குழந்தைகளுக்குமே தாயை மயக்கக் கூடிய சக்தியைக் கொடுத்திருக்கின்றார். அப்போது தான் இக்குழந்தைகள் வாழ வழி உண்டு என, இறைவன் இந்த மாயா வித்தையைச் செய்துள்ளார். இதனால் ஆண்டவனை ஒரு மாயாவி என்றும் கூறலாம். இல்லையா?

நாம் எமது கர்மங்களை அனுபவிக்க உடல் வேண்டும். உடல் வளர உணவு வேண்டும். எமக்கு இந்த உண்மை புலப்படுகின்றதோ இல்லையோ நாம் வயிற்றுக்கு ஆகாரத்தை கொடுத்து உடலை வளர்க்கின்றோம்.

உடல் வளர்கின்றது. இதற்காக நாக்கு என்னும் உறுப்பை இறைவன் எமக்குத் தந்துள்ளான். நாக்கில் ருசியைக் கொடுத்து, அதன் மூலம் உணவைக் கொடுத்து, உடலை வளர்த்து, நாம் எமது கர்மாவை அனுபவிக்கப் பண்ணும் வித்தகர், ஆண்டவன். இந்த உண்மை எமக்குச் சில நேரங்களில் தான் புலப்படுகின்றது. மற்றைய நேரங்களில் எல்லாமே நாம் தான் என்றும் எண்ணி விடுகின்றோம். இது எத்தனை பெரிய தவறு தெரியுமா? எல்லாம் அவன் கைகளில் அல்லவா? இறைவனை அடையும் மூன்று வழிகளில் பூனைக் குட்டி முறையும் ஒன்று அதுவே தான் மார்ஜாரம் கிசோர நியாயம்.

பூனைக்குட்டியானது தன் முயற்சியின்றி தாய் விட்ட வழி என்றிருப்பது போலவே ஒரு வகை பக்தர்கள் பகவானே கதி என்றிருப்பர். அது, பணிந்து துதித்து தோத்தரித்து அவன் புகழ் பாடி தம்மை அவன் பொற் பாதங்களில் சமர்ப்பிப்பது எம்மை ஆட்கொள்வது பகவானது பொறுப்பு என்று கிடப்பர். இவ்வித பக்தி மார்ஜார கிஷோர நியாயம் என்பது.

இம்முறைக்கு நேர்மாறானது, இந்தக் குரங்குக் குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை. இந்தக் குரங்குக் குட்டி போன்றவர் இன்னொரு வகைப் பக்தர்கள்.

குரங்குக் குட்டி தன் தாய் வயிற்றைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும். தாய்க் குரங்கு மரத்துக்கு மரம் தாவும் போது தன் குட்டியை பற்றி சிறிதும் கவலைப்படாது. குட்டியே தான் தன்னைப் காப்பாற்றிக் கொள்ளுமாறு தாயின் வயிற்றை மிகக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும். ஆண்டவன் அதற்கு இப்படி ஒரு சக்தியைக் கொடுத்துள்ளார்.

கடித்ததெல்லாம் கரும்பு
பிடித்ததெல்லாம் இரும்பு என்பார்கள்.

எதையுமே குரங்கு பலத்துடன் பிடித்துக் கொள்ளும். இதனாலே தான் ''குரங்குப் பிடி'' என்கிறார்களோ!

இது மார்க்கட கிஷோர நியாயம் என்றழைக்கப்படுகின்றது. இந்த வகையிலும் பக்தர்கள் உள்ளார்கள். அவர்கள் ஆண்டவனை மிக இறுக்கமாகப் பற்றிக் கொள்வார்கள். ஆகவே ஆண்டவன் செய்யட்டும் என்றிராமல் அவன் உதறித் தள்ளினாலும் நாம் விடுவதில்லை என்று இறைவனைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வர்.

''சிக்கெனப் பிடித்தேன்'' என்று மாணிக்கவாசகர் பெருமான் பாடியுள்ளதைப் பாருங்கள்! அவரே திருவாசகத்தில் ஆண்டவனை ''பக்தி வலையில் படுவோன்'' எனவும் பாடியுள்ளார்.

எனவே பக்தர்கள் பகவானைச் சிக்கெனப் பிடிப்பது ஒரு வகை. இறைவன் பக்தர்களின் பக்தி வலையில் சிக்கிக் கொள்வதும் ஒரு வகை. சில சந்தர்ப்பங்களில் பக்தர்களின் பக்தி வெள்ளத்திலிருந்து இறைவனாலேயே தப்பிக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு.

எனவே, நாமும் பக்தி செய்யவே நிஜபக்தியை எமக்கு கொடு என இறைவனைப் பிரார்த்திப்போம். அப்புறம் எவ்வழியில் இறையைப் பற்றுவது என்று சிந்திப்போம் செய்வோமா!!!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59. முன்னைப் பழம் பொருள்

இறைவன் பழமைக்குப் பழமையானவன். புதுமைக்குப் புதுமையானவன் முன் சென்றால் முன்னேயே நிற்பவன். பின் சென்றால் பின்னே சென்று கொண்டிருப்பான். பழமை, புதுமை என்பதெல்லாம் கால தத்துவத்திற்கு உட்பட்ட கருத்துக்கள் கால தத்துவத்தையும் கடந்து நிற்பவனே கடவுள்.

ஆகவே நாம் நம்முடைய நிலையில் வைத்தே அவனை "பழையவன்" என்றும் புதியவன் என்றும் பேசுகின்றோம்.

இந்நிலையில் வைத்தே எமது சமயப் பெரியோர்களும் இறைவன் பற்றிப் பேசியுள்ளனர். இது வரை வெளிவந்துள்ள மாயா காரியமாகிய விசித்திரப் பொருள்கள் எல்லாவற்றிற் கும் முற்பட்ட பழைய பொருள் ஒன்று இருப்பின் அது இறைவனே தான். அதையும் மீறி புதுமையென ஒன்று தோன்றுமாயின் அப்புதியதும் இறைவனே.

புதுமைக்கும் புதுமையாய் உள்ள பொருள் இறைவன் ஒருவனே ஆவான்.

இந்த உண்மையோடு

"துன்னரும் துப்பின் தொன்முது கடவுள்"

என்று மதுரைக் காஞ்சியும்

"தில்லைத் தொல்வோன்" என்று திருக்கோவை யாரும்

"சொற்பதம் கடந்த தொல்லோன்"

என்று திருவண்டப் பகுதியும்

உமை அம்மையை "பழையோள்"

என்று திருமுருகாற்றுப் படை கூறுவதையும், இங்கு தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

இவற்றை விட "ஆதிக்கு ஆதியாய் உயிர்க்கு உயிராய் நின்ற அமலன்" என்கின்றது கந்தபுராணம்.

இவை மாத்திரமல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையன கழிதலும் புதியன புகுதலும் மரபாயுள்ள இவ்வுலகில் எல்லா உயிரினங்களும் தோன்றி மறைந்து போகவும் சிவன் மட்டும் நிலை பெற்ற இளமையுடன் காணப்படுகின்றான்.

இறைவன் எல்லா உலகங்களையும் தோற்றுவிப்பதால் பழமைக்குப் பழமை ஆனவனாயும் எல்லா புதுமைக்கும் புதியவனாயும் ஆகின்றான்.

மால் அயன் முதல் புல் புழு ஈறாக பல் உயிர்த் தொகுதி களும் வருவன, போவன ஆக மாறும் நிலையில் இருக்கை யில், இறை மட்டும் என்றும் இளையவனாய் நிற்பதால் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேத்தும் அப்பெற்றியனே என்று எம்பெருமானைப் பாடினார் மணிவாசகப் பெருமான்.

"பழகப் பழக பாலும் புளிக்கும்" என்றல்லாது எல்லாம் வல்ல இறைவன் திருவருள், பழகப் பழக இனிப்பும் சுவையும் பெருகித் தோன்றும், பேரின்பம் தரவல்லது. பழையது புதியது, அழிவற்றது, சுவைக்கத் தெவிட்டாதது, எல்லாம் இப் பேரின்பம் தான். இந்த இறைத்தன்மை தான் இத்தகைய மெய்யின்பம் தரும் சிவனை அடியேன் அறியாது உணராது மோசம் போக இருந்தேனே! எனத் தன்னைத் தானே நொந்து பாடியவர் மணிவாசகர்.

சிவன் பழைய கடவுள் - நம்புவோம். ஆனால் சிற்றறி வாளர் அவனைப்பற்றி நாள் தோறும் புதிது புதிதாய் ஆராய்ந்து அறிந்து கொண்டு வர கல்யாண குணங்கள் அவர்க்குப் புதிது புதிதாய் தோன்றுகின்றன. இறை இவ்வாறு புதிதாய் காட்சி தருவதால் எம்பெருமான் புதுமையான வனாய் தோன்றுகின்றான். முற்காலத்தில் முனிவர்களும், இருடிகளும், சிவபெருமானைக் காண்பதற்கு யோக நிலை கொண்டு தவங்களை மேற்கொன்டனர். சிவனார் அருளின்றி பிறவிப் பிணியை போக்க முடியாது என உணர்ந்தவர்கள் அவர்கள்.

இக்கருத்தையே வள்ளுவனாரும் தன் குறட்பாவில் பின்வருமாறு கூறிப் போந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அறவாழி அந்தணன் தாழ் சேர்ந்தார்க்கு அல்லால் பிறவாழி நீந்தல் அரிது"**

இந்த வகையில் இறைவனை உணர, தவயோகி, விரதங்களை மேற்கொள்ளுதல் பழைய முறை. இவர்கட்கு இறைவன் பழம் பொருள்.

ஆனால் புதுமையை விரும்பும் காலம் இது. ஆண்டவனையும் ஆராய்ச்சிக்குப்பிக்குள்ளே அடைத்து ஆராய்ச்சி பண்ண மனிதன் ஆசைப்படும் காலம் இது. பகுத்தறிவாளர்கள் இன்று விஞ்ஞான வெள்ளத்துள் ஆண்டவனை விளையாட விட்டுப் பார்க்கின்றார்கள். அவனோ இவர்களது பிடிக்குள் அகப் படாமல் ஓடி விளையாடுகின்றான்.

இது அணு சகாப்தம் என்று கூறும் பகுத்தறிவாளர்கள் அணுவையும் துளைத்துப் பார்த்து விட்டார்கள். ஆனால் இன்று விஞ்ஞானிகள் வந்தடைந்த எல்லையை மெய்ஞ்ஞானிகளாகிய மணிவாசகரும், அப்பரும் ஔவையாரும் அன்றே அடைந்து அதன் எல்லையையும் தாண்டினர் என்பது நாம் அறிந்ததே.

"அணு அணுவில் இருந்தாய் என்று அங்கு எண்ணம் தான் தடுமாறி" என்று பாடியவர் மணிவாசகர்.

"அணுவை யார்க்கும் தெரியாத தத்துவனை" என அப்பர் அன்றே பாடியுள்ளார். எனவே சித்தம் எல்லாம் எமக்கு சிவ மயமே என்று கொண்டு நாம் செயற்பட முயல்வோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௬௦. இந்து மதம்

எமது மதம் இந்து மதம் மிகவும் தொன்மையும் பெருமையும் வாய்ந்தது. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் நாம் மிகவும் பெருமைப்பட வேண்டும். எமது மதத்தின் பெருமையை எம்மில் பலர் புரிந்து கொள்வதில்லை. அதன் பெருமை பற்றி அறிய முற்படுவதுமில்லை. அது தான் நாம் செய்யும் தவறு. மதமும் மொழியும் எமது இரு கண்கள். அல்லவா?

மற்றைய மதங்கள் பற்றி யாம் அறிந்து வைத்திருப்பதில் தவறில்லை. ஆனால் எமது மதத்தின் ஆழம், அகலம் எமக்குப் புரிந்தாகவே வேண்டும்.

புத்தர் ஏற்படுத்திய புத்த மதமும் ஜீனர் ஏற்படுத்திய ஜைன மதமும், ஏசு கிறிஸ்துவின் கிறஸ்தவ மதமும், முகம்மது நபியின் இஸ்லாம் மதமும் அதை ஏற்படுத்திய வர்களின் பெயரால் விளங்கி வருகின்றன. ஆனால் எமது இந்து மதத்திற்கு அப்படி ஒரு பெயரும் இல்லை.

முன்னைய காலத்தில் எமது மக்கள் சிந்து நதிக்கரையில் வாழ்ந்து வந்தனர். அயல் நாட்டவர் அதனை இந்து நதி எனக் கூறினார். அங்கு வாழ்ந்தவர்கள் கடைப்பிடித்த மதமே இந்து மதம் ஆயிற்று.

மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவனுக்கும் மதம் அவசியமானது. மதம் மனிதனுக்கு பலவற்றைக் கற்றுக் கொடுக்கின்றது.

ஒரு ஊரில் பாலன் எனப் பல பேர் இருந்தால் தான் அவர்களைப் பிரித்துக் காட்ட அதாவது வேறுபடுத்திக் காட்ட வெள்ளைப் பாலன், உயரப் பாலன், குடுமி வைத்த பாலன் என அடையாளங்கள் வைத்து அழைக்கின்றோம். ஆனால் பாலன் என்று ஒருவர் மாத்திரமே இருந்தால் அடையாள அ்டை மொழிகள் எதற்கு?

அதே போன்று தான் எமது இந்து மதம் இருந்த அந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரரம் ஆண்டுகட்கு முன்னிருந்த காலத்தில் வேறு மதம் இருந்திருக்க நியாயமில்லை. இதன் காரணமாக இந்து மதத்திற்கு தனிப்பட்ட பெயர் ஏதும் பழக்கத்தில் விளங்கி வரவில்லை. இதுவே எமது மதத்தின் பழமைக்கும் பெருமைக்கும் சான்றாக அமைகின்றது.

எமது மதத்திற்கு வேதம் பிரமாணமாக விளங்கி வருகின்றது. என்ன தான் அந்நிய கலாச்சாரத்தில் நாம் மூழ்கத் தலைப்பட்டாலும் வேதம் எமது அடித்தளம் என்பது எம்மில் ஊறியுள்ளது.

ஒருவருடைய பேச்சை நாம் ஏற்றுத் தான் ஆக வேண்டும். என்று யாரும் எமக்கு வற்புறுத்திக் கூறினால் நாம் உடனே எம்மைப் பற்றி அறியாமலே கேட்கிறோம் "ஏன் அது என்ன வேத வாக்கியமா? நாம் தட்டாமல் ஏற்பதற்கு" என்று. இங்கே தான் யாம் வேதத்திற்கு எம்மையே அறியாமல் அளிக்கும் பெருமதிப்பும் முக்கியத்துவமும் புலனாகின்றது.

எமது மதம் மாதா, பிதா குரு, தெய்வம் என்ற வரிசையில் எமக்கு தெய்வத்தை உணர அறிய வழிகாட்டுகிறது. முதற் கண் மாதாவை அறிகின்றோம். அது எமது குடியிருந்த கோயில். பின் மாதா மூலம் பிதாவை அறிகின்றோம். பின்னர் பாலகனாக வளர்ந்து எமக்கு அறிவுக்கண் திறந்து அறியாமை நீக்கும் குருவை அறிகின்றோம். தொடர்ந்து இறையை உணர்கின்றோம், புரிந்து கொள்கின்றோம்.

இந்து மதம், இயற்கைக்கு மாறுபடாதது அறம், பொருள், இன்பம், வீடு என்ற வரிசையில் நாம் இகபர சுகம் அடைய வழி காட்டுகின்றது. தனி மனிதனை விட தத்துவங்களை அடிப்படையாக கொண்டுள்ள எமது மதம் பிரம்மச்சாரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு படிகளில் மனித வாழ்க்கையை அமைத்துள்ளது.

கல்விக்கும், ஒழுக்க நெறிக்கும், கருணைக்கும், ஜீவகாருண் ணியத்திற்கும், சகிப்புத் தன்மைக்கும், முக்கியத்துவம் கொடுக் கும் எமது மதம் வேதம், ஆகமம், உபநிடதம், இதிகாசம், புராணம், கீதை ஆகியவற்றை எமக்கு வழிகாட்டும் அரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷங்களாகக் கொண்டுள்ளது.

மனிதர்கள் அடிக்கடி ஆண்டவனை மறந்து விடும் சந்தர்ப்பங்களும் உண்டு. துன்பம் வந்த போது ஆண்டவனை நினைக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. இவற்றை எல்லாம் கடந்து உலகில் உண்மைப் பொருள் ஒன்று உண்டு, அதுவே ஆண்டவன், அவன் எமக்கு உறுப்புக்களைத் தந்ததே அவனைப் பணிவதற்கு என்பதை யாம் ஒவ்வொருவரும் அவசியம் உணர வேண்டும்.

கண் நுதலானை நோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோவில் புகும் கால்களே கால்கள்
பெண் ஒரு பாகனைப் பணியும் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண் அவன் தண் சீர் பாடும் நாவே நாவாம்
நந்நாபரன் சரிதைகேட்கும் செவிகளே செவிகள்
அண்ணல் கழல் நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்.

இவ்வழி நடக்க முயல்வோமா!

●

## ௭. தர்ப்பைப் புல்

எமது சமயச் சடங்குகளின் போது நாம் உபயோகப் படுத்தும் தர்ப்பைப் புல் மிகப் புனிதம் வாய்ந்தது. முக்கியம் வாய்ந்தது.

ஆலயங்களிலே இடம் பெறும் சகல விழாக்களிலும் சடங்குளின் போதும் தர்ப்பைப் புல் பூரண கும்பங்களில் சாற்றப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். இது மாத்திர மல்ல, திருமணச் சடங்குகளில் திவச, மகாளய பட்ச நிகழ்வு களில் தர்ப்பணம் செய்வோர் பவித்தர விரலில் தர்ப்பை அணிந்து சடங்குகள் ஆற்றுதல் கண்கூடு. தர்ப்பை இல்லாமல் இச் சடங்குகள் ஆரம்பிப்பதே இல்லை. எனவே, இத் தர்ப்பையின் சிறப்பை, மேன்மையை, அதன் தூய்மையைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நாம் நோக்குவோம்.

தர்ப்பைக்கு திருப்புல் என்றும் ஒரு நாமம் உண்டு. இப்பெயரே தர்ப்பையின் சிறப்பை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

பண்டு தொட்டு இப்புல் எம்வாழ்வில் இடம் பெறும் மங்கல, அமங்கல இரு வகைப்பட்ட வைதீகச் சடங்குகளிலும் சிறப்பாக எம்மால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அக்கினி யைப் போன்று இப்புல்லுக்கு உஷ்ண வீரியம் அதிகம் உண்டு. நீரைத் தூய்மைப் படுத்தும் தன்மையும் உண்டு. உலோகங்களில் படியும் அழுக்கைப் போக்கும் ஆற்றலும் இத்தருப்பைப் புல்லுக்கு உண்டு.

போயும் போயும் ஒரு புல்லைப் பற்றி ஆராய்வதா என நீங்கள் நினைக்கக் கூடும். என்ன செய்வது! புல்லானாலும் இது தர்ப்பைப் புல் ஆயிற்றே, எமது வைபவங்களில் சகலதிலும் முன் வந்து நிற்கின்றதே, அதுவும் இல்லாமல், இப்புல் இல்லாமல் புரோகிதர்கள் சடங்குகளை ஆரம்பிக் கவே மாட்டார்களே!.

எனவே தொடர்ந்து இத் தர்ப்பைப் புல் பற்றி ஆராய்வோம்.

தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் இப்புல் உகந்ததாம். எனவே தான், தேவ காரியங்களின் போதும், பித்ரு காரியங் களின் போதும், இத் தர்ப்பைப் புல் பயன்படுத்தப்படுகிறது.

மேலும் இப்புல் புண்ணிய பூமி என்ற சொல்லப்பட்ட குற்றமற்ற மண்ணிலே தான் முளைக்குமாம். அக்கினி கர்ப்பம் என்று அழைக்கப்பெறும் இத்தர்ப்பை ஆலயங்களிலே கும்பாபிஷேக நேரங்களிலே தங்கக் கம்பிகளாகப் பயன் படுத்தப்படுகின்றது.

வைதீகச் சடங்குகள் செய்யும் போது "பவித்திரம்" என்னும் பெயருடன் விளங்கும் சுண்டு விரலுக்கு அடுத்த விரலான, பவித்திர விரலுக்கு தர்ப்பைப் புல் அணிந்து கொள்ள வேண்டும். இக் குறிப்பிட்ட விரலில் "சுபநாடி" ஓடுவதால் இவ் விரலுக்கு தர்ப்பைப் புல் அணிவதால் அதில் சுப சக்தி ஏற் படுகின்றது. இப் புல்லில் காரமும், புளிப்பும் இருப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் சாம்பலைக் கொண்டு, செப்பால் ஆன விக்கிரகங்கள் சுத்தப்படுத்தப்படுகின்றன.

தர்ப்பைப் புல்லின் அதி முக்கிய குணங்கள் யாதெனின் மற்றைய புற்கள் அதிக நாள் நீருள் கிடந்தால் அழுகி விடும். நீர் இல்லாவிட்டால் அவை காய்ந்து வாடி விடும். ஆனால் தர்ப்பைப் புல்லின் விஷேடம் அதிக நாட்கள் நீருள் கிடந்தாலும் இது அழுகிப் போய் விடாது. அதே நேரம் அதிக நாட்கள் நீர் இல்லாதிருப்பினும் இவை காய்ந்து கருகி விடாது. இப்புல்லின் இந்த விஷேட குணத்தை "அம்ருத வீரியம்" என்று சாஸ்த்திரங்கள் இயம்புகின்றன. சம சிதோஷ்னப் பிரதேசங்களில் வளரும் இப்புல் சூரிய கிரகணம் ஏற்படும் வேளையில் அதிக வீரியத்தைப் பெறுகின்றது. இப் புல் பட்ட நீர் தொற்று நீக்கியாகவும் பயன்பட வல்லது. நீர்க் கரையில் முளைக்கும் தர்ப்பைப் புல்லில் பட்டு வீசும் காற்று மிக ஆரோக்கியம் வாய்ந்தது. நோய்களைத் தடுக்க வல்லது. இதனால் தான் எம் முன்னோர்கள் இத்தகைய நீர் நிலைகளில் நீராட நாடினார்கள். தர்ப்பை தூய்மையானதால், ஆரோக்கிய மாகவும் அவர்கள் வாழ்ந்தார்கள். கிரகணம் பிடிக்கும் நேரத் தில் உணவில் தர்ப்பைப் புல்லைப் போட்டு வைத்தால் விஷ வாயு உணவில் உறையச் சந்தர்ப்பம் ஏற்படாது என் பது நம்பிக்கை. இப்புல்லை குறிப்பிட்ட நாட்களிலே அதற் குரிய மந்திரத்தைச் சொல்லிப் பறிக்க வேண்டும். பூமியின் ஆற்றல் வடகிழக்கில் இருந்து தென் கிழக்கு நோக்கிச் செல்வதால் இம் மூலையிலேயே தர்ப்பைப் புல்லுடன் கூடிய குளங்களை அமைத்துப் பயன்படுத்த வேண்டும் என பழைய நூல்கள் கூறுகின்றன.

எனவே இனி எமது வைபவங்களிலே தர்ப்பைப் புல்லைக் காணும் போது நீங்கள் அதன் மேன்மை பற்றி சிந்திக்கலாம் அல்லவா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௬௨. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

“போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து” என்பது நீங்கள் சிறு வயதிலே கற்ற பழமொழி. அதனுள் எத்தனை உண்மை அடங்கியிருக்கின்றது பாருங்கள். பொன்னோ மணியோ, உணவோ, உடையோ, இவ்வளவும் எமக்குப் போதும் என்று நாம் திருப்தி கொண்டு விட்டால் நாம் உண்மையில் சிறந்த பாக்கிய சாலிகள் ஆகி விடுவோம். சிறந்த புண்ணியம் செய்தவர்களும் ஆகி விடுவோம்.

போதும் என்ற மனம் எமக்குக் கிடைக்காத போது தான் எமக்கு ஆசை உண்டாகின்றது. எமது தகுதிக்கு மேற்பட்ட ஆசை எமக்கு ஏற்படும் போது அது எம்மைப் பாவம் செய்யவும் தூண்டுகின்றது. எமது தகுதிக்கு அப்பாற்பட்ட ஆசை எம்மை பாவம் செய்ய வைக்கின்றது. இதனால் தான் சொன்னேன், போதும் என்ற மனம் எமக்கு இருக்குமே யானால், கிடைத்ததை மாத்திரம் பெற்று மனம் திருப்தி கொள்ளவோமானால், நாம் நிட்சயமாகப் பாக்கியசாலிகள் தாம்.

இங்கே தான் எமது மனதிற்கு நிம்மதி கிடைக்கின்றது. நிம்மதி, அதனை விட வேறு செல்வம் எங்கே இருக்கிறது!

எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே.

வகுத்தான் வகுத்த வகை அல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

அதே நேரம் எமக்கு நல்லவை கிடைக்க இருப்பின் அதை எவரும் தடுக்க முடியாது. எமக்கு வர வேண்டியதை இறைவன் ஏதோ ஒரு வழியில் எம்மிடம் சேர்ப்பிப்பார். இது தான் நியதி. இதுவே எமது செயலின் விளைவுகளின் மறுபக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உண்மையை ஒரு கதை மூலம் நாம் கண்டு கொள்வோமா?

கொத்தனார் ஒருவர் அயலூருக்கு வேலைக்குப் போகும் போது, இலுப்பைத் தோப்பு ஒன்றைத் தாண்டிப் போக வேண்டியிருந்தது. தோப்பின் நடுவில் ஒரு ஐயனார் கோயில், அங்கே ஐயனார் பயங்கர வடிவில் வீற்றிருப்பார். அடர்ந்த தோப்பு, இருட்டு ஒரு புறம், பயந்து பயந்து கொத்தனார் செல்கையில் "கொத்தனாரே இங்கே வாரும்" என்றொரு குரல் கேட்டது. அது ஐயனாரிடமிருந்தே வந்தது பயத்துடன் ஐயனார் முன் போய் நின்றார். நான் ஒரு தப்பும் செய்ய வில்லையே பயந்து கொண்டே சொன்னார் கொத்தனார்.

"பயப்படாதே நீ நிற்கும் இடத்தைத் தோண்டிப் பார் அடியில் ஒரு பானை இருக்கும். அதற்குள் நிறையத் தங்கம் இருக்கும் அதை எடுத்துச் செல்" என்றார் ஐயனார் சுவாமி.

பயத்துடனும் ஆச்சரியத்துடனும் நிலத்தைத் தோண்டி பானையை எடுத்து திறந்து பார்த்தார் கொத்தனார். உள்ளே நிறையத் தங்கத் துண்டுகள் பருப்பளவு மணி மணியாக மின்னின.

இவ்வளவும் எனக்கா? என்றார் கொத்தனார் ஆச்சரியம் மேலிட. "எடுத்துச் செல், ஆனால் பானையைக் காலி செய்து விடாதே! 5, 6 தங்கத் துண்டுகளை பானையில் போட்டு புதைத்து விட்டுப் போ" என்றார் சுவாமி.

கொத்தனாரும் அப்படியே செய்து விட்டு மிகுதியை ஒரு துண்டில் கொட்டி மூட்டையாகக் கட்டிக் கொண்டு அயலூர் போய்ச் சேர்ந்தார்.

எனது கஷ்டம் எல்லாம் இன்றோடு தீர்ந்து விட்டது என்ற வண்ணம் தான் வேலை செய்ய வேண்டிய வீட்டுள் புகுந்தார் கொத்தனார். தனது மூட்டையை அவ்வீட்டு உத்தரத்தில் தொங்க விட்டு விட்டு தனது வேலையை ஆரம்பித்தார்.

அவ்வீட்டு அம்மாள் சமையலில் ஈடுபட்டிருந்தவர் பருப்பு டப்பாவுக்குள் கையை விட்டால், பருப்பு இல்லை. இனிக் கடைக்குத்தான் போக வேண்டும் என்று வெளியே வந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரத்தில் தொங்கும் மூட்டையைக் கண்டு விட்டார். கொத்தானாரே இது என்ன மூட்டை என அவர் வினாவ அது துவரம் பருப்பு, வீட்டுக்கு வாங்கி வைத்திருக்கின்றேன் என்றார் கொத்தனார்.

வீட்டுக்கார அம்மாள் யோசித்தாள். இப்போ கடைக்குப் போவதை விட இதில் கொஞ்சம் பருப்பை எடுத்துக் கொண்டு சாயங்காலம் பருப்பு வாங்கி அதனுள் போட்டு வைத்து விடலாம். கொத்தனார் வேலை முடிய இருட்டிவிடும் என முடிவெடுத்தாள்.

கொத்தனாரோ கூரை மேல் ஓடு மாற்றி கொண்டிருந்தார். அம்மாள் மூட்டையை எடுத்து பிரித்தாள் என்ன ஆச்சரியம்! அத்தனையும் தங்கத் துண்டுகள். தங்கம் போல் அவளுக்கும் ஒரு யோசனை பளிச்சிட்டது.

அத்தனை பொன்னையும் தான் எடுத்துக் கொண்டு அவசர அவசரமாகப் பருப்பு வாங்கி வந்து அதே போல் மூட்டை யாகக் கட்டித் தொங்கவிட்டு ஒன்றும் தெரியாதது போல் இருந்து விட்டாள் அந்த அம்மா.

கொத்தனார் வேலை முடித்து கீழே இறங்கி வந்தார். அவசரமாக மூட்டையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். மூட்டை லேசாகப் பாரம் குறைந்தது போலிருந்தது அவிழ்த் துப் பார்த்தார் பகீரென்றது கொத்தனாருக்கு தங்கத்தைக் காணவில்லை. அத்தனையும் பருப்பு.

பதை பதைத்து வீட்டுக்கார அம்மாளை வினாவினார். அம்மாள் மறுத்து விட்டாள். மூட்டையில் தங்கம் இருந்ததா பகலிலும் கனவு வருமா உமக்கு? என்றார் நிதானமாக. அவ்வளவு தங்கம் உம்மிடம் இருந்தால் நீர் ஏன் ரூபாய்க்கு கூலிக்கு வேலை செய்ய வருகின்றீர் என்று ஒரு போடு போட்டாளே பார்க்கலாம்.

நிலை குலைந்த கொத்தனார் ஐயனார் சுவாமியிடம் ஓடினார். “ஐயனாரே இப்படி என்னை மோசம் செய்யலாமா? கைக்கு எட்டிய அத்தனை தங்கமும் என்னை விட்டுப் போய் விட்டதே” என்று புலம்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனாரப்பன் கூறினார். "கொத்தனாரே! யார் யாருக்கு என்ன என்ன கிடைக்க வேண்டுமோ அவ்வண்ணம் கிடைக்கும். அந்த அம்மாளுக்கு இன்று தங்கம் கிடைக்க வேண்டும் என்பது விதி. அதை உன் தலையில் மூட்டை கட்டி கொடுத்து அனுப்பினேன். அவ்வளவு தான் நீ விட்டுச் சென்ற பானையில் பார் உனக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அவ்வளவு அதில் இருக்கும்" என்றார் ஐயப்பன்.

கொத்தனார் பானையை மறுபடியும் தோண்டி எடுத்துப் பார்த்தான். அதில் அவர் போட்ட 4, 5 தங்கத் துண்டுகள் மாத்திரமே இருந்தன.

தரித்திரப் புத்தி! அப்போதே கொஞ்சம் நிறைப் போட்டிருக்கக் கூடாதா? கொத்தனாருக்கும் பிராப்தம் அவ்வளவு தான்!

அந்த 4 துண்டுகளையும் எடுத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார் கொத்தனார்.

யாருக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அது தான் கிடைக்கும். யாவும் இறைவன் செயல் எல்லாம் அவன் நடாத்தும் நாடகம்.

எனவே, எமக்கு அது கிடைக்கவில்லை இது கிடைக்கவில்லை என்று மன நிம்மதியை இழக்காது கிடைத்ததை யிட்டு திருப்தி அடைவோம்.

முயல்வோமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௬௩. இயற்கையை மதிக்கும் இல்லறம்

ஒரு சைவ ஆலயத்தை புனிதமாக வைத்திருப்பது ஒவ்வொரு சைவப் பெருமகனதும் முக்கிய கடமையாகும். ஆலயத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் அந்தந்த ஆலயத்தைச் சேர்ந்த குருக்கள் ஐயாவினதும் ஆலய நிர்வாகத்தினதும் கடமை என்று எண்ணி விடக் கூடாது. கோயில் என்பது உயர் மக்கள் யாவருக்காகவும் அமைக்கப்பெற்றது அமையப்பெற்றது. எனவே அதன் புனிதத்தை பேணுவது உயர் மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். நாம் ஆலயத்தின் புனிதம் பேண உதவுகின்றோமா இல்லையா அதனை அசுத்தமாக்காவிட்டால் அதுவே பெரிய உதவியாக இருக்கும். இல்லறத்தார்க்கு இத்தகைய கடமைகளும் உண்டு.

தூய்மைக் குறைவுக்கெல்லாம் காரணமானது இல்லறம் என்று மகான்கள் பாடியிருந்தாலும், அதிலும் கூட ஒரு நெறியை எற்படுத்திக் கொடுத்து அதையே ஆத்மாவைத் தூய்மைப்படுத்துகின்ற ஒரு சமாச்சாரமாக ஆக்கி எமக்கு வேத தர்ம சாஸ்திரங்கள் தந்திருப்பது இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்ற முது மொழியோடு ஒத்துப் போகின்றது.

சாதரணமாக ஒருவனைக் காட்டுக்குப் போய் சந்நியாசியாக இரு என்று சொன்னால் அவன் செய்வானா? அது அவனுக்கு வேண்டாததொன்றாகத் தோன்றும்.

உலக வாழ்க்கையில் அடிபட்டுத்தான் அவனுக்குப் பக்குவம் உண்டாக வேண்டும்.

பிஞ்சாகக் கசக்கின்ற காலத்தில் கசந்து, வடுவாகத் துவர்க்கின்ற காலத்தில் துவர்த்து, காயாகப் புளிக்கின்ற காலத்தில் புளித்து, அப்புறம் தான் பழமாகப் பழுத்து மதுர பூரணமாகத்தான், சாதாரண மனிதர்களால் முடியும்.

நன்றாகப் பழுக்காத பழத்தை கம்பு கொண்டு அடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுக்க வைக்க முடியாது.

அதை விட்டு இயற்கை வேகத்தை மீறினால் இராமலிங்க சுவாமிகள் சொன்ன படி "வெம்பி விழ" வேண்டியது தான். இதனால் தான் திருமணம் இல்லறம் எல்லாம் கிருஹஸ்த தர்மங்கள் எனக் கூறி வைத்துள்ளனர் பெரியோர்கள்.

அது மாத்திரமல்லாமல் பூர்வ கர்மங்களை அனுபவிக்க அநேக ஜீவன்கள் புவியில் பிறந்தாக வேண்டுமே! தாம்பத்திய வாழ்க்கை இல்லாமல் இது எப்படி முடியும்?

எனவே இல்லறம் தூய்மையானது. ஆனால் அங்கு இறைசிந்தனையும் அவசியம். பிரம்மச்சரியத்தில் ஒருவன் செய்ய வேண்டிய சந்தியாவந்தனம் இல்லறத்திலும் தொடர வேண்டும்.

இல்வாழ்க்கையில் பூசை புனற்காரம் மந்திர ஜபம் புனிதம் ஆகியன ஓர் அளவு தன்னும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

காயத்திரி மந்திரம் ஜபம் எமக்கு மிகவும் நன்மை பயக்க வல்லது.

காயத்திரி என்றால் எவர்கள் தன்னை உச்சரிக்கின்றார் களோ அவர்களை ரட்சிப்பது என்று அர்த்தம்.

"சந்தஸ்" என்பது வேதம். வேத மந்திரங்களுக்கெல்லாம் தாய் ஸ்தானத்தை வகிப்பது "காயத்திரி" என, வேதமே சொல்கின்றது. 24 அட்சரங்கள் கொண்ட வேத மந்திரம் இதுவாகும்.

எமது தேகமே ஒரு ஆலயம் அதனுள் இருக்கும் ஜீவனே ஈஸ்வரனின் ரூபமுமாகும். எனவே மனிதனது உடம்பே ஒரு தேவ ஆலயம் என்னுமிடத்து அதனையும் யாம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஊரில் ஆலயமும் வேண்டும். இல்லமும் வேண்டும். உலக காரியங்களுக்கு இல்லமும் ஆத்மீக காரியங்களுக்கு ஆலயமும் அவசியமாகின்றன. ஆலயங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை. எங்கெங்கு என்ன இருக்க வேண்டுமோ அவை அங்கங்கு இல்லா விட்டால் எல்லாமே பாழாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும் என பின்வரும் பாடல் மிக அழகாகவும் தெளிவாகவும் இக்கருத்தை சொல்வதைப் பாருங்கள்.

"நீறில்லா நெற்றி பாழ் நெய்யில்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்...."

ஒருசைவனுடைய நெற்றியில் திருநீறு மிளிர வேண்டும். அப்போது தான் அவன் முகம் பொலிவடைகின்றது.

சைவ உணவில் நெய் அவசியம் வைக்கப்படல் வேண்டும். ஊர் ஒன்றுக்கு ஆறு அவசியம். ஆறு இல்லா ஊரின் அழகும் வளமும் குன்றி விடும் எல்லாவற்றிற்கும் மேலாக

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனச் சொல்லி வைத்துள்ளனர் எமது முன்னோர். எத்தனை முக்கியம் வாய்ந்தது ஒரு ஊருக்கு ஆலயம்.

ஆலயங்களில் மந்திரங்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும். இதன் ஒலி காற்றில் பரவி ஊர் எங்கணும் ஒலித்துப் பரவ வேண்டும். அதனால் ஊரே புனிதம் அடைய வேண்டும். மந்திர சக்தி அக்கினி போன்றது. அஃது தீயவற்றைப் பொசுக்கி ஷேமத்தைத் தருவல்லது. காயத்திரி மந்திரத்தை ஒரு நெருப்புப் பொறி என்றும் கூறலாம். மற்றைய மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் சக்தியை அளிப்பது காய்த்திரி மந்திரம். இம்மந்திரத்தைப் புனிதமாக, சிரத்தையோடு மனதை ஒரு வழிப்படுத்தி, பொருள் உணர்ந்து நாம் ஜபிக்க வேண்டும்.

காயத்திரி மந்திரத்தை முறைப்படி ஜபித்தால் தான், மற்றைய மந்திரங்களும் சித்திக்கும் என்பது பெரியோர் வாக்கு.

எனவே இல்லறத் தளத்தைத் தர்ம தளமாக யாம் அமைப் போமேயானால் ஆத்மீக லட்சியம் சுலபமாக நிறைவேற வாய்ப்புகளுண்டு. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64. வாழ்வும் தத்துவங்களும்

எங்களது சமயத்தில் தான் எத்தனை உயர்ந்த அரிய தத்துவங்கள் பொதிந்து கிடக்கின்றன. ஒன்றா இரண்டா மலையளவு என்றால் கூட அது சிறிதாகத் தான் படுகின்றது. ஆனால் நாம் எமக்கு எங்கே நேரம் இவை பற்றிச் சிந்திக்க. நாம் தான் வேலை வேலை என்று ஓடிக் கொண்டிருக்கின் றோமே! நாம் நாமாக சற்று நின்று நிதானித்து சிந்தித்தால் உண்மைகள் பல எமக்குப் புலப்படும். எமது முன்னோர் எம்மிலும் பார்க்க நிதானமாக வாழ்ந்தார்கள், நிதானமாகச் சிந்தித்தார்கள், செயற்பட்டார்கள். எனவே தான் மிகப் பெரிய உண்மைகளை எல்லாம் அவர்களால் கண்டு அறிய முடிந் தது. அவற்றை எமக்கு சொல்லி வைக்க முடிந்தது. அவை எமக்கு எம் முன்னோர்கள் எமது சமயத்தின் வாயிலாக ஆத்மீக முறையில் விட்டுச் சென்ற அரும் பொக்கிஷங்கள் அறிவுக் களஞ்சியங்கள், சிந்தனைச் சுடர்கள். இந்த இனிய காலைப் பொழுதிலே அவற்றில் சில துளிகளை யாம் இங்கு நோக்குவோம்.

மனிதப் பிறவி மிக உயர்ந்தது. பகுத்தறியும் சக்தியும் கொண்டது. கிடைத்த இந்த மனித பிறவியின் போதே யாம் வேண்டியதைப் பெற முயல வேண்டும். மீண்டும் பிறவாமல் இருக்க முயற்சிகள் எடுத்தே ஆக வேண்டும். இதற்கு இறைவன் மேல் நம்பிக்கையும் பக்தியும் வேண்டும்.

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்

- என்கிறார் காரைக்கால் அம்மையார்.

பொருள் சம்பாதிப்பதும் சாப்பிடுவதும் இறப்பதும் மட்டும் தான் மனித வாழ்க்கையல்ல.

"வெந்ததைத் தின்று விட்டு விதி வந்தால் சாவோம் என்று கூறும் சாமானிய மனிதராக வாழாது, எமது பிறவியின் பயனை யாம் அடைய வேண்டும். அடைய முயற்சிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதற்கு வழி வகைகளை பல மகான்கள் எமக்கு கூறியுள்ளனர், வாழ்ந்து காட்டியும் உள்ளனர்.

பிறவி என்பது பெருங்கடல் போன்றது. அதனை நீந்திக் கரை சேர்தல் எளிதான காரியமன்று. பக்தி என்னும் மார்க்கம் இறைவனடி சேர வைக்கும். எனவே பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேருவோர் யார்? சேர மாட்டாதோர் யார்? என்ற வினாவுக்கு வள்ளுவர் பெருமான் பின்வருமாறு பதில் தந்துள்ளார்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

இல்லறத்திலே இருந்து கொண்டே யாம் பக்தி மார்க்கத் தைப் பின்பற்றலாம். ஆனால் அதுவும் ஒரு அளவோடு தான் இல்லையோ இரண்டுமே கெட்டு விடும்.

ஐம்புல இன்பத்தில் ஆத்ம சக்தியை வீணாக்கக் கூடாது. அப்படி வீணாக்குவோரை

"ஓடும் நீரை ஓட்டைக் குடத்தில் இட்டு
மூடி வைத்த மூடர்" என்கிறார் திருமூலர்.

புலன் அடக்கம். இது எளிதன்று. கோபத்தையும் காமத்தை யும் வென்றால் புலன் அடக்கம் பெற்று அதன் மூலம் ஆத்ம சக்தியைக் காப்பாற்ற முடியும்.

கோபம் :

இது சினம் எனப்படும். "சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்கின்றார் வள்ளுவர் பெருமான்:

கோபம் யாரைச் சேர்கிறதோ அது அவர்களை அழித்து விடும். அவர்களது நற்பண்பைக் கெடுத்து விடும். தன் மானத்தை இழக்கச் செய்யும். விரயத்துக்கு வழி தேடும். கோபங் கொள்பவன் அந்த நேரத்தில் அதன் கேவலமான தன்மையை அறிய மாட்டான், ஆனால் அவன் அருகே இருப்போரே அதனை அறிவர். உணர்வர். அத்தகைய ஒரு தவறான மயக்கத்தைக் கோபம் தருகின்றது. எவன் ஒருவன் கோபத்தை உரிய நேரத்தில் அடக்கி சமாளிக்கின்றானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனே உண்மையில் -புத்திசாலி. அவன் தன்னையும் காப்பாற்றி மற்றவர்களையும் காப்பாற்றி விடுகின்றான். கோபம் கொண்டு குருவியை எரித்த முனிவருக்கு கற்புடைய தர்ம பத்தினியை எரிக்கவோ தண்டிக்கவோ முடியவில்லை.

கோபம் கொள்பவர் உயிர் உடையோராயினும் இறந்த வர்க்குச் சமமாவர். கோபத்தைத் துறந்தோர் ஞானம் பெறு கின்றனர். மனதிலே கோபத்தை எழாமல் காப்பவன் ஒரு சிறந்த தவயோகி ஆகின்றான்.

எனவே, நாம் எம்மை எடுத்துக் கொள்வோம். ஒரு நேரமில் லாவிட்டாலும் ஒரு நேரம் எமக்கு கோபம் வந்து விடுகின்றது. எனவே நாம் ஏன் அதனை அடக்க முற்படக் கூடாது? நாம் எங்கே பெரிதாகக் கோபிக்கின்றோம் என்று எம்மை சமாதானப்படுத்த வேண்டாம். கோபத்தை எமது வழியில் வராமல் பார்த்துக் கொள்வோம் அதன் நன்மை பின்னர் தான் புலப்படும். முயன்று பார்ப்போமா?

## 65. தேவாரத்தின் மகிமை

எத்தனையோ கோடி இன்பங்களை அள்ளித் தரும் இறை வன் சிலரை வாழ்க்கையில் சோதிக்கவும் தவறுவதில்லை. எல்லாச் செல்வத்தையும் கொடுத்து விட்டு சிலருக்கு பிள்ளைச் செல்வத்தை கொடுக்காது அவர்களைப் பரீட்சிக் கின்றான். இதுவும் அவர்கள் செய்த முன் வினைப் பயன் தான்.

பிள்ளை வரம் வேண்டும் என ஏங்கும் பெற்றோருக்கு ஒரு கதை உண்டு.

திருமுனைப் பாடி நாட்டிலே திருப்பெண்ணாடகம் என்னும் ஊரிலே அச்சுத களப்பாளர் என்னும் ஓர் பெரியார் வாழ்ந்து வந்தார். மங்களாம்பிகை என்ற பெண்ணை மணந்து அவர் வளமாக வாழ்ந்த போதும் அவருக்குப் பிள்ளைச் செல்வம் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டும் தொட்டும் கவ்வியும் அளைந்தும் மயக்குறு மக்கள் இல்லாக் குறை பெருங்குறை அல்லவா? இதனால் இவர்கள் இருவரும் உள்ளம் நலிந்து கவலையுற்றிருந்தார்கள்.

இப்படியிருக்கையிலே சகல ஆகமங்களையும் கற்றதால் சகலாகம பண்டிதர் எனப்பட்ட பெயரையும் பெற்ற அருணந்தி சிவாச்சாரியார் என்னும் பெரியார் இந்த அச்சுத் களப்பாள ருக்கு குருவாக அமைந்தார்.

இக் குருவானவர் சிவபிரானிடம் மிகுந்த பக்தி கொண்ட வர். திருமுறைகளோடு மிகுந்த ஈடுபாடு கொண்டு தினமும் தேவாரப் பதிகங்களை தான் ஓதுவதோடு மற்றையோரையும் ஓத வைப்பவர். இவரிடம் அச்சுத களப்பாளர் சென்று தன் பிள்ளையில்லாக் குறையை எவ்வாறேயினும் தீர்த்தருள வழி செய்யுமாறு வேண்டினார்.

அருணந்தி சிவாச்சாரியார் சிவ பூசையை முடித்துக் கொண்டு எம்பிரானை நினைத்த வண்ணம் திருமுறைகளைக் கையில் எடுத்து பட்டுத்துணியில் அவற்றை வைத்துப் பூசித்து இறைவா! இதற்கு நீ ஒரு வழிகாட்டியாக வேண்டுமென மனதில் எண்ணிய வண்ணம் திருமுறை நூலில் கயிறு சாத்திப் பார்க்கவே திருஞான சம்பந்தப் பெருமான் பாடியருளிய திருவெண்காட்டுப் பதிகம் ஒன்று அவருக்குக் கிடைக்கின்றது. அப்பதிகம் பிள்ளைச் செல்வம் வேண்டுவோர் செய்ய வேண்டியதைக் கூறும் ஒரு தேவாரப் பாடல் ஆகும்.

பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள
நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டாம் ஒன்றும்
வேய் அனதோள் உமை பங்கன் வெண் காட்டு
முக்குள நீர்
தோய் வினையார் அவர் தம்மை தோயாவாம் தீவினையே

என்றிருந்து அத்தேவாரப் பாடல்.

அதைக் கண்ணுற்ற அருணந்தி சிவாச்சாரியார் அச்சுத களப்பாளரை நோக்கி இப்பாடல் கூறுமாறு நீர் திருவெண் காட்டுப் பெருமானை வணங்கி அங்குள்ள முக்குள நீரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி நீராடி அங்கு எழுந்தருளியிருக்கும் ஈசனையும் இறைவியையும் வணங்கி அருள் பெற்று வாரும் என வாழ்த்தி அனுப்பினார்.

திருவெண்காட்டுக்கு வருகிறார் அச்சுதகளப்பாளர் பிரார்த் தனை ஆரம்பமாகின்றது. ஒரு நாள் இறைவன் இவரது கனவிலே தோன்றி "அன்பனே உனக்கு இப்பிறப்பில் புத்திரப் பேறு அரிது. ஆனால் நீ என்னை மெய் அன்போடு பூசித்த தால் ஞானசம்பந்தனைப் போன்று ஒரு சற்புத்திரனைத் யாம் உமக்குத் தருவோம்." எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அச்சுதகளப்பாளர் ஈசன் திருவருளை வியந்து ஆனந்தக் களிப் பெய்தினார். தேவார திருமுறைகளின் சக்தியை வியந்தார். அவற்றின் பெருமையை மெச்சினார். தனது பக்தியின் சாதனையை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். இறை வனின் கருணையை எண்ணி ஆனந்தம் கொண்டார். இறை தன்மையை எண்ணி ஆனந்தம் கொண்டார். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற வாக்கின் மெய்யைப் போற்றி மகிழ்ந்தார். தொடர்ந்தும் தம்மால் இயன்றதான தருமங் களைச் செய்யலானார்.

இறைவன் திருவாக்கின் படி அவருக்கு உரிய நேரத்தில் சிவநெறி தழைக்க ஒரு சற்புத்திரர் அவதாரம் செய்கின்றார்.

அவரது குழந்தைக்கு சுவேதனப் பெருமான் என நாமம் சூட்டப்படுகின்றது. இக்குழந்தையின் உள்ளத்தில் சிவபெரு மானை உள்ளவாறு உணரும் மெய்யுணர்வு தோன்றுகின்றது. அருள் ஒளிப்பிழம்பாகத் தோன்றிய அப்பாலகனுக்கு பரஞ் சோதி மாமுனிவர் சிவஞான போதத்தை உபதேசிக்கின்றார். அத்தோடு மெய்கண்டார் என்னும் திருப்பெயரையும் சூட்டியரு ளுகின்றார். இந்த வகையில் மெய்ஞானம் பெற்ற மெய் கண்ட தேவர் திருவெண்ணெய் நல்லூர் சென்று அங்கு எழுந்தருளியுள்ள பொல்லாப் பிள்ளையாரை வணங்கி நிட்டை கூடி சிவஞானப் பொருளை உள்ளவாறு உணர்கிறார்

பின் சிவத்தின் உண்மையையும் இயல்பையும் விளக்கும் பல சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களையும் அருளிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றார். இதனால் நாடெங்கும் சைவ சித்தாந்த அறிவு மக்களிடையே பரவுகின்றது.

எனவே இவரது வரலாறு மூலம் நாம் அறியக் கூடியது தெய்வ சிந்தனையும் தெய்வ பக்தியும் வீண் போகாது என்பதாகும்.

தினமும் மெய்யன்போடு இறைவனை நாம் வேண்டித் துதித்தால் எமக்கு வேண்டுவன எல்லாம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, சலனம் வேண்டாம் இறையை நம்புவோம் எண்ணியவற்றைப் பெறுவோம் என்பதில

ஐயமில்லை.

எனவே, சலனம் வேண்டாம் இறையை நம்புவோம் எண்ணியவற்றைப் பெறுவோம்.

●

## ௬௬. கர்மமும் விளைவும்

ஒருவருக்கு நோய் வந்து விட்டால் வீட்டில் உள்ளோர் சுற்றத்தார் அயலவர் நண்பர்கள் ஆகியோர் அதற்கு ஒவ்வொரு காரணம் கூறுவார்கள்.

வாயு சம்பந்தமான உணவை உட்கொண்டதால் அந் நோய் வந்தது அல்லது ஆயுள் வேத வைத்தியர் அஜீரணம் என்பார். அதீத குழப்பம் தான் காரணம் என்பார் மனோதத்துவ நிபுணர். தெய்வக் கோளாறு என்பார் மந்திர சாஸ்திரக்காரர். கிரக மாற்றப் பலன் என்பார் சோதிடர். தர்ம சாஸ்திரம் அறிந்தோர் பூர்வ கர்ம பலன் தான் காரணம் என்பர்.

இது ஒரு புறமிருக்க, நோய்க்கு மட்டுமின்றி எமது வாழ் வின் சுக துக்கங்களுக்கும் எமது கர்ம வினைகளே காரணம் எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில் நாம் எவ்வாறு செயற் படுவது?!

கிரகக் கோளாறு எனக் கொண்டு ஜோதிடர் சொற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகங்களுக்குப் பீரீதி செய்வதா, மாந்தீரிகர் சொற்படி செய்த பாவத்துக்குச் சாந்தி பரிகாரம் செய்வதா, எது செய்யா விட்டாலும் நோய் எனக் கண்டு முதலில் வைத்தியம் செய்தே ஆக வேண்டும். கர்ம பலன் என்பதற்கு அது தீரும் வரை இருந்து விட்டும் போகட்டும் என நாம் இருந்து விட முடியுமா? ஒரே குழப்பம் தான். வாழ்க்கையை வாழ்ந்து தானே ஆக வேண்டும். நல்லதோ, கெட்டதோ, இன்பமோ, துன்பமோ, சகித்துத்தான் ஆக வேண்டும். இந்தக் கஷ்டங்களை எல்லாம் இனியும் தாங்க முடியாது என அவசர புத்தியில் வந்து தற்கொலை செய்து கொள்வோரும் உண்டு. இது பாவங் களில் மிகக் கொடிய பாவமாகும். ஆண்டவன் தந்த உடலை அழிக்கவோ உயிரைப் போக்கிக் கொள்ளவோ எமக்கு அருகதை இல்லை. உரிமையும் இல்லை. இம் முடிவு மிகத் தப்பான முடிவு.

எமது வாழ்க்கையில் இடம்பெறும் இன்ப துன்பங்களுக்கு எது காரணம் என அந்த வகையில் சிந்தித்தாலும் ஆதி காரணம், எமது முன் வினைப் பயன் தான். அதாவது எமது கர்மம் என்பது தான் நிட்சயம். விஞ்ஞானம் கூறுவதும் அதுவே தான். விளைவு இருந்தால் காரணம் இருந்தே ஆக வேண்டும்.

உலகம் முழுவதும், காரணம், விளைவு, என்ற இரண்டிற் குள்ளும் கட்டுண்டுள்ளது. ஜட பிரபஞ்சமும் ஜீவ பிரபஞ்சமும் மூலத்திலிருந்தே தோன்றிய காரணத்தால் உலகுக்கு உள்ள நியதி, விதி, என்பன மனிதனுக்கும் உண்டு.

இந்த வகையில் எமது செயலுக்கு பிரதி விளைவு உண்டு. நற்பயனோ, தீயதோ அது எமது செயலைப் பொறுத்தது. இன்று நாம் அனுபவிக்கின்ற சுக துக்கங்களுக்கு காரணம் நாம் முன் ஜென்மத்தில் செய்த செயல்கள் என்பது உண்மை.

எமது பாவமூட்டையை கழுவவே யாம் பூமியில் ஜனனம் செய்கின்றோம். இதனைப் புரிந்து கொள்ளாது மீண்டும் யாம் எமது தவறான செயல்களால் எம்மீது அழுக்கேற்ற லாமா? எதற்கும் முதலில் எமது சிந்தனை நல்லதாக உயர்ந்த தாக அமைய வேண்டும். உள்ளுவதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வுள்ளல் என்றவாறு எமது சிந்தனைகள் நற்சிந்தனை களாக அமையும் போது, அவையே, எம்மை, பரோபகாரம், சேவை மனப் பான்மை, தியாகம், அன்பு ஆகியவற்றோடு கூடிய நற்செயல் களைச் செய்ய வைக்கின்றது.

சமயம் என்பது தனிப்பட்ட ஒன்றல்ல. இவை எல்லாம் சேர்ந்த கூட்டுத்தான் சமயம், எம்மை நல்வழியில் நெறிப் படுத்துவது சமயம்.

தோத்திர பாராயணம், பூசை, ஆலயதரிசனம் என ஆரம்பித்தாகும் பக்தி, எம்மை மேலும் மேலும் இறையிடம் ஒன்றுபடுத்த, இறையின்பத்தை நாம் சிறிதாக அனுபவிக்க, இத்தகைய நல்ல அனுபவங்களைப் பெற வழிவகுக்கின்றது. நாம் தினமும் பக்தி செய்ய வேண்டும். இதனால் எமது கவலைகள், பிரமைகள், மயக்கங்கள், எல்லாம் எம்மை விட்டகலும். ஆயிரம் கோடி வழிகளில் அலை பாயும் எமது மனதை அடக்க இறைவழிபாடே சிறந்த மார்க்கமாகும். எமது பாவங்களைப் பெருக்காமல் அவற்றை சிறிது சிறிதாக கரைத்துக் கொள்ளவும், மன நிம்மதி பெறவும் இறை வழிபாடே சிறந்த மார்க்கமாகும்.

எனவே எமது அன்றாட நிகழ்வுகளில் இறை வணக்கத் தைத் தவறாது ஆற்றி இறை இன்னருள் பெறுவோமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 67. ஆசையும் அவலமும்

**ப**ந்தம், பாசம், பற்றுக்கள் பலம் வாய்ந்தவையா என்பது பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

பற்றுக்களின் இருப்பிடம் ஆசை. ஆசை எம்மை விலங்காக் கும். அன்பு எம்மை மனிதனாக்கும். அருள் எம்மைத் தெய்வ மாக்கும்.

எம்மை நாம் சுய விமர்சனம் செய்யும் போது எம்முள் மறைந்திருக்கும் சுய தன்மை எமக்குப் புலப்படுகின்றது. இந்நேரத்தில் நாம் மனிதனாகத் திருந்த வாய்ப்புண்டு. சுயவிமர்சனம் மனிதனைத் தெய்வமாக்கவும் வாய்ப்புண்டு. சமய குரவர்கள் அருளாளர்கள் தம்மை தெய்வ அருளோடு ஒன்ற வைத்து தெய்வனுபவங்களைப் பெற்று அற்புதங்கள் புரிந்தார்கள். மண்ணிலே உலாவிய தெய்வங்களாக அவர்கள் மக்களுக்குக் காட்சி அளித்தார்கள்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என வாழும் மார்க்கத்தையும், எமக்கு வாழ்ந்து காட்டியவர்கள் அவர்கள்.

அதேநேரம், தெய்வ நிலையிலும் ஆசை வயப்பட்டால் விலங்காக மாற வாய்ப்பு உண்டு என்பதுவும் உண்மை இதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்லட்டுமா?

நகுஷன் என்பவன் 100 அசுவமேத யாகங்களை ஆற்றிய பெருமையை உடையவன். அவனைத் தேடி இந்திரப் பதவியே வந்ததென்றால் பாருங்களேன்! அத்தனை அருள் வலிமை பெற்றவன் அவன். அகத்தியர் உட்பட பெருமையும் மகிமையும் மிக்க ஏழு ரிஷிகள் அவன் புகழ் கேட்டு அவனைக் காண வந்தனர்.

தன் பண்பாட்டை பணிவு மூலம் காட்டி அவர்களை வரவேற்றான் நகுஷன். இந்திரப் பதவி ஏற்க, இந்திரலோகம் செல்ல, அவனுக்குப் பல்லக்கு காத்திருந்தது. அவனது பல்லக்கைச் சுமந்து செல்லத் தயாரானார்கள். அந்த ஏழு ரிஷிகளும், அகத்தியர் உட்பட. நகுஷன் நடுங்கினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ரிஷிகள் என்னைச் சுமப்பதா வேண்டாம” என மன்றாடினான நகுஷன். அவனிடம் அத்தனை பண்பும் பணிவும் காணப்பட்டது. ஆனால் 100 யாகம் செய்த அவனது பல்லக்கைச் சுமக்கும் பாக்கியம் தங்களுக்கு கிடைக்க வேண்டுமென ரிஷிகள் உறுதியாய் நின்றார்கள். பல்லக்கு இந்திரபுரியை நோக்கி நகர்ந்தது. தனது பாரத்தைச் சுமக்கிறார்களே என ரிஷிகளுக்காக நகுஷன் மனம் சஞ்சலப்பட்டது. “அவசரம் வேண்டாம் மெதுவாக மெதுவாக” என பல தடவைகள் கூறியவண்ணம் பண்பிலே அவன் தெய்வமாகவே மாறி விட்டான்.

பல்லக்கு இந்திர உலகை அண்மித்தது. தொலைவில் அழகே உருவான இந்திராணியின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. அவள் பேரழகு அவனை ஈர்த்தது. அவளை அருகே பார்க்கும் ஆசை வெறி நகுஷனின் தலைக்கேறியது.

முன்னர் மெதுவாக மெதுவாக என ரிஷிகளுக்கு கூறியவ னுக்கு, இப்போது அவர்களது வேகம் எரிச்சலை மூட்டியது. “பல்லக்கு ஏன் மெதுவாகப் போகின்றது”! நகுஷன் அதிர்ந்தான் குட்டையான அகத்தியர் பல்லக்கில் தொங்கிக் கொண்டிருந்தமைதான் காரணம்.

விஷயத்தை புரிந்து கொண்ட நகுஷன் தன் பொற் சிலம்பை உருவி “சர்ப்ப சர்ப்ப” என அகத்தியர் முதுகினில் அடித்தான். இந்திராணி மேல் கொண்ட ஆசை வெறி அந்தப் பண்பாளனை அற்பனாக்கி விட்டது.

நிமிர்ந்தார் அகத்தியர். அகத்தியர் அகத்தியராகி விட்டார். “சர்ப்ப சர்ப்ப என்ற நீ சர்ப்பமாகக் கடவது” என்று சாபிமிட்டார் நகுஷனை நோக்கி. மனதருள் மாமனிதனாகத் திகழ்ந்த நகுஷன், அந்த முன்னைய பண்பாளன், இப்போது மலைப் பாம்பாகி பல்லக்கிலிருந்து மண்ணுக்கு ஊர்ந்தான்.

இந்த வகையில் ஒரு பெண்ணாசை தேவை தானா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௬௮. ஆன்மீகமும் நாமும்

ஆன்மீகமும் நாமும் என்னும் விடயம் பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். ஆன்மாவோடு சம்மந்தப்பட்டது ஆன்மீகம். ஆன்மீக வழியில் சென்று ஈசனை அடைதல் ஆன்மாவின் இலட்சியம். மனிதப் பிறவியின் இலட்சியமும் அதுவே. ஆன்மீகத் துறையில் முற்றும் முழுதுமாக ஈடுபடுபவர்கள் ஆன்மீக வாதிகள் என்றழைக்கப் படுவர்.

எமது பிறவியின் இலட்சியத்தை அடைய இரு விஷயங் களை முதலில் உணர்ந்தாக வேண்டும்.

இறைவன் சர்வ வியாபகர், அவரது ஆதிக்கத்திலேயே இப் பிரபஞ்சமும் நாமும் இயங்குகின்றோம். கடவுள் பற்றிய நம்பிக்கை எமது மனதில் உறுதியாக இருந்தாக வேண்டும். நாம் எம்மதத்திற்கு உரியவராக இருப்பினும் சரி, எவ்வினத் தைச் சேர்ந்தவராயினும் சரி, எம் மொழி பேசுபவராயினும் சரி, எம்மிடம் பொதுப்படையாக "நமக்கும் மேலே ஒருவனடா" அவன் நாலும் தெரிந்த தலைவனடா என்ற இறை நம்பிக்கை இருந்தாக வேண்டும். அதாவது இறை நம்பிக்கை சாதி மதம் இன மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இறை நம்பிக்கைக்கு அடித்தளமாகவும் அடையாளமாக இறை வனுக்கும் எமக்கும் பாலமாக அமைவது இறை வழிபாடு.

எமது அன்றாட வாழ்க்கையிலே நாம் எத்தனையோ தூரம் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டுள்ளோம் என்பதை பார்ப்போம். ஆன்மீகப் பயிற்சி எமது அன்றாட வாழ்க்கையில் தவறாது அமைய வேண்டியுள்ளதோர் அம்சமாகும்.

எமக்கு காலைப் பொழுது விடியும் போது தான் ஒரு நாள் ஆரம்பிக்கின்றது, என நாம் கருதுகின்றோம். ஆனால் உண்மையில் நாம் தூங்கச் செல்லும் போதே எமது தூக்கத்தில் மறுநாட் செயற்பாடு தயார் ஆகியுள்ளது. நிம்மதியான ஆழ்ந்த உறக்கம் கொண்டு அடுத்த நாட்களை நாம் எழுவோமானால் அன்றைய தினம் எம்மால் உற்சாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக மன அமைதியோடு வேலை செய்ய முடியும். மாறாக இரவு தூக்கமின்மை கெட்ட கனவுகள் உண்டாகுமேயானால் அடுத்த நாள் உற்சாகமாக வேலை செய்ய முடியாது எமது மனம் குழப்பம் அடைந்திருக்கும். உள்ளம் மாத்திர மல்ல உடலும் சமநிலையை இழந்திருக்கும்.

எனவே, நாம் தூங்கச் செல்லும் போது தினமும் நல்ல சிந்தனைகளோடு துயில் கொள்ளச் செல்ல வேண்டும். இக்காலத்தில் எத்தனை விகிதம் இவ்வாறு நடக்கின்றது என்று சிந்தித்துப் பாருங்கள்! வீட்டின் நடுவிலே, எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் தொலைக்காட்சி பெட்டியிலே பயங்கரமான சண்டைக் காட்சிகளையும் பழிவாங்கும் காட்சிகள் கொண்ட நாடகங்களையும் பார்த்த பின் தூங்கச் சென்றால், எப்படி ஐயா அமைதியான ஆழ்ந்த உறக்கம் வரும்! கெட்ட கனவுகள் அல்லவா வரும். இது நடைமுறைத் தத்துவம். எனவே தூங்கச் செல்லும் முன் சில நிமிடம் தன்னும் ஜபத்திலோ தியானத்திலோ நேரத்தைச் செலவிடல் நன்று.

தூங்குமுன் அன்று முழுவதும் நாம் செய்த செயல்களை நினைவுக்குக் கொண்டுவந்து நாம் செய்த நற்செயல்களுக்கு இறைவனுக்கு நன்றி கூறி, செய்த தவறுகளுக்கு ஈசனிடமும் மன்னிப்புக் கேட்டு தூங்கச் செல்லல் நல்லதோர் பயிற்சி யாகும். அத்தோடு எமக்கு நன்மை செய்யும் மனோபாவத்தை தந்தருள வேண்டும் என்று இறையைத் துதிக்க வேண்டும். இதன் பின் நாம் தூங்கப் போவோமேயானால், எமது மனம் சலனமற்று அமைதி பெறும், நிம்மதியான தூக்கம் வரும், விடியும் போது இனிமையாய் அமையும். இது அனுபவ சாலிகள் கண்ட உண்மை.

காலையில் ஸ்நானம் செய்த பின் புறத் தூய்மையோடு நாம் அகத் தூய்மையை மேற்கொள்ள வேண்டும். உடலைக் குளித்து தூய்தாக்கலாம், உள்ளத்தை எவ்வாறு தூய்மை ஆக்குவது? மந்திரம். ஸ்லோகம் தோத்திரம் சொல்லி நல்ல சிந்தனைகள் மூலம் தான் உள்ளத்தையும் தூய்மை யாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடல் முடிந்ததும், சிறிய அளவிலோ பெரிய அளவிலோ இறைவழிபாடு எல்லா இல்லங்களிலும் எம்மவரிடம் இடம் பெறுவது வழமை. இதன்படி உணவருந்தல். உணவு உண்ணும் முன் எம்முன்னோர் என்ன செய்தார்கள் என்று கேளுங்கள். தாம் உண்ணும் உணவை இறைவனுக்கு அர்ப்பணித்து அதனையும் பிரசாதமாக ஏற்றுப் புனிதமாக உண்ண ஆரம்பிக்கும் வழக்கம் இவர்களிடையே இருந்து வந்தது. அதே வேளை, உண்ண முன் பாடுவதற்கு என்று தேவாரமே ஒன்று உள்ளது "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்றாரம்பிக்கும் தேவாரம் அது. இப்பழக்கததால் உணர்வும் உணவும் புனிதமாகின்றது. மன நிறைவு ஏற்படுகின்றது. அதுவும் ஒரு பூஜை போல் ஆகின்றது. இங்கே தான், இறை சிந்தனை எத்தனை அழகு! எத்தனை புனிதம்! எத்தனை தூய்மை! என்பதை யாம் உணர முடிகின்றது.

அடுத்து பயணம் செய்யும் போது நீண்ட தூரம் எனினும் சிலர் மனதுள்ளே தேவஸ்லோகம் சொல்லிய வண்ணம் இருத்தல் கண்கூடு. ஆனால் எல்லோருக்கும் இது சாத்தியம் என்று எனக்குத் தோன்றவில்லை. இதற்கு திடமான மன உறுதியும் அவதானமும் செயலுணர்வும் அவசியம். அல்லது பயணத்தின்போது இறங்க வேண்டிய இடத்தையும் கோட்டை விட்டு விட்டு அதோ கதி தான்.

எனவே, ஒரு முழு நாளின் போது இறைவழிபாட்டிற்காக நாம் எவ்வாறு உள்ளத்தையும், நேரத்தையும் ஒதுக்கலாம் என்ற ஓர் கணிப்பீடு இது. இதை பின்பற்றல் அவசியம். அதன் வெற்றி அவரவர் மனோ திடத்தைப் பொறுத்துள்ளது. இருப்பினும் காலை மாலை உணவு, தூக்கத்தின் முன், நித்திரை விழித்தெழும் நேரம் ஆகிய நேரங்களில் இறை சிந்தனை சிறிய அளவில் தன்னும் தவறாது செய்தல் மிக அவசியம். இதனால் தன்னம்பிக்கையும் அச்சமின்மையும் எமது உள்ளத்தில் வளரும். பின் எந்த நேரம் மிச்சம் என்று கேட்கின்றீர்களா?

அதிகமோ சொற்பமோ, இறை வழிபாட்டிற்குத் தானே! நேரத்தை ஒதுக்குவோம். இது தவப் பொழுதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 69. மெய்ஞானமும் விஞ்ஞானமும்

மிகத் தொன்மை வாய்ந்த எமது சமயத்தை, சமய நம்பிக்கைகளை, சமயக் கலாச்சாரத்தை, மேன்மையுற பின்பற்றல் எமது தலையாய கடமையாகும். உபதேசங்கள் சொன்னால் அவற்றைக் கேட்டால் மட்டும் போதாது. அதன் படி நடந்தாகவும் வேண்டும்.

சமயமே மனிதனை மனிதனாக வாழ வழி காட்டுகின்றது. சமயம் இல்லாது சமூகமே இல்லை. ஆரம்பத்தில் மனிதன் பயத்தினால் சமய நம்பிக்கை, சமய வாழ்க்கை ஆகிய வற்றை மேற் கொண்டான். சூரியன், சந்திரன், மழை, இடி, மின்னல், காற்று ஆகியவற்றை இயக்கும் ஒரு சக்தி எல்லாவற்றிற்கும் மேலே உண்டு என்று நம்பினான். இந்த நம்பிக்கை பல பரிணாமங்களில் வளர்ந்து இன்று பிரமாண்ட மான ஆலயங்களாக அருட் தலங்களாக ஆதீனங்களாக அமைந்து இறை பணி தொடர்கிறது. இறைவன் சன்னதியில் ஏற்றத் தாழ்வு இல்லை. நாம் எல்லோரும் ஒன்று என்ற அந்த ஒரு சொல்லே ஒற்றுமையின் உயர்வை எமக்குக் காட்டி நிற்கவில்லையா? அது ஒன்றே போதும் எம்மை வாழ வைக்க, அதற்கு எம் உள்ளம் ஆத்மீகத்தையும் நாட வேண்டும்.

அறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞானம் உதவுவது போல் மன வளர்ச்சிக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் சமயம் உதவுகின்றது. இறைவன் ஒருவன். அவனே எல்லோருக்கும் தந்தை என்று நாம் கொள்வதன் மூலம் அன்பு சகோதரத்துவம் போன்ற ஜீவ ஊற்றுக்கள் எமது உள்ளத்தில் வேகமடைந்து எமது வாழ்வு நலம் பெற சமயம் உதவுகின்றது. மெய்ஞானம் சமயம் என்றால் விஞ்ஞானம் அறிவு ஆகும். விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி என்றும் சமயம் கலவாத விஞ்ஞானம் குருடு என்றும் சொல்லி உள்ளார் ஐன்ஸ்டீன் என்னும் அறிவாளி.

நாம் காலையும் மாலையும் செய்யும் தோத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமண்டலத்தில் இருக்கும் இறைவனுக்கு எவ்வாறு கேட்கும் என்னும் சந்தேகத்தை, கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்ததின் மூலம் தீர்த்து வைத்து விட்டது விஞ்ஞானம். அன்று ஆதி மூலமே என்று ஓலமிட்ட யானையை ஓடி வந்து காப்பாற்றியவர் கண்ணபிரான். நம்பிக்கையோடு அந்த யானையிட்ட ஓலம் ஆண்டவன் செவியில் கேட்கத் தான் செய்தது. இறைவன் சர்வ வியாபகர். எங்கிருந்து நாம் அழைத்தாலும் நம்பிக்கையோடு நாம் அழைத்தால் அவர் வரத்தான் செய்வார். இறைவனுக்கு தூரம் முக்கியமல்ல. இறையில் நாம் வைத்த நம்பிக்கையின் அருகாமைதான் தான் முக்கியம்.

அவர் தான் சர்வ வியாபகராயிற்றே. இறைவன் எம்மிடம் வருவார் என்றால் அவர் புலித் தோல் அணிந்து, சூலம் ஏந்தி, பிறை அணிந்து, அரவணிந்து, நதி சூடி சடாமுடியோடு வருவார் என்பதல்ல அர்த்தம். அவ்வாறு அவர் எமக்குக் காட்சி கொடுக்க நாம் ஒன்றும் நாயன்மார்களுமல்ல அதற்கு எமது பக்குவமும் போதாது. எனவே எம்மிடம் எப்படி இறைவன் வருவார் என்று சிந்தித்தால் ஏன் ஒரு நண்பனின் வடிவத்தில் அல்லது உறவினரின் வடிவத்தில் வந்து இறைவன் எமக்கு உதவலாம் அல்லவா? உருவங்கள் மாறலாம் ஆனால், எமது இறை நம்பிக்கைக்கு பலன் நிச்சயம் கிடைத்தே தீரும்.

தெய்வ நம்பிக்கையை போதிப்பது சமயம். இதுவே சமயத்தின் ஆரம்பம் சமயம் என்ற சொல்லுக்கு, இறையை வழிபட்டு இன்னருள் பெற இதுவே நல்ல சமயம் (தருணம்) என்று பொருள்படக் கொள்ளலாம் அல்லவா?

மேலும் ஆன்மீக வளர்ச்சிக்கு சமய வேறுபாடு, மொழி வேறுபாடு, என்ற நோக்கின்றி நாம் இறையை வணங்க வேண்டும்.

யார் என்னை எப்படி வழிபடுகின்றார்களோ அப்படியே நான் அவர்களுக்கு அருள் புரிகின்றேன் என்பது கீதையில் கண்ணன் வாக்கு இது நாம் அறியாதது அல்ல.

உலகனைத்திற்கும் தெய்வம் ஒன்றே என்று பறைசாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது திருமந்திரம்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஏனைய மகான்களும் போதித்த உண்மையும் இது தானே!

"ஆரியத் தமிழோடு இசையானவன்" என்று இறைவனைப் பாடுவதன் மூலம் அப்பர் சுவாமிகள் சமயத்தில் மொழி வேறுபாடுகளை நீக்குகின்றார்.

இதே போன்று திருமூல தேவரும்

"பண்டிதர் தங்கள் பதினெட்டு பாஷையும் அண்ட முதலான் அரன் கொள்ளவாறே" எனப் பாடியுள்ளார்.

இந்த வகையில் வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு களித்து வழிபடும் பெருமை எமது சமயத்திற்கு உண்டு என்பதில் நாம் களிப்படைய வேண்டும்.

அதற்கு எமது மட்டத்தில், நாம் என்ன செய்யலாம் என்பதையும் அதனை யாம் செய்கின்றோமோ என்பதையும் சிறிது சிந்தித்துப் பார்க்கவும் வேண்டும், செய்வோமா?

●

## 70. வேதம் காட்டும் வழி

**வே**தத்தை அடிப்படையாகக் கொண்ட சமயங்கள் வைதீக சமயங்கள் எனப்படுகின்றன. வடமொழி தான் வேதங்களுக்கு ஆதாரமாக அமையினும் தமிழ் மக்கள் சமய ரீதியாக வேத நெறியை ஏற்றுக் கொள்ளாமல் இல்லை. தமிழ் மக்களுள் பெரும்பாலானோர் சைவ சமயத்தை மேற்கொண்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் வடமொழி வேதங்களை ஏற்றுக் கொண்டதன் காரணம், சைவத்தின் பல கருத்துக்களுக்கும் வேதங்கள் கூறும் கருத்துக்களுக்கும் பல வகையிலும் பொதுத் தன்மை பரவலாக இருப்பதேயாம்.

வேதங்கள் நான்காக வகுக்கப்பட்டமைக்கும் தக்க காரணங்கள் உண்டு. காரணம், அவை, ஒவ்வொன்றும் மேற் கொண்டிருக்கும் ஆத்மீக முன்னேற்றப் பணிகள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கு வேதம் என்னும் போது அது தெய்வங்களைப் பாடல்களால் துதி செய்யும் சுலோகங்களைப் கொண்டுள் ளது. "ருக்" என்றால் துதித்தல் என்று பொருள்.

"யசுர்" என்னும் போது யாகம் என்று பொருள் அமையும். பெரும் பாலும் யாகம் செய்வது பற்றிய வழி முறைகளை, விளக்கங்களைத் தரும் சுலோகங்களை, இப்பகுதி தன்னிடத்தே கொண்டுள்ளது.

சாமம் என்பது வேதத்தின் மூன்றாவது பிரிவாகும். சாமம் என்ற சொல்லுக்கு இசை என்று பொருள் கொள்ளலாம். சாம வேதப் பகுதியில் உள்ள சுலோகங்கள், இசையுடன் பாடக் கூடிய துதிப் பாடல்களாகவே அமைந்துள்ளன.

அடுத்து அதர்வண வேதம். அதர்வணம் என்பது மாந்திரீ கத்தைக் குறிக்கும் சொல்லாம். மாந்திரீகம் இறைவனின் அருளைப் பெறுவதற்கான நுணுக்கமான செயல் முறை களைக் கொண்டுள்ளன.

வேதத்தின் மிகச் சிறப்பான மூன்று அம்சங்கள் கடவுள், ஆன்மா, உலகம் என்னும் மூன்றுமாம். சைவ சமயமும் பதி, பசு, பாசம் என்னும் வகையில் இம்மூன்றையும் உண் மைப் பொருளாகக் கொண்டுள்ளது. இதையே சைவ சித்தாந்தமும் சொல்லியுள்ளது.

வேதத்தின் பல பெயர்களுள் ஒன்றான "அபௌர்ஷேயம்" என்பதிலிருந்து வேதம் மனிதர்களால் உருவாக்கப்படாதது என்பதை யாம் அறிய முடிகின்றது.

வேதத்தின் முக்கிய பகுதி மந்திரங்கள். மந்திரம் இல்லாத பூசைகள் இன்று எம் ஆலயங்களில் இல்லை.

மந்திரங்களை மனிதன் பயன்படுத்த நேர்ந்த சந்தர்ப்பமே ஒரு அலாதி தான்.

ஆரம்பத்தில் மனிதனால் இயற்கை அம்சங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று என்பவற்றை புரிந்து கொள்ள முடிய வில்லை. எனவே இயற்கையின் செயற்பாடுகளும் மாற்றங் களும் தெய்வ அம்சம் பொருந்தியவை என்பதை மனிதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பினான். இந்த நோக்கில் இவற்றை வழிபடவும் செய்தான். இயற்கையின் சீற்றங்களான இடி, மின்னல், முழக்கம், மேகங்கள், கடல் ஆகியவற்றைத் தெய்வங்களே இயக்கு கின்றன என்பது ஆதி மனிதனின் அசையாத நம்பிக்கை.

தவறு செய்வோரை இடி, முழக்கம், பெருமழை ஆகிய வற்றால் தெய்வங்கள் தண்டிக்கின்றன என்றும் மனிதன் முடிவு செய்தான்.

இந்த நிலையில் தெய்வங்களை சினம் அடையாமல் அவர்களை அமைதிப்படுத்தித் தம்மை காப்பாற்றிக் கொள்ள மனிதன் மேற்கொண்ட முயற்சி தான் இந்த மந்திரங்கள்.

மனிதன் தெய்வங்களின் மனம் குளிர, அவர்களைப் போற்றிப் புகழ்ந்து துதி செய்தான். இதனால் அவற்றின் ஆவேசம் குறையும் எனவும் நம்பினான். தொடர்ந்து இத் தெய்வங்க ளுக்கு காணிக்கை செலுத்தினால் அவர்களைச் சாந்தப்படுத்தலாம் என முடிவும் செய்தான். தெய்வங்களுக்கும் மனிதனுக்கும் தான், நேரடித் தொடர்பு இல்லையே. எனவே அக்கினி மூலம் இக்காணிக்கைகளைச் செலுத்த மனிதன் முயற்சித்த போது தான் யாகங்கள் செய்யும் வழிமுறை ஆரம்பமானது. மனிதனது ஒவ்வொரு செயலையும் தெய்வம் எப்போதும் கண்காணித்து வருகின்றது, என்றும், அன்றைய மனிதன் நம்பினான். ஏன் இன்றும் நாம் இக் கருத்தினை ஏற்கத்தானே செய்கிறோம் !

இந்த கண்காணிப்புப் பணியை வருணன் மேற்கொண்டிருப் பதாகவும் சூரியனே அவனது கண் எனவும் மனிதன் ஏற்றுக் கொண்டான். தம் தவறுகளை மன்னிக்குமாறு தெய்வங்களை இறைஞ்சிக் கேட்க மனிதனுக்கு மந்திரங்கள் பயன்பட்டன. வேத காலத்தில் பல தெய்வங்கள் பற்றிக் குறிப்பிட்டுள் ளன. அன்றிலிருந்து பல தெய்வ வழிபாடு தோன்றலாயிற்று. இந்நிலையில் தெய்வம் ஒன்று அதனையே அறிஞர்கள் பல்வேறு பெயரால் குறிக்கின்றனர். "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" என்னும் ஸ்லோகமும் வேதத்தில் உண்டு.

எது எப்படியிருப்பினும் புரிந்தோ, புரியாமலோ தெரிந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமலோ இவற்றின் பிரதிபலிப்பு சற்று முன்னேற்றத்துடன் எம்மிடையே நிலவி வருதல் கண் கூடு. எப்படிப் பார்த்தாலும் எமக்கு மேலே ஒரு தர்ம சக்தி உள்ளது என்று நம்புகின்றோம் அல்லவா. எனவே அவ்வுயர், சக்திக்கு பயந்து பணிந்து நியாயமாக நாம் ஒவ்வொருவரும் நடப்போமானால் அது அல்லவா மெய்ச் சமயம். இல்லையா?

## 71. பக்தி

**ப**க்தி என்பதும் ஒருவகை அன்பு தான். இறைவனிடத்து நாம் வைக்கும் அன்பு தான் பக்தி. பக்தி கொண்டு இறைவனை வழிபடவும் இறைவன் தான் எமக்கு அருள் புரியவேண்டும். "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்கின்றது திருவாசகம்.

பக்தியின் வெளிப்பாடு "வழிபாடு செய்தல்" ஆகும். எல்லா மதங்களுமே வழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. வழிபடும் நேரம், காலம், முறைகள், சடங்குகள், கிரியைகள் எல்லாமே மதத்துக்கு மதம் வித்தியாசப்பட்டாலும் நோக்கம் என்னவோ ஒன்று தான். மனிதனாகப் பிறவி எடுத்த ஒவ்வொரு வரும் ஆண்டவனை வணங்கி நல்லன செய்து நற்பேறு அடைய வேண்டும், என்பது சகல மதங்களினதும் பொது நோக்கம் ஆகும்.

எமது நோக்கம் ஒரு புறமிருக்கட்டும். இனி இறைவனின் எதிர்பார்ப்பு எப்படி என்று பார்ப்போம். இறைவன் எதை விரும்புகின்றான் என்று பார்ப்போம். இறைவனுக்குத் தான், விருப்பு வெறுப்பு இல்லையே பின்னர் என்ன இறைவன் விரும்புவது என்று நீங்கள் கேட்கலாம். உண்மை தான்.

ஆனால் ஆண்டவனது அதிகமான ஈடுபாடு எதனை நாடு கின்றது என்பதை மெய்யடியார்கள் வரலாறுகள் கூறியுள்ளன. அதனை என்ன என்று பார்ப்போமே.

இதனை விவரிக்க நான் உங்களுக்கு ஒரு குட்டிக் கதை சொல்வேன்.

ஒரு ஊரிலே ஒரு செல்வந்தர் இருந்தார். அவருக்கு 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவிகள். கொஞ்சம் கஷ்டம் தான் ஆனால் நிரம்ப செல்வமும், வளமும், பொறுமையும் விவேகமும் அவரிடம் இருந்தபடியால் அவர் ஏதோ சமாளித்து வாழ்க்கையை நடாத்திச் சென்றார். ஒரு முறை அவர் தனது வியாபார நோக்கமாக வெளிநாடு சென்றார். அங்கிருந்து திரும்பி வருமுன்னர் தனது மனைவிமாருக்கு கடிதம் எழுதினார். உங்களுக்கு விருப்பமான பொருட்கள் என்ன என்ன வேண்டும் என்று எழுதுங்கள் என்று. அப்போது தொலைபேசி வசதிகள் இல்லை. கடிதம் தான் அவருக்கு கை கொடுத்தது. அவரது மனைவிமாரிட மிருந்து பதில்களும் வந்தன. நான்காவது மனைவி எழுதியிருந்தாள் எனக்கு புதுப் புடவைகளும் புது டிசைனில் ஆபரணங்களும் வாங்கி வாருங்கள் என்று. மூன்றாவது மனைவி எழுதியிருந்தாள் எனக்கு நேரம் போகுதில்லை. வாசிக்க நல்ல புத்தங்கள் நாவல்கள் வாங்கி வாருங்கள் என்று. இரண்டாவது மனைவி எழுதியிருந்தாள் உங்களுக்குத் தான் தெரியுமே நான் ஒரு நோயாளி என்று இங்கு கிடைக்காத நல்ல மருந்துகள் அங்கு இருந்தால் வாங்கி வாருங்கள் காத்திருப்பேன் என்று. முதல் மனைவி எழுதிருந்தாள் எனக்குப் பொருள் ஒன்றும் வேண்டாம் நீங்கள் சுகமாக வந்து சேருங்கள். எப்போதும் உங்கள் நினைவாக இருக்கின்றேன் என்று.

மனைவிமார் வேண்டிய பொருட்களை எல்லாம் வாங்கிக் கொண்டு ஊர் திரும்பினார் அந்த செல்வந்தர். தான் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் அவரவரிடம் கொடுத்து விட்டு சுயநலமற்ற அன்பைத் தன்மேல் காட்டிய தன் முதல் மனைவியோடு மன நிறைவோடு தங்கி வாழ்ந்தார் அச் செல்வந்தர்.

இதே போன்று தான் இறைவனும் தன் மேல் பக்தி கொண்டு, வேண்டும் அடியார்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுத்தாலும், அவர் விரும்பி உறைவது தன்னலமற்ற பக்தி கொண்ட நெஞ்சங்களிலே தான்.

நாமும் ஈசனை அசத்திய அடியார்களைப் பின்பற்றி, அவன் இன்னருள் பெறுவோமா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72. எமது மதம்

எமது மதமான இந்து மதத்தின் சிறப்பே அதன் தொன்மையில் அடங்கியுள்ளது. பழமையே அதன் சிறப்பு வைதீக தர்மமே அதன் அத்திவாரம். சிந்து நதிப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இந்துக்கள் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் கடைப்பிடித்த மதம் இந்து மதம் ஆயிற்று. தனி மனிதன் ஒருவனால் தோற்றுவிக்கப்படாது இறைவனால் தோற்று விக்கப்பட்ட நெறிப்படுத்தப்பட்ட ஒரு மதம் என்பது எமது மதத்தின் நெறிப்படுத்தப்பட்ட பெருமையாகும்.

மதம் என்று சொல்லும் போது, அதன் முதற்படி வழிபாடு, ஒழுக்கம், நெறி என்பனவாம். இறைவழிபாடு ஆறறிவு படைத்த மனிதனோடு தோன்றி வளாந்து வரும் ஒன்றாகும். இது மந்திரஜெபம், வேள்வி, தவம், தியானம் என ஆரம்பித்து அபிஷேகம் அர்ச்சனை, அலங்காரம், நேர்த்தி, நிவேதனம் தோத்திரம் பஜன் என வளர்ந்து வந்துள்ளமை கண்கூடு.

இறைவழிபாடு தினமும் யாம் செய்ய வேண்டிய ஒன்றா கும். இன்று நேரமில்லை நாளை பார்ப்போம் என்று விடும் விஷயமல்ல இது. சிறிது நேரம் இறைவனை வழிபடும் போது அகமும் புறமும் அமைதியாக அமைதல் அவசியம். வீட்டிலே இத்தகைய அமைதியை உருவாக்குவது சிரமம் தான். இருப்பினும் தினமும் மலர் கொய்து இறைவனுக்கு சாற்றி தீபமேற்றி தூபமிட்டு இசையை விரும்பும் இறை வனுக்குக் ஒரு தோத்திரம் தன்னும் நாம் தினமும் பாடி வழிபட வேண்டியது எமது அன்றாட கடமைகளில் முக்கிய மானது. நாளும் நாம் கடைப்பிடிக்க வேண்டியது இறை நாம ஜபம் ஆகும். தினமும் நாம் வீட்டில் செய்யும் வழிபாட் டோடு வாரந்தோறும் திருக்கோயில் வழிபாடும் செய்தல் நன்று.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று அறியாமலா சொன்னார்கள்.

ஆலயத்திலே நாம் செய்ய வேண்டியது, வழிபாடு ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே. வழிபட என ஆலயம் சென்று அங்கு தெரிந்தவர் களைக் கண்டதும் அவர்களோடு பேசி, தவப் பொழுதைத் அவப் பொழுதாக்குதல் வேண்டாத ஒரு செயலாகும்.

கண்ணைக் கவரும் உடைகளும் பகட்டான அலங்காரங் களும் பக்தி நெறிக்குப் புறம்பானவை. எமது தூய பக்தி எம்மை அழகுபடுத்தினால் போதுமானது. நாம் அர்ச்சிக்கும் பூக்களும், பாக்களுமே ஆண்டவனை அழகுபடுத்தப் போதுமானவை. பக்தி மேலீட்டினால் நாம் விடும் கண்ணீரே, இறைவனுக்கு நாம் செய்யும் அபிஷேகமாகும்.

எமக்கென ஒன்றும் கேளாது உலக நலத்தை யாம் வேண்டுவதே இறைவழிபாட்டில் நாம் வேண்டற்பாலது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற வாக்கிற்கிணங்க மற்றோருக்கு இம்சை செய்யாதிருப்பதும் நல்ல தொண்டென லாம். தொடர்ந்து நாம் நல்லவற்றைச் தினமும் செய்து வர எமது பழ வினைகள் பலமிழக்கும். ஞானம் பிறக்கும். இது இறைவன் அருளின் பின்னணியில் இடம் பெறுகின்றது. இதையே மணிவாசகப் பெருமான் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" எனப் பாடியுள்ளார்.

இறைவனை நம்புவது, இறைவனை தியானிப்பது இறை யுண்மைகளைப் பரப்புவது, எல்லோரையும் நன்னெறியில் இட்டுச் செய்வது, உயிர்களைக் கொல்லாதிருப்பது, இவை யாவும் இறை பணியே ஆகும்.

திருக் கோயில் செல்லும் முன் நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து, வெண்ணீறணிந்து புறத் தூய்மையுடனும் செல்லல் வேண்டும். திருநீறு அணிந்து ஐந்தெழுத்தை ஓத வேண்டும்.

அண்டம் எங்கும் வீற்றிருக்கும் ஆண்டவன் எம்முள்ளும் வீற்றிருக்கின்றான். உயிர்களில் கொண்ட கருணையினால் ஆலயங்களிலும் வீற்றிருக்கின்றான். இதனால் தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என எம் முன்னோர் கூறிப் போந்தனர்.

ஆலய வழிபாட்டின் போது முதலிலே ஸ்தூல லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றழைக்கப்படும் கோயிற் கோபுரத்தை வணங்க வேண்டும். ராஜ கோபுரத்தைத் தாண்டிச் சென்று எமது கீழான இயல்பு களைப் பலியிடும் வகையில் பலிபீடத்தை வணங்கிய பின் மூர்த்தியை வணங்க வேண்டும். கொடித் தம்பத்தின் அருகே இருக்கும் நந்தி வாகனம் மூலஸ்தானத்தைப் பார்த்த வண்ண மிருப்பதை அவதானிக்கலாம். இறையை அடைய சர்வ காலமும் எமது சிந்தனை இறை நாட்டத்திலேயே இருக்க வேண்டும். என்பதையே இது புலப்படுத்துகின்றது.

கோயிலுக்குச் செல்லும் போது வெறுங்கையோடு செல்லல் ஆகாது என்பது ஐதீகம் எனவே ஆலயத்துக்கு நாம் எடுத்துச் செல்லும் பொருள் ஆலய வழிபாட்டிற்கு உகந்ததாக அமைதல் அவசியம்.

மூர்த்தியை, அம்பாளை, பரிவார தெய்வங்களை வழிபட்ட பின் சண்டேஸ்வரப் பெருமானை இரு கரங்களையும் கை தட்டி வணங்குதல் முறை என ஒரு விளக்கம் உண்டு.

தொடர்ந்து வைரவரை வணங்கி நவக்கிரக வழிபாடு செய்த பின் தியான மண்டபத்தில் அமர்ந்து சிறிது நேரம் தன்னும் தியானம் செய்த பின் இல்லம் திரும்புதல் முறையாகும்.

எனவே, எத்துணை கடமைகள் எமக்கிருப்பினும் இறை வழிப்பாட்டை எமது அன்றாட வாழ்வில் தவறாது சிறிது நேரம் தன்னும் செய்து, இம்மையில் இன்னருள் பெற்றுய்ய, யாம் திட சங்கற்பம் எடுத்தல் அவசியம். எடுப்போமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 73. கலியுகத்திற்கு உய்வைத் தருபவை

கலியுகத்திற்குரிய அவதாரம் முடிவடையும் காலம், யாதவ குலமே அழிய ஆரம்பிக்கின்றது. மக்கள் தீய கனவுகளைக் காண்கின்றார்கள். அவர்களுடைய கனவிலே கண்ணபிரானுடைய ஒளிமயமான சக்கரம் யாதவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே விண்ணில் சென்று மறைகின்றது. கிருஷ்ணனுடைய தேரை அவருடைய குதிரைகள் இழுத்துக் கொண்டு சமுத்திரத்தை நோக்கிச் செல்கின்றன. யாதவர்கள் கடல் ஓரத்தில் முளைத்திருக்கும் கோரைப் புற்களைப் பிடுங்க அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரும்பு உலக்கைகளாக மாறுகின்றன. அவர்கள் அவற்றை எடுத்துக் கொண்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு அழிகின்றார்கள்.

கிருஷ்ணர் இந்த அழிவைப் பார்க்கின்றார். இவை இவ்வண்ணம் நடக்க வேண்டியவை என புரிகின்றது. கருதி கொள்வதின் ஒரு பக்கத்தே பலராமர் கண்ணபிரானை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றார். கிருஷ்ணர் வந்ததும் யோகம் செய்கின்ற பலராமருடைய முகத்திலிருந்து வெண்மையான 1000 ஒளி நாகம் வெளிப்படுகிறது. மலை போன்ற ஆத சேஷன் என்னும் நாகம் கடலில் பிரவேசிக்கிறது. ஆதிசேஷனை நாகங்கள் நல்வரவு கூறி வரவேற்கின்றன. அவருடைய அவதாரம் முடிவெய்துகிறது. கிருஷ்ணர் அதன்பின் ஒரு மரத்தடியில் அமர்கிறார். வைகுந்தம் செல்லத் திருவுளம் கொண்டு யோக நிலையில் ஆழ்கிறார்.

அப்போது முனிவர்கள், சித்தர்கள் முதலிய பெரியவர்கள் ஸ்ரீ கிருஷ்னரை நோக்கி வந்து வணங்கி "பகவானே! நீங்கள் எங்கள் எல்லோரையும் விட்டு வைகுந்தம் செல்லுகின்றீர்கள். இனி வரவிருக்கும் கலியுகத்தில், வெம்மையான அந்த யுகத்தில், உம்மை விட்டால் எமக்கு உய்வு ஏது?" என்றார்.

அதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் பின்வருமாறு கூறியரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளினார். "முனிவர்களே! நீவிர் வருந்த வேண்டாம். கொடிய தான கலியுகத்தில் உங்களுக்கு 5 பொருட்கள் உய்வைத் தரும் அவற்றை இடைவிடாது தினமும் பூசித்து நன்மை அடையுங்கள்" ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களைத் தேற்றி உபதேசித்து அனுப்புகிறார்.

அப்பொருள்கள் ஆவன 1) சந்திரனைச் சடையில் தரித்த சிவபெருமானுடைய திருவடிக் கமலங்கள் 2) அத் திருவடியைப் பூசிக்க நீர் 3) அர்ச்சிக்க மலர் 4) சிந்திக்க திரு ஐந்தெழுத்து 5) பூசிக்கொள்ளத் திரு வெண்ணீறு.

இந்த ஐந்து சாதனங்களும் கலியுகத்தில் எவர்க்கும் துணை நிற்கும் எனக் கூறி கிருஷ்ண பகவான் தனது அவதாரத்தை முடித்துக் கொள்கிறார்.

**"திங்கள் கண்ணிப் பூத்தேள் சேவடிக்கமலம் உண்டு**
**கொங்கவிழ் மலரும் உண்டு**
**குளிர் தரு புனலும் உண்டு**
**தங்கும் அஞ்செழுத்தும் உண்டு**
**தவள வெண்ணீறுமுண்டு**
**வெங்கலிக்கு உடைவதெனனே**
**வெளிற்று அறிவு உடையரே போல";** என்றது பாடல்.

எனவே, சைவ சமயத்தின் முழு முதலான சிவ பெருமானை நாடி தினமும் துதிப்போம்! அவனருளாலே அவன் தாழ் வணங்கி' சிந்தை மகிழ்வோம். மலரிட்டு அர்ச்சிப்போம் சாம கானப் பிரியனான சிவனை பண்பாடித் துதிப்போம். சுகந்தம் மிகு தூப தீபம் காட்டிப் பூசிப்போம். இதையே தான் அப்பர் சுவாமிகளும் "சலம் பூவோடு தூபம் மறந்தறி யேன் தமிழோடு இசை பாடல் மறந்தியேன்" எனப் பாடிய ருளினார்.

சிவனுக்கு உரிய திரு ஐந்தெழுத்தை ஓதுதல் நன்மை பயக்கும். ஆனால் எந்நேரமும் அதை நாம் ஓதுதல் என்பது சாத்தியமானதன்று. எனவே காலையிலும் மாலையிலும் விபூதி அணியும் போது தன்னும் நாம் மறவாது திருஐந்தெழுத்தை ஓதுவோம். எமது குழந்தைகளுக்கு விபூதி இட்டு விடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அந்த மந்திரத்தை உச்சரித்து இடுவோம். நாள் தோறும் இம்மந்திரம் அவர்கள் செவி வழி புகுந்து மனதிலே பதியட்டும். நெற்றியிலும் நாவிலும் இலட்சுமி கரம் துலங்கட் டும் தீமைகள் அகல நன்மைகள் எம்மை அடையட்டும். அகத்தும் புறத்தும் சைவ மணம் கமழட்டும். நாம் சமய பழக்க வழக்கங்களை குறைத்து எடை போடக் கூடாது.

சில பெற்றோர்களுடைய அசிரத்தையாலே பிள்ளைகள் எழுத ஆரம்பிக்கும் போது பிள்ளையார் சுழி போடும் வழக்கத்தையே மறந்து விட்டார்கள். பிள்ளையார் சுழி என் றால் என்ன என்கிறார்கள். இதில் எமக்கு நம்பிக்கையில்லை என்று பதில் கூறுகின்றார்கள். கேட்க மனதில் பகீர் என்கிறது. இந்நிலை தொடர வேண்டுமா? வேண்டாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பெரியோர்கள் தங்கள் குழந்தைகட்கு, சமய உண்மைகளை நம்பிக்கைகளை அவர்கள் மனதில் பதியுமாறு எடுத்துக் கூறுங்கள். அவர்களை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். அவர்களுக்கு அங்கு என்ன புரியப் போகிறது என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். அவர்களுக்குத் தான், புரிய வேண்டியவை அங்கு நிறைய உண்டு. அவர்கள் மனதிலே தான், சமய நம்பிக்கை, சமய பழக்கங்கள் என்னும் விதைகள் விதைக்கப்பட வேண்டும். இதனால், வீட்டிலே சமய நம்பிக்கை வளரும். நாட்டிலே அது பிரதிபலிக்கும். தீயது செய்ய மனம் அஞ்சும். தர்மம் செய்ய மனம் தூண்டும். மேன்மை கொள் சைவ நீதி உலகெமெல்லாம் விளங்கும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 74. அன்பும் மதங்களும்

அன்பு என்பது இன்பமானது, ஈரமானது, மனதுக்கு இதமானது. அன்பை ஒருவரோடு பகிரும் போது அது பெருகும். அன்பை ஒருவருக்கு நாம் காட்டும் போது அன்பைக் காட்டுபவரும் மகிழ்ச்சி அடைகின்றார். அன்பை பெறுபவரும் இன்பம் அடைகின்றார். அத்தகைய சிறப்பும் தனித்துவமும் கொண்ட அன்பு தெய்வீகமானது. அதன் சிறப்பு சொல்லில் அடங்காது. அன்பே சிவம்

மேலும், மதங்கள், மார்க்கங்கள், சமயங்கள் என்று சொல்லப்படுகின்ற போது மதம் எதுவாக இருந்தாலும், அவை யாவும் அன்பின் வழி அமையப் பெற்றவையே. இந்து மதத்தை எடுத்துக் கொண்டால், அன்பே சிவம்' என்கிறது சைவம். உயிர்கள் மேல் அன்பு காட்டும் அஹிம்சை, ஜீவகாருண்யம் ஆகியவற்றை வலியுறுத்துகின் றது, பௌத்தம். ஈ எறும்பு போன்ற சின்னஞ் சிறு உயிரி னங்களை மிதித்தல் கூட பாவ காரியம் என்கிறது சமணம். உயிர்கள் மேல் கொண்ட அன்பின் காரணமாக அவர்களது பாவத்தை, சிலுவை வடிவில் சுமந்தது கிறிஸ்தவம். சமண சமயத்தின் உயிர்மூச்சே அன்பு தான். நிம்மதிக்காக ஒரு ஆட்டுக் குட்டியின் சந்தோஷத்திற்காக, பிம்பிசார மன்னனோடு வாதாடியவர் புத்தர் பிரான். தாய் ஆட்டைப் பிரிந்து தாயப் பாசத்துக்காக ஏங்கிய ஆட்டுக்குட்டி ஒன்றை சந்திக்கின்றார் புத்த பிரான். பிம்பிசார மன்னன், அக்குட்டியின் தாய் ஆட்டை பலி கொடுக்க தயார் செய்வதை அறிகின்றார் அவர். பல நியாயங்களை எடுத்துக்காட்டி, தாய் ஆட்டை பலியிடுவதிலி ருந்து காப்பாற்றி தாயையும், சேயையும் ஒன்று சேர்த்து வைக்கின்றார். இது அன்பின் சிகரம். அன்பு பற்றி திருமூலர் கூறுகையில் அன்பும் சிவமும் ஒன்று தான் என்கின்றார். இறைவன், உயிர்களிடத்தில் கொண்ட கருணை காரணமாக புரிந்த திருவிளையாடல்கள் பல. தாய்ப்பன்றி ஒன்று இறந்து போக, அதன் குட்டிகள் பட்ட துயரைக் கண்டு, எம்பெருமானே தாய்ப்பன்றி வடிவமெடுத்து அக்குட்டிகளுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலூட்டி அவர்களைக் காப்பாற்றிய வரலாறு யாம் அறிந்ததே.

இந்த வகையில் மதங்கள் எல்லாம் அன்பை அடிப்படை யாக வைத்து தமது செயற்பாடுகளை அமைத்து எமக்கு வழிகாட்டி வருகின்றன.

இனி வள்ளுவர் அன்பின் அவசியம் பற்றி வலியுறுத்தும் விதத்தை நோக்குவோம்.

"அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்
என்பு தோல் போர்த்த உடம்பு"

என்ற இந்த ஒரு குறளே போதும் மனித வாழ்வில் அன்பின் அவசியத்தை தெளிவாக எடுத்துக் காட்டுவதற்கு. மனிதன் ஒருவனிடம் அன்பு காட்டும் சக்தி இல்லையேல் அவன் மனிதன் அல்லன் அவன் வெறும் தோலால் போர்க்கப் பெற்ற ஒரு எலும்புக் கூடு என்கின்றது இக் குறட்பா.

அன்புடையவர்கள் எல்லோர்க்குமே உரியவர்கள் அன்பு என்பது நெஞ்சத்தில் இல்லாதவர் தமக்கும் உதவார் பிறர்க்கும் உதவார்.

இறைவனிடத்திலே இருக்கும் அன்பு தான் மனிதனிடத்தில் அன்பாகப் பரிணமிக்கின்றது. அன்பு பக்தி ஆகின்றது. தாயின் அன்பு இல்லாதவர் வாழ்வில் இன்பத்திற்கு இடம் ஏது.? அவர்கள் வாழ்வு சோபிக்காது. கருணையும் அன்பும் இரக்கமும் ஒருவனது வாழ்க்கையின் அத்திவாரமாக அமைய வேண்டும். அவையே அணிகலன்களாகவும் துலங்க வேண்டும்.

எனவே, மதங்களை, மார்க்கங்களை, சமயங்களை, பெரு மதிப்போடு நோக்கும் நாம், அன்பின் வழி நடக்க முயல வேண்டும். நடந்து காட்டவும் வேண்டும். இதுவே உண்மை. வாழ்வுக்கு வெற்றி தரும் வழி இது. முயன்று பார்ப்போமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 75. அன்பை எங்கு செலுத்துவது?

பரமேஸ்வரனுக்கு பசுபதி என்றும் ஒரு பெயர் உண்டு. இங்கு பசு என்பது ஆன்மாக்களையும் பதி என்பது இறைவனையும் குறிக்கின்றது. இலை குழைகளை பசுமையாகக் கண்ட இடங்கள் எல்லாம் பசு மேய்வதற்கு ஓடுவது போல் நாமும் பௌதீக விடயங்களை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றோம். பசுவின் சொந்தக்காரன் பசுவை எங்கும் ஓடிவிடாது கட்டிவைத்திருப்பது போல் இறைவனும் எம்மைக் கட்டிப் போட்டிருக்கின்றான்.

ஆனால் இந்தக் கட்டு எமக்குத் தெரிவதில்லை. எம்மால் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய கட்டும் அல்ல இது. நாம் ஒரு காரியத்துக்காக எத்தனையோ முயற்சி செய்கின்றோம். காரியம் பலிதமாகவில்லை என்றால் என்ன சொல்கின்றோம்? எவ்வளவோ முயன்று விட்டேன் ஆனால் காரியம் இன்னும் சித்திக்கவில்லை எல்லாம் கர்ம பந்தம் என்று, கூறுகின்றோம். சமாதானம் சொல்லிக் கொள்கின்றோம். இந்தப் பந்தம் தான் இறைவன் எம்மைக் கட்டிப் போடும் கட்டுகள். நாம் முன்பு செய்த பூர்வகர்மாவினால் எம்மை இறைவன் கட்டிப் போட்டுள்ளார். அதன்படி எமது கருமங்கள் நடந்தேறும் இதுதான் உண்மை. உண்மையிலும் உண்மை.

கயிற்றால் கட்டப்பட்ட பசுவுக்கு, தன் எஜமான்மேல் கோபம் வரத்தான் செய்யும். ஆனால் அதை அவிழ்த்து விட்டால் என்ன நடக்கும். ஓடிச் சென்று அயல் தோட்டத்துள் புகுந்து மேய்ந்து தோட்டக்காரனிடம் மொத்து மொத்து என்று வாங்கிக் கட்டும் அந்த பசு.

இதேபோன்றது தான் எமது நிலையும். எம்மையும் முன் வினை என்ற கர்மத்தினால் இறைவன் போட்டுக்கட்டா விட்டால் எம் கதி அதோ கதிதான். தோல்வி துன்பம் என்ற ஒன்றுமே இல்லாமல் நாம் போடுகின்ற திட்டங்களுக்கும் ஆசைகளுக்கும் ஒரு முடிவே இராது. துன்பங்கள் தோல்விகள் எமக்கு ஏற்படுவதால் தான் நாம் இது தான் எமக்கு பொசிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிறிதளவு தன்னும் சிந்தித்து, சிறிது தன்னும் திருப்தி அடைய முடிகின்றது. இந்த நிலையும் இல்லையேல் எமது நிலையைக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது.

எமது சகல ஆசைகளையும் செயற்படுத்துவதற்கு முடியாத படிதான் எம்மைக் கர்மாவால் கட்டிப் போட்டுள்ளார் இறைவன்.

பசுவைக் கட்டிப்போடாவிட்டால் அது அயலவனது தோட்டத்துப் பயிரை அழிப்பதோடு தானும் அடி வாங்குகின்றது. அதே போன்று தான் நாமும் எமக்கு பந்தம் எனும் தளை இல்லையேல் நாம் எம்மையும் கெடுப்பதோடில்லாமல் உலகத்தையும் கெடுத்து விடுவோம். கர்மத்தால் கட்டுப்படுவதால் தான் நாம் எப்போதாவது தன்னும் இறைவனைச் சிந்திக்க முனைகின்றோம்.

ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் எமக்கும் பாவம் சேர்க்காமல் இருக்கும் பக்குவம் எமக்குக் கிடைக்கும் போது தான், இறைவன் எமது தளையை அவிழ்த்து விடுவார்.

இந்தக் கட்டு உள்ள வரையில் தான் நாம் வேறு சுவாமி வேறு, என்று பூசை எல்லாம் செய்கின்றோம். எப்போது எமது கட்டு அவிழ்க்கப்பட்டு விடுகின்றதோ அன்றே, நாமே அவன் என்று உணர்ந்து எம்முள் இறைவனைக் காணும் பக்குவம் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றோம். ஆசைகள் அகலும் போது கட்டும் அவிழ்கின்றது.

இதற்கெல்லாம் பரிகாரமாக ஈஸ்வரனில் அன்பு வைத்து விட்டால் ஆனந்தம் தான், அதுவும் பேரானந்தம் தான்.

அன்பு செலுத்துவதில் உள்ள ஆனந்தம் வேறொன்றிலும் இல்லை. ஆனால் அந்த அன்பு யாரிடம் செலுத்தப்படுகின்றது என்பது முக்கியமானது. நாம் யாரிடம் அன்பு வைத்தாலும் என்றோ ஒரு நாள் அவரைப் பிரியும் போது எமது மகிழ்ச்சி அகன்று எமக்குத் துன்பம் ஏற்படுகின்றது. அந்த அன்பு அத்தனையும் அழுகையாக மாறி விடுகின்றது. எனவே நாம் வைக்கும் அன்பை என்றுமே எம்மை விட்டுப் பிரியாத சாஸ்வதமான இறைவனிடம் வைத்து விட்டால் அந்த அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு என்றும் நிலையான ஆனந்தத்தை தந்து கொண்டிருக்கும். இந்த அன்பு முற்றுப் பெறும் போது எல்லாமே ஈஸ்வரனாக எமக்குத் தெரியவரும். அப்போது, ஈஸ்வரனின் கல்யாண குணங்களை யாமும் பெறும் நிலை எம்மை எட்டும்.

இதுவே எமது சமயத்தின் இலட்சியம்

**அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவம் ஆவது யாரும் அறிந்திலார்**
**அன்பே சிவமாய் ஆவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே**

என்கிறது திருமந்திரம்.

## 76. அக்னி பகவான்

இந்து மதம் பஞ்ச பூதங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அகிலமே பஞ்ச பூதங்களால் ஆனது. ஏன் எமது உடலே பஞ்ச பூதங்களால் தான் ஆனது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பனவே பஞ்ச பூதங்கள் எனப்படும். பஞ்ச பூத தலங்கள் என ஒவ்வொன்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தலங்கள் தமிழ் நாட்டிலே உள்ளன. அவற்றை நோக்கின் அக்கினிக்கு திருவண்ணாமலையும், ஆகாயத்திற்கு சிதம்பரமும், நீருக்கு திருவானைக்காவும், காற்றுக்கு திருக்காளகஸ்தியும் நிலத்துக்குக் காஞ்சியும் ஆக பஞ்ச பூத தலங்கள் அமைந்துள்ளன.

பஞ்ச பூதங்களில், அக்னி பற்றி இன்று நோக்குவோம். அக்னியின் வடிவம் பல. ஒளி, சுடர், நெருப்பு எனக் கூறலாம். அதன் சுபாவம் வெப்பம். தேவர்களுள் ஒருவராக அக்னி பகவான் போற்றப்படுகின்றார்.

அக்னியின் அழகினை, அடுக்குத் தீபங்களின் சுடரில் காணலாம். ஆண்டவன் வீதி உலா வரும் போது ஒளிப் பிழம்பை உமிழ்ந்த வண்ணம் தோன்றும் தீப வரிசைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம்.

ஆராதனைகளில் தீப ஆராதனைக்கு முதலிடம் உண்டு. அங்கு தீபங்களின் ஒளி மிளிரும்.

ஆலயத்தின் வாசலிலும் தீப வரிசைகள் காணப்படும். அணையா விளக்காக ஆலயத்தின் கருவறையில் ஒரு தீபம் எரிந்து கொண்டிருக்கும்.

இறைவன் தீபத்தில் தோன்றுவான். கார்த்திகை தீபமன்று அண்ணாமலையில் ஒளிப்பிளம்பாக இறைவன் தோன்றினான். தீபாவளியன்றும் லட்ச தீபம் ஏற்றுதல் மரபு. இந்த வகையில் பரம்பொருளின் வடிவமாக தீபத்தைப் பார்க்கிறது, தர்ம சாஸ்திரம். அடுத்து ஆதவன்.

ஆதவன் அகில உலகத்தினதும் தீபம் ஆகின்றான். முதலில் கல்லில் ஒளியைக் கண்டான் மனிதன். வன்னி மரத்தைக் கடைந்து வெளிவந்த அக்னியை எம் முன்னோர் வேள்விக்குப் பயன்படுத்தினார்கள். கல்லிலும் மரத்திலும் அக்னி ஒளிந் திருத்தல் கண் கூடு.

அக்னியை அறிமுகம் செய்ததே மெஞ்ஞானம் தான். காணும் பொருட்களில் ஊடுருவி இருப்பவன் அக்னி பகவான். பரம் பொருளும் அவ் வண்ணமே. படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை அவன் பணிகள். அக்னிக்கும் இது பொருந்தும்.

அணையாத தீபமும் அணையாத அடுப்பும் இல்லத்துக்கு இலக்கணம். இல்லத்துக்கு அழகு தருபவள் இல்லாள். இல்லாளையே இல்லம் என்கிறது. தர்ம சாஸ்திரம்.

வள்ளலாரை நினைத்தால் அருட் பெரும் ஜோதி தனிப் பெரும் கருணையாக எம் மனக் கண்முன் தோன்றுவான் ஈசன்.

புதுமனை புகுவிழாவின் போதும் முதலில் தீபத்தை முன் எடுத்துச் செல்ல வேண்டும். இல்லம் ஒளியால் நிரம்ப வேண்டும். திருமணத்தின் போதும் அக்னி ஓம்பி சடங்குகளை வேதியர் ஆற்றுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலும் தாழ்விலும் அக்னியே எமக்குத் துணை நிற்கின்றது.

இறந்தவர் தலை மாட்டிலும் ஒரு தீபம் எரியும். கடைசிப் பயணத்தின் போதும் அக்னிமுன் செல்ல பேரக் குழந்தைகள் நெய்ப்பந்தம் ஏந்தி நிற்பர்.

மறு உலகத்தை நோக்கிப் பயணிக்கும் உயிருக்கு வழி காட்ட தீப தானத்தைப் சாஸ்திர நூல்கள் பரிந்துரைக்கின்றன. பூத உடல் அக்னியோடு இணைந்து மறைந்து விடும். அவனுக்காக பின்னர் ஏற்றும் தீபம் மோட்ச தீபம் எனப்படும்.

திருமணத்தின் போது பொரி போட்டு வளர்த்த அக்னி வாழ் நாள் முழுவதும் அவர்களோடு கூட இருந்து அவர்கள் உயிர் நீத்த பின்னும் அவர்களது பூத உடலைத் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்கிறது. இந்த வகையில் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணை நிற்பவன் அக்னிபகவான்.

அடுப்பிலும் தீபத்திலும் தோன்றி எமது இல்லங்களில் நிரந்தரமாக எம்மோடு இருக்கும். அக்னியை ஆராதனை செய்வது இல்லறத்தவர் ஒவ்வொருவரது தலையாய கடமையாகும் என்கிறது மீண்டும் தர்ம சாஸ்திரம்.

அடுப்பூதிய அருந்ததி, விண்மீனாக ஜொலிக்கின்றாள். அக்னியை வணங்கிய திரௌபதி, திரௌபதி அம்மனாக வணங்கப்படுகின்றாள்.

ஆழ்கடலிலும், மலையிலும், விண்ணிலும், மண்ணிலும் அக்னியின் சாந்நித்யம் உண்டு. "வடமுகாக்கினி" என்ற பெயரில் அக்னி கடலில் உறைகின்றான். மின்னல் உருவில் விண்ணில் தோன்றுகின்றான் மண்ணில் வெப்பமாகத் தோன்று கின்றான். நீரில் ஊடுருவியிருக்கும் வெப்பம் தான் பயிர்களை வளர்க்கின்றது.

பகலிலும், இரவிலும் தோன்றும் சூரிய சந்திரர் உலகை வாழ வைக்கின்றனர். சந்திர ஒளியின் தாக்கத்திலே தான் பயிர்கள் செடி கொடிகள் மருத்துவ குணத்தைப் பெறுகின்றன.

ஆதவனுக்கும் அக்னிக்கும் அதிக வேறுபாடு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் இரவில் அக்னியுள் ஒன்றி விடுகின்றான். இதனை வேதம் கூறுகின்றது.

அக்னி இல்லாமல் நாம் இல்லை. அதற்காக அக்னியை நான் தழுவ முடியுமா? அக்னியை வணங்குவோம். அவன் சுடர் மூலம் அருளைப் பெறுவோம். செய்வோமா?

## 77. சிவனாரும் சனிபகவானும்

நவகிரகங்களில் எமக்கெல்லாம் அச்சத்தை உண்டாக்கும் சனிபகவான் பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

வான் மண்டலத்திலிருக்கும் கிரகங்களின் சஞ்சாரத்தினால், மனித வாழ்வில் ஏற்றத் தாழ்வு உண்டாகின்றது என்பது எமது முன்னோர்கள் கண்டறிந்த உண்மை. இதனையே சோதிட சாஸ்திரமும் கூறுகின்றது. அதே நேரம், நாம் வாழும் போது செய்யும் புண்ணிய பாவங்களுக்கு ஏற்பவே அடுத்த பிறப்பில் எமக்கு வாழ்வு அமைகின்றது. ஒருவன் அரச போகத்தில், மனக்களிப்போடும் மன நிம்மதியோடும் வாழ்வதும், ஒருவன் வறுமையால் அல்லறப்படுவதும், மேலும் ஒருவன் பலதும் கற்று கல்விமானாகத் திகழ்வதும், ஒருவனது ஜாதகத்தில் கிரகங்கள் அமைவதைப் பொறுத்தே ஆகும். கிரகங்கள் அமைவது அவரவர் முற்பிறப்பில் செய்த வினைகளின் படியேயாம். இத்தகைய கிரகங்களின் தாக்கங்களில் இருந்து சிறிதளவு தன்னும் விடுபட பல்வேறு பரிகாரங்களையும் கிரகதோஷ நீக்க வழிகள், மார்க்கங்களையும், எமது முன்னோர் வழிவகுத்துள்ளமையும் கண்கூடு.

இந்த நவகிரகங்களின் இயல்பை மொத்தத்தில் ஆராயின் சூரிய பகவான், மனிதனுக்கு நல் ஆரோக்கியத்தையும் சந்திர பகவான் வாழ்வில் வெற்றியையும், செவ்வாய்க் கிரகம் செல்வத்தையும், புதன் பகவான் நல்ல கூர்மையான புத்தியையும், குருபகவான் என்றழைக்கப்பெறும் வியாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் மனிதனுக்கு நாவன்மையையும் நற்சுகத்தையும், சுக்கிர பகவான் தன் திசையில் நற்பலன்களையும், சனி பகவான் மன உறுதி, மனத் தைரியத்தையும், ராகு பகவான் நல்லதோர் வாழ்வினையும், கேது பகவான் குல வளர்ச்சியை யும், தந்தருள்வதாக ஜோதிடம் பகர்ந்துள்ளது. இது பொது விதி.

இனி சனிபகவான் பற்றி நோக்குவோம்.

நவ கிரகங்களில் ஈஸ்வரன் எனும் பட்டத்தை சிறப்பாகப் பெற்றவர் சனி பகவானேயாவர். இதன் காரணமாக சனீஸ்வரன் என்ற நாமம் இவருக்கு உண்டு. சர்வ வல்லமை பெற்ற இவர் நீதி தவறாத, அஞ்சா நெஞ்சத்தோடு தேவர்கள் அசுரர்கள் மனிதர்கள் என சகலரையும் பாரபட்சம் காட்டாது அவரவர்க்கு சனி திசை நடக்கும் போது அவர்களைப் பீடித்து ஆட்டிப்படைப்பது இயல்பு. இவரால் தீமை ஏற்படுவது போல் நன்மையும் ஏற்படுதல் மனித வாழ்வில் கண்கூடு. இதனால் 'சனியைப் போல் கொடுப்பவனும் இல்லை. கெடுப்பவனும் இல்லை' என்று ஒரு கூற்றும் உண்டு.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டாத ஈசனையே இவர் பிடித்தவர் என்றால் பாருங்களேன்.

ஈசனைச் சனீஸ்வரன் பிடிக்கின்ற காலம் வந்த போது உன்னால் என்னைப் பிடிக்க முடியாது என்று கூறிய வண்ணம், ஈசன் ஆழ்கடலில் ஒரு நீர்க்குகையுள் தன்னை மறைத்துக் கொண்டார்.

சனி பீடிக்கும் குறிப்பிட்ட காலம் முடிய வெளியே வந்து ஈசன் சனி பகவானுக்கு சவால் விட்டார். என்னை உன்னால் பிடிக்க முடியாது பார்த்தாயா? இது ஈசன் கூறியது. இதற்கு பதிலாக சனிஸ்வரன் என்ன கூறினார் தெரியுமா?

ஐயனே! சர்வ வியாபகரும் அண்ட சராசரங்களையும் ஆட்டிப் படைக்கின்ற ஈசனுமாகிய தாங்களே, எனக்குப் பயந்து 3 நாழிகை நீருள் மறைந்திருந்தீர்கள் என்றால், இதைவிட வெற்றி எனக்கு வேறென்ன வேண்டும்! இதுவே யான் உங்களைப் பிடித்த காலமாகும் என்றாராம். அதற்கு ஈசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பாராமல் என்னையும் குறித்த காலத்தில் பிடித்த உமது நேர்மையை உலகுக்குக் காட்டவே இவ்வண்ணம் செய்தேன் என்று திருவாய் மலர்ந்தருளி ஈஸ்வரப் பட்டத்தை யும் அளித்து சனியை சனீஸ்வரன் என ஈசன் சிறப்பித்ததாக வரலாறு உண்டு.

சூரிய பகவானுக்கும் சாயா தேவிக்கும் புத்திரனாகப் பிறந்த சனி பகவான் காசித்தலம் சென்று தனது பெயரால் ஒரு சிவலிங்கத்தை நிறுவி பூசை செய்து வழிபட்டதன் பயனாக கிரக அந்தஸ்தைப் பெற்றார்.

மேற்குத்திசைக்குரிய சனிபகவானின் வாகனம் காகம். இதன் காரணமாக "காகமேறும் தம்பிரான்" என்றும் இவர் அழைக்கப் பெறுகின்றார். இவருக்குரிய பத்திரம் வன்னி, மலர் கருங்குவளை, தானியம் எள், உலோகம் இரும்பு, சுவை கசப்பு, சனி தோஷமுடையோர் சனிக்கிழமை தோறும் வன்னிப் பத்திரத்தாலும் கருங்குவளை மலராலும் சனி பகவானை அர்ச்சித்து எள் எண்ணெய் தீபம் ஏற்றி, கோளறு பதிகம் பாடி, பகவானைப் பிரீதிப்படுத்தி, அவன் இன்னருள் பெறவேண்டும்.

முயன்று பாருங்களேன்! ●

## 78. சதுர்யுகங்கள்

இன்று நாம் வாழும் கலியுகம் பற்றி சற்று சிந்திப்போம்.

உலகின் கால அளவை 4 பிரிவுகளாக அதாவது சதுர் யுகங்களாக வகுத்துள்ளார்கள் எமது முன்னோர்கள். அவை யாவன க்ருத, திரோதா, துவா, கலியுகம் என்பனவாம். இவற்றுள் இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருப்பது கலியுகம். இ∴து நீங்கள் யாவரும் நன்கு அறிந்ததே

இந்த காலகட்டங்களின் தன்மைகள் யாதென நோக்கின் கருதயுகத்தில் அதாவது முதலாவது யுகத்தில் மக்கள் வாழ்ந்த சமுதாயத்தில் வீதம் தர்மம் நிலைத்திருந்தது. மக்கள், தேவர் யாவரும் நிம்மதியாக வாழ்ந்து வந்ததாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுகின்றது. இலக்கியங்களில் படித்தும் இருக்கின்றோம்.

தொடர்ந்து திரோதா யுகத்தில் மக்கள் சமுதாயத்தில் அதர்மமும் கலக்கப் பெற்று 75 விகிதம் தர்மமே நிலைத்திருந்தது. அடுத்து வந்த துவா யுகத்திலே வாழ்ந்த மக்கள் மத்தியில் 50 விகிதமே தர்மம் நிலைக்கத் தலைப்பட்டது. மிகுதி 50 வீகிதமும் அநியாயம் அதர்மச் செயல்கள் இடம் பெற ஆரம்பித்து விட்டன. பின்னர் தொடர்ந்து நாம் வாழும் கலியுகத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். நீங்களும் நாமும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோமே இந்த காலகட்டத்தில் 75விகிதம அதர்மமும் 25 விகிதம் தர்மமும் நிலைக்கும் என எமது முன்னோரால் கூறப்பட்டுள்ளது. இது தவறு என்று சொல்ல முடியாத அளவுக்கு இன்று எமது வாழ்க்கை சான்றாக அமைகின்றது.

உதாரணமாக எமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நவீனம் என்ற போர்வையில் 75 விகிதம் எமது அன்றாட வாழ்வு தாறுமாறாக நடந்து கொண்டு வருகின்றதை யாம் அவதானிக்கின்றோம். உதாரணத்துக்கு சமுதாயம் மத கலாசாரம் என்ற ஒவ்வொரு துறையிலும் அதர்மமே தலை தூக்கி நிற்பதாம். எந்த ஒரு நாட்டையும் எடுத்துக் கொள்ளுங்கள். வெளிநாட்டுப் போர் என்ற அவசியமே தேவை இல்லை. ஆங்காங்கு உள்நாட்டுப் போர்கள் ஒரே நாட்டு மக்கள் தம்முள்ளே எத்தனை தீவிரமாக அடிபட்டுக் கொள்கின்றார்கள். நாடுகள் சிறியனவாக இருக்கலாம் ஆனால் அங்கு காழ்ப்பு உணர்ச்சியும் போரும் மிகப் பெரியதாக பெரும் அழிவை கொண்டு வந்து, ஏன் இந்நாட்டில் யாம் பிறந்தோம் என்ற அளவுக்கு மக்களைச் சிந்திக்க வைக்கின்றன. இது தான் கலியுகத்தின் கோலம் என்று சொல்லப்படுகின்றதோ! ஆனால், இதனை இப்படியே யாம் விட்டுவிட முடியுமா அல்லது தாங்கிக் கொள்ளத்தான் முடியுமா எனவே நாமும் தர்மத்தை நிலை நாட்ட எம் அளவில் முயற்சி செய்தல் வேண்டும். இதற்கு எமக்குப் பெரிய அந்தஸ்தோ அல்லது பட்டம் பதவியோ தேவையில்லை. நியாயத்தையும் ஒழுங்கையும் கொடுத்து உதவும் மனப்பான்மையும், புரிந்துணர்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வளர்க்க வேண்டும். பேச்சோடு விட்டு விடாமல் எமது செயல்களிலும் இந்நற்பண்புகளை யாம் வாழ்ந்து காட்ட வேண்டும். இந்த நற்பண்புகள் எத்தனை இனியவை! வரவேற்கத்தக்கவை என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. இவை தான் மனித விழுமியங்கள். இந்த நற்பண்புகள் ஒவ்வொரு வீட்டிலும் கிடைக்கப் பெற்றால் வீட்டில் நிம்மதி, அயலில் நிம்மதி, நாட்டில் நிம்மதி, ஏன் உலகிலே நிம்மதி கிடைக்கும். கலியுகத்தின் இருண்ட பக்கத்தை நாம் ஏன் சாடக் கூடாது. சிந்தித்துப் பாருங்கள்! உள்ளங்கை அளவான எமது இருதயத்தில் மலையளவு போராட்டம் ஏன்? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அதற்கு மாற்று மருந்து வேண்டாமா? எம்மளவில் தன்னும் நாம் நிம்மதியைத் தேடித்தான் ஆக வேண்டும். இனி எம்முன்னோர் வாழ்ந்த 3 படிமங்களிலும் என்ன தான் நடந்தது என்று பார்ப்போமா?

அந்த விதத்தில் நாம் சற்று சிந்தித்து செயற்பட வேண்டும். பொறுமையையும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கையும் நாம் கடைப்பிடிப்பதோடு வளரும் எமது சந்ததியினருக்கும் நாம் இதனை வலியுறுத்தியாக வேண்டும்.

அபிப்பிராய பேதமேற்பட்டபோது, கிருத யுகத்தில் தேவர் களும் அசுரர்களும் வெவ்வேறு உலகத்தில் வாழ்ந்த வண்ணம் சண்டையிட்டார்கள்.

தொடர்ந்து வந்த த்ரேதா யுகத்தில் இவ்விரு சாராரும் ஒரே உலகில் வெவ்வேறு பகுதியிலிருந்த வண்ணம் சண்டையிட்டனர்.

அடுத்து வந்த 3வது யுகத்தில் ஒரே குடும்பத்தில் வெவ்வேறு பகுதிகளிலிருந்து சண்டையிட்டார்கள்.

4வது யுகமான கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கு முள்ளே தனித்தனி போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இது இன்றைய நிலை. ஒரு உதாரணத்துக்குச் சொல்லப்பட்டது.

சுருங்கச்சொன்னால் முதல் யுகத்தில் தேவர்கள் அசுரர்கள் என வெவ்வேறு உலகங்களிலிருந்து போராடினர். 2வது யுகத்தில் ஒரே உலகில் வேறு பகுதிகளிலிருந்து போராடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3வது யுகத்தில், ஒரே குடும்பத்தில் வெவ்வேறு மனிதர்களாக இருந்து போராடினர். இன்றைய கலியுகத்தில் மனிதர் தம்முள்ளே போராட்டம் நடத்தி நிம்மதியிழந்து வாழ்கின்றனர். இதுவே இன்றைய பரிதாபத்திற்குரிய நிலை.

இந்த வகையில் இன்று எமது மனதினுள்ளேயே தேவ அசுர யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருப்பதையும் உணர்கின்றோம். இந்நிலையை யாம் நீடிக்க விடக்கூடாது. என்றும் தர்மமே வென்றமை வரலாறு கூறும் உண்மை. எனவே நாம் இறை நம்பிக்கை இறை வழிபாடு மூலம் எம்மிடையே காணப்படும், அசுர குணங்களை அழித்து தேவ குணங்களை வளர்க்கவேண்டும். பொறுமை, புரிந்துணர்வு இரக்கம் தியாகம் ஆகிய குணங்களை நாம் ஒவ்வொரு வரும் பின்பற்றினால், கலியுகமும் பொன்யுகமாக மாற வாய்ப்புண்டு. ஏனெனில் சத்தியத்தின் பக்கமே இறையருள் கிட்டும், நியாயம் கிடைக்கும்.

நாம் மாத்திரமல்ல எமது இளைய சந்ததியினரையும் சத்திய வழியில் நடக்க வைப்பது எமது தலையாய கடமை ஆகும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 79. எண்ணம் போல் எல்லாம் ஈடேறுமா?

நாம் செய்த செய்கின்ற வினைப் பயன்கள் பற்றி இன்றைய சிந்தனைக்கு நாம் எண்ணியவற்றை எண்ணப் படி எல்லாம் செய்து விட முடியுமா? அது தான் முடியாதே! அப்படியானால் அவனின்றி அணுவும் அசையாது எல்லாமே இறைவன் ஆணையின் வண்ணமே நடக்கும், எனக்கொள் வோம்.

ஆனால் எல்லாம் தங்களாலேயே நடந்து முடிகிறது என்று எண்ணி இறு மறந்திருப்பவரும் சிலர் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். உண்மையின் படி மனிதன் எண்ணியது எல்லாமே நடந்தேறியதாக சரித்திரம் இல்லை.

வெற்றிகள் எமது வாழ்வில் தொடர்ந்து வரலாம் ஆனால் நினைத்ததெல்லாம் நடந்தேறியது என்பது அசாத்தியம். இது வரலாற்றில் இல்லை.

கேனோ உபநிடத்தில் ஓரிடம் ஒரு சந்தர்ப்பத்தில் வாயு பகவான் ஒரு துரும்பையே அசைக்க முடியாமல் நின்றாரம். அக்கினி பகவானோ அதே துரும்பை எரிக்க முடியாமல் நின்றாராம். தேவ தேவனான இந்திரனோ அசைவு அற்று அல்லல்ப் பட்டாராம் அப்படியென்றால்!

இறைவன் அருள் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று அர்த்தம்!

ஏன்! எமது அனுபவங்களையே எடுத்துக் கொள்ளுங்க ளேன்.

இதனைச் செய்து முடிக்க வேண்டும். இதனைப் பெற்று விட வேண்டும், சில சமயம் இதை இப்படிச் செய்வோம் அதை அப்படிச் செய்வோம் என்று திட்டமிடுவதை விட, திருவருளை முன்னிட்டு எதையும் செய்ய முற்படுவோமாயின் அப்போது இறையருள் துணை நின்று அக்கருமங்களை எமக்கு முடித்துக் கொடுக்க வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியவாறு எல்லாமே நடப்பதில்லை என்பதற்கு ஒரு கதையைக் கேட்டுப்பாருங்கள்.

ஒரு பெரிய காடு, மத யானை ஒன்றைக் குறிவைத்த வேடன் ஒருவன் ஒரு புற்றின் பின் மறைந்து யானையை நோக்கி அம்பைச் செலுத்தினான். குறி தவறவில்லை. மதயானை கணை பட்டு வீழ்ந்து மாய்ந்தது. இந்த ஆரவாரத்தில் புற்றில் இருந்த பாம்பு வெளியே வர அதனை வேடன் மிதிக்க அந் நாகம் சீறி எழுந்து வேடனைத் தீண்டியது.

பாம்பையும் கொன்றான் வேடன் ஆனால் சிறிது நேரத்தில் விடம் தலைக்கேற மாண்டான்.

யானை, வேடன், பாம்பு மூன்றும் ஓரிடத்தில் இறந்து கிடந்தன.

இரை தேடி வந்த ஒரு நரி ஒன்று அந்த வழியே வந்தது. மூன்று பிணங்களையும் கண்டது. ஆகா! என்ன அதிஷ்டம் எனக்கு மாசக்கணக்கிற்கு போதும் இந்த உணவு எனத் துள்ளிக் குதித்தது.

இவை அத்தனையும் இருக்கட்டும், முதலில் வேடனது வில்லில் இருக்கும் நாணைக் கடித்துத் தின்போம் - அதையும் ஏன் விட வேண்டும் என்று கூறி நாணைக்கடித்தது நரி. கடித்ததும் வில்முனை வீச்சாகி நிமிர்ந்து நரியின் தலையில் அடிக்க நரியின் தலை நறுக்குண்டு வீழ்ந்தது நரியும் மாண்டது. அதன் எண்ணங்களும் அதனோடு மாண்டன.

எத்தனை திட்டங்கள் எத்தனை எதிர்பார்ப்புக்கள் அத்தனையும் ஈடேறுமா? ஈசனுக்குத்தான் வெளிச்சம்.

எனவே, நல்லதை நினைப்போம் நல்லதைச் செய்வோம், பிறருக்கு உதவி செய்யாவிடினும் உபத்திரவம் செய்யாதிருப்போம். ஆண்டவன் இன்னருள் துணை நிற்கவேண்டி எமது கடமைகளைத் தொடர்வோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80. கங்கை

எமது வாழ்க்கைக்கு நீர் எத்துணை அவசியமோ அத்துணை அவசியம், இறை வணக்கம். எமது ஆன்மீக முன்னேற்றத்துக்கு இறைவழிபாட்டை பல மார்க்கங்களில் நாம் செய்து வருகின்றோம். எமது முன்னோரும் அவ்வாறு செய்து வந்துள்ளார்கள். நாயன்மார் காலத்திலே தல யாத்திரை சிறந்ததோர் வழி பாட்டு முறையாக இருந்து வந்தது. சமய குரவர்கள் சிவ பெருமானது தலங்கள் தோறும் சென்று தேவாரப் பதிகங்கள் பாடி பொது மக்களுக்காகப் பல அற்புதங்களைச் செய்து பக்தி இயக்கத்தைப் பரப்பி வந்தமை யாம் அறிந்ததே. இத்தல யாத்திரையின் போது அடியார்கள் கூட்டமும் இவர்களைத் தொடர்ந்து பண்ணிசை பாடித் தமது வழி பாட்டை ஆற்றினர்.

தல யாத்திரையோடு தீர்த்தமாடுதலும் சைவப் பெரு மக்களிடையே மிகுந்த முக்கியத்துவமும் புனித பயனுள்ள வழிபாட்டு முறையாகவும் இருந்து வந்தது.

எமது நாட்டில் கீரிமலை, செல்வச்சந்நிதி, தொண்டமான் ஆறு, கதிர்காமம் மாணிக்க கங்கை ஆகியவை தீர்த்தங்களுக் குரிய புனித ஆறுகளாகத் கொள்ளப்பட்டு வருகின்றன.

கங்கை என்றால் நீர் என்று கொள்ளலாம். எம் பெருமான் கங்கா நதியை தனது சடா முடியிலே சூடி அதன் வேகத்தைத் தணித்து மீண்டும் அதனைப் பூமியில் பாய விட்டுள்ளார் என்பது புராண வரலாறு.

கங்கை இந்தியாவின் மிகப் பெரிய நதியாகும். உலகத்தில் உள்ள மிகப் பெரிய நதிகளில் கங்கையும் ஒன்றாகும். அருட் சக்திக்கும் புனிதத்துவத்துக்கும் பெயர் போன புனித நதி. இந்துக்கள் கங்கையைப் புனித ஆறு எனக் கொள்கின்றனர். எமது நாட்டிலே இடம் பெறும் ஆலய கும்பாவிஷேடங்களுக்கு கங்கா நதியிலிருந்து புனித தீர்த்தம் எடுத்துவரப்பெற்று இங்கு ஆலய தீர்த்தத்தோடு கலக்கப்பெற்று அபிடேகம் இடம்பெறுவதை யாம் அறிவோம். தென் இமயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தோன்றும் கங்கோத்திரி என்னும் இடத்திலிருந்து ஊற்றெடுக்கும் பாகீரதி, ஜான்ஹவி, அழக நந்தா ஆகிய ஆறுகளின் சங்கமே கங்கை நதி ஆகும்.

புராணங்களில், ஆறுகள் தெய்வத் தன்மை உடைய னவாகப் போற்றப்படுகின்றன. உலக நாடு முழுவதுமே போற் றும் கங்கை நதி இந்து மதத்தின் உயிர் நிலை போன்றது. பாவங்கள் அனைத்தையும் போக்க வல்லது. நதிகள் யாவற் றிற்கும் பிரதிநிதியாக விளங்குவது கங்கை. இதனால் எல்லா மங்கல ஸ்நானமுமே கங்கா ஸ்நானம் எனப் பெயர் பெறுகின் றது. இந்துக்கள் எந்தப் புனித நீரையும் கங்காமிர்தம் என்றே கூறுவார்கள். கங்கை தேவநதி எனவும் பெயர் பெறுகின்றது.

புராண வரலாற்றின் படி கங்கை முதலில் தேவ உலகத்தி லேயே இருந்தது. இமய மலையின் புத்திரியாகக் கருதப்பட்ட கங்கையை ஆற்றல் மிக்க பகீரத மன்னனே தனது மூதாதை யர் கடைத்தேறும் பொருட்டு தனது தவ பலத்தால் பூமிக்குக் கொண்டு வந்தான். இதனால் கங்கை பகீரதி என்றும் அழைக்கப்படுகின்றது.

வானிலிருந்து பூமிக்குப் பாய்ந்த கங்கையின் வேகத்தை தாங்க முடியாது என அறிந்த பகீரதன் அதன் வேகத்தைத் தடுக்கும் படி சிவபெருமானை நோக்கித் தவம் ஆற்றினான். சிவனும் அவனது வேண்டுகோளின்படி கங்கையைத் தன் சடாமுடியில் தாங்கி அதன் வேகத்தை அடக்கி அதை ஏழு அருவிகளாகப் பூமியிலே பாயவிட்டார். அவையாவன ஹலா தினி, பவானி, நளினி, சுரஸிஸ், சீதா, சிந்து, பகீரதி என்பனவாம். இவற்றுள் தெற்கே பாய்ந்த கங்கையின் அருவியே பகீரதி ஆகும்.

கங்கா நதி பாய்ந்ததால் ஏற்பட்ட புனித தலங்கள் பல. அவற்றுள் கங்காத்துவாரமும் ஹரித்துவாரமும் காசியும் அதி முக்கியம் வாய்ந்தவை. அத்தோடு கங்கையும் யமுனை யும் சங்கமமாகும் நிலையும் வாய்ந்தது.

எனவே, இந்தியாவுக்கு யாத்திரை செய்யும் சந்தர்ப்பம் எமக்கும் கிடைக்குமானால், யாமும் கங்கையில் நீராடி புனிதம் பெறலாமே! ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 81. சான்றோர் மகிமை

'கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பது நாம் எல்லோரும் அறிந்ததே.

மேன்மக்கள், சான்றோர், நல்லோர், உயர் குணம் படைத்தோர், பண்பாளர் என அழைக்கப்படுவர். மனிதப் பிறவியிலே எல்லோரும் சமம் என்று நாம் கருத வேண்டியிருப்பினும் மக்களின் சிந்தனைகள், செயல்கள் நடத்தைகள் ஆகியவற்றை நோக்கி அவர்களை மேன்மக்கள், கீழ் மக்கள், தக்கோர், தகவிலார், பெரியோர், சிறியோர் என அறிஞர்கள் வகுத்துள்ளனர். இந்தப் பாகுபாட்டில உயர் இடத்தில் நிற்பவர் சான்றோர் எனப்படுவர்.

இவர்கள் எப்போதும் தமது நிலையிலிருந்து மாறுபடார். தமக்கென்று உரிய உயர் கொள்கையில் உறுதியாக இருப்பர். தமக்கு பிறர் தீங்கு செய்யும் போதும் அவர்களை மன்னிக்கும் உத்தம குணம் கொண்டவராயிருப்பார். எச் சந்தர்ப்பத்திலும் உயர்ந்த பண்பிலிருந்து சிறிதும் கீழ் இறங்க மாட்டார்கள் இவர்கள்.

கீழ்மக்கள் கீழோர் எனப்படுவர். நற்பண்பு அற்றவராக அல்லது குறைந்தவராக இருப்பர். தமக்கு பல காலம் உதவி புரிந்தவர்களையும் எளிதிலே அலட்சியம் செய்து விடுவர். அவர்களிடம் நன்றி பாராட்டும் நற்குணம் காணப்படாது.

இவ்விடத்தில் ஒரு சிறு கதையை நோக்குவோம்.

ஒரு ஊரிலே மனமொத்த இரு தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். நீண்ட காலம் அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்ததில்லை. ஆனால் ஒரு சமயம் பொருளீட்டும் பொருட்டு கணவன் மனைவியைப் பிரிய நேருகின்றது. பிரிய மனமின்றித் தன் மனைவியைப் பிரிகின்றான் அந்த அன்பான கணவன். மிகுந்த துயரத்தோடு தன் கணவனுக்கு விடை கொடுக்கிறாள். மனைவி வீதியின் முடிவு வரும் வரை வீட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலிலே நிற்கும் தன் மனைவியைத் திரும்பிப் பார்த்த படியே செல்கின்றான் கணவன். அந்த உத்தம மனைவி கூறுகின்றாள்..

நான் தினந்தோறும் அன்புடன் வருடிய என் கணவரின் கால்கள் என் கணவரை என்னிடமிருந்து பிரித்துச் செல்கின் றன. ஆனால் என்னிடமிருந்து ஒரு சிறு உதவியும் பெறாத அவரது கண்களோ என்னைத் திரும்பிப் பார்த்த வண்ணம் உள்ளன.

கண்கள் மேலானவை கால்கள் கீழானவை கண்கள் இரங்குகின்றன கால்கள் விரோதிக்கின்றன. இவ்வாறு அவள் மனம் கூறுகின்றது.

இது உதாரணத்துக்குக் கூறப்பட்ட ஒரு கதை.

மேலோர் என்றும் எதையும் பொருட்படுத்தாது தன்னலம் கருதாது பிறரைத் துன்பமடையச் செய்யாது உதவி புரிவர். ஆனால் கீழோரோ மிக எளிதில் உதவி செய்தவரையே வெறுத்து விரோதம் கொள்வர். மரங்களை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளுங்கள். வெட்டப்படாத வரை எல்லா மரங்களையுமே மரம் என்று தான் அழைக்கின்றோம். ஆனால் வெட்டப்பட்ட பின்னும் உயர் மரங்களாகிய சந்தன மரம், அகில், தேக்கு முதலிய உயர் ஜாதி மரங்கள் சிறு துண்டு களாக விற்பனைக்கு வரினும் அவை, தம் நாமத்தை இழப்பதில்லை. சிறுதுண்டாயினும் அவற்றைச் சந்தனக் கட்டை என்றே அழைக்கின்றோம்.

ஆனால், கானகத்தே வளரும் வேல், ஆல், புளி, புங்கு, கள்ளி போன்ற மரங்கள் வெட்டப்பட்டதும் விறகாகி விடுகின் றன. சிறு துண்டாக இவை கடைக்கு வந்ததும் கடையே விறகுக் கடை என்றே அழைக்கப் பெறுகின்றது.

மரங்களுக்கே இந்த நிலை என்றால் மனிதருக்கு எப்படி??

நல்லோர் இவர்கள் இன்னா செய்தோர்க்கும் இனியன செய்யும் மேன் மக்கள் ஆவர். பிறர் தமக்குத் தீங்கு செய்த போதும், அவர் மீது கோபம் கொள்ளாது அறியாமையால் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள், எப்போது தான் இவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தப் போகின்றார்களோ, என்று தாம் மனம் நோவர்.

இது சான்றோர் இயல்பு. நல்லோர்க்கு கோபம் எளிதில் வராது, வந்தாலும் அதில் ஆபத்து இராது.

வாழை மரத்தைப் பாருங்கள். வாழைக் காயாக இருந்தா லும் பயன்படுகின்றது, பிஞ்சாக இருந்தாலும் பயன்படுகின்றது பூவாக இருந்தாலும் பயன்படுகின்றது, இலையாகவும் பெரிதும் பயன்படுகிறது. பழம் என்றால் சொல்லத் தேவையில்லை. ஆலயத்திற்கே எடுத்துச் செல்கின்றோமே.

ஆனால், எட்டி மரம் பழுத்தாலும் பயன்படாது. இந்த வகையில் நல்லன உலகில் நடப்பதற்கு காரணம் நல்லோரே ஆவர். மழை பொழிவதும் நல்லோராலே தான்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க் கும் பெய்யும் மழை."

எனவே, நாமும், என்றும் நல்லோராக வாழ்ந்து நலம் அடைவோமா? ●

## 82. மனிதனை தெய்வமாக்குவது எது?

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது என்பது நாம் அறிந்த வாக்கு.

இந்த மானிடப் பிறிவியில் மனிதன் பரிணாம வளர்ச்சியில் விலங்கிலிருந்து வந்தவன் என்பது டார்வினது கொள்கை.

மனிதன் விலங்கிலிருந்து பிறந்தவன் என்னும் கருத்தை யாம் ஏற்றுக் கொண்டால், அதே பரிணாம வளர்ச்சியில் வளர்ந்து வரும் மனிதன் அதற்கு மேலும் உள்ள தேவன் என்ற நிலையை அடைய முடியும், தெய்வ நிலையை பெற முடியும் எனக் கொள்ளலாம் அல்லவா?

மனிதனது வாழ்வு நெறிப்பட வேண்டுமேயானால், சமயம் ஒன்றால் தான் இது முடியும் என்பது அனுபவம் கண்ட மறுக்க முடியாத உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய நெறிப்படாத மனிதன் வாழ்வதற்கு தகுதியற்றவன். அவன் வாழ்ந்தால் சமுதாயம் அழிய நேரிடும்.

விலங்குகள் சமயம் என்ற ஒன்றைப் பின்பற்றுவதில்லை. எனவே, மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்தி அவனை முழு மனிதனாகச் செம்மைப்படுத்தி அவனை உயர் நிலைக்கு அழைத்துச் செல்லக் கூடியது சமயம் ஒன்றே ஆகும்.

இன்று நாம் பல சமயங்களைக் காண்கின்றோம். ஒவ் வொரு சமயமும் ஒவ்வொரு கொள்கையோடு ஒவ்வொரு தெய்வத்தை மனக் கண்முன் தோற்றுவிக்கின்றது.

ஆனால் சமய உண்மைகள் யாவையும் துருவி ஆராய்ந்த பெரியோர்கள் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" தெய்வம் ஒன்று என்னும் முடிவுக்கு எப்போதோ வந்துள்ளார்கள்.

அதுவே பரம் பொருள். இந்தப் பரம்பொருள் தான் மக்களை நெறிப்படுத்துவதற்காக உலகிலே இத்தனை சமயங் களையும் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. இந்த உண் மையை நாம் முதலில் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்ள வேண்டும்.

இறைவனை அடைய வேண்டும் என்று இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் முதலாம் தரத்தைச் சேர்ந்தவர்கள் உதாரணமாக ஸ்ரீராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் பரம்பொருளை அடைய வேண்டும் என்ற நோக் கோடு இறையால் விதிக்கப்பட்ட முதலாந்தர மனிதர்கள் எனக் கொள்ளலாம். காரணம் இவர்கள் எப்போதும் இறை யின் தூயவழியில் சென்றவர்கள், வாழ்ந்தவர்கள்.

அடுத்து நாம் எப்படியாவது பிறந்த பயனை அடைந்து விட வேண்டும் என்ற பணிவோடு வாழும் மனிதர்கள் இரண் டாம் தரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மகான்களுடைய நல்வழி பெற்று நெறிப்படுத்தப்படும் பாங்கினைப் பெற்ற வர்கள். இவர்கள் இரண்டாம் தரத்தைச் சேர்ந்தவர்கள்.

உண்டு, உடுத்து, உலகில் வாழ்வை முடித்துக் கொள் ளும் வகையினர் மூன்றாம் வகையினராகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் உலக மாயை என்னும் பிரகிருதியில் உழல்பவர்கள்.

இந்த வகையினரையும் எந்த மதத்திலும் நாம் சந்திக்கலாம்.

கூர்ந்து நோக்கின் சமயங்களினிடையே பிணக்கு கிடையாது. ஆனால் சமயவாதிகள் என தங்களைச் சொல்லிக் கொண்டு திரிபவரிடமே தான் பிணக்கு இருக்கின்றது.

ஆராய்ந்து பார்த்தால் சமயங்களிடையே பிணக்கு ஏற்படுத்தவோ சண்டையிடவோ வழியில்லை, மார்க்கமில்லை. சமயத்தை நன்கு புரிந்து கொள்ளாதவர்கள் தான் சமயப் பிணக்குகளுக்கும் பூசல்களுக்கும் காரணமாக அமைகின்றனர்.

சீலர்களாக, நாம் தான் எடுத்துக்காட்டாக வாழ்ந்து அவர்களுக்குக் காட்ட வேண்டும். உதாரணமாகக் பாருங்கள்.

தந்தையார் பீடியோ சிகரட்டோ புகைத்துக் கொண்டு அவற்றை தன்பிள்ளையைக் கொண்டு கடையிலே வாங்குவித்துக் கொண்டு “மகனே புகைத்தல் கூடாது” என்று அப் பிள்ளைக்கு உபதேசம் செய்தால் அது எந்த அளவில் பயன் அளிக்கும்?

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல சமயாசாரங்களை நாம் அன்றாடம் எமது நிகழ்வில் புகுத்திக் கொள்ள வேண்டும். இறை பிரார்த்தனை என்பது இன்றியமையாதது. எந்த நாளும் ஆலயம் சென்று வழிபட அவகாசம் கிடையாத விடத்து தினமும் இல்லத்தில் காலையும் மாலையும் இறை வழிபாடு அவசியம் செய்தாக வேண்டும். நாம் எவ்வழியோ அவ்வழி தான் எமது குழந்தைகளும் என்பதை யாம் மறந்து விடக்கூடாது.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் அவன் தாள் நினை என்று அப்பர் சுவாமிகள் ஏற்கனவே எமக்குச் சொல்லி வைத்துள்ளார். எனவே நேரம் இல்லை சுவாமி கும்பிட, என்ற தயக்கம் எமக்கு எழ வேண்டிய அவசியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமய அறிவை உள்ளிட்ட சிறப்பான நூல்கள் எம்மிடத்தே பற்பல உள்ளன. எனவே இவற்றை நன்கு பயன்படுத்தியாக வேண்டும்.

இந்த வகையில் எமது குழந்தைகள் மனதில் படியும் வண்ணம் சமய உண்மைகளை கதைகளாகச் சொல்லி அவர்களையும் நெறிப்படுத்த வேண்டும். இப்பணியில் பெரும் பங்கு தாய்மாருக்கே உண்டு. எனவே தாய்க்குலமே! இந்த நல்ல பணியை எமது இளம் சிறார்க்காக யாம் தினமும் செய்ய வேண்டாமா?

●

## 83. ஆலயம் தொழுவது சாலவும் நன்று

**நா**ம் ஏன் ஆலயம் சென்று இறைவனை வணங்க வேண்டும்? வீட்டிலேயே இருந்து வணங்கினால் என்ன? ஆண்டவன் தான் தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறதே எனவே எம் வீட்டிலும் அவர் இருக்கத்தானே செய்வார் என்று வினா எழுப்புவர் எம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களுக்கு நாம் என்ன பதில் கூறுவது? அவர்கள் கூறிய படி ஆண்டவன் தூணிலும் இருக்கின்றார் துரும்பிலும் இருக்கின்றார் எம் வீட்டிலும் இருக்கின்றார், ஏன், எம்முள்ளேயும் இருக்கிறார் எமது மனச்சாட்சி வடிவிலே. இதில் தப்பு இல்லை.

ஆனால், இந்த ஆனாலிலே தான் இவ்வினாவுக்கு விடையே இருக்கிறது. நாம் சாதாரண மனிதர்கள். வீட்டிலே இருந்து இறைவனை வணங்கவும் அவர் எமக்கு காட்சி தந்து அருள் புரியவும் நாம் ஒன்றும் அப்பர் சுவாமிகளோ சம்பந்தரோ சுந்தரரோ மணிவாசகரோ அல்லர். எனவே எமக்கு பூஜை அறையும் முக்கியமாக ஆலயங்களுமே தஞ்சம்.

ஆலயம் என்பதன் பொருள் ஆன்மாக்கள் ஆண்டவனோடு லயிக்கும் இடம் என்னும் போது, யாம் எவ்வாறு ஆலயத் துக்குச் செல்லாமல் இருக்க முடியும்! பசுவில் உடல் முழுவ தும் பாலானது சூட்சுமாக உள்ளது. இருப்பினும் அப்பாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பசுவின் மடியிலிருந்து தானே கறந்தெடுக்க முடியும்! இதே போன்று தான் ஆலயத்தின் கதையும். அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாக ஈசன் இருப்பினும் ஆண்டவனது இன்னருளைப் பெற உரிய இடமாக ஆலயங்களே விளங்கி வருகின்றன.

இதனாலேயே நம் முன்னோர்,

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

என்றும் கூறி உள்ளனர் எமது முன்னோர். நாம் அன்றாடம் கற்கும் சைவ மெய்யடியார்கள் நாயன்மார்கள் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகள் அவர்கள் தம் வாழ்வில் ஆலய வழிபாட்டிற்கு எத்தனை முக்கியத்துவம் அளித்து வந்தார்கள் என்பதை பறை சாற்றுகின்றன. தல யாத்திரை என்பது அவர்கள் வாழ்வின் உயிர் நாடியாக விளங்கியது. அவர்கள் செய்த அத்தனை அற்புதங்களும் ஒவ்வொரு திருத்தலத் திலேயே இடம் பெற்றதை யாம் நன்கு அறிவோம்.

எம்மைத் தம்பால் ஈர்க்கவே ஆலய கோபுரம் அத்தனை எழிலுடன் கம்பீரமாக ஊரின் நடுவில் உயர்ந்து நிற்கின்றது. தூல லிங்கம் என்று அழைக்கப்படும். கம்பீரம் கலந்த அந்த எழிற் கோபுரத்தை கண்டதும் எமது மனம் எம்மை அறியாமலே இறைவன் பால் ஒரு கணமேனும் சாய்கின்றது. இது எத்தனை உண்மை!

நதியைத் தொடர்ந்து சென்றால் கடலை அடையலாம் என்பது முது மொழி அதுபோல் ஆலயத்தை நாடினால் ஆண்டவன் அருளை அடையலாம்.

ஆலய தரிசனத்தின் விஷேடம் என்ன வென்றால் பொதுவாக மனதை ஒரு வழிப்படுத்த முடியாமல் சங்கடப்படு பவர்களை அது ஒரு வகையில் ஒரு வழிப்படுத்துகின்றது. ஆலயத்திலே சூட்சுமமாக வீசிக் கொண்டிருக்கும் தெய்வீக அலைகள் உணர்வுகள் புனித நறு மணங்கள் யாவும் அங்கு செல்வோரையும் தூய்மைப்படுத்துகின்றது, தெய்வீகமாக்கு கிறது. மனதை ஒரு வழிப்படுத்த ஆலயம் போல் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் வேறு ஒன்றில்லை.

திருக்கோயிலும் அதன் சுற்றுப் பிரகாரமும் அங்கு காணப்படும் எழிலமைந்த சிற்பங்களும் அழகு படிந்த ஓவியங்களும் எமக்கு இறைவனது வடிவங்களையும் திரு வருட் செயல்களையும் அடியார்களது வரலாற்றையும் அறியத் தந்து எமது பக்தியை தளராத பக்தி ஆக்குகின்றன. எமது பக்திக்கு மெருகூட்டுகின்றன.

என்றுமே திருத்தலங்களும் திருக்கோயில்களும் எம்முன் வாழ்ந்த அனுபூதி மான்களது வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ளன. அவர்களது உயர்ந்த வாழ்க்கை முறையை எமக்கு மீண்டும் ஞாபகப்படுத்துகின்றன.

வேதாரணியம் என்றதும் அப்பர் சுவாமிகளும் ஞான சம்பந்தரும் ஆலயத் திருக்கதவை திறந்து வைத்த அருட் செயலே எமது ஞாபகத்துக்கு வருகின்றது. திருமயிலாப்பூர் என்றதும் ஞான சம்பந்தப்பெருமான் பூம்பாவையை உயிர்ப் பித்த அற்புதச் செயலே எமது மனக் கண்முன் தோன்று கின்றது.

எனவே, எமது ஆத்மீக வாழ்க்கைக்கு இனிய முறையில் கைகொடுக்கும் அருள் நிறைந்த ஆலயத்தை வாரம் ஒரு முறை தன்னும் யாம் தரிசித்தாக வேண்டும் அல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 84. அன்பும் ஆன்மீகமும்

அன்பு என்பது இன்பகரமானது. அன்பை வழங்குவோரும் ஆனந்தமடைவர் அன்பைப் வழங்கப் பெறுவோரும் ஆனந்த மடைவர்.

அன்பு உள்ள இடமே ஆண்டவன் உறையும் இடம் என பண்டுதொட்டுக் கூறி வருகின்றது எமது இந்து மதம். எமது மதத்தை அன்பு மதம் என்று சொன்னால் கூட அது சாலப் பொருந்தும்.

எம்பெருமானது திருவிளையாடல்களும் விஷ்ணு பகவானது தச அவதாரங்களும் ஜீவராசிகளிடத்தே அவர்கள் கொண்ட கருணையினாலேயே நிகழ்ந்தன என்பது உண்மை. அன்பும் கருணையும் இரட்டைக் குழந்தைகள்.

இந்து மதத்தின் கண் உள்ள அரும்பெரும் பொக்கிஷங் களான புராணங்கள், இதிகாசங்கள், வேதக்கதைகள் யாவும் எமது முன்னோர்கள் மெய்யடியார்கள் யாவரும் எவ்வாறு அன்பை வளர்த்து அதன் அடிப்படையில் பக்தி செய்து நற்பேறு எய்தினார் என்பதை அழகாக சித்தரிக்கின்றன.

அன்பு வழிச்செல்லும் அனைத்துமே ஆனந்தம் தரும், என்பதே இந்து மதம் காட்டும் ஆன்மீகப் பாதை ஆகின்றது.

ஆகவே அன்பின் வளர்ச்சியே ஆன்மீக வளர்ச்சி என்பதை யாம் உணர்ந்து வாழப் பழகிக் கொள்ளல் அவசியம். இதற்கு பெரியோர், சிறியோர், கற்றவர், கல்லாதோர் என்றோ ஏழை, பேதை என்றோ பேதம் கிடையாது.

அன்பு ஏற்படுவதற்குப் பல மார்க்கங்கள் உள. முதலில் அன்பு காட்ட நாம் முற்படும் பாதையில் கருணையையும் நிதானத்தையும் பொறுமையையும் கடைப்பிடிக்க வேண்டிய வர்கள் ஆகின்றோம். எவ்வளவு சிரமத்தின் மத்தியிலும் நாம் சினத்தை அடக்கிக் கொள்ள வேண்டும். சினமே எங்கள் முதல் எதிரி. சினத்தை அடக்குவதோடு நாம் பொய் பேசுதலைத் தவிர்க்கவும் வேண்டும். பொய் பேசுதல் எளிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்துக்கு உதவுவது பொய். ஆனால் காலப்போக்கில் அதன் விளைவு மிகவும் கேடு தரும். பொறாமையையும் நாம் எமது உள்ளத்தில் வளர்க்கக் கூடாது.

மேலும் இறைவனது நாமத்தை உச்சரிப்பதும் தியானம் செய்தலும் மனதில் உள்ள மாசுக்களை போக்க வல்லவை. பூசை வழிபாடு கூட்டுப் பிரார்த்தனைகளில் ஈடுபடுதல், தன்னலம் அற்ற செயல்களில் ஈடுபடல், பிற உயிர்கள் இடத்தில் அன்பு காட்டல், சமூக சேவை, ஆகியவை எனலாம் அன்பு நெறியில் வாழ்ந்து நாம் ஆனந்தம் பெற நற்பேறடைய எம்மால் பின்பற்றக் கூடிய இலகுவான மார்க்கங்களாம். எந்த மதமும் இவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாராகவே உள்ளன.

**அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவம் ஆவதாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே**

என்கின்றது திருமூலர் திருமந்திரம்.

நாம் அன்பு காட்டும் போது எமக்கு எல்லோருமே நல்லவர் களாகத் தோற்றுவர். அப்போது அந்நியர் அல்லாது தோற்றும் இந்த உலகம் முழுவதுமே எமக்கு சொந்தம் ஆகின்றது. இதில் எத்தனை ஆனந்தம் இத்தனை சுலபமான வழி இருந் தும் நாம் ஏன் இதனை முற்றாகப் பின்பற்றாமல் இருக்கின் றோம், அன்பு காட்டப் பணம் தேவையில்லை, மனம் தான் தேவை.

இறைவனது படைப்புக்களில் பிரமிக்க தக்கதும் சிறப்பானது மான மானிடப் பிறப்பு. இது இந்த மண்ணிலே நாம் நல்ல வண்ணம் வாழ வாழ்ந்து பிறரையும் வாழ வைக்க உகந்தது. இதனை சரியான முறையிலே பயன்படுத்துவதே எமது கடமையாகும். உடலையும் மனதையும் கருவிகளாக்கி அவற்றுக்கு உயிர் ஊக்கம் அளிக்கும் ஆனமாவின் உண்மை இயல்பு அன்பே தான் என்பதை நாம் நன்கு உணர்ந்து நாம் அனைவரும் செயற்படுவது எமது சமய வழிபாட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனித்துவமான மார்க்கம் ஆகும்.

இந்த இடத்தில் இப்பாடலைப் பாருங்கள்.

**இறை சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்**
**இறை நாமம் செய்ய நா அமைத்தேன்**
**வந்தனை செய்ய தலை அமைத்தேன்**
**தொழுவதற்கு கை அமைத்தேன்**
**பந்தனை செய்ய அன்பு அமைத்தேன்**
**மெய், அரும்ப அமைத்தேன்**
**வெந்த நீறு அணியும் ஈசற்கு இவையான்**
**விதித்தனவே!**

●

## 85. மரங்களும் மதங்களும்

எங்கள் சமயத்துக்கும் மரங்களுக்கும் காலம் காலமாக இருந்து வரும் நெருங்கிய தொடர்பினை இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

சில சமயங்களில், சற்று சிந்தித்துப் பார்த்தால், மரங்கள், எமக்கு உதவுகின்ற அளவுக்கு மனிதர்கள் உதவுவதாகத் தெரியவில்லை. நம்பி நாம் மரத்தின் பயன்களை எதிர் பார்த்து பெறலாம். ஆனால் மனிதனிடம் அவ்வாறு எதிர் பார்க்க முடிவதில்லை. சிலசமயம் ஏமாற்றம் தான், பல சமயம் என்றும் கூறலாம். இல்லையா?

மரங்கள் செல்வங்களே. அவை புனிதமானவை, தன்னலம் அற்றவை, பயன் பல தருபவை.

ஆதிகாலம் தொட்டே மரங்கள் மனிதனின் வாழ்க்கையில் வேர் விட்டு வளர்ந்துள்ளன. அவை உணவாக உடையாக உறையுளாக எம்மவருக்கு உதவி வந்தன, வருகின்றன.

மரஉரி முனிவர்களின் புனித ஆடையாக அமைந்தது. பண்டைய தழையாடை இன்றும் மாரியம்மன் வழிபாட்டில் வேப்பமிலை ஆடையாக விளங்குவதை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தின் மரப்பொந்துகள் ஆதி மனிதனின் உறையுளாக அமைந்தன. பயன் காரணமாக ஆதி மனிதன் மரங்களை வழிபட ஆரம்பித்தான்.

மரங்கள் மருந்துகள் தயாரிக்க பயன்படலாயின. இன்றும் பயன்பட்டு வருகின்றன. மரத்திலிருந்து எடுக்கப்பட்டது மருந்து எனப்பட்டது. தாவரங்களின் மூல சக்தி மூலிகையானது மரம் விதையாய் வேராய், கொழுந்தாய், இலையாய், சருகாய், காயாய், கனியாய், வற்றலாய், சாறாய், பட்டையாய் பாலாய், விறகாய் பற்பல அவதாரங்களை எடுத்து மக்களுக்கு உதவும் தெய்வ சக்திகளாக விளங்கி வருகின்றன என்று கூறலாம் அல்லவா!

எனவே மரங்கள் வழிபடத்தக்கவை. வழிபடவேண்டியவை.

மர வழிபாடு உலகம் முழுவதும் பரவி இருந்தது. இயற்கையில் இறைவனைக் காணாலாம் என்பது இதனைத் தான். ஆபிரிக்கா, அமெரிக்கா, போலந்து, கிறீஸ், பிரான்ஸ் வாழ் பழங்குடி மக்களிடமும் மர வழிபாடு இருந்துள்ளமை குறிப்பிட தக்கது. பாரதத்தில் தமிழகம் முழுவதுமே மர வழிபாடு இருந்துள்ளமை கண்கூடு. குறிப்பாக அரசமர வழிபாடு, வேப்ப மர வழிபாடு எங்கும் எக்காலத்திலும் நிலைத்து நின்று வருகின்றது. இவற்றோடு வன்னிமரம், நெல்லிமரம், குருந்தமரம், வில்வமரம் ஆகியவை முக்கியம் வாய்ந்தவை. மணி வாசகப் பெருமான் குரு உபதேசம் பெற்றமை குருந்த மர நிழலில் தான். இந்து மதத்தில் மரங்கள் பல வகைகளில் வழிபடப்பட்டு வருகின்றன.

முதலில் மரங்களை இறைவனாக வழிபடுதல் ஒரு வகை. அரசு, வேம்பு முதலிய மரங்களை இறைவனது திருமேனியாக கருதி வணங்குவது ஒரு வகை.

மரங்களில் இறைவன் உறைகின்றான் என்று கருதி வழிபடுதல் மற்றும் ஒரு வகை. தல விருட்சங்களை வழிபடுதலும் மற்றுமொரு வகை.

அரசமரம் மும்மூர்த்திகளின் உறைவிடம் எனக் கொள்ளப் படுவதை யாம் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச மரத்தின் வேர்ப்பகுதியில் பிரம்மனும், தண்டுப் பகுதியில் விஷ்ணுவும், கிளைப்பகுதியில் சிவனும் உறைகின்றனர் என்பது நம்பிக்கை. மும் மூர்த்திகளின் உறை விடமான இம் மரத்தை "தேவாத்மா" எனப் போற்றுகின்றனர். எனவே அரச மரத்தை வழிபட்டால் மும் மூர்த்திகளை வழிபடும் பயன் கிடைக்கின்றது எனக் கொள்ளலாம்.

கிருஷ்ணபகவான் அரசமரத்தில் எப்போதும் குடி கொண் டுள்ளார் என்பதால் அரசுக்கு கிருஷ்ண வாசம் என ஒரு நாமமும் உண்டு. மரங்களில் நான் அரச மரமாக உள்ளேன் என்கிறது கீதை வாசகம்.

அரச மரத்தை வலம் வந்து வணங்குதல் புண்ணிய காரியமாகும் என மனு தர்ம சாஸ்த்திரம் விதித்துள்ளதை இங்கு தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

மரங்களின் அடியில் இறைவடிவத்தை பிரதிட்டை செய்து வழிபடுவதும் ஒரு வழக்கமாகும். அரச மரத்து விநாயகர் வழிபாடு இத்தகையதே.

வட மொழியில் அரசமரத்திற்கு போதி மரம் என்றும் ஒரு பெயர் உண்டு. அதாவது ஞானம் தருவது என்பது இதன் பொருள். அரச மரம் தெய்வத்தன்மை உடைய எல்லோராலும், விரும்பப்படும் அழகான மரம் ஆகும். இதுவே மரங்களுக்கெல்லாம் அரசமரமுமாகும். முற்காலத்தில் அரச மரத்தின் சமித்துக்கள் அதாவது சுள்ளிகள் வேள்வித்தீயில் பயன்படுத்தப்பட்டு, பின் அவற்றின் சாம்பல் திருநீறாகக் கொள்ளப்பட்டது.

விநாயகப் பெருமான் விரும்பி உறையும் இடங்களில் அரசமரத்தடியும் ஒன்றாகும். மரக்கிளைகளால் அமைந்த கோயிலை முற்காலத்தில் "கோட்டம்" என்றழைத்தனர். அரச விநாயக தர்ம கோட்டங்கள் ஏராளமாகத் தமிழ் நாட்டில் இன்றும் உள்ளன.

போதி மரத்துப் புத்த பிரான் இதற்கு விதி விலக்கானவர் அல்ல. அவர் ஞானம் பெற்றதே அரசமரத்தின் கீழ் அமர்ந்து தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமரமும் புனிதத் தன்மை வாய்ந்தது. வாழை மரம் ஆலய உற்சவங்கள் மங்கல காரியங்கள் ஆகிய நிகழ்வின் போது பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் மரங்கள் மனித வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துள்ளன என்று கூறலாம்.

நாள் தோறும் மரங்களை வழிபாடு செய்த காலம் போய் மரங்களை வெட்டி வீழ்த்தி மாட மாளிகைகளைக் கட்டி எழுப்புதலே இன்று நம்மவரது முதற்காரிமாக உள்ளது. இதனால் வளமும் மழையும் நிழலும் நிம்மதியும் குன்றி வருவதை யாம் உணர்கின்றோம்.

எனவே, இனி மேல் தன்னும், பெரு விருட்சங்களை வெட்டி வீழ்த்தாது, இயற்கையில் உறையும் இறைவனைப் போற்றித் துதித்து பழமை பேணுவோம். பலனைப் பெறுவோம். புதிய மரகன்றுகளை நாட்டுவோம். செய்வோமா?

## 86. அன்னையின் அருள்

**வா**ழ்க்கையில் அவசரம் என்பது கூடாது. அவசரமாகத் தவிர்க்கப்பட வேண்டியது அவசரம். இது உடலுக்கு கூடாது. உள்ளத்துக்கும் ஆகாது. அவசரத்தை ஆங்கிலத்தில் (tension) என்பார்கள். அவசரத்தால் பதற்றம் ஏற்படும். பதற்றம் தொடருமானால் இரத்த அழுத்தம் ஏற்படும். இது வாழ்க்கை யையே முடிவுக்குக் கொண்டு வந்து விடும். இவை எல்லாம் உடலைப் பொறுத்த அளவில், அளவோடு இருக்க வேண்டி யன.

இவை மட்டும்மல்ல, நாம் எமது வாழ்க்கையில் அவசரப் பட்டு எடுக்கும் முடிவுகள், ஒருவரது வார்த்தைகளைக் கேட்கையில் அவர்களைப் புரிந்து கொள்ளாமல் நிதானம் தவறி எடுக்கும் முடிவுகள், இவைகளும் பாரதூரமான முடிவு களைத் தரவல்லன.

இதற்கும் உங்களுக்கு நான் ஒரு கதை வைத்திருக் கின்றேன். அவசரப் படாமல் கேளுங்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கவி காளிதாசன் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். காளிதேவியின் அருளால் காளிதாசன் மகா கவி ஆகினான். "சாகுந்தலம்" போன்ற பல காவியங்களைப் படைத்து புகழின் உச்சிக்கே சென்றவன் காளிதாசன். இதனால் போஜராஜனின் பாராட்டுக்கும் பெருமதிப்புக்கும் ஆளாகி இருந்தான் அவன். போஜராஜனின் சபையில் தண்டி என்னும் புலவரும் இருந்து வந்தார்.

சபையிலே சிலர் தண்டிக்குப் பெருமதிப்பு அளித்து வந்தார்கள். இதன் காரணமாக, தண்டியா? காளி தாசனா? இருவரில் யார் சிறந்தவர்கள்? என்ற கேள்வி வேறு எழுப்பப் பட்டது.

இதற்கிடையில் தண்டியும் காளிதாசனும் சம காலத்தவர் அல்ல என்றும் சர்ச்சை ஒன்று உள்ளதால் இக்கதை செவி வழிச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் இங்கே கூறியாக வேண்டும்.

காளிதாசனா தண்டியா பெருங்கவிஞன்? என்ற விளை வுக்கு காளி தேவியே விடை பகிர வேண்டும் என்ற முடிவுக்கு சபை வந்தது.

எல்லோரும் காளிதேவியின் சந்நிதியில் கூடினார்கள். "தண்டியா? காளிதாசனா? எவர் பெருங் கவிஞர்? எனத் தேவியே தெரிவித்தருள வேண்டும் என அன்னையை வேண்டி நின்றனர்.

என் அருள் பெற்ற காளி தாசனே பெருங்கவிஞன் எனக் காளி தேவி கூறியருவாள் எனப் பெரும்பாலோர் எதிர்ப் பார்த்தனர்.

ஆனால் காளி தேவியோ "தண்டியே கவி" எனப் பதிலளிக்க ஆரம்பித்தாள். தேவியின் வார்த்தகளைக், கேட்ட காளிதாசன் மனம் நொந்தான், கோபமும் கொண்டான், உன்னை நம்பி மோசம் போனேனே, என்னை கைவிட்டு விட்டாயே, எனப் புலம்பினான்.

அத்தோடு நின்று விடாமல் தேவியை வன் சொற்களால் வசையும் பாடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிதாசனின் வசை மொழிகளைக் கேட்ட காளி தேவி கூறினாள்.

"மகனே! நீ எனது பதில் முழுவதையும் கேட்காமல் அவசரப்பட்டு விட்டாய;" என்றாள். அதற்கு காளிதாசன் "என்ன பதில் நீ சொல்ல இருந்தாய் அது தான் தண்டியே கவிஞன் என அவனைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடி விட்டாயே!" என்று மீண்டும் சத்தமிட்டான்.

அன்னை அமைதியாகப் பதில் அளித்தாள்.

"ஆம் மகனே! மீண்டும் சொல்வேன். தண்டியே கவி அதில் மாற்றமில்லை, ஆனால் நீ யார் தெரியுமா? நானே நீ என் அருள் பெற்ற நீ என் வடிவாகவே மாறிவிட்டாய். "நீயே யான் எனப் பதில்" முடித்து உன்னை எல்லோர் முன்னும் உயர்த்த இருந்தேன். நீ அவசரப்பட்டு விட்டாய்."

"அத்தோடு உன் அவசரத்தால் என்னையும் திட்டி வசை பாடி விட்டாய். மகாகாவியங்களைப் பாடும் நீ வசை பாடலாமா? என் அருள் பெற்ற கவிஞனாக இருந்தாலும் உன் தவறுக்கு தண்டனை உண்டு. எனினும், என் பக்தனான உன்னை, தக்க தருணத்தில் தடுத்தாட்கொள்வேன்."

"நீ அடுத்த பிறப்பில் ஊமையாகப் பிறப்பாய். அதுவே உனக்குத் தண்டனை." தேவி திருவாய் மலர்ந்தருளி மறைந்தாள்.

காளிதாசன் மறு பிறவியில் தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் ஊமையாகப் பிறந்தான்.

முற்பிறவித் தொடர்பு அவனை காஞ்சி காமாட்சித் தாயோடு ஈடுபாடு கொள்ள வைத்தது. கோயிலில் தங்கி கோயிற் பிரசாதத்தை உண்டு வளர்ந்தான்.

ஒரு நாள் அன்னையின் அருள் பெற்றான். அழகிய இளம் பெண் ஒருத்தி தன் வாயில் குதப்பிய தாம்பூலத்தை அவன் வாயில் இட்டு அருள் புரிந்தாள். அவளே அன்னை காமாட்சி.

ஊமையாக இருந்த அவனிடமிருந்து மடை திறந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளம் போல் கவிதைகள் பெருக்கெடுத்தன.

மூகனாக அதாவது ஊமையாக இருந்து தேவியின் அருள் பெற்றுப் பாடியதால் அவன் மூசுகவி எனப் பெயரும் பெற்றான்.

அன்னை மேல் அவன் பாடிய 500 பாடல்களும் மூக பஞ்ச சதி எனப் புகழ் பெற்றது.

அன்னையைத் துதித்துப் பாடி யாமும் அவள் அருள் பெறுவோம்.

எனவே எதற்கும் அவசரம் வேண்டாம். எம்மில் எல்லோரா லும் கவிபாட முடியாவிட்டாலும் அன்னை மேல் அடியார்கள் ஏற்கனவே பாடியிருக்கும் தோத்திரங்களை யாமும் பாடி அவள் அருள் பெறுவோமே. ●

## 87. இறைவன் உறையும் இடங்கள்

இனிய காலை நேரம். பறவைகளின் ஒலி ஒரு புறம். இன்னும் ஒரு 5 நிமிடம் தூங்குவமோ எனக் கெஞ்சுகிறது உடம்பு. எழுந்திரு ஆற்ற வேண்டிய கடமைகள் நிறைய உண்டு என்கிறது உள்ளம். இந்த வேளையில் உங்களுடன் ஒரு நல்ல சிந்தனை.

இயற்கையில் அழகு உண்டு. அழகில் இறைவன் உறைகிறான். எனவே இயற்கையில் எங்கும் இறைவன் உறைகின்றான். அவன் சர்வ வியாபகன் அல்லவா? இயற்கை யைக் காண முடிகிறது இறைவனைக் காண முடிவதில்லை இங்கு ஒரு வித்தியாசம். அதற்காக இறைவனே இல்லை என்று சொல்லி விட முடியுமா காற்றைக் கண்ணால் காண் கிறோமா? இல்லையே, அதனால் காற்றே இல்லை என்றாகி விடுமா?

சிந்திக்க எவ்வளவோ இருக்கிறது. நேரம் தான் போத வில்லை. இயற்கை எழில் ததும்பும் இடங்கள் பெரிய மகான் கள் வாழ்ந்த ஆச்சிரமங்கள் இவை எல்லாம் புனிதமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை புண்ணிய தலங்கள் என்றே கூறிவிடலாம்.

எம்முள்ளேயே இறைவன் இருக்க நாம் இறைவனை எங்கெங்கெல்லாமோ தேடுகின்றோம். எம்முள்ளே இறைவனா என்று கேட்கிறீர்களா?

ஆமாம் எம்முள்ளேயும் இறைவன் உள்ளான் அவன் தான் எமது மனச் சாட்சி.

சில சமயங்களில் மனச்சாட்சியின் ஒலி எம் செவிகளில் வீழ்ந்து, நாமே நமது தவறை உணர்ந்து கொள்கின்றோம். ஒப்புக் கொண்டும் விடுகின்றோம்.

எனவே இறைவன் எமக்கு அகத்தும் புறத்தும் உள்ளான்.

எமக்கு வெளியே எத்தனை பெரிய கோயில்கள், கோபுரங்கள், விமானங்கள், மண்டலங்கள், ஸ்தல விருட்சங் கங்கள். இவை எல்லாம் புறச் சின்னங்கள்.

இவை எல்லாம் இடைக் காலத்தில் வந்தவை. பாமர மக்களுக்கு வழிகாட்ட அவர்கள் வழிப்பட்டு உய்ய இவை அவசியம்.

வேத காலத்தில் இத்தகைய ஆலயங்கள் இருந்ததில்லை. இயற்கையின் அம்சங்களே வழிபாட்டுக்குரியனவனாக அமைந்தன. வேள்வித் தீயின் மூலம் வழிபாடு பெரிதும் நிகழ்ந்து வந்தது.

நதிக்கரையிலும் சோலைகளிலும் தெய்வ வணக்கம் இடம் பெறலாயிற்று பெரு விருட்சங்கள் நாளடைவில் ஸ்தல விருட்சங்கள் ஆயின.

காலம் மாற ஆகமங்கள் கூறியுள்ளதை அனுசரித்து ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அவை எமது உடலிலும் உலகிலும் உள்ள தத்துவங்களை விளக்குவதாக அமைந் தன. உருவ வணக்கமும் ஆரம்பித்தது. இது ஒரு புறமிருக்க, அண்டம் எங்கும் குடி கொண்டுள்ள இறைவன் எமது சரீரத்திலும் வீற்றிருக்கின்றார் என்பது மகான்கள் வாக்கு.

மானுட சரீரமே ஆலயங்களில் மிகச் சிறந்தது என்பதும் மகான்கள் மொழிந்ததே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சரீரத்தில் உள்ள தெய்வத்தை அறிந்து கொள்ள, இக்கோட்பாட்டை எளிதில் புரிந்து கொள்ள, எமக்கு பக்குவம் தேவை.

அப்பக்குவம் பெற ஆலயங்கள் எமக்கு உதவலாம் அல்லவா? ஆலயங்களையும் நாம் எமது போக்குக்கு உகந்தவாறு கட்டி விடமுடியாது. இது தவறு. ஆகமங்களில் விதித்தவாறே ஆலயங்களை அமைக்க வேண்டும் என்பதும் கோட்பாடு.

கல்லைக் குடைந்து கோயிலை எழுப்பினர் பண்டைய தமிழ் மன்னர்கள். கல்லிலே கலை வண்ணமும் கண்டனர், காட்டினர். ஆனால் அங்கும் விதிமுறைகள் பின்பற்றப்பட்டன.

ஆலயம் என்றதும் எம்மனக் கண் முன்னே தோன்றுவது வானளாவிய கம்பீரமாக அமைந்த ராஜ கோபுரம் தான். இதனைத் தூலலிங்கம் என்பர்.

ஊருக்கு ஒரு கோயில். அங்கே ஒரு ராஜ கோபுரம் வருவோரை வா என்றழைப்பது போல் உயர்ந்து எல்லோர் கண்ணுக்கும் கம்பீரமாக காட்சி அளிக்கின்றது. அதனைக் கண்டதும் அஃது மனதில் தெய்வ சிந்தனையை உருவாக்கு கின்றது. எத்தனை நல்ல பணியை அது ஆற்றுகிறது பாருங்கள்.

ராஜகோபுரத்தின் அருகே வந்து, சிறிது நேரம் அதனை உற்றுப் பாருங்கள் எங்களில் எத்தனை பேர் அதனை நுணுக்கமாகப் பார்த்திருக்கின்றோம்.

ஏதோ கோயிலுக்கு வந்தோம் காலைக் கழுவினோம் என்று அவசர அவசரமாக உள்ளே நுழைந்து விடுகின்றோம். அவ்வாறில்லாமல் கோயில் வாயிலில் சற்று நின்று தான் அந்த அழகான கோபுரத்தை அண்ணாந்து பார்ப்போமே.

அத்தனை காட்சிகள் அதன் மேலே, எத்தனை சிற்பங்கள் அங்கு அமர்ந்து எமக்கு கதை கதையாகக் கூறுகின்றன இவற்றை எல்லாம் விட்டு நாம் அவசரமாக உள்ளே செல்ல லாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் கூறும் கதைகளை, ராஜகோபுரத்தில் உள்ள சிற்பங்கள் எத்தனை அழகாக எமக்கு சொல்லாமல் சொல்லிக் காட்டுகின்றன.

நாரத முனிவர் கொண்டு வந்த மாங்கனியைப் பெற முருகப்பெருமான் மயில்வாகனனாக உலகை வலம் வந்தமை அதே கனியைத் தான் பெற ஞான விநாயகனின் தந்தை தாயை வலம் வந்தமை, வீணைக்கொடியோன் இராவணேஸ் வரன் கைலை மலையைப் பெயர்த்தமை, எம்பிரான் சம்மந்தப்பட்ட எத்தனை வரலாறுகளை ராஜகோபுரத்தின் சிற்பங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இது எமது ஆலயங்களின் ராஜகோபுர மகிமை.

இதனாலேயே 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று எம் முன்னோர்கள் கூறிப்போற்றினரோ!

ராஜகோபுரத்தில், பல வாயில்கள் ஒன்றன் மேல் ஒன்று அமைந்திருந்த போதும், ஆலயத்தினுள் செல்லத் தரை மட்டத்திலே உள்ள ஒரு வாயில் மாத்திரம் தான் எமக்கு உதவுகிறது.

அதாவது பல புறக் காரணங்களும் அகக் காரணங்களும் எம்மிடத்தே இருக்கின்றதெனினும் கடவுள் நாட்டம் கொள்ளும் போது எமது மனம் என்னும் ஒரு காரணம் தான், நமக்குப் பெரிதும் பயன்படுகின்றது. எனவே மனம் என்னும் காரணத்தை துணையாகக் கொண்டே நாம் பரம் பொருளை நோக்கிச் செல்லலாம் என்பதை ராஜகோபுரத்தின் தரைவாயில் எமக்கு விளக்கிக் காட்டுகின்றது. எனவே, சர்வ வியாபகனான ஈசனே எமக்கு சர்வமும், சகலதும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 88. இறையும் இசையும்

இறைவனை வழிபட பண்ணோடு இசை பாடித் துதிக்கும் மார்க்கம் மிக மிக உயர்ந்தது. இவ்வழி எம்மை ஆன்மீக உயர்ச்சிக்கு இட்டுச் செல்வதுமாகும். நாம் தினமும் இறைவழிபாடு செய்யும் போது ஒரு தேவாரத்தைத் தன்னும் இசையோடு பாடி இறைவனை மகிழ்விக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஆகின்றது.

இறையை மகிழ்விக்க இசைப் பாடல் போல் சிறந்த வழி வேறேதும் இல்லை என்று கூறலாம். காரணம் இறைவன் இசைப் பிரியன், நாத வடிவினன், எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆங்காங்கே அவர்களது வழிபாட்டிலே இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

இறைவனுக்கு இசையில் மிகுந்த நாட்டம் உண்டு அவனை இசை பாடி மகிழ்விக்கலாம் என்பதற்கு எமது மெய்யடியார்களது வாழ்க்கையிலே தான் எத்தனை சந்தர்ப் பங்களை நாம் காண்கின்றோம்.

சிவனாரின் வன்தொண்டரான சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றை எடுத்துக் கொள்வோம். தனது திருமணத்தை தடுக்க வந்த அந்தண முதியவரை அவர் யார் என்பதை அறியாத சுந்தரர், சிவனாரான முதியவரை நோக்கி "பித்தா பேயா" என ஏசுகின்றார். ஆனால் இறைவனோ, அவரை ஆட்கொண்டு, நீ என்னை எவ்வாறு ஏசினாயோ அவ்வாறே பாடு எனப் பணிக்கின்றார்.

இதேபோன்று ஞானமார்க்கத்தில் வாழ்ந்த மணிவாசகரிடம் சென்று "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடு" என பணிக்கின்றார். தில்லைக் கூத்தன். அது மாத்திரமா? அப் பாடல்களைத் தன் திருக்கரங்களால் ஏட்டில் எழுதியுமுள்ளார் இறைவன்.

இன்னமும் பாருங்கள்! வீணைக் கொடியோனான இலங்கேஸ்வரன் அரன் இருந்த மலையைப் பெயர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்டு அதன் கீழ் நசிந்து துன்பப்பட்ட போது அவனைக் காப்பாற்றியது அவன் பாடிய "சாம கானம்"

இந்த வகையில், இறையை ஈர்க்கும் இசை எம்மை இறையிடம் இட்டுச் செல்வதால் அது தெய்வீக இசை என்றும் ஆகின்றது. "இசையினால் உனைப்பாட இனிக்குதய்யா" என்கின்றார் ஒரு கவிஞர்.

இந்திரியங்களால் பெறப்படும் இன்பத்தை ஈஸ்வர சரணா விந்த இன்பத்தோடு ஒப்பிடும் போது "மாசில் வீணையும்" என இசைக்கே முதலிடம் தந்துள்ளார் அப்பர் சுவாமிகள்.

நல்ல சங்கீதம் தான் எம் முன்னோரால் முதலில் ஈஸ்வர சமர்ப்பணம் செய்யப்பட்டது. எனவே தான் இறையை இசை பாடி வழிபட வேண்டும் என்கின்றேன். இது பற்றி யாக்ஞு வல்கியர் கூறியுள்ளதைப் பாருங்கள்.

வீணை மீட்டிக் கொண்டு சுருதி லயம் தவறாமல் நாதோ பாசனை செய்து விட்டால் போதும். தியானம் வேண்டாம் யோகம் வேண்டாம் தபஸ் வேண்டாம் பூஜை வேண்டாம் கஷ்டமான சாதனைகள் வேண்டாம் இதுவே மோட்சத்துக்கு எம்மை வழிகாட்டும். இது யாஞ்ஞவல்கியர் கூற்றாகும். கலியுகத்தில் இறைவனை அடைய இசைக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது என்பது ஜகத்குரு காஞ்சி காமகோடி பரமாச் சாரிய சுவாமிகளது அருள் வாக்கும் ஆகும்.

இதன் உண்மையை யாம் இன்று நேரில் காண்கின்றோம்.

எனவே, யாமும் தினமும் தவறாது சிறிது நேரம் தன்னும் இசைபாடி இறைவனைத் துதித்து இன்னருள் பெறுவோம். எமது குழந்தைச் செல்வங்களும் இசையுடன் தோத்திரம் பாடி இறைவழிபாடு செய்தலும் மிக அவசியமானது. மழலை இசையில் எம்பெருமான் மயங்காமலா போய் விடுவார்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 89. இந்து மத ஆதாரம்

இப்பூவுலகிலே நாம் படித்துப் பயன்பெற நூல்கள் நிரம்ப உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தைச் சொல்கின்றன. இதே நேரத்தில் ஒவ்வொரு மதத்தினரும் தமக்கென்று ஒரு நூலை விஷேடமாகக் கொண்டு அதில் தான் ஜன்மம் கடைத்தேறும் வழிகள் சொல்லப்பட்டிருக் கின்றது எனக்கொண்டு அதனைப் பூசிக்கின்றார்கள் சிலர் அந்நூலுக்கு கோயில் போன்று ஒரு புனித இடம் அமைத்து வைத்துப் பூசிப்பதும் உண்டு. உதாரணமாக சீக்கியர்கள் தமது மத நூலை "கிரந்தஸாகேப்" என கௌரவமாக அழைப்பர். அவர்கள் அதற்கு அதிமுக்கியத்துவம் கொடுத் துள்ளனர்.

உங்கள் மத நூல் எது? என்று கிறிஸ்தவர்களைக் கேட் டால் தயக்கமில்லாமல்' "பைபிள்" என்பர், இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்களை வினாவினால்' "குர்ரான்" என்பர் பௌத்தர்கள்' "திரிபீடகம்" என்பர். எம்மைக் கேட்டால் "வேதம் / புராணம்" என்போம்.

எமக்கு மதம் எதற்கு? மத நூல்கள் எமக்கெதற்கு? குரு உபதேசம் எதற்கு என்று நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தால் எல்லாம் எமது மனச்சாந்திக்கே என்று கொள்ளலாம். இல்லையா?

ஆலய தரிசனம் செய்து வீடு திரும்பியதும் மனதில் ஒரு நிம்மதி. நல்ல நூல்களைப் படித்து முடித்ததும் மனதில் ஒரு நிறைவு.

இவை நிறைவைத் தருவதோடு நின்று விடாமல், சமய நூல்கள் எமக்கு நல்வழிகளையும் காட்டி நிற்கின்றன. தூய மனதிற்கும் நற்செயல்களுக்கும் அதன் மூலம் வளமான வாழ்வுக்கும் நிச்சயமாக வழிகாட்டி நிற்கின்றன.

எனவே, முதியோர் இளையோர் என்று வயது வித்தியாசம் பாராது நாம் எமது சமய நூல்களைப் படித்தாக வேண்டும். அவற்றின் சாராம்சத்தை உணர்ந்து அதன்படி ஒழுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவற்றில் நாம் காணும் நற்கருத்துக்களை எமது இளைய தலை முறையினரின் மனதில் ஆழமாகப் பதிக்க ஆவன செய்தாக வேண்டும்.

நாம் எல்லோருமே ஆலாய் பறக்கும் இக்கால கட்டத்திலே, இவற்றிற்கு நேரம் உண்டா என்று தயங்காது, எமது மற்றைய விடயங்கட்கு எவ்வாறு நாம் நேரம் ஒதுக்குகின்றோமோ, அதேபோல் எமக்கு வழிகாட்டும் வழிபாட்டு நூல்களைக் கற்றுணர்வதற்கும் யாம் நேரம் ஒதுக்கியாக வேண்டும். இவற்றின் பயனே எமக்கு இறுதியில் எஞ்சி நின்று பயன் அளிப்பவை என்பதை யாம் உணர்ந்தாக வேண்டும்.

இக்கருத்தை யான் ஏன் அடிக்கடி வலியுறுத்துகின்றேன் என்றால், எமது காலம் வேறு, இன்றைய காலம் வேறு. இளைய பிள்ளைகள் வளரும் முறையே வேறு. வினாக்களை சரமாரியாகத் தொடுப்பதில் இவர்கள் விண்ணர்கள். இது பிழை என நான் சொல்லவில்லை. ஆனால் எல்லா விடயங்களிலும் வினா எழுப்புவதில் அர்த்தமும் இல்லை. இங்கே பெரியவர்களாகிய நாங்கள் மிக உஷாராக இருக்க வேண்டும்.

சமய சம்பந்தமான விடயங்களை, ஒழுங்குகளை, நற்பழக்கங்களை அன்றாடம் இளம் சந்ததியினர் நம்பிக்கை யுடன் ஏற்று நடக்கும் வண்ணம், நாம் அவர்களுக்கு எடுத்து ரைக்க வேண்டும், நாமும் அவ்வாறு நடந்து காட்ட வேண்டும் எமது பிள்ளைகள், நல்லொழுக்கங்களைக் கற்றாக வேண்டும் பயின்றாக வேண்டும். இவர்கள் வாய்மை என்னும் பாதையை விட்டு விலகி நடப்பார்களேயானால், எமது எதிர்கால சந்ததியினரின் நிலைப்பாடு எப்படியிருக்கும்! சிந்தித்துப் பார்த்தால், அவர் களது சமநிலையே கெட்டு விடும் என்பது புரியும்.

பக்தியையும் நற்பழக்கங்களையும் கற்க இளமைப் பருவமே சிறந்த பருவம் ஆகும். வாழைப் பழத்தில் ஊசி ஏறுவது போல், பசுமரத் ஆணி போல், எப்பழக்கமும் கிரமமின்றி இளம் உள்ளத்தில் ஆழப்பதிந்து விடல் இயற்கை. பக்திக்கு, நற்பழக்கத்துக்கு, கால நேரம் வயது என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கக் கூடாது. துருவன் சிறுபிள்ளையில்லையா? மார்க் கண்டேயர் இளைஞன் இல்லையா? அவர்கள் மனதை இறைபால் செலுத்தி எம்பெருமானைச் சிக்கெனப்பிடித்து தாம் நினைத்ததைச் சாதித்து நற்பேறு அடைய வில்லையா?

எனவே, எமது இளம் சிறுவர்கள் சமய நூல் தானே வயது வரப்படிப்போம் இது "அம்புலிமாமா" படிக்கும் வயது என்றிருந்து விடக் கூடாது. அம்புலிமாமாவோடு இலகுவான நடையில் உள்ள சமயக் கதைகள் கொண்ட நூல்களையும் வாசிக்க வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும். முதலில் தெய்வம் என்று ஒரு சக்தி எமக்கு மேல் உள்ளது என்ற நம்பிக்கையை மனதில் உறுதியாக நிலை நாட்ட வேண்டும். வினாக்கள் எழுப்புவதில் மாத்திரம் பெருமை கொள்ளக் கூடாது. இதற்கு பெற்றோரும் ஆசான்களும் துணை நின்றாக வேண்டும்.

அன்றாடம் சமய சிந்தனைகள் இளம் மனங்களில் பதிந்தாக வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளை யுமா? முதலில் வீடு பின்னர் நாடு எதிர்காலத்தில் சுபீட்சம் காண வேண்டுமானால் தீய செயல்களை தீய சிந்தனை களைக் கண்டு அஞ்சி ஒதுங்கும் சமுதாயம் ஒன்று உருவாக் கப்பட வேண்டும். இதற்கு அத்திவாரம் சமய போதனைகளே. இஃது பெற்றோர்க்கும் ஆசான்களுக்கு சமர்ப்பணம்.

●

## 90. கண் திறக்கும் கல்வி

என்ன தான் நாம் இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான ரீதியில் முன்னேற்றம் கண்டிருந்த போதும், அந்த முன்னேற் றத்தை முழுமையாக எவருமே உபயோகித்ததாக, உபயோ கிப்பதாக இல்லை. பெரும்பாலும் இவை பெருவாரியான அழிவுகளுக்குக் கை கொடுத்து வருகின்றன. இந்த விஞ் ஞானக் கண்டுபிடிப்புகள் பல, என்பதை யாம் இன்று கண் ணாரக் காண்கின்றோம். கண்டு கலங்குகின்றோம். கல்வி தகவல்த்துறை ஆகிய துறைகளில் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு களின் நற்பயன்கள் நன்மையளித்திடும், எனினும் போர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையிலே விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்ன தான் நன்மை யைத் தருகின்றது! இதற்குச் சாதகமான பதில் கிடையாது. எமது முன்னோர்கள் கல்வி கற்றதன் நோக்கமே அறியாமை நீங்கவன்றோ! இதன் காரணமாக இறைவனை அறிந்து அவன் திருவடிகளை அடைய சந்தர்ப்பங்கள் அமைந்தன. அவற்றுள் இளம் சிறார்கள் கற்றவை எவை என்று பாருங்கள். ஒளவைப் பாட்டியும் மற்றும் பெரியோர்களும் தந்த நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி, வெற்றி வேற்கை, நான்மணிக்கடிகை போன்றவை அரிய எளிமையான நூல்களாம். இவற்றில் இல்லாத புதிய அரிய கருத்துக்கள் இன்று தோன்றியுள்ளதாக பெரிதாக அடித்துக் கூறி விட முடியாது. அவ்வண்ணம் தோன்றி யிருந்தாலும் இவை ஆத்மீக வளர்ச்சிக்கு பெரிதாக ஒன்றும் சாதித்தாக, சாதிக்க வைப்பதாக இல்லை. "அ" என்றால் "அம்மா" என்ற காலம் போய் "அ" என்றால் "அப்பிள்" என்கிறது அரிவரி நூல். அப்பிள், எப்போது தமிழ்ச் சொல் ஆனது? அந்தோ பரிதாபம்!

முற்காலத்திலே ஆசிரியர்கள் மூலம் மாணவர்கள் நீதி நூல்களைக் கற்று அவற்றை மனனஞ் செய்து பொருளைத் தெளிவாக அறிந்து அதன் வழி நடந்து சீரிய வாழ்க்கை ஒன்றை வாழ்ந்தார்கள். இவ்வகைக் கல்வியால் அறிவு வளர்ந்தது, குருபக்தி வளர்ந்தது, பணிவு பிறந்தது, ஆத்மீகம் மிளிர்ந்தது, ஆபத்து மறைந்தது. இதுவே கல்வியின் உண்மையான பயன்.

இத்தகைய நீதி வாக்கியங்களை மனனம் செய்ய வேண்டிய காலம் இளமைப்பருவம். மாணவப் பருவம். இவ் அறிவு பின்னர் உரிய காலத்தில் வளர்ந்து அவ்வப்போது நற்பயன்களை அளித்திடும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்பது சான்றோர் வாக்கு.

"கற்றதனால் ஆய பயனென்கொள் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்ற வள்ளுவர் வாக்கை யாம் இங்கு தொடர்புபடுத்திப் பார்க்கலாம். எந்த ஒரு கல்வியும் ஆத்மீக வளர்ச்சிக்கு வழிகாட்டியே ஆக வேண்டும். எமது முன்னோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நூல்களைத் தாம் கற்றதோடு தமது பிள்ளைச் செல்வங்கட்கும் அவற்றின் பொருளை உணர்த்தி அத்தகைய கல்வியை ஊட்டி அவர்களும் நன்நெறியில் வாழ வழி வகுத்தார்கள். சமய சாஸ்திரங்களைக் கற்று விளங்கிக் கொள்வதற்கும் நீதி சாஸ்திரக் கல்வி இன்றியமையாதது. இதனால் அன்றைய சிறார்கள் சமயத்தைப் புரிந்து கொள்ளும் அறிவைப் பெற்றிருந்தார்கள்.

இன்றைய கல்வி முறையில் பண்பாடும் ஆன்மீக அறிவும் சுருங்கி அருகிக் கொண்டே போகின்றது, என்று கூற இடமுண்டு. காரணம், கல்வி அறிவு, உத்தியோகம் தேடவும், பணம் சம்பாதிக்கவும் என்ற எண்ணம் எம்மவர் மனதில் தோன்றியுள்ளது. நீதி நூல்கள் இன்று இளம் பிள்ளைகளுக்கு பெருமளவு போதிக்கப்படுவதில்லை. இவற்றை வளர்ந்த பின் அவர்கள் தாங்களாகவே கற்றுப்புரிந்து கொள்வார்கள் என்றோர் அபிப்பிராயமும் துரதிர்ஷ்டவசமாக் நம்மவரிடையே சொல் லப்படுகின்றது. இதனை என்ன வென்று நாம் சொல்வது?

கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமா? நல்லவை நற்கருத்துக்கள் பசுமை நிறைந்த இளம் பிஞ்சு நெஞ்சங்களில் அல்லவா விதைக்கப்பட வேண்டும்!

சமய அறிவு, பொறுமை, நிதானம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு இவற்றை எமக்கு தருவன, அறிய வைப்பன, நீதி நூல்களேயாம். இவற்றை இளஞ்சிறார்கள் கற்காவிட்டால் அவர்களுக்கு தாம் செய்வது சரியா தவறா என்பதே புரியாத ஒரு நிலை ஏற்பட்டு விடும். எனவே ஐந்தில் வளையாததை ஐம்பதில் வளைத்து விட முடியாது. இதனால் சிலர் தாம் செய்யும் தவறை சரி என தம்மளவில் நினைத்துக் கொண்டு செயற்படுவதை யாம் காண்கின்றோம். இது எமது எதிர்காலச் சந்ததியினரின் நல்ல வாழ்வுக்கு மிக ஆபத்தை விளைவிக்க வாய்ப்புண்டு. மனித குலப் பண்பாட்டழிவுக்கு இது ஒரு காரணமாக அமையவும் இட முண்டு. இதனை ஒரு அற்ப விஷயமாக யாம் கருதிவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய பாடத்திட்டங்களில் ஓரளவு சமய சம்பந்தமான தேவாரப் பாடல்கள், பாடங்கள், இடம் பெற்றுள்ள போதும் ஆன்மீக கல்விக்கும், இங்கே நற்பண்பை வளர்க்கவும், போதிய அளவு இடம் கொடுக்கப் பட்டுள்ளதாக ஏற்க முடியவில்லை. மாணவர்களது பொன்னான நேரம் பாடசாலைகளிலேயே கழிகின்றது. எனவே, அங்கே தான் அவர்களது பிஞ்சு நெஞ்சங்களில் பண்பும் ஆன்மீகமும் விதைக்கப்பட வேண்டும். இந்த உண்மையை உரியவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். நடக்குமா?

●

## 91. நாதவடிவினனுக்கு ஒரு நாதாஞ்சலி

இன்று இவ்வினிய காலைப்பொழுதில் இசையும் இறையும் பற்றி, சற்று உங்களுடன் 5 நிமிடங்கள்!

இசை தெய்வீகமானது, புனிதமானது, தூய்மையானது, இன்பகரமானது. மனதின் கவலைகளைப் போக்க, மறக்கடிக்க வல்லது. இசை கேட்டு நாகமே இசைந்து விடும். அவ்வாறா யின், நாம் எம்மாத்திரம்?

இசையோடு இறைவனை நோக்குமிடத்து, பெரும்பாலான பக்தர்கள் இறைவனைத் தம்மிசையால் இசைவாக்கியமை யைக் காணலாம். உதாரணத்திற்கு வீணைக் கொடியோன். இலங்கேஸ்வரன், சுந்தர சுவாமிகள், தேன் பிளிற்றும் திருவாச கம் தந்த மணிவாசகர், என இவ்வண்ணம் கூறிக்கொண்டே போகலாம்.

தெய்வ வடிவங்கங்களின் அழகுச் சிற்பங்களை நோக்கினால், தெய்வங்கள், மூர்த்திகள் கரங்களில், இசைக்கருவிகளைத் தரித்திருப்பதைக் காணலாம்.

சிவன் - முதலில் சிவனாரின் திரு உருவை எடுத்துக் கொள்வோம். சிவன் நாத வடிவினன், ஓசை ஒலி எல்லாம் ஆனவன். திருக்கரத்திலே உடுக்கையைப் பரித்துள்ளான்.

பஞ்ச கிருத்தியத்தில் உடுக்கு படைத்தல் தொழிலைக்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறித்து நிற்கின்றது. கலைமகள் வீணா வாணி, கலைகளின் அதிபதி, கல்வியின் உறைவிடம். அவளின் திருக்கரங்களை அலங்கரிப்பது நாதத்தைப் பொழியும் வீணா வாத்தியம். வீணை இசைக்கருவிகளின் அரசி என்று போற்றப்படுகின்றது. கிருஷ்ணபகவான், இவரது திருக்கரங்களை அழகுபடுத்துவது புல்லாங்குழல், வேணு, வேய்ங்குழல் அதன் இனிய கானத்தில் மயங்காதவர்களே இல்லை எனலாம். நாரத முனிவரின் கரங்களில் யாழ். எமது பாரம்பரிய இசைக்கருவி இந்த வகையில் இசையும் இறையும் மிக நெருக்கம் கொண்டுள்ளன.

தும்புரு, நாரதர் இருவரும் தவ வலிமை மிக்க ரிஷிகள். இசை மேதைகள் ஒரு முறை இவர்களுக்கிடையே போட்டி ஒன்று எழுந்தது அதாவது இசையில் தாமே பெரியவர் என்ற போட்டி தான்.

அப்போது அங்கு வந்த ஆஞ்சனேயர் இவர்கள் மத்தியில் தலையிட்டு இவர்களது போட்டிப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். எப்படி என்று பாருங்கள்.

ஆஞ்சனேயர் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆஞ்சனேய வணக்கம் இப்போது எம்மிடையே வலுவுற்றிருப்பமை கண்கூடு. ஆஞ்சனேயர் ஒரு சிறந்த இசை ஞானி. சங்கீதப் புலமையும், பரத நாட்டிய அறிவும் நிரம்பப் பெற்றவர். இவர் இயற்றியுள்ள இசை பற்றிய அகராதி ஒன்று உள்ளது. அதன் பெயர் "ஹனுமத் காடகம்"> இது மாத்திரமல்ல, பரத சாஸ்திரம் பற்றி, இவர் "ஹனுமத் பாரதம்" என்னும் நூல் ஒன்றையும் அருளிச் செய்துள்ளமை வரலாறு.

இந்த நிலையில் ஆஞ்சநேயர், தும்புரு, நாரதர், இருவரும் தம்மிடையே இசை சம்மந்தமாகப் போட்டிபோட்டுக் கொண்டு தம்முள் யார் இசையில் பெரியவர் என சர்ச்சைப்படுவதைக் கண்ணுற்றார். அவர்களது பிணக்கை தீர்த்து வைக்குமாறு அவர்கள் மத்தியில் சென்று அவர்களைச் சமாதானப்படுத்தி இரண்டு பெரிய பாறைகளைக் காட்டி அவற்றில் ஒவ்வொன்றி லும் அவர்களை அமரச் செய்தார். பின்னர் தாமே நடுவராக நடுவில் அமர்ந்து "குண்டகப்பிரியா" என்னும் ராகத்தை மிக அழகாக விரிவாக ஆலாபனம் செய்து பாடினார். ஆஞ்சனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர் பாடப்பாட தும்புருவும், நாரதரும் அமர்ந்திருந்த பாறை கள் உருக ஆரம்பித்தன. சிறிது சிறிதாக பாறைகள் உருகி நீராக மறைய ஆரம்பிக்கவே தும்புரு, நாரதர் இருவருக்கும், தாம் தாம் இசையில் வல்லவர்கள் என்ற கர்வம் ஒடுங்கி அவர்கள் ஆஞ்சநேயரை புகழ்ந்து பாராட்டலாயினர்.

ஹனுமாருக்குப் பிடித்த இராகம் தோடி இராகமாகும். தோடி 72 மேள கர்த்தா இராகங்களுள் 8 வது ஸ்தானத்தில் அமைந்துள்ளது. இந்த இராகம் ஹனுமாரின் பெயரில் ஹனுமத்தோடி என்றழைக்கப் பெறுகின்றது.

மேலும் சைவ நயன்மார்கள் காலத்திலும் பக்தி மார்க்கம் வளர, பக்தி நெறி தளைக்க, இசையே பயன்பட்டது. ஞானசம்பந்தர் பெருமான் தலயாத்திரை செய்த போது அவர் பாடியருளிய தேவாரப்பதிகங்களுட்கு திருநீல கண்டப் பெரும்பாணர் யாழ் வாசித்தார். ஒரு சந்தர்ப்பத்தில் ஞானக் குழந்தையின் அருளிசை அவரது இசைக்கருவியின் எல்லைக்குள் அடங்காமை கண்டு தனது யாழை முறிக்கவும் செய்தார். இதனால் தோன்றியது தான், யாழ்முறிராகம். இது இப்போதும் யாழ்முறி ராகம் என வழங்கப்படுகின்றது.

இந்த வகையில், இசை, அரவ இனத்தை மாத்திரம் ஈர்க்க வில்லை, அரவமணிந்த சாம கானப் பிரியனையும் தான் ஈர்க்கின்றது. எனவே குரல்வளமுடையோர், தயங்காது, தவறாது, இறைவனை இசைபாடி இன்னருள் பெறமுயற்சி யுங்கள். ஏன் தயக்கம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 92. பிரார்த்தனை எவ்வாறு அமைய வேண்டும்

இனிய இக்காலைப் பொழுதினிலே பிரார்த்தனை பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பிரார்த்தனை என்றால் என்ன என்று சிந்திப்போமாயின் மனதில் எழுகின்ற ஒவ்வொரு விருப்பமும், மலராத ஒரு பிரார்த்தனையே ஆகும்.

விருப்பம், தேவை இவ்விரண்டும் இல்லாத மனிதனே இல்லை. எனவே பிரார்த்தனை செய்யாதவர்களும் இல்லை என்றே கூறலாம். எமது விருப்பங்களும் ஆசைகளும் தேவை களும் இறைவனிடம் சமர்ப்பிக்கப்படும் போது தான், அவை "பிரார்த்தனை" என்னும் பெயரைப் பெறுகின்றன.

அப்படியானால், தெய்வ சந்நிதியில் நின்று கொண்டு இறவைனை நோக்கி எனக்கு இது வேண்டும் அது வேண்டும் என சொல்லி விட்டால் அது பிரார்த்தனை ஆகிவிடுமோ என்று தோன்றலாம். இது சிந்திக்க வேண்டிய விஷயம் இல்லையா?

பிரார்த்தனை எதற்கு? தேவைகளை நிறைவேற்றியாகப் பிரார்த்தனை. மனிதனின் தேவைகள் இரண்டு வகையானவை.

ஒன்று, அன்றாட வாழ்க்கைக்கான தேவைகள். பணம் வேண்டும், நோய் குணமாக வேண்டும், புத்திர பாக்கியம் வேண்டும், திருமணம் நடைபெற வேண்டும், வழக்கில் இருந்து வெற்றி பெறவேண்டும், தேர்தலில் பெற்றி பெற வேண்டும், இவ்வண்ணம் மனிதனது தேவைகளும் ஆசை களும் சொல்லப் போனால் கொஞ்ச நஞ்சமல்ல. இவற்றிற் காக இறைவனை வேண்டுதல் ஒரு வகைப் பிரார்த்தனை.

இத்தனை தேவைகளையும் இறைவன் பூர்த்தி செய்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். மனிதன் வாழ்வில் நிம்மதி கிடைத்து விடும் என்று நினைக்கின்றீர்களா? அது தான் இல்லை. ஒரு ஆசை நிறைவேறியதும் நூறு ஆசைகள் புதிது புதிதாய்த் தோன்றும். அவை சங்கிலித் தொடர் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும்.

இவ்வாறு ஆசைகள் நிறைவேறிக் கொண்டு வர, புறப் பொருள்களால், வாழ்வின் சுக போகங்களால், நிம்மதியைப் பெற முடியாது என்ற ஒரு ஞான ஒளிக்கீற்று எமக்கு புலப் படும் நிலை ஏற்படும். இது, எமக்கு இன்பமான சந்தோ ஷத்தை வழங்காது என்றதோர் உண்மையினை எமக்கு புரிய வைக்கும்.

இதன் பின் தான், இந்த உலகம் தான் எமக்கு எல்லாமா? அல்லது இதற்கு மேலும் ஏதாவது உள்ளதா? என்ற வினா எமக்குள் எழும். இதற்கு நாம் விடை தேடியாக வேண்டும்.

இதுதான் எமது இரண்டாவது தேவை எனலாம். இந்நிலை யில் ஒருவன் எவ்வண்ணம் தனது பிரார்த்தனையைச் செய் கின்றான் என்று பாருங்கள். இறவா! நான் உண்மையை உணர வேண்டும், அதற்கான இறைத்தூய்மை வேண்டும், பக்தி வேண்டும், ஞானம் வேண்டும், நின் மேல் திருக்காட்சி தரிசனம் வேண்டும், என்றெல்லாம் இறைவனை வேண்ட ஆரம்பிப்பான், இதுவே ஆன்மீகப் பிரார்த்தனை ஆகின்றது.

நம்பிக்கையொடு பிரார்த்தனை செய்தால் போதும். சில வேளைகளில் எமது வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுவ தில்லை என்பதை யாம் காண்கின்றோம். இது சில வேளைகளில் தான்.

காரணம், நாம் தனி நபர் அல்ல. எம் ஒருவருக்காக மட்டும் இவ்வுலகம் இயங்கவில்லை. எமது வாழ்க்கை எமது குடும்பம், நண்பர், உறவினர், அலுவலகம், சமுதாயம், எனப் பலரது வாழ்வோடு எமது வாழ்வும் பின்னிக் கிடக்கின்றது. எமது சில கோரிக்கைகளுக்கு உடனே நிறைவேறும் வாய்ப்பு சில தருணங்களில் ஏற்படாது.

உதாரணத்திற்கு பாருங்கள். காலையில் உழவன் வயலுக் குப் புறப்படும் போது, அரச மரத்தடி விநாயகரிடம் இன்றாவது மழை பெய்ய வேண்டும். அப்பனே பயிர் விளைந்து என் பஞ்சமெல்லாம் தீர வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நேரம் நீண்ட நாட்களின் பின்னர் இன்று தான் எனக்கு ஒரு கச்சேரிக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இறைவா இன்று மட்டும் மழை பெய்யாது பார்த்துக் கொள். என் குடும்பத்தின் பசி தீர வேண்டும் என்று இறையை வேண்டிக் கொள்கின்றான் ஒரு பாடகன். இவற்றுள் ஒருவரின் பிரார்த்தனை நிறைவேறினால் மற்றவர் பாடு திண்டாட்டம் தான்.

இவற்றை விட, நோய் தீர வேண்டும், செல்வம் வேண்டும் என்ற பிரார்த்தனைகள் தனிப்பட்ட சொந்தப் பிரார்த்தனைகள். இவை கூட முற்றாக நிறைவேற வாய்ப்பில்லை. காரணம் எமது முன் வினைகள் எம்பிரார்த்தனைகளின் பின்னணியில் உள்ளன. இதனால், எமது சில பிரார்த்தனைகள் நிறைவேறும், சில நிறைவேறா.

வினைகளின் போக்கு மிக ஆழமானது என்கின்றது கீதை. எனவே, இந்த உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும். தீவிரமாக இதை உணர்ந்து செயற்பட்டால் எமக்கு இறை அருள் கை கூட இடமுண்டு. இறையைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்புண்டு. எனவே எமது பிரார்த்தனையின் பின்னணியில் அடக்கம், மனத்தூய்மை, மனத்தெளிவு, பக்தி ஆகியவை வேண்டும். இவையே ஆன்மீகத்தின் முதற்படி.

●

## 93. இறை சிந்தனை என்றும் வேண்டும்

செல்வம் கொழிக்கும் வீட்டில் பிறந்தது அக்குழந்தை. உணவு உண்ண மறுத்து, தாயைப் பாடாய்ப்படுத்துகின்றது. தாயோ ஒரு தங்கக் கிண்ணத்தை எடுத்து அதில் சாதத்தை யிட்டு பிசைந்து கதை எல்லாம் சொல்லி அக்குழந்தைக்கு அன்னம் ஊட்டுகின்றாள். ஓரிரு கவளம் உண்ட குழந்தை தானே அந்த சாதத்தை சாப்பிடுவதாகவும் தனக்கு ஊட்ட வேண்டாம் எனவும் அடம்பிடித்தது.

அதன் பிடிவாதத்திற்கு ஈடுகொடுக்க முடியாத தாய் மனமில்லாது அந்தக் தங்கக் கிண்ணத்தோடு சாதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குழந்தையின் கையில் கொடுக்கின்றார். பின்னர் எங்கே அந்தக் குழந்தை கிண்ணத்தை கீழே போட்டு விடுமோ அதிலிருக்கும் சாதமும் கீழே விழுந்து சிதறி விடுமோ என்ற ஐயத்துடன் மனம் பதற குழந்தையின் பின்னே செல்கின்றாள்.

இதேபோன்று தான் இறைவன் நிலையும் அவனும் எம்மை எல்லாம் சிருஷ்டித்த பின் எங்கே உலகில் பக்தி உருவாகா மல் சிதறி தனது படைப்பு சிதறி விடுமோ எனப் பதறுகின் றான்.

குயவன் செய்த மட்பாண்டம் கீழே விழுந்துடைந்தால் கூட அதன் உடைந்த சிறு துண்டால் தண்ணீரை முகந்து குடிக்கலாம். ஆனால் பிரமன் படைத்த எமது உடம்பாகிய பாத்திரம் உடைந்தால் அது எதற்கும் பயன்படாமல் போய்விடும். அதனால் தான் இறைவன் பரிதவிக்கின்றான். மனிதப் பிறவி என்னும் பாண்டம் பக்தியால் நிரம்ப வேண்டும். அது ஆன்மாவை மேன்மையுற, பக்குவம் அடையச் செய்ய வேண்டும். இதன் காரணமாகவே இறைவன் நம் பின்னாலேயே திரிகின்றான்.

"புறம் புறம் திரிந்த செல்வனாக"

எம் பின்னே ஓடோடி வருகின்றான், நாம் தான் அவனைப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம்.

எம்மை விடுங்கள், ஒரு முறை தாருகாவனத்து முனிவர் களுக்கே இறைவனைப் பற்றி சந்தேகம் வந்துவிட்டதென்றால் பாருங்களேன்! நாம் எம்மாத்திரம!

முனிவர்கள் ஒரு போது நினைக்கின்றார்கள்,

வேதம் ஓதி, வேள்வி பல நடத்தி, தவம் இருந்து, சித்திகள் பலவும் பெற்றிட்ட எம்மை விட, இறைவன் எந்த விதத்தில் பெரியவன் என்று இறுமாப்புக் கொண்டனர். தாருகாவனத்தே ஆச்சிரமங்கள் அமைத்து தம் பத்தினிமாருடன் வாழ்ந்திருந்த அறிவொளி பெற்றிட வேண்டிய நேரத்திலே, இவர்களுக்கு தாருகாவனத்து முனிவர்கள் அகந்தை பிறந்தது. கர்வம் கண்களை மறைத்தது, கற்பிலும், அழகிலும் தம்மை விட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருளர்? என்ற கர்வம் முனிவர்களின் பத்தினிமாருக்கும் தோன்றவே, இவர்களும் தவறான வழியில் சிந்திக்கலாயினர்.

முனிவர்கள் தமது தவ வலிமையாலும் ரிஷி பத்தினிகள் தமது கற்பின் ஆற்றலாலும் இறைவன் துணையின்றி தாம் எதையும் சாதிக்கலாம் என்ற கர்வநிலை கொண்டனர். இது மாயை.

மோன நிலையிலும், முக்காலத்தையும் உணரும் இறைவன், இவர்கட்கு நல்ல பாடம் புகட்ட எண்ணினார்.

உடனே தாம் அழகான பிச்சாடன மூர்த்தம் கொண்டு பூத கணங்களுடன் தாருகாவனத்துக்கு வருகை தந்தார். திருமாலும் மோகினி வடிவமெடுத்து உடன் வந்தார். முனிவர்கள் மோகினியின் அழகில் மயங்கி தம் தவ வலிமையும் ஆற்றலும் துறந்து அவர்கள் பின் அணிவகுத்த னர்.

இவர்கட்குத் தமது தவறை உணர நீண்ட காலம் எடுத்தது. தம் நிலை உணர்ந்ததும், இவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்ததோடு, இறைவன் மேல் சீற்றம் கொண்டு நம்மால் முடியாதது எதுவுமே இல்லை, நமது தவ வலிமையால் அந்தப் பரமன் மீதே படை எடுப்போம் எனக்கூறி அபிசார வேள்வி ஒன்றை இறைவனுக்கு எதிராக ஆற்றத் தொடங்கி னார்கள்.

அந்த வேள்வித் தீயில் உருவாகிய அக்கினி, மான், மழு, பாம்பு, புலி, முயலகன் ஆகியவற்றை இறைவனைத் தாக்கிட ஏவினர்.

இறைவனுக்கு இது ஒரு விளையாட்டாகத் தோன்றியது. தன்னை நோக்கி வந்த மானையும் மழுவையும் இறைவன் தனது திருங்கரங்களில் ஏந்தினார். பாம்பினை மாலையாக அணிந்தார். புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக உடுத்தினார். தீயைக் கையில் எடுத்துக் கொண்டார். முயலகனைத் தன் குஞ்சித பாதத்தால் மிதித்தார்.

இதனை எல்லாம் எதிர்பார்த்த தாருகவனத்து முனிவர்கள் பெரிய யானை ஒன்றை ஈசன் மேல் ஏவினர். இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுள்ளே தான் புகுந்து அதனைக் கிழித்து வெளியே வந்து யானைத் தோலைப் போர்த்தருளினார் என்பது வரலாறு.

'கடிதென வந்த கரிதனை உரித்து அவ்வுரி மேனி மேல் போர்ப்பார்'. யானையின் உடலையும் தோலையும் போர்த்து எம்பெருமான் தாண்டவம் ஆடிய தலம் தமிழ் நாட்டிலே வழுவூர் என அழைக்கப்படுகின்றது. இச்சம்பவம் சிவனுடைய அட்ட வீரட்டானங்களில் ஒன்றாகும்.

எனவே இறைவனை மறந்தால் இன்னல்களை எதிர்நோக்க வேண்டி வரும். நாம் இறை சிந்தனையை வளர்ப்போம். கடவுள் பயமே ஞானத்தின் ஆரம்பம். ●

## 94. மனம் ஒரு குரங்கு

**நா**ம் ஒருவருக்கு வணக்கம் செலுத்தும் போது எம்முள்ளே பணிவு பிறக்கின்றது. நிறைவு எழுகின்றது, மனம் மகிழ்கின்றது, எவையெல்லாம் மனதை மகிழ்விக்கும் நற் செயல்களோ அவை எல்லாம் பண்பினுள் அடக்கம், சமயத் துள் அடக்கம். இவை இறைவனுக்குச் சமர்ப்பணம் என்கின் றது எமது இந்து மதம்.

பணிவு, தியாகம், பொறுமை, புரிந்துணர்வு ஆகிய நற்பண்புகளை எந்த சமயமுமே ஒதுக்கியதில்லை எல்லாச் சமயங்களுமே இப்பண்புகள் மனித வாழ்க்கைக்கு அவசியம் என தவறாது வலியுறுத்தி வருகின்றன. ஆனால் நாம் தான், இவற்றை எவ்வளவிற்கு கடைப்பிடித்து வருகின்றோம் என்பது கேள்வி!

எம்மிடம் பொறுமை இருக்குமானால், எச்சந்தர்ப்பத்திலும் பொறுமையை யாம் கடைப்பிடிப்போமேயானால், வாழ்க்கை யில் வெற்றி எமக்கே. எமது மனதை நல்ல வழியில் செலுத்தப் பழகிக்கொள்ளுவோமானால், பொறுமை எம்மிடம் தஞ்சமே புகுந்து விடும். காரணம், பல சந்தர்ப்பங்களில் மனம் தான் எமது பொறுமையை யாம் இழக்க காரணமாக அமைகின்றது. 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாம்' என்ற வாக்கு, கோடி பெறும்.

உதாரணத்துக்குப் பாருங்கள்! கப்பல் ஒன்று கடலில் சென்று கொண்டிருக்கின்றது. அலைகள் காற்றுக்கு ஏற்ப மோதி அக்கப்பலை அங்கும் இங்கும் அலைக்கத்தான் செய்கின்றன. ஆனால் கப்பலில் உள்ள காந்த ஊசியைப் பாருங்கள்.

அது மட்டும் எந்தக் காற்றின் போதும் எந்தத் தடுமாற்ற மும் அடைவதாக இல்லை. ஒரே முடிவாக வடக்கிலேயே பதிகிறது. அதே போன்று தான் எங்கள் எண்ணங்களை எச்சிலுசிலுப்புமில்லாமல் இறைவனின் பக்கமாகவே தொடர்ந்து செலுத்துவோமானால் இந்தப் பழக்கத்தால் எமது மனம் காந்த ஊசி போல் சிறிதும் சலனம் அற்றதாகி தடுமாற்றமின்றி செயற்படும். இந்நிலை எமக்கு மன உறுதியையும் துணிவையும் தரும். இந்த உண்மையை தாயுமானவார் கூறுமாற்றைப் பாருங்கள்.

**காந்தம் இரும்பைக் கவர்ந்து இழுத்தால் என்ன**
**அருள் வேந்தன் எம்மை இழுத்து**
**மேவுவனே பைங்கிளியே!** இது தாயுமானவர் சொன்னது.

எமது மனதுக்கு பொறுமை என்னும் ஆபரணத்தை மாத்திரம் நாம் அணிவித்து விட்டால் பின் பிரச்சினையே இல்லை. எம்மை பதட்டப்படவோ அலைபாயவோ வைக்காது.

அதே நேரம் பொறுமை என்பதும் தக்க சமயத்தில் இடம் அறிந்து, சந்தர்ப்பம் அறிந்து, கடைப்பிடிக்க வேண்டிய தொன்றாகும்.

நாம் எமது சூழலை இன்னமும் சரிவரப் புரிந்து கொள்ள வில்லை என்பதற்கு நான் படித்த ஒரு கதையைக் கூறுகின் றேன்.

ஒரு பெரிய சந்தைக்கு அருகே ஒரு ஏழை நீண்ட காலமாக பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். என்றுமே அவன் யாரை யும் கூவி அழைத்து தொந்தரவு செய்ததில்லை. கைகளில் ஒன்றை மட்டும் நீட்டிக் கொண்டு நிற்பான். அவ்வளவு தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை தராத பிரச்சைக்காரன். பாதையில் போவோர் வருவோர் ஏதாவது பணம் போட்டால் சரி. 40 வருடமாக அவன் அவ்வாறு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தானாம்.

ஒரு நாள் அவன் திடீரென அந்த இடத்திலேயே இறந்து கிடந்தான். பாதையில் போவோர் வருவோர் அவனுக்கு அனுதாபம் காட்டினர். தொல்லை தராத அந்த பிச்சைக் காரனுக்கு அதே இடத்தில் சிலை ஒன்று எழுப்ப முடிவு செய்து, அந்த இடத்தைக் கொத்தித் தோண்டினர்.

அப்போது "ணங்" என்று ஒரு சத்தம் கேட்க மேலும் அந்த இடத்தைப் தோண்டிப் பார்க்க அங்கே ஒரு செப்புக்குடம் நிறைய தங்க நாணயம் கிடக்கக் கண்டனர்.

கூட்டத்தில் நின்ற ஒருவர் கூறினார். பார்த்தீர்களா! தனது காலுக்குக் கீழே இத்தகைய புதையல் இருந்தும் அதை அறியாத பிச்சைக்காரன் வருடக்கணக்காக பைசாவுக்காக கையேந்தி நின்று, ஈற்றில் செத்தும் போனானே என்றார் ஆதங்கத்தோடு. அப்போது அவ்வழியே வந்த துறவி ஒருவர் நடந்தவற்றை அறிந்ததும் கூறினார்.

இதே நிலை தான் எமக்கும். எமது மனதில் குவிந்திருக்கும் திறமையையும் மகிழ்ச்சியையும் தெய்வத்தையும் நாம் உணராமல், புரியாமல், அது வெளியே இருப்பதாக எண்ணிக் கொண்டு எங்கெங்கெல்லாமோ அலைகின்றோம். இவ்வாறு அலைவதிலேயே எமது காலம் கழிகின்றது என்றார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் பின்பு தான் தமது நிலை புரிந்து சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

எனவே இந்த வகையில் நாம் எங்கே உள்ளோம்? சற்று சிந்திப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 95. நிஜமும் நிழலும்

எது நிஜம் எது நிழல்! இந்த வேற்றுமையை சில இடங்களில் எளிதாக கண்டுகொள்ள முடியாது திருமூலர் ஒரு சிறந்த யோகீஸ்வரர். அவர் மிகப் பெரிய தத்துவங்களை எல்லாம் இலகுவாகச் சொல்லி விடுவதில் வல்லவர். அவரது திருமந்திரம் சொல்லும் வாக்கைப் பாருங்கள்.

**மரத்தை மறைத்தது மாமதயானை**
**மரத்தில் மறைந்தது மாமதயானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்**

இவ்வரிகளில் அடங்கியுள்ள உண்மையைப் பாருங்கள்.

அதற்காக உங்களுக்கு ஒரு சிறுகதை.

ஒரு நாள் ஒரு தந்தையும் குழந்தையும் ஒரு கோயிலுக்குச் சென்றார்கள். அக்கோயில் மண்டபத்திலே அழகான ஒரு யானை வாகனம் வைக்கப்பட்டிருந்தது. அது மரத்தால் செய்யப்பட்ட யானை ஆனால் தத்ரூபமாக நிஜயானை போல் காட்சியளித்தது.

அந்த யானையைப் பார்த்ததும் குழந்தை பயந்து விட்டது. "அப்பா" கிட்டப் போகாதீர்கள். அது மோதும் என்று கத்தியது குழந்தை. தந்தையார் சொன்னார் "மகனே! இது நிஜ யானை அல்ல மர யானை நீ பயப்படாதே" என்றார்.

குழந்தைக்கு அந்த யானை நிஜயானையாகவே தோன்றியது. அது மரத்தால் செய்யப்பட்டது என்ற அறிவு அதற்கு இருக்கவில்லை. எனவே அக்குழந்தைக்கு, அப்பா எது கூறியும், அது நிஜ யானையாகத்தான் காட்சி கொடுத்தது.

தந்தைக்கு அது மரத்தால் ஆனது என்ற உண்மை தெரிந்ததால் அது எத்தனை தத்ரூபமாகக் காட்சி கொடுத்த போதும் அது மரமாகவே அவருக்குத் தோன்றிது.

இங்கே தான் திருமூலர் கூறும் மிகப் பெரிய உண்மை மறைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை வேறு மரம் வேறு அல்ல என்றது போல் பரமாத்மா வேறு உலகம் வேறு அல்ல. குழந்தைக்கு பொம்மையில் மரம் தெரியாதது போல் எமக்கு உலகத்தில் பரம் பொருள் தெரிவதில்லை. பார் முதலான பஞ்சபூதங்கள் எமக்கு பரத்தை மறைத்து விடுகின்றன.

இதையே திருமூலர்

**"பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார் முதல் பூதம்"**

என்கின்றார். இங்கு பூதம் என்பது ஐம்பூதங்களைக் குறிக்கின்றது.

ஆனால் ஞானிகளுக்கு பார்முதல் பூதங்கள் பரத்தை மறைக்கமாட்டா. அவர்களுக்கு பரத்தில் பார் முதல் பூதங்கள் மறைந்துவிடும் இதுவே தான் சாதாரண மனிதனுக்கும் ஞானிகளுக்கும் உள்ள வேறுபாடு.

சாதாரண மனிதன் என்ன நினைக்கின்றான்? பணமும் வசதியான வாழ்வும் இருந்தால் போதும் பரத்தைப் பற்றியும் பாரைப் பற்றியும் நமக்கென்ன கவலை என்ற நினைப்பு அவனுக்கு.

ஆனால் யதார்த்தமாகச் சிந்தித்துப் பாருங்கள்! பணமும் வசதிகளும் எமக்கு நிம்மதி, சாந்தி, பயமின்மை ஆகியவற்றைக் தருகின்றனவா? பணக்காரன் தன் பணத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற பயத்தில் நிம்மதியை இழக்கின்றான். தூக்கத்தை மறக்கின்றான். தங்க நகையை அணிந்து வெளியே சென்றாலே நிம்மதி போய் விடுகின்றது இன்று.

அது மாத்திரமல்ல வாழ்வில் வசதிகள் கிடைத்ததும் போட்டி மனப்பான்மை எற்படுகின்றது. எல்லாச் சௌகரியங்களும் எல்லார்க்கும் கிடைக்கும் என்று வைத்துக் கொள்வோம் உடனே அவை எமக்கு முதலில் கிடைத்தால் என்ன என்ற போட்டி மனப்பான்மை வந்து விடுகின்றது. இந்த போட்டி மனப்பான்மை, மனித சுபாவம் நிம்மதியை இலகுவில் கெடுத்து விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இருக்கின்றவரையில் மனிதனுக்கு மன நிறைவு கிடையாது. ஒரு சின்ன உதாரணம். ஆலயத்தில் பூசை முடிந்ததும் கற்பூர தீபத்தை கண்ணில் ஒற்றிக்கொள்ள நாம் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு முன்னேறுவதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இதுவா எமது வாழ்வின் முன்னேற்றம்? பொறுமையாக நின்றாலும் கற்பூர தீபத்தைக் கண்ணில் ஒற்றும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும், என்பது நிட்சயம் எமக்குத் தெரியும். இருந்தும் நாம் என்ன செய்கின் றோம்! குருக்கள் ஐயாவையும் இடித்துத் தள்ளாத குறையில் அல்லவா கற்பூர தீபத்தை நோக்கி விரைகிறோம்!

இன்னமும் பாருங்கள், பூசை முடிந்தால் விபூதி பிரசாதம் நிச்சயம் எல்லோருக்கும் கிடைக்கும் என்பது எமக்குத் தெரியும். இருந்தும் எம்மில் எத்தனை பேர் பொறுமையாக நிற்கின்றோம்? அதற்கும் ஒரு இடி இடித்துக் கொண்டு முன்னேறி குருக்கள் ஐயாவின் பாதையையுமல்லவா தடை செய்கின்றோம்! இவை நாம் அன்றாடம் காண்பது. இவ்வண்ணம் எத்தனையோ சந்தர்ப்பங்கள்.

இவற்றிற்கு விதி விலக்குகளும் இருக்கத்தான் செய் கின்றன.

இருந்தாலும், இதனால் தான் ஆலய நிர்வாகம் ஆலய மண்டபத்துள் கயிறு கட்டி, கம்பி அடித்து, மெய்யடியார் கூட்டத்தை ஒழுங்குபடுத்த வேண்டி உள்ளது. இது எத்தனை பரிதாபம்!

நாம் எந்த இலட்சியத்தை நோக்கி எங்கே போய்க் கொண் டிருக்கின்றோம்? சிந்திப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௯௬. அருளாளர்கள்

இறைவனின் அருளைப் பெற்ற பாக்கியம் உடையோர் அருளாளர்கள் எனப்படுவர். எமது சமயத்திலே சமய குரவர் கள் சந்தான குரவர்கள் அருணகிரி நாதர் போன்றோர் ஈசனால் ஆட்கொள்ளப் பெற்ற அருளாளர்கள்.

வைணவ சமயத்திலே பன்னிரு ஆழ்வார்கள் ஸ்ரீ ராமதாசர் சைத்தன்யர் போன்றோர் மிக மேன்மை பெற்ற அருளாளர் கள். அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் இறையின் இன்னருள் இழையோடிய விந்தையை அவர்கள் வரலாற்றை விளக்கமாகப் படித்தால் யாம் அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, ஸ்ரீராமதாசரது வாழ்வில் இடம் பெற்ற ஒரு அருள் நிறை சம்பவத்தை யாம் இவ்விடத்து நோக்கு வோம்.

மகாராஷ்டிரத்தை ஆண்டு வந்த சத்ரபதி சிவாஜியின் குருவாகத் திகழ்ந்தவர் ஸ்ரீசமர்த்த ராமதாசர். இவரின் நற் போதனையின் வண்ணமே சிவாஜி மன்னர் தனது ஆட்சியை நடாத்தி வந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் மன்னர் சிவாஜியின் அழைப்பின் பேரில் ஸ்ரீராம தாசர் தஞ்சைக்கு வந்திருந்தார். ஐம்பொன்னால் சிற்பம் செய்யும் ஆற்றல் பெற்ற சிற்பிகள் வாழும் இடம் தஞ்சை என்பதை நன்கறிந்த ஸ்ரீராமதாசர், தான் அங்கு நிறுவிய மடத்தில், ஸ்ரீராமபிரானின் ஐம்பொன் விக்கிரகம் ஒன்றை அங்கு வாழ்ந்த திறமான சிற்பி ஒருவர் மூலம் அமைக்க விரும்பினார்.

எனவே தனது எண்ணத்தின் படி ஸ்ரீராமபிரான் ஐம்பொன் விக்கிரகம் ஒன்றை வடித்தெடுக்க சிறந்த சிற்பி ஒருவரையும் அழைத்து வரப்பணித்தார்.

பல்வேறு இடங்களில் தேடியும், தஞ்சையில் அந்நேரத்தில் ஒரே ஒரு சிற்பி மட்டும் இருந்தார். எனினும் அவர் மூப்பினால் பார்வையை இழந்துள்ளார் என்று அவருக்குப் பதில் கிடைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. எனவே அவரால் இந்நிலையில் சிற்பம் வடித்தெடுக்க முடியாது என்ற பதிலும் வந்தது.

ஆனால் ஸ்ரீசமர்த்தராமதாசர், விடுவதாக இல்லை. "எப்படியா யினும் சரி நீங்கள் அந்த கண்பார்வையற்ற சிற்பியை உடனடியாக அழைத்து வாருங்கள;" என மீண்டும் பணித்தார்.

சிற்பி வருவதற்கு முன்பாக ஸ்ரீராமதாசர் மெழுகினால் ஸ்ரீராமன் இலட்சுமணன் சீதை அனுமர் ஆகியோரது வடிவங்களை அமைத்து வைத்திருந்தார்.

சிற்பி வந்ததும் தமது கண்களை மூடி பகவானைத் தியானித்தபடி தன் கரங்களால் சிற்பியின் கண்களைத் தொட்டார். தொடவும் சிற்பியின் கண்கள் ஒளி பெற்றன. சிற்பியால் நன்கு பார்க்கவும் முடிந்தது.

களிப்போடு ஸ்ரீராமதாசர் சிற்பியை நோக்கிக் கூறினார். ஒளி பெற்ற உமது கண்களால் இச்சிற்பங்களை ஐம்பொன் னில் அழகாக அமைவாக வடித்துத் தரல் வேண்டும். அதற்கு பதில் அளித்த சிற்பி கூறினார். "மகாபிரபோ" தாங்கள் கேட்டுக் கொண்டபடி ஐம்பொன்னில் விக்கிரகங்களை வடித்துத் தருகின்றேன். ஆனால் ஒரு வேண்டுகோள் தாங்கள் எனது கண்களுக்கு பார்வை தந்தமைக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

ஆனால் நான் ஐம்பொன்னில் சிற்பங்களைச் செய்து முடித்ததும், மீண்டும் என் கண்பார்வையை எடுத்து விடுங்கள் என்று கூறி முடித்தார் சிற்பி.

ஸ்ரீராமதாசர் திகைத்தே போய் விட்டார் "ஏன் இந்த விபரீத ஆசை! சிற்பியாரே?" சிற்பியார் பதில் அளித்தார்.

மகா பிரபோ! தங்களைப் போன்ற மகான்களைக் கண்ட பின்னரும், ஸ்ரீராமனின் திருவுருக் கொண்ட சிற்பத்தை ஐம்பொன்னில் வடிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்ற பின்னரும், இனி எனக்கு கண்கொண்டு பார்ப்பதற்கு உலகிலே வேறு என்ன இருக்கின்றது! இத்தகைய நிகழ்வின் பின்னர், உலக விவகாரங்களைக் கண்கொண்டு பார்த்து மனச் சஞ்சலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ, யான் விரும்பவில்லை அதற்காகவே தான், அவ்வாறு கூறி னேன் எனப் பதிலளித்தார் சிற்பி.

சிற்பியின் ஆழமான உயர் நோக்கை எண்ணி வியப்பில் ஆழ்ந்தார் ஸ்ரீராமானுஜர். பக்தியும் பக்குவமும் எங்கெங்கெல் லாம் இழை ஓடுகின்றது பார்த்தீர்களா?

ஐம்பொன் சிற்பங்கள் நான்கும் தயாராகின. சிருஷ்ணபட்ச பஞ்சமி திதியன்று "சர்ஜன் காட்" என்ற புண்ணிய தலத்திற்கு அவை அனுப்பப்பட்டன. அம்மூர்த்திகளின் இன்னருள் பெற்ற ஸ்ரீராமனுஜர் அதே மாதம் கிருஷ்ண பட்சத்து நவமியன்று ஸ்ரீராமபிரானுடன் ஐக்கியமானார்.

இத்தகைய அருளாளர்களின் வரலாற்றைக் கேட்பதில் புண்ணியம், படிப்பதில் புண்ணியம், எடுத்துச் சொல்வதில் புண்ணியம். இவற்றில் ஒன்றைத் தன்னும் செய்யாது நாம் வாழ்வதில் என்ன புண்ணியம்? ●

## 97. ஐயப்பன்

அழகே வடிவான மோகினியாக வந்த நாரயணனின் காருண்யமும் பரமேஸ்வரனின் சாந்த குணமும் ஒன்று சேர்ந்த ஜோதியில் தோன்றியவரே ஐயப்ப சுவாமிகள் ஆவர். இவரை ஹிரிஹரபுத்திரன் என்றும் சாஸ்தா என்றும் ஐயனார் என்றும் அழைக்கின்றோம்.

ஐயன் என்றால் "மதிப்புக்குரிய என்று பொருள். சாட்சாத் பரமேஸ்வரனுக்கும் சௌந்தர்யம் நிறைந்த நாராயணனுக்கும் உதித்த குழந்தையாகிய ஐயப்பன் மதிப்புக்குரியவர் என்பதில் ஐயம் தான் ஏது? சந்தேகமா?

சிவனாரின் ஞானமும் தபசும் விஷ்ணு பகவானின் சௌந்தர்ய சக்தியும், ஒவ்வொருவரது வாழ்வும் உய்வு பெற வேண்டியவை. இந்த இரண்டும் கலந்த அம்சமே ஐயப்ப சுவாமிகள். எனவே அவரை நம்பி வழிபடுவோருக்கு வாழ்வில் உய்வு பெற வாய்ப்புக்கள் ஏராளம். இத்தனை மரியாதைக்குரிய பதமாக "ஐயன்" என்ற சொல்லையே தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு நாமமாகக் கொண்ட ஐயப்பன் பொதுவாக தமிழ் நாட்டிலே கிராமப்புறக் கோயில்களிலே வணங்கப்படும். தெய்வமாக அமைந்துள்ளார். சபரிமலை, சாத்தனூர் என்னும் இடங்களிலே முக்கியம் வாய்ந்த தெய்வமாக விளங்குகின்றார் ஐயப்பன். தமிழ் நாட்டிலே கிராமத்துக்குக் கிராமம் ஐயனார் கோயில்கள் ஏராளமாக உண்டு.

ஐயப்பன் எம்மைக் காக்கும் தெய்வம். கருப்பு முதலான பலவித சக்திகளிலிருந்து காப்பாற்ற நாராயணனிடமிருந்து அனைத்து சக்திகளைப் பெற்றுள்ளார் இவர். அத்தோடு ஈஸ்வரனிடமிருந்து ஞானத்தையும் பெற்றுள்ளார்.

கேரளத்தில் சபரிமலையில் எட்டாத உயரத்தில் அமர்ந்தருளிய ஐயப்பன் இப்பொழுது தமிழ் நாட்டிலேயும் தன் கிருபா நோக்கத்தைத் திருப்பியுள்ளார். தமிழ் மக்களிடம் ஐயப்பப் பக்தி ஒரு அருமருந்தாக அமைந்துள்ளது.

எமது நாட்டில் ஐயப்ப வணக்கமும் சாஸ்தாபீடமும் அமைந்துள்ளமை எமக்கும் நல்லதோர் எதிர்காலம் உண்டு என்பதைக் காட்டுகின்றது எனலாம்.

ஐயப்பன் ஸ்ரீஹரிஹர புத்திரன் ஆவார். இவரை தமிழ் மக்கள் பெரும்பாலும் கிராம மக்கள் காவல் தெய்வமாக நகரின் எல்லையில் வைத்து மிக்க பயபக்தியோடு படையல் இட்டு வணங்கி வருகின்றனர். இவ்வழிபாடு இந்து சமய வழிபாட்டோடு இணைந்துள்ளது.

ஆரம்ப காலச் சைவம் என்று எடுத்துக் கொண்டால் ஆதியில் இந்து நதிக்கரை நாகரிகமே சிறந்து விளங்கியது ஹரப்பா மொகஞ்ஜதாரோ அகழ்வாராய்ச்சிகளின் போது சிவபிரானது உருவங்களும் இடபத்தின் சின்னங்களுமே காணப்பட்டன. இந்து நதியை அண்டி வாழ்ந்த இந்துக்களின் வழிபாடே ஆரம்பத்தில் இருந்தது. சில சமயம் அதிமேன்மையும் பெற்றிருந்தது.

காலப்போக்கில் ஆரியப்படை எடுப்புக்களின் காரணமாக சிலைகளும் பல தெய்வ வழிபாட்டு முறைகளும் அறிமுகமாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் வழிபாட்டு முறையில் அருவ, உருவ, அரு உருவ வகைகள் உண்டு. உருவ வழிபாட்டு அவயங்கள் சிவலிங்க வழிபாடுகளின் முதிர்ச்சி நிலையில் எழுந்த, மனதில் இறையை இருத்தி வணங்கும் மானஸ வழிபாடு ஆகிய வையே இம்மூன்றுமாம்.

கிராமமக்கள் ஐயப்ப சுவாமியை பக்தி உணர்ச்சி பொங்க படையல் செய்து வழிபடும் காட்சி அமைதியும் பய பக்தியும் கலந்த நிறைவான ஒரு காட்சி ஆகும்.

ஐயப்பனாரின் பிரமாண்டமான சிலை வடிவங்களை தமிழ் நாட்டு கிராமங்கள் தோறும் காணலாம். ஐயப்ப வழிபாடு தொன்மையானது என்பதற்கு சங்க இலக்கியங்களில் வரும் சாத்தனார் என்னும் பெயருடைத் தெய்வமே சான்றாகும். ஐயப்பன் இவரே எனக் கருத இடமுண்டு. ஒட்டக் கூத்தனாரின் “தக்கயாக பரணி” யில் சாத்தனுக்கு நெல்லும் மாமிசமும் படைக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது. குலோத்துங்கன் காலத்திலிருந்து ஐயப்ப வழிபாடு இருந்து வந்தமைக்கு நூல்கள் சான்று பகர்கின்றன.

விஞ்ஞானமும் நாகரிகமும் ஓங்கி வளர்ந்து விட்ட போதிலும், மக்களின் தொன்மை வாய்ந்த பழக்கங்கள், பண்பாடு, வழிபாட்டு முறைகள், யாவும் பாரம்பரியங்கள் மாறாது, வழி வருவதால் தான், கிராமப் புறங்களில் நகர்புறங்களிலும் பார்க்க ஆன்மீகம் வேர் விட்டு நிலைத்து நிற்கின்றமை கண்கூடு.

நெஞ்சம் நிறைந்த நம்பிக்கையோடும் உற்சாகம் நிறைந்த மன நிறைவோடும் நாம் ஐயப்ப சுவாமியை வழிபடின் எமக்கு காவல் வேறு தேவையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 98. புராணங்கள் பொய்யா?

புராணங்களை நம்ப முடியாது என்று கூறி வாதாடுகின்றார்கள் எம்முள், ஒரு சிலர். புராணங்களிலே யாம் காணும் கருத்துக்கள் யதார்த்த நிலவரங்கட்கு வேறான விஷயங்களாக இருக்கின்றனவாம். தேவர்கள் வந்தார்கள் போனார்கள் வரம் கொடுத்தார்கள் சூரியனை உதிக்காமல் நிறுத்தி வைத்தார்கள் இதெல்லாம் எம் சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களாக அல்லவா தோன்றுகின்றன. இவை எல்லாம் வெறும் புரட்டாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது என்றும் இடையிடையே கூறுகின்றார்கள் அப்படியானால் இவர்களுக்கு நாம் என்ன பதிலைக் கூறுவது.

இப்படிச் சொல்வோமா? இத்தகைய சம்பவங்கள் இந்தக் காலத்திலே எம்மிடையே நடக்கவில்லை என்பதற்காக எந்தக் காலத்திலும் இவை நடக்க வில்லை நடந்திராது என்று சொல்லி விட முடியாது. இது எப்படி?

வேத மந்திர சக்தியும் உயர் தவசும் யோக, அனுஷ்டானங்களும், சத்தியமும் மிகுந்த சக்தியோடு பூர்வ காலத்தில் செயற்பட்டன என்பது உறுதி. அதற்கு சான்றாக பல வரலாறுகளும் உள்ளன. நூல்களும் ஆதாரங்களாக உள்ளன இத்தகைய உயர் அனுஷ்டானங்கள் இருந்தவரை தேவ சக்திகளை பூமியில் உள்ளோர் மிக சுலபமாகக் கிரகிக்கக் கூடியதாய் இருந்திருக்கின்றன என்பது உண்மை.

வெளிச்சம் இருந்தால் கூடவே நிழலும் இருளும் இருக்கும் என்கின்ற நியதிப்படி தேவ சக்திகளைப் போலவே அசுர சக்திகளும் ஸ்துாலமாக தெரியுமாறு உலகத்தில் இருந்திருக்கின்றன.

ஏன் இப்போதும் கூட தேவ அசுர யுத்தம் மனித கண்களுக்குத் தெரியாமல் இடம் பெறத்தான் செய்கின்றன. அவை தான் நல்லது கெட்டதுகளின் மோதல்கள், உரிமைப் போராட்டங்கள் என்பன.

அந்தக் காலத்தவர்க்கு நல்லது கெட்டவற்றை தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபோ சக்தியால் கண் கொண்டு பார்க்க முடிந்தது. எல்லா விதமான ஒலி ஒளி வகைகளும் சாதாரண மனுஷ கண்ணின் லென்சுக்கு அகப்பட்டு விடாது என்று விஞ்ஞானிகள் ஏற்கனவே கூறி வைத்துள்ளார்கள். மேலும் ஒரு படி மேலே போய் தேவதைகள் இருந்தார்கள் அவர்களுள்ளும் நல்ல தேவதை கள் கெட்ட தேவதைகள் என இருந்தனர் என்றும் எழுதி வைத்துள்ளனர்.

விஞ்ஞானத்தால் நிரூபிக்க முடியாதவற்றை எல்லாம் வெறும் புரளி எனக் கூறி விட முடியாது. அவ்வாறு கூறி புராணங்களை ஒதுக்கி வைப்பது என்பது கொஞ்சம் கூட முறையான பாங்கு ஆகாது.

இதனை ஆதங்கமும், அவசர புத்தியுமே என்று கொள்ளலாம். வரலாறுகளுக்குக் கொடுக்கும் கௌரவத்தை, புராணங்களுக்குக் கொடுத்தே ஆக வேண்டும். புராணங் களும் வரலாறே தான். கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாயிரம் வருடத்துக்குள் நடந்தவை தான் எனக் கொள்ளக்கூடாது. புராணக் கதைகள் பாடசாலைப் புத்தகங்களிலே தாராளமாக இடம் பெற வேண்டும். அவை கூறும் கரு இளம் சிறார்களின் மனதிலே இடம் பெற இது ஒரு நல்ல வாய்ப்பாகவும் இளம் சிறார்கள் இன்று பாடசாலையில் கற்றுக் கொள்ளும் சத்தியம் ஒழுக்கம், கலாச்சாரம் பேணல் போன்ற நற்பண்புகள் எதிர் காலத்தில் நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கவும் வழிகோலுகின்றது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

எனவே, பழையதோ புதியதோ, எங்கு நல்ல பண்புகள் காணப்படுகின்றதோ, அவற்றை உடனடியாக ஏற்றுக் கொள்வோம். ஏன் எனில், நற்பண்புகளே இன்றைய சமுதாயத் திற்கு மிக அவசரமாக தேவைப்படுகின்றது. இல்லையா?

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 99. தல புராணங்கள்

**வே**தத்தில் எது சொல்லப்பட்டிருந்தாலும் அது சத்தியம் என்று இந்துக்களாகிய நாம் நம்புகின்றோம். அதே போல் தமிழ் வேதமாக உள்ள தேவார திவ்விய பிரபந்தங்களில் சொல்லியிருப்பதையும் நாம் ஏற்று அதன்படி நடந்தாக வேண்டும்.

அநேக ஷேத்திரங்களில் பாடப் பெற்ற தேவாரங்களிலும் ஆழ்வார்களின் பாசுரங்களிலும் அந்தந்த ஸ்தலங்களின் மகிமை சொல்லப்பட்டுள்ளது.

உதாரணமாக ஸ்ரீரங்கத்திலே பெருமாள் வேறு எந்த தலத்திலும் இல்லாத மாதிரி தெற்கே பார்த்துக் கொண்டு சயனத்திலே இருக்கின்றார். இதற்கு அந்த ஷேத்திர புராணம் காரணம் சொல்லியிருக்கின்றது.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்குப் பட்டாபிஷேகம் ஆன பின்னர் விபீஷணன் இலங்கைக்குத் திரும்பிப் போன போது இராமபிரான் தாம் வழிபட்டு வந்த ஸ்ரீரங்க நாத விக்கிரத்தை அவனுக்குக் கொடுத்தாரென்றும் இலங்கை திரும்பும் வழியிலே உபயகாவேரிக்கு நடுவே ஸ்ரீரங்கத்தில் அவ்விக்கிரகம் பிரதிஷ்டையாகி விட்டதென்றும் தன்னோடு இலங்காபுரிக்கு ரங்கநாத விக்கிரத்தை எடுத்துசெல்ல முடியவில்லையே என்று ஆதங்கப்பட்ட விபீடணனைத் திருப்திப்படுத்தவே ஸ்ரீரங்கநாதர் தெற்கு நோக்கிச் சயனித்திருக்கிறார் என்றும் ஸ்ரீரங்க ஸ்தல புராணம் விரிவாகக் கதை சொல்லியுள்ளது. இந்த இடத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடலை நோக்குவோம்.

**குடதிசை முடியை வைத்து**
**குணதிசை பாதம் நீட்டி**
**வடதிசை பின்புகாட்டி**
**தென்திசை இலங்கை நோக்கி**
**கடல் நிறக் கடவுள் எந்தை**
**அரவணைத் துயிலுமாக் கண்டு**
**உடல் எனக்கு உருகுமாவோ**
**என் செய்வேன் உலகத்தீரே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இந்த நிகழ்வை இங்கு பாடியுள்ளார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

ஸ்ரீரங்கத்துக்குப் பக்கத்தே உள்ள தலம் திருவானைக்காவில். இத்தலத்திற்கு ஜம்புகேஸ்வரம் என்றும் ஒரு பெயர் உண்டு. இத்தலத்தின் பின்னணியிலும் ஒரு வரலாறு உண்டு. ஜம்பு என்றால் நாவல் மரம் என்பது பொருள்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஜம்புமஹாரிஷி என்பவர் நாவல் மரமாக மாற அதன் கீழேயே ஈஸ்வரன் கோயில் கொண்டார்.

சிலந்தி ஒன்று ஈஸ்வரலிங்கத்துக்கு பந்தல் போட்டு பூசித்து வந்தது இந்தப் பந்தலை அறுத்துக் கொண்டு யானை ஒன்று இலிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணிப் பூசித்தது.

இதனால் சிலந்தி ஆத்திரம் கொண்டு யானையின் தும்பிக்கைக்குள் புகுந்து அதன் தலைக்குள் புகுந்து குடைந்து அதனைத் துன்புறுத்தியது. இதனால் யானை வருத்தம் தாளாமல் தன் தலையை மோதி இறந்தது. சிலந்தியையும் சாகடித்து விட்டது.

இந்தச் சிலந்தி பிற்பாடு கோச்செங்கட் சோழனாகப் பிறந்து ஜம்புகேஸ்வர ஆலயத்தை கட்டியதாக இத்தல புராணம் கூறுகின்றது.

இச்சம்பவத்தை அப்பர் சுவாமிகள் பின்வருமாறு மிக அழகாகப் பாடியுள்ளவற்றைப் பாருங்கள்.

**சிலந்தியும் ஆனைக்காவில் திரு நிழல் பந்தல் செய்து**
**உலத்தவன் இறந்தபோதே கோச்செங்கணானுமாகி**
**கலந்த நீர் காவிரி சூழ் சோணாட்டு சோழர் தங்கள்**
**குலந்தனில் பிறந்திட்டார், குறுக்கை வீரட்டனாரே**

என்கின்றது அப்பர் சுவாமிகளது தேவார பாடல்.

இந்த நிகழ்வை ஞானசம்பந்தப் பெருமான் தனது தேவாரப் பதிகத்தில்

"வெண்நாவல் மேவிய எம் அழகா" என்று பாடியுள்ளார். வெண் நாவல் எனச் சுவாமிகள் குறிப்பிடுவது ஜம்பு விருட்சத்தையே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரலாறுகளை விட பிரசித்தி அடையாத சில தலங் களில் ரிஷிகளும் தேவர்களும் வண்டுகளாக இருந்து எம்பெருமானுக்குப் காலம் காலமாகப் பூசை செய்து வந்த தாகவும் தல வரலாறுகள் கூறுகின்றன. சித்தர்கள் தேனீக் களாக மாறி பூசித்தார்கள் என்பதும் வரலாறு. தமிழ் நாட்டிலே நன்னிலம் என்னும் ஊரில் அவ்வாலய சந்நிதியிலே பெரிய தேனடைகள் இன்றும் உள்ளன. இதனால், மதுவனம் என்றும் ஒரு பெயர் இதற்கு வழங்கி வருகின்றது. தேனடை களுக்கும் சேர்த்துப் இவ்விடத்திற்கு பூசைகள் நடக்கின்றன.

எனவே, ஆண்டவன் எங்கே என்று அங்கலாய்க்கும் இன்றைய காலகட்டத்திலே, இத்தகைய தலங்களைத் தரிசிக் கக் கிடைத்தால், அது பெரும் பாக்கியமாகும். இல்லையா!

## 100. அகமும் புறமும்

மனிதனாக பிறந்த ஒவ்வொருவனும் ஓயாமல் அலைந்து கொண்டிருக்கின்றான். எதற்காக? தனது ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காகத்தான். தனக்கு வெளியே இருக்கின்ற பொருட் கள் மேல் மனிதனுக்கு ஆசை. அவற்றைப் பெறவே அவன் அலைந்து கொண்டிருக்கின்றான். தேடும் பொருள் ஒன்று கிடைத்தாலும் அவன் திருப்திப்படுவதில்லை. கிடைத்த பொருள் மூலம் கிடைக்கும் சுகம் தீர்ந்ததும் மீண்டும் இன்னொன்றுக்கு ஆசைப்படுகின்றான். இதனால் இவனுக்கு மன அமைதி என்பது அற்றுப் போகின்றது.

வெளியே இருக்கும் பொருள் கிடைத்தால் தான், ஆனந்தம் என்று அலைபவனுக்கு அமைதி எங்கே கிடைக்கப் போகின்றது! வெளியே இருப்பது எம்வசம் இருப்பதல்லவே! எனவே அதை நாம் துரத்திப் பிடிக்க வேண்டியிருக்கின்றது. அது கிடைத்தாலும் கிடைக்கும், கிடைக்காமலும் போய் விடும். எமக்கு வெளியே உள்ள விடயங்களிலிருந்து ஆனந்தம் பெறுவது என்பது இலகுவான காரியமல்ல. இது எமது நிம்மதியைக் கெடுக்கும் பிரயத்தனமாகவும் அமை யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மனிதன் தனக்குப் புறத்தே உள்ள விஷயங் களிலிருந்து அவன் ஆனந்தத்தைத் தேடி அலைவதன் காரணம், அவன் தனக்கு உள்ளே இருக்கும் நிலையான ஆனந்தத்தை அறியாமல் இருப்பது தான். இந்த அறியா மைக்கு காரணம் அவனைப் பிடித்துள்ள மாயையே ஆகும்.

இந்த மாயையை அகற்றி எம்முள் இருக்கும் நிஜ ஆனந்தத்தினை புரிந்து கொள்ள வேண்டுமானால், நாம் இறையை நாட வேண்டும், இறையைத் தியானம் செய்ய வேண்டும், வழிபட வேண்டும் தோத்தரிக்க வேண்டும், இறையோடு மனத்தால் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும், இறையில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

எம்முள் மறைந்து எமக்குப் புரியாமல் இருக்கும் ஆனந்தம் மகா சமுத்திரம் போன்றது. நாம் தேடி அலையும் வெளியே உள்ள ஆனந்தமோ சமுத்திரத்தின் ஒரு திவலை போன்றது.

இந்த உண்மையை ஒருவன் உணர்ந்து விட்டால், அப்புறம் அவன் ஆனந்தத்தை வெளியே தேட எத்தனிக்க மாட்டான். தனது உண்மை நிலையை உணர்ந்து பூரணமாக இருப்பான். அதுவே ஆத்மானந்தம் எனப்படுகிறது.

சமுத்திரம் அசைவதற்குத் தன்னும் இடமில்லாமல் நிறைந்திருக்கின்றது. நதிகள் தான் சமுத்திரத்தை தேடிப் பாய வேண்டும். பாய்ந்து அதனோடு சங்கமமாக வேண்டும். அதே போன்றது தான் இறைவனதும், ஆன்மாக்களதும் நிலையும்.

தேவேந்திர பதவியே, ஆத்மானந்த சமுத்திரத்துக்கு முன், ஒரு திவலை போன்றது. எமது வாழ்விலேயே பதவி பணம் குடும்பம் கௌரவம் யாவும் வெளியேயிருந்து யாம் பெறும் ஆனந்த வகைகள். ஆனால் இவை தற்காலிகமானவை. சமுத்திரம் வெளியே இருந்து வரும் நதிகளை தன்னுள் அடக்கிக் கொள்வது போல், இந்த உலக இன்பங்கள் எல்லாம் பரமானந்தத்துள் அடக்கும்.

செல்வந்தனும் உயர் பதவியிலிருப்பவனும் கஷ்டங்கள் எதுவும் இல்லாமல் இருப்பதாக மற்றவர்கள் நினைக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர்களுடைய கஷ்டங்கள் சுமைகள் அவர்கட்குத் தான் வெளிச்சம். செல்வந்தனுக்குத் தன் செல்வத்தைக் கட்டிக் காப்பதில் கஷ்டம். உயர் பதவி வகிப்பவனுக்கு தன் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதில் சிரமம். இவர்கள் மாடியில் இருப்பவர்கள். தவறி விழுந்தால் எலும்பும் மிஞ்சாது. ஆனால், சாதாரண மகன், திண்ணையில் இருப்பவன், தவறி விழுந்தால், சிராய்ப்புக் காயங்களோடு தப்பி விடுவான். எனவே இந்த இரு வகையினருள் யார் உயர்ந்தவர்? என்பது புரிகிறதல்லவா!

உண்மையில் உயர்ந்தவன் என்று கருதப்படுபவன் தெய்வ அருள் பெற்றிருக்க வேண்டும். இறையின் பரிபூரண கடாட்சத் தைப் பெற்றவனே உலகில் பெரிய பணக்காரன். பட்டுவேட்டி கட்டி பகட்டாக தோற்றாது காவியுடையிலும் கந்தல் துணி யோடும் காட்சி கொடுத்தாலும் உண்மைப் பக்தனே உலகில் மிகப் பெரிய செல்வந்தன் ஆகின்றான். 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு.

நாம் ஓடி ஓடி சம்பாதிப்பதில் ஒரு சல்லிக் காசு கூட எம்முடன் வராது. மறு உலகத்தில் எனக்கு வைப்பாக வருவது நாம் செய்யும் புண்ணிய பாவம், நாம் செய்யும் ஜபம், இவையே எமக்கு மறு உலகத்தில் செலவாணி. 'நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே' - என்கின்றது தேவாரம்.

எமது மனம் இறைவனின் இருப்பிடம். அதை வேண்டாத எண்ணங்களாலும் ஆசைகளாலும் குப்பபைத் தொட்டி ஆக்காமல் அதனைச் சுத்தமாக்கி மெழுகி எம்பெருமானை அமர வைத்து தினமும் 5 நிமிடங்களாவது தியானம் செய் வோம். உலகமே முழுகிப் போனாலும் செய்ய வேண்டிய காரியம் இறை தியானம். ஏனெனில் உலகம் மூழ்கும் போது கை கொடுப்பது இறைவன் நாமமே. செய்வோமா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# 101. மனோலயம்

பாரதியாரை ஒரு நாள் அவரது நண்பர் கேட்டாராம், உங்கள் முன் நீங்கள் பாடி மகிழும், போற்றி மகிழும் சக்தி தோன்றினால் என்ன வரம் கேட்பீர்கள் என்று. அதற்கு பாரதி விடை அளித்தாராம், இவ்வாறு :-

"தாயே! வயதில் முதிர்ந்தவரது அறிவையும், நடுத்தர வயதினையுடையவரது மன உறுதியையும், இளைஞர்களது உற்சாகத்தையும், குழந்தையின் இதயத்தையும், எனக்கு எப்போதும் நிலைத்திருக்க அருள் செய்" என்று கேட்பேன் இது பாரதியார் அளித்த பதில்.

இத்தனையும் பெற்றாலும் இவை மாத்திரமல்லாமல் இறையின் பரிபூரணத்தை அறிய முற்பட எமக்கு அதற்குரிய மனோநிலையையும் இறைவன் எமக்குத் தந்தருள நாம் முயற்சிக்க வேண்டும். இறையைத் துதிக்கவும் சிந்திக்கவும் அதற்குரிய மனோநிலை எமக்கு வந்தாக வேண்டும்.

ஆயிரம் தான் சொன்னாலும், எந்நேரமும் இறைவனை எம்மால் துதிக்க முடிகின்றதா? இல்லையே? அதற்கும் நேரம் காலம் பக்குவம் எமக்கு கிடைத்தாக வேண்டும். அவனைத் துதிக்க அவனருள் வேண்டும். இதனையே மணிவாசகர் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்றார்.

இறைவணக்கம் மாத்திரம் அல்ல, எந்தக் காரியத்தை செய்யும் போதும் அதற்குரிய மனோநிலை எமக்கு இருக்கப் பெறுவது இன்றியமையாதது. எந்தச் செயலாக இருந்தாலும் சரி, வழிபாடோ, பாடுவதோ, படிப்பதோ, ஏன் சமையல் செய்வதோ எக்காரியம் செய்யினும் சரி, அதற்குரிய மனோ நிலை எமது மனதில் எழுந்தால்தான் நாம் எடுத்துக் கொண்ட அக்காரியத்தை மன உற்சாகத்தோடு முழுமையாகச் செய்து முடிக்கலாம். இது ஒவ்வொருவரும் தமது அனுபவத்தில் கண்டு வரும் நிஜம். இல்லையா?

உதாரணமாக, எமது ஆலயங்களின் அமைப்பே இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை எமக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றன. ஆலயங்களில் பல பிரகாரங்கள் உள்ளன, ஒவ்வொரு பிரகாரத்திலும் நாம் சுற்றி வரும் போது பலதரப்பட்ட சிற்பங்களையும் பல உண்மைகளை உணர்த்தும் ஒவ்வொரு அமைப்புக்களையும் அவதானித்த படி நாம் ஒவ்வொரு பிரகாரமாகச் சுற்றி வருகின்றோம். சிறிது சிறிதாக மற்றைய எண்ணங்கள் எல்லாம் எம்மை விட்டு விலகுகின்றன. ஈற்றில் கருவறையின் முன்னே நாம் சென்று அங்கு நின்று மூலவரை வணங்கும் போது எம்மால் முழு மனதுடன் தெய்வ சிந்தனையில் ஈடுபட முடிகின்றது. இதுவே நாம் முன்பு குறிப்பிட்ட எமக்கு வேண்டிய மனோநிலை.

மனம் ஒரு வழிப்பட்டு நின்றாக வேண்டும். இதுவே மனோலயம். இதேபோன்று தான் உயர் தத்துவங்களைப் படிக்கும் போதும், கேட்கும் போதும் அவற்றை அணுகும் முறை, நம்பிக்கை எமக்கு ஏற்பட்டாக வேண்டும்.

வெறும் வறட்டுப் புலமையால் நாம் உயர்ந்த உண்மைகளை ஒரு போதும் புரிந்து கொள்ள முடியாது. உயர்ந்த உண்மைகள் சான்றோர்களது அனுபவங்கள் பற்றி அறிய, விளங்கிக் கொள்ள, அதற்குரிய மனோநிலையை யாம் பெற்றாக வேண்டும்.

இதற்கு முதலில், இறைவன் பரிபூரணமானவன் என்ற பூரண நம்பிக்கை எமது மனதில் தோன்றியாக வேண்டும். இறைவனிடமிருந்து எத்தனை எத்தனையோ அண்டங்கள் உலகங்கள் தோன்றினாலும், அவனது பூரணம், முழுமை, ஆகிய இயல்புகள், சிறிதுமே குறைவதில்லை.

உதாரணமாக, ஒரு தீபத்திலிருந்து எண்ணற்ற தீபங்களை ஏற்றுவதனால் முதல் தீபத்தின், பூரண ஒளி மாறுவதில்லை. அதிலிருந்து ஏற்றப்பட்ட தீபங்களும் முழுமையாக நிறைந்த ஒளியைத் தருவனவாகவே அமையும்.

அதுபோலவே அன்பை எடுத்துக் கொள்வோம். நாம் வாழ்வில் எத்தனையோ பேரை நேசிக்கின்றோம். முழுமையாக அவர்களிடம் அன்பு வைக்கின்றோம். இதன் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் இருக்கும் அன்பு குறைகின்றதா? இல்லையே.

ஒரு செடியை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு செடியில் எத்தனையோ மலர்கள் மலர்கின்றன. ஒவ்வொரு மலரும், அழகும், முழுமையும் கொண்டுள்ளது. இதன் காரணமாக செடியின் வளமையோ, முழுமையோ குறைவதாக இல்லை. காரணம் செடியின் முழுமை வேறு மலரின் முழுமையோ வேறு.

இதேபோன்று தான் இறைவனின் இயல்பும் தன்மையும்.

எத்தனை எத்தனை அண்டங்கள் அவனிடமிருந்து தோன்றி னாலும் அவனது முழுமை என்றுமே மாறுவதில்லை.

இந்த உண்மையை யாம் உணர்ந்து பரிபூரணமான இறையை வழிபடுதலை எமது அன்றாட கடமைகளில் முக்கியமானதாகக் கொண்டு எமக்குக் கிடைத்த மனிதப் பிறவியின் பயனைப் பெற முயல வேண்டும். முயல்வோமா?

## 102. அந்திவானத்துச் சந்திரன்

திங்கள் என்றும் மதி என்றும் தண்ணிலா என்றும் வெண்ணிலா என்றும், ஆசையோடு செல்லமாக அம்புலி மாமா என்றும், அழைக்கப்பெறும் சந்திர பகவான் இந்து மதத்தில் நவக்கிரகங்களுள் மிக முக்கியத்துவம் பெறுகின் றார். புராணங்களில் பல்வேறு கதைகளும் சந்திரன் பற்றி உண்டு. இவற்றை விட சமூக ரீதியிலும் விஞ்ஞான ரீதியிலும் கூட, சந்திரன் முக்கியத்துவம் பெறுகின்றார்.

எம்முள், பூரணச் சந்திரனை விரும்பாதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

சமயரீதியாகச் சந்திரன் பற்றிப் பார்க்குமிடத்து, விஷ்ணு வின் இதயத்திலிருந்து தோன்றியவன் சந்திரன் என்று விஷ்ணு புராணம் கூறுகின்றது. அதேநேரம் பராசக்தியின் அம்சமாக வும் விளங்குபவன் சந்திரன் என வரலாறு ஒன்று உண்டு. சந்திரனது தேய்வு பற்றியும் வரலாறு உண்டு. அத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர் அனுசூயாதேவி இவர்களின் மகனான தக்கனின் சாபத்தால் தேயப் பெற்ற சந்திரன் பின்னர் சிவபிரானின் அருளால் வளர்ச்சி பெற்றமையும் ஒரு வரலாறு.

திருப்பாற்கடலைக் கடைந்து பெற்ற அமிர்தத்தை தேவர் களுக்கு வழங்கிய போது, அசுரர்கள் இருவர் திருட்டுத்தன மாக தேவ உருக்கொண்டு அமிர்தம் பெற்று விடுகின்ற னர். இதனைக் கண்ட சூரியனும், சந்திரனும் இவர்களைக் காட்டிக் கொடுத்தனர். இதனால் பகை கொண்ட ராகுவும் கேதுவும் சந்திரனுக்கு தீங்கு செய்யவே, இதன் காரணமாக சந்திரனின் வாழ்வில் களங்கம் ஏற்பட்டது.

அமுதைப் பொழியும் அற்புத நிலவான சந்திர பகவானுக்கு என்று தனிக்கோயில் கிடையாது. இருப்பினும், தமிழ் நாட்டில் உள்ள திங்களூரும், திருப்பதியும் சந்திர பிரீதி வணக்கத் துக்கு உகந்த தலங்களாகக் கொள்ளப்படுகின்றன. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான அப்பூதி அடிகள் வாழ்ந்த ஊர் திங்களூர் என்பது நேயர்கள் அறிந்ததே.

திருவையாற்றின் அருகே உள்ளது திங்களூர். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் கைலாசநாதர், இறைவி பெயர் பெரிய நாயகி. இங்கு ஆண்டுதோறும், பங்குனி உத்திர தினத்தன்று சூரிய ஒளி காலை 6 மணிக்கு சிவலிங் கத்தின் மேல் பிரகாசிப்பதாகவும், மறுதினம் பௌர்ணமியன்று பிரதமையில் சந்திர ஒளி மாலை 6.30 மணிக்கு சிவலிங்கத் தில் பிரகாசிப்பதாகவும் கூறப்படுகின்றது.

திங்களூரிலே எவரும் அரவம் தீண்டி இறந்ததாக வரலாறு இல்லை. சந்திரதோஷம் உள்ளவர்கள் இத்தலத்திலுள்ள சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடி சந்திரனை வழிபட்டு தோஷம் நீங்கப் பெறுவர்.

சந்திர வழிபாட்டுக்கு திங்கட்கிழமையும் பௌர்ணமியும் உகந்த நாளாகும்.

சந்திர பகவானுக்கு உகந்த நிறம் வெள்ளை, பொன்னிறம், உகந்த பூ, வெள்ளரிப்பூ, உகந்த நெய்வேத்தியம் தயிர் சாதம், உகந்த அணிகலன் வெண்முத்து, பஞ்ச பூதங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் நீரோடு சம்பந்த முடையது. சந்திரன் மூளை, மனம் ஆகியவற்றோடு சம்பந்தப்பட்டவன்.

விஷ்ணுவின் அம்சமான சந்திரனின் அருளைப் பூரணமாகப் பெற, பௌர்ணமி அன்று திருப்பதி தலத்தில் சந்திர பூஜை செய்து வழிபட்டால் சிறந்த பலன்களைப் பெறலாம்.

சோதிடத்திலும் சந்திரன் முக்கியத்துவம் பெறுகின்றான். நவகிரகங்களில் 2ம் இடத்தைப் பெறும் சந்திரனின் திசை 10 வருடங்களைக் கொண்டது. சந்திரனின் அருட்பார்வை பெற்றவர்கள், குருச்சந்திர யோகம் பெற்றவர்கள் ஆவர்.

விஞ்ஞானரீதியில் சந்திரன் பூமிக்கு மிக அருகே உள்ள கிரகம் ஆகும். மனித வாழ்க்கைக்கு மிக அவசியம் தேவை யான பிராண வாயு சந்திரனில் இல்லாத காரணத்தால் விஞ்ஞானிகள் சந்திரனில் குடியேறும் எண்ணத்தைக் கைவிட வேண்டியுள்ளது. சந்திரன் தான் பொழியும் அமுத நிலவால் பூமியைக் குளிர வைக்கின்றான். பார்ப்போரது கண்களையும் குளிர வைக்கின்றான், உள்ளத்தையும் குளிர வைக்கின்றான். சந்திரன் தன் தாயான கடலோடு சேர்ந்து களிக்கையில், அலைகளை கரையோடு மோத வைப்பானாம் என்கின்றது பிரபுலிங்கமாலை என்னும் நூல்.

சமய நூல்கள், விஞ்ஞான ஆய்வுகள் போதாதென்று இலக்கிய அறிஞர்களும் சந்திரனை விட்ட பாடில்லை. நிலா பற்றிப் பாடாத புலவர்களே இல்லை எனலாம்.

காதலி காதலனிடம் நிலாவைத் தூது அனுப்புதல் இலக்கிய மரபு. வானில் தவழும் பூரணச் சந்திரனை

"வேனிலான் விழாவில் வைத்த வெள்ளி வெண் கும்பம் அன்ன" என்று வர்ணித்தவர் கம்பர் பெருமான்.

**பொருந்தவான் உறை நாள்களை நாள்தோறும் புணர்வோன்**
**அருந்த வானவர்க்கு ஆரமுது அன்புடன்**
**திருந்த வானவர்க்கு அரியவன் செஞ்சடை முடிமேல்**
**இருந்த வானவன் பெருமையை யார் கொலோ இசைப்பார்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்றார் வில்லி புத்தூர். யார் எது சொல்லினினும் வானில் பிறைச்சந்திரனை யாம் காணும் போதெல்லாம் எமது நினைவுக்கு வருவது எம்பெருமான் திருமுடியே!

எமது வாய் முணுமுணுப்பது.

தோடுடைய செவியன் விடை ஏறியோர் தூவெண் மதி சூடி என்ற வரிகளையே. இல்லையா?! ●

## 103. கந்த புராணம்

**க**ந்தன் கதை சொல்லும் கந்த புராணத்தை அருளித் தந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியாராவர். இக்கந்தபுராணத்தை, வேண்டுவார் வேண்டுவதை தந்து மனிதனை மனிதனாக் கும் கற்பகத்தரு என்று கூறலாம்.

கந்தபுராணத்தின் முதற் காண்டம் உற்பத்தி காண்டம்.வட மொழியில் உள்ள நூலில் இது சம்பவ காண்டம் என்றுள் ளது. உற்பத்தி காண்டத்தில் முருகப் பெருமான் திரு அவதாரம் செய்த சம்பவமும் தாரகன் வதையும் முருகப் பெருமான் திருச்செந்தூரை அடையும் வரலாறும் இடம் பெறுகின்றன.

அடுத்து வருவது அசுரகாண்டம் அதில் சூரபதுமன் முதலிய அசுரர்களது பிறப்பும் அவர்கள் பெற்ற வெற்றியும் அமரர் சிறை புகுதலும் ஆகிய சம்பவங்கள் இடம்பெறு கின்றன.

மூன்றாவதாக இடம் பெறும் மகேந்திர காண்டத்தில் சூரனுடைய நகரமான மகேந்திரபுரிக்கு வீரவாகுதேவர் செல்லல், அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் ஆகியன கூறப்படு கின்றன.

நான்காவதாக அமைந்துள்ளது யுத்த காண்டம். இதன் கண் முருகப் பெருமான் சூரபதுமனோடு சமர்புரிதலும் அசுரர்கள் அழிதலும் கூறப்படுகின்றது.

ஐந்தாவது காண்டம் தேவ காண்டம் ஆகும். இதன் கண் போரில் வெற்றியடைந்து தேவர் சிறை மீட்டருளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான், தேவயானையைத் திருமணம் செய்யும் வரலாறு சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஆறாவதும் கடைசிக் காண்டமான தட்ச காண்டம் தக்கன் வரம் பெறும் வரலாற்றையும் சிவபெருமானின் கருணை மேன்மை, சிறப்பு ஆகியனவற்றையும் வள்ளி திருமணத்தை யும் பிறவையும் விளக்கி நிற்கின்றது.

இத்தனையும் கந்த புராணத்தில் உள்ளடங்கிய விஷயங் கள் ஆகும்.

இனி, இந்நூலின் சிறப்பையும், அஃது சைவ சமயத்தோ ருக்கு ஆற்றிவரும் நன்மையையும், அது எவ்வாறு சைவப் பெருமக்கள் மத்தியில் உலாவருகின்றது என்பதையும் நோக்குவோம்.

தமிழ்நாட்டிலே கந்த புராணத்தைப் படித்துப் பயன் பெறுவோரிலும் பார்க்க, எமது நாட்டிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே இந்நூலை அந்தந்தக் காலத்திலே படித்து பயன் சொல்லிப் பயன் அடைபவர் அதிகம் எனச் சொல்லலாம்.

யாழ்ப்பாணத்திலே கந்த புராணக் கலாசாரம் என்று ஒரு கலாசாரமே இருந்து வருகின்றது என்பது நீங்கள் அறியாத தல்ல.

சைவ ஆலயங்களிலே கந்தசஷ்டி நாட்களிலே கந்த புராண பாராயணம் தவறாமல் இடம்பெற்று வருகின்றது. ஒருவர் பாடல்களைப் படிக்க, மற்றொருவர் அதற்குப் பயன் சொல்ல, அதனைப் பூசையின் பின்னர் மெய்யடியார்கள் அமர்ந்து கேட்டின்புறும் காட்சி அதி அற்புதமானது. எமது ஆத்மீக வாழ்வுக்கு அவசியம் வேண்டியது. இப்பொருள் கூறும் செயல் "பயன் சொல்லல்" என்று கூறப்படுகிறது.

ஒரு காலத்திலே யாழ்ப்பாணத்திலே சைவத்தையும் தமிழையும் கட்டிக் காத்து வளர்த்து வந்த ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் கந்த புராண நூலைப் புதுப்பித்து அளித்து அருங்காரியத்தை செய்துள்ளமை நேயர்கள் அறிந்ததே.

அத்தோடு மட்டுமல்லாமல், கந்த புராண படன கிரமத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் யாழ் மக்களுக்கு அறியத் தந்தவர் நாவலர் பெருமான் ஆவர்.

கந்த புராணச் சுருக்கம் என்னும் நூலை ஆக்கித் தந்தவர் சரணாலயர் என்னும் துறவி ஆவார்.

சைவ மேதையாகிய கவி குஞ்சர பாரதியார் கந்த புராண கீர்த்தனைகளையும் பாடியுள்ளார்.

"கந்தபுராண சிந்தனைகள்" என்ற பெயரில் திரு. தனபால சிங்கன் அவர்கள் அரியதொரு நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலின் கண், ஆசிரியர் கந்தபுராணக் கதைச் சம்பவங் களை அழகு தமிழில், எளிய நடையில், ஆங்காங்கு பொருத்தமான இடங்களில் கந்தபுராணச் செய்யுட்களையும், தந்து, கதையோடு அதன் கண்ணுள்ள தத்துவக் கருவூலங் களையும் அருமையாக விளக்கித் தந்து, சைவ மக்களுக்கு ஒரு அரும்பணியை ஆற்றியுள்ளார்.

கந்தபுராணத்தை ஆற அமரப் படித்தவர்கள்,அந்நூலின் தத்துவக் கருத்துக்களை ஒரு தெய்வீகக் கனியினை விதை களாகவும் கதைச் சம்பவங்களை இனிய கனிச்சுளைகள் ஆகவும், செய்யுட்களை இனிய சுவைச் சாறாகவும் தந்த அற்புத படைப்பாக அனுபவித்து வருகின்றனர்.

இந்த வகையில் கந்த புராணம் விதை, கனி, பழச்சாறு, என்ற அம்சங்களாக தத்துவக் கருத்து, கதையம்சம், கவிச் சுவை ஆகிய மூன்றையும் தெய்வீகமாகக் கொண்டுள்ளது என்றால் மிகையாகாது.

எனவே, சைவர்களாகிய யாம், இவ்வரிய நூலை, பல தடவைகள் படித்துப் பயன்பெற வேண்டும். முழு நூலைப் படிக்க முடியாவிடினும் கந்த புராணச் சுருக்கத்தைத் தன்னும் படித்துய்யலாம் அல்லவா? நாம் படிப்பதோடு நின்று விடாது எமது இளஞ்சிறார்க்கும் இந்நூலின் பெருமையையும், அவசி யத்தையும் எடுத்துக் கூறி அவர்களையும் இக்கந்த புராணக் கலாசாரத்துள் நுழைய வைத்தல், எம் எல்லோரதும் தலை யாய கடமை ஆகும். எனவே வாரத்தில் இரு நாட்கள் தன் னும் நாம் எமது கவனத்தை கந்தபுராணப் பக்கம் திருப்பு வோமா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 104. நம்பினோர் கெடுவதில்லை

"நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு" என்னும் உண்மையை இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

எவனொருவன் தனது மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை உண்மையான பக்தியோடும், நம்பிக்கையோடும், தேடுவானோ அவனால் நிட்சயம் இறைவனை அணுக முடியும். இதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்வேன் கேட்டுப்பாருங்கள்!

அவன் ஒரு ஏழை, படிப்பறிவும் கிடையாது, தொழில் ஏதும் இல்லை. எனவே அவனாக ஒரு தொழிலை தனக் கென்று தேர்ந்தெடுத்தான். என்ன தொழில் என்று நினைக் கிறீர்கள்? அது தான் திருட்டுத் தொழில். ஆமாம்! அவன் இப்போ ஒரு திருடன்.

ஒரு நாள் அவன் திருட எத்தனிக்கையில், பொது மக்கள் கண்டு அவனைத் துரத்திக்கொண்டோடினர். அவன் அவர் களுக்குத் தப்பி ஓடி, ஒரு மண்டபத்துள் நுழைந்து கொண் டான். அங்கிருந்த கூட்டத்தினருள் தானும் ஒருவனாக மறைந்து கொண்டான். அங்கு ஒரு கிருஷ்ண பக்தர், கிருஷ்ணனது மகிமை, அவரது அழகு, பொலிவு பற்றி, கதாகாலசேபம் செய்து கொண்டிருந்தார். அவர் கண்ணனது அலங்காரத்தை வர்ணித்த அழகே தனி! கண்ணனது அழகை உச்சி முதல் உள்ளங்கால் வரை வர்ணித்துக் கொண்டிருந் தார் பிரசங்கியார். தங்கக் கிரிடம், அதில் மயிற் பீலி, காதிலே குண்டலங்கள், கழுத்து நிறைய மாலைகள், தங்க மாலை, முத்து மாலை, வைர மாலை, இரத்தின மாலை, பவள மாலை, மார்பிலே தங்கப் பதக்கங்கள், பாதங்களில் ஒலிக்கும் தங்கச் சிலம்புகள், பாத சரங்கள், பால கிருஷ்ணன் ஒளி மயமாகக் காட்சி தருகின்றான். பிரசங்கியார் வர்ணித்துக் கொண்டே போகின்றார். திருடனின் கற்பனை எங்கேயோ செல்கின்றது. அத்தனை ஆபரணங்களையும் திருடிவிட்டால் வாழ்க்கையில் பஞ்சமின்றி வாழலாம் என அவன் தனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளே நினைத்துக் கொண்டான். பிரசங்கம் முடிந்ததும் நேரே பிரசங்கியாரிடம் சென்று, நீங்கள் வர்ணித்த குழந்தை இப்போ எங்கே இருக்கிறது? என்று கேட்டான்.

பிரசங்கியாரோ அலட்சியமாக, அந்த குழந்தை துவாரகை யில் இருக்கின்றது என்றார். அடுத்த நிமிடம் அவன் மனதில் அந்தக் குழந்தையும், துவாரகையுமே நிறைந்தி ருந்தது. எப்படியாவது அந்தக் குழந்தையின் அணிகலன்களை எடுத்து விட வேண்டும் - முற்றும் முழுதான நம்பிக்கையுடன் செயற்பட்டான் அவன்.

துவாரகையை நோக்கிக் கால் நடையாக சென்று கொண்டிருந்தான் அந்த ஏழைத்திருடன். நடந்து நடந்து கால்கள் சலித்தன; ஆனால் அவனது மனம் மட்டும் சலித்ததாகவில்லை. நம்பிக்கை - நம்பிக்கை - எப்படியும் அந்தக் குழந்தையின் அணிகலன்களை எடுத்தாக வேண்டும். நேரமும் வந்தது. ஒருவாறு துவாரகையை அடைந்தான். அவன் கண் முன்னே ஒரு பிரமாண்டமான மாளிகை. உள்ளே எட்டிப் பார்த்தான். மண்டபத்தின் நடுவே அந்தக் கண்ணனான குழந்தை பிரகாசமயமாக காட்சியளித்தது. பிரசங்கியார் கூறிய அத்தனை நகைகளும் அதன் மேனியில் ஜொலித்தன. அதன் தெய்வீக காட்சியில் அவன் வந்த காரியம் மறந்தான். ஒரே பிரமிப்பு ! அக்குழந்தை தெய்வீகமாக சின்னப் பாதம் பதித்து அவனை நோக்கி வந்தது. அவனோடு பேசவும் ஆரம்பித்தது.

உனக்கு என்ன வேணும்? இந்த நகைகள்தானே! சரி இந்தா என்று என்று கூறி தனது இடுப்பில் சுற்றியிருந்த பட்டுப் பீதாம்பரத்தை கழற்றித் தரையில் விரித்தது. தனது நகைகள் அனைத்தையும் கழற்றித் அதன் மேல் போட்டு ஒரு முடிச்சாகக் கட்டி அவன் கைகளில் கொடுத்தது அந்த கண்ணான குழந்தை.

இரு கரங்களாலும் குழந்தை தந்த முடிச்சை பெற்றுக் கொண்டான் திருடன். அதன் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான். விடு விடென்று நடந்து நேரே பிரசங்கியாரது இல்லத்துக்குச் சென்று நகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டலத்தைக் காட்டினான். "சுவாமி" தாங்கள் சொன்னபடி குழந்தையைத் தேடி துவாரகைக்குச் சென்றேன். கண்டேன். அக்குழந்தை தானாகவே தன் நகைகள் அனைத்தையும் எனக்குத் தந்து விட்டது. என ஒரே மூச்சில் கூறிமுடித்தான்.

பிரசங்கியாருக்குத் தலை சுற்றியது. இறைவா! பகவானைப் பற்றி எத்தனை நூல்களைப் படித்திருப்பேன்! எத்தனை மேடையில் கதாகாலட்சேபம் செய்திருப்பேன்! அத்தனை செய்தும் சின்னக் கண்ணனை நேரில் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே!

ஆனால் இவனோ கண்ணக்குழந்தையை காண்பேன் என்ற அசையாத நம்பிக்கையோடு சென்றான் வெற்றியுமடைந்தான். நம்பிக்கைக்கு இத்தனை வலிமையா?

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணனை, சித்த சுத்தியோடு, பூரண நம்பிக்கையோடு இடையறாது வேண்டிக் கொண்டால் பரிபூரணானந்தம் எமக்குக் கிடைக்காமலா போய்விடும்!

நீங்களே சொல்லுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 105. தர்மம்

தர்மம் பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள் வோம்.

தர்மம் என்றால் என்ன? உலகம் முழுவதையும் இறைவனு டைய தாகக் கருதி அதற்கேற்ப எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடப்பதே தர்மம். இது தர்மம் பற்றிய ஸ்ரீ சங்கராச் சாரிய சுவாமிகளது கருத்து ஆகும்.

தனக்கென்று மட்டும் ஒருவன் செய்யும் காரியங்கள் அதர்மத்தின் பக்கம் சேருகின்றன என்கின்றார் சுவாமிகள்.

மனிதனுக்குள் சுயநலத்தைக் குறைத்து அவனுக்கு ஈஸ்வர னின் நிலையை ஏற்படுத்தி உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் எல்லோருக்கும் உரியவை என்ற பரந்த மனப்பாங் கினை மனிதனுக்கு உணர்த்தவே சகல மதங்களும் ஏற்படுத் தப்பட்டுள்ளன என்ற கருத்தும் ஒன்றுண்டு.

"உன் ஆசைப்படி நடந்துகொள்" "எது வேண்டுமானாலும் செய்து கொள்" "உனக்கென்றே சொத்துக்களைச் சேர்த்துக் கொள்" என்று எந்தமதமும் சொன்னதாகவும் இல்லை, சொல்வதுமில்லை, சொல்லப்போவதுமில்லை.

மனிதன் தன்னை மட்டும் முக்கியமாக நினைத்துக் கொள்ளும் வரையில் அவன் ஈடேறுவது சாத்தியமுமில்லை. எவன் தனக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து வாழ்கின் றானோ அவனை சமூகம் மதிக்க மாட்டாது. அப்படியாயின்! இறைவன் அருள் அவனுக்கு எப்படிக் கிடைக்கப் போகின்றது!

மனிதன் தன்னை பெரியவனாகக் கருதும் அர்த்தமற்ற பாங்கினை கட்டுப்படுத்தத் தான் பிரபஞ்சம் என்ற ஒன்றைப் படைத்து அதனை என்றும் தவறாமல் நெறிப்படுத்தும் சக்தி ஒன்று இருக்கின்றது. கடவுள் ஒருவர் இருக்கின்றார் என சகல மதங்களும் வலியுறுத்துகின்றன.

தர்ம சிந்தனை உள்ள மனிதன் தன்னைப் பெரிதாகக் கருத மாட்டான். தர்மம் செய்வதற்கு பொருளும், மனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மனமிருந்தாலும் கொடுப்பதற்கு பொருள் வேண்டுமே. பொருள் எப்படிக் கிடைக்கும்!

நாம், முன் ஜன்மத்தில் பிறருக்குத் தர்மம் செய்து வாழ்ந்திருந்தால் அது மறு ஜன்மத்தில் குட்டி போட்டுக் கொண்டு நிறையவும் நிறைவாகவும் எமக்குக் கிடைக்கும். தர்மத்தின் பயனே புண்ணியப் பொருள்தான்.

இன்பத்துக்குப் பொருள் சாதனமாக இருப்பது போல் பொருளுக்குச் சாதனமாக தர்மம் அமைகிறது. எவ்விதமான தர்மம் செய்தாலும் எமக்கு நன்மையே கிடைக்கும். இதில் ஐயம் இல்லை.

நாம் தர்மம் செய்யுமிடத்து ஈஸ்வரனை நினைத்து பலனை எதிர்பாராமல் அர்ப்பணித்து விட்டால் இச்செயல் எம் பாவங்களைப் போக்கி பேரின்பத்துக்கு வழிகாட்டுகின்றது. பேரின்பமே மோட்சம். அழியாத நிறைவான இன்பம்

மனிதன் சிற்றின்பத்தைப் பெரிதுபடுத்தாமல் பேரின்பத்தை நோக்கிச் செல்ல வேண்டும், செயற்பட வேண்டும் என்ற நோக்குடனேயே எல்லா மதங்களும் செயற்படுகின்றன. இதற்கு அநுகூலமாகவே நாம் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். சுயநலம் ஓரளவு இருப்பதை சகித்துக் கொள்ளலாம். ஆனால் சுயநலமே வாழ்க்கை எனக் கொண்டால் அங்கு தர்மத்திற்கு இடம் ஏது?

உதாரணத்திற்குப் பாருங்கள். நாம் அனுப்பும் பணம் வெளிநாட்டில் டொலராகவும், பவுண்களாகவும் போய்ச் சேருவதில்லையா? ஆனால் இங்கே நாம் ரூபாயைத்தான் கொடுக்க முடியும். பவுண்களையோ டொலர்களையோ இங்கு நாம் கொடுக்க முடியாது.

அதேபோன்று தான் இறந்தோருக்கு நாம் செய்யும் சிரார்த்த காரியங்களும் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டவாறு எள், தண்ணீர், அரிசி, பருப்பு வாழைக்காய், வடை, பாயாசம் ஆகியவற்றை நாம் இங்கு கொடுத்தால் அவை பிதிர்கள் இருக்குமிடத்தில் அவர்களுக்கு ஏற்ற உணவாகப் போய்ச் சேரும் என்பது சாஸ்திர விதி ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்யப்பட வேண்டியது. இங்கு பொறுப்புணர்ச்சியும், நன்றிமனோபாவமும் இருந்தாக வேண்டும்.

எனவே இத்தகைய சடங்குகள், கடமைகள் யாவும் எமக்குத் தேவைதானா? என்ற இடையிடையே எழும் எமது சபலம், முற்றாக நீங்க வேண்டும். இவையாவும் எமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமாகின்றன என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

எமது சமயம் வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சைவ சமயம். வேதநெறி என்பது ஒரு பெரிய ஆறு. ஆற்றில் பல படித்துறைகள் இருப்பது போல வேத நெறியிலும் சைவம், வைணவம், காணாபத்தியம், சாக்தம், சௌரம், கௌமாரம் எனப் பல பிரிவுகள் இருந்தன.

இவற்றுள் "மிகு சைவத்துறை விளங்க வாழ்ந்தவர் திரு ஞான சம்பந்தர்" என்பது சேக்கிழார் கருத்து.

**வேதநெறி தழைத்தோங்க**
**மிகு சைவத்துறை விளங்க**
**பூதபரம் பரை பொலிய**
**புனிதவாய் மலர்ந்து அழுத**
**சீதவளர் வயல் புகலி**
**திருஞான சம்பந்தர்**
**பாதமலர் தலைக்கொண்டு**
**திருத்தொண்டு பரவுவாம்**

என்கிறார் சேக்கிழார்.

வானவர்களான தேவர்களுக்கு யக்ஞத்தில் ஆகுதி அளித்தால்தான் வானம் பொழியும், பயிர் வளரும், தானியம் நிறைந்து பொலியும், ராஜாங்கம் செழிக்கும், செல்வம் பெருகும், தர்மம் செய்ய வாய்ப்புக்கள் கிடைக்கும், வேந்தன் ஓங்குவான், மக்கள் நலம் பெறுவர்.

எனவே எல்லோரும் நலமே வாழ வேண்டுமேயானால் நிரம்ப தர்மம் செய்தாக வேண்டும். அவர் அவர் தமக்குரிய கடமைகளைத் தவறாது ஆற்றியாக வேண்டும். இறைவனை நம்பித் தோத்திரிக்க வேண்டும். கடமையும் தொழிலும் தெய்வமாவது நாம் அறிந்ததே. இல்லையா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 106. கண்ணாடி

அது ஒரு அழகிய கிராமம். அதன் மத்தியில் ஏழையின் குடிசை ஒன்று. ஆனால், அது அந்த ஏழையின் வசந்த மாளிகை. சிறிய குடிசை எவ்வாறு வசந்த மாளிகை ஆகலாம்? என்று கேட்கிறீர்களா? நியாயமான கேள்வி. ஆனால், இங்கே தான் விஷயமே இருக்கிறது. குடிசையின் சொந்தக்காரன் ஏழையானாலும் வெள்ளை உள்ளம் படைத்தவன். பிறருக்கு தீங்கு எண்ணாதவன். பிறர் துன்பம் கண்டு இரங்குபவன். தான் ஏழை என்பதற்காக என்றுமே தெய்வத்தை நிந்தித்ததில்லை, எம்மைப் போல. எமக்கு ஒரு துன்பம் வரட்டும், எடுத்த எடுப்பிலேயே ஆரம்பித்து விடுவோம். எத்தனை விரதமிருந்தேன், எத்தனை நேர்த்தி செய்தேன், ஆனால் இப்படியாகி விட்டதே. இந்தக் கடவுளுக்கு கண்ணே இல்லையா? என்ற முடிவுக்கே வந்து விடுவோம். யாமே எமது இன்ப துன்பங்களுக்கு காரணம் என்பதைப் பலர் உணர்ந்தாக, உணர்வதாக இல்லை. ஆனால் விதி விலக்குகளும் இருக்கத்தான் செய்கின்றன. இந்த ஏழைக்குடி யானவன் தன் வறுமைக்குத் தானே காரணம் என்றுணர்ந்து வறுமையிலும் செம்மையாய், வாழமுற்பட்டான். இதனால் தான், அவனது குடிசையும் அவனுக்கு வசந்த மாளிகையாகத் தென்பட்டது.

ஒரு நாள் அன்று தாம் தேடிப் பெற்ற தானியத்தில் கூழ் காய்ச்சி அதனைப் பருகும் ஆவலோடு, அவனது குடும்பமே ஆயத்தமானது. அவ்வேளையில் அக்குடிசைக்கு ஒரு துறவி வந்தார். அப்பனே! பசியாக இருக்கின்றது. ஏதாவது உண்பதற்குத் தா என்றார். இரக்க சிந்தனையுடைய அந்த ஏழைக் குடியான வன். தயக்கம் சிறிதுமின்றி தனது பங்குக் கூழை அவருக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தான். கூழ் மிகவும் சுவையாக உள்ளது. இன்னமும் மீதி ஏதும் உண்டா? வினாவினார் துறவி. சிறிதும் தயங்காது தனது மனைவியின் பங்குக் கூழையும் துறவிக்கு அளித்தான் அவன். வயிறும் குளிர்ந்தது. மனமும் குளிர்ந்தது துறவிக்கு. திருப்தியோடும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக மலர்ச்சியோடும் தம் முன்னே நின்ற அந்த ஏழையைப் பார்த்தார் துறவி. இந்த ஒட்டி உலர்ந்த உடம்பினுள் இத்தனை தாராள மனப்பான்மையா? இவனுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும். "மகனே" என்னிடம் ஒரு தெய்வச் சிலை உள்ளது. அதனை உன்னிடம் தருகிறேன். நீ சித்த சுத்தி யோடு அதனை உன்னுடன் வைத்திருந்து, தினமும் வணங்கி னால் உன் வாழ்வு நிச்சயம் வளம் பெறும். நான் இப்போது காசித்தலம் செல்ல உள்ளேன். நான் திரும்பி வந்ததும் அந்த சிலையை நீ என்னிடம் திரும்பத் தந்து விட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையையும் விதித்தார்.

அவர் கூறிச் சென்றபடி அந்த ஏழைக் குடிமகனும் அந்தத் தெய்வீகச் சிலையை வைத்துப் பூசித்தான். வியக்கத் தக்க விதத்தில் அவனை நாடி பொன்னும், பொருளும் வந்து சேர்ந்தன. தாராளமாக செல்வம் சேர்ந்ததால் அவன் தான தருமமும் செய்ய ஆரம்பித்தான். என்றுமே அவன் பொருள் பண்டத்திற்கு ஆசைப்பட்டதில்லை. நாளடைவில் அவன் மனம் மாறியது. முதல்முதலாக, அவன் மனதில் செல்வத்தின் மேல் ஆசை துளிர்விட்டது.

தான் கோடீஸ்வரனாக ஆக வேண்டும் என விரும்பினான். எனவே அவன் ஒரு உலோபியாகவும் மாறி விட்டான். முன்போல் அல்லாமல் பிறரது துன்பங்களைக் கண்டு இரங்க அவன் மனம் மறுத்தது.

இவனது மனமாற்றம், காசிக்குச் சென்ற சந்நியாசிக்கும் தெரிய வந்தது. அன்று, தான் உண்ணாது பசி தீர்த்த அவனது மனமாற்றம் அவருக்கு வேதனை தந்தது. அவனை நல்வழிப்படுத்த எண்ணி அவன் ஊருக்கு விரைந்தார். இச் செய்தி கேட்ட புதுப் பணக்காரன் ஒரு முடிவுக்கு வந்தான், துறவி வந்தால் சிலையைக் கேட்டு விடுவாரோ என அஞ்சி, தீவிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். நாடு திரும்பி, துறவி தன்னைச் சந்திக்கு முன் தான் அவரைச் சந்திக்க விரைந்தான். எப்படி என்று நினைக்கிறீர்கள்?

தான் முன்பு அணிந்த கந்தல் துணியை அணிந்து, துறவி இருக்குமிடத்தை அடைந்து, ஏழை போல் நடித்தான். தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கண்ணாடி போல், தூய்மையாக இருப்பதாகவும் கூறினான்.

துறவி இடையிட்டார். எந்தக் கண்ணாடி? உன் மனக் கண்ணாடி தானே? அது முன்போல இல்லை. அதில் ஒரு வித்தியாசம் ஏற்பட்டு விட்டது. அதில் முலாம் பூசப்பட்டு விட்டது. அதனால் இப்போது அதில் உன் முகம் மட்டுமே தெரியுமே ஒழிய, வெளியே இருப்பவர்களை தெரியாது. அதே போல் பிறர் துன்பமும் உனக்குத் தென்படாது. இதனால் நீ முன்பு போல் பிறர் துன்பம் துடைக்க மாட்டாய்.

எனவே, "முதலில் உன் மனக்கண்ணாடியில் உள்ள முலாத்தை, பண ஆசையை, துடைத்துவிடு. பிறர் துன்பம் காணும் கண்ணாடியாக அதனை மாற்று. முன்பு போல் தர்மம் செய்." என்றாரே பார்க்கலாம். குடியானவன் அசந்து போனான்.

இப்போது நீங்கள் சொல்லுங்கள்! உங்கள் மனம் எந்தக் கண்ணாடி? முலாம் பூசப்பட்டதா? பூசப்படாததா? யோசித்துப் பாருங்கள்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 107. தாரமும் குருவும்

"தாரமும் குருவும் தலைவிதி" என்பது பழமொழி. இல்லறத் தானுக்கு அவனது மனைவி வாய்க்க வேண்டும், அதே போன்று தான் பெண்ணுக்கு கணவன் வாய்க்க வேண்டும். இதே போன்று ஒரு மாணவனுக்கு நல்ல குரு ஆசிரியன் ஆசான் வாய்க்க வேண்டும். இத்தோடு நாம் விட்டுவிட முடியாது. எவ்வாறு மாணவனுக்கு நல்லதோர் குரு கிடைக்க வேண்டுமோ அதே போன்று ஒரு குருவுக்கும், நல்லதோர் மாணவன் கிடைத்தாக வேண்டும். அப்போது தான் இரு சாராருக்கும் நன்மை கிடைக்கும்.

உலகிலே மிகப்பெரிய வாத்தியாரே சிவபெருமான் தான். கல்லால விருட்சத்தின் கீழே தட்சணாமூர்த்தியாக எழுந்தருளி சனகர், சனாதரர், சனந்தரர், சனற்குமரர் என்ற நான்கு ரிஷிகளுக்கும் ஞானத்தை உபதேசித்தவர் சிவனார். சிவபெருமானது உபதேசத்தில் இருந்து தோன்றியது குரு சிஷ்ய பரம்பரை. மணிவாசகப்பெருமானை, திருப்பெருந் துறையிலே, குருந்த மரநிழலிலே எம் பெருமான் குருவடி வாகத் தோன்றி ஆட்கொண்டமை யாம் அறிந்ததே.

மாணவனுக்கு நல்லதோர் குரு அமைய வேண்டும் அதேபோல் குருவுக்கும் உத்தம மாணவன் கிடைப்பது முக்கியம் என்பதற்கு, ஒரு சிறுகதை சொல்கின்றேன் கேட்டுப் பாருங்கள்.

ஒரு கிராமம், ஒரு குரு, ஒரு சிஷ்யன், ஒரு ஆச்சிரமம். இதுவரை இந்த ஆச்சிரமத்தில் வாழ்ந்து வந்த இந்தக் குருவும் சீடனும் வேறோர் ஆச்சிரமத்துக்கு இடம்மாற வேண்டி வந்தது. பெரியதோர் மாட்டு வண்டியைக் கொண்டு வந்து அதில் தமது பொருட்களையெல்லாம் ஏற்றிக் கொண்டு சற்று மலைப்பாங்கான பாதையில் இருவரும் பயணத்தை ஆரம்பித் தார்கள். வண்டி போய்க் கொண்டிருந்தது. குருவுக்கு நல்ல களைப்பு, சீடனை நோக்கி "பொருட்கள் கவனம், விழிப்பாக இரு" என்று கூறி விட்டு குருவானவர் வண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலேயே தூங்க ஆரம்பித்து விட்டார். விசுவாசமான சீடன் விழிப்பாக வண்டியினுள் உட்கார்ந்திருந்தான். வண்டி ஓட இவர்களது சில பாத்திரங்கள் வெளியே விழுந்து பாதையில் உருண் டோட ஆரம்பித்தன. வண்டியை நிறுத்தினால் குரு விழித்து விடுவார் அவர் தூக்கம் கலையக் கூடாது, என்ற உயர்ந்த விசுவாசமான நோக்கத்தோடு சிஷ்யன் எதுவுமே செய்யாது குரு சொன்னபடி விழிப்பாக மாத்திரம் இருந்தான். திடீரென பெரிய அண்டா ஒன்று வண்டியினுள் இருந்து தரையில் விழுந்து உருள ஆரம்பித்தது. அது விழுந்த ஓசைக்கு குரு விழித்துக் கொண்டார். நடந்தவற்றைக் கவனித்தார். என்ன காரியம் செய்து விட்டாய்? விழுந்த பாத்திரங்களை உடனுக்குடன் பொறுக்கி எடுக்க வேண்டாமா? நீ என்ன சீடன்! என்று சிஷ்யனைக் கடிந்து கொண்டார் குரு. இனி என்ன கீழே விழுந்தாலும் உடனே அதனை எடுத்து வண்டிக்குள் போட்டு விடு என்று கூறி விட்டு குருவானவர் மீண்டும் தூங்கலானார். வண்டி சிறிது தூரம் பயணித்தது. அடுத்து, வண்டி மாடு போட்ட சாணம் கீழே விழுந்தது. உத்தம சீடன் அல்லவா? குரு வார்த்தையை மீறுவதா? எது விழுந்தாலும் பொறுக்கி வண்டியினுள் போடு என்றல்லவா குரு சொன்னார்! உடனே சிஷ்யன் கீழே குதித்து சாணத்தை அப்படியே திரட்டி அள்ளி, வண்டியினுள் போட்டான். சாணம் குறிப்பாக குருவின் முகத்திலும் பட்டுத் தெறித்தது. நாற்றம் ஒரு பக்கம் இங்கு என்ன தான் நடக்கிறது? குரு மீண்டும் விழித்துக் கொண்டார். நடந்ததைக் கவனித்தார் சாணத்தை ஏன் உள்ளே போட்டாய்?, “குருவே! தாங்கள் தானே கூறினீர் கள் வண்டியினுளிருந்து எது விழுந்தாலும் பொறுக்கி உள்ளே போடு என்று அதையே செய்தேன்”. இது சீடன் தந்த பதில் யோசித்தார் குருவானவர் என்னே இவனது ஞானம்? உடனே ஒரு பட்டியல் தயாரித்தார். வண்டியில் இருந்த அனைத்துப் பொருட்களின் பெயர்களையும் அதில் எழுதினார். “இவற்றுள் ஏதாவது ஒரு பொருள் கீழே விழுந்தால் மட்டும், பொறுக்கி வண்டியினுள் போடு” என்று கூறி விட்டு மீண்டும் தூங்க ஆரம்பித்து விட்டார் குருவானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டி தொடர்ந்து பயணித்தது. திடீரென குரு தூக்கத்தில் வண்டியிலிருந்து கீழே விழுந்து விட்டார். திடுக்கிட்டு எழுந்த குரு நிறுத்தாமல் சென்று கொண்டிருந்த வண்டியைப் பார்த்து "வண்டியை நிறுத்து என்னைத் தூக்கி விடு" என்று சிஷ்யனை நோக்கிச் சத்தமிட்டார். ஆனால் சிஷ்யன் வண்டியை நிறுத்த வில்லை. குருவானவர் எழுந்து வண்டியை நோக்கி ஓடி, வண்டியை நிறுத்தி சிஷ்யனைக் கேட்டார்.

"நீ ஏன் வண்டியை நிறுத்தி என்னை உள்ளே எடுக்க வில்லை?"

சிஷ்யன் அமைதியாகப் பதிலளித்தான்.

குருவே! நீங்கள் எழுதித் தந்த பெயர்ப் பட்டியலில் உங்கள் பெயர் இல்லையே! உங்கள் வார்த்தையை மீறுவேனா?

எப்படியிருக்கிறது பதில்! எனவே, குருவுக்கும் உருப்படி யான சிஷ்யன் கிடைத்தாக வேண்டும் இல்லையா? இது ஆசிரியப் பெருந்தகைகளுக்குச் சமர்ப்பணம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108. இல்லற ஞானிகள்

இல்லறம் லௌகீகத்தோடு இணைந்தது. ஞான மார்க்கமே ஆன்மீகத்தோடு சேர்ந்தது. எனவே இல்லற ஞானிகளாகச் செயற்படுவது சற்று சிரமமாகத் தோன்றுகின்றதா? உங்கள் கருத்தும் சரிதான் இருப்பினும் பாருங்களேன். ஒரு சிறு கதை சொல்வேன் பின் உங்கட்குப் புரியும் இல்லற ஞானிகளும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால் மிகக் குறைவான எண்ணிக்கையில்.

ஒரு ஊர். அங்கே ஒரு சிறு குடும்பம். அப்பா, அம்மா, மகன், மகள், மருமகள் இவர்களே அச்சிறு குடும்பத்தினர். இவர்கள் ஐவரும் பக்தியும் நற்குணங்களும் கொண்டவர்கள் விருந்தோம்புவதில் மிக ஆர்வம் உடையவர்கள்.

இத்தகைய சீலர்களுடன் உரையாடி மகிழ வேண்டும் என கயிலை மேவும் கண்ணுதற் கடவுள் திருவுளம் கொண்டார். எனவே சிவனார் ஒரு சன்னியாசி வடிவம் கொண்டு அந்த நல்ல குடும்பத்தின் இல்லத்தை அடைந்தார். அடியவரைக் கண்ட ஐவரும் மனமிக மகிழ்ந்து, "அடியவரே! தங்களைக் கண்டது சிவபிரானையே நேரில் தரிசிப்பது போன்ற உணர்வை எம்முள் ஏற்படுத்தியுள்ளது. தேவரீர் எமதில்லத்தில் அமுதுண்ண வேண்டும்" என அடியவரை வேண்டிக் கொண்டனர். சிவனாரும் சம்மதித்தார். "அன்பர்களே" "யான் சிவதரிசனம் முடித்து சிறிது நேரத்தில் உங்கள் இல்லத்திற்கு மீண்டும் வருவேன்" என கூறிச் சென்றார்.

இல்லத்தில் ஆனந்தம் பொங்கி வழிந்தது. அடியவருக்கு விருந்து அளித்தாக வேண்டும். மகள் அடியவர் அமுது ண்ணும் இடத்தைக் மெழுகிக் கோலமிட்டுத் தயாராக்கினாள்.

மருமகள், அன்னம் ஆக்கி, பருப்புக் கடைந்து கொத்த மல்லித் துவையல் செய்து மிளகு ரசம் வைத்து, மணித் தக்காளிக் கீரை சமைத்து, சாம்பார் தயார் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் பசு மோர் வாங்க வெளியே கடைக்குச் செல்லலானார். ஒவ்வொருவரும் முழு ஆர்வத்துடன் சுவாமியாரை விருந்தோம்பத் தமது கடமைகளைச் செய்யலாயினர். மைந்தன் வீட்டுத் தோட்டத்திற்கு வாழையிலை வெட்டச் சென்றான். அங்கே தான் விபரீதம் ஒன்று நடந்தது. வாழைத் குருத்துக்குள் இருந்த பாம்பு ஒன்று அவனைத் தீண்டியது. அவன் அந்த இடத்திலேயே உயிர் நீத்தான்.

வீட்டுக்குள் இருந்தவர்களுக்கு இச் செய்தி தெரியாது. தந்தையார் மோர் வாங்கிக் கொண்டு இல்லம் திரும்பினார். எல்லோரும் தமது கடமைகளைச் செவ்வனே முடித்து வைத்திருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்தார். மகனைக் காணவில்லை. எங்கே என வினாவினார். அவன் இலைபறிக்கத் தோட்டத்திற்குப் போய்விட்டான் எனப் பதில் கிடைத்தது. தோட்டத்திற்கு விரைந்தார் தந்தையார். அங்கே அவர் கண்ட காட்சி அவர் இரத்தத்தை உறைய வைத்தது. அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. புரியவில்லை கரங்களில் இலையுடன் அவரது அருமை மகன் அங்கு இறந்து கிடந்தான். சிறிது நேரத்தில் தன்னை சுதாகரித்துக்கொண்ட அத்தந்தை, வீட்டில் உள்ள யாவரையும் அலறி அழைத்தார். ஓடிவந்த அவர்கள் அங்கு கண்ட காட்சி அவர்களை புலம்ப வைத்தது. சிறிது நேரத்தில் தந்தை சொன்னார். இனி நீங்கள் ஒருவரும் அழுது புலம்பக் கூடாது. இவனது உடலை மறைத்து வைத்துவிட்டு அடியவரை விருந்தோம்ப ஆவன செய்வோம் என்றார். அத்தனைபேரும் அதற்கு உடன்பட்டனர். சிறிது நேரத்தில் சந்நியாசி அமுதுண்ண ஆயத்தமாய் வந்து சேர்ந்தார். எல்லாம் ஆயத்தம். விபூதியை யாவருக்கும் தந்த அத்துறவி அவ்வீட்டு மகனையும் அழைத்தார் அவன் எப்படி வருவான். விஷயத்தைப் புரிந்து கொண்ட துறவி மைந்தனின் உடலைக் கொண்டுவரப் பணித்தார். பொன்னான அவனது உயிரற்ற உடலைக் கண்டு அவரே கண் கலங்கினார். தந்தையாரைப் பார்த்து சத்தமிட்டார். "அட பாவி! இத்தனை நடந்த பின் எனக்கு ஒரு விருந்தோம்பலா? என்ன காரியம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாய்?!'' தந்தை நிதானமாகப் பதிலளித்தார். சுவாமி! கடனுக்குக் கட்டுப்பட்டுத்தான் எல்லாம் அமைகின்றன. வீடு, வாசல், மனைவி, மக்கள், பசு, சந்தோஷம் யாவுமே யாம் முன் செய்த ஜன்ம வினையின் பயன்களேயாம் இப்புத்திரனும் தனது கடனை அடைத்துவிட்டான், சென்று விட்டான் என்றாரே பார்க்கலாம். சந்நியாசியாக வந்த இறைவன் அத்தந்தையின் ஞானத்தை தனக்குள்ளே மெச்சினார். ஆனால் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அருகே நின்ற மைந்தனது அன்னையைப் பார்த்தார் தாயே! பெற்ற உனது வயிறு பற்றி எரிய வில்லையா? கல் நெஞ்சா உனக்கு! சீறினார் அவர். தாயாரும் நிதானமாகப் பதில் தந்தார். சுவாமி! குயவன் ஒருவன் பல மட்பானைகளை வனைகிறான். அவற்றில் ஒன்று தவறி விழுந்து உடைந்து விடுகின்றது. அதற்காக அக்குயவன் புலம்புவானா? அதே போன்றது தான் என நிலையும் எனது ஒரு படைப்பு தவறிவிட்டது. இதற்காகக் கலங்குவதா? எனக்கும் கடமைகள் வெறு இல்லையா என்றாளே பார்க்கலாம். அவளது பதிலைக் கேட்ட சந்தியாசி விக்கித்துவிட்டார். ஆனால் தனதுள்ளே அவளது ஞான நிலையை மெச்சினார்.

மறுபக்கம் திரும்பினார் அங்கே நின்ற மைந்தனின் சகோதரியைக் கேட்டார். அம்மா! தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்'' என்பார்களே! நீயோ மரக்கட்டை மாதிரி நிற்கின்றாயே! உனக்குச் சகோதரப் பாசமேயில்லையா? என்றார். அவளும் மிக நிதானமாகப் பதிலளித்தாள். சுவாமி! ஒரு மரத்தில் கனிந்திருந்த கனிகளை உண்ண ஒரு கூட்டம் பறவைகள் அம்மரத்தை நாடிவருகின்றன. அவற்றுள் ஒரு பறவை கனி உண்டு, தன்பசி தீர்ந்ததும், பறந்துபோய் விடுகின்றது. அது மற்றைய பறவைகளுக்காகக் காத்திருப்பதில்லை. அதே போன்றது தான் என் நிலையும் என்தமையனார் தனது வசூல் முடிந்ததும் திரும்பிச் சென்று விட்டார். இது நியதி என்றாளே பார்க்கலாம். சந்நியாசி என்னத்தைச் செல்வார்! அவர் அகத்துள் புன்னகைத்தார். இந்த இளம் வயதில் இத்தனை ஞானமா? என வியந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், பெருமான் அங்கே நின்ற அவ்வீட்டு மருமகளை நோக்கினார். பெண்ணே! கணவனை இழந்த ஒரு பெண்ணுக்கு இன்னொருவனைக் காட்டி இவனை உன் கணவனாகக் கொள்'' எனக்கூறித் தேற்ற முடியாது. அப்படிப்பட்ட ஒரு உறவு உனக்கும் உன் கணவனுக்கும் இடையே உள்ள உறவு. அப்படியிருக்க நீ அழுது புலம்பாமல் மரம் மாதிரி நிற்கிறாயே'' என்றார். மருமகள் பதில் தந்தாள். சுவாமி! சரியாகச் சொன்னீர்கள். ஒரு விதத்தில் யானும் ஒரு மரக்கட்டைதான். இரு மரக்கட்டைகளாக வாழ்க்கை எனும் ஆற்றில் எனது கணவரும் யானும் மிதந்து வந்தோம் ஒரு சந்தர்ப்பத்தில் இரு கட்டைகளுள் ஒன்று பாதை மாறி விலகி, மறுபக்கம் போய் விட்டது. யான் தனித்துவிட்டேன். இதற்காக யான் வீணே சஞ்சலப்பட முடியுமா என்றாள். துறவியாக வந்த எம்பெருமான் திகைத்தார். இவளது ஞானத்தை என்ன வென்று சொல்வது! இதயம் நெகிழ்ந்தார், மகிழ்ந்தார்.

கீழே குனிந்தார் சந்நியாசி. இறந்து கிடந்த மைந்தனின் உடலில் தன் திருக்கரத்தை வைத்தார். உடனே துயில் எழுவான் போல் எழுந்தான் அம்மைந்தன். அங்கு நின்ற யாவரும் திகைப்புற்றுனர். இங்கு என்னதான் நடக்கிறது. இன்ப அதிர்ச்சி எல்லோருக்கும்.

அம்மைந்தனை நோக்கி வினாவினார். ஈசன் "தம்பி! இறந்த உனக்காக இங்கு ஒருவரும் பரிதாபப்பட்டதாக இல்லை காரணம் கேட்டேன், உன் தந்தை உன்னை ஏதோ கடன்காரன் என்றார். தாயோ பானைதானே உடைந்தது என்கிறார். சகோதரியோ பறவைக்கதை சொல்கிறாள், மனைவியோ மரக்கட்டை என்கின்றாள். நீ என்னதான் சொல்லப்போகிறாய் சொல்வாயா?'' என்றார்.

மைந்தன் கூறினான். அபிமன்யுவுக்கு தாய் மாமன் கிருஷ்ணபகவான். தந்தையோ அர்ஜுனப் பெருமாள். இத்தனையிருந்தும், அப்பாலகன் போர்க்களத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதையைப்போல் மாண்டு கிடந்தானே! - அப்படியிருக்கும் போது ஏழைமகனான நான் இறந்தத்தில் ஆச்சரியம் என்ன வேண்டிக் கிடக்கிறது. என்றானே பார்க்கலாம்.

அடுத்த கணம் சிவனார் இடபவாகனத்திலே உமா தேவியுடன் அங்கு காட்சி தந்தார். அவர்கள் சாதாரண இல்லற வாசிகளல்லர். இல்லற ஞானிகள் என எல்லோர்க்கும் புரிய வைத்து விட்டார். எனவே அவர்களையும் விமானத்தில் ஏற்றி சிவலோகம் அனுப்பி வைத்தார் ஈசன்.

இவர்களில் நாம் எந்த ரகம்? சிந்திப்போமா??.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 109. திருவடிச் சிறப்பு

"இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால் மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று பாடியுள்ளார் அப்பர் சுவாமிகள்.

"தூக்கிய திருவடி துணை என நம்பினேன் தூய நடராஜனே" எனப் பாடியுள்ளார் பாவலர் ஒருவர். இறைவனது இரண்டு திருவடிகளுள் ஒன்று பரஞானத்தையும் மற்றையது அபர ஞானத்தையும் குறித்து நிற்கின்றன என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆறு முகமும் 12 கரங்களும் கொண்ட கந்தக் கடவுளுக்கு பாதங்கள், என்னவோ இரண்டே தான். பக்தனான வன் உள்ளன்போடு தனது இரண்டு கைகளாலும் பற்றிப் பிடிக்க இரண்டு பாதங்களே போதும் என்று அந்த ஞான பண்டிதன் நினைத்தானோ என்னவோ!

இறைவன் திருவடி, அடியார்கள் மேல் படுமாயின் அதுவே ஒரு பாக்கியம். இது திருவடி தீட்சை எனப்படுகின்றது. அப்பர் சுவாமிகளுக்கு இப்பேறு ஈசனால் வழங்கப்பட்டது. திருநல்லூரில் அப்பர் சுவாமிகளது தலை மேல், ஈசன் தனது திருவடிகளை வைத்து அருள் புரிந்தார். திருவடி தீட்சை பெற்ற அடிகளார் "நனைந் தனைய திருவடி என் தலை மேல் வைத்தார்" என ஈசனைப் பாடிப் போற்றினார்.

நாம் செய்த பிழைகளை தவறுகளை உணர்ந்து மனம் நொந்து திரிகரண சுத்தியோடு ஈசனின் திருவடிகளைப் பற்றுவோமேயானால் எமக்கு நிட்சயம் கிடைப்பது நன்பேறா கும். இதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை.

பாகவதத்தில் ஒரு கட்டம் - தேவகி வயிற்றில் எட்டாவ தாகத் தோன்றி, பிறக்கும் குழந்தை, கம்சனுக்கு யமன் ஆவான் என்னும் செய்தியை அறிகின்றான் கம்சன். தேவகிக்குப் பிறந்த ஒவ்வொரு சிசுக்களையும் தவறாது கொன்று வந்தவன் கம்சன். எட்டாவது குழந்தை கண்ணன்.

ஆவணி, ரோகிணி, அட்டமித்திதியில் கண்ணனை ஈன்றெடுத்தாள் தேவகி. பிறந்த போதே சங்கு சக்கரத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதிப் பிழம்பாக காட்சியளித்தது கண்ணக் குழந்தை.

மாயக் கிருஷ்ணனின் கூற்றின் பிரகாரம் யமுனையைக் கடந்து, நந்தகோபனின் மாளிகையில் கண்ணனைச் சேர்ப்பித்தார் வாசுதேவர். கண்ணனுக்குப் பதிலாக மாயைக் குழந்தை ஒன்று தேவகியிடம் சேர்ப்பிக்கப்பட்டது.

தேவகிக்கு எட்டாவது குழந்தை பிறந்த செய்தி கேட்டுப் பறந்தோடி வந்தான் கம்சன். வாசுகியின் எட்டாவது குழந்தை யைக் கொன்றாக வேண்டுமே. வழமைபோல கிலேசம் ஏதுமின்றி, வாசுகியிடமிருந்து குழந்தையைப் பிடுங்கினான் கம்சன். குழந்தையின் இரண்டு கால்களையும், கைகளையும் பிடித்து இழுத்து அதைக் கொண்டு போய் சுவரில் மோதி னான் அவன். என்ன ஆச்சர்யம்! அடிபட்டு எறிபட்ட குழந்தை பறந்து வெளியே சென்று வானில் ஜொலித்த வண்ணம் காட்சி அளித்தது, அந்த மாயக் குழந்தை விஷ்ணு துர்க்கை யல்லவா! கல கல என நகைத்தது அந்தக் குழந்தை

கம்சனுக்கு ஒன்றுமே புரியவில்லை விஷ்ணு துர்க்கை பேசினாள்.

"அட மூடனே! என்னைக் கொல்ல, இன்னமும் எவருமே பிறக்கவில்லை. அது ஒரு புறமிருக்க, என்னைக் கொல்ல வந்த உன்னை ஒரு நொடிப்பொழுதில் இத்தருணம் கொன்றி ருப்பேன். ஆனால், நான் அவ்வண்ணம் செய்யவில்லை. ஏன் தெரியுமா? என்னைக் கொல்ல எண்ணிய நீ என் கால்களை அல்லவா பிடித்து விட்டாய். என் திருவடிகளைப் பற்றிய உன்னை யான் எவ்வாறு கொல்வேன்? தனது திருவடி களைப் பற்றியவனை எந்தத் தெய்வமுமே கோபித்து தண்டனை வழங்கியதில்லை" என்றாளே பார்க்கலாம்!

அன்னையை எதிர்த்து கொல்வதற்காகக் காலைப்பிடித்த கம்சனுக்கே மன்னிப்புக் கிடைத்ததென்றால் திரிகரண சுத்தி யோடு நாம் தெய்வத்தின் பாதங்களை மனமாரப் பற்றினால் எமக்கு என்ன தான் கிடைக்காது? ஈசன் திருவடிச்சிறப்புக்கும் பெருமைக்கும் இதை விட வேறு எதைச் சொல்வேன்!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ११०. திருவருள்

அறத்தையும் ஒழுக்கத்தையும் அருள் மணக்கும் ஆரமாகக் கொண்ட சிறப்பினையுடையது எமது இந்து மதம். இது அறவாழ்க்கைக்கு முதலிடம் கொடுத்து வருகின்றது. அறவாழ்க்கையை வாழ்வதையே தமது இலட்சியமாகக் கொண்டு வாழ்பவர்களும் எம்மிடையே உளர். அறமுடையவராக, தர்மசிந்தையுள்ள சீடர்களாக வாழ்தல் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. ஆனால் இது சுலபமான காரியமல்ல. இதற்கு ஆசையை அடக்க வேண்டும். பக்குவம் வேண்டும். பக்தியும் இறை நம்பிக்கையும் வேண்டும். இந்த இடத்தில் பக்திபற்றி சிறிது நோக்குவோம்.

இவன் பக்த சீடனாக வாழ்கின்றான். ஆலயம் பக்த கோடிகளால் நிரம்பியிருந்தது என்றெல்லாம் வர்ணிக்கின்றோம். பக்தி என்றால் என்ன? இது எப்படித் தோன்றியது? இதற்கு விடை தேட வேத காலம் செல்வோம். ஏன்? வேதகாலத்திற்கு முற்பட்ட, மிகுந்த உயர்ந்த நாகரிகத்தை கொண்ட சிந்து வெளி மக்களிடையேயும், பக்தி நிலவியதற்கு சிந்து வெளியின் முக்கிய நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய நகரங்களில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சிகள் சான்று பகர்கின்றன. இருப்பினும் பக்தி எவ்வாறு தோன்றியது என்பதற்கு இருக்கு வேதப் பாடல்களே சிறந்த விளக்கம் தருகின்றன.

வேத காலத்தில் மக்கள் இயற்கையை வழிபட்டனர். இயற்கையில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டென நம்பினர். இடி, முழக்கம், மின்னல் மழை முதலிய, தம்மால் கட்டுப்படுத்த முடியாத, தமது சக்கதிக்கு அப்பாற்பட்ட, இவ்வியற்கைச் சக்திகளைக் கண்டு அஞ்சினர். இவற்றைப் போற்றினால், புகழ்ந்தால், துதித்தால், இவற்றின் ஆக்ரோஷ சக்தியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என நம்பினார். இச்சக்திகளுக்கு தெய்வீகத் தன்மை கொடுத்து பயத்தோடு, பணிவோடு, பக்தியோடு, வழிபட்டனர். பயமும் பக்தியும் சேர்ந்து பயபக்தியாக மிளிர்ந்தது. மிளிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வாழ்க்கைக்கு அமைதி அளித்துச் செம்மைப் படுத்தியது.

“நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு” காலப் போக்கில் இவ்வியற்கைச் சக்திகள் தமது வாழ்க்கைக்குத் துணை நின்றதாக பண்டைய மக்கள் கருதினர். இந்த வகை யில் பயபக்தி அவர்களது மன உணர்வில் தீவிரமாக, இடம் பெற்றது. ஒவ்வொரு இயற்கைச் சக்தியையும் ஒவ்வொரு கடவுளாக உருவகித்து வழிபட்டனர், அக்கால மக்கள். இவ்வாறு அவர்களது பக்திப் பாதையிலே முப்பத்து மூன்று தெய்வங்களை வகுத்து வழிபட்டனர். இவர்களுள் வர்ணன், சூரியன், சவிதா, பர்ஜன்யன், பிருதுவி, அக்கினி, பிரகஸ்பதி, சோமன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதேநேரம் தமது மனதில் எழுந்த பக்தியை பொது இழையாக ஓடவிட்டு இத் தெய்வங்களை வணங்கினர். இந்த வகையில் அக்கால மக்களது பக்தி, இயற்கை நிகழ்வுகளை தெய்வங்களாக உருவகித்து வழிபட்டு வாழ அமைத்தது. இந்தப் பயபக்தியே எதிர்கால சமயவழிபாடு தோன்றவும் அடிகோலியது எனலாம்.

காலம் மாறியது. ஆனால் மனிதனின் பக்தி உணர்ச்சி மட்டும் மாறவில்லை. இன்னமும் பரிணமித்தது. மனிதனின் மனதைத் தூய்மைப்படுத்தியது. பக்குவப்படுத்தியது.

தோலின் அழுக்கைச் மண்ணாலும், சாம்பராலும், மணி யின் அழுக்கை சாணம் கொண்டும், விளங்கச் செய்யலாம். ஆனால் மனித மனதை விளங்கச் செய்ய வழி? எது?

**துணிவெளுக்க மண்ணுமுண்டு - எங்கள் முத்து**
**மாரியம்மா, எங்கள் முத்து மாரி!**
**தோல் வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து**
**மாரியம்மா, எங்கள் முத்து மாரி**
**மணி வெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்துமாரி**
**மாரியம்மா, எங்கள் முத்து மாரி**
**மனம் வெளுக்க வழியுமில்லை - எங்கள் முத்து**
**மாரியம்மா எங்கள் முத்து மாரி**

எனப் பாடியவர் மகாகவி பாரதியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தான் பக்தி கை கொடுக்கின்றது. இறையிலே மனதை ஒரு வழிப்படுத்திப் பக்தி செய்யும் போது, அதன் அருள் நம்பினோருக்கு அருள் அடிபணிகிறது. அற்புதங்களை ஆற்றுகின்றது.

**கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்**
**ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே**

என்றார் சுந்தரசுவாமிகள்.

இது மாத்திரமா? ஆற்றில் இட்ட பொன்னை குளத்தில் எடுக்கவும், தான் விரும்பிய நங்கையிடம் இறைவனைத் தூது செல்லவும் வைத்தது சுந்தரரது பக்தி. நரிகளைப் பரிகளாக்கவும் பரிகளை நரிகளாக்கவும் செய்தது மணிவாச கரது பக்தி. ஈசனின் பொன்னான மேனியில் மண் சுமக்க வைத்தது செம்மனச் செல்வியாரது பக்தி. அரவந்தீண்டி இறந்த வணிகனின் உயிரை மீட்டுக் கொடுக்கவும், இறந்த பூம்பாவையின் எலும்பையும் சாம்பலையும் மீண்டும் அழகிய கன்னிப் பெண்ணாக எழுப்பித் தரவும் அருளிச் செய்தது ஞானப் பாலுண்ட ஞான சம்பந்தரது பக்தி.

புராணங்களை விட்டு இதிகாசங்கள் பால் எமது கவனத் தைத் திருப்புவோம். வீணைக்கொடியோன் இராவணேஸ் வரனுக்கு சிவதனுசையும், வில்லின் செல்வன் வீர விஜயனுக்கு பாசுபாதாஸ்திரத்தையும், ஈசனிடம் பெற்றுத் தந்தது அவர் களது பக்தியின் மகிமையே.

இந்த வகையில் பக்தியின் பெருமை எத்தனை! எத்த னை! என்று சொல்லுந்தரமன்று. புராணங்கள் இதிகாசங்கள் - எல்லாமே மெய்யடியார்களது பக்தி வளத்தை, அவர்கள் வாழ்ந்த செம்மையான சிறப்புடைய வாழ்க்கைச் சம்பவங் களை நிரம்பக் கொண்டுள்ளன. இந்து மதம் என்னும் தெப்பம் ஆடி அசைந்து வளைய வருவது பக்திச் சமுத்திரத்தி லன்றோ! ஷண்மதங்களுள் ஒன்றான வைணவம் விஷ்ணுவை முழு முதற்கடவுளாக கொண்டது. வைணவ சமய அடியார் கள் நராயணன் மேல் கொண்ட அளப்பெரும் பக்தி வெள்ளத் தில் ஆழ்ந்ததால், ஆழ்வார்கள் எனப் பெயர் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் ராணாவை மணந்த மீரா, பாய், கண்ணன் மேல் கொண்ட பக்தியால் பக்த மீரா ஆனாள். ஆனந்த பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட, நாராயணன் மீது ஆழ்வார்கள் பாடிய அருட்பாக்களின் தொகுப்பு, நலாயிர திவ்வியப் பிரபந்தம் எனவும், சைவ நாயன்மார்கள் சிவன் மேல் கொண்ட பக்தி வெள்ளத்தில் தோய்த்து வடித்த தேவார திருவாசகங்களின் தொகுப்பு, பன்னிரு திருமுறைகளாகவும் இந்து மதப்பூங்காவில் பக்தி மணம் பரப்பி வருதல் கண்கூடு.

பக்தர்கள் ஆலயத்தில் ஆடுகின்றார்கள், பாடுகின்றார்கள், நேர்த்தி செய்கின்றார்கள், காவடி எடுக்கின்றார்கள், விரத மிருக்கின்றார்கள், தீ மிதிக்கின்றார்கள், யாகம், வேள்வி செய்கின்றார்கள், தவமிருக்கின்றார்கள், இச்செயல்களுக்கு அடித்தளமாக விளங்குவது எது? பக்தியே! இத்தனை செயல்கட்டும் மனோவலிமையை அளிப்பது எது? பக்தி.

பக்தியின் மேன்மை எத்தனை! எத்தனை! அடியார்களை ஆட்டிப் படைக்கும் பக்தி, ஆண்டவனையே ஆட வைத்தது. திருத்தொண்டர் வரலாறு ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பாருங்கள். அவர்களது பக்திச் சிறப்பு ஆண்டவனை அவர்கள் பால் ஈர்த்தெடுத்தது. ஏன்? அது ஈசன் மனதை வென்று விட்ட காரணத்தால் என்றே கூறலாம்.

கயிலைக் காட்சியை திருவையாற்றிலே காண வைத்தது அப்பர் சுவாமிகளது பக்தி,

**மாதப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி**
**போதோடு நீர் சுமந்தேத்தி புகுவர் அவர் பின் புகுவேன்**
**யாதும் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது**
**காதல் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்**
**கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதெனக் கண்டேன்.**

மேலும், நெல்லுப் பெற்றது போதாதென்று அவற்றைச் சுமந்து, தன் வீட்டிற்குக் கொண்டு செல்ல ஆட்கள் தரும் படி ஈசனை வேண்ட வைத்தது சுந்தரது பக்தி. இறைவா! நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நெல்லுத் தந்தால் மாத்திரம் போதுமா, அவற்றை எனது வீட்டிற்கு எடுத்துச் செல்ல பணியாட்களையும் அனுப்பிவை என்று பாடுகின்றார் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**நீள நினைத்தடியேன் உமை நித்திலும் கை**
**தொழுவேன்**
**வாளென கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெருமான் குண்டையூர்**
**சில நெல்லுப்பெற்றேன்**
**ஆளிலி எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே.**

இவ்வண்ணம் அருட்பாடல்கள் பன்னிரு திருமுறைகளாக இந்து மதப்பூங்காவில் பக்தி மணம் பரப்பி நிற்கின்றன. பக்தி பற்றி மகாகவி பாரதியார் கருத்தினை இங்கு நோக்கு வோம்.

பக்தியால் பாரினை வென்றிடலாம். சித்தத்தைத் தெளிய வைக்கலாம் இவை மாத்திரமா? செயல்களில் செம்மை பிறக்கவும், மனதில் தத்துவம் பிறக்கவும், மனச் சஞ்சலம் நீங்கி உறுதி பிறக்கவும், ஆசையை அழிக்கவும், பாசத்தை வெல்லவும் பக்குவம் தரவும் சக்தி வாய்ந்த திருவருளைப் பெற்றுதர வல்லது பக்தி. எம் பெருமானின் வடிவமே திருவருளாகும்.

எனவே பரமனை அடைய பக்தி செய்வோம்.
பக்தியினாலே இந்தப்
பாரினில் செய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தந் தெளியும், - இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் - நல்ல
வீரர் உறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவமுண்டாம் நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்.

இத்தகைய பக்தியின் பாற் பெறப்படுவதே தெய்வீகத் திருவருள்.

●

KOHA JPL
11104C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலாபூஷணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

எமது மனம் இறைவனின் இருப்பிடம். அதை வேண்டாத எண்ணங்களாலும் ஆசைகளாலும் குப்பைத் தொட்டி ஆக்காமல், அதைச் சுத்தமாக மெழுகி எம்பெருமானை அமர வைத்துத் தினமும் 5 நிமிடங்களாவது தியானம் செய்வோம். உலகமே மூழ்கிப் போனாலும் செய்ய வேண்டிய காரியம் இறைதியானம். ஏனெனில் உலகம் இறுதியில் மூழ்கும் போது கைகொடுப்பது இறைவன் நாமமே.

இறை வழிபாட்டின் முதற்படி பிரார்த்தனை. இதுவே சமயவாழ்வின் பாலபாடம். எமக்கு என்னவெல்லாம் அவசியமோ எவையெல்லாம் எமக்கு அமைய வேண்டியுள்ளதோ அவற்றையெல்லாம் இறை நம்பிக்கை மூலம் பெற்றுவிடலாம் என்பதை அருளாளர்களின் வாழ்க்கை வரலாறு மூலம் யாம் அறிய முடிகின்றது.

இந்த வகையில், இறைநம்பிக்கை, சமயவாழ்க்கை, வழிபாடு, அன்பு என்பன பற்றி விளக்கமாக, தெளிவாக, எளிமையாக ஒரு சிறு விதைக்குள் விருட்சத்தையே அடக்குவது போல இந்நூலின் கண் பாரிய விடயங்களை மிக இலகுவாகச் சில வரிகளுள் சைவ நற்சிந்தனைகளாகத் தந்துள்ளார், நூலாசிரியர் கலாபூஷணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள். மேலும் எமது சமய வழிபாட்டு முறைகள் பல காரணிகளால் குறைந்தும் தேய்ந்தும் மாறியும் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், இத்தகைய நற்சிந்தனைகளின் தேவையை உணர்ந்து, தான் இலங்கை வானொலியில் ஆற்றிய உரைகளை நூல்வடிவில் கொணர்ந்த சைவ சித்தாந்தமணி திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் பாராட்டுக்குரியவர். சைவ ஆசார அனுட்டானங்களை எல்லாம் பரம்பரைபரம்பரையாக அனுட்டித்து வந்தது மட்டுமல்லாமல், உரையாசிரியர் மட்டுவில் கதிரவேற்பிள்ளை என்ற பெரியார் மரபின் வழிவந்த இராஜேஸ்வரிக்கு, இவற்றையெல்லாம் பற்றிச் சொல்வதற்கும் சிந்திப்பதற்குமான தகுதியும் ஆற்றலுமுண்டு என்பதை, சைவ உலகம் நன்கறியும். அவரது சைவப் பணி மேன்மேலும் வளர வாழ்த்துவோம்.

- பத்மா சோமகாந்தன்

978 – 955 – 44940-0-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org